ஸ்ரீ:
பேரருளாளன் பெருந்தேவித் தாயார் திருவடிகளே சரணம்



ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

ப்ரபந்ந ஜநகூடஸ்தரான நம்மாழ்வார் அருளிச்செய்த
திருவாய்மொழிக்கு வ்யாக்கியானங்களான
ஒன்பதினாயிரப்படி, இருபத்துநாலாயிரப்படி, ஈடுமுப்பத்தாறாயிரப்படிகளைக் கொண்ட

பகவத் விஷயம்

ஐந்து, ஆறு பத்துக்கள்

ஸ்ரீகாஞ்சி ப்ரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர் ஸ்வாமி பதிப்பு

அச்சுத்தாள் திருத்தினவர்கள் :
திருமலை அனந்தாண்பிள்ளை, குன்றபாக்கம், ந்யாய வேதாந்த வித்வச்சிரோமணி
க்ருஷ்ணமாசாரியர், திருப்பதி.
M. A. **வேங்கடகிருஷ்ணன்**, திருவல்லிக்கேணி.

கிடைக்குமிடங்கள் :
தி. அ. அக்காரக்கனி அனந்தார்யவரன், காஞ்சிபுரம்-3.
M. A. **வேங்கடகிருஷ்ணன்**, 20, தெற்குமாட வீதி, திருவல்லிக்கேணி.
V. N. **தேவநாதன்**, 213, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை-1.
திருவல்லிக்கேணி குரு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

ராக்ஷஸ ஸ்ரீ ஐப்பசித் திருமூல வெளியீடு

1975

ஸ்ரீ:
ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

திருவாய்மொழி

ஆறாம் பத்து

முதல் திருவாய்மொழி—வைகல்: ப்ரவேசம்

—:ooo:—

நஞ்சீயர் அருளிச்செய்த ஒன்பதினாயிரப்படி வ்யாக்யானம்

ஒ.—ஆறாம்பத்தில், முதல் திருவாய்மொழியில், இப்படி நோற்றநோன்பு தொடங்கி, நாலுப்ரயோகம் சரணம்புக்கவிடத்திலும் அவன்வாராமையாலே, "குணவானாய் ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தியாகையாலே ஸர்வநிர்வாஹகனுமாயிருக்கிற வெம்பெருமானைத் திருவண்வண்டூரில் ஸம்ருத்தி நம்மைநினையாதபடி பண்ணுகையாலே நம்தசையறியாமல் வாராதொழிந்தான், அறிவிக்கவரும்" என்றுபார்த்து, தன்பரிஜநங்களில் அவன்பக்கல்போய்வரவல்லாரொருத்தரைக் காணாமையாலே, தன்னாற்றாமை கைகொடுக்கக் கழிக்கரையிலேசென்று, அங்கேவர்த்திக்கின்றன சிலபக்ஷிகளை அத்யாதரம் பண்ணியிருந்து திருவண்வண்டூரில்தூதுவிடுகிறாள்.

பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த இருபத்துநாலாயிரப்படி

இ.—ஆறாம்பத்தில், முதற்றிருவாய்மொழியில், நோற்றநோன்புதொடங்கி நாலுப்ரயோகம் சரணம்புக்கவிடத்திலும் தம்முடைய வபேக்ஷிதம் பெற்றிலர். ப்பலத்தோடு அவ்யபிசாரியாய் அவிளம்ப்யப்பலப்ரதமானவுபாயத்தை ஸ்வீகரிக்கச்செய்தேயும் அபேக்ஷிதங்கிடையாதொழிவானென்? என்னில்; இவர்தம்முடைய ஹிதத்தோபாதி ஜகத்தினுடையஹிதத்துக்குங் கடவனாகையாலே ஈச்வரபுத்த்யா தலைக்கட்டிற்றில்லை. அது பற்றாமையாலே ஆற்றாமைமீதூர்ந்து, கலந்துபிரிந்து பிரிவாற்றாமையாலே திருவண்வண்டூரிலே தூதுவிடுகிறாளொருபிராட்டிபேச்சாலே இவர் தம்தசையை யருளிச்செய்கிறார். நாயகனானவன் "யசஸ்வீ ஜ்ஞாநஸம்பந்ந:" என்று நம்தசையையறியுமவனுமாய், "ரிபூணாமபிவத்ஸலம்" என்று - சத்ருக்கள்பக்கலிலும் இரங்கும்நீர்மையையுடையவனுமாய் "சத்ரோ:ப்ரக்க்யாதவீர்யஸ்ய ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை:" என்று - வருமிடத்தில் ப்ரபலப்ரதிபந்தகங்களையும்தள்ளிவரவல்ல ஆண்பிள்ளையுமாயிருக்க, வாராமைக்கடி - திருவண்வண்டூரில் போக்யதையாலே; நம்மாற்றாமையை யறிவிக்கவரும் என்றுபார்த்து தன்பரிகரங்களில் அவன்பக்கல் போய்வரவல்லாரொருவரைக் காணாமையாலே, தன்னாற்றாமை கைகொடுக்க, பிரிந்தாரிரங்கும் நெய்தல்நிலத்திலே புறப்பட்டு, கண்ணால்கண்டபக்ஷிகளைத் தூது விடுகிறாள்.

நம்பிள்ளை திருவாய்மலர்ந்தருளி
வடக்குத்திருவீதிப்பிள்ளை பட்டோலை கொண்டருளின
ஈடு முப்பத்தாறாயிரப்படி.

ஈடு.—இவர் நோற்றநோன்புதொடங்கி நாலுப்ரயோகம் சரணம்புக்கவிடத்திலும் தம் அபேக்ஷிதம் பெற்றிலர். ப்பலத்தோடு அவ்யபிசாரியாய் அவிளம்ப்ய ப்பலப்ரதமானவுபாயத்தை ஸ்வீகரிக்கச்செய்தேயும் அபேக்ஷிதம் கிட்டாதொழிவானென்? என்னில்:— ஆழ்வாருடைய ஹிதத்தோபாதி ஜகத்தினுடைய ஹிதத்துக்கும் கடவனாகையாலே ஈச்வர புத்த்யா தலைக்கட்டிற்றில்லை.

உகந்தருளின நிலங்கள்தோறும் புக்குத் தட்டித்திரிந்தார், அங்குத் தாம் நினைத்தபடி பரிமாறப்பெற்றிலர், நினைத்தபடி பரிமாறலான அவதாரத் தேறப் போனார், அது காலாந்தரமாகையாலே கிட்டப்பெற்றிலர்; அதுதானே தளர்த்திக்கு உடலாயிற்று. இனி நித்யஸந்நிதியுமுண்டாய், முகப்புறக்கத்தாலும் குறையற்று, சக்திவைகல்யமுமின்றிக்கே யிருக்கிற இவ்விடமே யமையுமென்று மீண்டார்: அவ்வநுஸந்தாநந்தான் கால்நடைதந்து போகாதபடி ஈடுபடுத்திற்று; கால்நடைதருவார்காலிலே விழுந்து தூது விடுகிறார். தாம் கீழ் அநுஸந்தித்தவதாரம் தூதர்க்குச்சென்று அறிவிக்கவொண்ணாதபடியா யிருந்தது; "இனி அறிவிக்கலாம்படி கிட்டநின்றானாகில் திருவண்வண்டூரிலே யறிவிப்போம்" என்று அங்கே ஆள்விடுகிறார்.

இவர்க்குப்பிறந்தது ஜ்ஞாநகர்மாநுக்ருஹீதபக்தியன்றே! ஒருவன்ப்ரஸாதமடியாகவந்ததிறே. தந்தலையிலேயுமொன்றுண்டாய் அதுஆரம்பிப்பெறவேணும் என்றுஇருக்கிலிறே விளம்பம் பொறுக்கலாவது; அங்ஙனம் சொல்லலாவதொன்றின்றிக்கே யிருந்தது. இவர்தாம் பரிக்ரஹித்த ஸாதநந்தான் விளம்ப ஸஹமுமன்றே! உபாயாந்தரங்களிற்காட்டில் கால்வாசி யேற்றமுண்டே! இங்ஙனே யடிப்பட்டவுபாயத்தை ஸ்வீகரித்தவர் ஆறியிருக்க மாட்டாரிறே; ஆகையாலே ஆற்றாமை கரைபுரண்டு ஆளிட்டு அறிவிக்கிறார். "சரணம்புக்கோமாகில் அத்தலையாலே பேறுமளவும் ஆறியிருப்போம்" என்று தரித்திருக்கவல்ல ப்ரக்ருதியன்றே. ப்ரஹ்மாஸ்த்ரம் வாய்மடியச்செய்தேயும் இவர் தூதுவிடுகிறவிது ஜ்ஞாநகார்யமோ சாபலகார்யமோ தெரிகிறதில்லை; ச்ருதிகளுங்கூட *யதோ வாசோ நிவர்த்தந்தே* என்று - பேச்சுக்கு நிலமன்று என்று மீண்ட விஷயத்தை மறுபாடுருவப் பாசுரமிட்டுச் சொல்லவல்ல இவர்க்கு அறிவில்லை என்ன வொண்ணாது; பக்ஷிகளின் காலிலே விழுகிற இவர்க்கு அறிவுண்டு என்னவுமொண்ணாது. ஆனால் என்னுவது? என்னில்:— ஜ்ஞாநகார்யமான சாபலமிறே இவரது. இதரவிஷயங்களில் விரக்தியிறே ஜ்ஞாநத்துக்கு ப்ரயோஜநமாகச் சொல்லுகிறது; அந்த ஜ்ஞாநபலமாயிறே இவ்விஷயத்தில் சாபல மிருப்பது. *ஜ்ஞாநவைராக்யராசயே*யிறே. இனித் தூதுவிடப் பார்த்தால் ஒரு ஐந்த்ரவ்யாகரணபண்டிதனைத் தூதுவிடுகிறதுமன்றே. இத்தால் சொல்லுகிறது பிராட்டியிலுண்டான ஏற்றமோ? என்னில்:— அதுவுமுண்டிறே - அவரொருவரையும் அநுபவிக்கையால் வந்ததிறே அவளுக்குள்ளது, இருவரையுங்கூடவநுபவிக்கக் கோலுகிற ஏற்றமுண்டிறே இவளுக்கு. விஷயாநுகுணமாயிறே கலக்கமிருப்பது. இனித்தான் அத்தலையில் நின்றும் வந்தார்க்கே வார்த்தைசொல்லிவிடவேணு மென்னும் நிர்ப்பந்தமில்லையே இவளுக்கு, ராவண சங்கையில்லாமையாலே; ஆகையாலே கண்ணாற்கண்டாரை யடங்கலும் போகவிடுகிறாள்.

பிரிந்தார் இரங்குவது நெய்தல்நிலத்திலேயிறே; திருவல்லவாழ், திருவண்வண்டூரென் கிறவையெல்லாம் அந்நிலங்களிறே. தூதுவிடுவார், நாயகன்பக்கலிலே சிலகுணங்கள்கண்டிறே விடுவது; அவையாவன - இத்தலையில் ஆர்த்தியறியுந்தனை அறிவையுமுடையனாய், அறிந்தால் வருகைக்கீடான நீர்மையுடையனாய், வருகைக் கீடான சக்தியுமுடையனாயிருக்கையிறே; அவையெல்லாம் இவள் தூதுவிடுகிற விஷயத்திற் குறையில்லை, அறிவில்வந்தால் *ஜ்ஞாநஸம்பந்ந:* என்கிறபடியே - அறிவுகொடுத்த வஸிஷ்டாதிகளுக்கும் உபகரிக்கவல்லனும்படியிருப்பானொருவன், நீர்மையில்வந்தால் *ரிபூணாமபி வத்ஸலம்* என்றால் *ஸஞ்ஜாதபாஷ்ப:* என்னும்படியிறே அதிருப்பது, சக்தியில் வந்தால் *ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை:* என்று - எதிரிகள் பக்கலிலே கேட்குமத்தனை. இனித்தான், நாயகனாவான் அறிவு நிறைவு ஓர்ப்பு கடைப்பிடியுடையவனிறே. "இப்படிப்பட்ட குணங்களையுடையவனாயிருக்கிறவன் வாராதொழிகைக்குஹேது— அவ்விடங்களிலே ஆர்த்தர் பலருண்டாகையாலே அவர்கள்ரக்ஷணத்திலேயொருப்பட்டு இத்தலையை மறந்தானித்தனை; ரக்ஷணத்திலே யந்வயித்தால் அஸ்தமிதாந்யபாவம் என்னும்படியிறேயிருப்பது, ஆனபின்பு ஆர்த்தியைஅறிவிக்க வரும்" என்றுபார்த்தாள். இனி அறிவித்தால் ஆர்த்திக்கு இத்தலையில்மேற்பட்டாரின்றிக்கே யிருக்குமிறே. அறிவிக்குமிடத்தில் தான் கால்நடை தந்துபோக மாட்டாள்; தன் பந்துவர்க்கம் தனக்குமுன்னே நோவுபாடிறே; இனி கால்நடைதந்துபோகவல்லார் வேணுமே; தன் பரிஸரத்தில் வர்த்திக்கிற பக்ஷிகளை "ஏகதேசவாஸித்வத்தால் வந்த

ஸம்பந்தமே நம் கார்யம்செய்து தலைக்கட்டுகைக் குறுப்பு" என்று பார்த்து, அவற்றின் காலிலே விழுந்து போகவிடுகிறாள்.

உருத்தோறும், இத்திருவாய்மொழி யருளிச்செய்யாப்புக்கவாறே ஜீயர் அருளிச்செய்யும் வார்த்தை - "பாண்டவர்கள்கார்யத்துக்காகத் தன்னையோக்கி அவர்கள்கழுத்தைக் கட்டிக் கொண்டு கூடத்திரியச் செய்தேயும் அவர்கள்பட்ட வ்யஸநமெல்லாம் படுகிறார்காணுமிவரும்: அவர்கள் தான் ஒரு தர்மபாலமுண்டு என்றிருக்கையாலே வ்யஸநப்படுகிறார்கள், இவருக்கு அதுவுமின்றிக்கேயிருக்க என்செய்யப்படுகிறார்" என்று அருளிச்செய்வர். *ஸாஹஸம் கேசக்ரஹம் ப்ராப்தா - த்வயி ஜீவத்யபி ப்ரபோ* என்றவள்நிலையிறே இவளது. *மஹத்யாபதி ஸம்ப்ராப்தே ஸ்மர்த் தவ்யோ பகவாந் ஹரி:* - ஆபத்ஸரக்ஷகரான பர்த்தாக்களாலும் தன்னாலும் நோக்கிக்கொள்ள வொண்ணாதபடி அவ்வருகுபட்டவாபத்திறே. *பகவாந்* - பூர்ணரன்றோ! அபூர்ணர்கார்யம் செய்யாவல்லரென்றுகாணும் அவன்நினைவு. *ஹரி:* - ஆச்ரிதருடைய விரோதிநிரஸநமே ஸ்வபாவமாகவுடையவனைப்பற்றினாள். ஜ்ஞாநாதிகுணங்களால் சொன்ன பூர்த்தியிலே சக்தியு முண்டாயிருக்கச் செய்தே 'ஹரி:' என்று விசேஷிக்கவேண்டிற்று - அல்லாதார்க்கும் இக்குணங் கள் ஓரொருகால் உண்டாகையாலே, இவனுக்கு அங்ஙனன்று, இது ஸ்வபாவம் என்கைக்காக வெடுத்தது.

வைகல்பூங்கழிவாய் வந்துமேயுங்குருகினங்காள்!*
செய்கொள்செந்நெலுயர் திருவண்வண்டூருறையும்*
கைகொள்சக்கரத்து என்கனிவாய்ப் பெருமானைக்கண்டு*
கைகள்கூப்பிச்சொல்லீர் வினையாட்டியேன்காதன்மையே. (1)

ஒ.—முதற்பாட்டில், இப்பிராட்டி சிலகுருகுகளைநோக்கி, திருவண்வண்டூரிலேசென்று என் னுடையதசையை எம்பெருமானுக்கு அறிவியுங்கோளென்கிறாள். [வைகல் என்றுதொடங்கி] - நாள் தோறும் அழகிய கழியிலேவந்து மேய்கிறகுருகினங்காள். இத்தால் - தன்னுடைய அபேக்ஷிதங்களைச் செய்துமுடிக்கவேண்டும்படி தன்னோடு அவற்றுக்குள்ள கண்ணழிவு சொல்லிற்று. [செய்கொள்செந் நெல் என்றுதொடங்கி] - ஒரோமுதலே செய்யை விழுங்கும்படியான செந்நெல் உயர்ந்த திருவண் வண்டூரிலே உறைவதும்செய்து கையுந்திருவாழியுமானவழகையும் முறுவலையுங்காட்டி என்னைத்தோற் பித்திருக்கிறவனைக் கண்டு. [கைகள் என்றுதொடங்கி] - "இங்குநின்றும்போனோம்" என்று வேண்டப் பாடியாதே உசிதவிநயங்களைப்பண்ணி, பிரிந்தால் தன்னைப்போலேயன்றிக்கே தரியாதபடியான பாபத்தைப்பண்ணின வென்காதன்மை சொல்லுங்கோள். கைகள்கூப்புகை - சிறகுவிரிக்கை, காதன்மை - ஆசைப்பாடு.

இ.—முதற்பாட்டில், குருகுகளைநோக்கி, அவன்பக்கலிலேசென்று என்னுடையதசையை யறிவியுங்கோளென்கிறாள். [வைகல்] - நாள்தோறும் - நாயகவ்யாவ்ருத்தி. காதாசித்கமாகக்கலந்து பொகட்டுப்போனவனைப்போலன்றிறே நாள்தோறும்முகங்காட்டுகிற நீங்கள். [பூங்கழிவாய்] - தர்சநீயமான கழியென்னுதல், பூத்தகழியென்னுதல். [கழிவாய்] - கழிவிடத்து, கழியிலே. பிரிந்தவன் பாதகனுகை யன்றியே, இருந்ததேசமும் பாதகமாகை. இருவர்கூடவநுபவிக்குமிடம் தனித்தால் ம்ருத்யுஸமமாயிறே இருப்பது [வந்து] - வழிபறிக்கும் தேசத்திலேவந்து உதவினாப்போலேயிறே நீங்கள்ஸந்நிதிபண்ணின படி. "பம்பாதீரே ஹநுமதாஸங்கத:"—ஆளிட்டு அறிவிக்கவேண்டும்தசையிலே நீங்களேவந்து. [வந்து மேயும்] - நான் அபேக்ஷியாதிருக்க, "க்ருஹே புக்தமசங்கிதம்" என்னுமாபோலேயிறே நீங்கள்செய்தது. என்கார்யம்செய்தபின், இனி உங்கள்கார்யம் செய்ய வேண்டாவோ, இவள்கார்யம் இங்கேவந்து மேய்கை. [மேயும்குருகினங்காள்] - உபவாஸக்ருசையாயிருக்கிற என்கார்யம் புஷ்கலமாயிருக்கிறவுங்களுக்குச் செய்யவேண்டாவோ. இரவு உண்டார்க்கு உண்ணாதார்கார்யம் செய்கை பரமன்றோ. [இனங்காள்] - இருவராயிருப்பார்க்குத் தனியர்கார்யம் செய்யவேண்டாவோ. பெருமாள்தனிமையிலே மஹாராஜரும் பரிகரமும் தோற்றினாப்போலேயாயிற்று தனிமையிலே இவைவந்து முகங்காட்டினபடி. [செய்கொள் இத்

யாதி] - வாராமல் கால்தாழப்பண்ணிற்று அவ்வூரில் போக்யதையாயிற்று, அவள்குற்றமன்று. ''மதுராம்
ப்ராப்யகோவிந்த:''. [செய்கொள் செந்நெல்] - ஒருமுதலே ஒருசெய்யைக்கொள்ளும். [உயர்] - செய்க்கு
வரம்பென்று ஒருமர்யாதையுண்டு, அதுவுமில்லையிறே ஆகாசத்துக்கு. உயராநிற்குமித்தனை. [திருவண்
வண்டூர்] - பரமபதவ்யாவ்ருத்தி. [உறையும்] - அவதாரவ்யாவ்ருத்தி. [கைகொள் சக்கரம்] - கைக்
கடங்கலும் தானேயாபரணமாயிருக்குமென்னுதல், கையிலேகொண்ட திருவாழியென்னுதல். [என்
கனிவாய்] - முறுவலை யெனக்கு முற்றூட்டாக்கினவன். [பெருமான்] - திருவதாரத்தில்பழுப்புக்கும்,
கையுந்திருவாழியுமானசேர்த்திக்குமாயிற் றிவளெழுதிக்கொடுத்தது ராஜபுத்ரர்கள்கையிலே இடைச்
செறி கடைச்செறிக்குத்தோற்பாரைப்போலே. [கண்டு] - காட்சியிலெனக்கு முற்பாடராகப் பெறுகின்றி
கோளிறே. இவளைப்பற்றினார்க்கு இவளிலுமேற்ற முண்டிறே. ''ஏத்தியிருப்பாரை வெல்லுமே''.
''ஏஷசூடாமணி:ஸ்ரீமாந்''. [கைகள்கூப்பி] - ''அவனுக்கு மறுக்கவொண்ணாத அஞ்ஜலியைப்பண்ணுங்
கோள்'' ப்பலத்தோடுவ்யபிசரியாத செயலைச்செய்யுங்கோள்'' என்று பூர்வர்கள் நிர்வஹிப்பர்கள்; பத்தாம்
பாட்டிலேயாயிற்றின்னுப்பு ப்ரஸங்கிப்பது. பட்டர் பத்துப்பாட்டிலுமின்னுப்புத்தோற்ற நிர்வஹித்தருளுவர்.
''முன்புபோலே'' என்றிராதே பெரிய முதலிகள், கும்பிடுங்கோள். கும்பிட்டவாறே' முகம்பார்ப்பர், பின்னை
முகம் மாறுவதற்கு முன்னே என்தசையைச் சொல்லுங்கோள். [கைகள்கூப்பி] - கைகள் கூப்புகையாவது
சிறகுகளைவிரிக்கை. [சொல்லீர்] - ஒருமஹாபாரதத்துக்குப்போருமிறே. [வினையாட்டியேன் காதன்மை -
சொல்லீர்] - பிரிந்தாலவனைப்போலன்றியே தரிக்கமாட்டாதபடி பாபம்பண்ணின வென்காதன்மை
சொல்லீர். அவன் ''வேண்டேன்'' என்றாலும் விடமாட்டாதபடியான பாபம். வந்த ஆளின்கையிலே
வார்த்தைசொல்லிவிடுகையன்றிக்கே, திர்யக்குக்களைக்குறித்துத் தூதுவிடவேண்டும்படி பாபத்தைப்
பண்ணினேன். காதன்மையென்றவாறே - தம்மளவென்றிராமே, என்னுடையகாதன்மை. வன்னெஞ்சர்
காதல்போலன்றிறே மெல்லியலார்காதல். மெல்லியலார்காதலளவல்லாத வென்காதன்மை சொல்லீர்.
சொல்லின் தாழ்வே, வரவுதப்பாதென்றிருக்கிறாள்.

ஈடு.—முதற்பாட்டு. சில குருகுகளைநோக்கி, திருவண்வண்டூரிலேசென் றெம்பெரு
மானுக்கென்தசையை யறிவியுங்கோ ளென்கிறாள்.

[வைகல்] - உங்கள்தனைநீர்மையுடையார் சிலரோடே கலக்கப்பெறுமையிறே எனக்கு
இப்பிரிவு விளைந்தது; அவ்விழவெல்லாம் உங்களைக்கொண்டு தீரலாம்படியாயன்றோ வெனக்
கிருக்கிறது. ஒருகால் கலந்து போகட்டுப்போன வவனைப்போலன்றிக்கே நீங்களெப்போதும்
இங்கே வர்த்திக்கப்பெற்றேனே! உங்கள்நீர்மையில் ஏற்றமிருந்தபடி யென். [வைகல்] -
காடோறும். [பூங்கழிவாய்] - அழகியகழியிடத்து. பூத்தகழியிடத்தென்னவுமாம். ரக்ஷகனு
னவன் கைவிடுவது பாதகவர்க்கங்களானவை மிகைப்பதான இவ்வளவிலே நீங்கள் முகங்
காட்டுவதே. அழகிய சோலை, குளிர்ந்த தென்றல், இனியபரிமளந்தொடக்கமான இவையு
முண்டிறே. பிரிந்தவனே பாதகனாகையன்றிக்கே, இருந்த தேசமும் பாதகமாகை. [வந்து]
பம்பாதீரே ஹநுமதா ஸங்கத: போலே, ஆளிட்டறிவிக்குந் தசையிலே நீங்களே வந்து, வழிபறி
யுண்டவிடத்தே தாய் முகங்காட்டினாற்போலே காணும் பிராட்டியைப் பிரிந்து நோவுபடுகிற
ஸமயத்திலே திருவடிவந்து முகங்காட்டினபடி. *ஹநுமதா* தளர்ந்து ''ஆவாரார் துணை''
என்று தடுமாறுகிற ஸமயத்திலே, வெற்றித்தழும்பு சுமந்த ஆண்பிள்ளையோடே கூடப்பெற்ற
தென்கிறது. *வாநரேண* ஸ்ந்ர்யாஸிவேஷங்கொண்டு வந்து பிரியை விளைத்து நலிவு பண்ணு
மவனைப்போலன்றிக்கே, செவ்வியானொருவனோடே சேரப்பெறுவதே. *ஹ* ருஷி கொண்
டாடுகிறார். போகத்துக்குச் சேர்த்துக்கொள்ளுகிறோம், ஸத்தை நோக்குவாரைப்பெற்றோ
மிறே! என்று ஹ்ருஷ்டனாகிறான். [வந்து] - அவனைப்போலே தூதர்க்கும் ஆளிட்டழைக்க
வேண்டாதொழியப்பெற்றோமே. ஆளிட்டழைக்கவேண்டுகிறதிறே யவனை. ஒரு கலத்திலே
யொக்கவுண்டு ஒரு படுக்கையிலே கிடந்து தூது போவாரைப்போலே காணும் இவற்றின்படி.
[மேயும்] *க்ருஹே புக்தமசங்கிதம்* என்னும்படியிருக்கை. [குருகினங்காள்] - *தர்சிதாநி
களத்ராணி* என்கிறபடியே இதொரு சேர்த்தியிருந்தபடியென். [வந்துமேயுமித்யாதி] - திரு
பாதிக பாந்தவமுடையார்பக்கலிலே பார்யாபுத்ராதிகளோடே சென்று 'சோறிடும்' என்று
புஜிப்பாரைப்போலே காணும் இவற்றின்படி. குருகினங்காள் - கைகள் கூப்பிச்சொல்லீ

ரென்றுக்ரியை. பண்டை முதலிகள், "பத்தாம்பாட்டிலே - ப்ரணயரோஷந்தோற்றச்சொல்லு கிறான்" என்று நிர்வஹிப்பர்கள். "பாட்டுத்தோறும் - இவாந்தோற்றச்சொல்லுகிறாள்" என்று பட்டரருளிச்செய்யும்படி. [வந்துமேயுங்குருகினங்காள் கைகள் கூப்பிச்சொல்லீர்] என்றும் பிறர்க்குபகரிக்கவே தேடித்திரியுமித்தனையோ, உங்கள்கார்யமும் செய்ய வேண்டாவோ. (இவன்கார்ய மிங்கேவந்துமேய்கை. இவற்றின்கார்ய மங்கேசென்றுசொல்லுகை.) உபவாஸக்ருசையாயிருக்கிற என் கார்யம் புஷ்கலராயிருக்கிற உங்களுக்குச் செய்ய வேண்டாவோ. [செய்கொள் செந்நெல்] - இத்தலையை நினைக்கலாம்படியோ அங்குத்தை போக்யதையிருக்கிறபடி. *மதுராம் ப்ராப்ய கோவிந்த: கதம் கோகுலமேஷ்யதி, நகரஸ்த்ரீகலாலாபமது ச்ரோத்ரேண பாஸ்யதி* இறே யவன்படி. அத்தேசத்தில் போக்யதையிலே அகப்பட்டிருக்கிறவன் நம்மை நினைக்கப்புகா நின்றானோ. [செய்கொள் செந்நெல்] - ஒரு முதலே செய்யை விழுங்கும்படியாயிருக்கை. [உயர்] - அங்கு வரம்பில்லாமையாலே முடிய உயரா நிற்குமத்தனை. *அஹமன்னம்* என்பாரளவும் செல்லத்தானுயரா நிற்குமத்தனை. [திருவண்வண்டூருறையும்] "செய்துபோன மாயங்களும்" என்று கூப்பிடவேண்டாதபடியாயிருக்கை. அதாவது - அவதாரவ்யாவ்ருத்தி. [கைகொள் சக்கரத்து] - செங்கெலின் படியாயிருக்கை. கைக்கெல்லாம் தானே யாபரணமாயிருக்கை. [என் கனிவாய்] - முறுவலையெனக்கு முற்றூட்டாக்கினவன். [பெருமான்] - வாய்க்கரையிலே எனக்கு ஜீவநத்தையிட்டு என்னை எழுதிக்கொண்டவன். [கைகொள் சக்கரத் தென் கனிவாய்ப் பெருமான்] - ராஜபுத்ரர்கள்கையிலிடைச்செறி கடைச்செறிக்குத் தோற்றிருக்குமாபோலே. [பெருமான்] - திருவதரத்தில் பழுப்புக்கும் கையுந்திருவாழியுமான சேர்த்திக்குமாயிற்று இவளெழுதிக்கொடுத்தது. [கண்டு] - நானநுபவிக்கப்பாரித்த துறைகளெல்லாம் நீங்கள் காணவிறேபுகுகிறது. இவளைப்பற்றினார்க்கு இவளினும் பேறு முற்பட்டிருக்குமிறே. ஸ்ரீ விபீஷணாதிகள்பக்கலிலே கண்டுகொள்வது. [கைகள் கூப்பி]-இத்தலையில் ராஜகுலங்கொண்டு மேன்மையடித்திராதேகிடிகோள். அவர்பழையவரல்லர், பெருமதிப்பர்கிடிகோள்; தொழுதுகொடு நில்லுங்கோள். "தலையில் வணங்கவுமாங்கொலோ" என்றிருக்குமவளிறேயிவன்தான், இவள் பரிகரமுமப்படியேயிறே. [சொல்லீர்] - தொழுதவனந்தரம் முகம்பார்த்துக்கொடு நிற்பர்; பின்னை யுங்களுக்கு வேண்டினபடி சொல்லுங்கோள். ப்ரணயித்வத்திலே சிறிது கொத்தையுண்டானாலும் தானான தன்மைபோகாதே. [சொல்லீர்] - இத்தலையில் வைவர்ண்யந் தொடக்கமான ஆற்றாமையடங்கலும் உங்கள் பாசுரத்தில் அவனறியும்படி சொல்லுங்கோள். ஒரு பாசுரமிட்டுச் சொல்லவேண்டாவோவென்னில்; [காதன்மை - சொல்லீர்] காதன்மையென்றவாறே - தம்மளவிலே யித்தலைக்குமுள்ளதென்றிருப்பர்; "ஸத்ருச விஷயமானால், வினையாளையும் ஸத்ருசமாயிருப்பது" என்றிறேயவரிருப்பது. அல்லாத ஏற்றங்களோபாதியிறே ஆற்றாமையில்வந்தால் இருக்கும்படியுமித்தலைக்கு. [வினையாட்டியேன்காதன்மை - சொல்லீர்] - அவர் 'இவ்வூர்க்கவ்வூர்காதம்' என்றிருந்தால், அப்படியே "இவ்வூர்க்கவ்வூர்காதம்" என்றிருக்கமாட்டாத பாபத்தைப் பண்ணின என்னுடையகாதல். தமக்கித்தலையை யொழியச் செல்லும்படியாயிருந்தாலும், எனக்கத்தலையையொழியச் செல்லாதபடியான பாபத்தைப்பண்ணினேன். அங்குநின்றும் வந்தார்க்கு வார்த்தை சொல்லவிடவும் பெற்றிலேன். [வினையாட்டியேன் காதல் சொல்லீர்] - வன்னெஞ்சர்காதல்போலன்றிறே மென்னெஞ்சர்காதல்; மெல்லியவார்காதலனவல்லாத வென்காதல் சொல்லீர். சொல்லுவார் தாழ்வே; வரவுதப்பாதென்றிருக்கிறாள்.

காதல்மென்பெடையோடு உடன்மேயுங்கருநாராய்!*
வேதவேள்வியொலிமுழங்கும் தண்திருவண்வண்டூர்*
நாதன்ஞாலமெல்லாமுண்ட நம்பெருமானைக்கண்டு*
பாதங்கைதொழுதுபணியீர் அடியேன்திறமே. (2)

ஒ.—இரண்டாம்பாட்டில், பரமகாருணிகனான திருவண்வண்டூர்நாதனுக்கு என்திறத்தை யறிவியுங்கோளென்று சில நாரைகளைக்குறித்துச் சொல்லுகிறாள். [காதலென்று தொடங்கி] - விரஹவ்ய

ஸநஸ்ஹமல்லாதபடி ஸ்நேஹத்தையுடைத்தாய் அதுக்குமேலே, விச்லேஷிக்கில் முடியும்படியானமார்த்தவத்தை யுடைத்தான பேடையையிழவாமைக்காக அத்தோடு பிரியாதேமேய்கிற கருநாராய். [வேதவேள்வி என்றுதொடங்கி] - வேதகோஷங்களும், வைதிகமானயாகங்களிலுண்டான ப்ரேஷாதிகோஷங்களும் மிக்கிருந்துள்ள திருவண்வண்டூருக்கு நாதனாய் ப்ரளயங்கொள்ளுகிற ஜகத்தையெல்லாம் திருவயிற்றிலேவைத்து உபகரித்தருளினசெயலாலே நம்மை அடிமைகொண்டிருக்கிறவனைக் கண்டு. [பாதமென்றுதொடங்கி] - கைதொழுகைபோராது, முதலிகளாயிருப்பர், நிர்க்கரணமத்தைப்பண்ணி. எம்பெருமான் பக்கலிலேபோகிறனை சிலவாளகையாலே, அடியேனென்கிறாள்.

இ.—இரண்டாம்பாட்டில், ஆர்த்தரக்ஷணத்திலே தீக்ஷிதனானவனுக்கு என்னுற்றுமையை யறிவியென்று ஒருநாரையைக்குறித்துச் சொல்லுகிறாள். "யாம் கபீநாம்ஸஹஸ்ராணி" என்னும் விஷயமிறே.

[காதலித்யாதி] - காதலேநிரூபகமாக உடைத்தாய் விரஹஸஹமல்லாதபேடை பிரியவும்பொறாதே கலக்கவும்பொறாதே யிருக்கை. [உடன்மேயும்] - பிரிந்தால்வருமதெல்லாம் அறிந்துபரிமாறுகின்றன. உணர்த்தடலுடுணர்ந்திறே. அந்வயத்திலே, வ்யதிரேகத்தில் வருமதெல்லாம் அறிந்துபரிமாறுகின்றன. இரண்டுக்கும் வாயலகொன்றால் பிறக்கும்கார்யம் பிறவாகின்றது. நானுபவாஸக்ருசையாயிருக்க, "இதம்மேத்யமிதம்ஸ்வாது" என்கிறபடியே புழிக்கவுங்களுக்கு ப்ராப்தியுண்டோ. நாட்டிலே பிரிந்துபொகட்டுப்போகாதாரும் சிலருண்டாகாதே. [கருநாராய்] - பிரிவுக்கு ப்ரஸங்கமில்லாமையாலே தன்னிறம்பெற்றிருக்கிறபடி. பிரிந்தவன்வடிவுக்கு ஸ்மாரகமாயிருக்கிறபடி. [வேதவேள்வியொலி] - அவன்குறையாலன்று, ஊரில் போக்யதையாலே தாழ்த்தானித்தனை. வேதகோஷமும், யாகத்தில் சஸ்த்ராதிகோஷங்களும் ஸமுத்ரகோஷம்போலே யிருக்கிற ச்ரமஹரமானவூர். [திருவண்வண்டூர்நாதன்] - "ஸ்ரீவைகுண்ட்டநாதன்" என்றதுக்குமவ்வருகேயொன்றிறே இது எங்ஙனேயென்னில்; - [ஞாலமெல்லாமுண்ட] - தளர்ந்தார்தாவளம். குணகுணநிரூபணம்பண்ணுதே ஆபத்தேகைம்முதலாக, வயிற்றிலேவைக்கை. ஆபந்நராயிருந்ததுக்குமேற்படத் தூதுவிடுகை மிகையாயிருக்குமவன். [நம்பெருமான்] - ஆபத்ஸகத்வத்தைக்காட்டி என்னை அநந்யார்ஹை யாக்கினவன். [கண்டுபாதங்கைதொழுது] - கண்டவாறேவிக்ருதராய் கர்த்தவ்யத்தை மறவாதே, திருவடிகளிலே தண்டனிடுங்கோள். தொழுகைபோராது, முதலிகளாயிருப்பர், கனக்க அனுவர்த்தியுங்கோள். [பணியீர்] - எதிர்த்தலை திர்யக்குக்களாகவுமாம், தான் ஜனககுலத்திலே பிறக்கவுமாம், கடகரை கௌரவித்துச்சொல்லக்கடவதென்கை. [அடியேன்] - பிராட்டியான தசையிலும், வாஸனையாலே ஸ்வரூபத்தில் இங்ஙனல்லது ப்ரதிபத்தியில்லையிவர்க்கு. இவருடைய நானிருக்கிறபடி. [திறமே] - ஒருமஹாபாரதமிறே. "அவன்படி" என்னுமித்தனை, சொல்லித்தலைக்கட்டப்போகாது.

ஈடு.—இரண்டாம்பாட்டு. ஆர்த்தரக்ஷணத்திலே தீக்ஷிதனானவனுக்கு என்னுற்றுமையை அறிவியென்று ஒரு நாரையை யிரக்கிறாள். [காதலித்யாதி] - "முன்புபோகவிட்டவர்கள் கொண்டுவருகிறார்கள்" என்றுகொண்டாறியிருக்கலாம் விஷயமன்றே; அங்ஙனேயாமன்று முன்புபண்ணின ப்ரபத்தியே யமையுமே.

[காதல்மென்பெடையோடுடன்மேயும் கருநாராய்] *ஊர்த்வம் மாஸாந்நஜீவிஷ்யே* என்றால் *நஜீவேயம் க்ஷணமபி* என்பாருமுண்டாகாதே. கூடக்கவிருந்து சொலவுமாத்ரமேயாய்ப்போகாதே அதுதன்னை அநுஷ்ட்டாநபர்யந்தமாக்கித் தலைக்கட்டுவாரையுங் கிடைப்பதே. ஸர்வஜ்ஞர்களோடு கலவாதொழியும்படியான பாக்யத்தைப்பண்ணுவதே நீங்கள் முன்னம். "பின்பு கூடுகைதவிராதாகில் இப்போது பிரிந்தாலென்செய்யவேணும்" என்றிருப்பர்களிறே அவர்கள்; அத்தனைகாரியப்பாடில்லையிறே இவற்றுக்கு. [காதல்] - நிரூபித்துப்பார்த்தால் காதலுக் கவ்வருகொன்றின்றிக்கே யிருக்கை. காதலை வடிவாக வுடைத்தாயிருக்கை. [மென்பெடையோடு] கலக்கவுங் கூடப்பொறாத மார்த்தவத்தை யுடைத்தாயிருக்கை. [உடன்மேயும் கருநாராய்] கலக்கவும் பொறுதார்க்குப் பிரியப்பொறுதென்னுமிடம் சொல்லவேண்டாவே. அத்தாலே கூடத் திரியாநின்றது. [காதல்மென்பெடையோடுடன்மேயும் கருநாராய்] - பேடையின் காதலறிந்து கூடத்திரியும் சேவலுமுண்டாகாதே. [உடன்மேயும்] *இதம் மேத்யமிதம் ஸ்வாது* என்கிறபடியேகாணுமிவைதிரிகிறது. அது வாயலகாலே கோத்தெடுத்துக் கொடுத்தால், பின்பாராயவேண்டாதே

மிடற்றுக்குக்கீழே யிழிந்தாலித்தனை இது செய்வது. பேடையின் மினைவறிந்து புஜிப்பிக்கும் சேவலுமுண்டாகாதே. [உடன்மேயும் கருநாராய்] - அதுக்கொரு ஒற்றைப்பிசாடிச் சொல்லு வாரைப்போலே சொல்லுகிறாள் தன் கார்யம் செய்கைக்காக. அடுகுவளத்தைத் தடுப்பாரைப் போலே. தன்னுடைத்த தவல் செவிப்பட்டால் அவற்றுக்கு மிடற்றுக்குக் கீழிழியாதென் றிருக் கிறாள்காணும். [கருநாராய்] - கூடத்திரிகையாலே நரைதிரை நீங்கி வடிவுபுகர்த்தபடி. பிரியா தார்க்குடம்பு வெளாதாகாதே. தானுடம்புவெளுத்துக் கிடக்கிறாளிறே.

[வேதவேள்விப்பொலிமுழங்கும் தண்திருவண்வண்டூர்] - இவற்றினுறிவுகேடு பலித்தபடி சொல்லுகிறது. அங்குண்டான வேதகோஷம், வைதிகக்ரியை, இவைகண்டு கால்தாழ வேண் டாவிறே இவற்றுக்கு. தன்னுடைய னவைகண்டிறே வரமாட்டாதே நிற்கிறது. *தாயஜ்ஞவிவா ஹேஷு* தாகங்கள் பண்ணுமிடத்தே எழுந்தருளியிருப்பாராயிற்று, தேசத்திலே, காலத்திலே, ப்ராப்தவிஷயங்களிலே இடுவிக்கைக்காக. யாகங்களிலே யெழுந்தருளி இருப்பராயிற்று, ந்யா யார்ஜ்ஜித தனம்கொண்டு செய்விக்கைக்காகவும், சடங்குகளில் தப்பினவையுண்டாகில், அவை யெடுத்துக்கொடுக்கைக்காகவும். [விவாஹேஷு] இரண்டு தலையையும் பொருந்தவிட்டு, பொருந்தாதார்க்கு வேண்டுவனசெய்து, ஹோமம்பண்ணுவித்துத் தலைக்கட்டிக்கொடுக் கைக்காக, விவாஹம்பண்ணுமிடங்களிலெழுந்தருளியிருப்பர். *ஸமாஜேஷு மஹத்ஸு ச* திர்க்க ஸத்ரங்களிலேயாதல், உத்ஸவங்களிலேயாதல். [ச] யாவனொருவனோரிடத்தே அத்ருஷ்டகார் யங்கள் செய்யும், அங்கேயிருப்பரென்கிறது. *நத்ரக்ஷ்யாம: புநர்ஜாது* அவரையவ்வோவிடங் களிலேயிருக்கக்காண்கிறிலோம். *தார்மிகம் ராமமந்தரா* என்றான், இவரிவ்விடங்களிலிருக்கிற தென் என்னில்; தர்மஸம்சயங்களறுத்துக்கொடுக்கைக்கும், அவை தப்பாமே யநுஷ்டிப் பிக்கைக்குமாக. இப்படியேயிறே யவன்படிகள். [திருவண்வண்டூர்காதன்] - "ஸ்ரீவைகுண்ட நாதன்" என்னுமதிற்காட்டிலுண்டான ஏற்றம் சொல்லுகிறது. எளியாரை வலியார் பறிக்க. அங்கே கோயிற்சாந்து பூசியிருக்குமதோரேற்றமன்றிறே. வேதகோஷமும் யாகத்தில் சஸ்த்ரா திகோஷமும் ஸமுத்ரகோஷம் போலேயிருக்கிற ச்ரமஹரமான வூர். [ஞாலமெல்லாமுண்டநம் பெருமானைக்கண்டு] - அம்முதன்மையோடே கூட வந்தாலுமில் அங்குத்தை உதவாமையும் கிடக்குமோவென்னில்; அங்ஙனன்று, தளர்ந்தார்தாவளமென்கிறது. ஆபத்ஸகனிறே. [நம் பெருமானைக்கண்டு] - ஆபத்ரக்ஷகனான செயலைக்காட்டி என்னை யநந்யார்ஹமாகவெழுதிக் கொண்டவனைக்கண்டு. [பாதம் கைதொழுது] - திருவடிகளிலே தண்டனிட்டு. "கைகள்கூப்பி" என்றதே; தொழுதார்க்கு நிற்கவொண்ணாதிறே. உண்ணாநிற்க, மிடற்றைப் பிடித்தாப்போலே யிருப்பதொன்றிறே தொழுதுவைத்து விழாதேயொழியுமது என்று பூர்வர்கள் நிர்வஹிக்கும் படி. "மதித்தானொரு ஸ்ரீவைஷ்ணவன் ஸ்ரீபாதத்தே தலைபடத் தண்டனிட்ட அன்று எனக்கு உண்டு பசி கெட்டாப்போலேயிருக்கும்" என்றருளிச்செய்வர் ஜீயர். அன்றிக்கே கிலாந்தோற் றும்படி அவர்திருவடிகளிலே கைசென்று தாக்கும்படி விழுந்துவிடவுங்கோள். தீர்க்கப்ர ணாமம்பண்ணுங்கோளென்றபடி. [பணியீர்] - அவனைக்கிட்டி நின்று, ப்ரணயரோஷத்தாலே "நீ, நான்" என்று சொல்லுமவையெல்லாம் சொல்லவொண்ணாதிறே இவர்கள் முன்பு. இவர் கள் பக்கலுபசாரத்தில் குறையாமற் சொல்லுகிறபடி. [அடியேன்] - உங்களைக்கொண்டழைப் பித்துக்கொள்ள இருக்கிறவனுக்கன்று; அத்தலையால் வந்தவிறவு பரிஹரித்து அவனோடே சேர்க்கவிருக்கிற உங்களுக்கடியேனென்கிறாள், *நித்யம்யதீயசரணௌ சரணம் மதீயம்* என்கிற படியே. [அடியேன்திறமே] - அவன்திறம்போலன்று. என்னிடையாட்டத்தைச் சொல்லுங் கோள். சொல்லிலொரு மஹாபாரதத்துக்குப் போருமாகாதே.

திறங்களாகியெங்குஞ் செய்களூடுழல்புள்ளினங்காள்!*
சிறந்தசெல்வம்மல்கு திருவண்வண்டூருறையும்*
கறங்குசக்கரக்கைக் கனிவாய்ப்பெருமானைக்கண்டு*
இறங்கிநீர்தொழுதுபணியீர் அடியேனிடரே. (3)

ஓ.—மூன்றாம்பாட்டில், திறந்திறமாய்த்திரளுகிற புள்ளினங்களைக் கண்டு, தன்கார்யத்துக்குத் திரளுகிறனவாகக்கொண்டு, திருவண்வண்டூரிலேயிருக்கிற எம்பெருமானுக்கென்னுடைய வ்யஸநத்தை

யறிவியுங்கோளென்கிறாள். [திறம்] - திறள். [உழலுகை] - ஸஞ்சரிக்கை. [சிறந்தவென்று மேலுக்கு] விலக்ஷணமான ஸம்பத்து பெருகாநின்றுள்ள திருவண்வண்டூரிலே நிரந்தரவாஸம் பண்ணுநிற்பதுஞ் செய்து ப்ரதிகூல நிரஸநத்வரையாலே சுழலாநின்றுள்ள திருவாழியோடுகூடினதிருக்கையையும் தர்சநீயமான திருப்பவளத்தையுமுடையனாய் அத்தாலே மிகவும் வேண்டப்பாடுடையனாயிருக்கிறவனைக் கண்டு அவனுக்கு தயைபிறக்கும்படி நீங்கள் அபிமான ரஹிதராய்க்கொண்டு தொழுது தான் நினையாதிருக்கையால் நான்படுகிறமனோதுஃக்கத்தை அவனுக்குப்பணியுங்கோளென்கிறாள். அவற்றின் பக்கல் தனக்குண்டான கௌரவாதிசயத்தாலே - பணிமீரென்கிறாள்.

இ.—மூன்றும்பாட்டில், திறந்திறமாக ஸஞ்சரிக்கிற புள்ளினங்களைக்கண்டு, என் வ்யஸநத்தையறிவியுங்கோ ளென்கிறாள். [திறங்களாகி] - திறந்திறமாய்க்கொண்டு. [எங்கும்] - பார்த்த பார்த்த விடமெல்லாம். [செய்களூடுழல்] - செய்களூடே ஸஞ்சரியாநின்றனவாயிற்று. இரைதேடித் திரிகிறன வென்றறியாதே, தன்கார்யத்துக்காகத்திரண்டு ஸஞ்சரியாநின்றனவாக நினைத்திருக்கிறாள். பிராட்டியையும் பெருமாளையுங்கூட்டுகைக்கு முதலிகள் திரள்திரளாக ஸஞ்சரித்தாப்போலே, தங்களைக்கூட்டுகைக்காக வென்றிருக்கிறாள் [புள்ளினங்காள்] - பிரிந்து கூட்டவிராதே - கூடியிருக்கப்பெற்றதிறே. ராமாவதாரத்துக்குப் பின்பு பிரிந்தாரைக்கூட்டுவது திர்யக்குக்களென்றிருக்கிறாள். [சிறந்தவித்யாதி] - உன் தசையை யறிந்து வந்துதவாதவன் நாங்கள் சொன்னவாறே வரப்புகுகிறானோ வென்ன; அவன்குறையன்று, அவ்வூரில் ஐச்வர்யம் நினைக்கவொட்டாதென்கிறாள். தகுதியான ஸம்பத்து பெருகாநின்றுள்ள திருவண்வண்டூரிலே நித்யவாஸம்பண்ணுகிறவன். கலந்தபோது ''எனக்கெல்லாஸம்பத்தும் நீயே'' என்றுசொல்லி, இப்போது தனக்கென்ன ஒரு ஸம்பத்துண்டாயிருக்கிறபடியென் என்றிருக்கிறாள். [கறங்கு சக்கரக்கை] - ப்ரதிகூலநிரஸநத்வரையாலே சுழன்றுவருகிற திருவாழியைக் கையிலேயுடையவன். கறங்குகை - சுழலுகை. [கனிவாயித்யாதி] - அகவாயில்ஹர்ஷந்தோற்ற ஸ்மிதம்பண்ணி, அத்தாலே யென்னை யநந்யார்ஹையாக்கினவனைக் கண்டு. அன்றிக்கே, ''இவளைவென்றோம்'' என்னும் ஹர்ஷத்தாலே கையில் திருவாழியைச்சுழற்றி ஸ்மிதம்பண்ணி முதன்மைதோற்றவிருக்கிற விருப்பு'' என்று பட்டருளிச்செய்வர். [இறங்கி நீர் தொழுது] - தயைபிறக்கும்படி பக்நாபிமானராய்த்தொழுது, நீர் கறங்குசக்கரக்கைக் கனிவாய்ப் பெருமானையிருக்கிற விருப்புக்கசலானாய் நோவுபடக்கடவளோ வென்னுங்கோள். அன்றிக்கே, ''நசாஸ்ய துஷ்டாவகாஸ்தி'' என்கிறபடியே, நெஞ்சுசோதித்து தரிக்கைக்கு பரிகரமுடையர்; பக்நாபிமானராய் விழுங்கோளென்றுமாம். ''நிக்ருத: ப்ரணத: ப்ரஹ்வ:'' [பணிமீர்] - அவற்றின்பக்கல்கௌரவாதிசயமிருக்கிறபடி. [அடியேன்] - அத்தலைக்கடியேனென்கிறாளன்று, சேர்த்தவர்களுக்கடியேனென்கிறாள். [இடரே] - தாம் நினையாதிருக்கையால், நான் படுகிறதுஃக்கத்தை. கலவி யிரண்டுதலைக்குமொத்திருக்க, இவள்தசை கேட்டறிய வேண்டும்படியிறே அவரளவு.

ஈடு.—மூன்றும்பாட்டு. திறந்திறமாக ஸஞ்சரிக்கிற புள்ளினங்களைக்கண்டு, என்வ்யஸநத்தை யறிவியுங்கோளென்கிறாள்.

[திறங்களாகி] - திரள்திரளாக. இவை திரள்திரளாய்த்திரிகிறது நங்காரியம் செய்து தலைக்கட்டவென்றிருக்கிறாள். வாயுந்திரையுகளில்வாஸனையாலே, தன்னார்த்திகண்டு பொறுக்கமாட்டாமே படுகிறனவாகக்கொண்டு நினைத்திருக்கிறாள். அங்கு - தர்மாதிசயம் பெருமையாலே நோவுபடுகிறன வென்றிருந்தாள். இங்கு - தன்னிழவுகண்டு பொறுக்கமாட்டாமையாலே நோவுபடுகிறனவென்றிருக்கிறாள். இங்ஙன்கூடுமோ வென்னில்; ''இவைபக்ஷிகள், நங்காரியம் செய்து தலைக்கட்டமாட்டாது'' என்னுமறிவின்றிக்கே பொழிந்தபின்பு, இதுவுங் கூடத்தட்டில்லை. [திறங்களாகியெங்கும்]-பிராட்டியைப் பிரிந்து பெருமாள் நோவுபடுகிற ஸமயத்திலே முதலிகளடங்கலும் திரண்டு நாலுதிக்கும் புகுந்து அங்குமிங்கும் திரிந்தாப்போலேகாணுமிவையுந்திரிகிறபடி. [எங்கும்] - தேடினால் காண்கைக்கு ஸம்பாவனையில்லாதவிடமெங்கும் புக்குத்தேடாநின்றன. ஸ்வயம்ப்ரபையுடைய பிலமகப்படப் புக்குத்தேடினார்களிறே முதலிகள். [உழல் புள்ளினங்காள்]-காணஸம்பாவனையில்லாதவிடமெங்கும் புக்குத்தேடுவது, காணப்பெறுதொழிவது, அநசநத்திலே தீக்ஷிப்பதாய்க்கொண்டு பட்டபாடெல்லாம் படுகிறனவாயிற்று. ராமாவதாரத்துக்குப் பின்பு பிரிந்தாரைச்சேரவிடுகை திர்யக்குக்களுக்குப் பணியென்றுகாணும் வாஸனை.

[சிறந்தவிக்யாதி] - வாராமை அவன்குற்றமன்று கிடீர்கோள், அவ்வூரில் ஸம்ருத்தி வேறேயும் சிலரை நினைக்கவொட்டுமோ. [சிறந்தசெல்வம்மல்கு] - மிக்க ஐச்வர்யம் கரைபுரளும்படியான ஊர். [திருவண்வண்டூருறையும்] - அவதாரவ்யாவ்ருத்தியும், பரமபதவ்யாவ்ருத்தியும் [சிறந்த செல்வம்] - தகுதியான ஐச்வர்யம். கலந்துகூடவிருக்கிறபோது "நீயே யெனக்கெல்லா ஐச்வர்யமும்" என்று சொல்லிவைத்து, இப்போது தனக்கென்னவொருஸம்பத்துண்டாயிருக்கிறபடி எங்ஙனேயென்றிருக்கிறாள். திருவண்வண்டூரென்கையாலே - பரமபதவ்யாவ்ருத்தி. உறையுமென்கையாலே - அவதாரவ்யாவ்ருத்தி. *கோபஜநம் ஸ்மரந்நிதம்சரீரம்* என்னுமாபோலே, இங்குத்தை ஐச்வர்யமும் இவனை மறக்கப்பண்ணிற்றிறே. [கறங்குசக்கரக்கை] - ப்ரதிகூலநிரஸநத்வரையாலே சுழன்றுவாராநின்றுள்ள திருவாழியைக் கையிலேயுடையனான ஸர்வேச்வரனை. அன்றிக்கே, இத்தலையைத் தோற்பித்துக்கொண்டோமென்னும் மேன்மைதோற்ற, ஆயுதத்தைச் சுழற்றி ஸ்மிதம்பண்ணியிருக்கிறபடி. [கனிவாய்ப் பெருமானைக்கண்டு] - அகவாயில் ஹர்ஷந்தோற்ற ஸ்மிதம்பண்ணி அத்தாலே யென்னை எழுதிக்கொண்டவனைக்கண்டு. அவர்க்குப் புறம்பே ஐச்வர்யமுண்டானாலும் எங்களுக்குத் தம்மையொழிந்த ஐச்வர்யமில்லை கிடீர். திருவுக்கும் திருவாகிய செல்வனிறே. [இறங்கிநீர்தொழுது பணியீர்] - தொழுங்கோளென்கிறாள்; தொழுதவளவிலே நில்லாதே; முதலியார்கிடீர்கோள், பிரம்புகள்படாமே கடுக விழுந்துகொடு நில்லுங்கோளென்கிறாள்; விழாநின்றாலு மகவாய்சோதியாநிற்பர், அபிமானத்தைப் பொகட்டுக்கொண்டு விழுங்கோளென்கிறாள். *நிப்ருத:ப்ரணத:ப்ரஹ்வ:* என்னுமாபோலே. [பணியீர்] - இத்தலையில் நின்றும் சென்றாரை அவன்சொல்லும்படியேயாகிலும் சொல்லவேணுமே. தன்னையொழிந்தாரடங்கலும் தன்னைச் சொல்லும்படியை, இத்தலையில் நின்றும் சென்றாரைச்சொல்வாநிற்குமவன், ஸ்வரூபத்தால் சொல்லுமவை யில்லையானால், ப்ராணயித்வத்தால் வருமது சொல்லவேண்டாவிறே. [அடியேனிடர் - பணியீர்] - அவனறியாதவை சொல்லிக்கொடுக்கவேணுமே. அறிந்தானாகில், ஆள்விடப்பார்த்திருக்குமோ. [அடியேனிடர்] - இரண்டுதலைக்கும் கலவியொத்திருக்க, இத்தலைக்குவந்த இடரை யறிவியுங்கோள்.

இடரில்போகம்மூழ்கி இணைந்தாடும்மடவன்னங்காள்!*
விடலில்வேதவொலிமுழங்கும் தண்திருவண்வண்டூர்*
கடலின்மேனிப்பிரான் கண்ணனைநெடுமாலைக்கண்டு*
உடலம்நைந்தொருத்தி உருகுமென்றுணர்த்துமினே. (4)

ஒ.—நாலாம்பாட்டில், திருவண்வண்டூரிலெழுந்தருளியிருக்கிற எம்பெருமானைக்கண்டு சரீரம் கட்டழிந்து ஒருத்திபடும்பாடு! என்று சொல்லுங்கோளென்று சிலவன்னங்களைக் குறித்தருளிச்செய்கிறாள். [இடரிலென்றுதொடங்கி] - விச்லேஷகந்தம் இல்லாத ஸம்ச்லேஷஸுகத்திலே முழுகிப்பிரியமாட்டாதே ஒன்றுக்கொன்று பவ்யமாய்க்கொண்டு ஸஞ்சரிக்கிற அன்னங்காள்! நிரந்தரமாக வேதகோஷம்மிக்கிருந்துள்ள திருவண்வண்டூரிலே தன் வடிவழகைக்காட்டி என்னை யநுபவிப்பித்து ஸுலபனாய் இப்போதெட்டாதிருக்கிறவனைக்கண்டு.

இ.—நாலாம்பாட்டில், சிலவன்னங்களைக் குறித்து, சரீரம் கட்டழிந்து சிதிலையாகாநின்றாளென்று சொல்லுங்கோளென்கிறாள். [இடரில்போகம்மூழ்கி] - விச்லேஷகந்த மில்லாத ஸம்ச்லேஷரஸத்திலே யவகாஹித்து போகத்துக்கு ஏகாந்தமான வனத்திலேபோந்து ஸம்போகம் செல்லா நிற்க, ராவணன்வந்து தோற்றினாற்போலேயிருக்கை யன்றிக்கே, ஸம்போகத்துகெல்லையிலே செல்லப்பெற்றபடி. [இணைந்தாடும்] - ஒருதலை நோவுபட்டுத் தூதுவிடவிராதே, இரண்டுதலையு மொக்கக்களிக்கப்பெறுவதே. ஒன்றுக்கொன்று பவ்யமாய்க்கொண்டு ஸஞ்சரிக்கை பேடைக்குமார்த்தவம் ஜன்மஸித்தம், சேவலுக்குக் கலவியாலே அதின்படியுண்டாயிற்று. [விடலில்வேதவொலி] - நிரந்தரமாக வேதகோஷம் கடல் கிளர்ந்தாப்போலேயிருக்கும்படி. "கர்மணைவஹிஸம்ஸித்திமாஸ்த்திதா ஜநகாதய:" என்னக்கடவ விவள்படைவீடிறே ச்ரமஹரமானவூர். வேதகோஷம் மாறிக்கிடக்கிறது. [கடல் மேனி] - கடல்போலே ச்ரமஹரமான வடிவையுடையவன். [பிரான்] - "பக்தாநாம்" என்று அவ்வடிவை யாச்ரிதர்க்கு உபகரிக்குமவன். [கண்ணனை] -

அவர்க்குக்கையாளாயாயிற்றதுபவிப்பிப்பது. [நெடுமாலே] - வ்யாமுக்தனானவனே. அன்றிக்கே ச்ரமஹரமான வடிவையெனக்குபகரித்து பவ்யனாய், இன்றெட்டாதேயிருக்கிறவனைக் கண்டு. இது பட்டர்நிர்வாஹம். [உடலம்நைந்து] - உடம்புகட்டழிந்து சிதிலேயாய் அகவாய் சிதிலமாய் இங்கிதங் கொண்டறிய வேண்டாதே உடம்பிலே வெளியிட்டபடி. மானஸமாய் மறைந்து போருமளவன்றிக்கே யிருக்கை. [ஒருத்தி] - "காட்டிலேயொருமான் அம்புவிட்டுத் துடியாநின்றது" என்றால், எய்தவனறியு மிறே. [உருகுமென்று] - நீராகாநின்றாளென்று. [உணர்த்துமினே] - உருகப்பண்ணி மறைந்திருக்கிற வர்க்கு அறிவியுங்கோள்.

௪.—நாலாம்பாட்டு. சில அன்னங்களைக்குறித்து, சரீரம் கட்டழிந்து சிதிலேயாகா நின்றாளென்று சொல்லுங்கோளென்கிறாள்.

[இடரில்போகம்மூழ்கி] - விச்லேஷகந்தமில்லாத ஸம்ச்லேஷரஸத்திலே யவகாஹித்து. போ நான்செய்தபடிசெய்ய, இப்படியே யிருப்பாரையும் காணப்பெற்றோமிறே லோகத்திலே. போ கோபக்ரமத்திலே விச்லேஷம் பிறந்ததிறே தனக்கு. வீட்டில் ஆய்ச்சிக்கும் ஐயருக்கும் பர தந்த்ரராகவேணும், நாடுகேட்கவேணுமென்கிற அங்யபரதையெல்லாம் தீரும்படி ஏகாந்தஸ்த் தலம் தேடிபுஜிக்கப்போக, அங்கேராவணன்வந்து தோற்றினானிறே தனக்கு; அதில்லேயேயி வற்றுக்கு. [இடரில்போகம்மூழ்கி] - ஸம்ச்லேஷத்துக்குப் பாரித்துக்கொண்டிருந்து விச்லே ஷத்தோடே தலைக்கட்டும்என்னைப்போலே யாகாதொழியப் பெறுவதே. [மூழ்கி] - தரைகாண் கிறதில்லை இன்னம். [இணைந்தாடும் மடவன்னங்காள்] - ஒருதலைகளிக்க ஒருதலை துடிக்க வேண்டாதபடியாயிருக்கை. ஒன்றின்நினைவுக்கொன்று காலெடுக்கவமைந்திருக்கை. [மட வன்னங்காள்] - ஒன்றுக்குச் சொல்லுகிற ஸ்வபாவமிரண்டுக்கு முண்டாயிருக்கை. மடப்ப முள்ளது பேடைக்கேயாயிருக்க, இரண்டுக்குமொக்கச் சொல்லுகிறது ஸம்ச்லேஷத்தால்வந்த துவட்சியிரண்டுக்கு மொத்திருக்கை. [விடலில்வேதவொலிமுழங்கும்] - அத்யயநம் மறுத்திறே யிவ்வூர்கிடக்கிறது. ஜநகுலமிறே ஓதுவாரின்றிக்கே கிடக்கிறது. *கர்மணைவ ஹி* என்கிற திறே. [முழங்கும்] - மற்றோரடையாளஞ் சொல்லவேணுமோ, புறப்பட்டவாறே வேதகோஷம் வழிகாட்டுகிறதிறே. வேதமார்க்கநுஸாரிகளன்றோ நீங்கள். [கடல்மேனிப்பிரான்] - கடல் போலேச்ரமஹரமான வடிவையுடையவனாய், அவ்வடிவைத்தாழநின்று இத்தலைக்கு முற்றூட்டாக புஜிப்பித்து, பின்னையும் "ஒன்றும் செய்யப்பெற்றிலோம்" என்னும் வ்யாமோஹத்தை யுடையவன். அன்றிக்கே, குளிர்ந்தவடிவை பவ்யரைப்போலேநின்று புஜிப்பித்து, இப்போ தெட்டாதபடி யிருக்கிறவன். அன்றுதானும் தனக்கு வேண்டுவதாய்ச் செய்தானல்லன், இத் தலையை யழிக்கைக்காகச் செய்தாளித்தனை; அன்றுவேண்டியிருந்தானாகில் இன்றும்வேண்டி யிரானோ. [உடலம்நைந்து] - "நெஞ்சிலே சிறிதுநோவுபிறந்த வளவேயாகில், சரீரத்தேயொரு வாட்டம் வருவதற்குமுன்னேசென்று கைக்கொள்ளுகிறோம்" என்றிருக்கவேண்டா. [உடலம் நைந்து] - தனித்தனியே சைதந்யம்பெற்றழியவல்லவுடம்பிறே. அவ்வுடம்போடே யணைந்து பிரிந்த இவ்வுடம்புகொண்டு பிழைக்கவொண்ணாது என்னுமிடம் தாமேயறிவரிறே. [ஒருத்தி] - "இன்னகாட்டிலே மான்பேடைகிடந் துழற்றாநின்றது" என்றால், எய்தவன்கை யுணருமிறே. [ஒருத்தியுருகும்] - எதிர்த்தலைக்குஇதில்லையென்னுமிடம் அறிவியுங்கோள். [உணர்த்துமினே] - தாமித்தலையை மறந்தமையை ஸ்மரிப்பியுங்கோள். உணர்த்தியற்றாரை யுணர்த்தவேணுமே. அறியாதாரை யறிவிக்கை அன்னத்துக்கே பணியிறே; பண்டும் பிறங்கிருளிறங்கெட அன்ன மாயிறே அருமறைபயந்தது. [ஒருத்தியுருகுமென்றுணர்த்துமினே] - ஒருத்திபடும் பாடே என்று சொல்லுங்கோள்.

உணர்த்தலூடலுணர்ந்து உடன்மேயும்மடவன்னங்காள்!*
திணர்த்தவண்டல்கள்மேல் சங்குசேருந்திருவண்வண்டூர்*
புணர்த்தபூந்தண்டுழாய்முடி நம்பெருமானைக்கண்டு*
புணர்த்தகையினராய் அடியேனுக்கும்போற்றுமினே. (5)

ஆ.—அஞ்சாம்பாட்டில், சில அன்னங்களைக்குறித்து; அவ்விடம் புக்காரையெல்லாம் மறப்பிக்கும் விஷயமாயிருக்கும், நீங்கள் அங்குப்புக்கா லென்னையும்நினையுங்கோளென்கிறாள். [உணர்த்தலென்று தொடங்கி] - கிலாய்க்கையையும் கிலாய்திருத்துகைக்குப்படும் து:க்கத்தையும் அநுஸந்தித்து இனியூட ஸம்பாவனையில்லாதபடி பிரியாதேமேய்வதும்செய்து பரஸ்பரம்பவ்யமான அன்னங்காள்! கொழுத்த வண்டல்கள்மேலே சங்குகள் உறங்காநின்றிருந்துள்ள திருவண்வண்டூரில் நம்மை விச்லேஷித்தமையும் மறந்து தாழெப்பித்துப் போதுபோக்கி நமக்கு அபவ்யனுமிருக்கிறவனைக்கண்டு. [புணர்த்தவென்று தொடங்கி] - புக்கவாறே அங்குத்தை ஐச்வர்யங்கள் உங்களை மறக்கப்பண்ணும், அங்ஙனே செய்யாதே கூப்பினகைகளும் நீங்களுமாய் எனக்காகவும் ஒருவார்த்தை விண்ணப்பம்செய்யவேணும்.

இ.—அஞ்சாம்பாட்டில், வேறே சில அன்னங்களைக்குறித்து: அத்தேசம் புக்காரை மறப்பிக்கும், நீங்கள்புக்கா லென்னையும் நினையுங்கோ ளென்கிறாள். [உணர்த்தலூடலுணர்ந்து] - ஊடுகையுங்கிலாய் திருத்துகையுமாய்ப்படும் து:க்கத்தை யநுஸந்தித்து. அபிமதை ஊடுகையாவதென்னென்னில்; ''என்னைப் பாராகிற்கப் பூவைப்பார்த்தாய்காண்'' என்னுதல், ஸ்நாதனுறைய் என்னுதல். உணர்த்துகையாவது - ''அதுதா னுனக்காகக்காண்'' என்று தெளிவிக்கை. [உடன் மேயும்] - ''பிரியிலிறே சூழ்த்துக்கொடுக்க வேண்டுவது'' என்று உடனே திரியாநின்றது. இப்படி தூரதர்சியா யிருப்பார்க்கன்றோ விச்சேதியாமல் அநுபவிக்கலாவது. [மேயும்] - இதம்மேத்ய மிதம்ஸ்வாது'' என்னுநின்றன. ''ஊடல், உணர்தல், புணர்தல்'' என்றிம்மூன்றிலும் இவற்றுக்குப்புணர்தலேயாய்ச் செல்லுகிறபடி, ''ஊடலுணர்தல் புணர்தலிவைமூன்றும் காமத்தால் பெற்றபயன்'' என்று - மூன்றையும் ப்ரயோஜனமாகச் சொன்னார்கள் தமிழர். மடவன்னங்காள்] - மடப்பம் - துவட்சி, ஸம்ச்லேஷமடங்க வடிவிலே தொடைகொள்ளும்படி யிருக்கை. துவட்சி பேடைக்கு ப்ரக்ருதி, சேவலுக்குக் கலவியாலேயுண்டாயிருக்கிறபடி. பரஸ்பரம் பவ்ய:தையாகவுமாம். [திணர்த்தவித்யாதி] - திணுங்கினவண்டல்களிலே சங்குகள்வந்துறங்காநிற்கும், சேற்றுக்கிறுய்க்கும் சங்குகள் நீருறுத்தினவாறே கொழுத்தவண்டல்களிலே சேராநிற்கும். [புணர்த்த] - தொடுக்கப்பட்டு தர்சநீயமாய் ச்ரமஹரமான திருத்துழாயைத் திருமுடியிலேயுடையனும், அத்தாலே யென்னை யநந்யார்ஹையாக்கினவனைக் கண்டு. நம்பாடுவருகைக்குறுப்பாக வொப்பியாநிற்கும், நீங்களறிவிக்குமத்தனையே குறை. அன்றிக்கே, பிரிவையொன்றாக நினையாதே வளையம்வைத்தொப்பித்து நமக்கு அபவ்யமாயிருக்கிறவரையென்றுமாம். [புணர்த்தகையினராய்] - இப்போது முதலிகளா யிருப்பர், வழியேபிடித்துத் தொழுதுகொடு செல்லுங்கோள். [புணர்த்தகை] - கூட்டினகை. [அடியேனுக்கும் போற்றுமினே] - அவ்வூர் உங்களையும் விஸ்மரிப்பிக்கும், உங்கள் பரிகரமான வென்னையும் நினையுங்கோள். அவனை மறக்கும்படி பண்ணின தேசமன்றோ. போற்றுகையாவது - கௌரவித்துச்சொல்லுகை தொழு தகைகளும் நீங்களுமாய் எனக்காகவு மொருவார்த்தை சொல்லவேணும். ''கைகள் கூப்பிச்சொல்லீர்'' ''பாதம்கைதொழுது பணியீர்'' என்று பிராட்டியானதசையிலு மிவர்க்கு ஸ்வரூபம்மாறாதே செல்லுகிறபடி.

ஈடு.— அஞ்சாம்பாட்டு. திரியவும் சில அன்னங்களைக் குறித்து; அத்தேசம் புக்காரை மறப்பிக்கும், நீங்கள்புக்கா லென்னையும் நினையுங்கோ ளென்கிறாள்.

[உணர்த்தலித்யாதி] - உணர்த்தலையு மூடலையு முணர்ந்து உடனே திரிகிற அன்னங்காள். பிரிந்தால் பின்புவரும் துக்கங்களெல்லா மநுஸந்தித்துக் கூடத் திரியாநின்றன. இனித்தான் போகப்ரகாரந்தான் மூன்று வகைப்பட்டாயிற்றிருப்பது. அவைகளாவன: ''ஊடலுணர்தல் புணர்தலிவைமூன்றும் - காமத்தாற் பெற்றபயன்'' என்று மூன்றையும் ப்ரயோஜனமாகச் சொன்னார்கள் தமிழர். இதிலே ஊடலாவது - எதிர்த்தலையோடே கூடினால் அஹேதுகமாக

விளைவதொன்று. அதுதான் - "என்னை யொழியக்குளித்தாய், என்னையொழியப் பூவைப்பார்த்தாய், உன்னுடம்பு பூநாறிற்று" என்றாற்போலே வருமவை. உணர்த்தலாவது - "உனக்கென்று குளித்தேன்" என்கையும், 'உனக்காம் என்றுபார்த்தேன்' என்கையும், "உன்வரவுக்கொப்பித்தேன்" என்றாற்போலே சொல்லுமிவை இவையிரண்டின் அனந்தரத்தே வருவது கலவி. இவையெல்லாமுண்டிறே இவளுடையனுக்கும். [உணர்த்தலூட லுணர்ந்துடன்மேயும்] - பிரியவல்லாரார், பின்பு நோவுபடவல்லலாரார், பின்பு நெய்யிலே கையிடவல்லாராரென்று கூடத்திரியாநிற்கும். "குற்றவாளராகிலிறே பின்பு பொறுப்பித்துக்கொள்ளவேண்டுவது" என்றுகாணுமிவற்றினுடைய ஸித்தாந்தம். [உடன்மேயும்] *இதம்மேத்ய மிதம்ஸ்வாது* என்றாரின்றன. ஊடல், உணர்தல், புணர்தலென்கிற மூன்றிலும், இவற்றுக்குப் புணர்தலேயாய்ச்செல்லுகிறபடி. ஒருகலத்திலே யொக்கவுண்டு திரிவாரைப்போலே ஒன்றையொன்றகன்று இரண்டுங்கூடப் பட்டினி கிடக்கையன்றிக்கேயிருக்கை. விழுக்காட்டிலுணரப்பெறுமை கெட்டோமென்கிறாள். அதாவது "ஸம்ச்லேஷவர்த்தகங்காண் இவ்விச்லேஷம்" என்றால், "அவ்வளவு மாறியிருக்கவல்லார்க்கிறே பின்பு போகஸம்ருத்திவேண்டுவது" என்னப்பெற்றிலேன். விவேகமில்லாதவிவை விவேகபலம் பெற்றன, அதுடைய நான் பெற்றிலேன். [மடவன்னங்காள்]-போகத்தால் வந்த துவட்சியடங்கலும் வடிவிலே தோற்றவிருக்கை. [உணர்த்தலித்யாதி] - வருவதறிந்து பரிஹரித்திருப்பார், விழுக்காடறியாதே அகப்பட்டார்கார்யம் செய்து தலைக்கட்ட வேண்டாவோ. இங்கிர்த்தேசத்தாலும் - இத்திருவாய்மொழியடங்கலும் ஊடல் கர்ப்பிக்கிறமை தோற்றுகிறது. [திணர்த்தவித்யாதி] - வாராதொழிந்தவிடம் அவன்குற்றமன்று கிடிகோள். செருமீனவண்டல்கள்மேலே. அழுக்குக்கிறுய்க்கக்கடவ சங்குகளானவை நீருறுத்தினவாறே கொழுத்தவண்டல்களிலே சேராநிற்கும். [சங்குசேரும்] - அசேதநங்களுங்கூடக் கால்வாங்கமாட்டாத தேசங்கிடிகோள். [சேரும்] - வேறுபோக்கிடமின்றிக்கேயிருக்கை. *நச புநராவர்த்ததே* என்னும்படியே மீட்சியின்றிக்கேயிருக்கை. மார்த்தவத்தாலும் குளிர்த்தியாலும் வேறொன்றை நினைக்கவொட்டாதிருக்கை. [சங்குசேரும்] ப்ரமாணபரதந்த்ரரல்லாதாரையும் மீளவொட்டாத தேசங்கிடிகோள். வெள்ளைகளையுங்கூடக்காற்கட்டுகிறதிறே மண்பாடு. [புணர்த்தவித்யாதி] - தோடுக்கப்பட்டு தர்சநீயமாய் ச்ரமஹரமான திருத்துழாயைத் திருமுடியிலே யுடையவனாய், அத்தாலே என்னை யகப்பார்ஜை யாக்கினவனைக்கண்டு. நீங்கள் சென்றறிவிக்கு மீத்தனையே வேண்டுவது, இங்குத்தை வருகைக்கொப்பித்தபடியே யிருக்கிறவன். அன்றியே, இத்தலையைத் தோற்பித்த வேண்டப்பாடு தோற்றும்படி வளையம் வைத்து முதன்மைகொண்டாடியிருக்கிறவன். புணர்த்த - சேர்த்த. [பூந்தண்துழாய்முடி நம்பெருமானைக் கண்டு] - தம்மொப்பனையையும் முதன்மையையும் நம்மோடேகாட்டியிருக்கிறவனைக் கண்டு. [புணர்த்தகையினராய்] - அங்கேசென்றால் தொழப்பார்த்திராதே, கையொத்துச் செல்லுங்கோள் கிடிகோள். வழியேபிடித்துத் தொழுதுகொடுபோங்கோள்; இல்லையாகில் *அவசா: ப்ரதிபேதிரே* என்கிற கண்ணழிவிலே சிலவெழுதுவர் கிடிகோள். [அடியேனுக்கும் போற்றுமினே] - (உங்கள் பரிகரமான வெள்ளையும் நினையுங்கோள், போற்றுகையாவது - கௌரவித்துச் சொல்லுகை. தொழுதகைகளும் நீங்களுமாய் எனக்காகவு மொருவார்த்தை சொல்லவேணும்.) நீங்களுமவனைப்போலே செய்யாதே கிடிகோள், அங்கேபுக்கால் என்னையும் நினைக்கவேணும். அதாவது - புக்காரையெல்லாம் தந்தாம் ப்ரயோஜநத்தே மூளப்பண்ணவல்ல தேசமாகையாலே, இத்தலையை நினைக்க விரகில்லையிறே. *லோபஜநம் ஸ்மரந்* என்னும்படியிறே யிருப்பது. [அடியேனுக்கும் போற்றுமினே] - அடியேனுடையாட்டத்தையும் அத்தலைக்கறிவிக்கவேணும்.

போற்றியானிரந்தேன் புன்னைமேலுறைபூங்குயில்காள்!*
சேற்றில்வாளைதுள்ளும் திருவண்வண்டூருறையும்*
ஆற்றலாழியங்கை அமரர்பெருமானைக்கண்டு*
மாற்றங்கொண்டருளீர் மையல்தீர்வதொருவண்ணமே. (6)

ஒ.—ஆறும்பாட்டில், சில குயில்களைக் குறித்து; திருவண்வண்டூரிலே சென்று எம்பெருமானைக் கண்டு உள்ளதசையையறிவித்து அத்தலையில்நின்றுமொருமாற்றங்கொண்டுவந்து என்மையல் தீருவதொருவண்ணம் அருளிச்செய்யவேணுமென்கிறாள். [போற்றியென்று தொடங்கி] - மனுஷ்யகந்தம் தட்டாதே புன்னைமேலேஉறைவதும்செய்து அந்யோந்ய ஸம்ச்லேஷத்தாலே மனோஹரமான வடிவையுமுடைய குயில்காள்! உங்களை ஏத்திஇரந்தேன், நீர்நிலத்திலும் ஸுகமாயிருக்கையாலே சேற்றிலே வாளைகள் உகளித்துத் துள்ளாநின்றிருந்துள்ள திருவண்வண்டூரிலே நான் நோவுபடா நிற்கத் தான் தேறி தனக்கு நல்லாரான அயர்வறுமமரர்களுக்குக் கையுந்திருவாழியுமான வழகைக்காட்டி அவர்களும்தானும் போதுபோக்கி யிருக்கிறவனைக்கண்டு. ஆற்றலாழி-வலியுடையதிருவாழி யென்னவுமாம்.

இ.—ஆறும்பாட்டில், சில குயில்களைக்குறித்து அவனுக்கென்தசையையறிவித்து அங்கு நின்றுமொரு மறுமாற்றங்கொண் டருளிச்செய்யவேணு மென்கிறாள். [போற்றி] - புன்னையின் கீழேநின்று குயில்களுக்கு மங்களாசாஸனம் பண்ணுகிறாள். ஏகாந்தமாகவநுபவிக்கிற சேர்த்தி நித்யமாகவேணும் தன்னார்த்திகண்டிரங்குகைக்குப் பாசுரமிது வென்றிருக்கிறாள். [யானிரந்தேன்] - ''ஸீதாமுவாச'' என்கிறபடியே புருஷகாரத்வாரா எல்லாராலுமிரக்கப்படும் நானிரந்தேன். நியமிக்கிறேனல்லேன், இரக்கிறேன். ''இரப்பார்கார்யம் செய்துதரவேணும்'' என்னும் நினைவாலே. [புன்னைமேல்] - வைமானிகரைப்போலே மனுஷ்யகந்தம் தட்டாதபடி உயரவர்த்திக்கை. இசையிறேயுயர்த்தியைக் காட்டுகிறது. நெய்தல்நிலத்திற்புன்னை படர்ந்தன்றோ விருப்பதென்னில்; பணைத்தோங்கியிருக்குமென்கிறது: ''வாளூர் வண்கமுகு'' என்றும் ''சேண்சினையோங்குமரம்'' என்றும் சொல்லுகையாலே. நெருப்பிலே ஸஞ்சரிப்பாரைப்போலே புன்னைப்பூவிலே வர்த்தியாநின்றன. அக்நிஸ்தம்பநமுடையார்க்கு வர்த்திக்கலாமிறே. [உறை] - பூவின்மேலே நித்யவாஸம் பண்ணாநின்றன. ''நைஷாபச்யதி ராக்ஷஸ்யோ நேமாந் புஷ்பபலத்ருமாந்'' என்று ராக்ஷஸீதர்சநத்தோபாதி நினைத்திருக்கும் தன்னைப்போலன்றே. [பூங்குயில்காள்] - கலவியாலுள்ள பௌஷ்கல்யம் வடிவிலே தொடைகொள்ளலாம்படி யிருக்கை. [சேற்றில்வாளை துள்ளும்] - நீருறுத்தினால் சேற்றிலேயாயிற்று வாளைகள் களித்துவர்த்திப்பது. அவ்வூரில் பதார்த்தங்கள் பிரிந்து துடிக்கையன்றிக்கே களித்துவர்த்தியாநிற்கும். [ஆற்றல் இத்யாதி] - கையுந்திருவாழியுமான வழகை நித்யஸூரிகளை அநுபவிப்பித்துக்கொண்டு போதுபோக்காயிருக்கிறவனைக் கண்டு. ஆற்றலென்று - வலியாய், ஆர்த்தரக்ஷணத்துக்கு வலியையுடைய திருவாழியென்னுதல்; ஆற்றலையுடையனாய்ப் பிரிவுக்குச் சிளையாதவனென்னுதல். ஒரு நீர்ச்சாவியான நான்கிடக்க, நிரபேக்ஷரானவர்களுக்குக் காட்சி கொடுத்துக்கொண்டிருக்கிறவனை. [ஆற்றல்] - ஆச்ரிதவிஷயத்திலெல்லாம் செய்தாலுமொன்றும் செய்யாதவனா யிருக்குமென்றுமாம். ''ஆற்றல்மிக்காளுமம்மானை'' என்னக்கடவதிறே. [மாற்றங்கொண்டருளீர்] - மறுமாற்றங்கொண்டுவந் தருளிச்செய்யவேணும். எப்படிப்பட்ட மறுமாற்றமென்னில்; [மையல்தீர்வதொருவண்ணமே] - என்னுடைய க்லேசமும் மோஹமும் தீருவதொரு ப்ரகாரம். ''ததா குரு தயாம் மயி'' என்கிறபடியே என்பக்கல் தயையைப்பண்ணியருளவேணும்.

ஈடு.—ஆறும்பாட்டு. சில குயில்களைக்குறித்து அவனுக்கென்தசையை யறிவித்து அங்கு நின்றுமொரு மறுமாற்றங் கொண்டுவந் தருளிச்செய்யவேணு மென்கிறாள்.

[போற்றியானிரந்தேன்] - ஸம்ஸாரவெக்காயம் தட்டாதபடி, வைமாநிகர் விமாநங்களிலே உயரவிருக்குமாபோலே புன்னையிலே உயரவிருந்தன சில குயில்கள்; அவற்றின்செவியிலே தன்னார்த்த த்வநி படும்படி யுயர 'போற்றி' என்கிறாள். முகம்பார்க்கைக்குச் சொல்லும் பாசுரமிதுபோலேகாணும். இச்சப்தம் செவிப்பட்டால் கார்யம் செய்தல்லது நிற்கவொண்ணா

தென் நிற்கிறான் காணும். [யான்] - அவன்றான் இரக்க விருக்கக்கடவ வேண்டப் பாடுடைய நான். ஆள்விடுவானும் இரப்பானு மெல்லாம் தானேயிறே. [யானிரந்தேன்] - *ஸீதாமுவாச* என்கிறபடியே - புருஷகாரத்வாரா எல்லாராலு மிரக்கப்படும் நான் இரந்தேன். நியமிக்கிறேனல்லேன், இரக்கிறேன். இரப்பார்கார்யம் செய்தறவேணுமென்னும் நினைவாலே. [இரந்தேன்] - அவற்றின் நெஞ்சிலே புண்படுத்துகிறாள். [புன்னைமேலுறை பூங்குயில்காள்] - வைமாநிகரைப்போலே மநுஷ்யகந்தம் நடையாடாதபடி யுயரவர்த்திக்கிற - ஸம்ச்லேஷத்தாலே உஜ்ஜ்வலங்களான குயில்காள். (நெய்தல் நிலத்தில் புன்னை பனைத்தோங்கி யிருக்கும்: "வானார் வண்கமுகும்", "சேண்சினையோங்கு மரமும்"போலே.) உங்களைப்போக விடுகை, தர்மஹாநியாயிருந்ததீ! ஆகிலும் என் செல்லாமையாலே செய்கிறே னென்கிறாள். [போற்றி] - பெருமாளும் பிராட்டியுமாகக் காட்டிலேயேகாந்தபோகத்துக்குப் போகாநிற்கச் செய்தே நடுவே ராவணன்வந்தாப்போலே, உங்கள் போகத்துக்கு நான் விச்சேதம்பண்ணத் தோற்றினேன்போலேயிருந்தது: இத்தாலொரு வ்யஸநமின்றிக்கே யொழிந்திடுக உங்கள் போகத்துக்கு. [புன்னைமேல்] - பிள்ளையமுதனார், திருவிருந்தவரைமார்வனை "இப்பதத்துக்குப் பட்டருளிச்செய்ததென்" என்று கேட்க, "தன்னார்த்தி அவற்றின் செவியிலே படும்படி உயரச்சொல்லுகிறாள், என்றருளிச்செய்தார்" என்ன, "நெய்தல் நிலத்தில் புன்னைபடர்ந் தன்றோ கிடப்பது, இங்ஙனே சொல்லக்கூடுமோ': என்ன, அவன் பட்டர்பாடேவந்து, "இங்ஙனே பணித்தார்" என்ன, "இவ்வர்த்தத்துக்கு நிர்ணாயகம் - இசையாயிற்று: அது, போற்றியென்று - உயரச்சொல்லியிருக்குமோ! தாழச் சொல்லியிருக்குமோ!" என்றருளிச் செய்தார். [சேற்றில் வாளைதுள்ளும்] - ப்ரளயத்திலே கொண்டுபோய்விட்டாலும் ஆனைக் கன்றுபோலே செருக்கிச் சேருக்குமாயிற்று வாளைகள். "அலைகடல்நீர் குழம்ப வகடாட வோடி யகல்வானுரிஞ்சமுதுகில் மலைகளைமீதுகொண்டு வருமீனை" என்னுமாபோலே சேதநா சேதந விபாகமறக் களித்துவர்த்திக்கும் தேசமாயிற்று. அவ்வூரில் பதார்த்தங்கள் செருக்கி வர்த்தியாநிற்கச்செய்தேகிடீர் நான் பிரிந்திருந்து தூதுவிடுகிறது. [ஆற்றலாழியங்கை யமரர் பெருமானைக்கண்டு] -ஆச்ரிதவிஷயத்திலெல்லாம் செய்தாலும் "ஒன்றும் செய்யப்பெற்றிலோம்" என்று நோவுபட்டிருப்பா னொருவனுமாய், அவர்கள்ரக்ஷணத்துக்குப் பரிகரமான திருவாழியைக் கையிலேயுடையனாய், நான் காணவாசைப்பட்ட கையுந் திருவாழியுமான வழகை நிரபேக்ஷர்க்குக் காட்சிகொடுத்திருக்கிறவனை. (ஆற்றல் - வலியாதல் - பிரிவுக்குச் சிளையாதிருக்கையாதல், நோவுபடாதல்.) ஆற்றலாழியென்று - திருவாழிக்கு விசேஷண மாய் ஆச்ரிதரக்ஷணத்தில் அவன்தன்னிற்காட்டிலும் க்ருபையையுடைய திருவாழியைக் கையிலேயுடையவனை. அன்றியே, அவன்தனக்கே விசேஷணமாய், பிரிவுக்குச் சிளையாதே ஆறியிருப்பானுமாய்க் கையுந் திருவாழியுமான ஸர்வேச்வரனை யென்றுமாம். [மாற்றங் கொண்டருளீர்] - ஒரு வார்த்தைகொண்டு வந்தருளவேணும். எங்ஙனேகொண்டுவர என்றால்; என்தசையிருந்தபடி கண்டிகோளே, இதுதீருவதொருவழி நீங்களே தேடிக்கொண்டு வந்து சொல்லுங்கோள். *த்ருஷ்டா ஸீதா* என்றாப்போலே. [மையல் தீர்வதொருவண்ணம் மாற்றங் கொண்டருளீர்] என்க்லேசம் தீருவதொரு ப்ரகாரம் வார்த்தைகொண்டுவந் தருளிச்செய்ய வேணும் தூதுவிடுகிற தான் ஜநகராஜன் திருமகளாகவுமாம், விடுகிறது திர்யக்குக்களை யாகவுமாம், பகவத்விஷயத்தில் கடகரா யிருப்பாரை இங்ஙனல்லது சொல்லவொண்ணாது காணும். (மையல் - ப்ரமமும், க்லேசமும், மோஹமும்.)

ஒருவண்ணஞ்சென்றுபுக்கு எனக்கொன்றுரையொண்கிளியே!*
செருவொண்பூம்பொழில்சூழ் செக்கர்வேலைத்திருவண்வண்டூர்*
கருவண்ணஞ்செய்யவாய் செய்யகண்செய்யகைசெய்யகால்*
செருவொண்சக்கரஞ்சங்கு அடையாளந்திருந்தக்கண்டே. (7)

ஒ.—ஏழாம்பாட்டில், "நாங்களவனை யறியும்படியெங்ஙனே" என்றுகேட்டகிளிகளைக்குறித்து அவனுடைய அடையாளங்களைச்சொல்லி, இவ்வடையாளப்படியே அவனை அழகிதாகக்கண்டு எனக்காக அவனுக்கொரு வார்த்தை யறிவியுங்கோளென்கிறாள். [ஒருவண்ணம் சென்றுபுக்கு] - ஐச்வர்யதரங்கங்களாலே புகுகையரிது, ஆகிலும்வருந்தி ஒருபடிசென்றுபுக்கு. அவ்வூரில் போக்யதையாலே அங்ஙனேயும்சென்று புகுகையரிது. ஆகிலுமொருபடிசென்று புக்கென்றுமாம். [எனக்கொன்றுரையொண்கிளியே] - உன்னுடைய ஸஹசரத்தோடே கலக்கையாலே அழகுபெற்றிருக்கிற கிளியே! எனக்காக அவனுக்கு ஒருவார்த்தை அறிவிக்கவேணும். [செருவென்று தொடங்கி] - இசலிபூக்கும் பொழிலேயுடைத்தாய் அப்பொழிலிலுதிர்ந்த தாதுகளாலே சிவந்த பர்யந்தங்களையுடைய, திருவண்வண்டூரிலே. [கருவண்ணமென்றுமேலுக்கு] - என்னை விச்லேஷித்ததுக்காக வாட்டமில்லாத திவ்யாவயவங்களையுடையனாய் யுத்தத்தில் உஜ்ஜ்வலமான திருவாழியையும் ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும் தனக்கு நிஷ்யசிஹ்நமாகவுடையனாயிருந்தவனை வ்யக்தமாகக் கண்டு.

இ.—ஏழாம்பாட்டில், சிலகிளிகளைக்குறித்து, அவனுடைய அடையாளங்களைச் சொல்லி, இவ்வடையாளப்படியே கண்டெனக்காக வொருவார்த்தை சொல்லுங்கோளென்கிறாள். [ஒருவண்ணம் சென்றுபுக்கு] - வழியிலே நெஞ்சையபஹரிக்கும் போக்யதையையுடைத்து, அதில் கால்தாழாதேயொருபடி சென்றுபுக்கு; "ஸ ததந்த:புரத்வாரம் ஸமதீத்ய" என்னுமாபோலே, ஐச்வர்யதரங்கங்களாலே புகுகையரிது, வருந்திபுக்கென்னவுமாம். இப்போது முதலிகள், பிரம்புவந்துவிழும், அதுக்காகப் பிற்காலியாதே மேல்விழுங்கோளென்கை. [எனக்கு] - "நிவேதயத மாம்" என்கிறபடியே வடிவைக் காட்டுகிறாள். அங்குத்தை வார்த்தை கேட்டாலல்லது தரிக்கமாட்டாதவெனக்கு. [ஒன்றுரை] - ஒரு நல்வார்த்தை சொல்லு. [ஒண்கிளியே] - ஸஹசரத்தோடே கூடியிருக்கையாலே யழகுபெற்றிருக்கிறகிளியே! மௌக்த்யமும் பேச்சும் வாயிற்பழுப்பும் வடிவிற்பசுமையும் அவனோடு போலியாயிருக்கையாலே, உன்னைக் கண்டு கொண்டிருக்க வமைந்ததென்றுமாம். [செருவொண்பூம்பொழில்] - செருவை விளைப்பதாய் தர்சநீயமான பூம்பொழில். "என்னைப்பாராதே பூவைப்பார்த்தாய், உன்னுடம்பு பூநாறிற்று, வேற்றுடம்பு" என்று மிதுநங்களைச் சீறுபாறென்னப்பண்ணுமென்னுதல்; "சலங்கொண்டு மலர்சொரியும்" என்று இசலியிசலிப்பூக்களைச் சொரியாநிற்குமென்னுதல். [செக்கர்வேலை] - பொழிலினுதிர்ந்த தாதுக்களாலே சிவந்த பர்யந்தங்களையுடைத்தென்னுதல், கடற்கரையாகையாலே சிவந்த மணலீட்டையுடைத்தென்னுதல். [கருவண்ணமித்யாதி] - உனக்கு வழியில் விடாயெல்லாங்கெடும்படி வர்ஷுக வலாஹகம் போலேயிருக்கிற திருநிறத்தையும் அதுக்குப் பரபாகமாய்த் தாமரைத்தடாகம் பரப்புமாறப் பூத்தாப்போலேயிருக்கிற அவயவங்களையும் காணவிறே புகுகிறது. கலவியோடு பிரிவோடு வாசியற ஒருபடிப்பட்டிருக்கிறவரை. [கருவண்ணம்] - கண்டார்க்கு விடாய்கெடும் வடிவு. [செய்யவாய்] - அவ்வடிவிலே யிழிந்தவர்கள் துவக்குண்ணும்முறுவல். [செய்யகண்] - அநங்யார்ஹமாக்குங்கண். [செய்யகை] - அநங்யார்ஹமானுரை யணைக்குங்கை. [செய்யகால்] - ஸ்பர்சத்துக்குத்தோற்று விழுந்திருவடிகள். [செருவொண்சக்கரம் சங்கு] - அஸ்தாநே பயசங்கைபண்ணி யுத்தோந்முகமான திவ்யாயுதங்கள். "இன்னாரென்றறியேன்" என்று கிட்டினாரைமதிகெடுக்கும் திவ்யாயுதங்கள். [அடையாளம்] - திவ்யாவயவத்தோபாதி திவ்யாயுதங்களும் அஸாதாரண சிஹ்நமாகை, "யாநி ராமஸ்யசிஹ்நாநி லக்ஷ்மணஸ்யச யாநிவை". [திருந்தக்கண்டே] - என்னைப் போலே மாநஸமாகவன்றிக்கே, வ்யக்தமாகக்கண்டு.

ஈடு.—ஏழாம்பாட்டு. சில கிளிகளைக்குறித்து, அவனடையாளங்களைச்சொல்லி, இவ்வடையாளப்படியேகண்டு எனக்காக வொருவார்த்தை சொல்லுங்கோளென்கிறாள்.

[ஒருவண்ணம்சென்றுபுக்கு] - இதுக்கிரண்டுபடியாக வருளிச்செய்வர்! இத்தலையில் தனிமையினையாதேபோய் நிற்கையாலே, போரமுதலிகளாயிருப்பர்; மேன்மேலனப்பிரம்புகள் விழும். அத்தைப் பொறுத்துப்போய்ப் புகுங்கோள். அன்றியே, வழியிலேநெஞ்சையபஹரிக்கும் போக்யதையையுடைத்து; அதில் கால்தாழாதே வருந்தி யொருபடிசென்றுபுக்கு. *ஸ ததந்த:புரத்வாரம் ஸமதீத்ய* "பொன்னியலுமாடக்கவாடங்கடந்துபுக்கு" என்னுமாபோலே. *ஸ்ராம்ஸிச ஸுபுல்லாநி நதீச்ச விமலோதகா:,நிரீக்ஷமாணு:* இத்யாதி. வழியைப்பாராதே

போனார்களென்கை. *கார்யவசாத்ஜக்மு:* கார்யவசராய்க்கொண்டு போனார்கள். அப்படியே போக்யதை யளவிறந்திருக்கையினாலே இவற்றில் கால்தாழாதே போய்ப்புகுகை சாலப் பணியாயிருக்கும். [எனக்கு] பரிபவத்துக்கு உங்களுக்கிழைக்கலாம்படியோ! நானிருக்கிறது. *ஏஹி பச்ய சரீராணி* *நிவேதயத மாம்* என்கிறபடியே வடிவைக்காட்டுகிறாள். என்னைக்கண்ட வுங்களுக்கு போக்யதையிலே நெஞ்சுசெல்லுதல், பரிபவங்கண்டிரங்குதல் செய்யலாம்படியோ விருக்கிறது. பிறர்காரியம் செய்வார்க்கு அவை பார்க்கவொண்ணுமோ. [ஒன்றுரை] - ஒரு வார்த்தைசொல்லு. அன்றியே, என்னுற்றாமையாலே சொல்லுகிறேனத்தனை, இருகால் மட்டுச் சொல்லுகை மிகையாம்படியிடிகோ ளவனிருப்பதென்றுமாம். போக்யதையாலே கால் கட்டுப்பட்டு நின்றானித்தனை. ஆர்த்தவிஷய மொருதலையானால், போக்யதையிலே நெஞ்சுசெல்லு தல், மறுத்துச்சொல்லப் பொறுத்தல்செய்யவல்ல விஷயமன்றுகிடிகோள். [எனக்கொன்றுரை] என்னிடையாட்டமொன்றுசொல்லுங்கோள். [ஒண்கிளியே] - மௌக்த்யமும் பேச்சும் வாயில் பழுப்பும் வடிவில்பசுமையு மவனோடுபோலியா யிருக்கையாலே உன்னைக் கண்டுகொண்டிருக்க வமைந்திருக்க, கைப்புகுந்த வுங்களையுமிழக்கப் புகுகிறேனித்தனையிறே. [செருவொண்பூம் பொழில்சூழ்]-செருவை விளைப்பிப்பதாய் அழகிதான பூம்பொழிலாலே சூழப்பட்டிருக்கை. அங்கு மிதுனமாய் வர்த்திப்பார்க்கெல்லாம் நித்யவிப்ரலிபத்தியாய்ச் செல்லாநிற்குமத்தனை. அதாவது - "என்னைப்பாராதே பூவை யமைந்திருக்கப்பார்த்தாய்; (அமைந்திருக்கப்பார்க்கையாவது - நாய கனைப்பாராதே 'நமக்குப்பூவேயமையும் என்று பார்க்கை.) நான் பறிக்கவினைத்த பூவைப்பறித் தாய், அணைப்பதற்குமுன்னே புன்னுடம்பு பூ நாறிற்று" என்றிப்படி சீறுபாறென்று செல்லா நிற்குமத்தனை. "சலங்கொண்டுமலர்சொரியும்" என்கிறபடியே இசலிப்பூக்குமென்றுமாம். [செக்கர் வேலைத்திருவண்டூர்] - இளமணலெக்கல்களிலே விழுந்த பூக்களின் தாதுக்களாலும் சுண்ணங்களாலும் சிவந்தபர்யந்தங்களை யுடைத்தாயிருக்கை. கடற்கரையாகையாலே சிவந்த மணலிட்டையுடைத்தென்னுதல். இவையெல்லாவற்றாலும் - போகயோக்யமான தேச மென்றபடி. [கருவண்ணம்] - இத்தலையை அகங்யார்ஹமாக வெழுதிக்கொண்ட வடிவிருக் கிறபடி. [செய்யவாய்] - அதுதான் மிகையாம்படி "நானுனக்கு" என்றாப்போலே சொல்லப் புக்கு விக்கின திருப்பவளம். [செய்யகண்] "அது உக்திமாத்ரமன்று, அகவாயிலுமுண்டு" என்றுதோற்றுகிற திருக்கண்கள். அகவாயிலுள்ளதுக்கெல்லா மாணைத்தாளிறே திருக் கண்கள். அத்தை க்ரியாபர்யந்தமாக அநுஷ்டிக்கிற திருக்கைகள். அவையத்தனைக்கும் தோற்றுவிழும்துறை, திருவடிகள். [செருவொண்சக்கரம்சங்கு] - இவ்வடிவழகையெல்லாம் காத்தூட்டவற்றுமாய், அஸ்த்தாநேபயசங்கைபண்ணி யுத்தோந்முகமாய், கைகழியப்போய் நின்றுரக்ஷிப்பதும், கைவிடாதே வாய்க்கரையிலேநின்று ரக்ஷிப்பதுமான திவ்யாயுதங்கள். கிட்டினாரை "இன்னாரென்றறியேன்" என்று மதிமயங்கப் பண்ணுவிக்கும் திவ்யாயுதங்கள். [அடையாளம்] - திவ்யாவயவத்தோபாதி திவ்யாயுதங்களும் அஸாதாரண சிஹ்நமாகை. *யாநி ராமஸ்ய சிஹ்நாநி லக்ஷ்மணஸ்யச யாநி வை*. [திருந்தக்கண்டே] - என்னைப்போலே மானஸ மாகவன்றிக்கே வ்யக்தமாகக்கண்டு. இவ்விஷயத்தில் காட்சியிறேப்ரயோஜநம், அது உங்களுக்கு முற்படப்பெற்றதே. பிராட்டிகார்யம் செய்தால், அவளுக்குமுன்னே இவனுக்குப் பேறு முற்பட்டிருக்குமிறே. *பரிஷ்வங்கோ ஹநுமத:* இறே. [திருந்தக்கண்டே] - இத் தலையில் வைவர்ண்யங்கண்ட நெஞ்சாறலெல்லாம் தீரும்படி, கலவியிலும் பிரிவிலுமொரு படியாயிருக்கும் வடிவைக் காணவிறிகோளிறே. *ஸதைகரூபரூபாய* என்று உக்திமாத்ரமாய்ப் போகையன்றிக்கே, அத்தை யநுஷ்டாநபர்யந்தமாக்கிக்கொண்டிருக்கிற வடிவைக்காணுங் கோள்.

திருந்தக்கண்டெனக்கொன்றுரையாய் ஒண்சிறுபூவாய்!*
செருந்திஞாழல்மகிழ் புன்னைசூழ்தண் திருவண்வண்டூர்*
பெருந்தண்தாமரைக்கண் பெருநீண்முடி நாற்றடந்தோள்*
கருந்திண்மாமுகில்போல் திருமேனியடிகளையே. (8)

ஒ.—எட்டாம்பாட்டில், நானவனுடைய வழகுகளைக் கேட்டால் மறுத்தெனக்குச்சொல்லலாம்படி திருந்தக்கண்டு எனக்காக வொரு வார்த்தை சொல்லவேணுமென்று பூவையை நோக்கிச் சொல்லு கிருள். [ஒண்சிறுபூவாய்] - அங்குப்போக விடுகைக்கிடான வடிவழகையும் வடிவில் லாகவத்தையு முடையையானபூவாய். [பெருந்தண்தாமரையென்று தொடங்கி] - பெருத்துக் குளிர்ந்திருந்துள்ள தாமரைப்பூப்போலேயிருக்கிற திருக்கண்களையும் அவ்வூருக்கு ராஜாவாகைக்குத் தகுதியான திருவபி ஷேகத்தையும், பெருத்தநாலு திருத்தோள்களையும், கறுத்துத் திண்ணிதான மஹாமேகம்போலே யிருக்கிற திருமேனியையுமுடையனும் இவ்வடிவழகேயா யுள்ளே யொருநீர்மையின்றிக்கே முதலியா யிருக்கிறவனை.

இ.—எட்டாம்பாட்டில், ஒருபூவையைநோக்கி, அந்தரங்கையான வெனக்கு வந்து சொல்லலாம்படி கண்டு ஒரு மறுமாற்றங்கேட்டுவந்து சொல்லாயென்கிருள். [திருந்தக்கண்டு] - பிறர்க்குச் சொல்லலாம்படி படி விசதமாகக் கண்டு. [எனக்கு] - நீவந்து சொல்லும் வார்த்தைகேட்டால் தரிக்கவிருக்கிறவெனக்கு. ஒரு வார்த்தைகேட்டு வந்து சொல்லாய். [ஒண்சிறுபூவாய்] - அழகுக்குக்கிளியோடொத்து, பால்யமும் அத்தால்வந்த லாகவமுமிதுக்கேற்றம். போகவிடுகை மிகையென்னும்படி கண்டுகொண்டிருக்குமழகை யுடைத்தாய், தூதுபோகைக்குக் கார்யகாலத்திலே வடிவைச்சிறுக்க வேண்டாதபடி, ஏற்கவே ச்ரமம்செய் திருக்கிற லாகவத்தையுமுடைத்தாகை. [செருந்தியித்யாதி] - அவனுடைய போக்யதையேயன்றிக்கே போகஸ்த்தானமே யமைந்திருக்கை. போக்தாக்களளவன்றிக்கே பெருத்து, ச்ரமஹரமாய்; விகாஸம், செவ்வி, குளிர்த்தி, இவற்றையுமுடைத்தான திருக்கண்கள். [பெருநீண்முடி] - நித்யஸித்தமான உபயவிபூதிக்கும் கவித்தமுடி. "திருவண்வண்டூர்க்கு நிர்வாஹகன்" என்றுசூடின முடியென்றுமாம். "யஸ்ய ஸா ஜநகாத்மஜா அப்ரமேயம் ஹி தத்தேஜ:" என்கிறபடியே யிவள்தன்னைத் தோற்பித்துச்சூடின முடியென்னுதல். [நாற்றடந்தோள்] - கல்பகதரு பணைத்தாப்போலே நாலாய் சுற்றுடைத்தான தோள். ச்ரமஹரமான நிறத்தையுடைத்தாய் ஸ்த்திரமாய் அபரிச்சின்னமான மேகம்போலே யிருக்கும் வடிவு. நிறமேயர்ய், அகவாய்திண்ணியதாயிருக்கிறபடி யென்றுமாம். [அடிகளையே] - அவ்வடிவைக்கண்டால் "ஸர்வநிர்வாஹகன்" என்று தோற்றியிருக்கை. அகவாயில் நீர்மையின்றிக்கே முதலிகளாயிருக்கிற வரையென்றுமாம்.

ஈடு.—எட்டாம்பாட்டு. சில பூவைகளைக்குறித்து; மீண்டுவந்தெனக்குச் சொல்லலாம்படி காணவொண் வ்யக்தமாகக்கண்டு, ஒருமறுமாற்றம் கேட்டுவந்து சொல்லவேணுமென்கிருள். ணுமைக்கு வேண்டும் ஹேதுக்களைச் சொல்லிவைத்துத் திரியவும் திருந்தக்காணுங்கோ ளென் கிருளிறே.

[திருந்தக்கண்டு] - நான்சொன்ன வடையாளத்திலொன்றும் குறையாமற்காணுங்கோள், உங்களுக்கென்றுகாணுதே, பிறர்க்குச் சொல்லலாம்படிகாணுங்கோள். [எனக்கு] - உங்கள் சொற்கேட்டு தரிக்கவிருக்கிற வெனக்கு. [ஒன்றுரையாய்]-எனக்கவன்படிகளெல்லாம் சொல்ல வேண்டா, ஒன்றுசொல்லவமையும். போகத்துக்கன்றே யிவள்தேடுகிறது, ஸத்தை நோக்கு கைக்கிறே பார்க்கிறது. *யாநி ராமஸ்ய சிஹ்நாநி* என்றால், உள்ளபடியெல்லாம் சொல்லவற் ருயிருக்கை. அத்தலையைத் திருந்தக்கண்டு எனக்கொன்று சொல் லென்னவுமாம். எனக்காக வொன்றுசொல்லென்னவுமாம். ஆக, இவ்விரண்டாலும் - ஆசார்யன்வார்த்தைகேட்டுதரித்தல், அவனபிமாநத்தாலே தரித்தலொழிய வேறொன்றில்லை என்றபடி. [ஒண்சிறுபூவாய்] - உங்க ளொருப்பாடு கண்டேனுக்கு நான் அபேக்ஷிக்கை மிகையாயிருந்ததி! பிறர்காரியம்செய்ய வடி வுகொண்டாற்போலே யிராநின்றதி! உங்களுத்யோகம். [சிறுபூவாய்] - கடல்கடக்கும்போ தொருவடிவாய், எதிரிகள்படைவீட்டில்புகும்போ தொருவடிவா யிருக்கவேண்டாதபடிகாணு மிவற்றின் வடிவில் லாகவமிருக்கிறபடி. ஒண்மை-கண்டுகொண்டிருக்கவேண்டும் அழகு. [செரு ந்தியித்யாதி] - அவன்பாடு செல்லவேண்டாதே, போகஸ்த்தானமே யமைந்திருக்கை. வாராமை அவன் குற்றமன்று, நிலப்பண்புகிடிகோள். [செருந்திஞாழல்மகிழ் புன்னைசூழ்]-காற்கட்டொன் றிரண்டாகிலன்றே வரலாவது; அவை நாலுபாடும் சூழ்ந்துநிற்க அவனாலே வரப்போமோ.

ஒரு திக்குக்கொன்றே அமைந்திருக்கிறது காணும். (ஞாழல் - பசுமைநிறமாயிருப்பதொரு லதாவிசேஷம்;) [பெருந்தண்டாமரைக்கண்] - போக்தாக்களளவல்லாதபடி. பெருத்து ச்ரமஹரமாய்; விகாஸம், செவ்வி, குளிர்த்தி, பரிமளந் தொடக்கமானவற்றை யுடைத்தாயிருக்கை [பெருநீண்முடி] - உபயவிபூதிக்கும் கவித்தமுடியையுடையவனென்னுதல். உபயவிபூதி யோகத்துக்கும் மேலேயிறே யவ்வூர்க்குக்கடவனென்னுதல்- அன்றியே, *யஸ்ய ஸா ஜநகாத்மஜா* என்றுகொண்டு இவள்தன்னைத் தோற்பித்துச்சூடினமுடியென்னுதல். [பெருநீள்] - பெரியவளர்த்தி; [நால்தடந்தோள்] - அவையனைத்து அத்தாலே கல்பகதருபணைத்தாப்போலேயிருக்கிற (காலாய்ச்சுற்றுடைத்தாயிருக்கிற) திருத்தோள். [கருந்திணியித்யாதி] - கறுத்துத் திண்ணியதாயிருப்பதொரு மஹாமேகம்போலேயாயிற்று வடிவிருப்பது. அன்றிக்கே, ச்ரமஹரமான நிறத்தையுடைத்தாய், ஸ்த்திரமாய் அபரிச்சேத்யமான மேகம்போலே இருக்கும் வடிவு. நிறமித்தனையுங்கிடீர் மேகத்துக்கொப்பு; அகவாயில்திண்மை யிவர்க்குத்தன்னேற்றம். கறுத்து அகவாய் திண்ணியதாயிருப்பதொரு மேகம் பெறிலாயிற்று இவர்க்கொப்பாவதுநேரே. [திருமேனியடிகளையே] - வேறொன்று சொல்லவேண்டாதபடி வடிவுகண்டபோதே "இவனேயிதுக்கெல்லாம் கடவன்" என்று தோன்றும்படியிருக்கை; அன்றிக்கே, அவ்வடிவைப் படைத்துத் தமக்கென்றிருக்கிற ஸ்வாமிகளை.

> **அடிகள்கைதொழுது அலர்மேலசையுமன்னங்காள்***
> **விடிவைசங்கொலிக்கும் திருவண்வண்டூருறையும்***
> **கடியமாயன்தன்னைக் கண்ணனைநெடுமாலைக்கண்டு***
> **கொடியவல்வினையேன் திறங்கூறுமின்வேறுகொண்டே. (9)**

ஒ.—ஒன்பதாம் பாட்டில், நீங்கள் திருவண்வண்டூரிலே சென்று அவனைக் கண்டக்கால் ஓலக்கத்திலே விண்ணப்பம் செய்யாதே ஏகாந்தத்திலே அடியேன்திறத்தையறிவியுங்கோளென்று சில அன்னங்களைக் குறித்துச் சொல்லுகிறாள். [அடிகளென்று தொடங்கி] - பூக்களிலே ஸம்ச்லேஷத்தாலே அசைகிற அன்னங்காள்! திருப்பள்ளியெழுச்சிசங்கங்கள் இங்கே கேட்கும்படி த்வநியாநின்றுள்ள திருவண்வண்டூரிலே எழுந்தருளியிருப்பதும் செய்து தன்னைப் பிரிந்தார்நோவறியக் கடவனன்றிக்கே வஞ்சகனாய் ஒருவர்க்கும் கிட்டாமையே ஸ்வரூபமான க்ருஷ்ணனைக் கண்டு திருவடிகளைக் கையாலே தொழுது. விடிவை சங்கென்று - திருக்ஷ"க்களை யாஹ்வானம் பண்ணுகிற சங்கத்வநியையுடைய ப்ரபாதஸமயமென்றுமாம். [கொடியவல்வினையேன்] - அவனுபேக்ஷிக்கிலு மவனாலல்லதுசெல்லாத மஹாபாபத்தையுடையேன்.

இ.—ஒன்பதாம்பாட்டில், சில அன்னங்களைக்குறித்து, நீங்கள் சென்றால் ஏகாந்தத்திலே "நகச்சிந்நாபராத்யதி" என்றார்முன்னாக என்னிடையாட்டத்தை யறிவியுங்கோளென்கிறாள். [அடிகள் கைதொழுது] - திருவடிகளைக் கையாலேதொழுது. அவனுக்கு மறுக்கவொண்ணாதே யிரங்கவேண்டும் செயல்களைச்செய்து. [அலர்மேலித்யாதி] - ஸம்ச்லேஷத்தாலே பூவிலே யசையாநின்றுள்ள அன்னங்காள்! அன்னங்களின் செருக்கிருக்கிறபடி. என்காலும் பூவிலேபொருந்தப்பண்ணினாலன்றோ உங்களுக்கு இது ஏற்றமாவது, அக்நியிலே கால்வைப்பாரைப்போலே என்கால் பூவிலேபொருந்துகிறதில்லை. [விடிவை] - விடிவுகள்தோறும், ப்ரபாத ஸமயங்கள்தோறும் சங்கத்வநியாய்ச் செல்லாநிற்கும். ஆசையுடையாரைக் காண, சங்கத்வநியாலே யழைக்கிறப்போலேயிருக்கை. அவ்வோகாலங்களுக்கடைத்தவை யெல்லாம் மாறிக்கிடக்கிறதிறேயிங்கு. விடியாத ஊரிலே யென்னைவைத்து, விடியுமூரிலே யிருக்கிறவன். [கடிய] - துர்யோதநாதிகளை அழியச் செய்யுமிடத்தில் கடியனாய், பாண்டவர்களுக்காகப் பகலையிரவாக்குகை முதலான வாத்ஸல்யசேஷ்டிதங்களைப் பண்ணுமவனை. அவர்களுக்குக் கையாளாய் நிற்குமவனை. அவ்வளவிலும் பர்யாப்தனன்றிக்கேயிருக்கிற வ்யாமுக்தனை. அன்றிக்கே, பிறர்நோவறியானாய்க் கலக்கிறபோது "பிரியேன்" என்றுவைத்துப் பிரியவல்லவனை, கலக்கும்போது தாழநின்று பரிமாறி, பின்னைவெட்டாதவனையென்றுமாம். [கொடியவல்வினையேன்] - அவனுபேக்ஷித்தாலும் விடமாட்டாத மஹாபாபத்தையுடையேன். நாட்டார்க்காச்வாஸஹேதுவான பகவத்ப்ரத்யாஸத்தி பாதகமாம்படியான பாபத்தைப்பண்ணினேன்.

பாவனமான விஷயமெனக்கு பாபஹேதுவாவதே! "மேருமந்தரமாத்ரோऽபி", "யந்நாமஸங்கீர்த்தநதோ மஹாபயாத் விமோக்ஷமாப்நோதி நஸம்சயந்நர:" என்கிற விஷயமிவளுக்கு பயஹேதுவாயிராநின்றது. [திறங்கூறுமின்] - ஒருமஹாபாரதமிறே. [வேறு கொண்டே - கூறுமின்] - ஓலக்கத்திலன்றிக்கே ஏகாந்தத்திலே "நகச்சிந்நாபராத்யதி" என்பார்கூடவிருக்க, அறிவியுங்கோள். "ஏவமுக்தஸ்து ராமேண லக்ஷ்மணஸ் ஸம்யதாஞ்சலி:, ஸீதாஸமக்ஷம் காகுத்ஸ்த்தமிதம் வசநமப்ரவீத்".

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. சிலவன்னங்களைக் குறித்து ஏகாந்தத்திலே *நகச்சிந்நாபராத்யதி* என்பார் முன்பாக என்னிடையாட்டத்தை யறிவியுங்கோ ளென்கிறாள்.

[அடிகள் கைதொழுது] - திருவடிகளைக் கையாலேதொழுது. அவனுக்கு மறுக்கவொண்ணாத செயலைச் செய்து. [அடிகள் கைதொழுது - கூறுமின்] - நீங்களும் பரக்கச்சொன்னிகோளாய் அவனும் பராக்கடித்திருந்தானாகையன்றிக்கே, செவிப்படும்படி பண்ணிச்சொல்லுங்கோள். வரவுதாழ்த்ததென்னு, வஸ்து வஸ்த்வந்தரமாகாதிறே. வந்தேறியான ப்ரணயித்வத்திறே சிறிது நழுவநிற்கலாவது, ஸ்வரூபாந்தர்க்கதையான க்ருபைக்கு அழிவில்லையிறே. அது ஸத்தையுள்ளதனையும் விலை செல்லுமிறே. [அலர்மேலசையுமன்னங்காள்]- நான் பூக்காணவிருக்கும்படியாயிருக்க, உங்களுக்குப் பூவிலே கால்பொருந்துகை போருமோ? நான் தறைக்கிடைகிடக்க, உங்களுக்கிது போகமாய்த்தலைக்கட்டுமோ? என்னையும் மென்மலர்ப்பள்ளி பொருப்பித்தாலன்றோ உங்களுக்கிது போகமாவது. [அலர்மேலசையுமன்னங்காள்]- உங்கள் செயலுக்கு அவனால் வாராதொழியவொண்ணாது. உங்களுக்குச் சேர்த்தல்லது ஸ்வரூபஸித்தியில்லை. ஆனபின்பு நானிக்கிடைகிடக்க ப்ராப்தியுண்டோ? ஸம்ச்லேஷத்தாலே பூவிலே அசையாநின்றுள்ள அன்னங்காள்! [விடிவையீத்யாதி] - புறப்பட்டவாறே சங்கத்வநி செவிப்படுகிறதிறே. இங்குப்போலே கிடக்கிறதன்றேயங்கு, அங்குமிங்குப் போலேயாகில் வாரானோ. விடிவை - விடிவுகள்தோறும். [விடிவைசங்கொலிக்கும் திருவண்வண்டூர்]- பகலுமிரவுமாய்க்காணு மவ்வூர் செல்லுகிறது. *ருதூந்பஹூந்* என்கிறபடியே - காலம்கூறிட்டு அவ்வோகாலத்துக் கடைத்த உபகரணங்களைக்கொண்டு காணும் அவனநுபவிக்கிறது; இல்லையாகில் *ருதூந்* என்னவேண்டாவிறே. *வத்ஸராந்* என்னவமையுமிறே. [விடிவை சங்கொலிக்கும்] - விடியாவிரவிறே யிவளிருக்கிறவிடம். [திருவண்வண்டூருறையும்] - விடியாதவூரிலே யென்னைவைத்தான். விடியுமூரிலே தானிருந்தான். அவன் யாதோரிடத்திலே நின்றால், அவ்விடம் விடியுமத்தனையிறே. "பகற்கண்டேன் நாரணனைக் கண்டேனிறே. [கடியமாயனறன்னை] - ஆச்ரிதவிரோதிகளை யறியச்செய்யுமிடத்தில் கண்பாராத ஆச்சர்யத்தையுடையவனை. [கண்ணனை] ஆச்ரிதர்க்குத் தான் கைபாளாக நின்று தன்னைக் கொடுக்குமவனை. [நெடுமாலை] - இத்தனையும் செய்தாலும், "ஒன்றும் செய்யப் பெற்றிலோம்" என்னும் வ்யாமோஹத்தை யுடையவனை. அன்றிக்கே, கடியமாயனென்றது - தன்னைப்பிரிந்தார்படும்நோவறியாத கொடுமையையுடையவனை. [கண்ணனை நெடுமாலை] - பவ்யதை காதாசித்கம், மூதன்மையே விடிகோள் பெருத்திருப்பது. இனி வெளியறனைதுவும் வேண்டிச் செய்தானல்லன், இத்தலையை நலிகைக்காகச் செய்தசெயல்விடிகோள். [கொடியவல்வினையேன்] - நாட்டார்படியல்லாத பாபத்தைப் பண்ணினேன். அல்லாதார்வினை பகவத்ப்ரத்யாஸத்தியாலே போமிறே, ப்ரத்யாஸத்திதான் பாதகமாம்படியான பாபத்தைப் பண்ணினேன். [திறம்] - ஒரு மஹாபாரதமிறே. [கூறுமின்வேறுகொண்டே] - செவிப்படாதபடி ஓலக்கத்திலேசொல்லாதே, ஏகாந்தத்திலே சொல்லுங்கோள். அதாவது - அவனு மவளுமாயிருந்தவிடத்திலே சொல்லுங்கோளென்கை. அதாவது "என்திருமார்வற்கெனனை" என்றும், "திருமாலார்க்கென்பிழைத்தாள்" என்றும், "மாதரைத்தம்மார்வகத்தேவைத்தார்க்கு" என்றுமிறே இவர்தமக்குப் பாசுரம். [வேறு கொண்டே - கூறுமின்] *ஸீதாஸமக்ஷம் காகுத்ஸ்த்தம்* என்கிறபடியே அத்தை ஜீவிப்பிக்குமவள் ஸந்நிதியிலே சொல்லுங்கோள். நல்வார்த்தைசொல்லுவாரு மவளுமானவிடத்தே சொல்லுங்கோள்.

வேறுகொண்டு உம்மையான் இரந்தேன் வெறிவண்டினங்காள்!*
தேறுநீர்ப்பம்பை வடபாலைத்திருவண்வண்டூர்*
மாறில்போரரக்கன் மதிள் நீறெழச்செற்றுகந்த*
ஏறுசேவகனார்க்கு என்னையுமுளளென்மின்களே. (10)

ஒ.—பத்தாம்பாட்டில், சில வண்டுகளைக்குறித்து, "எல்லாரோபாதியும் நம்மையுஞ் சொல்லு கிறாள்" என்றிராதே என்கார்யமுங்களுக்கே பாரமாகக்கொண்டு, ப்ரதிகூலநிரஸனங்களெல்லாம் பண்ணி அநுகூல பரித்ராணமும்பண்ணி பரிபூர்ண மனோரதனாயிருக்கிறவனுக்கு, தனக்கு ரக்ஷணீயை நானுமொருத்தியுளேனென்று சொல்லுங்கோளென்று, "அவன் மறந்திருந்தான்" என்னுமின்னாப் பாலே சொல்லுகிறாள். [வெறிவண்டினங்காள்] - பரிமளத்தையுடைய வண்டினங்காள்! [தேறுநீ ரென்றுதொடங்கி] - என்னைப்போலே கலங்கியிராதேதெளிந்தநீரையுடையபம்பை வடபார்ச்வத்திலே. [மாறில்போர்]-எதிர்இல்லாதபோர். [ஏறுசேவகனார்க்கு] - எங்கும்மேற்பட்டஆண்பிள்ளைத்தனத்தை யுடையரா யிருக்கிறவர்க்கு.

இ.—பத்தாம் பாட்டில், "சில வண்டுகளைக்குறித்து, அவர், இத்தலையில் ஸத்தையுமில்லை என்றிருப்பர், அவளுமுளளென்று சொல்லுங்கோளென்கிறாள்" என்றருளிச் செய்வராளவந்தார். "இத்தலை யில்லையாகி லத்தலை யுண்டாகக்கூடாது; பெண்பிறந்தார்கார்யமெல்லாம் செய்தோம் என்று ஸ்மரித்திருக்கிறவர்க்கு, ரக்ஷ்யவர்க்கத்திலே நானுமொருத்தி யுண்டென்று சொல்லுங்கோளென்கிறாள்" என்று எம்பெருமானாரருளிச்செய்வர். [வேறுகொண்டும்மையானிரந்தேன்] - "அல்லாதாரோபாதி" என்றி ராதே, விசேஷித்தென்கார்ய முங்களுக்கேபரமென்றிருந்தேன். தன்பெருமையைப் பார்த்திலள், இவற்றின் சிறுமையைப் பார்த்திலள், செல்லாமையைப் பார்த்திரக்கிறாள். "விசேஷேணது ஸுக்ரீவோ ஹநூமத்யர்த்தமுக்தவாந்". [வெறிவண்டினங்காள்] - பரிமளம் ஒரு வடிவுகொண்டாற்போலே யிருக்கை. உங்கள் வடிவில் பரிமளமே பாதேயம்போன்று இருந்ததீ, என் உடம்பையும் இப்படியாக்கினாலன்றோ உங்களுடம்பால் ப்ரயோஜனம் பெற்றிகோளாவது. [தேறுநீர்ப் பம்பை] - என்னைப்போலே கலங்கி யிருக்கும் இங்குத்தைப்பதார்த்தங்களொழிய, தெளிந்த பதார்த்தங்களைக் காண்கிறிகோளிறே, "வைடூர்ய விமலோதகா:" என்கிறபடியே, தெளிந்திறே அங்குத்தை பதார்த்தங்களிருப்பது. "உபதப்தோதகா நத்ய" என்றிறே இங்குத்தையவை யிருப்பது. [வடபாலை] - வடபார்ச்வத்திலே. கடலுக்குத் தென்பாலிருக்கிற பிராட்டியைப்போலேயாயிற்று இவளிருக்கிற இருப்பு. [மாறில் இத்யாதி] - எதிர் இல்லாதபோரை யுடையனாய், வரபலத்தையும், புஜபலத்தையும் உடைய ராவணனையும் அவனரணாகஇட்ட மதிளையும் துகளாகச் செற்று. [உகந்த] - "ருஷிகள் குடியிருப்புப் பெற்றோம், பிராட்டியோடே கூடப்பெற்றோம், லங்கை விபீஷணவிஷயமாகப் பெற்றோம்" என்றுகந்த. [ஏறுசேவகனார்க்கு] - எங்கும்மேற்பட்ட ஆண் பிள்ளைத்தனத்தை யுடையவர்க்கு "ரஞ்சநீயஸ்ய விக்ரமை:" என்று எதிரிகள் மேல்எழுத்திட்ட வீரம். "ரதசர்யாஸுஸம்மத:" என்று வீரர்கள் கொண்டாடின வீரம். [என்னையுமுளளென்மின்களே] - உம்முடையரக்ஷ்யவர்க்கத்திலே யின்னமொருத்தி நோவுபடாகின்றாளென்னுங்கோள்.

ஈடு.—பத்தாம்பாட்டு. "சிலவண்டுகளைக்குறித்து, அவர் இத்தலையில் ஸத்தையுமில்லை யென்றிருப்பர், அவளுமுளளென்று சொல்லுங்கோ ளென்கிறாள்" என்று ஆளவந்தாரருளிச் செய்வர். "இத்தலை யில்லையாகி லத்தலை யுண்டாகக் கூடாது; 'பெண்பிறந்தார்காரியமெல்லாம் செய்தோம்' என்று க்ருதக்ருத்யரா யிருக்கிறவர்க்கு, ரக்ஷ்யவர்க்கத்திலே நானுமொருத்தியுண் டென்று சொல்லுங்கோ ளென்கிறாள்" என்று எம்பெருமானார் அருளிச்செய்வர்.

[வேறுகொண்டு] - திக்குக்கள்தோறும் முதலிகளைப் போகவிடா நிற்கச்செய்தே திருவடி கையிலே திருவாழிமோதிரம் கொடுத்துவிட்டாப் போலேகாணும். *விசேஷேணது ஸுக்ரீவோ ஹநூமத்யர்த்த முக்தவாந்* என்றாப்போலே. [உம்மை] - இரந்தார்காரியம் செய்தன்றி நிற்கமாட் டாதவுங்களை. [யான்] - அவனுடைய முதலிரப்புப்போலேகாணுமிவளதும். [யானிரந்தேன்] -

அவன் தானிரக்க விருக்குமவளிறே. இவன்பக்கலிலே தாழ நிற்பானவனுமிற்று. வேறுகொண்டு அவற்றை யிரக்கவேண்டுவா னென்னென்னில்; அவற்றிலுமிவை பதஸ்தமாகையாலே; இன்னமொன்று - ஸதோபீதியுமின்றிக்கே, வளையத்தேயிருந்து வார்த்தை சொல்லவும்வற்றே; "தேனுண்ணும் வண்டேபோல் பங்கிகள்" என்றும் அவனுக்குத்தலையான த்ருஷ்டாந்தமாகவும் சொல்லுவதிவற்றையிறே. [வேறுகொண்டு உம்மையானிரந்தேன்] நம்மாசார்யர்கள் வ்யாபக மந்த்ரங்கள் மூன்றிலும் த்வயத்தையே யாதரிக்குமாபோலே. இவைதான் ஷட்பதங்களுமே. [வெறி வண்டினங்காள்] - உங்களுக் கென்கார்யம் செய்தல்லது நிற்கவொண்ணாதாயிருந்தது. கலவியாலுண்டான வேறுபாடடங்களும் வடிவிலே தோன்றும்படியாயிருந்தது. வெறி - பரிமளம். பரிமளத்தையுடைத்தாயிருக்கை. தனித்துப்போனாலும் வழிக்குப் பாதேயம் போந்திருந்ததீ. உடம்பை மோந்துகொண்டு போகவமைந்து காணுமிருக்கிறது. இனங்காள் என்கையாலே - இவைதனக்குப் பிரிவில்லையிறே. *ஸர்வகந்த:* என்கிற விஷயத்தோடேயணைந்த விவனுக்கு இவற்றின்பரிமளங்கண்டு ஆச்சர்யப்படும்படி காணும் வாஸனையுங்கூட மறந்தபடி. [தேறுநீர்ப்பம்பை] - இவ்வூரெல்லையைக் கழிந்தவாறே தெளிந்த பதார்த்தங்களையும் காண்கிறிகோளிறே. இவளிருந்தவிடத்திலடையக் கலங்கியிறே கிடக்கிறது. *உபதப்தோதகா நத்ய:* "தாபார்த்தனுக்கு நீரிலே விழுந்தால் தாபமாறும்" என்னுமிவ்வாஸனையைக் கொண்டு, "ராம விச்லேஷத்துக்கும் இது பரிஹாரமாமோ" என்று ஜலத்திலே விழுவதாகக்கொண்டுசெல்ல, கரையிலுங்கூடக்கிட்டவரிதாயிருந்தது. "நிலைநீர்கள் தான் குளிரவற்றோ" என்று பார்த்தார்கள், அவையுமப்படியேயாயிருந்தன. *பல்வலாநி ஸராம்ஸிச* வ்ருக்ஷங்களோடு வஸிஷ்ட்டாதிகளோடு வாசியற அறியுமாபோலே. இப்படியேயிறே யிவளிருக்கிறவிடம். [வடபாலைத் திருவண்வண்டூர்] - வடபாலை - வடபார்ச்வத்திலே. ஊருமாறுமின்னப்ரதேசத்தே யென்னுமிடம் நெஞ்சிலேபட்டுக் கிடக்கிறபடி காணும் இவர்க்கு. கடலுக்குத் தென்பாலிருக்கிற பிராட்டியைப் போலேயாயிற்றிவளிருக்கிறவிருப்பு. [மாறில் இத்யாதி] அறிவிப்பார் தாழ்வே; புன்பு விரோதியென்று கிடப்பதொன்றில்லை. [மாறில்போரரக்கன்] - வீரப்பாட்டுக்குத் தலையான சக்ரவர்த்தி திருமகனார் "நமக்கு இவனெதிரியாகப்போரும்" என்று மதிக்கும்படியாகப் பிறந்த பையல், வரபலபுஜபலங்களாலே யெதிரில்லாத போரையுடைய ராவணனையும், [அவன் தனக்கரணாக இட்ட மதிளையும் துகளாம்படியழியச்செய்து ஹ்ருஷ்டராயிருக்கிற. [ஏறுசேவகனார்க்கு] - (எங்குமோர் பேர்பட்ட ஆண்பிள்ளைத்தனத்தையுடையவர்க்கு. [உகந்த] "ருஷிகள்குடியிருப்புப்பெற்றோம், பிராட்டியோடே கூடப்பெற்றோம், லங்கையை விபீஷணவிதேயமாக்கப் பெற்றோம்" என்று உகந்த.) அல்பம் வரவு தாழ்த்ததென்ன, எதிரிகள் மதித்துமேலெழுத்திட்ட வீரப்பாட்டுக்குக் குறைசொல்லவொண்ணாதிறே. *ரதசர்யாஸு ஸம்மத:* என்று வீரர்கள் கொண்டாடின வீரமிறே. [என்னையுமுளளென்மின்களே] — இன்னமும் கேவுபடுகிறாருண்டென்று சொல்லுங்கோள். ஆளவந்தாரருளிச்செய்ததாகத் திருமாலையாண்டான் பணிக்கும்படி "'இத்தலையைப் பிரிந்தாரில் இருப்பாரில்லை' என்றிருக்கையாலே வாராதொழிந்தாரத்தனை, இத்தலையில் ஸத்தையுள்ளமையை யறிவியுங்கோள்" என்று. இத்தை எம்பெருமானார் கேட்டருளி, "அழகிது; ஆகிலும், 'இன்றியமையாமை'" என்று தமிழரதொரு ப்ரவாதமுண்டு; அதாகிறது - ஒருதலையுண்டானால் ஒருதலையின்றிக்கே யிராது: இரண்டுதலையுமுண்டாதல், இரண்டுதலையுமின்றிக்கேயொழிதல் செய்த்தனையாயிற்று. அதில் நாமுளராகையாலே இத்தலையுமுண்டென்கை நிச்சிதம்; ஆனபின்பு, ப்ரதிகூலித்தாரைக் கிழங்கெடுத்துப் பொகட்டு அநுகூலித்தார் தலையிலே முடியை வைத்து க்ருதக்ருத்யராய், 'இனிக் கர்த்தவ்யசேஷமில்லை' என்றிருக்கிறவர்க்கு, இன்னமும் ரக்ஷ்யவர்க்கமொன்றுண்டென்று சொல்லுங்கோள்' என்று.

மின்கொள்சேர்புரிநூல்குறளாய் அகல்ஞாலம்கொண்ட*
வன்கள்வனடிமேல் குருகூர்ச்சடகோபன்சொன்ன*
பண்கொளாயிரத்துள் இவைபத்தும் திருவண்வண்டூர்க்கு*
இன்கொள்பாடல்வல்லார் மதனர்மின்னிடையவர்க்கே. (11)

ஒ.—நிகமத்தில், இப்பத்தும் வல்லவர்கள் காமிநிகளுக்குக் காமுகர் போக்யராமாபோலே ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு போக்யராவரென்கிறுர். [மின்னொன்று தொடங்கி.]—மின்னேவென்று திருமார்வுக்குச் சேர்ந்திருந்துள்ள திருயஜ்ஞோபவீதத்தையுடைய ஸ்ரீவாமநனுப் இம்மஹாப்ருதிவியையெல்லாம் அளந்துகொண்ட மஹாவஞ்சகன்திருவடிகளிலே. வாமநவ்ருத்தாந்தகதநத்திலுலே மின்னிடைமடவாருக்காகத் தோற்றுகிற தோற்றரவை ஸூசிப்பிக்கிறது. [இன்கொள்பாடல்] - இனிய பாடல்.

இ.—நிகமத்தில், இப்பத்தும் வல்லவர்கள், காமிநிகளுக்குக் காமுகர் போக்யராமாபோலே, ஸர்வேச்வரனுக்கு ஸ்ப்ருஹாவிஷயமாவரென்கிறுர். [மின்கொள் சேர்புரிநூல்குறளாய்] - மின்னேவென்று ச்யாமமான திருமேனிக்கு பரபாகமான சேர்த்தியையுடைத்தான திருயஜ்ஞோபவீதத்தையுடைய ஸ்ரீவாமநனுய். [அகல்ஞாலம்கொண்ட] - விநீதமாய் ஆகர்ஷகமான வடிவைக்காட்டி யிசைவித்து, பூமிப்பரப்பைத் தன்திருவடிகளின்கீழே யிட்டுக்கொண்ட. [வன் கள் வன்] - தன்னுடைமையை யவனதாக்கி அவன்தந்தாலும்படி பண்ணின மஹாவஞ்சகன்திருவடிகளிலே. வாமநவ்ருத்தாந்தகதநம் மின்னிடை மடவாருக்காகத் தோற்றுகிற தோற்றரவுக்கு ஸூசகம். இதில் பிறந்த ப்ரணயரோஷம் மின்னிடைமடவாராகைக்கு வாமநனுய்வந்து தோன்றக் கிழக்குவெளுத்தபடி. மஹாபலியை யர்த்தியாய்ச் சென்று வஞ்சித்துப் பூமிப் பரப்பையடையத் தன்திருவடிகளின்கீழே யிட்டுக்கொண்டாப்போலே யாயிற்று ப்ரணய கோபத்தாலே "அல்லோம்" என்றவர்களைத் திருவடிகளின்கீழே யிட்டுக்கொண்டபடி. [பண்கொளாயிரம்] - "ஈழம் பிரம்புகொண்டது" என்னுமாபோலே, பண்மிகுந்திருக்கை. [இன்கொள்பாடல் "பாட்ட்யே கேயேச மதுரம்" என்கிறபடியே இயலுமிசையுமினிதாயிருக்கை. [வல்லார்] - இத்தையப் யஸிக்கவல்லவர்கள். [மதனர்மின்னிடையவர்க்கே] - மின்னிடையவர்க்கு மதனர் ஸ்ப்ருஹாவிஷயமாமா போலே, இவர் தூதுவிடுகிற விஷயத்துக்கு போச்யராவர். "அற்பசாரங்க ளவைசுவைத் தகன்றெழிந் தேன்", "தூராக்குழி தூர்த்தெனேகாளகன்றிருப்பன்" என்று விஷயப்ராவண்யம் விநாசபர்யாயமென்னு மவர், இத்தை யுத்தேச்யமாகச் சொல்லாரிறே. ஸர்வதாஸாம்யமுள்ளவிடத்தில் அதுதன்னையே சொல்லக்கடவது.

ஈடு.—நிகமத்தில் - இத்திருவாய்மொழி வல்லவர்கள், காமிநிகளுக்குக் காமுகர் போக்யமாமாபோலே ஸர்வேச்வரனுக்கு ஸ்ப்ருஹாவிஷயமாவரென்கிறுர்.

[மின்கொள் சேர்புரிநூற்குறளாய்] - மின்னேவென்று ச்யாமமான திருமேனிக்குப் பரபாகமான சேர்த்தியுடைய திருயஜ்ஞோபவீதத்தையுடைய ஸ்ரீவாமநனுய். இப்போதிது சொல்லுகிறது - அவன் ஸர்வஸ்வத்தையுங் கொடுக்கும்படி விநீதவேஷத்தோடே போய்ப் புக்கபடி. "பகற்கண்டேன்" என்கிற தோற்றரவுக்குக் கிழக்குவெளுக்கிறபடி. தூதுவிடுகைக் குங்கூட சக்தனல்லாதமை தோற்ற இரப்பாளனுய், இத்தலையைப் பிரித்து வந்த சிறும்புத லெல்லாம் வடிவிலேதோற்ற நின்றபடி. [அகல் ஞாலங்கொண்ட வன்கள்வனடிமேல்] - பூமிப் பரப்படங்கலும் அவனுக்கொன்றும் தொங்காதபடி அபஹரித்த மஹாவஞ்சகன் திருவடிகளிலே. மின்னிடைமடவார்க்குக் கிழக்குவெளுக்கிறபடி; அதாவது-மஹாபலியி னுடைய தூர்மாநத்தைப்போக்கி ஒன்றெறியாமல் கைக்கொண்டாப்போலே, ப்ரணயரோஷத் தாலேவந்த இவளுடைய அபிமாநத்தைப் போக்கிச் சேரவிட்டுக்கொண்டபடி. எதிரியாய் வந்தவனுடைய துர்மாநத்தைப் போக்கினுப்போலன்றிறே ப்ரணயிநியுடைய மாநம். அது அறிக்கலாம், இது அறிக்கவொண்ணுதே. நிர்விஷயமாகக் கோபிக்கிறவர்கள் இலக்குப் பெற்றுல் மிகைக்குமத்தனையிறே. அவன்ஸந்நிதியிலு மறியாத தொன்றிறேயிது. (குருகுரித்யாதி) [பண்கொளாயிரம்] - "ஈழம் பிரம்புகொண்டது" என்னுமாபோலே பண்ணேமிக் இருக்கை. [இன்கொள்பாடல் வல்லார்] - இனிதான பாடலைவல்லார். இதுக்குப்பலச்ருதி வேண்டாகாணும்: இதுதன்னையே யினிதாகச் சொல்லுமையும். [மதனர்மின்னிடையவர்க்கே] - காமிநிகளுக்குக் காமுகரெவ்வளவு, இத்தை யதிகரிக்கவல்லவர்கள் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அவ்வளவாவர்; இங்ஙனன்றாகில், "பல நீகாட்டிப்படுப்பாயோ" "புறத்திட்டின்னங் கெடுப்பாயோ" என்று சொல்லுகிற இவர், ஸ்த்ரீகளுக்கு போக்யராவரென்கிறாரன்றே; காமி

கிகளுக்குக் காமுகரைப்போலே அபிமத விஷயத்துக்கு போக்யராவரென்கிறார்: காலைச் சொல்லப்புக்குத் தாமரையைச் சொல்லாநின்றதிறே; ஸர்வதாஸத்ருசமானவற்றுக்கு உபமாநந் தன்னையே சொல்லக்கடவது; "அதுபோல" என்றும் "அதுதான்" என்றும் சொல்லக்கடவ தாயிருக்கும்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

இரண்டாந் திருவாய்மொழி—மின்னிடை மடவார் : ப்ரவேசம்

ஒ.—இரண்டாந் திருவாய்மொழியில், மாசறுசோதி தொடங்கி வைகல்பூங்கழிவாயகப்பட வ்யஸநபரம்பரையாலே மிகவும்நோவுப்பட்டு, ஓராச்வாஸம் பெறுதேயிருக்கிற இப்பிராட்டி, "இனி அவன்வரிலும், அவனோட்டை ஸம்ச்லேஷம் விச்லேஷாந்தமாயல்லதிராது; இனி, ஸம்ச்லேஷித்து மீளவும்விச்லேஷித்து துஃக்கபரம்பரைகளையநுபவிப்பதிற்காட்டில் ஸம்ச்லேஷியாதொழியவேமுடிதும்: முடியவே இந்த விச்லேஷதுஃக்க மநுபவியாதொழியலாம்" என்று, ப்ரணயரோஷத்தாலேதுணிந்து, "நாமிங்ஙன் இலையகலப்படுக்க, அவன்றான் வாராநின்றானே" என்று சிந்தித்து, "நான் தன்னை விச்லேஷித்து நெடுங்காலம் துஃக்கப்படுகையாலும், களித்து சரணம்புகிலும் பொறுக்கமாட்டாத தன்திரு வடிகளிலே பெரியவார்த்தியோடே நாலுப்ரயோகம் சரணம் புகுகையாலும், மிகவுமாற்றாமையோடே திருவண்வண்டூரிலே தூதப்ரேஷணம் பண்ணுகையாலும், அவன்வரவை ஸூசிப்பிக்கிற நன்னிமித் தங்களாலும், அவன்றான் நமக்குஅநபிமதமாயிருக்கப் போனப்போலே தன்வரவு அநிஷ்டமாயிருக்க வருவானொருவனுகையாலும், நம்முடைய பாக்யவைகல்யத்தாலும் அவன் வரவுதப்பாது" என்று பார்த்து, தங்களுடைய லீலோத்யானத்திலே அதிமனோஹரமாயிருப்பதொரு மண்டபத்திலே எம் பெருமானுக்குத் தங்கள்பக்கல் வந்நணுகவொட்டாதபடி அநாதரமாகிற கன்மதிளையிட்டுக் கொண்டு, தன்னுடைய கிளிதொடக்கமான லீலோபகரணங்களையும் அவனுக்கெட்டாதபடி பண்ணிக்கொண்டு, தோழிமாரும் தானும் கழகமாகவிருந்து, "அவன் வந்தாலும் அவனைக்கடாக்ஷித்தல் அவனோடு ஸம்பாஷித்தல் செய்யக்கடவோமல்லோம்; அவனோடே விச்லேஷித்துப் பட்ட வ்யஸநந்திர அவனெதிரே முடியவேணும்" என்னும் மனோரதத்தோடே அந்யபரைகளைப்போலே யிருக்க; "வேறுகொண்டும்மை யானிரந்தேன்" என்று கூப்பிட்ட பிராட்டியுடைய த்வநியைக்கேட்டு, த்ரௌபதியை துச்சாஸநாதிகள் ஸபையிலே நலியா நிற்க அவள் "கோவிந்த" என்று கூப்பிட்ட ஆர்த்தத்வநியைக் கேட்டாப் போலேயும், சரதல்பகதரான ஸ்ரீபீஷ்மர்தசையை அநுஸந்தித்த போதுபோலேயும் மிகவும் கலங்கின எம்பெருமான், "நம்மைப் பிரிந்தவள் இங்ஙனே நோவுபட நாமுதவப்பெறுதொழிவதே, நமக்குப் பும்ஸ்த்வமாவதென்?" என்று லஜ்ஜாபயங்களினாலே விஹ்வலனாய் மிகவும் க்லிந்நனாய்க்கொண்டு, இவளோடே ஸம்ச்லேஷித்தல்லது தரிக்கமாட்டாதானாய் இவளிருந்தவிடத்துக்கு அதூரவிப்ரக்ருஷ்டமாக வந்து, இவள் ப்ரணயகோபத்தாலே அணுகவொண்ணாதபடியிருக்கிற இருப்பைக்கண்டு, "ஸாபராதரான நாம் அநபிமததசையிலே கண்காண நேரே சென்று இசைவின்றிக்கே மேல்விழில், ம்ருதுப்ரக்ருதி யாகையாலே மாந்தும்; ஆனபின்பு இவளுடைய ஹ்ருதயகாலுஷ்யத்தைப்போக்கி ஸம்ச்லேஷித்து இவளையும் தரிப்பித்து நாமுமுளோமாம் விரகேதோ?" என்று நிரூபித்து, "ஸ ப்ராதுச்சரணௌ காடம்" என்னும்படியாலே அநுவர்த்தித்துத் திருத்திக்கொள்ளுகிறோம்" என்றொருபடி நிலைநின்று, தன் திரு மேனியோடு விகல்பிக்கலாயிருப்பதொரு சோலையினுள்ளிட்டு அவளுக்கும் தோழிமார்க்கும் தெரியாத படி ப்ரத்யாஸந்நமாகச்சென்று, அவர்களைக் காணப்பெறுதேவிடாய்த்த தன் திருக்கண்களாரளவும் நின்று கண்டருளி; இப்பிராட்டியுடையவும் தோழிமாருடையவும் ஆலோகநாலாபாதிகளைப் பெறுமையா

லும், இவளுடைய லீலோபகரணமான கிளிபூவைகளுடைய ஸம்ஸ்பர்சமதுராலாபச்ரவணங்களைப்பெற்று ஆத்மதாரணம் பண்ணப்பெறுமையாலும், இப்பிராட்டிதன்னிற்காட்டிலும் தன் பக்கலிலே பரிவுடைத்தாகையாலே தனக்கிவளோட்டை ஸம்ச்லேஷத்துக்குப்புருஷகாரமாகநினைத்த தோழிமாருள்ளிட்ட பரிஜனமும்இவள்தன்னிற்காட்டிலும்வைமுக்யம்பண்ணியிருக்கையாலும், ''க்ஷணேऽபிதே யத்விரஹோऽதிதுஸ்ஸஹ:'' என்னும் கணக்காலே க்ஷணகாலமும் எம்பெருமான் தனக்கிவளையொழியத் தரிப்பரிதாய்ச் செல்லாநிற்க; இப்பிராட்டியும் தோழிமாரும் ''சோபயந் தண்டகாரண்யம்'' என்னுமா போலே அவனுடைய ஸௌந்தர்யதரங்கங்களாலே தாங்களிருந்த வுத்யாநமெல்லாம் மயிற்கழுத்துச் சாயலாகையாலும், ஆலாங்கட்டிபோலேயும் வர்ஷதாரைபோலேயும் அவனுடைய கடாக்ஷங்கள் தங்கள் மேலே நிரந்தரமாகப்பட்டதினாலே புளகிதகாத்ரைகளாகையாலும், அவனை ''ப்ரத்யாஸன்னன்'' என்றறிந்து ப்ரணயகோபமறமிக்கு, அவன்பக்கல் பராங்முகிகளாயிருக்க; அவனும் தன்னுடைய ஸௌந்தர்யாதிகளையும் தன்னுடைய ஆற்றாமையையுமாவிஷ்கரித்து ஊடல்தீர்த்து இப்பிராட்டியோடே ஸம்ச்லேஷித்து முடிக்கிறான்.

இ.—இரண்டாந்திருவாய்மொழியில், மாசறுசோதிதொடங்கி வைகல்பூங்கழிவாயளவும் வர வ்யஸநபரம்பரையாலே நோவுபட்டு ஓராச்வாஸமும் பெறாதே யிருக்கிறவிவள், ''நெடுநாள் விச்லேஷத்தாலே நோவுபடுகையாலும், களித்துசரணம் புகுரிலும் பொறுக்கமாட்டாதவன் திருவடிகளிலே நாலுப்ரயோகம் ஆர்த்தியோடே சரணம்புகுகையாலும், தூதுவிடுகையாலும், அவன்வரவை ஸூசிப்பிக்கிற நிமித்தங்களாலும், தனக்கநபிதமாயிருக்கப் போனாப்போலே தன் வரவு அநிஷ்டமாயிருக்க வருவானொருவனாகையாலும், நம்முடைய பாக்யவைகல்யத்தாலும் வரவு தப்பாது'' என்று நிச்சயித்து, ''வந்தாலும் அவனோட்டை ஸம்ச்லேஷம் விச்லேஷாந்தமாயல்லதிராது; இன்னம் ஸம்ச்லேஷித்து து:க்கபரம்பரைகளை அநுபவிப்பதிற்காட்டில் முகம்பழகினவாற்றாமையோடே அவன்கண்முகப்பே முடிந்துபோகை நன்று'' என்று ப்ரணயரோஷத்தாலே நிச்சயித்து, தன்னுடைய லீலோத்யாநத்திலே மனோஹரமாயிருப்பதொரு மண்டபத்திலே அவனுக்குக்கிட்டவொண்ணாதபடி அகாதரமாகிற கன்மதிளையிட்டு அந்யபரைகளைப்போலே தோழிமாரும் தானும் கழகமாகவிருந்து; கிளிதொடக்கமான தன்னுடைய லீலோபகரணங்களையும் அவனுக்கெட்டாதபடி யொருங்க விட்டிருக்க; ''வேறுகொண்டும்மையானிரந்தேன்'' என்று கூப்பிட்ட த்வநியைக் கேட்டு, த்ரௌபதியினுடைய ஆர்த்தத்வநியைக் கேட்டபோதுபோலேயும் ஆனையினுடைய ஆர்த்தநாதம் செவிப்பட்டபோதுபோலேயும் சரதல்பகதரான ஸ்ரீபீஷ்மரை யநுஸந்தித்தபோதுபோலேயும் மிகவும் கலங்கி, ''நம்மைப்பிரிந்திவள் நோவுபட, நாம் உதவப்பெறுதொழிவதே!'' என்று லஜ்ஜாபயவிஹ்வலனாய்க்கொண்டு, இவளோடே கலந்தல்லது தரிக்கமாட்டாதவனாய் இவளிருந்த விடத்துக்கு அதூரவிப்ரக்ருஷ்டமாக வந்து, இவள் ப்ரணயகோபத்தாலே அணுகவொண்ணாதிருக்கிற படியைக்கண்டு, ''ஸாபராதரான நாம் அநபிமததசையிலே யிசைவின்றிக்கேயிருக்கக் கண்காணச் சென்று மேல் விழில், ம்ருதுப்ரக்ருதியாகையாலே மாந்தும்; ஆகையாலே ''ஸப்ராதுச் சரணௌ காடம்'' என்னும்படியாலே யநுவர்த்தித்து இவளுடைய ஹ்ருதயகாலுஷ்யத்தைப் போக்கிக் கலக்க வேணும்'' என்று பார்த்துத் தன்திருமேனியோடே விகல்பிக்கலாவதொரு சோலையினுள்ளிட்டு அவளுக்கும் தோழிமாருக்கும் தெரியாதபடி கிட்டச்சென்று கண்களாலே விடாய் கெடுமளவும் நின்று கண்டு; இவளுடைய ஆலோகாலாபாதிகள் பெற்று ஆத்மதாரணம் பண்ணப்பெறுமையாலும், இவளோட்டைக் கலவிக்குப் புருஷகாரமாக நினைத்ததோழிமாரும் இவளிற்காட்டில் விமுகைகளாகையாலும், ''க்ஷணேऽபிதே யத்விரஹோऽதிதுஸ்ஸஹ:'' என்று க்ஷணமாத்ரமுமிவர்களையொழியத் தரிப்பரிதாய்ச் செல்லாநிற்க; தோழிமாரும்இவளும் ''சோபயந் தண்டகாரண்யம்'' என்னுமாபோலே அவன்வடிவழகாலே உத்யானமெல்லாம் மயிற்கழுத்துச்சாயலாகையாலும், ஆலாங்கட்டிபோலேயும் வர்ஷதாரைபோலேயும் அவன் கடாக்ஷம் தங்கள் மேலே நிரந்தரமாகப்பட்டதினாலே புளகிதகாத்ரைகளாகையாலும் ''ப்ரத்யாஸந்நன்'' என்றறிந்து ப்ரணயகோபம் மிக்கு முகங்களை மாறவைத்திருக்க, அவனும் தன் ஸௌந்தர்யாதிகளையும் தன்னாற்றாமையையும் ஆவிஷ்கரித்து ஊடல்தீர்த்து இவர்களோடே கலந்து பொருந்தினானாயிருக்கிறது.

ஈடு.—இவ்வாழ்வாராகிறார், ஸம்ஸாரபயத்தாலும் பகவத் ப்ராவண்யத்தாலும் கைங்கர்யருசியாலும் வ்யதிரேகத்தில் தரியாமையாலும், பகவத்விஷயத்தில் கைவைத்தாரேல்

லாருடைய படியுமுடையரா யிருப்பர். "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கு மழுக் குடம்பும்" என்கையாலே பத்தர்படியுண்டென்னவுமாயிருந்தது; "இந்நின்ற நீர்மையினியா முறாமை" என்றுகொண்டு - அதுபொருந்தாதபடியிருக்கையாலே முமுக்ஷுக்கள்படியுமா யிருந்தது. "வழுவிலாவடிமைசெய்ய வேண்டுநாம்" என்று - கைங்கர்யத்தாலல்லது தேஹயாத்ரை செல்லாமையாலே, முக்தர்படியுண்டென்னலாயிருந்தது; "நின்னலாலிலேன் காண்" என்று - அதுதான் ஸத்தாப்ரயுக்தமாயிருக்கையாலே நித்யரோடொக்கச் சொல்லலா யிருந்தது; ப்ரணயரோஷத்தாலே யூடுகையாலே பிராட்டிமாரோடொக்கச் சொல்லலாயிருந்தது. ***விஷ்ணுநா ஸத்ருசோ வீர்யே ஸோமவத் ப்ரியதர்சந:*** - என்று பெருமாளுடைய ஒரோ ஸ்வபாவங் களுக்கு ஸகலபதார்த்தங்களையு மொப்பாகச் சொல்லுமாபோலே, அல்லாதார்படியடங்கலும் இவருடைய ஒரோ அவஸ்த்தைக் கொப்பா மத்தனை. இதுதான் "பால்யாத்ப்ரப்ருதி யிறேயிவர்க்கு; "அறியாக் காலத்துள்ளே அடிமைக்கணன்புசெய்வித்து" என்றும் "மூலையோ கூழுமூற்றும் போந்தில - பெருமான்மலையோ திருவேங்கடமென்று கற்கின்ற வாசகம்" என்றும் சொல்லுகிறபடியேயிறே இவர் பருவம் நிரம்புவதற்குமுன்னும் இருக்கிறபடி.

இனி [ஏறாளுமிறையோனிலே அவன் வேண்டாத காறுமென்னுடைமையும் வேண்டா என்றார்; மாசறுசோதியிலே எனக்குறுப்பல்லாத அவனும் அவன்விபூதியும் வேண்டா என்று அழிக்கப்பார்த்தார்; பிறந்தவாற்றிலே தரித்துநின்று குறுநுஸந்தானம் பண்ணவல்லேனும்படி பண்ணியருளவேணு மென்று சரணம்புக்கார்; அப்பெரியவார்த்தியோ டேகூடத் தூதுவிட்டார்; விட்ட ஆள் சென்று அத்தலைப்பட்டு அவனுக்கறிவிக்க, அவனும் இழவாளனாய் ஆனைக்கருள்செய்யவந்து தோற்றினாப்போலே பதறிநடந்துவாராநிற்க, அவ்வளவு பற்றாமே கிடந்து துடித்தலமந்து, "இனி இவ்வளவில் நாம் செய்ய அடுப்பதென்?" என்று பார்த்து, "முடிந்துபிழைக்கைக்குமேற்பட்ட பரிஹாரமில்லை" என்றுபார்த்து அறுதி யிட்டு முடியப்பார்க்கிறாள். அது இவள் ஸங்கல்பித்தபோதாக முடியலாயிராதிறே; அங்ஙன் செய்யலாமன்று, இவள் "ஏறாளுமிறையோனில் 'வேண்டா' என்றபோதே போமிறே. இனி போகத்துக்கு அவன்வரவு வேண்டினவோபாதி முடிவுக்கும் அவன்வரவு வேண்டியிருந்தது. பிரிவில் குறுநுஸந்தானம் பண்ணி தரிக்கலாம்; அவன்ஸந்நிதியில் அவனையொழிய அரை க்ஷணம் முகம்மாறியிருக்குமதுக்குமேற்பட முடிவு உண்டோ? அவன்பேரநின்று இத்தலையைப் பண்ணின மிறுக்கடங்கலும், அவன்ஸந்நிதியிலே தான் முடிந்து அவனையே நோவுபடுத்தப் பார்க்கிறாள். அவன் வரவிலே அல்பம்தாழ்க்க, ப்ரணயரோஷம் தலையெடுத்து, "இனியிருந்து ஜீவிக்கும் ஜீவனம்வேண்டா" என்று முடியப் பார்க்கிறாளிறே பிரிவுபொறுக்கமாட்டாமை. ***ப்ரணயாச்சாபிமாநாச்ச பரிசிக்ஷேப ராகவம்*** என்கிறபடியே. அவரோடுண்டான சிரபரிசயத் தாலும் கல்வியாலும், "என்னுடையவரன்றோ" என்கிறவேண்டப்பாட்டாலும், பெருமாளை மேலிட்டு வார்த்தைசொன்னாள்: என்சொன்னாளென்னில்:-- ***கிம் த்வாமந்யத வைதேஹ: பிதா மே மிதிலாதிப:, ராம ஜாமாதரம் ப்ராப்ய ஸ்த்ரியம் புருஷவிக்ரஹம்*** என்று, வாரீர், ஒருவனுக்கு ஆற்றலொருத்தியுண்டோ? என்னையொருத்தியையும் நோக்கமாட்டாமையே வைத்துப் போகப்புகுகிறது! இது தன்னை எங்களய்யர் கேட்கில் போர வெறுப்பர்; ஒருபெண்பெண் டாட்டி ஆணுடையுடுத்து என்மகளைக் கைப்பிடித்துக்கொண்டு போனவித்தனையாகாதே என்றிராமே கடுகக்கொண்டுபோகப் பாரும். ***ஈர்ஷ்யாரோஷென பஹிஷ்க்ருத்ய*** பிறருயர்த்தி கண்டால் பொறுக்கவேண்டாவோ? நான் "உம்மோடேகூடப்போர" என்று புறப்பட்டு நாலடி இட்டால், எனக்கு அத்தால்வரும் ஏற்றங்கண்டு பொறுக்கமாட்டாமையா லுண்டான கோபாலஸைகளைப் பொகடும். ***புக்தசேஷமிவோதகம்*** - இதுவும் அப்படியாகாதேதான். ப்ரணயிகள்கோஷ்டியி லிங்ஙனேகாணும் பரிமாற்றம் - ப்ரணயிநிகளுக்கு உண்டான தன் னேற்றம் தன்னதாயிருக்க வேண்டாவோ? ***நய மாம் வீர*** என்னை அறியாதாப்போலே உம்மையும் அறிந்திலீராகில், நான் சொல்லக்கேளும். உமக்கொருகுறைகளு மில்லை காணும்; என்னைக்கொடுபோகப் பாரும். ***விஸ்ரப்த:*** தந்தாமையறியாவிட்டால் ஆப்தர் வாயிலே கேட்டறியவேணுங்காணும். ***பாபம் மயி நவித்யதே*** பொகடும்; இங்ஙனன்றாகில், நீரென்னையிங்கே நிறுத்திப்போனால், நீர் மீண்டுவருந்தனையும் தரித்திருக்கைக்குவேண்டும்

ஹேது எனக்கில்லைகாணும். இப்படியிறே ப்ரணயரோஷம் தலையெடுத்தாளிருக்கும்படி. இன்னமிவ்வளவேயோ ? இவர்தாம் இலக்காகச் சொன்னவையிறேயிவை. இவர்வரவிட்ட ஆளின்முன்பேயுப் *குசலீயதி காகுத்ஸ்த்த: கிம்நுஸாகரமேகலாம், மஹீம் தஹதிகோபேந யுகாந்தாக்நிரிவோத்தித:* என்னுமவனிறே. *காகுத்ஸ்த்த:* பரபரிபவம் பொறுத குடியிலேயன்றோ தாம் பிறந்தது; ''பிறர்க்குவந்தவை பரிஹரிக்குமத்தனையல்லது, தமக்கு வந்தது பரிஹரிக்கலாகாது'' என்றிருக்கிறரோ ? *கிம் நஸாகரமேகலாம் மஹீம் தஹதி* ''த்ரவத்ரவ்யத்துக்கு ஓரம்பும் கடிநத்ரவ்யத்துக்கு ஓரம்பும் வேணும்'' என்றிருக்கிறரோ ? கடலில் நீரே நெய்யாக எரிக்கவல்ல அம்புடையவரன்றோ. ஒக்கக் கைப்பிடித்தவளாகிலும் பரிவட்டம் பேணியிருக்கும் படிவைத்தாரிறே; ராஜாக்களுக்கு பூமியும் ஸ்த்ரீபோலேயிறே; ஈச்வரர்கள் ஸ்ருஷ்டித்தபடி கிடப்பது இவர் கண்ணெக்குமளவுமாகாதேயென்றும், *தர்மாபதேசாத் த்யஜதச்ச ராஜ்யம் மாம்சாப்யரண்யம் நயத: பதாதிம்* என்கிறபடியே பித்ருவசநபரிபாலநம் பண்ணப் போந்தாரோ ? என்னை நலிகைக்காகப் போந்தாரத்தனையிறே என்றும் - இப்புடைகளிலே சொன்னவை அநேகமிறே இவளும் மாசறுசோதி தொடங்கிப் போர நோவுபட்டு, அது தன்னை வைகல் பூங்கழிவாயளவும் வரப் பாடாற்றி, அவ்வளவிலும் வரக்காணாமையாலே ஆறவிட்டு, ஆதராக்ய மத்தலைப்பட்டு மீளுவதற்குமுன்னே பற்றுதபடிபதறி, ''இனி அவன்முன் வந்தாலும் ஸம்ச்லேஷமாய் அது விச்லேஷாந்தமாயல்லது இராது; ஆனபின்பு, அவன் வந்து கலந்து பிரிந்தபோழ்வாய் பொறுக்க அரிதாயிருக்கும்; அநந்தரம் பிரிவாகிற புதுக்கோழூற்றவன் வந்து மூதன்மை கொண்டாடுமதில், முகம் பழகின வ்யஸநதையே யமையும்'' என்று ஆற்றாமை தோற்றவிருந்தாள். எங்ஙனே யிருந்தாளோவென்னில் ? *ஹிமஹதநளிநீவ நஷ்டசோபா* பன்னிரண்டாண்டு தண்ணீர்த்துரும்பறக் கலந்துபோந்த விவளுக்கு வந்தேறியானபிரிவிறே; அத்தாலே அழகழிந்திருந்தாள்; *வ்யஸநபரம்பரயா* - பிரிவோபாதி கலவியும் வந்து அழியப்பெற்றதில்லை. *அதிபீட்யமாநா* ஆச்ரயத்தினள வல்லாதபடியாயிருக்கை. *ஸஹசரரஹிதேவ சக்ரவாகீ* - வருமளவும் உணர்ந்து பொறுத்திருக்கமாட்டாதிருக்கை. அவற்றின்படி யங்ஙனேயிறே. *ஜநகஸுதா* - ''இவைவரும்'' என்று வளரப்பெற்றதில்லை. *க்ருபணாம்தசாம் ப்ரபந்நா* - கீழ்ச்சொன்னவிவையொன்றும் ஒப்பாகமாட்டாது, சிலசொல்லிற்றுமித்தனை. இவளும் அப்படியே, ''முகம்பழகினவாற்றாமையோடே யிருந்து முடியவமையும்; இனி, அவன் வரவு நமக்கு வேண்டா'' என்றிருக்கிறாள். இவள்தானிப்படி பாரிக்கைக்கு அவன்முன் வாராநின்றானோவென்னில் ? அவன்வரவுக்கு ஸூசகமான நிமித்தங்கள் அநேகமுளவாயிருந்தன. *பக்ஷீச* - பக்ஷியானது சிறகை விரித்தது. [பக்ஷத்தையுடைத் தென்கிறவிசேஷணத்துக்கிது வேயிறேகருத்து.] *சாகாநிலய:* - உயர்ந்தகொம்பிலன்றிக்கே, பக்கமையையுடைத்தான பணையிலேயிருந்தது. வ்ருக்ஷத்தை வலமாகவந்து, தழைத்த பணையிலே நற்றரிக்க இருந்தது. *ப்ரஹ்ருஷ்ட:* - அங்குள்ள பலாதிகளை புஜிக்கையாலுண்டான ஹர்ஷம் வடிவிலே தோற்றும்படி இருந்தது. *புந:புநச்சோத்தமஸாந்த்வவாதீ*-மேன்மேலென நல்வார்த்தைகள் சொல்லத்தொடங்கிற்று- அதுக்கு மேலே, *ஸுஸ்வாகதாம் வாசமுதீரயாந:* - இவ்வளவல்லகிடாய் அத்தலை பட்டது என்று சொல்லுமாபோலேயிருந்தது. *புந: புநச்சோதயதீவ* - வரவு கிட்டிநமானபின்பு குளித்தலைப்பித்தல் செய்யாதிருக்கிறது என்னென்று சொல்லுமாபோலே யிருந்தது *ஹ்ருஷ்ட:* - வந்தால் பிறக்கும் வேறுபாடுதோற்ற உடம்பு மயிரெறிந்திருந்தது. *ததாகதாம்* - *ரஹஸ்யஞ்ச ப்ரகாசஞ்ச* - என்றுகொண்டு ப்ரஹ்மாவின் ப்ரஸாதத்தாலேயுள்ளபடியெல்லாம் தோற்றக்கடவதாகப் பெற்றுடையவனை ருஷிக்கும் பாகமாயிட்டுச் சொல்லவொண்ணுபடி யிருக்கிறபடி *தாம்* - தர்மிக்கு மேற்பட அவ்வருகொன்றின்றிக்கேயிருக்கை. *வ்யதிதாம்* - கீழ்ச்சொன்னவை ப்ரக்ருதியாய், வ்யஸநமன்னது மேலேயென்று தோற்றும்படியாய் இருந்தாள்; *ஸமா த்வாதச தத்ராஹம்* என்று பன்னிரண்டாண்டு கலந்து பிரிந்த இவளுக்கு அதொன்றுந்தோற்றுபித துக்கத்தையிட்டு நிரூபிக்க வேண்டும்படியாயிருந்தாள். *அநிந்திதாம்* - அத்தலையைப்பிரிந்தா லிருக்கக்கடவபடியேயிருந்தாள். இப்படியிராதவன்று நிந்திதையேயாகாதே. *வ்யபேதஹர்ஷாம்* ''ஹர்ஷம் குடிபுகுந்துபோயிற்று'' என்று தெரியாதாயிருக்கை. *பரிதீநமாநஸாம்* - ஹர்ஷம் வந்தாலும் ஆச்ரயமுமின்றிக்கேயிருக்கை. *சுபாம்*

-மண் தின்றுவந்த நகடுபோலன்றிறே குறுநிக விஷயத்தைப் பிரிந்தால் இருக்கும்படி;
கடலேறி வடிந்தாப்போலேயிருக்கிற அவ்விருப்புதனக்கே ஆலத்தி வழிக்கவேண்டும்படி
யிருக்கை. *நிமித்தாநி சுபாநி பேஜிரே* - நிமித்தங்களானவை இத்தலைக்கு நன்மைசொல்லித்
தந்தாம் ஸ்வரூபம் பெற்றன. *நரம் ச்ரியாஜுஷ்டமிவோபஜீவிந:* - ஸாக்ஷால்லக்ஷ்மிக்குக்கின்
சித்கரித்து ஸ்வரூபம் பெற்றன; என்போலவென்னில்? -- அர்த்திகளாயிருப்பார் உதாரர்
பக்கலிலே சென்று தந்தாம் ப்ரயோஜநம் பெற்று த்ருஷ்டராமாபோலே. இப்படியாயிருந்
தன நிமித்தங்களின் அளவு- இனி, அவனளவு பார்த்தால், *ஆர்த்தோவா யதிவா த்ருப்த:* -
ஆர்த்தனைச் சரணம் புகவுமாம்; அன்றிக்கே, நாம் திருநாமங்களைச் சொன்னால் சேவகர்
நம்மை ஆக்ஷேபித்துச் சொல்லுமாபோலே செருக்காலே சொல்லவுமாம். இங்ஙன்
விகல்பிப்பானென்? ஆர்த்தனுக்கன்றோ ப்பலப்ராப்தியுள்ளது? மற்றையவனுக்கு உண்
டாகச் சொல்லுகிறவிடம் ப்ரஸித்தமன்றிறே யென்னில்? — இச்ச்லோகத்தால், சரணா
கதலக்ஷணம் சொல்லுகிறதல்ல: சரண்யலக்ஷணம் சொல்லுகிறது. இவனுடைய
ஆர்த்திதானு முபாயத்தில் அந்வயியாதிறே: ஆனபின்பு அவனோடிவனோடு வாசியில்லை:
"தன் தசையறிந்து, 'நமக்கொருகைம்முதலில்லையாயிருந்தது' என்று தன் குறையை அறி
விக்கவும் மாட்டாதபடியாயிருந்தான்; ஆனபின்பு இவனுக்கு நாமேயாகாதேயுளோம்'' என்று
திருவுள்ளம் இவன்பக்கலூன்றியிருக்கும். *பரேஷாம் சரணாகத: அரி:* சத்ருக்களில் வைத்துக்
கொண்டு சரணாகதனான சத்ருவாயிற்றிவன். அதென்னென்னில்;—"சரணம்" என்கிற உக்தியைச்
சொல்லுகையாலே சரணாகதன் என்னவுமாய், அகவாயில் இல்லாமையாலே சத்ருவென்னவு
மாயிருக்கை. அன்றிக்கே, பூர்வவ்ருத்தத்துக்கு அநுதாப மில்லாமையாலும், இப்போது
'சரணம்' என்கிற சப்தத்தைச் சொல்லுகையாலும், இரண்டும் சொல்லலா யிருக்கை. "கொன்
றேன் - அன்றே வந்தடைந்தேன்" என்னுமாபோலே. *ப்ராணாந் பரித்யஜ்ய* - ப்ராணங்களை
யொருதலையாகவிட்டு. *ப்ராணாநபி* என்னவேண்டாவோவென்னில்?—அவன்சொன்ன
சொலவுக்கு இதொன்றும் போராமையாலே அது வேண்டாவாயிற்று. *ரக்ஷிதவ்ய: க்ருதாத்மநா*-
சிக்ஷிதமநாவாய் இருக்குமவனால் இத்தனையும்செய்யப்படும். அறிவுடையார்க்கித்தனையும் செய்
தல்லது நிற்கவொண்ணாது. இதிறே பவன்படி. "இப்படி, களித்து 'சரணம்' என்றாலும்
பொறுக்கமாட்டாதவன், மாசறுசோதியேதொடங்கிப் போரவிழுக்குப்பட்டு நாலுப்ரயோகம்
அடுத்து சரணம்புக்கு, அவ்வளவிலும் முகங்காட்டாதொழியச்செய்தேயும் ஆறுவிட்டு,
'இப்படி இம்மிறுக்குக்களெல்லாம்பட்டது நம்மையுத்தேசித்திறே' என்றிருக்கும்" என்றிருக்
கையாலும், இவ்வளவும்வர இவன்தான் முடியாதே கிடக்கையாலும், அவன்ஸ்வபாவத்தை
விச்வஸித்திருக்கையினாலும், அவன்வரவுக்கு த்யோதகமான ஸங்கேதங்கள் அநேகங்களுண்
டாகையினாலும், இதெல்லாங்கிடக்க "நம்முடைய பாக்யஹாநிதான் அவனை நம்முன்னே
கொண்டுவந்து நிறுத்தும்" என்றிருக்கையினாலும், "பிரிவுஅநிஷ்டமான தசையிலே போக
வல்ல நிர்லஜ்ஜன் வரவுஅநிஷ்டமான தசையிலே முன்னேவந்துநிற்கவும் வல்லன்" என்றிருக்
கையினாலும், "இன்னமுமொருகால் கலந்து பிரிந்து நம்மைமுடிக்கவேணும்" என்றிருக்கை
யினாலும். "வரவுதப்பாது" என்று அவன்வரவை நிச்சயித்து தோழிமாருந்தானுமாக "இனி
அவன்வந்தாலு மவனுக்குமுகங்கொடுத்தல் வார்த்தைசொல்லுதல்செய்யக்கடவோமல்லோம்"
என்று ஸங்கல்பித்து, "அவனறியாத தேரிடத்தேபோயிருக்கவேணும்" என்று பார்த்து;
காயாம்பொழிலாய் அதிலே விளையாடுகுழலாய் அதின் நடுவே அதிமநோஹரமாய் இருப்ப
தொரு மண்டபமாய், அதிலே இவர்களெல்லாருங்கூடிக் கழகமாகவிருந்து, வந்தாலுமவனுக்கு
இட்டுக்கொள்ளுகைக்குப் பற்றுசில்லாதபடி பூவைகிளிதொடக்கமான அசேதநமாயும் சேத
நமாயுமுள்ள லீலோபகரணங்களை ஊரழிபூசலில் அரணுள்ள கோட்டைகளிலே சரக்குவாங்கு
வாரைப்போலே ஓரிடத்தே திரளவாங்கி, இனி இவர்கள் மறந்தவை ஏதேனுமுண்டாகில் அது
பெற்று அவனுக்கு ஸத்தையுண்டாகவேண்டும்படியாய், இப்படி யிவர்கள் ஸமயமிட்டு,
வந்தாலும் அவனுக்குப் புகுரவொண்ணாதபடி அநாதரமாகிற கன்மதிளை உரக்கவிட்டு, அவ
னுடைய ஸர்வஜ்ஞத்வங்கொண்டு காரியங்கொள்ளுகைக்கு ஒருவழியில்லாதபடியும் ஸர்வசக்
தித்வங்கொண்டு வ்யாபரிக்கவொண்ணாதபடியாகவும் இவர்கள் வ்யவஸ்த்தை பண்ணியிருந்து-

க்ருஷ்ணவ்ருத்தாந்தம் சொல்லுவார் *கச்சித் ஸௌகுசலீ க்ருஷ்ண:* என்று இப்பிதற்றுத் தானென் என்று- *அதவா கிம் ததாலாபை:* என்பாராய், ஆஸுரப்ரக்ருதிகளான உகவாத ஹிரண்யாதிகள்கோஷ்ட்டிகளில் திருநாமம் சொல்லுகை அஸஹ்யமாமோபாதி, இவர்கள் கோஷ்ட்டியிலும் உகவை தலைமண்டையிட்டு, திருநாமஞ் சொல்லில் நெஞ்சு சிவிட்கென்னும் படியாய்க் கொண்டிருந்தார்கள் இவர்கள். இது இத்தலையிருந்தபடி.

இனி, அத்தலை இருந்தபடியென்னென்றால்: "வேறுகொண்டு உம்மையானிரந்தேன்" என்கிற ஆர்த்தநாதம் செவிப்பட்டது. *சுசிச்ரவா:* நல்லது செவிப்படுமவனிறே. இவ்வளவில் ஆறியிருக்குமவனன்றே; *பரமாபதமாபந்ந:* - என்றுகொண்டு ஸ்ரீ கஜேந்த்ராழ்வானுடைய ஆர்த்தநாதம் செவிப்பட்டபோது *அஸ்வீக்ருதப்ரணீதமணிபாதுகம் கிமிதிசாகுலாந்த:புரம் அவாஹநபரிஷ்க்ரியம்* என்கிறபடியே திருவடிநிலைகோத்து எழுந்தருளப் பற்றாமை வெறுந் தரையிலே பத்தெட்டடி இட்டும் ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளிலும் நினைவுக்கு மேற்பட ஒன்றும் காணமையாலே, இப்பதற்றம் இருந்தபடியால் "இது இவ்வளவுகளிலன்று, இதுக்கடி யென்?" என்று திவ்யாந்த:புரம் கைநெரிக்கும்படியாம், பாவஜ்ஞனான பெரிய திருவடியைப் பண்செய்தேறப்பெறாதே வெறும்புறத்தேமேற்கொண்டு *பகவதஸ் த்வராயை நம:* என்று அறிவுடையார் ஈடுபடும்படிவந்து தோற்றினாற்போலவும்; த்ரௌபதியை துச்சாஸநன் நலிகிற போது ரக்ஷகராக ப்ரஸித்தரான பர்த்தாக்கள் ஐவரிருக்க, *கோவிந்தேதி யதாக்ரந்தத்* என்று நம்மை ரக்ஷகராக நினைத்துக் கூப்பிட, *மாம் தூரவாஸிநம்* என்று 'நான் ஸந்நிஹிதனாய் உதவப் பெற்றிலேன் அவஸரத்துக்கு' என்றுநொந்து, "அவள் தனக்குஅடுக்கும்படி செய்தாள். நான் அவதரித்தே அவதாரப்ரயோஜநமொன்றும் பெற்றிலேன்" என்றுஇழவாளனாய், தர்மபுத்ரன் தலையிலே முடியையும் வைத்து இவள்குழலையும் முடிப்பித்து விரோதிவர்க்கம் முழுங் கெடுத்துப் போகட்டு தன்னுடைச்சோதியேற எழுந்தருளுகிற போதும் *நாதிஸ்வஸ்த்தமநா:* என்று திருவுள்ளம்புண்பட்டாப்போலவும்; *சரதல்பகதோ பீஷ்ம: சாம்யந்நிவ ஹுதாசந:, மாம் த்யாதி புருஷவ்யாக்ரஸ் ததோ மே தத்கதம் மந:* என்று கொண்டு சரதல்பகதரான ஸ்ரீ பீஷ்மர்க்கு முற்பாடராய் உதவவேண்டியிருக்கப் பிற்பாடரானோம் என்று நோவுபட்டாப்போலவும்; *தேந தே தமநுவ்ரதா:* என்று என்முற்பாடுகண்டு அநுவர்த்திக்கக்கடவர்கள் முற்பாடராம்படி நாம் பிற்படுவதே என்றிருக்குமவனிறே; இப்படிகளாலே திருவுள்ளம்போரவிரங்கி, *ப்ரஸீதந்து பவந்தோ மே ஹ்ரீரேஷாஹி மமாதுலா, யத்த்ருசைரஹம் விப்ரை ருபஸ்த்தேயைருபஸ்த்தித:* என்று தண்டகாரண்யபரிஸரவர்த்திகளான ருஷிகளுடைய ஆர்த்திக்குமுற்பாடராய் உதவப் பெற்றிலோமென்னும் இழவாலே லஜ்ஜித்து, அவர்களைக் காலைக்கட்டிப் பொறுப்பித்துக் கொள்ளுமவனிறே; இனி* வ்யஸநேஷு மநுஷ்யாணாம்* என்று ஸாமாந்யத்திலே இருக்கும்படி கண்டால், ப்ரணயிநி ஒருதலையானால் சொல்லவேண்டாவிறே. "நாம் கிட்டிநின்று கையைக் காலைப்பிடிக்கவேண்டும் விஷயம் ஒரு திர்யக்கின் காலிலே விழும்படி நாம் பிற்படுவதே! நமக்கினியொரு பும்ஸ்த்வமாவதென்? நாம் அங்கு இனிப்போய்ச் செய்வதென்? இங்கிருந்து செய்வதென்?" என்றுகொண்டு தடுமாறி, இத்தலையோட கலந்தல்லது தரிக்கமாட்டாதானாய், இவர்களிருந்தவிடத்துக்கு அதூரவிப்ரக்ருஷ்டமாக வந்து, ப்ரணய கோபத்தாலே அணுக வொண்ணாதபடியிருக்கிற இருப்பைக் கண்டு, "இத்தலையில் அபிஸந்தியைக் குலைத்து நாம் கூடினோமாம்படியென்?" என்று சிந்தித்து, "அழகுகொண்டு வெல்லுவோம்" என்று பார்க்கில் ஸௌந்தர்யம் கொண்டு தண்ணீர் வார்ப்பாரில்லை யிக்கோஷ்ட்டியில்; *அஸிதேக்ஷணா* என்கிற தன்னேற்றம் உண்டிறே இத்தலைக்கு; இனி, "மேன்மைகொண்டு வெல்லுவோம்" என்று பார்க்கில்; அந்த:புரத்தை ஆனைக்காலிட்டுத் துகைப்பித்து புகுக்க வொண்ணாதே; இனி இவ்விஷயத்தைப் பெறுகைக்குத் தாழ்ச்சியேயிறே பரிகரம்: அது இத்தலையின் கடாக்ஷம் பெறுநிருக்க ப்ரவர்த்திக்குமன்று விஷப்ரயோஜனமிறே; இனி இத்தனையும் செய்தால், ஆசையற்றுப் போகைக்குத் திருவடிகள் பராதே: இசைவின்றிக்கே இருக்க, மேல் விழமாட்டானே; இனி விழுக்காடுபாராதே மேல்விழுமன்று, ம்ருதுப்ரக்ருதியாகையாலே இழக் கவாிலும் வருமே; இனி, சேர்ந்து குளிர்ந்த தண்ணீர் ஸந்நிஹிதமாயிருக்க, பெருவிடாயனான் அழிந்துக்காடேறப் போகமாட்டானே; அதாவது -"இவன் அல்பம்தாழ்ந்தான்" என்று

வெறுத்து, "புகுருவானல்லன் நம்கோஷ்ட்டியில்" என்றிருக்கிற இவர்களைவிட்டு நாட்டாரோடே உறவுபண்ணப் போவானன்றே; இனி "ஒருபடிபொருந்தினோமாம்விரகென்?" என்று கடல் கடந்த திருவடிபட்டதெல்லாம் பட்டு, *ராஜா தசரதோ நாம* என்னும் அளவன்றே, இனிச் செய்யவடுப்பதென்? என்று *ஏவம் பஹுவிதாம் சிந்தாம்* என்று மநோரதித்து; "நந்தலையும் அவர்கள்காலுங்கிடந்ததாகில் காலைக்கட்டிப் பொருத்திக்கொள்ளுகிறோம்" என்று அறுதியிட்டான். தலையானஉபாய மிதிற்காட்டில் இல்லையே: இதுதான் அடியிலே கண்டதொன்றிறே. ஆக, இப்படி அறுதியிட்டு, தன்னிறத்தோடு ஒக்க விகல்பிக்கலாவதொரு சோலையுள்ளிட்டு அவனுக்கும் தோழிமார்க்கும் தெரியாதபடி கிட்டச்சென்று, அவர்களைக் காணப்பெறாதே விடாய்த்தவன் கண்களாரளவும் நின்று விணீரடைத்துக்கொண்டு க்ருதார்த்தனாய் நின்றான். ஆலோகாநந்தரம் ஆலாபாதிகளிலே ச்ரத்தை வர்த்திக்குமிறே, அதுவும்பெற்றிலன்; அவ்வளவிலும் தனக்கு ப்ராணதாரகமான இவர்களுடைய பூவை இனிதொடக்கமானவற்றினுடைய இனியபேச்சைக் கேட்கப்பெறாமையாலும் மிகவும் தளர்ந்து; தானும் அவனுமானால் அவனிற்காட்டிலும் தன்பக்கல் ப்ரேமபிரட்டித்திறே தோழிமாரிருப்பது;பிரிவிலும் அப்படியே" என்றிருந்தான்; அவர்கள் அங்ஙனன்றிக்கே அவனிற்காட்டிலும் கோபமதிசயித்திருந்தார்கள். *ஸ ப்ராதுச் சரணௌ காடம்* என்று புருஷகாரம் முன்னாகத் தன்பக்கல்புகுந்தார்க்குத் தன் திருவுள்ளம் இரங்கும்படி தான் அறியுமே! இங்கு அப்படியே அவர்கள் புருஷகாரமாகவும் பெற்றதில்லை; இனி இத்தலையிலிசைவுண்டானாலும் அவர்களிசையாதவன்று அழைக்கவும் போகாதே *தத்தமஸ்யாபயம் மயா* என்றாலும், *வத்யதாம்* என்றவர் தம்மையிட்டே *ஆநய* என்ன வேண்டிற்றிறே; அவ்வழிகளாலும் ஒருமுகம் பெற்றிலன். *நஜீவேயம் க்ஷணமபி* என்றும், *க்ஷணேऽபி தே யத்விரஹோऽதிதுஸ்ஸஹ:* என்றும் க்ஷணமாத்ரவிச்லேஷமும் பொறுக்கமாட்டாதவன், அவர்கள் ஸந்நிதியிலே முகம்பெறாமே நின்று பிழைக்கமாட்டானே. இனி இவன் தன் அணுகுதலாலே இவர்களிருந்தவிடம் அடங்கலும் *சோபயந் தண்டகாரண்யம்* என்கிறபடியே மயிர்கழுத்துச்சாயலாய், இவனுடைய நிரந்தரகடாக்ஷபாதத்தாலே புளகிதகாத்ரைகளாய், இவனுடைய கடாக்ஷபாதத்தாலுண்டான சைத்யம் இவர்களுடைய ப்ரணயரோஷத்தால் வந்த கோபாக்நியும் விரஹாக்நியுமன்றாகில் பொறுக்க வரிதாம்படியாய்; கோபந்தான் அவன்ஸந்நிதியிலே மிகைத்து வாரா நிற்குமிறே, இவ்வோலக்ஷணங்களைக்கொண்டு இவன் வந்தமையை நிச்சயித்துத் தங்களிலே ஒருமித்து முகம் மாறியிருக்க; இவனும் அவ்விருப்பைக்கண்டு எதிரிகளிட்ட மதிளாகிலிறே முறித்துப்புகலாவது; கிட்டப் பெறாமையாலும் ஸந்நிதியாலும் ஆற்றாமை கரைபுரண்டு கால்தறையில் பாவாதபடியாய்க் கொண்டு தடுமாறிவருகிற ஸமயத்திலே, இவனுடைய ஜீவநாத்ருஷ்டத்தாலே இவர்கள் மறந்துபோன பந்தும் கழலும் இவன்காலிலே தாக்க; அப்போது, இருட்டறைகளிலே தடவிக் கொண்டுவாராநின்றால் உறியும் வெண்ணெயும் கையிலே தாக்கினால் ஹ்ருஷ்டனுமாபோலே பெரிய ஹர்ஷத்தோடே விழுந்து இவற்றை எடுத்துக்கொண்டு, அத்தலையில் பண்ணின வ்யாமோஹம் அடங்கலும் இதிலேதோற்றும்படி கண்களிலே ஒற்றிக்கொள்வது தலையிலே வைத்துக்கொள்வதாய், பிராட்டி திருவாழிமோதிரங்கண்டு பட்டதெல்லாம் பட்டான். *க்ருஹீத்வா ப்ரேக்ஷமாணா ஸா*-"ராவணன்மாயையாலே வந்ததோ? என்னும் பயத்தாலேமுற்படக் கண்வைக்கமாட்டாதே யிருந்தாள்: "அத்தலையாலேவந்தது" என்று தெளிந்தபின்பு கண்மாறவைக்கை அரிதாம்படியா யிருந்தாள். *ஸா-ப்ரேக்ஷமாணா* - *பச்ய தேவி* என்றுகொண்டு முன்பு பார்வைக்கு க்ருஷி பண்ணவேண்டும்படியிருந்தவள்தானே, கண்மாறவைக்கைக்கு க்ருஷிபண்ண வேண்டும்படியாயிருந்தாள். *பர்த்து:கரவிபூஷணம்* - முதல் கைப் பிடிக்கிறபோது உறுத்தினபடியைநினைத்தாள். *கரவிபூஷணம்* - அணிமிகுதாமரைக்கையிறே. ஆபரணத்துக்கு ஆபரணங்காணும். *பர்த்தாரமிவ* - இவன் இத்தைத் திருக்கையிலேகொடுத்தவாறே, இத்தோடே சேர்ந்த விரலையும் தோளையும் நினைத்தாள்; அந்நினைவுதான், தான் இக்கரையில் ஆளாகவும் அவர் அக்கரையி லாளாகவும், கடல் இடையிலேகிடக்கிறதாகவும் அறிந்திலள்; ஒருபடுக்கையிலே கூடவிருந்ததாக நினைத்தாள்; ஒரு சூது சதுரங்கங்களிலே தோற்றுத் தன்கையிலிருந்ததாக நினைத்தாள். *இவ* என்கிறான் ருஷி, ஜநகஸமாதியாலே; இவளுணர்ந்தாலென்படக்கடவள்

என்று. *ஜாநகீ* - சோகஹர்ஷங்களுக்கு இளையாதகுடியிலேபிறந்தவள். *முதிதாஉபவத்* ஹ்ருஷ்டையானாள்: அப்படியேயாயிற்று இவனும் இவைபெற்றபின்பு. ஸம்ஸாரி, முக்தனானால் அவனுடைய லீலோபகரணமும் போகோபகரணமும் ஸமமாய்த் தோற்றக்கடவது; ஆகாராந்தரமான ஸ்ம்ருதியில்லையே: ததீயத்வாகாரத்தாலே நித்யவிபூதியோடொக்கத் தோற்றுமித்தனை; அப்படியே இவளுடைய லீலோபகரணமும் போகோபகரணமாய்த்தோற்றக்கடவது. அவற்றிலே அவன் பண்ணும் வ்யாமோஹத்தைக்கண்டார்கள். "நம்மைப்பிரிந்தபின்பு ஸத்தையோடே குறியழியாமே யிருக்கக்கடவ இவன் இவையெல்லாம் நம்மையுத்தேசித்துச் செய்கிறுகைக்கூடாது; இங்ஙனே யாகவேணும்:—"நம்மைப் பிரிந்தபின்பு போய்ச் சிலரோடே கலந்தான்; அவர்களையும் பிரிந்தான்; அவ்வாற்றாமையோடே இங்குவந்தான்; இவற்றை 'அவர்களுடைய லீலோபகரணமாயிருக்கும்' என்று ப்ரமித்தானித்தனை, இது நம்பக்கல் வ்யாமோஹமுடையனாய்ச் செய்கிறானல்லன்" என்றுகொண்டு, இவர்களிருக்க, அவனும் தன்னழகாலும் குணங்களாலும் தன் செல்லாமைகளாலும் தாழ்ச்சிகளாலும் இத்தலையில் ஊடலைத்தீர்த்து ஸம்ச்லேஷித்தபடி சொல்லுகிறது - இத்திருவாய்மொழி. இனி, இத் திருவாய்மொழிதன்னை, பூர்வாசார்யர்கள், பகவத் விஷயத்தில் ஸாபத்ந்யம் தோற்ற வார்த்தைசொல்லுகை சேஷத்வலக்ஷணமன்று, வளவேழுலகிற்படியாலே அயோக்யதாநுஸந்தாநம் பண்ணுகிறார்" என்று நிர்வஹிப்பர்கள். இத்தைப்பட்டர் கேட்டு, "என்சொன்னார்களானார்கள்! இவர்க்கு பகவத்விஷயத்திலுண்டான ருசிக்கு ப்ரகாசகம் இத்திருவாய்மொழியாயிருக்கும்: இதுக்கு வேறே பொருவழியிடுவதே! ஆனபின்பு இதுவே பொருளாமித்தனை" என்றருளிச்செய்தார். *ஹநிஷ்யாமி ஸபாந்தவம்* என்று மஹாராஜரோடே பெருமாளுக்குக் கிலாய்க்கைக்கும் உறவுண்டாயிற்றிறே.

மின்னிடைமடவார்கள்நின்னருள்சூடுவார் முன்புநானதஞ்சுவன்*
மன்னுடையிலங்கை அரண்காய்ந்தமாயவனே!*
உன்னுடையசுண்டாயம்நானறிவன் இனிஅதுகொண்டுசெய்வதென்?*
என்னுடையபந்துங்கழலும் தந்துபோகுநம்பி!* **(1)**

ஒ.—முதற்பாட்டில், இப்பிராட்டியும் தோழிமாரும் வாங்கமறந்து, அசேதநமாகையாலே தானாக இருக்கவும் அறியாத பந்தையும் கழலையும் தன்னுடைய ஜ்ஞாநத்ருஷ்டத்தாலே கண்டெடுத்துக்கொண்டு "க்ருஹீத்வா ப்ரேக்ஷமாணா ஸா" என்னும்படியாலே திருக்கண்களாலே யவற்றை நிரந்தரமாக நோக்கித் திருவுடம்பில் எங்கும் படும்படியணைத்துக்கொண்டு, இப்பிராட்டியை ஸ்பர்சிக்கப் பெறுமையாலுள்ள வ்யஸநமெல்லாந்தீரவிளைநீரடைத்துக்கொள்ளுகிறபடியைக்கண்டு, "இது நம்மோட்டை ஸ்நேஹத்தாலே பிறந்ததாகில் இத்தனைகாலம் தாழ்க்கக்கூடாதாகையாலே, மற்றும் சிலர்பக்கலிலே ஸ்நேஹத்தைப்பண்ணி அவர்களோடேகலந்து பிரிந்து பிரிவாற்றாமையாலே கலங்கி, நம்மை 'அவர்கள்' என்று ப்ரமித்து, நம்முடையபந்தையும்கழலையும் அவர்களினவாகக் கொண்டாசுவலிக்கிறான்" என்று நிருபித்து, அவனைக்குறித்து, உன்னை இப்படி கலங்கப்பண்ணவல்ல நிரவதிக ஸௌந்தர்யத்தையும் ஆத்மகுணத்தையுமுடையராய் "உன் அருள் சூடப்பிறந்தவர்கள் இத்தை அறியிற்செய்வதென் ?" என்ன, 'அவர்கள் அஸந்நிஹிதைகளன்றோ, காணும்படியெங்ஙனே ?" என்ன, "அவர்களோடு நீ கலந்து பரிமாறினபடியை அஸந்நிஹிதையாய் வைத்தே நான் எங்ஙனேயறிந்தபடி? அப்படியே யவர்களும் அறிவர்; ஆதலால் அவர்கள் காணச்செய்கிற செயலன்றோ இது" என்ன, "அங்ஙனேயானால் வருவதென் ?" என்ன, "தத்கடாக்ஷைகதாரகனாயிருக்கிற உன்னை அவர்கள் கடாக்ஷியாதொழிவரென்று அஞ்சாநின்றேன்" என்ன, "என்னோடு உனக்குஉறவுஇல்லையாகில் நீ அஞ்சுகிறதென்?" என்ன, "சிலர் அனர்த்தப்படக்கண்டால் 'ஐயோ' என்னும்போது உறவு வேணுமோ?" என்றுஇவள் அருளிச்செய்ய; "இப்படி அதிசங்கை பண்ணுகிறதென், எனக்கு வேறொரு ஸப்ருஹணீயவிஷயமுண்டோ?" உன்னுடைய கடாக்ஷமேயன்றோ எனக்கு தாரகம்" என்ன, "அது பொய்யிறே" என்ன, "என்னோடு பரிமாறுவார்திறத்தில் நான் பொய் செய்வதுண்டோ?" என்ன, "நீ யார்திறத்தில் மெய்செய்தாய்?" என்ன, "ஸ்ரீஜநகராஜன்திருமகளுக்காக ஏகதாரவ்ரதனும்

உன்னுதுறங்கா தொலிகடலேயூடறுத்துச்சென் றிலங்கையை யழித்தது பொய்யோ?'' என்ன, "அதுவும் அவளுக்கு ஸ்நேஹித்துச் செய்தாயல்லே; ஒருத்திக் கொருமெய் செய்யவே எல்லாரும் மெய்யனென்று உன்னைவிச்வஸித்து உனக்ககப்படுவரென்றுசெய்தாயத்தனை'' என்ன, "ஆகில், உன்னை அகப்படுத்துகைக்காக அச்செயல்களைச்செய்தாலோ?'' என்ன, "நான் அது வஞ்சனமென்னு மிடம் பண்டேயறிவன்: அத்தை இனி என்பக்கல் ஆவிஷ்கரித்து ப்ரயோஜனமில்லை; அபூர்வைகள் பக்க லிலே போ'' என்ன, போகாதே பின்னையும் பந்தையும்கழலையும்இவன்விரும்பப்புக கன்னை உன்னருள் சூடப் பிறந்த மின்னிடைமடவார்களாக ப்ரமித்து, என்னுடைய லீலோபகரணங்களையும் அவர்களின வாகக் கருதி இவற்றைக்கொண்டு ஆச்வஸிக்கிறாய்; இவை அவர்களுடையன அல்ல, என்னுடைய பந்தும்கழலும் இவை; இவற்றைத் தந்து அவர்கள் உன்னைஉபேக்ஷியாமே அவர்கள்இருந்த இடத்தேற ஏண்டெனப்போகு நம்பீ என்று எம்பெருமானை முகம்பாராதே இருந்து அருளிச்செய்கிறாள்,

இ.—முதற்பாட்டில், இவர்கள் மறைக்க மறந்து, அசேதநமாகையாலே இருப்க்கஅறியாத பந்தையும்கழலையுமெடுத்துக்கொண்டு "க்ருஹீத்வா ப்ரேக்ஷமாணு ஸா'' என்கிறபடியே இவற்றிலே பண்ணுகிற அத்யாதரத்தைக்கண்டு, "இவனுடன் வார்த்தை சொல்லாதே இருக்கிறதென்?'' என்று "இவை நீ நினைக்கிறவர்களுடையனவன்று காண்; எங்களுடையன காண்: இவற்றைத்தந்து, அவர்கள் உன்னை உபேக்ஷியாமே அவர்களிருந்த விடத்திலே போ'' என்கிறாள். [மின்னிடைமடவார்கள் நின்னருள் சூடுவார் முன்பு] - பந்திலும் கழலிலும் பண்ணுகிற அபிநிவேசத்தைக் கண்டு, "இது நம் பக்கல் ப்ரேமத்தாலே வந்ததாக மாட்டாது, வேறே சிலரோடே கலந்து பிரிந்து பிரிவாற்றாமையாலே கலங்கி, நம்மை அவர்களாக ப்ரமித்து பந்தையும் கழலையும் அவர்களினவாகக் கொண்டாச்வஸிக்கிறான்'' என்று பார்த்து, உன்னை இப்படி கலங்கப் பண்ணவல்லவழகையும் ஆத்மகுணத்தையுமுடையவர்கள்முன்பே இதென்ன கார்யம் செய்கிறாய் என்கிறாள். [மின்னிடை] - தேக குணத்துக்கு உபலக்ஷணம். [மடவார்கள்] - நாண், மடம், அச்சம், பயிர்ப்பு முதலானவை ஆத்ம குணங்களுக்கு உபலக்ஷணம், தன்னோடு கலக்கிறபோது "இதோரழகே ! இதோர் ஆத்ம குணமே!'' என்று கொண்டாடும்படியைக் கண்டு, "இவன் புக்கவிட மெங்கும் சொல்லும்படி இதுவிறே'' என்று கல்பித்துச் சொல்லுகிறாள். மடவார்களென்கிற பஹுவசனத்தாலே—ஒருவர்க்கு உற்றாளுயிராத பரபரப்பைச் சொல்லுகிறாள்.

"இதுவென்?, அவர்களார் ?'' என்ன, [நின்னருள் சூடுவார்] - உன்னுடைய ப்ரஸாதத்துக்குப் பாத்ரபூதைகள். எங்களை அவர்களாக ப்ரமித்து முன்னடிதோற்றுதபடி பண்ணினவர்கள்; அவர்கள் ஸந்நிதியிலே இதென்ன காரியம்செய்கிறாய். "இவள் விமுகையாகைதவிர்ந்து வார்த்தை சொல்லும வளானால், மற்றுள்ளது பார்த்துக் கொள்ளுகிறோம்'' என்று அத்தை இசைந்து. "அவர்களிங்குண்டோ?'' என்றான்; அவர்களோடு கலந்தபடியை அஸந்நிஹிதையான நானறிந்தபடி கண்டாயே; அப்படியேயவர்களும் அறிவர்கள் காண்; உன்னைப்போலே அங்யபரைகளோ அவர்கள்? செய்யாதொழியில் அத்தனை யல்லது செய்தது மறைக்க வொண்ணாதுகாண். "அங்ஙனேயானால் வருவதென்?'' என்ன; [நானதஞ்சுவன்] - "அஞ்சவேண்டுகிறதென்'' என்ன, "பசு கிணற்றிலே விழுந்தால், 'ஐயோ!' என்பாரில்லையோ?' அவர்கள் கடாக்ஷமேதாரகமாக இருக்கிற உன்பக்கலிலே வைமுக்யத்தைப் பண்ணுவர்கள். "அத்தால் வருவதென்'' என்ன, "நீ துடிப்புதி; அது நான் காண மாட்டேன்'. அவர்கள்பக்கல் முகம் பெறுதே நிற்கும் தடுமாற்றத்தை 'அது' என்கிறாள். "என்னோடு உறவில்லைபாகில் அஞ்சுகிறதென்?'' என்ன, "பராநர்த்தம் பொறுக்கமாட்டாதொழிகைக்கு உறவுவேணுமோ? உன்னைப்போலே பராநர்த்தமே போதுபோக்காக இருக்கிறவர்களோ நாங்கள் ?'' என்ன, "இப்படி அதிசங்கை பண்ணுகிறதென்? உன்னையொழிய வேறு சிலர் உண்டோ எனக்கு'' என்ன, "அதுபொய்யிறே'' என்ன, "நான் ஆர்திறத்திலே பொய்செய்தேன்'' என்ன, "நீ ஆர்திறத்திலே மெய்செய்தாய்'' என்ன;—[மன்னுடை இத்யாதி] - "ஏக தாரவ்ரதனுய் உன்னுதுறங்காதொலிகடலையூடறுத்துச்சென் றொருத்திக்காக இலங்கையையழித்தது பொய்யோ ?'' என்ன, அதுவும் "சினத்தினற்றென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கினியானை'' என்று, இளிம்பராயிருப்பார் அகப்படுகைக்காகச் செய்தாய் இத்தனை. [மன்னுடை இலங்கை] - ராவணபாலிதையான லங்கை. ஆரேனுக்கும் ரக்ஷிக்கலாம் அரணுடைய வூர்: வெளி நிலத்திலும் ரக்ஷிக்கவல்ல ராவணன். [அரண் காய்ந்த] - அவ்வரணையழித்து மூலையடியே வழிபோம்படி பண்ணினவன்.

[மாயவனே] - க்ருத்ரிமசேஷ்டிதங்களைப் பண்ணுமவனே! "அது சிலரை அகப்படுத்துகைக்குச் செய்த தாகில், உன்னை அகப்படுத்துகைக்கு ஆனாலோ" என்னில்;—[உன்னுடைய சுண்டாயம் நானறிவன்] - உன்னுடைய க்ருத்ரிமலீலையென்னுமிடம் நானறிவன். [இனி அது கொண்டு செய்வதென்] - நானறிந்த பின்பு அத்தை முன்னிட்டு என் பக்கல் ப்ரயோஜநமில்லை; அபூர்வைகள் பக்கலிலே போவென்ன, "கைப்பட்டத்தைச் செய்யளாவதில்லையிறே" என்று பந்தையும் கழலையுங்கொண்டு, "போகிறோம்" என்று போகப்புக்கான்; [என்னுடைய பந்துங்கழலும்] - இவை யாரதாக நினைத்துக்கொண்டு போகிறாய்? நீ நினைக்கிறவர்களதல்ல காண்; என்னுடையபந்தும் கழலும்கிடாய்; "ஸ்வரூபத்தைப் பார்த்தாலும் மமகாரம் த்யாஜ்யம்; "த்வ்யக்ஷரஸ்து பவேந்ம்ருத்யு:" என்கிறபடியே; ப்ரணயதாரையில் வந்தாலும் 'உன்னது' என்னது' என்கைக்கு மேலில்லை உறவறுதிக்கு; தானே பொகட்டுப்போம்" என்று 'என்னுடைய' என்கிறாள். அவனும் "யஸ்யைதே தஸ்ய தத்தநம்" அன்றோ? ஸ்வரூபஜ்ஞாநமுடைய உன்னுடைய மகார விஷயம் அடங்கலும் 'என்னதன்றோ' என்று போகத்தொடங்கினான்; [தந்து போகு] - "உயிரை வைத்துப்போ" என்பாரைப்போலே. "அவன் மாட்டான்" என்று அறிந்து மர்மஜ்ஞையாகையாலே 'தந்து போகு' என்கிறாள். "இவர்கள் தொட்டவைந்தது" என்றிறே அவன் ஆதரிக்கிறது; இவளும் அவன் தொட்டவைந்தவற்றைக் கொண்டு தரித்துக் கிடக்கைக்காக 'தந்து போகு' என்கிறாள். "நான் தருவேனோ? இவையொழிய எனக்குச் செல்லுமோ?" என்றான். [நம்பீ] - முதலிகளன்றோ; உமக்குப் புக்கவிடம் எங்கும் பந்தும் கழலும் அன்றோ, "ஷோடச ஸ்த்ரீஸஹஸ்ராணி" என்கிறபடியே அபிமத விஷயங்களொன்றிரண்டோ? நடக்கலாகாதோ? சப்தத்துக்குப்பொருள் சொல்லுகையன்றிக்கே, உக்திப்ரத்யுக்தியாலே நினைவைச்சொல்லுகிற இதுவிறே இத்திருவாய்மொழிக்குக் கருத்து, திருப்பாவைக்கு "எல்லேயிளங்கிளியே" என்கிற பாட்டுப்போலே, இத்திருவாய்மொழியும் பாவப்ரதாநமென்னும் இடத்தைக் காட்டுகிறதாயிற்று.

ஈடு.—முதற்பாட்டு. இப்படி வரவுதாழ்த்ததும் இத்தலையை ஒழியச்செல்லுவதாயன்றிறே; கடுக வந்துகொண்டு நின்றான், பந்தையும் கழலையும் எடுத்துக்கொண்டான், அலப்யலாபமென்று தோற்றும்படி நின்றான், இத்தலையில் பண்ணக்கடவ வ்யாமோஹம் அடங்கலும் இவற்றின்பக்கலிலே பண்ணினான். அவன்படுகிற அலமாப்பைக் கண்டு, "இவையெல்லாம் நம்மைக்குறித்துச் செய்கிறானல்லன், தான் கலந்துபிரிந்தவர்களுடைய உபகரணங்களாகக் கொண்டு செய்கிறான் இத்தனை; இவனுடன் வார்த்தை சொல்லாதே இருக்கிறதென்" என்று, "வாராய்! நீ நினைக்கிறவர்களது அன்றுகாண் இவை; உனக்கு உபேக்ஷாவிஷயமான எங்களது காண் இவை, இவற்றைத்தந்து அவர்கள்பக்கலிலேறப்போ" என்ன,

"ஓம், அது செய்கிறேன், [இங்ஙனே] - காரைச்சுமந்ததொரு மின் நின்றதி!" என்ன [மின்னிடைமடவார்கள்] என்கிறார்கள் - "அவர்கள் பாடேறப்போகிறவன் இடையிலே இதொன்றைச் சொன்னான், அதுதான் நிலைநில்லாது" என்று பார்த்து "வாராய்! நீ உபேக்ஷித்ததொரு விஷயத்திலே இத்தனை கால் தாழ்ந்தால், உன்னை விரும்பியிருப்பார் அநேகராகையாலே போரநெருக்குண்புதி கிடாய். அவர்கள்தங்கள்படி இருந்தபடியென்தான்? இதொரு தேஹகுணமும் ஆத்மகுணமும் இருக்கும்படியே! [மின்னிடை] - மற்றும் தேஹகுணத்துக்கு உபலக்ஷணம். [மடவார்கள்] இது - நாண், மடம், அச்சம், பயிர்ப்பு முதலான ஆத்மகுணங்களுக்கும் உபலக்ஷணம். மடவாரென்கிற பஹுவசநத்தாலே - ஒருவர்க்கு உற்றாறுபிராமை சொல்லுகிறது. நீ அதஸ்மிம்ஸ்தத்புத்தி பண்ணும்படி பண்ணுவிப்பதே அவர்கள் சிலர். இவனுடைய அலமாப்பைக்கொண்டே அவர்களுடைய வைலக்ஷண்யத்தை அநுமிக்கிறாளிறே. பாவியேன், உன்னை இங்ஙனே இடையிலே பிச்சேறித் துடிக்கப் பண்ணினார் ஆரோ? [மின்னிடை மடவார்கள்] - இவனோடு ஸம்பந்தமுடையாருடைய தேஹ குணங்களையும் ஆத்மகுணங்களையும் சுபாச்ரயமாக நினைத்திருந்தபடி. தோற்ற வார்த்தை சொன்னபடியென் தான்! ப்ரணயரோஷம் புறவாயிலே செல்லா நிற்கச்செய்தேயும், அகவாயில் நினைவு இதிறே. அகவாயிலும் த்வேஷமேயானாலும் வஸ்து இருந்தபடி சொல்லவேணுமே; த்வேஷததாலே சொல்லுமன்றும் *தருணௌ ரூபஸம்பந்நௌ* என்றல்லது சொல்லவொண்ணாதே. [மின்னிடைமடவார்கள்] - தங்கள்பாடு கிட்டினால், "இதோரிடையே! இதொருகுணமே!" என்று அவனுமங்

கால்படும் துறையறியுமே, "அப்படியேயிறே இவன் போனவிடத்திலும்" என்றிருக்கிறார்கள். இங்ஙனன்றாகில் எதிர்த்தலையைக்கண்டு சொல்லுகிறானன்றே. இப்படி இருப்பாருமுண்டோ புறம்பே என்ன, [நின்னருள் சூடுவார்] - உன்னுடைய ப்ரஸாதத்துக்குப் பாத்ரபூதைகளாயிருப்பார். இவ்வளவில் "உன் தலையிலே கால் வைக்கப்பிறந்தார்" என்று சொல்லவிறே அடுப்பது; அங்ஙன் சொல்லுமன்று; அது அவனுக்கு இடமாமே: அதாவது - இவன்காலைத் தன் தலையிலே எடுத்து வைத்துக்கொள்ளுமென்கை. உறவு தோற்றாமல் இருக்கிறவள் அங்ஙன் சொல்லாளிறே. பாவபந்தம் அடியாகவந்த கலவியாகையாலும், நினைவும் அத்தலையாலே வந்ததாகையாலும், அவன் வார்த்தையாக நடுவொன்றில்லையேயாகிலும் இடையீடுபொறுக்கக்கடவது. ஆனாலென்? அவர்களிங்கு இல்லையே. யென்றான். [முன்பு] - எங்களை அவர்களாகநினை. நாங்கள்காண் அவர்களென்கிறாள். "அவையெல்லாமிங்கேயிறே" என்னவேண்டியிருக்க, தனக்கு வேறே சிலர் உண்டாகச் சொல்லுவானேன்? என்னில்; பலகேட்க நினைத்திருக்கிறவன் ஒரு வார்த்தையோடே தலைக்கட்டானே; இட்டீடுகொள்ளுகையிறே இவன்தனக்கு தாரகம். [முன்பு] - நீ செய்யுமவையெல்லாம் மறைக்கப்போகாதுகாண். நீ அங்குச் செய்தவை எல்லாம் கண்டாயே நாங்கள் அறிந்தபடி; இப்படியே, நீ இங்குச் செய்யுமவையெல்லாம் அவர்கள் அறிவர்கள் காண். அவர்களுக்கு உன்னைப்போலே வேறு அந்யபரதை இல்லைகாண். உன்னைப்போலே நினையாதே கொள்ளாய் அவர்களை. உன்னைக்கலந்து பிரிந்தார் உன்னை ஸாக்ஷாத்கரித்தபடியே இருப்பர்கள்காண்; "பிரிந்தொன்றுநோக்காது தம்முடைய பின்னே திரிந்துழலும் சிந்தனையார்" என்றிறே இருப்பது. அவர்களுக்கு வேறு விஷயமில்லாமையாலே ஸர்வகாலத்துக்கும் ஸ்ம்ருதிவிஷயம் நீயேகாண். ஆனாலென்? உங்களுக்கு என்னோடொரு ஸம்பந்தமில்லையானபின்பு அத்தால் வருவதொன்றில்லையே? என்றான்: [கானதஞ்சுவன்] - உன்னைப்போல் அல்லோம்காண் நாங்கள். நீ இங்கே சிறிதுபோது கால் தாழ்த்துப் போனால், அவர்களுன்னை அரைக்ஷணம் முகம்மாறினால் நீ பொறுக்கமாட்டாமல் கிடந்து துடிக்கும் துடிப்பு நான் காணமாட்டேன்; கலந்து பிரிய வல்லாயும் துடிப்புக்காணவல்லாயும் நீயேகாண். பராநர்த்தங் கண்டால் பொறுக்க மாட்டோங்காண் நாங்கள். உன்னோடு உறவு இல்லையேயாகிலும் நீ படும் அலமாப்புக்கண்டால் பொறுக்க மாட்டோம்: சிலர் கிணற்றிலே விழுந்தால் ஒரு குரல் கூப்பிடும்போது உறவு வேணுமோ? அவர்கள்பக்கல் முகம்பெறுதேநிற்கும் தடுமாற்றத்தை 'ஆற்றேன்' என்கிறாள். அரைக்ஷணம் இத்தலையையொழிய ஜீவிக்கமாட்டாதே செல்லாமையையுடைய என்னைப் பொய்யனுக்கிப் புறம்பாக்கி வார்த்தை சொல்லுவதே! என்றான். [மன்னுடையிலங்கை யரண்காய்ந்த மாயவனே] - "என்தான்? நீ பொய்யனல்லையோ?" என்றாள். "நான் என்னோடு பரிமாறினாரில் இதுக்குமுன்பு ஆர்க்குப் பொய்செய்தேன்?" என்றான்; "நீதான் ஆர்க்கு மெய்செய்தாய்" என்றாள்; "என்தான், "உன்னை துறங்கா தொலிகடலைப்பூடறுந்து" என்று, ஏக தாரவ்ரதனாய்க் கொண்டு நான் பட்டதெல்லாம் பொய்யோ?" என்றான். "அதுதான் நீ வேண்டிச் செய்தாயோ? ஒரு துறையிலே ஒருமெய் பரிமாறுவிடில், நமக்கு மேல் உள்ளதெல்லாம் ஒரு தொகையில் அகப்படாதென்று செய்தாயத்தனையன்றோ? அபலைகளை அகப்படுத்திக்கொள்ள இட்ட வழியன்றோ?" [மன்னுடையிலங்கையரண்காய்ந்த] - நிலமிதிதானேதிரிகள் மன்னுன்னும்படியாய், அதுக்கு மேலே *லங்காம் ராவணபாலிதாம்* என்றுகொண்டு, எம்முங்கிடந்த முழுஞ்சுபோலே பையவுணர்ந்து நோக்குகிற ஊரையழியச்செய்த. [மன்னுடை] - மன்னனையுடைய. [மாயவன்] - க்ருத்ரிம வ்யாபாரத்தைஉடையவன். "அழகிது; ஒருமெய்யுமுண்டாகச் சொன்னுயே; அத்தை இங்கே செய்தேனுனோ? மேலுள்ளதும் எல்லாமாகைக்காக" என்றான். [உன்னுடைய சுண்டாயம் நானறிவன்] - அது உனக்குச் செய்யலாவது செவ்வேபரிமாறும் அவர்களோடுகாண்; நீ செய்திறவையெல்லாம் பண்டே எனக்கு ஜ்ஞாதங்காண்; நீ செய்கிறவையெல்லாம் "மெய்" என்றிருப்பாள் ஸ்ரீஜநகராஜன்திருமகள்காண்; உன்னுடைய க்ருத்ரிம லீலைகளெல்லாம் நானறிவன். சுண்டாயம் - ஸ்வார்த்தபரத்வம். அறிந்தென், அறியாவிடிலென்? ப்ரவ்ருத்தமாயிற்றே" என்றான்: [இனியதுகொண்டுசெய்வதென்] - "ஸாத்யமாயிற்று அதிறே" என்றான்: "ஸாத்யாம்சதத்துக்கு ஒருப்ரயோஜநம்கண்டிலோமீ" என்றாள். (அதாவது - நானறிந்தபின்பு உன்க்ருத்ரிமத்தை முன்னிட்டு என்பக்கல் ப்ரயோஜந

மில்லையென்கை.) அவனும் ஒன்றைநினைந்து, "ஆகில் எனக்கு ஸாத்யாம்சம்தான் இல்லையோ? என்றான்; (என்றவனந்தரத்தே கைப்பட்டபந்தையும் கழலையும் கொண்டுபோகப்புக்கான்) [என்னுடைய பந்தும்கழலும்] - கைப்பட்ட பந்தையும் கழலையும் போரவிரும்பப் புக்கான். "பாவியேன், நீ எங்கே செய்யக்கடவத்தை எங்கேசெய்கிறாய்? அவை நீ நினைக்கிறவர்களதன்று காண்: அவை என்னதுகாண்" என்றாள்: "அதுதான்மெய்யே" என்றான்: இவன்விருப்பத்துக்கு அதுதானேயிறே வேண்டுவது: *யஸ்யைதே தஸ்ய தத்தநம்* என்று மற்றையது அநந்தரத்தே வருமிறே. (அதாவது ஸ்வரூபஜ்ஞாநமுடைய உன்னுடைய மமகாரவிஷயம் அடங்கலும் என்னதன்றோ என்று போகத் தொடங்கினான்.) இனிப்ரவேசத்திலே, "முடியப்பார்க்கிறான்" என்று சொல்லிற்று ஒன்றுண்டு: அது - இப்பதத்திலே தோற்றுகிறது. அவன் ஸங்கதியிலே "என்னது" என்று சொல்லுகைக்கு மேற்பட்ட முடிவில்லையிறே; *த்வ்யக்ஷரஸ்து* *பவேந்ம்ருத்யு:* இறே; *மாமகா:பாண்டவாச்சைவ* - என்கிறவிடத்துக்குச் சிறியாத்தான் சொல்லும்படி - என்னுடையவர்களென்றும் பாண்டவர்களென்றும் பிரித்தான். அது இறே விநாச பர்யந்தம் ஆக்கிவிட்டது"என்று. இது தான் தத்த்வகதையே அன்று, ப்ரணயகோஷ்டியிலும்; கலவியிலேவந்தால் "உன்னது, என்னது" என்கையிறே உறவறுகையாவது. [என்னுடைய பந்துங்கழலும்] - *ஆத்மேத்யேவதுக்ருஹ்ணீயாத்* : என்கிறபடியே ஒன்றையொன்று உபாஸியாநிற்கச்செய்தே, தன்னை உபாஸித்ததென்று சொல்லலாம்படியிறே இரண்டு வஸ்துவுக்கும் ப்ரத்யாஸத்தி இருந்தபடி. ஸ்வரூபம் விசதமானால், "நான்" என்னவுமாய் "அடியேன்" என்னவுமாய்க்காணும் இருப்பது. [தந்துபோகுநம்பீ] - நீ இங்கே கால்தாழாநின்றாய்! இதுக்கொரு தாத்பர்யம் அறியாதே உன்னையுபேக்ஷிக்கத் தொடங்குவர்கள்: அதுக்கு முன்னே போ. [நம்பீ] - முகப்பழக்கமும் இன்றிக்கே இருந்தது: முதலியாருமாயிராநின்றீர்; கடுகப்போகப் பாரும். "கண்டகாட்சி புல்லெழுந்து போனபடியிறே இவள் இங்ஙன் சொல்லுகிறது" என்று பெரியமுதலியார் வார்த்தை. என்னுடைய பந்துங்கழலும் என்றவிடம் அவன் போகடுகைக்குச் சொன்னவார்த்தை. தந்துபோகு என்றவிடம் - அவன்விரும்பினவையொழியத் தனக்குச்செல்லாது என்னுமிடம் தோற்றுகிறது. [நம்பீ] - *ஷோடசஸ்த்ரீஸஹஸ்ராணி* என்று உமக்குப் போனவிடம்எங்கும் கொண்டாட்டத்தால் குறையில்லை, எங்களுக்கு உம்மைக் கிடையாது: இனி உம்முடைய கரஸ்பர்சம் உண்டாய்ப் போகட்டவை கொண்டாகிலும் எங்களுக்கு ஜீவித்துக்கிடக்கவேணும்; ஆனபின்பு அவற்றை எங்களுக்குத்தந்துப் போம். "உயிரைவைத்துபோம்" என்பாரைப் போலே. இவன் இவை கைவிட்டுப் போகமாட்டான் என்று அறிந்து, மர்மஜ்ஞையாகையாலே; தந்துபோ' என்கிறாள்.

போகுநம்பி!உன்தாமரைபுரைகண்ணிணையும் செவ்வாய்முறுவலும்*
ஆகுலங்கள்செய்ய அழிதற்கேநோற்றோமேயாம்*
தோகைமாமயிலார்கள்நின்னருள்சூடுவார் செவியோசைவைத்தெழ*
ஆகள்போகவிட்டுக் குழலூதுபோயிருந்தே. **(2)**

ஒ.—[போகுநம்பி] - இப்பிராட்டி "போகுநம்பீ" என்று முதல் சொன்ன வார்த்தையைக் கேட்டு, அவனும் "போவோம்" என்று சிறிது கிட்டவர, "உறவு உடையாரைப்போலே எங்களைத் தீண்டாதே கடக்கநில்லும்" என்ன, தன்னைக்கிட்டவேண்டா . என்றுஇவள்நிஷேதித்த நிஷேதவசனத்தைக்கேட்டு, கமர்பிளந்தவிடத்திலே ஒருபாட்டம் மழைவிழுந்தாப்போலே இவனுக்குத் திருக்கண்களிலும் திருப்பவளத்திலும் பிறந்த புதுக்கணிப்பைக்கண்டு அவர்கள் ஈடுபட, அத்தைக்கண்டு "ஈடுபடா நின்றுவைத்து, என்னோடு உறவில்லை என்கிறபடி எங்ஙனே ?" என்றுஅவன் அருளிச்செய்ய, "நாங்கள் உன் அழகைக்கண்டால் ஈடுபட்டுஸம்ச்லேஷிக்கும்உறவுஉடையவர்களல்லோம்; உன்னழகைக் கண்டு ஈடுபட்டு சிதிலைகளாய்ப்போகப் பிறந்தோமித்தனை" என்று பராங்முகிகளாய் நிற்க, எம்பெருமானும் "நீங்கள் ஆரானலாகிறீர்; இதொரு மயிர்முடியிருந்தபடியென் ?" என்ன, "போலியைக்

கண்டு ப்ரமிக்கும்படி உன்னை இப்படிப் பிச்சேற்றும் மயிர்முடியை உடையராய் உனக்கு ஸத்ருசைகளா யிருக்கும் அவர்களோடேபோய் ஸம்ச்லேஷி'' என்ன, ''அவர்களைச் சந்திக்கவல்ல விரகுபெறுந் தனையும் இங்ஙனே யிருக்கிறோம்'' என்ன, ''நீ உனக்கு அபிமதைகளாயிருக்கிறவர்களை விச்லேஷித்து நோவுபட்டிராதே அவர்களோடே ஸம்ச்லேஷிக்கைக்கு உபாயஞ்சொல்லக்கேளாய்; 'அதென்?' என்னில், குழலை ஊதி அக்குழலோசைவழியே அவர்களையடைய மெய்க்காட்டுக்கொண்டு அவர்களோடே ஸம்ச்லேஷி'' என்ன, அவனும், ''பெண்களையழைக்கைக்குக் குழலூதுகிறான்' என்பர்; அது ஈடன்று'' என்ன, ''நீ மேய்க்கிற பசுக்களைக்கடக்கவிட்டு அவற்றை அழைக்கிறாயாகப் பெண்களெல்லாம்வந்து திரளுகைக்கு நீர்வாய்ப்பான நிலங்களிலேபோய் இருந்து குழலூதி அவ்வழியாலே அவர்களையழைத்து அவர்களோடே ஸம்ச்லேஷி'' என்கிறாள்.

இ.—இரண்டாம்பாட்டில், ''தந்துபோகு நம்பீ!'' என்றாள்: அவனும் 'போவோம்' என்று கிட்டவர நின்றான்: ப்ரணயதாரையில் வ்யவஹாரமும் ப்ரதிபத்தியும் வ்யுத்பத்திவேணுமிற்போலன்றிறே; இயலறியும் அவனாகையாலே, ''வார்த்தை சொல்லோம்'' என்றிருந்தவள் வார்த்தைசொல்லக்கடவளாய் 'போ' என்றாளாகில், இனிச்செய்வதென் ?'' என்று வர நின்றான். [போகுநம்பீ] - என்கிறாள். நீர் பரப்பராய் முதலிகளாயிருப்புதிர்; உறவு உடையாரைப்போலே தீண்டாதேபோம், எத்தனைபேரைத் தீண்டினீரென்று அறியோம்; எங்கள்மேல் புடைவைபடாமே போம்: முற்பட ''போகுநம்பீ'' என்றவாறே வரநின்றான், பின்பு ''போகுநம்பீ'' என்றவாறே தொட்டான். [உன் தாமரைபுரை கண்ணிணையும் செவ்வாய்முறுவலும்] - இவளுடைய அம்ருதோபமமான நிஷேதவசனம் கேட்டவாறே, ஒரு நீர்ச்சாவியிலே ஒருபாட்டம் மழை விழுந்தாப்போலே அவயவங்கள் விக்ருதமாயிற்றின. ''ஸ மஹாத்மா ஸுதுர்லப:'' என்றுகிட்ட உபேக்ஷிக்கக் கிடையாத ஸம்ஸாரத்திலே இவ்வளவு அவகாஹித்து ப்ரணயரோஷத்தாலே ''போ'' என்பாரைப் பெற்றால் விக்ருதனாகச் சொல்லவேணுமோ? [தாமரைபுரை கண்ணிணையும்] - விகாஸம், செவ்வி, குளிர்த்தி, பரிமளம் இவற்றை உடைத்தாகை. [செவ்வாய்முறுவலும்] - ஹர்ஷத்துக்குப் போக்குவிட்டு அதரத்தில் பழுப்பெறித்துத் தோற்ற ஸ்மிதம்பண்ணி நின்றநிலை. [ஆகுலங்கள்செய்ய வழிதற்கே நோற்றோமேயாம்] - இவளுடையநிஷேதவசனத்தாலேஅவனுக்குப்பிறந்தவிகாரம் இவர்களுக்கு ஈடுபடுகைக்கு உறுப்பாயிற்று. அவனுக்கு ஒன்றிரண்டு அவயவமாயிற்று விக்ருதமாயிற்று; இவர்களுக்கு ஸர்வாவயவங்களும் சிதில்மாயிற்று; அணு அழிக்குமாபோலன்றிறே விபு அழிக்குமது. ''போகுநம்பீ'' என்று உறவற்ற வார்த்தைக்கும், ''அழிதற்கே நோற்றோமேயாம்'' என்கிறவிதுக்கும் ஒருசேர்த்தி இல்லையீ! என்ன, [நோற்றோமேயாம்] - ''உன்னழகைக்கண்டு ஈடுபட்டு ஸம்ச்லேஷிக்கும்உறவுஉடையவர்கள் அல்லோம் நாங்கள்; இங்ஙனே அழிந்து போம்படி பாபத்தைப்பண்ணினார் சிலர்காண்! பிரிவு கலவிக்கு உறுப்பாமவர்களன்று; ஆற்றாமையோடே முடிந்துபோவார் சிலர்காண்! ''அத்ரோபவிச்ய ஸா தேந காஃபி புஷ்பைரலங்க்ருதா'' என்னுமவர்களல்லோம்; ''ஸ்வக்ருதம் ஹ்யுபபுஜ்யதே'' என்று முடிந்து போமவர்கள்'' என்று தாங்களழிந்தபடி நேராக அவனறியாதபடி முகத்தைத் திரியவைத்து நின்றார்கள். அதுதான் அவன்பாக்யபலமாயிற்று; பெருக்காற்றை எதிர்செறிப்பாரைப்போலே கண்ணுங் கண்ணீரும் பேணாத வடிவும் கண்டால் இவன் ஆற்றமாட்டானே; ''கிமர்த்தம் தவ நேத்ராப்யாம்'' என்று - கண்டார்க்கு ஆற்றவொண்ணாதவிருப்பை இவன்தானே கண்டால் பாடாற்றவல்லனோ? [தோகைமாமயிலார்கள்] - ''இதொருமயிர்முடி இருக்கும்படியே!'' என்றான்; நீ போலி கண்டு ப்ரமிக்கும்படி மயிர்முடி உடையார்ஆரோ? ''அங்ஙனே சிலருண்டோ ?'' என்ன, [நின்னருள்சூடுவார்] - உன்னோடே ஸம்ச்லேஷித்துப் பிரிவிலே இப்படி பிச்சேறும்படி பண்ணினவர்கள். ''அவர்களைப் பிரிந்து நோவுபடாதே அவர்களோடே ஸம்ச்லேஷி'' என்ன, ''அவர்களைக்கிட்டுமளவும் இங்ஙனே இருக்கிறேன்'' என்று திகைத்திருந்தான்; ''அவர்களோடேகிட்டும் விரகென்?' என்றிருக்கிறாயாகில், அவர்களைக்கிட்டும் விரகு சொல்லுகிறேன், கேள்'' என்ன, ''அதெது?'' என்ன - [செவியோசை வைத்தெழ குழலூது] ''எங்களுக்கே ஒருநாள்வந்து ஊத உன்குழல் இன்னிசை போதராதே. என்று குழல்ஊதுகை என்ன, பெண்களோட்டைக் கலவி என்ன-பர்யாயம், அது ஈடன்று'' என்ன, அதுக்கு உபாயம் சொல்லுகிறோம்:-[ஆகள்போகவிட்டுக்குழல்ஊது]-பசுக்களைக் கைகழியவிட்டுக் குழல் ஊது, கண்டார்க்குப் பசுமறிக்கக் குழல்ஊதுகிறாயாய், அதுக்கு ஸ்வாபதேசம் - பெண்களை அழைக்கையாக ஊது. ''செவியோசை வைத்தெழுகை ப்பலமாய், குழல்ஊதுகை உபாயமாயிருந்தது: அதுதான் அபிமத விஷத்தைப்பற்றவன்றோ செய்வது; இங்கே இருந்து ஊதுகிறேன்'' என்று குழலை

வாங்கி ஊதினான். [போயிருந்தே - குழலூது] - ஒன்றைச்சொல்ல ஒன்றைச்செய்கிறதென்? உனக்கு அபிமதைகள் திரளுகைக்கு நீர்வாய்ப்பான நிலங்களிலேபோயிருந்து ஊதாய்.

ஈடு.—இரண்டாம்பாட்டு. நோக்குப்பெறாதவன் முகம்பார்க்கப்பெற்றான்; வார்த்தை கேட்கப் பெறாதவன் 'போ' என்னவும் பெற்றான்; இனி இதுக்கு மேற்பட க்ருதார்த்தனாகை இல்லையிறே; 'போ' என்றால் அவ்வார்த்தையேயன்றிறே இவன் புத்தி பண்ணுவது; அதில் அகவாயில் ஓடுகிறதும் அறியுமவனிறே. "இன்னம் என் கையகத்தீங்கு ஒருநாள் வருதியேல் என்சினம் தீர்வனானே" என்று இத்தை உய்ந்தபிள்ளை பாடாமிற்கச்செய்தே, காலாலே உதைப்பது கையாலே தள்ளுவதாய் அபிநயித்துக்காட்டினார்; இத்தை எம்பார் கேட்டருளி, "அங்ஙனன்று; அதுபின்னைப் பெற்றானாகில் அவன் நெடுநாள் ப்ரார்த்தித்துக் கிடந்ததன்றோ; ஆன பின்பு அதன்று பொருள்" என்று முகத்தைத் திரியவைத்துக் காட்டினார். "நீயகலன்று பண்ணினவை எல்லாம் உன்ஸந்நிதியிலே உன்னைப்பண்ணுவேன் என்கிறாள்" என்று அருளிச்செய்தார். எம்பார் தாம் பாஹ்யவிஷயங்களில் ருசி இல்லாமையாலே பதார்த்தஜ்ஞாநம் இன்றிக்கே இருப்பர்; இப்படி இருக்கையாலே "'ஸ்த்ரீகளுக்கு அஸாதாரணமான சிஹ்நங்களெங்ஙனேயிருக்கும்படி?' என்றுசிங்கப்பிரானைக் கேட்டருளினார்" என்று ப்ரஸித்தமாயிருக்கும்; இப்படி இருக்கிறவர்தாம் 'மின்னிடைமடவார்' அருளிச்செய்யப்புக்கால், "இந்த ஸந்யாஸி பிரட்டுப் பாடத்தொடங்கினார்" என்பராம் பிள்ளையுறங்காவில்லிதாஸர். இவருடைய பகவத்விஷயத்தில் அவகாஹநம் இருக்கும்படி! ஒருக்ஷுத்ரவிஷயத்திலே நாலுநாள் வாசனை பண்ணினார்கள் போரவிதக்தராய் இராநின்றார்கள், அவ்வளவு அல்லவிறே ஸமஸ்தகல்யாணகுணாத்மகனோடே நெடுநாள் பண்ணினார்க்கு இருக்கும்படி. எம்பார் "(ஈச்வரன் முன்னேவந்து நின்றாலும்) 'வா' என் என்பாரையும் கிடையாத ஸம்ஸாரத்திலே, (அவனல்பம்தாழ்த்தானென்னா) 'போ' என்பாரைப் பெறுவதே!" என்பர்.

[போகுநம்பீ] - "போகுநம்பீ" என்று முன்பே சொல்லச்செய்தே, திரியவும் சொல்லும் போது ஒன்றிரண்டடி வரவிட்டுக் கிட்ட நின்றானாகவேணுமிறே. வாரீர்! எத்தனைபேரைத் தீண்டிவந்தீரென்று தெரியாது; புடைவைபடாமே கடக்கநில்லும் என்றாள். "போ" என்ன வரநிற்கக்கடவன், "தீண்டாதேகொள்ளும்" என்றால்என்படுமோ? [நம்பீ] - எளியார் செய்வதை நீர் செய்யக்கடவீரோ' நீர் நிரபேக்ஷரன்றோ? [நம்பீ] - எங்கள்பக்கலில் இப்படி கால் தாழ்க்க நீரேதேனும் குறைவாளரோ?நாங்கள் வேண்டியிருந்ததோ உமக்கு? "உயிரினாற்குறைவிலம்" என்று ஏறாளுமிறையோனிலே, தம்மை அழிக்கப்பார்த்தார்; அது அவனுண்டாகையாலே அழிந்ததில்லை; மாசறு சோதியிலே - அதுக்கடியான அவன்தன்னை அழிக்கப் பார்த்தார்; இங்கு - அவன்வரக்கொள்ள "போ" என்னா நின்றார், இதுக்கடி என்னென்று அறிகிறிலோம். இவர்கள் இப்படி [நம்பீ] என்று சொல்லி இருக்கையாவது - இக்கோஷ்டிக்கு அநர்ஹனாகையிறே. தாழ்ச்சியே மேன்மை யாமிடத்தில் முதன்மை கொண்டாடுகை போராதே. [உன்தாமரைபுரைகண்ணிணையும் செவ்வாய் முறுவலும்] - காணப்பெறாதே விடாய்த்து உருவின கண்களும், கண்டு செவ்விபெற்றுக் குளிர்ந்தன; அகவாயில் ஹர்ஷத்துக்குப் போக்காக ஸ்மிதம் பண்ணவும் பெற்றான். இவர்கள் நிஷேதவசனமாகிற அம்ருதபாநத்தாலே அவனுக்குபிறந்த வேறுபாடு இருக்கிறபடி. "வா" என்பாரையும்கூடக் கிடையாத ஸம்ஸாரத்திலே "போ" என்பாரைக் கிடையாதிறே. ஒருப்ரயோஜநத்துக்காகவும் தன்னைவேண்டுவார் இன்றிக்கே இருக்கிறவிடத்தே, தன்னையே ப்ரயோஜநமாகப்பற்றி இப்படிப் படுவாரைக் கிடையாதிறே. [ஆகுலங்கள்செய்ய] - ஆகுலம் - பூசலும் வருத்தமும், து:க்கமும். ஹேது இரண்டாயிருக்கச்செய்தே, ஸர்வகரணங்களும் அழியாநின்றது. அவனுக்கு ஒன்றிரண்டாயிற்று விக்ருதமாயிற்று; இவர்களுக்கு ஸர்வாவயவங்களும் விக்ருதமாயிற்று. அணு அழிக்குமாபோலன்றிறே விபு அழிப்பது. "வாரீகோள்! உங்களுக்கென்னோடு ஒன்றில்லை என்னாநின்றிகோள்; பாவபந்தம் உடையாரைப்போலே வார்த்தை சொல்லாநின்றிகோள்: வ்யாஹதமாயிருந்ததே! 'போகுநம்பீ' என்னாநின்றிகோள்: 'ஆகுலங்கள் செய்ய' என்னாநின்றிகோள்; இதுக்கடியென்?" என்றான். "வாராய்! நாங்கள்தாம் பாவபந்த

றுண்டாய்ச் செய்கிறோம் என்றிருக்கிறோமோ? சந்த்ரதர்சநத்தில் சந்த்ரகாந்தம்உருகுகிறது என்ன பாவபந்தமுண்டாய்? *அவச்யமநுபோக்தவ்யம்* என்கிற விதியைத் தப்பவொண்ணுமோ? [அழிதற்கே நோற்றோமேயாம்] - எங்களுக்கிது ப்ரக்ருதிகாண். இனிய பெருமான் காடேறப் போகாத அன்றன்றோ எங்களால் அழியா திருக்கலாவது? *ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய* இறே நோன்பாகிறது - பூர்வஜந்மத்தில் உள்ளதிறே. இவர்கள் இப்படி சொன்னவாறே, "அவ்வழிவு ஸம்ச்லேஷார்த்தமிறே" என்று பார்த்து, அவன், "நம் தர்சநத்திலே இத்தனை வேறுபாடு உண்டான பின்பு மேலுள்ளதெல்லாம் செய்துகொள்ளீர்கோளோ!" என்றான்; அதுவோ உன்நினைவு! நாங்கள் அவர்களல்லோம் காண்! நாங்கள் இங்ஙனே அழிந்தேபோக நோற்றோம்காண்! [யாம்] உன்னைப்பிரிந்தால் கலக்கைக்கு நோற்றார் வேறே சிலர் காணென்கிறாள். கெடும்போது இவர்கள் பேச்சுக்கேட்கையால் உண்டான ஹர்ஷத்தோற்றப் பார்த்துக்கொடு நின்றான்: "நம் தர்சநம் இவனுக்கு ஆச்வாஸஹேதுவாய் இருந்தது" என்று, முகத்தைமாறிப்பின்னேக்கி இருந்தாள்; அவ்வளவில் அவன்நெஞ்சிலே மயிர்பாடு உண்டாயிற்று. [தோகைமாமயிலார்கள்] - "நம் வைவர்ண்யமும் கண்ணநீரும் இவன் காண்பானல்லன்; தைவயோகத்தால் காணுமவற்றை நம்மால் செய்யலாவதில்லை யிறே" என்றுத் திரிய இருந்தாள்; அதுதானே இவனுக்குக் கார்யமாயிற்று. (பெருங்காற்றை எதிர்செறிப்பாரைப் போலே, கண்ணுங்கண்ணீரும், பேணுத வடிவுங்கண்டால் இவன் ஆற்றமாட்டானே.) முறுவலுக்கும் கண்ணுக்கும் இலக்காய் அழிந்து போகாதே, திரியவிருந்ததும் நின்று அநுபவிக்கைக்குடலாயிற்று. "நங்கார்யம் தலையாகப்போயிற்று" என்று இருக்கிறானிறே அவன். *ஊருப்யாமுதரம் ச்சாத்ய பாஹூப்யாஞ்ச பயோதரௌ* என்று கொண்டு 'அவனுடைமை ஆஸுரப்க்ருதிகள் காணவொண்ணாது' என்று மறைக்கக் கடவ அவள், "இவன்தான்காணவொண்ணாது" என்று மறைக்கும்படி காணும். ப்ரணயகோபம் தலைமண்டை இட்டபடி. [தோகைமாமயிலார்கள்] - *நீலநாகாபயா வேண்யா* என்று, பேணுத குழலிருக்கிறபடியைக் கண்டான்; "நீங்கள்முன்னமானுராகிடுக: இதொரு மயிர்முடி இருந்தபடி என்தான்!" என்றான். இவள்தான் ஓதிநல்லளாயிருக்குமே; இவன் கூழை ஆகையாலே கொண்டாடுமே. "குழல் கூழை ஓதி" இறே. (குழலென்றும் கூழையென்றும், ஓதியென்றும் மயிர்முடி. இறே.) எங்கள் மயிர்முடியைக்கண்டு தந்தாம் மயிர்முடிஎன்று ப்ரமிக்கும்படிபண்ணுவதே அவர்கள் சிலர்! அபிமதவிஷயத்தைப்பிரிந்தால் கண்டதெல்லாம் அதுவாய்த்தோற்றுமிறே என்றார்கள். தோகைவிரித்த நல்லமயில்போலே அலைந்தகுழலை உடையவர்கள். "அங்ஙனே சிலருண்டோ?" என்றான். [நின்னருள்சூடுவார்] - உன்னோடு ஸம்ச்லேஷித்துப் பிரிவிலே இப்படிப் பிச்சேறும்படிப் பண்ணினவர்கள். அவர்களைப்பிரிந்து நோவுபடாதே அவர்களோடே ஸம்ச்லேஷி. "ஆனாலதுக்கென்? அவர்களைப்பெறுகைக்கு ஒரு விரகு பெறுந்தனையும் நான் இங்ஙனே சற்றுப்போது இருந்துபோகிறேன்" என்றான்; உனக்கு இங்ஙன் விரகற்றுப் போகவேண்டுமோ? நீ கைகண்டத்தை ப்ரயோகி; "அதேது?" என்ன [செவியோசைவைத்தெழக் குழலூது] - 'எங்களுக்கே ஒருநாள் வந்தூத உன்குழலின்னிசை போதராதே" என்று இருக்குமவர்கள்; நீகுழலூதினால் அதுசென்று செவிப்படும்; அநந்தரத்தே வருவர்கள்காண். "ஸர்ப்பயாகத்தில் ஸர்ப்பங்கள் வந்துவிழுமாபோலே, நீ குழலூதவே பெண்களடங்கலும் உன்காற்கீழேவந்துவிழுங்காண்! "குழலோசைகேட்பது எப்போது?" என்று செவிகொடுத்துக்காண் அவர்களிருப்பது; உன்னைப்பிரிந்தார் ஸர்வகரணங்களும் உன் மேலே வைத்திருப்பார்கள்காண். "தூவலம்புரியுடையதிருமால் தூயவாயில் குழலோசை வழியே கோவலர்சிறுமியர் இளங்கொங்கை குதுகலிப்ப உடலுள்அவிழ்ந்தெங்கும் காலுங் கடந்து கயிறு மாலையாகிவந்து கவிழ்ந்துநின்றனர்" என்று நீ குழலூதப்புக்கால் நிற்பாருண்டோ? உன் காற்கீழேவந்து விழுவர்காண்! அத்தைச்செய் என்றான். "அதெனக்கொரு விரகன்று; 'கொங்கு நறுங்குழலார்களோடு குழைந்து குழல்இனிது ஊதிவந்தாய்' என்று ஒத்த தரத்தில் பெண்களுந்தானும் கலக்கைக்காக அவர்களை அழைத்துக் குழலூதாநின்றான் என்பர்கள்; நான் குழலூதுகை பெண்களையழைக்கையென்று ப்ரஸித்தம்; அதெனக்கிடன்று" என்றான்; ஆகில் உனக்கொரு நல்விரகு சொல்லக்கேள்: [ஆகன்போகவிட்டு] - பசுக்களைக்கைகழிய விடுவது, அநந்தரத்தே குழலையூதுவதாய்? "அறியாதார் பசுக்களை மறிக்கவூதினானென்றிருப்

பர்கள்; அதறிந்துபோரும் பெண்கள் உன்பக்கலிலே வந்துவிட்டுவர்கள். இதுதான் உனக்கு
ஜாத்யுசிதவ்ருத்தியுமிறே. நீங்குழலூதிற்றும் மிரைமேய்த்ததுமிறே. ஆனபின்பு அத்தைச்
செய்'' என்றான். ''அநுஷ்டேயமான உபாய ஸ்வரூபம் இருக்கும்படி அறிந்தோம்: அநுஷ்டடா
நப்ரகாரத்துக்கு ஈடான உபதேசம்பெற்றோம்; இனி உபேயாம்சத்தில் கைப்படாதது இல்லை;
இனி நமக்கொருகுறையில்லை'' என்றுபார்த்து, அவ்விடந்தன்னிலே இருந்து ஊதப்புக்கான்.
இனித்தான் வித்யதிக்ரமம் பண்ணுமவனன்றே; தோகைமாமயிலார்கள் - செவியோசை
வைத்தெழ'' என்றிறே இவர்கள்சொல்லிற்று; ''இன்னவிடத்தே'' என்றுசொல்லிற்றிலர்களே!
இங்கே இருந்தூதத்தொடங்கினான். ''அதுவோ பார்த்தபடி; நீ துடியாமைக்கு ஒருவிரகு
சொன்னோமாகில் அத்தை இங்கே கொள்ளப்பார்த்தாயோ?'' [குழலூதுபோயிருந்தே] உனக்குப்
பெண்கள் படும் வாய்ப்புள்ள இடங்களிலேபோயிருந்தூதப்பாராய்! [தோகைமாமயிலார்கள்]
இவன் ஓதி யுணர்ந்தவனாகையாலே கொண்டாடத் தொடங்கினான்; ''இவன் ஓதியுணராமலிறே
நங்குழலை இப்படிகொண்டாடுகிறது'' என்று, ''இது ப்ராமகவாக்யம்'' என்று அவர்கள் அங்
யதாகரிக்கிறார்கள். தலையானபேச்சையிறே இவர்கள் அங்யதாகரிக்கிறது. [செவியோசைவைத்
தெழ] - குழலோசையைச் செவியிலே வைத்துக்கொண்டுவர. [ஆகள்போகவிட்டுக்குழலூது] -
பசுக்களைப்போகவிட்டுக்குழலூது. ஊதவே, உன்னிலையும் முடிந்து பசுக்களின் வயிறும்
நிறையும். ''செவியோசை வைத்தெழுகை ப்பலமாய், குழலூதுகை உபாயமாயிருந்தது; அது
தான் அபிமதவிஷயத்தைப்பற்றியன்றோ செய்வது; இங்கே இருந்தூதுகிறேன்'' என்று
குழலைவாங்கி ஊதினான். [போயிருந்தே - குழலூது]ஒன்றைச் சொல்ல, ஒன்றைச்செய்யாதே;
உனக்க பிமதைகள் இரளுகைக்கு நீர்வாய்ப்புள்ள நிலங்களிலே போயிருந்தூதாய்.

போயிருந்துநின்புள்ளுவமறியாதவர்க்கு உரைநம்பீ!* நின்செய்ய
வாயிருங்கனியும்கண்களும் விபரீதமிந்நாள்*
வேயிருந்தடந்தோளினர் இத்திருவருள்பெறுவார்யவர்கொல்?*
மாயிருங்கடலைக்கடைந்த பெருமானாலே. (3)

ஓ.—[போயிருந்து] -''குழலூது போய்'' என்று என்னைச் சொல்லுவானேன் ? நான் ஜாத்யுசித
மான வ்ருத்தியாகையாலே குழல் ஊதுகிறேனித்தனைபோக்கி, வேறு சிலரை அழைக்கைக்காகவோ குழல்
ஊதுவது? நான் உன்னையல்லது அறிவேனோ?'' என்று அருளிச்செய்ய; ''உன்னுடையபொய் அறியும்
எங்கள்பக்கல் விலை செல்லாது. உன்பொய்யில் புதியதுஉண்டறியாத அபூர்வைகள்கோஷ்டியிலே
போய் இருந்து சொல்லு'' என்று பிராட்டி உபாலம்பிக்க, தன்னைக்குறித்து இவள் மென்மேலன
சொல்லுகிற அம்ருதோபமமான வார்த்தைகளைக் கேட்டதினாலே பிறந்த நிரவதிக ஹர்ஷப்ரகர்ஷத்
தாலே அத்யாச்சர்யமாம்படி திருக்கண்களிலும் திருப்பவளத்திலும் பிறந்த அழகைக்கண்டு, ''எங்களை
யாராகக் கருதிஇப்படி ஹ்ருஷ்டனாகிறாய் ?'' என்ன, ''நீங்கள் ஆரானால் ஆகிறீர்; இது ஒருதோளழகு
இருந்தபடி என் ?'' என்ன, அல்பஸாத்ருச்யத்தைக்கண்டு இவன் இப்படி ப்ரமிக்கும்படியான
தோளழகு உடையராய் அம்ருதமதந ஸமயத்தில் பெரிய பிராட்டியாரோடு ஸம்ச்லேஷித்தபோதும்
பிறவாத பௌஷ்கல்யத்தை இவனுக்குப்-பிறப்பித்து இப்படி இவனுக்கு ஸ்ப்ருஹணீயதமைகளாய்
இருக்கிறவர்கள் ஆரோ? என்கிறாள். அம்ருத மதநத்தில் தன்கையில் கடல்பட்டத்தை இவன்தன்னைப்
படுத்தினவர்கள் ஆரோ? என்றுமாம்.

இ.—மூன்றாம்பாட்டில், ''குழலூது போயிருந்து'' என்று என்னைச் சொல்லுகிறது என; சிலரை
அழைக்கைக்காகவோ குழல் ஊதுவது? ப்ராஹ்மணர்க்கு ஸந்த்யாவந்தநம்போலே ஜாத்யுசிதவ்ருத்தி
யன்றோ ?'' என்ன, ''இவ்வஸங்கத பாஷணங்களை இங்கே இருந்து சொல்லாதே, போ'' என்கிறாள்:—
[போயிருந்து நின்புள்ளுவம் அறியாதவர்க்குஉரை] - உன்பொய்யிலே பழகின எங்கள்பக்கல் உன்பொய்
யில் செல்லாது; இங்குநின்றும் போய், உன்பொய் அறியாதவர்கள்கோஷ்டியிலே இருந்து சொல்லு.
நிலைவுமொன்றும் சொலவுமொன்றுமான உன்னை அறியாதே ப்ரமிக்கைக்கு பஞ்ச லக்ஷங்குடியிற் பெண்

களுண்டே! [நம்பீ] - "நமக்கு அங்ஙனே சிலருண்டோ? நான் உன்னை ஒழிய அறிவேனோ?" என்ன, "உமக்கு அநேகர் அன்றோ! பூர்ணர் அல்லீரோ?" என்ன, தன்னைக்குறித்து இவள்சொல்லுகிற அம்ருதோபமமான வார்த்தையைக்கேட்டு விக்ருதனானான். [நின்செய்யவாயிருங்கனியுங் கண்களும் விபரீதமிந்நாள்] - பக்வபலம்போலே போக்யமாய்ச் சிவந்த அதரத்தையும், ப்ரேமத்தாலே குதறிச்சிவந்த திருக்கண்களையும் கொண்டு, என்னை யாராகப்ரமித்து ஹ்ருஷ்டனாகிறாய்? "உன்புள்ளுவம் அறியாதவர்க்குஉரை" என்ற ப்ரஸங்கத்திலே, நீ இப்படிபடும்படி யிருப்பதே! சிலர்! [விபரீதமிந்நாள்] - "நாங்கள் முன்பு ஒருநாளும் இச்செவ்வி கண்டறியோமீ!" என்ன;

"அவைகிடக்க, இதொருதோளழகு இருந்தபடிஎன்!" என்றான். [வேயிருந்தடந்தோளினார்] - 'பசுமைக்கும் செவ்வைக்கும் மூங்கில்போலேயாய் நீண்டு சுற்றுடைத்தாய் உன்னை இப்படி ப்ரமிக்கும்படி பண்ணின தோளழகை உடையார் ஆரோ?" என்ன, 'எனக்கு அப்படி இருப்பார்ஆர்?" என்ன; [இத்திருவருள் பெறுவார்] - ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனான உனக்கு அங்யதாஜ்ஞாநம் பிறக்கும்படி பண்ணினவர்கள். செய்யவாயிருங்கனியுமென்கிறவிடம் - அவன்பக்கல் இவர்களுக்குண்டான பாவபந்தம் சொல்லுகிறது. வேயிருந்தடந்தோளினார்என்கிறவிடம் அவனுக்கு இவர்கள்பக்கலுண்டான பாவபந்தம் சொல்லுகிறது. [யவர்கொல்] - உனக்கு இப்படி ஸ்ப்ருஹணீயதமைகளாயிருக்குமவர்கள் ஆரோ? இவன்பக்கல் ப்ரணயரோஷத்தாலே சொல்லுகிறார்கள்; தன்னைப் போக்கி இவனோடு கலந்தவர்களைத் தனக்கு உத்தேச்யர் என்றிறே இவர் இருப்பது. [மாயிருங்கடலைக்கடைந்த பெருமானாலே] - கடலைக் கடைந்து பிராட்டியை லபித்தபோதும் கண்டிலோமீ இச்செவ்வி! அகாதமாய்ப் பரந்தகடல் உன்கையிலே பட்ட பாட்டைத் தங்கள்கையிலே படும்படிபண்ணினார் ஆரோ ? என்னவுமாம். மந்தரம் நாட்டியன்று மதுரக்கொழுஞ்சாறு கொண்ட சுந்தரத்தோளுடையவுன்னை மறுகப்பண்ணின தோளழகையுடையார் ஆரோ? என்னவுமாம்.

ஈடு. —மூன்றாம்பாட்டு. "'குழலூதுபோயிருந்து' என்றிறே என்னைச் சொல்லுகிறது; உக்தமானதுதன்னை அநுஷ்டிக்குமத்தனையிறே. இனித்தான் 'உனக்குப் பெண்கள்படும் நீர்வாய்ப்புள்ள இடங்களிலே போயிருந்து ஊது' என்றிறே நீங்கள் சொல்லிற்று; அழகிது, இத்தனையிறே. நீர்வாய்ப்புள்ளவிடந்தான் எது? அத்தைச்சொல்லலாகாதோ?" என்று இரண்டடி உட்புகுரவிட்டு நற்றரிக்க இருந்து, குழலில் இனியபேச்சிலே கைவைத்தான். குழலோசை போலன்றிறே பேச்சில் இனிமை இருக்கும்படி! "நான் செய்தபடி செய்கிறேன், 'செவியோசை வைத்தெழ - குழலூது போயிருந்து' என்றுநீங்கள் சொன்னஇதுக்குக் கருத்து எனக்குப் போச்சுதில்லை; இதெனக்கு ஜாத்யுசிதவ்ருத்தி யன்றோ?" என்றான்.

[போயிருந்து நின்புள்ளுவம் அறியாதவர்க்குஉரை நம்பீ] - உன்பொய்யிலேபழகின எங்கள்பக்கல் உன்பொய் விலைசெல்லாது; இங்குநின்றும் போய் உன் பொய் அறியாதவர்கள் கோஷ்டியிலே இருந்துசொல்லு- நினைவொன்றும் சொலவொன்றுமான உன்னை அறியாதாரையும் கிடைக்குமிறே; பஞ்சலக்ஷங்குடியில் பெண்களுண்டாகைபாலே. உன்பொய்யை "மெய்" என்றிருக்கும் அவர்களுக்கன்றோ இதெல்லாம் சொல்லுவது? "பொய்கேட்டிருந்தேன்" என்று இருப்பாரையும் கிடைக்குமே. [நம்பீ] பூர்ணர் அல்லீரோ! உமக்கு எங்களைப்பெறுமல் இருந்தீரோ? தன்னைக்குறித்து இவர்கள்சொல்லுகிற அம்ருதோபமமான நிஷேதவசநங்கேட்டவாறே அவன்முகத்திலே ஓருல்லாஸம் பிறந்தது. [நின்செய்யவாயிருங்கனியும் கண்களும் விபரீதமிந்நாள்] (உன்னுடைய சிவந்த அதரமாகிற ச்லாக்யமான கனியும், பிறரையழிக்கையே ஸ்வபாவமாயிருக்கும் கண்களும் முன்புபோலே ஹ்ருத்யமாயிருக்கை அன்றிக்கே, இப்போது பாதகமாயிராநின்றது.) நாங்கள் இதுக்குமுன்பு ஒருநாளும் இச்செவ்வியும் வேறுபாடுங் கண்டறியோம்: இவையிருந்தபடி என்? என்றார்கள் "கழுத்துக்குமேலே ஒன்றைச் சொல்லுகிறீகோளித்தனையன்றோ! அது கிடக்கிடுங்கோள்: இதொரு தோளழகு இருந்தபடியென்" என்றான். [வேயிருந்தடந்தோளினார் இத்திருவருள் பெறுவார் யவர்கொல்] - ஆரேனும்தோளழகைக்கண்டு, தந்தாம் தோளழகென்று ப்ரமிக்கும்படிக்கு ஈடான தோளழகு உடையாராரோ ? (பசுமைக்கும் செவ்வைக்கும் மூங்கில் போலேயாய் நீண்டு

சுற்றுடைத்தான தோளையுடையவர்கள்.) [இத்திருவருள் பெறுவார் யவர் கொல்] - நீ இடந்து இப்படி துடிக்கும்படி பண்ணவல்லராவதே அவர்கள் சிலவர்! செய்யவாயிருங்கனியும் கண்களும் என்றவிடம் அவன்பக்கல் இவர்களுக்கு உண்டான பாவபந்தம் சொல்லுகிறது: வேயிருந்தடந்தோளினார் என்றவிடம் — இவனுக்கு அவர்கள்பக்கலுள்ள பாவபந்தம் சொல்லுகிறது. இவர்களுக்குத் தன்பக்கல் பாவபந்தம் நன்றாக அறிந்தான் அவன்: தங்கள்பக்கல் இவனுக்குண்டான பாவபந்தம் கைமேலே கண்டுவிட்டார் அவர்கள். [யவர்கொல்] - உனக்கு இப்படி ஸ்ப்ருஹணீயதமைகளாய் இருக்குமவர்களாரோ? இவன் பக்கல் ப்ரணயரோஷத்தாலே சொல்லுகிறளத்தனைபோக்கி, இவனோடு கலந்தாரைத் தனக்கு உத்தேச்யரென்றிறே இவளிருப்பது. [மாயிருங்கடலைக்கடைந்த பெருமானாலே - இத்திருவருள்பெறுவார்யவர் கொல்] - "மந்தரம் நாட்டி அன்று மதுரக்கொழுஞ்சாறு கொண்ட சுந்தரத்தோளுடையான்" என்று சொல்லுகிற தோளழகுடையவன் விரும்பும்படியான தோளழகு படைப்பதே! தன் தோளழகு கண்டு பெண் பிறந்தார் அடங்கலும் படும்பாட்டையடங்கலும் இவன் தன்னைப் படுத்தும்படியான தோளழகுடையார் உண்டாவதே! பெரியவன் கையிலே பெரியதுபட்டபாடு அடங்கலும் தங்கள் கையிலே இவன் படும்படி பண்ணவல்லராவதே! *வைகுண்ட்டதோர்ப்ரமிதமந்தரமூடபாதம்* என்று கொண்டு அது ஊமைக்கூறாகப் பட்டதெல்லாம் படுகையிறே. அன்றிக்கே, மந்தரத்தை நட்டுக் கடலைநெருக்கிக் கடைந்து பெரியபிராட்டியாரை லபித்தவன்றும் இவ்வேறுபாடு கண்டிலோமே! பழையாரைப் பெற்றாப்போலன்றிறே புதியாரைப் பெற்றால் இருக்கும்படி.

ஆலினிளிலையேழுலகுமுண்டு அன்றுநீகிடந்தாய் * உன்மாயங்கள்
மேலைவானவருமறியார் இனியெம்பரமே *
வேலினேர்தடங்கண்ணினார் விளையாடுசூழலைச்சூழவேநின்று *
காலிமேய்க்கவல்லாய் எம்மைநீகழறேலே. (4)

ஒ.—[ஆலினிளில] - "நாம் தாழ்கையிறே இவள்இப்படிநினைக்கைக்கு ஹேது" என்று பார்த்து, "நான் எனக்குஉரியேனோ? பசுக்களின்பின்னேபோகவேண்டாவோ? நினைத்தபடி வரலாயிருக்குமோ? பசுக்களுடைய ரக்ஷணார்த்தமாகப் போக வேண்டுகையாலே தாழ்த்தேனத்தனை; மற்று விளம்பஹேதுவில்லை" என்று அவன் அருளிச்செய்ய; எல்லா லோகங்களையும் திருவயிற்றிலேவைத்து வடதளத்திலே கண்வளர்ந்தருளுகையாகிற ஆச்சர்யசேஷ்டிதத்தை யுடைய உனக்கு "பசுமேய்க்கப் போனேன்' என்ற அஸத்யத்தை, கேட்டார்க்கு "ஸத்யம்" என்று தோற்றும்படி சொல்லுகை விஸ்மயமோ?" என்று இவள் அருளிச்செய்ய, "நான் பசுக்களைமேய்க்கப் போனமை அஸத்யமோ?" என்று அருளிச்செய்ய, "பெண்களுடைய நோக்கிலே அகப்பட்டு அவர்களைவிட்டுப் போகமாட்டாதே அவர்கள் விளையாடுகிற மணற்குன்றுகளிலே நின்றோ பசுமேய்ப்பது? இப்பொய்களை எங்களையொழியப் புறம்பேசொல்" என்கிறாள். பசுக்கள் மேய்க்கைக்கு ஸம்பாவனையில்லாத வேலினேர்தடங் கண்ணினார்விளையாடுகிற மணற்குன்றுகளிலே நின்று பசுக்களை வயிறு நிரம்பும்படி பண்ணவல்லன் என்று வடதளசயநம்போலே இருப்பதோர் ஆச்சர்யோதாஹரணம் சொல்லிற்றாகவுமாம்.

இ.—நாலாம்பாட்டில், "அரைக்ஷணம் தாழ்த்தோமென்று அஸங்கதபாஷணங்களைச் சொல்லுகிறதென்? நான் பரதந்த்ரன் அல்லேனோ? மாதாபிதாக்கள் 'போய்ப் பசுக்களைமேய்' என்று நியமித்தால் உங்கள் பக்கல் வரப்போமோ? இதொழிய, வேறுவிளம்பஹேதுவில்லை" என்ன, "அகடிதங்களைகடிப்பிக்கை நீவல்லதொன்று அன்றோ?" என்கிறாள். [ஆலினிளிலை யேழுலகுமுண்டு] - சிறுவடிவைக்கொண்டு ஸகல லோகங்களையும் திருவயிற்றிலேவைத்து ஒருபவனான ஆலந்தளிரிலே கண்வளர்ந்தாய். [நீளிலை] - "ஆலம்பேரிலை" என்னுமாபோலே விபரீத லக்ஷணையாய், சிற்றிலை என்றபடி. [அன்று] - வெறும் ப்ரளயமொழியப் பரிவருமின்றிக்கே இருந்த அன்று. இப்படி அகடிதங்களைச் செய்யவல்ல

உனக்கு ''பசு மேய்க்கப்போனேன்'' என்று இவ்வஸத்யத்தை, கேட்டார்க்கு ''ஸத்யம்'' என்னும்படி சொல்லுகை விஸ்மயமோ? ''நான் அரைக்ஷணம் தாழ்த்த கோபத்தாலே 'அஸத்யன்' என்றிகோள்; எல்லாரும் அறியாரோ என் அஸத்யம்!'' என்ன, [உன்மாயங்கள் மேலை வானவரும் அறியார்] - உன்னுடைய க்ருத்ரிமங்கள் ஆக்கனுன ப்ரஹ்மாதிகளே அன்றிக்கே, நித்யஸூரிகளும் அறியார்கள்: சூட்டுநன்மாலைகள் தூயனவேந்திக்கொடு நிற்கச்செய்தே, ஈட்டிய வெண்ணெய்தொடுவுண்ணப் போருமவனல்லையோ! பழையாரை விடுகை உனக்குப் பழையதாய்ப்போருவதொன்று அன்றோ? [இனிஎம்பரமே] - இப்படி ஒருத்தர்க்கும் நிலமல்லாதக்ருத்ரிமத்தை அபலைகளான நாங்கள் அறியவோ? ''பழங்கிணறு கண்வாங்குகிறதென்? அது கிடக்கிடாய். நான் பசுமேய்க்கப்போனமை அஸத்யமோ?'' என்ன,-[வேலினேரித்யாதி] - ''பெண்கள் திரள இருக்கிற மணற்குன்றிலேயோ உன்னைப்பசுமேய்க்கச் சொல்லிற்று?'' என்கிறுள். [வேலினேர்தடங்கண்ணினுர்] - ஓர் ஆளும் ஒருநோக்கும்நேரான கண்ணழகை உடையவர்கள். அவர்கள்நோக்கிலே அகப்பட்டு உன்கண்ணுக்கு இரையிட்டாயித்தனையன்றோ? [விளையாடுசூழலைச் சூழவேநின்று] - கண்ணுக்கிட ஒரு துரும்பில்லாத இடத்திலேயோ பசுமேய்ப்பது? [சூழவேநின்று] - அவர்கள் கண்வட்டத்தை விடாதேநின்றே பசுமேய்க்கச் சொல்லிற்று! இப்பொய்களை எங்களையொழியச் சொல்லாய் என்கிறுள். [காலிமேய்க்கவல்லாய்] - மணற்குன்றிலே பசுக்களை வயிறு நிரப்ப வல்லவன் என்று, வடதளசயநம்போலே இருப்பதொன்றிறே இதுவும். வல்லாயென்று - ஸாமர்த்யம்தோற்ற வார்த்தை சொன்னவாறே, மிகைத்து வார்த்தைசொன்னுன்; [எம்மை நீகழறேலே] - என்கிறுள்; ஆற்றுமைக்கு உதவாததுக்குமேலே, மிகைவார்த்தை சொல்லாதேகொள். [எம்மை] - உன்னைப் பிரிந்த ஆற்றுமையாலே நோவுபடுகிற எங்களை- [நீ] பிரிவால் நோவின்றிக்கே எங்களை நோவுபடுத்துகிற நீ. [கழறேலே] - மிகை வார்த்தை சொல்லாதேகொள். ஆற்றுமைக்கு உதவினுர்க்கன்றோ வாயுள்ளது?

௪௫.—நாலாம்பாட்டு. ''நான் சொன்னவை எல்லாம் இவர்கள் அந்யதாவாக புத்தி பண்ணுகிறது, நம்மையொழியச் செல்லாமை பிறந்து, நாம் அரைக்ஷணம் தாழ்த்தது பொறுக்க மாட்டாமையிறே'' என்று பார்த்து, ''நீங்களென்னை இங்ஙனே சொல்லலாமோ? நான் பித்ராதிகளுக்குப் பரதந்த்ரனன்றோ? அவர்கள் என் கையிலே கோலைத்தந்து 'நீ போய்ப்பசு மேய்த்து வா' என்றுல், என்னுல் மாட்டேனென்னப்போமோ?'' என்றுன்; பித்ராதிகளுக்குப் பரதந்த்ரராய்க்கொண்டு பசுமேய்ப்பார் மேய்க்கும்படியிதுவோ? நீ செய்யுஞ்செயல் சேர்ந்திருக்கிலிறே, நீ சொல்லுஞ்சொலவும் சேர்ந்திருப்பது.

[ஆலினிளிலையேழுலகுமுண்டு அன்று நீ கிடந்தாய்] - ஓராலிலையாவது, அதுதான்முளைத்தும் விரியாத அளவாயிருப்பது; அதிலே, ஏழுலகங்களையும் வயிற்றிலே வைத்து, ஒரு யசோதாதிகளுங்கூட உதவாத தசையிலே கண்வளர்ந்தருளினுய். ஜகத்தையடங்கலும் வயிற்றிலே வைத்து, சிறுவடிவைக்கொண்டு ப்ரளயத்திலே தனியேகிடக்க வல்லவனன்றோ நீ! அஸங்கதங்களை ஸங்கதமாகச் செய்யவல்ல ஸாமர்த்யமுடைய உனக்கு இவை எல்லாம் சேரச் சொல்லுகை பொருளோ; நீ சொல்லுகிறவை ப்ரணயிகள்கோஷ்டியில் பரிமாறுவதல்லகாண்; *பிதாநாம மூர்த்த: சிரோரோக:* என்றும், *குரவ : *கிம்கரிஷ்யந்தி* என்றுங்காண் இங்குப் பரிமாறுமவை- ''அன்னையென் செய்யிலென்? ஊர் என்சொல்லிலென்?'' என்றிறே இங்கிருப்பது. *தத்தாகம் விரஹாக்நிநா* இதுக்கு நீர்சொரியவல்லவர்களோ அவர்கள், அவர்களை மறைத்து வந்து கிட்டக்கடவ எங்களுக்கு இவை வார்த்தையல்லகாண்! [''நான் அரைக்ஷணம் தாழ்க்க, கோபத்தாலே 'அஸத்யன் என்றிகோள்; எல்லாரும் அறியாரோ என் அஸத்யம்'' என்ன], [உன்மாயங்கள் மேலை வானவரும் அறியார்] - உன்னுடைய க்ருத்ரிமங்கள், ஆக்கனுன இந்த்ராதிகளன்றிக்கே நித்யஸூரிகளும் அறியார்கள். *ப்ரஹ்மாபி நவேத நாராயணம் ப்ரபும்* என்கிறபடியே அறியாமைக்கு அவர்களும் ஒத்திருக்கசெய்தே, உகந்தாரைக் காற்கடைக்கொள்ளுகிற ப்ரகரணமாகையாலே நித்யஸூரிகளை நிதர்சநமாகச் சொல்லுகிறது; ''சூட்டுநன் மாலைகள் தூயனவேந்தி'' என்றுகொண்டு அவர்கள் ஸமாராதநத்துக்கு வேண்டுவனகொண்டு நிற்க, ஈட்டியவெண்ணெய் தொடுவுண்ணப்போந்ததிறே; அதுதன்னையும் விட்டிறே அடலாயர்தங்கொம்பினுக்குக் கோட்டிடையாடிற்று. பழையாரையெல்லாம்

கார்கடைக் கொள்ளுகிற ப்ரகரணமாயிற்றிறே. நவப்ரியைகளை விரும்புவாரைப் போலே காணும். [இனி எம்பரமே] - நித்யஸூரிகளோடு ஒக்கத் தங்களையும் ஸமாநாதிகரிக்கிறார்கள். அவர்களுக்கு நிலமல்லாதது எங்களால் அளவிடப்போமோ? அவையெல்லாம் எங்களையொழியச் சொல்லாய். "என் தான்? நான் பசுமேய்த்தமை இல்லையென்கிறீகோளோ? அறிந்திலோமென்கிறீகோளோ? நான் சொன்னது பொய் என்கிறீகோளோ?" என்றான்: அவையெல்லாம் அப்படியேயாகிலும் நீ தான் பசு மேய்க்கும்படி இப்படியேயோ? [வேலினேர் தடங்கண்ணினார் விளையாடுசூழலைச்சூழவே நின்று காலிமேய்க்கவல்லாய்] - பெண்களுடைய கண்களிலே துவக்குப்பட்டு அவ்வருகு போகமாட்டாதே நின்றுபோலே காணும் பசு மேய்ப்பது! போக்தாக்கள் அளவல்லாதபடி பரப்பையுடைத்தாய், ஓராளுமொருநோக்கும் நேரான கண்ணையுடையராயிருக்கை. "கார்த்தண் கமலக்கண்ணென்னும் நெடுங்கயிறுபடுத்தென்னை ஈர்த்துக்கொண்டு விளையாடும் ஈசன் தன்னைக்கண்டீரே" என்று, தன் கண்ணழகைக்கண்ட பெண்கள் படும்பாடெல்லாம் இவன் தன்னை அவர்கள் படுத்தவல்லவர்கள். [விளையாடுசூழலைச்சூழவே நின்று காலி மேய்க்கவல்லாய்] - "உன்வயிறும் நிறைத்துப் பசுக்களின்வயிறும் நிறைத்தல்லது வாராதேகொள்" என்றன்றோ பித்ராதிகள் உன்னைச்சொல்லிவிட்டது? 'இன்னவிடத்தே நின்று பசுமேய்' என்றொரு ப்ரதேசநியமம் பண்ணி விட்டார்களோ? அவர்கள் நியமித்ததொழியச் செய்யப்பார்த்தால் அது இங்குச் செய்யலாகாதோ? கண்ணுக்கிட ஒருதுரும்பும் இன்றியே, அவர்கள் விளையாடுகிற மணற்குன்றுகளைச் சூழநின்று மேய்க்கவேணும் போலே காணும். பசுக்கள் மேய்க்கைக்கு ஸம்பாவனையில்லாத இடங்களிலே இவற்றின் வயிறுகளை நிறைத்துக்கொடுபோகையினாலே, கிழில் அகடிதகடநாஸாமர்த்த்யம்போலே இதுவுமோர் ஆச்சர்யஞ் சொல்லுகிறதாகவுமாம். [வல்லாய்] - உன்னை யாரேனும்நியமித்தாலும் நீ நினைத்தது செய்து தலைக்கட்டவல்லான் ஒருத்தனன்றோ! என்கிறாள். இவர்கள் சொன்ன மர்மம் புத்திபண்ணாதே, "நம்முடைய ஸாமர்த்த்யந்தோற்றச் சொல்லாநின்றார்கள்" என்று; தன் மேன்மைதோற்றச் சில சொல்லப்புக்கான்; "இவன் அழியும்படி நெடும்போது சில வார்த்தை சொன்னோம்; இன்னும் சில சொல்லுவானுக்கு" என்று இருந்தான். *இதீவ* - இழே நெடும்போது சில பாசுரமிட்டுச்சொல்லிக்கொடு போந்தான்; ப்ரணயதாரையில் ஓடுமது ருஷிகளாயிருப்பார்க்கு நிலமன்றே: இப்புடைகளிலே — என்கிறான். *தேவீ* - வல்லபைகளுடைய பரிமாற்றம் கடக்க நிற்பார்க்குத் தெரியாதிறே. *வசநம் மஹார்த்தம்* - கடக்க நிற்பார்க்கேயன்று: தேசிகரானவர்கள் தங்களுக்கும் தெரியாதபடியாயிருக்கை. *தம் வாநரேந்த்ரம்* - இவனோடு ஒக்கக்கடவார் ஒருத்தருமில்லை, சேஷத்வத்துக்கு முடி சூட்டினார் மஹாராஜரேயாகிலும் பாரதந்த்ர்யத்தின் எல்லையிலே நின்றான் இவனென்கை இவ்வளவிலே இவன் முகம்பார்த்து வார்த்தை சொல்லப்பெற்றிலரிறே அவர். *மதுரார்த்தம்* - அபூமியென்னக் கைவாங்கவொண்ணாதபடியாயிருக்கை. *உக்த்வா*-அவனும் அவனுடையவர்களும் வாழும்படி வார்த்தைசொன்னாள். *ச்ரோதும் புநஸ்தஸ்ய வசோऽபிராமம்* - "அழிந்தாரையாக்கவல்லன்" என்னுமிடங்கண்டாள்; தானழிச்ச தலைஉண்டாம்படி வார்த்தை சொல்லவல்லமை கேட்கவேணுமென்றிருந்தாள். *ராமார்த்தயுக்தம்* - ராமப்ரயோஜநயுக்தம்; தன்கார்யம் செய்து தலைக்கட்ட வல்லானொருத்தன், *விரராம* - நெடும்போது தான் வார்த்தை சொல்லுகையினாலும், ஸ்வாமி வார்த்தை சொல்லும்போது மேலிட்டு வார்த்தை சொல்லவொண்ணாமையினாலும், பேசாதேயிருந்து அவனுக்கு அவகாசப்ரதாநம் பண்ணினாள். *ராமா* - இவ்விட்டுநீட்டுகையொழிய வார்த்தை சொல்லாதேயிருக்கிறபோதை அழகை அவர்தாம் காணப்பெற்றிலோம். இவனும் அடர்த்து வார்த்தை சொன்னான். [எம்மை நீ கழறேலே] - வாராய்! நோவுபடுத்தி நலிந்தார் முடிக்கவும் தேடுவர்களோ? [எம்மை] - உன்னைப்பிரிந்து ஆற்றாமை நோவுபடுகிற எம்மை. [நீ] - ஒரு காலமும் பிரியாத நீ. பிரிவால் வரும் நோவு இன்றிக்கே இருக்கிற நீ. [கழறேலே] - விசாய்ந்து வார்த்தை சொல்லாதேகொள்; நீ இங்ஙன் மேலிட்டு வார்த்தை சொல்லப்பெறாய் காண்; நீயும் நாங்களுமானால் எங்களை நீயடர்த்து வார்த்தை சொல்ல என்ன ப்ராப்தியுண்டு? சேதநரைப்போலே வந்து வார்த்தைசொல்லுவதே. அதிலேவைத்து மிகைத்து வார்த்தை சொல்லுவதே. ஆற்றாமைக்கு உதவினார்க்கன்றோவாயுள்ளது!

**கழறேல்நம்பி! உன்கைதவம்மண்ணும்விண்ணும்நன்கறியும் *திண்சக்கர
நிழறுதொல்படையாய் உனக்கொன்றுணர்த்துவன் நான்*
மழறுதேன்மொழியார்கள்நின்னருள்சூடுவார் மனம்வாடிநிற்க* எம்
குழறுபூவையொடும் கிளியோடும்குழகேலே. (5)**

ஒ.—[கழறேல் நம்பீ] - "நான் சொன்னவையெல்லாம், பொய்யைமெய்யாக உபபாதித்தேனாக, என்னை க்ருத்ரிமனாக்குவதே!" என்று எம்பெருமான் அருளிச்செய்ய, பிராட்டியும், முதன்மையடித்து "எங்களை அபிபவித்து வார்த்தைசொல்லாதே கொள்ளும், உம்முடைய க்ருத்ரிமம் ஸகலலோகப்ரஸித்த மன்றோ?" என்ன, அவனும், "நான் பொய்யனென்னுமிடத்துக்கொரு ஸாக்ஷிகாட்டிக்காண்!" என்ன, "ஜயத்ரதவதத்தினன்று பகலையிரவாக்கவேணுமென்று நீர் ஒருபொய்யிலே துணிய, அதுக்குப் பெரு நிலைநின்று அத்தை முற்றத்தலைக்கட்டவல்ல உம்முடையகையில் திருவாழியைக் கேட்டுக்கொள்ளும்!" என்ன, அவன் மேல்சொல்லிலாவது காணாமையாலே நிருத்தரனாயிருக்க; "நீ இன்னாதாயிராதே உனக்கு ஒருஹிதம் சொல்லக்கேள்!" என்ன,அவனும், "இது ஒருபேச்சில் இனிமையிருக்கும்படியே!" என்று கொண்டாட, போலியைக்கண்டு பிச்சேறும்படியான பேச்சழகையுடையவர்கள் மனம்வாடாமே அங்கே போவென்று இவள் பேசாதேயிருக்க, "நீபேசாதே யிருந்தாயேயாகிலும் எனக்கு தாரகம் இவற்றின் பேச்சே அமையும்" என்று இவளுடைய பூவையையும் கிளியையும் இவன் உபலாலிக்க; இவள் "நீ நினைக்கிறவர்களின அல்ல; எங்களின: இவற்றோடே குழகாதேகொள்" என்கிறாள்.

இ.—அஞ்சாம்பாட்டில், "அஸங்கதங்களைச் செய்தேனென்றும், பொய்யை மெய்யாக உபபாதித்தேனென்றும் என்னை க்ருதரிமனாக்குவதே!" என்ன, [கழறேல் நம்பீ] - முதலிகளென்னை அபிபவித்து வார்த்தை சொல்லாதே கொள்ளும். 'நெஞ்சில் மறமுடையார் சொல்லுமது வார்த்தை யன்று; உங்களையொழிய ஸாக்ஷிஉண்டோ?" என்ன, [உன்கைதவம்மண்ணும் விண்ணும் நன்கறியும்] - உன் க்ருத்ரிமம் உபயவிபூதியும் நன்றாகவறியும். தானும் அவனுமானால் உபயவிபூதியும் தன்பக்ஷத்திலே நிற்குமென்றிருக்கிறாளாதல்; வாயுந்திரையுகளிற்படியே யெல்லாரும் தன்னைப்போலே இழவாளரென்று இருக்கிறாளாதல். "இதெல்லாம் வேண்டா; நான்பொய்யன் என்னுமிடத்துக்கு ஒரு ஸாக்ஷி காட்டிக் காண்!" என்ன [திண்சக்கரநிழறுதொல்படையாய்] - உன் பரிகரத்திலே காட்டுகிறேன்; ஜயத்ரதவதத் தினன்று "பகலை இரவாக்கவேணும்" என்று ஒருக்ருத்ரிமத்திலே துணிய, அதுக்குப் பெருநிலைநின்ற திருவாழியைக்கேட்டுக்கொள். [திண்சக்கரம்] - விச்லேஷிப்பிக்கப்போகாதவன். உன்னிலும் களவில் திண்ணியவன் என்றுமாம். [நிழறு] - இவனுடைய களவுக்கு நிழறுசெய்து கொடுக்குமவன். [தொல்படை] - "இகைகழலா நேமியான்றே." [உனக்கொன்றுணர்த்துவன் நான்] - வார்த்தைமுட்டி நிருத்தரனாய் நின்றான்: "இவனையுண்டாக்கிக் காரியம் கொள்ளவேணும்" என்று பார்த்து, "உனக்கொரு ஹிதம் சொல்லக்கேள்! கலங்கின உன்னைத்தெளியும்படி வார்த்தை சொல்லக்கேள்!" என்ன, அவனும் "இதொரு பேச்சில் இனிமை இருந்தபடி என்?" என்றான்; இவள் சொல்லும் அர்த்தத்தில் தாத்பர்யமில்லையே அவனுக்கு.

[மழறுதேன் மொழியார்கள்] - போலிகண்டு இப்படி உன்னைப்பிச்சேறப்பண்ணினவர்கள் ஆரோ? [மழறுதேன்] - மழலைத்தேன். கலங்கின தேன்போலே இருந்துள்ள பேச்சழகையுடையவர்கள். "ஆரோ" என்றவாறே "நீங்களேயன்றோ" என்று தங்கள் தலையிலே ஏறிடப்புகுகிறானோ என்று, 'நின்னருள் சூடுவார்' என்கிறாள். [மனம்வாடி நிற்க] - உன்உகப்புக்கு இலக்கானவர்கள் ஆச்ரயமழிந்த தளிர்போலே நெஞ்சு வாடி நிற்க. அதாவது - மாசறுசோதிதொடங்கி நெடுகப் பிரிவாலே நோவுபட்டு, முடியவும் பெறாதே ஸம்ச்லேஷிக்கவும்பெறாதே யிருக்கிற என்னைப்போலேயன்றியே அனிச்சம்பூப்போலே இருக்கிறவர்கள் நெஞ்சு உலர்ந்துநிற்க இங்கிராதேபோ என்று பேசாது இருந்தாள். "உன்பேச்சிலும் இவற்றின் பேச்சன்றோ எனக்கு தாரகம்" என்று, இவளுடைய பூவையையும் கிளியையும் கொண்டாடத்தொடங்கினான்: சிலரை ஆதரிக்கையாவது - அவர்களுடைமையை ஆதரிக்கையிறே. [எம்குழறுபூவையொடுங்கிளி யோடுங்குழகேலே] - பாவி! எங்களினகாணிவை: நீ நினைக்கிறவர்களின அல்ல. [குழறு பூவை] - அநக்ஷர ஸரஸமாகப் பேசுகையாலே, கலங்கின உனக்குத் தெளியவார்த்தைசொல்லவல்லவையும் அன்று; அவற்றோடே, குழகாதேகொள் - செறியாதேகொள்.

ரு.— அஞ்சாம்பாட்டு. "ஸ்நேஹிகளாயிருப்பார்க்குக் குற்றத்தைக் குணமாகக் கொள்ளவுமாம்; நிஸ்ஸ்நேஹிகளுக்கு குணந்தன்னையே குற்றமாகக் கொள்ளவுமாம்; விஷயாநுகுணமாயிறே குணதோஷங்கள் இருப்பது; ஆகையாலே நான் சொன்னவை எல்லாம் இப்போது இத்தலைக்குக் குறையாய்த் தோற்றுமிறே; ஆனாலும் மத்யஸ்தர்சொன்னதிலே அர்த்தமாய்த் தலைக்கட்டுவது" என்றான்.

[குழறேல்நம்பீ] - அது முன்னம் செய்தபடி செய்ய; நீர்தாம் முதன்மைகொண்டாடி அபிபவித்துவார்த்தைசொல்லாதேகொள்ளும் எங்களை. [நம்பீ] - ப்ராபவங்கொண்டு அபிமதம் சாதிக்கவேண்ணுதுகாணும்! நெஞ்சில் வெறுப்புடையார்சொல்லுமது வார்த்தையன்று; உங்களையொழிய ஸாக்ஷியுண்டோ?' என்ன, [உன்கைதவம் மண்ணும் விண்ணும் நன்கறியும்;] உன் க்ருத்ரிமம் எங்களளவன்று; ஸகலலோக ப்ரத்யக்ஷித்தங்காண். வாயுந்திரையுகளில் வாஸனையாலே "ஜகத்தையெல்லாம் தம்மைப்போலே நினைத்திருக்கும்" என்றிருக்கிறார். ஸம்பந்தம் அவிசிஷ்டமானால் அங்ஙன் நினைத்திருக்க ஒருதட்டில்லையிறே. அன்றிக்கே, சேஷியொருவனானால் சேஷவஸ்துக்களெல்லாம் ஒருமிடறாயிருக்குமிறே; ஒருவனுக்குப் பல அடிமையுண்டானால் தங்களில் எல்லாரும் ஒத்திருப்பார்களிறே க்ருதஸங்கேதிகளாய். மண்ணிலுள்ளாரும் விண்ணிலுள்ளாரும் அழகிதாக அறியும். விசேஷஜ்ஞரோடு அவிசேஷஜ்ஞரோடு வாசியற அறியும் "இவ்விடையாட்டம் இரண்டும் அறியாதாரையோ ஸாக்ஷியாகச்சொல்லுவது? அறிவினால் குறைவில்லாத அகல்ஞாலமன்றோ இது!" என்றான். [விண்ணும்நன்கறியும்] - ஆனாலும் அவர்களிலே ஒருத்தரைச்சொல்லச்சொல்லுங்கோள் பொய்யென்று" என்றான்; ஆனால், உனக்குப் பக்ஷபதித்திருக்கும் அவர்களிலே ஏற்றுகிறோம் கைமேலே; [திண்சக்கரநிழறுதொல்புடையாய்] - குற்றந்தன்னையே குணமாகக்கொள்ளுவாரைக்கேன்! உன் க்ருத்ரிமத்துக்குப் பெருநிலை நிற்பார்கன்றோ தெரிவது! உன் நினைவு அறிந்து கையிலேவந்திருப்பது: "பகலையிரவாக்கவல்லையோ? என்று கேட்டால் 'ஓம்' என்றுகொண்டு ஆதித்யனைமறைப்பது: இப்படியேயிறே அவனுடைய வர்த்தகம் [திண்சக்கரம்] அப்பொய்யிலவனைப் பேதிக்கிலும் இவனைப் பேதிக்கவொண்ணுதாயிருக்கை. ஸ்வதந்த்ரனுகையாலே கார்யாநுகுணமாக ஏறிட்டுக்கொள்ளும்அவன்: இவனுக்கு அதில்லையிறே. [நிழறுதொல்படையாய்] - நிழறுகையாவது சுடத்துகை. அதாவது - நிறங்கொடுக்கையாய், அஸத்யப்ரதிஜ்ஞனுயிருக்கச் செய்தே ஸத்யப்ரதிஜ்ஞனுனல் பிறக்கும் கார்யத்தைப் பிறப்பித்துக்கொடுக்கை. [தொல்படையாய்]- இப்படிக்குப் பழையனுய்ப் போருகை. இவள் இப்படி சொன்னவாறே "ஸ்வபக்ஷத்திலே சிலர் இப்படி நமக்குண்டாவதே!" என்று சொல்லலாவதுகாணுமல் கவிழ்தலையிட்டான். [உனக்கு ஒன்றுணர்த்துவன் நான்] - வாராய்! நீ சொலவற்றிருக்கவேண்டா; உனக்கு நான் நல்லதொரு ஹிதஞ்சொல்லவா என்றாள். இது செவிகொடுத்துக் கேட்டானுகில், இதுக்குச் சொல்லலாவதொரு மறுமாற்றமில்லை; தனக்கு மேல்வார்த்தைசொல்லுகைக்கு ஒருபோக்கடியுமில்லை; (இவனுக்குப் போக்கடியாவது - "நான் ஸ்வதந்த்ரன்" என்றுசொல்லுகையிறே.) இதெல்லாங்கிடக்கச்செய்தே பேசாதேபுகா "இதொரு பேச்சின் இனிமை யிருந்தபடி யென்?" என்றான். [மழறுதேன்மொழியார்கள்] - பாவியேன், நீ யாருடைய பேச்சை யாருடைய பேச்சென்று ப்ரமிக்கிறாய்! மழறுதேன் - மழலைத்தேன். கலங்கின தேன்போலே இனியபேச்சுக்களையுடையராயிருக்கை. இவன் ஸந்நிதிமாறுமையாலே கலக்கமும் மாறாதே யிருக்குமே. "அவையெல்லாம் இங்கேயிறே" என்னுமே அவன். [மொழியார்கள்] - எத்தனைபேர் உனக்கு? [மின்னருள்சூடுவார்] - ஆரேனும் பேச்சைக்கேட்டுத் தங்கள் பேச்சென்று ப்ரமிக்கும்படி பண்ணவல்லவர்கள். ஒருக்தியாலே *ஸ்த்ரீதோ஽ஸ்மி கதஸந்தேஹ:* என்னும்படி வார்த்தைசொல்லவல்லஉன்னை ஒருக்தியாலே கலங்கப்பண்ணவல்லவர்கள். "அதுக்கென்" என்றான்; "அவர்களெங்களைப் போலல்லகாண்; நீ ப்ரயோஜந நிரபேக்ஷமாக இங்கே நிற்கச் செய்தேயும், இத்தை அறிந்துவைத்தும் க்ஷணமாத்ர விச்லேஷம் பொறுக்கமாட்டாமையாலே அவர்கள்மனஸ்ஸு வாடுங்காண்! ஆச்ரயத்தை யிழந்த தளிர்போலேகாண் அவர்கள்நெஞ்சு வாடும்படி. 'கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்தொருநாள் தங்குமேல் என்னாவி தங்கும்' என்றிருக்குமவர்களிறே அவர்கள்; அவ்வளவில் நீ உதவப்பெறுமையாலே போர கோவுபடுவர்கள்; அதுகண்டால், நீ பொறுக்கவல்லை

யோ?'' என்றுசொல்லிப் பேசாதேயிருந்தாள். 'உங்கள் பேச்சிலும் எனக்கு தாரகம் இவற்றின் பேச்சன்றோ?'' என்று அவர்களைவிடாப் பூவையையும் கிளியையும் கொண்டாடப் புக்கான்; சிலரை ஆதரிக்கையாவது - அவர்களுடைமையை ஆதரிக்கையிறே. அவற்றை ஆதரித்து வார்த்தைகொள்ளப் புக்கவாறே, வாராய்! அவைதான் நீ ஆரினவென்றிருக்கிறாய்? அவை நீ நினைக்கிறவர்களதன்று காண்! [எம்குழறுபூவையொடும் கிளியோடும் குழகேலே] - அவை உனக்குவார்த்தைசொல்லுகிறனவல்லகாண்! அவற்றுக்கு அது ஸ்வபாவங்காண்! [குழகேலே] நாங்கள் அப்யமாக வார்த்தை சொல்லச்செய்தேயும் கண்டாயே நீ அசப்யகதித்வந்தோற்ற வார்த்தைசொல்லுகிறபடி; அப்படியே இவற்றின்பேச்சும் அப்யார்த்தங்காண்! ([குழறுபூவை]- அக்ஷரஸ்ரஸமாகப்பேசுகிற பூவை. குழகுதல் - லீலாரஸங் கொண்டாடுகை)

குழகியெங்கள்குழமணன்கொண்டு கோயின்மைசெய்துகன்மமொன்றில்லை*
பழகியாமிருப்போம் பரமேயித்திருவருள்கள் *
அழகியாரிவ்வுலகுமூன்றுக்கும் தேவிமைதருவார்பலருளர்*
கழகமேறேல்நம்பி! உனக்குமிளைதேகன்மமே. (6)

ஒ.—[குழகி] - முந்தற இப்பிராட்டியும் தோழிமாரும் அநபிபவநீயைகளாயிருக்கையாலே அணுகக் கூசியிருந்த எம்பெருமான், தன்முகமுத்ரையாலும் ஸஸ்நேயமாய் பாவகர்ப்பமான பேச்சுக் களாலும் கலங்கி மருந்திடுபட்டாரைப்போலே இவர்கள் நிஷேதிக்கமாட்டாதேயிருக்க அதுவேபற்றாசாகக் கொண்டு நிர்ப்பயனாய்ச்சென்று அணுகி இவள்பாடேஇருந்த குழமணனை எடுத்தருள, குழகி ''எங்கள் குழமணன் கொண்டு அடிக்கழிவுசெய்தால் உனக்கு என்ன ப்ரயோஜநமுண்டு?'' என்ன, அவனும் ''எனக்கு இனி இதுவேப்ரயோஜநம்; ப்ரயோஜநத்துக்கு ப்ரயோஜநமுண்டோ?'' என்ன, ''நாங்கள் இப் பொய்களுக்குப் பழையோம் அல்லோமோ? உன்னுடைய நிரவதிகமான அபிநிவேசத்துக்கு நாங்கள் விஷயமாகப் போருவுதோமோ?'' என்று பிராட்டி அருளிச்செய்ய, ''நீயல்லது எனக்கு ஸ்ப்ருஹணீய விஷயமுண்டோ?'' என்று எம்பெருமான் அருளிச்செய்ய, ''அழகியார் இவ்வுலகு மூன்றுக்கும் தேவி மைதருவார் பலர்உளர்; அங்கேபோ'' என்று இவர்கள் சொல்ல, ''அங்கே போவோம்'' என்று இவர் களிருந்தகோஷ்டியில் நடுவேவந்துபுகுரப்புக, ''முதலிகளாயிருக்கிறஉமக்குச் சிறுப்பெண்கள் கழகத்திலே புகுருகை ஈடென்னப்போராது'' என்ன, ''எனக்கு முதலித்தனம்வேண்டா; நான் பயலி யாய்ப் போகவே அமையும்'' என்று அவன் அருளிச்செய்ய, ''தீமைசெய்யும் சிரீதரனை உனக்கும் இது பாலிசப்ரவ்ருத்தி'' என்கிறாள்.

இ.—ஆறும்பாட்டில், முன்பு இவளும் தோழிமாரும் அநபிபவநீயைகளாயிருக்கையாலே அணுகக் கூசினவன், தன்னுடைய முகவிகாரத்தாலும் ஸ்மிதவீக்ஷணதிகளாலும் பாவகர்ப்பமான தாழ்ந்த பேச்சுக் களாலும் இவர்கள் மருந்திடுபட்டாப்போலேயாய் இவனைநிஷேதிக்கமாட்டாத தசையிலே நிர்ப்பயனாய்ச் சென்று அணுகி, இவர்கள்பாடே இருந்த குழமணனை மேல்விழுந்துஎடுத்துக்கொண்டான். [குழகி எங்கள் குழமணன்கொண்டு] - பாவீ! இது ஆரதாகஎடுத்தாய்? எங்களதுகாண்; நீ நினைக்கிறவர்கள தன்றுகாண்! என்கிறாள். ''எங்களது என்றவாறே பொகட்டுப்போம்'' என்று சொன்னாள்: அதுதானே அவனுக்கு விருப்பத்துக்குஉடலாயிற்று. ''எங்கள் அநுமதி வேண்டாவோ உனக்கு?,' என்ன, ''எனக்கு நிவாரகர்உண்டோ? நான்செய்தது செய்யலாமித்தனையன்றோ'' என்ன, [கோயின்மைசெய்து கன்ம மொன்றில்லை] - நிவாரகர் இல்லையென்று, அடிக்கழிவானசெயல்களைச்செய்தால் உனக்கு ஒருகார்ய மில்லை; நீ நினைக்கிறவர்களது அல்லாமையாலே உனக்கு ஒன்றும்வாயாது; எங்களநுமதி இல்லாமை யாலும் ப்ரயோஜநமில்லை. ''ப்ரயோஜநமில்லையாவதென்? இதுதானே ப்ரயோஜநம்; ப்ரயோஜநத்துக்கு ப்ரயோஜநமுண்டோ?'' என்ன, [பழகியாமிருப்போம்] - இப்பொய்களுக்குப்பழையோம் அல்லோமோ? [பரமேயித்திருவருள்கள்]—'' 'உங்களுடைய லீலோபகரணம் எனக்கு போகோபகரணமன்றோ? இதுஒழிய வேறொரு ப்ரயோஜநம்உண்டோ?' என்று நீசொல்லுகிற அபிநிவேசமெல்லாம் எங்களளவோ? இதுக்கு நாங்கள் விஷயமாகப்போருமோ? போலிகண்டுப்ரமிக்கும்படி உன்னைப்பண்ணினவர்கள் புக்கலிலேபோ''

என்ன, "அவர்கள் ஆர்? அங்ஙனேயும் சிலருண்டோ!" என்ன, "அவர்களைச்சொல்லித்தருகிறோம்: [அழகியாரிவ்வுலகுமூன்றுக்கும்] - "த்ரைலோக்யராஜ்யம் ஸகலம் ஸீதாயா நாப்நுயாத் கலாம்" என்றிருக்குமவர்கள். [தேவிமைதகுவார்] - உனக்குப் பட்டத்துக்குரியராய் இருக்குமவர்கள். "ராகவோர்ஹதி" என்று உனக்குஸத்ருசைகளாயிருப்பார். [பலருளர்] - ஒருவரிருவர் அல்லர். ஓரடிப்பாடரல்லீரே! பரப்பரன்றோ நீர்!! அவர்கள்பக்கலிலே போம்" என்ன, "போவோம்" என்று இவர்கள்திரளிலே வந்து புகுரப்புக, [கழகமேறேல்] - 'எங்கள்திரளிலே ஏறாதேகொள்" என்ன, "எனக்குக்குற்றமென்?" என்ன, [நம்பீ] - "சமதமாத்யாத்மகுணோபேதர்திரளிலேயன்றோநீர்புகுவது! அவர்களன்றோஉம்மைக்கிட்ட உரியார்; சிறுப்பெண்கள்திரளிலே புகுகை ஈடன்று" என்ன, "ஆனால் நாம் செய்ததுக்கு நிவாரகர் உண்டோ?" என்ன, [உனக்குமிளைதேகன்மமே] - தீமைசெய்யும் சிரீதரனை உனக்கும் இது பாலிசப்ரவ்ருத்தி என்கிறாள். "ஸர்வேச்வரனாய் அவாப்தஸமஸ்தகாமனான அவனைச் சில பெண்கள் 'எங்கள்திரளிலே புகுராதேகொள்' என்ன, புகமாட்டாதே பேகணித்துநின்ற இந்த ஆச்ரிதபாரதந்த்ர்யத்தை, உத்கர்ஷம் சொல்லப்பொறாத ஸம்ஸாரத்திலே தங்களைஒழிய ஆர் விச்வஸிக்க எழுதியிட்டுவைத்தார்கள்" என்று பட்டர் அருளிச்செய்தார்.

௬.—ஆறும்பாட்டு. தங்களகவாயிலோடுகிற து தெரியாமல்மறைத்துக்கொண்டு அநபீப்ஸிதைகளா யிருக்கிற இப்பிராட்டியையும் தோழிமாரையுங்கண்டு, அவன் தன்முகமுத்ரைகளாலும், பாவகர்ப்பமான உக்திகளாலும், அத்தை அநுபவித்தாப்போலேயிருக்கிற விலாஸசேஷ்டிதங்களாலுமாக இவர்கள்அபிஸந்தியைக்குலைத்து, இனி இவர்கள் நான் சொன்னவையெல்லாம் "வேண்டா" என்னமாட்டாதவர்களென்னும்படி வாய்மாளப் பண்ணி, அவ்வளவிலேசென்று இவளுடைய லீலோபகரணமான குழமணனை எடுத்துக்கொண்டான்.

[குழமியெங்கள் குழமணன்கொண்டு] என்கிறார்கள். குழமகையாவது - யுவாக்களாயிருக்குமவர்கள், எதிர்த்தலை தங்களுக்கு அபவ்யமானால் அவர்களைச் சேரவிட்டுக் கொள்ளுகைக்காகப் பண்ணும் சேஷ்டிதங்களுக்குப்பேர். மேன்மையாலேயாகவுமாம், கீழ்மையாலே யாகவுமாம்; ஏதேனுமாக இவ்வளவுகிட்டிநின்று அவர்கள்நினைவைக்குலைத்துக் குழமணனை எடுத்துக்கொள்ளும்படியாகக் கைபுகுந்தானிறே. [எங்கள்குழமணன் கொண்டு] - அதுதான் நீயாரதென்று இருக்கிறாய்? அது நீ நினைக்கிறவர்களதல்ல காண்; அது எங்களது. உனக்கு இதினால் ஒருகார்யமில்லை. "'எங்களது' என்றவாறே போகட்டுப் போம்" என்று சொன்னார்கள்; அதுதானே அவனுக்குப் பற்றுகைக்கு உடலாயிற்று. "எங்களநுமதிவேண்டாவோ உனக்கு? என்ன, "எனக்கு நிவாரகருண்டோ! நான் செய்வது செய்யலாயித்தனையன்றோ?' என்ன, [கோயின்மை செய்து கன்மமொன்றில்லை] - நீ செய்கிற அடிக்கழிவால் உனக்கொரு பலமில்லை. கன்மமொன்று கன்மபலத்தை நினைக்கிறது. ஆராய்ச்சியில்லாதவிடத்தே செய்யுமவற்றைச் செய்யாதேகொள்வாய். அவை செய்தாலும்ஆயிறே உனக்கொருப்ரயோஜநமுண்டாகில். கோயின்மை செய்கையாகிறது - இவர்கள் இசைவின்றிக்கே யிருக்க இவர்கள்லீலோபகரணங்களை எடுத்துக்கொள்வது, அவர்கள் வேண்டவேண்டக் கொடாதொழிவதாய் மிறுக்குப்பண்ணுகை. [கன்மமொன்றில்லை] - நீ போகிறவிடத்துக்கு இவை கொண்டுபோகவொண்ணாது; உனக்கு இவைதான் வேண்டா; இனி எங்களுக்கோ அபிமதம்; ஆனபின்பு இச்செயலாலென்ன ப்ரயோஜநமுண்டு? இவை கொண்டுபோனால், தங்களதல்லாமையாலே அவர்கள் முகம் பாரார்களே; நீ ஆதரிக்கவிஷயந்தினதல்லாமையாலே உனக்குவேண்டா, எங்கள் இசைவோடே கொடுபோகாமையாலே எங்களுக்கு ப்ரியமன்றே! ஆனபின்பு, இத்தால்வருவதொரு பேறில்லை காணென்றார்கள். "அதுகிடக்க; நான் முன்னம் உங்களோடுஏககண்டன்; எனக்கும் ஒருப்ரயோஜநமில்லை, இத்தை ஸாதநமாகக்கொண்டு ஸாதிக்கவேண்டுவதோர் அர்த்தம் கண்டுவைத்திலேன், இதுதானேயிறே எனக்குப்ரயோஜநம்; ப்ரயோஜநத்துக்கு ஒருப்ரயோஜநமுண்டோ?" என்றான்; அங்ஙனேயானவன்று அவஸ்தைவரத்தொடங்குமிறே. [பழகியாமிருப்போம்] - இப்பொய்களுக்குப் பழையோமல்லோமோ! எங்களுக்கன்றுகாண் இவை சொல்லுவது! நீ சொல்லும் பொய்யெல்லாம் "மெய்" என்றிருப்பார்க்குச்சொல்லாயென்றார்கள். அவனும், "இத்தலைவையொழிய எனக்குச்செல்லாவது' என்னும்படிக்கோற்றச் சில க்ரியைகளைப்பண்ண,

[எம்பரமேமீத்திருவருள்கள்] - நீ எங்களளவல்லாத அபிநிவேசத்தைப்பண்ணி, குளப்படியிலே கடலை மடுத்தாற்போலே நீசெய்கிறவையெல்லாம் எங்களால் பொறுக்கப்போமோ? நீசெய்கிறவையெல்லாம் பொறுக்கவல்லார் வேறே சிலவர்களென்றார்கள். "அவர்களார்?" என்றாள்: [அழகியாரிவ்வுலகுமூன்றுக்கும்] - *த்ரைலோக்யராஜ்யம் ஸகலம் ஸீதாயா நாப்நுயாத் கலாம்* மூன்று லோகத்தையும், அத்தோடே விச்வசப்தவாச்யனானவன் தன்னையுங்கூட ஒரு தட்டாக்கினால், பிராட்டியுடைய ஒருகலாமாத்ரத்துக்கு எடை நிற்கமாட்டாது. "அவர்களெங்ஙனேயிருப்பார்கள்?" என்றாள்: [தேவிமைதருவார்] - "உனக்குப் பட்டங்கட்டப் போரும்படியாயிருப்பார்" என்ன, "ஆனால், எனக்கு உபேக்ஷிக்கைக்கும் சிலர்வேணுமே!" என்றாள்; [பலருளர்] - உனக்குப்பொகடுக்கைக்கும் விஷயமங்கே உண்டென்கிறார்கள். ஒருத்தனுக்கொன்று ஸ்வபாவமானால், அது வேறோரிடத்தே போங்காட்டில் குலையாதிறே; அப்படியே, அங்குள்ளாரையும் பொகடுகை இவனுக்கு ஸ்வபாவமென்னுமிடந்தோற்றச் சொல்லுகிறாள். "ஓரடிப்பாடரல்லீரேனீர்: பரப்பரல்லீரோ! அவர்கள் பக்கலேறப்போம்" என்ன, "ஆனால், அங்குப்போம்வழியும் போனாற்செய்யும்படிகளும் எல்லாம் கேட்டுப்போகவேணுமே; இனித்தான் அத்தேவாவிகளுக்கிறே ஒன்று சொல்லுவதும்; *பரிப்ரச்நேந ஸேவயா* என்றிறே கேட்பார்படி; ஆனபின்பு, காலடிகிட்டநின்று கேட்கவேணும்" என்று திரளிலேவந்து புகுரப்புக்காள். [குழகரேமேறல் நம்பீ] - அவர்கள்முன்னமானாராகிடுக; எதிட்டுக்கொள்ளுவதுஎங்களுக்குப் பரமோ? நீர் முன்னம் எங்களோலக்கத்தில் புகுராதேகொள்ளும். இவ்விடத்தே பட்டருளிச்செய்வதொரு வார்த்தையுண்டு:— "ஸமஸ்தகல்யாணகுணத்மகனாய் உபயவிபூதியுக்தனாய் ஸர்வாதிகனாய் ஸர்வநியந்தாவாயிருக்கிற ஸர்வேச்வரன் நாவிடைப்பெண்களிருந்தவிடத்தே புக்கல்லது நிற்கமாட்டாத செல்லாமை விளைய அவர்கள் 'நீயிங்குப்புகுராதேகொள்' என்ன, விலங்கிட்டாப்போலே போரவும் திரியவும் மாட்டாதே தடுமாறிநின்றானென்கிற ஸௌசீல்யம் (தங்கணையுமீவர் கணையுமொழிய) ஆராய்ந்து கொண்டாட வ்யாஸாதிகளெழுதியிட்டுவைத்துப்போனார்களோ?" என்றருளிச்செய்வர். "ஸர்வநியந்தாவானவன் சிலர்க்கு நியமிக்கலாம்படி எளியனானான்" என்றால் "இதுமெய்" என்று கைக்கொள்ளுவாரைக் கிடையாதிறே. சாஸ்த்ரங்களெல்லாம் சேசிதவ்யவிபாகம் பண்ணி ஒருங்கவிடாநிற்க, அத்தலையித்தலையாகச் சொல்லுகிறதிறே இது 'சாதுகோட்டியுட்கொள்ளப்படுவார்' என்றுசொல்லுவது - வைஷ்ணவர்களுடைய திரளிலே ஒருவன்வந்துபுகுந்தால் துர்மாநத்தாலே மலையிட்ட மூக்கினாற்போலேயிருக்கையன்றிக்கே, நீரும் நீரும் கலந்தாப்போலே இவன் புகுந்தமை தெரியாதபடியிருந்து, அவர்கள் இடங்கொடுத்து அவர்கள் பரிக்ரஹிக்கையிறே ஒருவனுக்கு நன்மையாவது; இது இவர்களுக்கேயன்றியே, அவனுக்குமொத்திருக்கிறபடி; *ஸபாபிராம: பரிஷத்கதச்சனைர் புபூஷயாஸக்தமநாபபூவஹ* - பெருமதிப்பராய்ப் பாட்டறிந்து கொண்டாடுகைக்குப் போரும்படி போரிவானரான வித்வஜ்ஜநங்களும் தாமுமாகப் பேரோலக்கமிருந்து பின்னைகளைப் பாடவிட்டுத் தாம் ஸிம்ஹாஸநஸ்தராயிருந்தார்; இவர்கள் தாழவிருக்கத் தாமுயரவிருந்த இடம் தமக்கு அஸஹ்யமானமையாலே ஸிம்ஹாஸநத்தினின்றும் மெள்ள இழிந்து, தெரியாதபடி இவர்கள்நடுவே புகுந்திருந்தார். அது என்னென்னில்:- ராஜா எழுந்திருந்தால் ஓலக்கம் கிளம்புமிறே; தாம் எழுந்திருந்தவாறே ஓலக்கம் கிளம்புகிறதாகக்கருதி, மெள்ளப்புகுந்திருந்தாரென்கிறது. இங்ஙன் வேண்டுவானென்? என்னில்; அநுபூஷயா என்னுதல், பவிது மிச்சயா என்னுதல் - 'இவர்களோடேகூடியிருந்து அநுபவிக்கைக்காக' என்னுதல், 'தாழ்வாராகைக்காக' என்னுதல். [நம்பீ] - உமக்கும் எங்களுக்கும் உள்ள நெடுவாசிபாரீர்! உமக்கொன்று கேட்கவேண்டும்படியாயிருந்ததோ? முதலிகளாயிருக்கிற உமக்கு நாங்களிருக்கிற இடத்தே புகுருகைபோருமோ? என்றார்கள். "அழகிது! நான் முதலியாகிலும் ஆகிறேன்; பயலியாகிலும் ஆகிறேன்; என்னைத்தான் அறிகையில்லையோ! 'தீமைசெய்யும் சிரீதரன்' என்றன்றோ என்னைச்சொல்லுவது? ஆனபின்பு, நாலுபெண்களிருந்தவிடமெங்கும் தீம்புசெய்கை எனக்கு ஸ்வரூபமன்றோ?" என்றான். [உனக்குமீனாதே நன்மமே] - தீம்புசெய்கையிலே சமைந்திருக்கிற உனக்குங்கூட இதுபாவிசம். தீமைசெய்வார்க்கும் ஒருப்ராப்தி வேண்டாவோ?

கன்மமன்றெங்கள்கையில்பாவைபறிப்பது கடல்ஞாலமுண்டிட்ட*
நின்மலாநெடியாய் உனக்கேலும்பிழைபிழையே*
வன்மமேசொல்லியெம்மைநீவிளையாடுதி அதுகேட்கிலென்னைமார்*
தன்மபாவமென்னார் ஒருநான்றுதடிபிணக்கே. (7)

ஒ.—[கன்மமன்று] - இவர்கள்கழகத்திலே ஏறப்புக்கு இவர்களாலே நிவார்யமாணனும் ஏறப் பெறுதொழிந்த எம்பெருமான், செய்யலாவது காணுமையாலே, அவர்களுடைய லீலோபகரணமான பாவையைச் சென்றெடுக்கக்கணிசிக்க, அத்தையறிந்து பிராட்டியும் தோழிமாருமாகப் பாவையைச் சென்றெடுக்க, அத்தை இவன்தான் அவர்கள்கையினின்றும் பறிக்கப்புக, அவர்களும் எங்கள்கையில் பாவையைப்பறிப்பது உனக்குப் போராதென்றுசொல்ல, அவனும் "பஹுகுணனானவெனக்கு அல்ப தோஷம் தோற்றப்படுமோ?" என்றுஅருளிச்செய்ய; அவர்களும் நிர்ஹேதுகமாக ஜகத்தை ப்ரளய காலத்திலே திருவயிற்றிலேவைத்துபரிஹரிக்கை தொடக்கமான அபரிச்சேத்யமஹாகுணங்களையுடையை யாயிருந்தாயேயாகிலும் அக்குணங்களுக்கு 'நிறம்தருமாபோலே இப்போராச்செயலும் உனக்குஅவத்யா வஹமென்று அருளிச்செய்ய, அதுக்குமேலே சில பணிமொழிகளை எம்பெருமான் அருளிச்செய்ய, "இப்படிபொறுக்கவொண்ணாத வார்த்தைகளைச்சொல்லி எங்களோடே நீவிளையாடுதி; அதுகேட்கில் என்னைமார் கூடும் கூடாதென்று நிரூபியாதொழிவர்கள்," என்ன, ஆனால்தான் வந்ததேன்?" என்ன, "ஒருநாளாக அவர்களுக்கும் உனக்கும் விப்ரதிபத்தியாய்முடியும்" என்கிறாள். ஐம்மார் - ஆ ணுடன்பிறந்தார்.

இ.—ஏழாம்பாட்டில், "கழகமேறேல்நம்பி" என்று - தங்கள்திரளிற் புகுர வொட்டிற்றிலர்கள்: அவனும் செய்யலாவதுகாணுமையாலே அவள்கையிற் பாவையைக் கடாக்ஷித்தான்; "ப்ரேக்ஷிதஜ்ஞாஸ்து கோஸலா:" என்று நினைவறியுமவர்களாகையாலே எல்லாருங்கூட அத்தைப்பற்ற, இவன் அத்தை அவர்கள் கையினின்றும் பறிக்கப்புக்கான். [கன்மமன்றெங்கள் கையிற் பாவைபறிப்பது] - எங்கள்கையிற் பாவை பறிப்பது கார்யமன்று. நீ நினைக்கிறவர்களது அல்லாமையாலே உனக்கொரு ப்ரயோஜநமில்லை. எங்கள் அநுமதியில்லாமையாலே பறிக்கப்போகாது. தன்னுடைய சக்திகொண்டு அழிக்கலாவது எதிரிகளாகி விறே! அபலைகள்கையில் அதுபறிக்க சக்தனல்லனே. ஒருகலத்திலே உண்பாரைப்போலே அவர்கள் கையிலும் தன்கையிலுமாக இருக்கிலிறே ப்ரயோஜநமுள்ளது. "ப்ரயோஜநமில்லாமையே அன்று, உனக்கு குணஹாநியாய் வரும்" என்ன, "பஹுகுணனான எனக்கு அல்பதோஷம் தோற்றப்படுமோ?" என்ன, [கடல்ஞாலமுண்டிட்ட நின்மலா நெடியா யுனக்கேலும்பிழைபிழையே] - நிர்ஹேதுகமாக ப்ரளயாபத்திலே ஜகத்தை வயிற்றிலேவைத்து நோக்கினவனாய், "ஆகாச இவ நிர்மல:" என்கிறபடியே ஹேயப்ரத்யநீகனாய், "யதோ வாசோ நிவர்த்தந்தே" என்று அபரிச்சேத்ய மஹாகுணனாயிருந்த உனக்கு வந்ததாகிலும், பிழை யானது பிழையே காண். லோகத்துக்கு ப்ரகாசகனான சந்த்ரனுக்கு உண்டானமறுவும் லோகப்ரஸித்த மன்றோ! குணங்கள் புக்கவிடமெங்கும் குணஹாநியும் புகுங்காண். குணங்கள் உனக்கு நிறந்தருமா போலே இ க்ஷுத்ரப்ரவ்ருத்தியும் உனக்கு அவத்யாவஹங்காண் என்ன, மேற்சொல்லலாவது கண்டிலன்; அவர்கள்செவியிலே, "இன்னது சொன்னான்" என்று அநுபாஷிக்க வொண்ணாதாயிருப்பதொன்றைச் சொன்னான். அதாவது - ப்ரணயவேளையிற் பணிமொழிகள்: [வன்மமே சொல்லியெம்மை நீ விளையாடுதி]- நினைக்கவுங்கூடக் கூசவேண்டும் நெஞ்சறிந்த வார்த்தையைச் சொல்லி எங்களோடே விளையாடுதி. இவன் போகபுத்தியாலே நோக்கழியச்சொன்ன வார்த்தையே தங்களுக்கு அவனோடு பாவபந்தம் இல்லையென்று தோற்றுகைக்காக அஸத்ஸமமாக்கி 'விளையாடுதி' என்றாள். "எங்களோடு விளையாட முறை உண்டோ ?" என்ன, "பஞ்சலக்ஷங்குடியிற் பெண்களிலும் எனக்கு விளையாட்டு முறையில்லாதார் உண்டோ ?" என்ன:—[அது கேட்கிலென்னைமார் தன்மபாவமென்னார்] - என்பந்துக்கள் அத்தைக்கேட்கில், கூடும் கூடா தென்று நிரூபியார்கள். என்னைமார் - தமையன்மார் - ஐம்மார், ஆ ணுடன்பிறந்தார். "வேலைப்பிடித் தென்னைமார்களோட்டி லென்னவிளையாட்டோ ?" என்னக்கடவதிறே; பந்துக்களுக்கு உபலக்ஷணம். உன்னோடு பாவபந்தம் இல்லை என்றறியாதே, உன்னுடைய சள ப்ரவ்ருத்தியை "மெய்" என்று, "ஸம்ச்லேஷம் வ்ருத்தம்" என்று மேலிடுவர்கள். 'நிரூபித்துச்சொல்லுகை - தர்மம், நிரூபியாதே

சொல்லுகை - பாபம்' என்னுதே கேட்டமாத்திரத்திலே போருர்கள். "அவர்கள் அறியப் புகாநின்றார்களோ?" என்ன, "பிறந்ததொன்று நாளோட்டத்திலே அறியார்களோ?" என்ன, "ஆனால்தான் வருவதென்?" என்ன. [ஒரு நான்று] - ஒருநாளாக உன்னோடே விவாதமாய் முடியுமென்கை. [தடிபிணக்கே]- இடையர் பெருமிடுக்கரை அழியச்செய்யும்போதும் தடியாலே அழிக்குமித்தனை

௬.—ஏழாம்பாட்டு ஸர்வோபாயங்களையும் அநுஷ்டித்து ஸ்ரீபராசாழ்வான் தன்பக்கல் பட்டதெல்லாம் தான் இவர்கள்பக்கலிலே பட்டான். *விநிவர்த்தயிதும் பலாத்* என்று மீட்கையிலே போர வருந்தினானிறே. சேஷ்யே புரஸ்தாச்சாலாயா யாவந்மே நப்ரஸீததி* தாமேயிரங்கி மீளும்படிபண்ணுகிறேன்; அதுதான் கேட்டார்வாய் கேட்கவேணுமோ? *புரஸ்தாத்* என்றானிறே. அப்படியே இவனும் ஸர்வோபாயங்களையும் ப்ரவர்த்திப்பித்தவிடத்திலும் அனுகவொண்ணுதபடி கடுமைதோற்ற இருந்தார்கள்; இனிச்செய்யலாவதென்? என்றுபார்த்தான்; "பலத்தாலே கார்யங்கொள்ளுவோம்" என்றுநிச்சயித்து, இவர்கள்பாவையை எடுப்பானாகக் கணிசித்தான்; *ப்ரேக்ஷிதஜ்ஞாஸ்து கோஸலா:* என்று நினைவறியுமவர்களாகையாலே, எல்லாருங்கூடவைத்த பாவையைச் சென்றெடுத்துக்கொண்டார்கள்; அதுதான் "நங்கார்யம்" என்றே இருந்தான். "ப்ருதக்ப்ரயத்நாபேக்ஷிதமின்றிக்கே ஒழியப்பெற்றோம்" என்று பார்த்தான். திருக்குரவைபோலே ஆளுக்காளாய்நின்று கைப்பிடிக்க வேண்டாவாயிருந்தது; "நல்ல வாய்ப்பு" என்று இவர்கள்பாவையைச் சென்றுபற்றினான்.

[கன்மமன்று] - வாராய்! உனக்கிது கார்யமன்று கிடாய் என்கிறார்கள். "ஏன்தான், இது கார்யமன்றிக்கே ஒழிவானென்?" என்றான். [எங்கள் கையிற்பாவைபறிப்பது] - 'இதுதான் ஆரதென்றிருக்கிறாய்? நீ நினைக்கிறவர்களதன்றுகாண்! இதெங்களதுகாண்!' என்றார்கள். "அது தான் மெய்யே!" என்றான்; *யஸ்யைதே தஸ்ய தத் தநம்* இறே. (இவர்கள் ஸ்வரூபாநுராகையாலே இவனுடையவர்களிறே) இவர்கள் "எங்களது" என்கையிறே அவன் விருப்பத்துக்கடி. "இவர்களது" என்னுமிடம் அறுதியிட்டுக்கொள்ளுகையிலேயிறே அவனுக்குத் தாத்பர்யம்; நீ நினைக்கிறவர்களதன்று என்கையிறே இவர்களுக்குத் தாத்பர்யம். [எங்கள்கையில் பாவைபறிப்பது]-இவர்கள் கையிலே பாதிகொடுத்துப்போலே காணும்பறிப்பது! அவர்கள் விட்டுக் கிடக்க நிற்குமதிலொரு ப்ரயோஜநமில்லையே; அத்தையவர்கள் ஒருதலைபற்றத் தானுமொருதலை பற்றுமன்றிறே ஒரு கலத்திலே உண்பாரைப்போலே போகமாயிருப்பது. [கையில் பாவைபறிப்பது] கிடக்கிறதெல்லாங் கிடக்க, எங்கள்கையிற் பாவைபறிப்பது கன்மமன்று. செய்யக்கடவதல்லாதத்தைச் செய்யாநின்றாய்; உனக்கு இத்தாலொரு ப்ரயோஜநமில்லைகாண் என்றார்கள். ஆக, இத்தால் ப்பலித்ததென்? என்னில்; ஒருவைஷ்ணவன் "என்னது" என்று அபிமாநித்துக் கைப்பிடித்தால் "அவன் விரும்புவது" என்றபடி. "'செய்யக்கடவதல்லாதத்தைச் செய்யாநின்றாய்' என்று நீங்கள் சொல்லுவானென்? செய்யக்கடவதுக்கும் செய்யக்கடவதல்லாததுக்கும் வரம்பு கட்டினேன் நானன்றோ!" என்றான். [கடல்ஞாலமுண்டிட்ட]-ப்ரளயாபத்திலே இவற்றையெல்லாமெடுத்து வயிற்றிலேவைத்து நோக்கிற்றிலேனோ? இவர்களளவும் அப்படியேயாகாதேதான். இவன்சென்று பறித்திலனாகில் அழியுமளவாகாதே அவர்களது அது அவஸ்தாந்தரத்தை பஜித்தாகிலும் கிடக்குமிறே; இவர்களுக்கிவனையொழிந்தவன்று ஸத்தாநாசமிறேயுள்ளது! "ஆபத்ரக்ஷகனன்றோநான்! ஆனபின்பு, நான் செய்யுமவையெல்லாம் ப்ரயோஜநநிரபேக்ஷமாயன்றோ இருப்பது; ஆகையினால் எனக்கிதுதானேயிறே ப்ரயோஜநம்! ப்ரயோஜநத்துக்கு ப்ரயோஜநம் வருமன்று அநவஸ்தையாமிறே; இத்தை ஸாதநமாக நினைத்திருக்கிறேனிறே நான் வேறேயொன்றை ப்ரயோஜநமாக ஸாதித்துக்கொள்வது!" என்றான். நீ இங்ஙன்சொல்லுமது வார்த்தையன்றுகாண்; எங்களிசைவின்றிக்கேயிருக்க நீ பலத்தாலே பறிக்கிறஇதுக்கு "ஆபத்ரக்ஷகன்" என்றுசொல்லுகிறஇது, நிர்சகமாகமாட்டாதுகாண்; ஆனபின்பு, உனக்கு குணஹாநியேகாண் மேற்படுவது" என்றார்கள். [நின்மலாநெடியாய்!] "பஹுகுணனான எனக்கு ஒரு தோஷம் கிடக்குங்காட்டில் அதுதெரியாநின்றதோ?" என்றான். [நின்மலா! நெடியாய்!] - நிர்மலனான சந்த்ரனுக்குமன்றோ மறு கிடக்கிறது! ஆனபின்பு, குணம் ப்ரகாசிக்குமிடமெங்கும் குணஹாநியும் ப்ரகாசிக்குங்காண்!! ஹேயப்ரத்யநீகனாய் அபரிச்சேத்ய மஹாகுணனானவனே!

[உனக்கேலும்பிழைபிழையே] - அபரிச்சேத்யமான குணங்களையுடையையா யிருந்தாயே யாகிலும், குணஹானி குணஹானியாயே கிடக்குங்காண். இவர்கள் இப்படி சொன்னவாறே, இதுக்கொரு மறுமாற்றம் காணாமையாலே, பிறர்க்குப் பாசுரமிட்டுச் சொல்லவொண்ணாதபடி இவர்கள்செவியிலே சிலவற்றைச் சொல்லப்புக்கான்; "வன்மமே சொல்லி" என்கிறார்கள். தங்கள்நெஞ்சும் அவன்நெஞ்சும் அறியுமத்தனை; வாசா வ்யவஹரிக்க வொண்ணாது (ப்ரணய வேளையில்பணிமொழிகள்) [எம்மை நீவிளையாடுதி] - நீ மர்மம்சொல்லும்போது, சொல்லுகிற உன்னையும் கேட்கிற எங்களையும் அறிந்தன்றோசொல்லுவது. ("இவன் சொன்ன மர்மமேது" என்று எம்பாரைச்சிலர்கேட்க, "மயர்வறமதிநலமருளப்பெற்றவர் பாசுரமிடமாட்டாமல் 'வன்மம்' என்றுநின்றார்: என்னைப்பாசுரமிடச்சொல்லுகிறீர்களோ?" என்றருளிசெய்தார்.) [விளையாடுதி] - அவன் தன்னையழியமாறி ஒருமர்மம்சொன்னானுன்; இவர்கள் அத்தை யெல்லாம் விளையாட்டாக்குகிறார்கள்; நெஞ்சிலில்லாததை சொல்லுகிறவத்தால் உனக்கென்ன ப்ரயோஜநம் உண்டென்கிறார்கள். இரியவும் சிலவற்றைச்சொல்லப்புக்கான்; [அதுகேட்கி லென்னைமார்] - சொல்லுகிறவையெல்லாம் எங்கள் பந்துக்கள் கேட்பர்களாகில் சாலத் தப்பாய் விடுங்கிடாய். என்னைமார் - ஆணுடன்பிறந்தார். [தன்மபாவமென்னார்] - உன்பக்க லெங்களுக்கு பாவபந்தமில்லை என்னுமிடம் அறியார்கள். நீ மேல்விழுகிறத்தைக் கண்டு, "இதுசெய்யலாம், இதுசெய்யவொண்ணாது" என்றுபாராதே கலியர்கள்கிடாய். "ஆறுலென்? அவர்கள் அது அறியாகின்றார்களோ? அவர்களிங்கில்லையே!" என்றான். [ஒருநான்று] - அதுவோ! முதலிலே தவிரில் அறியாதொழியுமத்தனைபோக்கி, எல்லாம் செய்தாலு முண்டானு லொருநாள்வரையிலே அறிவர்கள்காண். "அறிகிது; அறிந்தால்தான் வருவதென்?" என்றான். [தடிபிணக்கே] - பின்னைக்குத்தும் பூசலுமாயன்றோ தலைக்கட்டுவது. ராமாவதாரத்தில் ஸர்வவ்யாபாரங்களும் விற்கொண்டே வ்யாபரிக்குமாபோலே, க்ருஷ்ணவதாரத்திலே தடி கொண்டே கார்யங்கொள்ளுமத்தனை.

பிணக்கியாவையும்யாவரும் பிழையாமல்பேதித்தும்பேதியாததோர்*
கணக்கில்கீர்த்திவெள்ளக் கதிர்ஞானமூர்த்தியினாய்*
இணக்கியெம்மையெந்தோழிமார் விளையாடப்போதுமினென்னப்
உணக்கிநீவளைத்தால் என்சொல்லார்களவாதவரே. [போந்தோமை* (8)

ஒ.—[பிணக்கியாவையும்.] - "நாமிருக்கிலிறே இங்கு இவனுக்கு நம்மை நலியலாவது; நாம் போவோம்" என்று தோழிமாருந்தானும்போக உபக்ரமிக்க, எம்பெருமானும் அவர்கள் போகிற வழியைக்கொண்டு அவர்களைப் போகவொட்டாதே வளைக்க, அவர்களும் சேதநாசேதநங்களை தேவதிர் யங்மநுஷ்யாதிவிபாகங்களை ஒழிந்து ஒன்றும்படிகலசி, "அழித்தது ஸ்ருஷ்டித்தது" என்று தெரியாத படி, ஸம்ஹாரகாலத்துக்கு முன்பு இருந்தபடிகளில் ஒருவாசிபடாதபடி ஸ்ருஷ்டித்து இதில் ஒராயாஸப் படாதபடி மஹாப்ரபாவமான விலக்ஷணஸங்கல்பரூப ஜ்ஞாநத்தையுடைய ஸர்வேச்வரனான நீ, தோழி மார் 'தங்களோடே கூடிக்கொண்டு விளையாடப் போருங்கோள்' என்ன அறியாதே போந்த எங்களை உன் னுடைய ஸௌந்தர்யாதிகளாலே நெருக்கி எங்களைப் போக வொட்டாதொழிந்தால் இத்தை-ஸஹியாத உன்னுடைய மின்னிடைமடவார் இம்மாத்ரத்தையே கொண்டு, யோக்யதையாலே, "ஸம்ச்லேஷம் வ்ருத்தம்" என்று சொல்லி உன்னை உபேக்ஷிப்பார் என்கிறாள்.

இ.—எட்டாம்பாட்டில், "நாம் இங்கிருக்கிலிறே இவனுக்கு மர்மங்களைச் சொல்லி நலியலாவது; நாம் போவோம்" என்று, எல்லாருங்கூடப் போகப்புக்கார்கள்; இவர்கள் போகிறவழி ஓரடிப்பரப்பாய் ஒழுகப்போகவேண்டுகையாலே, வழியைக்கட்டியிருவிலங்காகக்கிடந்தான்; அவனைப்பார்த்து வார்த்தை சொல்லுகிறார்கள்:—[பிணக்கி இத்யாதி]. [யாவையும்யாவரும் - பிணக்கி] - சேதநாசேதநங்களை தேவாதிவிபாகமற்று "தம:-ஏகீபவதி" என்று தன்னோடே அவிபக்தமாம்படி கலசி. [பிழையாமல் பேதித் தும்] - ஸ்ருஷ்டிகாலத்திலே ஒருத்தன்கர்மம் வேறொருவன் அநுபவியாதபடி, பேதித்தும் - ஸ்ருஷ்டித்து

மென்றபடி. [பேதியாததோர் கணக்கில் கீர்த்திவெள்ளக் கதிர்ஞான மூர்த்தியிஞய்] - ஸம்ஹார காலத்தில், அசித்கதமான ஸௌக்ஷ்மபரிணாமம், சேதநகதமான அஜ்ஞாநம்: ஸ்ருஷ்டிகாலத்தில், அசித்கத மான ஸ்வரூபாந்யதாபாவம், சேதநகதமான ஸ்வபாவாந்யதாபாவம்: ஆக, இப்பேதங்கள் ஒன்றுமின்றிக்கே ஏகரூபமாய் அத்விதீயமாய் அநவதியான ஏகரூபத்வமாகிற கீர்த்தி ஸமுத்ரத்தை யுடையையாய், ப்ரபாரூபமான ஸங்கல்பஜ்ஞாநத்துக்கு ஆச்ரயமானவனே! இத்தால் - விச்லேஷதசையில் கலக்கமும், ஸம்ச்லேஷதசையில் போகரூபவிக்ருதியு மின்றிக்கே ஏகரூபனென்கை. [இணக்கி இத்யாதி] - "உன்னோட்டைக் கலவி அபாயம்" என்று அறியாத எங்களை உன்னோடே சேர்த்து. இவ்வளவாக விளைத் தவர்களைச் சொல்லாதே உன்னைச் சொல்லுகிறதென்? பகவத்விஷயத்தில் வைசத்யம் பிறந்தால் உபகாரகரைக் கொண்டாடுமென்னும் அர்த்தமிறே உள்ளோடுகிறது. "நித்யம் யதிய சரணௌ சரணம் மதீயம்". [எந்தோழிமார்] - ஸஜாதீயராயிறே சேர்ப்பது. [விளையாடப்போதுமி னென்னப் போந்தோமை]- "க்ருஷ்ணனுண்டு" என்றறிந்தோமாகில், வாரோம்; இவ்வகப்பாட்டை அறிந்திருந்தோமாகில் வாரா தொழியலாயிற்று. "அத்தால் வந்ததென்?" என்ன, [உணக்கி நீ வளைத்தால்] - உணக்குகையாவது - தரிக்கமாட்டாதே துவளும்படிபண்ணுகை. உன்முகம் பார்த்து அநுபவிக்கப்பெறுமையாலே தரிக்க மாட்டுகிறிலோம்; நீ வளைக்கையாலே போகமாட்டுகிறிலோம். [என்சொல்லாருகவாதவரே] - நீயும் நாங்களுமாக இருக்கக்கண்டால் உகவாதவர் என்சொல்லார்? "உங்கள் ஸங்கிதிமாத்ரமேயன்றோ உள்ளது; இதுக்குச் சொல்லுவதெத்தை?" என்ன, யோக்யதையாலே 'ஸம்ச்லேஷம் வ்ருத்தம்' என்று உன்னுடைய மின்னிடைமடவார்கள் உபேக்ஷிப்பர்கள்; பிரிவாற்றாமையாலே கண்ணுஞ்சுழலை இடுகிற வர்கள் எத்தைச் சொல்லார்? உன்மேன்மையையும் குணவத்தாப்ரதையையும் இழக்கக்கிடாய்புகுகிறாய். ஆப்பான், "இவளை இவர்கள் கடந்துபோனார்களாகிற் செய்வதென்?" என்ன, ஜீயர், "அது ஆர்க்கு அழகு?" என்று அருளிச்செய்தார். நின்றார்களாகில் நினைத்தது பெற்றானாகிறான்; கடந்து போனார் களாகில் ஸம்ச்லேஷார்த்தமான க்ருஷி தலைகட்டிற்றாகிறது.

௬௫.—எட்டாம்பாட்டு. கிட்டிநின்று இவர்களைச் சில மிறுக்குக்களைப் பண்ணப்புக் கான்; "இங்கே யிருக்கிலன்றோ இதெல்லாம் வேண்டுவது" என்றுபார்த்து, ஒருவரொருவ ராகப் போகப்புக்கார்கள்; "இதுவோ பார்த்தபடி!" என்றுவழியைப்பற்றி இருவிலங்காகக் கிடந்தான். உத்யாநமாகையாலே வழி ஓரடிப்பாடாயிருக்குமிறே. இப்பாட்டை ஜீயர் அருளிச்செய்யாநிற்கச்செய்தே ஆப்பானிருந்தவர் "இவர்களிவனைக் கடந்துபோனார்களாகிற் செய்வதென்?" என்றுகேட்க, "அது ஆர் காரியம்? பின்னை இரண்டத்தொன்று ஸித்திக்கும் என்றன்றோ அவன் தான்கிடந்தது!" என்றருளிச்செய்தார். (நின்றார்களாகில் நினைத்தது பெற்றானாகிறான்; கடந்துபோனார்களாகில் ஸம்ச்லேஷார்த்தமான க்ருஷி தலைக்கட்டிற்றாகிறது.)

நீ வழியைப்பற்றிக் கிடவாநின்றாய்; நீசெய்கிறவையெல்லாம் உறவுஉண்டாய்ச் செய்கிறா யென்றிருப்பர்கள் கிடாய்; நீ ஸர்வவிஷயமாகப்பண்ணும் லீலைக்கு ஓரளவு உண்டோ? உன்னை யொழிந்த வஸ்துக்களெல்லாவற்றுக்கும் கோடிவிகாரத்தைப்பண்ணி, அவிக்ருதனாயிருப் பானொருவனிறே; அப்படியே எங்களை விக்ருதராகப்பண்ணி நீ அவிக்ருதனாயிராநின்றாய்! [யாவையும்யாவரும் - பிணக்கி] - தன்பக்கல் பொருந்துகைக்கு நினைவில்லாதவற்றையும், நினைவாலே பொருந்தாதவற்றையுங்கூட்டி, *தம:பரேதேவ ஏகீபவதி* என்று தன்னோடு அவிபக்த மாம்படி கலசி. [பிழையாமல் பேதித்தும்] - தப்பாமல் பிரித்தும்- வயிற்றிலே வைத்துப் புறப்படவிடுதல், ஸம்ஹரித்துப்புறப்படவிடுதல். ஒரோ தேசாபங்களிலே அமர்ந்த நிலங்களிலே குடிவாங்கிப் பின்புதெளிந்தவாறே ஸ்வஸ்த்தாநங்களிலேபுகுந்து, விட்டகார்யங்களிலே அதிகரி ப்பாரைப்போலே. ஒருத்தன் பண்ணின கர்மம் வேறொருத்தன் சென்று புஜியாதபடி தன்பக்க லினின்றும் பிரித்தும், [பேதியாதோர்கணக்கில் கீர்த்திவெள்ளக் கதிர்ஞான மூர்த்தியினாய்] - கார்யாவஸ்த்தமான துவே காரணாவஸ்த்தமானாலும், அசித்கதமான ஸௌக்ஷ்ம பரிணாமம், சேதந கதமான அஜ்ஞாநம், ஸ்ருஷ்டிகாலத்தில் அசித்கதமான ஸ்வரூபாந்யதாபாவம் சேதநகதமான ஸ்வபாவாந்யதாபாவம், ஆக இப்பேதங்கள் ஒன்றும் இன்றிக்கே ஏகரூபமாய், அத்விதீயமாய் அநவதியான கீர்த்தி ஸமுத்ரத்தை யுடைத்தாய், ப்ரபாரூபமான ஸங்கல்பரூப ஜ்ஞாநத்துக்கு ஆச்ரயமானவனே! எல்லாப்பொருள்களுக்கும் வித்தாய் முதலிற்சிதையாத மனஞ்செய் ஞானபி

றே. இத்தால்-விச்லேஷதசையில் கலக்கமும், ஸம்ச்லேஷதசையில் போகருபவிக்ருதியுமின்றிக்கே ஏகரூபனென்கை. [கணக்கில் கீர்த்திவெள்ளம்] - "இப்படிப்பட்ட குணங்களை அளவிடுவோம்" என்று பார்த்தாருண்டாகில் இளைத்துக் கால்வாங்கும்படி இருக்கை. [கதிர்ஞானமூர்த்தியினாய்]-இப்படி கூட்டுவன கூட்டிப் பிரிப்பன பிரித்தாலும், ஜ்ஞாநத்துக்கொரு குறைவற்றிருக்கை. [கதிர்ஞானமூர்த்தியினாய்] - கார்யங்கொண்டதென்று மழுங்காதிருக்கை; கார்யங்கொள்ளக்கொள்ளப் புகர்த்துவருகை. [கதிர்ஞானமூர்த்தியினாய்]-ஜ்ஞாநஸ்வரூபனாயுள்ளவனே! [இணக்கியித்யாதி] - நீ செய்கிறவற்றால் ப்ரயோஜநமுள்ளது நீ யிருந்தவிடத்தே நினைத்துத் தேடிவந்தாருண்டாகிலன்றே! [இணக்கி] - இசையும்படி வார்த்தைசொல்லி. "அவ்விடம் க்ருஷ்ணன் வாராதவிடம்" என்றுகிடீர் சொல்லிக்கொண்டு போந்தது. [எம்மை] - உன்னோட்டைக்கலவி அபாயம் என்றறியாத எங்களை, [எந்தோழிமார்] - உன்னைவெறுக்கிறதென்? உன்பக்கல் குற்றமுண்டோ? சேர்த்தாராலேவந்ததுகிடீர்! பகவத்விஷயத்தில் வைலக்ஷண்யம் நெஞ்சிலேபட்டால் உபகாரகரைக்கொண்டாடுமென்னும் அர்த்தமிறே உள்ளோடுகிறது. *நித்யம் யதீயசரணௌ சரணம் மதீயம்* என்று இங்கோடு அங்கோடு வாசியற அவர்களாலே வருமதிறே. [எந்தோழிமார்] - ஸஜாதீயராயிறே சேர்ப்பது. [விளையாடப் போதுமினென்னப் போந்தோமை] - அவர்கள் உனக்குப் பெருமிலைக்கேற்ப தரியப்பெற்றிலோம். சொலவுக்குமேல் அகவாய் ஆராயப்பெற்றிலோம். "நீயுண்டு" என்றறிந்தோமாகில் இவ்விடமென்றும் நினையோம்; "அவர்களுனக்குப்பார்வை" என்னுமிடம் அறியப் பெற்றிலோம். "போகடுங்கோள்; ஆனாலென்? அவர்கள்சொல்லப் போந்திகோளாகில் உங்களுக்கு வந்த அநர்த்தமென்?" என்றான்; [உணக்கிநீவளைத்தால்] உணக்குகையாவது - தரிக்கமாட்டாதே துவளும்படி பண்ணுகை. எங்களுக்கு இதுக்குமேல் வருவதென்? கால் வாங்கிப்போகப் பெறுகிறிலோம்; கிட்டிநின்று முகம்பார்த்து அநுபவிக்கப்பெறுகிறிலோம், இதுகாண வேண்டாதவர்கள் என்சொல்லுவர்கள்? "எத்தைச் சொல்லுவது: என்னை 'ஈச்வரன்' என்றிகோளாகில், உங்களை 'இடைச்சிறுபெண்கள்' என்றிகோளாகில், இனி எத்தைச் சொல்லுவது?" என்றான். "நீஸர்வேச்வரனானதுவும், நாங்கள் இடைப்பெண்களானதுவுமேயிறே சொல்லுகைக்கு ஹேதுவும்". ஈச்வரனோடொக்கப் பழிசொல்லுகைக்கு இவர்கள் தாம் ஒரு நப்பின்னைப்பிராட்டிபோல்வார் ஆகாதேதான். "அது என்தான்? என்னோடு உங்களுக்கு பாவபந்தமில்லை என்னுகின்றிகோளாகில் இத்தால் வருவதென்?" என்றான்; [என்சொல்லாருகவாதவரே] - "உன்பக்கல் எங்களுக்கு பாவபந்தமில்லை" என்று அறிவர்களோ உகவாதார்? நீ அல்பம்கால்தாழ்த்த இதுவே ஹேதுவாக "ஸம்ச்லேஷம் ப்ரவ்ருத்தமாயிற்று" என்னார்களோ? வளைக்கிற உன்னையும், வளைப்புண்கிற எங்களையும் அறிந்தோ அவர்கள் வார்த்தைசொல்லுவது? [என்சொல்லாருகவாதவரே] - உன்னுடைய மின்னிடை மடவார் உன்னை நெகிழ வார்த்தைசொல்லுவர்கள். பிரிவாற்றாமல் கண்ணுறங்கமலைபடுகிறவர்கள் எத்தைச்சொல்லார்?

உகவையால்நெஞ்சமுள்ளுருகி உன்தாமரைத்தடங்கண்விழிகளின்*
அகவலைப்படுப்பான் அழித்தாயுன்திருவடியால்*
தகவுசெய்திலையெங்கள்சிற்றிலும் யாமடுசிறுசோறுங்கண்டு* நின்
முகவொளிதிகழ முறுவல்செய்துநின்றிலையே. (9)

ஒ.—[உகவையால் நெஞ்சமுள்ளுருகி] - எம்பெருமான் தன்னைப் போகவொட்டாதொழிய, அவனைக் கடைக்கணியாதிருந்து, தானும் தோழிமாரும் சிற்றிலிழைக்கை தொடக்கமான லீலாவிநோத வ்யாஜத்தாலே அந்யபரைகளைப்போலே யிருக்க, இவளுடைய வீக்ஷிதாதிகளையொழியத் தான் தரிக்கக்ஷமனல்லனாகையாலே, இவள்கடாக்ஷிக்கைக்காக இவளுடைய சிற்றிலையும் சிறுசோற்றையும் தன் திருவடிகளாலே சிதற, சிற்றிலழித்த சீற்றத்தாலே தன்னுடைய ஸங்கல்பத்தைமறந்து, அவன்முகத்தைப் பார்த்து அவன் கண்ணழகிலே ஈடுபட்ட பிராட்டி, "நாங்கள் ப்ரீத்யதிசயத்தாலே நெஞ்சு உருகி தாமரைத்

தடாகம்போலே மனோஹரமான உன்னுடைய திருக்கண்களின் நோக்காகிற வலையுள்ளே அகப்படும்படி பண்ணுகைக்காக எங்கள் சிற்றிலையும், நாங்கள் அடுகிற சிறுசோற்றையும் உன் திருவடிகளாலே அழித்தருளினும்; எங்களுடைய லீலாவிநோதங்களைக்கண்டு ப்ரீதனும் உன்னுடைய முகவொளிதிகழ முறுவல் செய்து நின்றிலை; இங்ஙனே செய்தவிடம் தக்கோர்மைசெய்தாயல்லை'' என்றுசொல்லி, எம்பெருமானோடு ஸம்ச்லேஷியேன்'' என்று தான்பண்ணின ஸங்கல்பத்தையும் அவன் தன்னுடைய ஸௌந்தர்யாதிகளாலே சிதிலமாக்கினபடியைச்சொல்லி அவனை இன்னுதாகிறாள்.

இ.—ஒன்பதாம்பாட்டில், ''போகவொட்டேன்'' என்றால், நினைத்தபரிமாற்றம் பெற்றாலன்றோ இவனுக்கு ப்ரயோஜநமுள்ளது; ஒருதேச விசேஷத்திலே முக்தர் ஸம்ஸாரிகளோடு உறவற்றிருக்குமாபோலே, அந்யபரதை பண்ணுவோம்'' என்று சிற்றிலிழைக்கத் தொடங்கினார்கள்; இவர்களுடைய வீக்ஷிதாதிகளையொழியத் தனக்குச் செல்லாமையாலே, இவர்கள் கடாக்ஷிக்கைக்காகச் சிற்றிலையும் சிறுசோற்றையும் தன் திருவடிகளாலே அழித்தான்; அத்தாலேஇவர்களுக்குச் சீற்றம்பிறந்து, தங்கள் ஸங்கல்பத்தை மறந்து அவன்முகத்தைப்பார்த்துச் சொல்லுகிறார்கள்: [உகவையால் நெஞ்ச முள்ளுருகி] - பிரிந்து நெஞ்சைப் புண்படுத்துகையால்வந்த உருகுதல் ஒழிய, எங்களுகவையால் நெஞ்சமுள்ளுருகி [உன் தாமரைத்தடங்கண்விழிகளின் அகவலைப்படுப்பான்] - தாமரைத்தாடகம்போலே மனோஹரமான உன்னுடைய கண்ணில் நோக்காகிற வலையுள்ளே அகப்படுத்துகைக்காக. த்ருஷ்டிபந்தத்தாலேயிறே அநந்யார்ஹமாக்குவது. [அழித்தாயுன் திருவடியால்] - உன்சிற்றிலழிக்கவேண்டும் பரிகரம் அமையாதோ இதுக்கு? ஜகதுபஸம்ஹாரம் பண்ணுவது ஸங்கல்பத்தாலேயிறே. ஸங்கல்பத்தாலேயாதல், கையாலேயாதல் அழிக்கலாகாதோ? [தகவுசெய்திலை] - நிர்த்தயர்செய்வதைச் செய்தாய். பிரிந்தபோதே ப்ரணயித்வம் போயிற்றிறே. நீர்மையுடையார் செய்வதும் செய்திலை. ''நான்செய்த குறையென்?'' என்ன.—[எங்கள் சிற்றிலுமித்யாதி] - எங்கள் லீலைகளைக்கண்டு ப்ரீதனாய், நின்முகவொளிதிகழ முறுவல் செய்து நிற்க, நாங்கள் சிற்றிலைத் தொட்டுக்கொண்டிருந்து கடைக்கண்ணாலே உன்னைப் பார்த்துக் கொண்டிருக்க வைத்திலையே. முழுக்கப்பார்க்கில் எல்லாரோபாதியுமாமே. ப்ரணயியைப்பார்ப்பது கடைக்கண்ணாலேயிறே. உன்னுடைய லீலைபோலே என்றிருந்தாயோ எங்களுடைய லீலையை? கர்மநிபந்தமாகையாலே த்யாஜ்யமிறே இது ''உன்னோடு ஸம்ச்லேஷியேன்'' என்று நான்பண்ணின ஸங்கல்பத்தை அழகாலே அழித்தாய்; லீலைகளைத்திருவடிகளாலே அழித்தாய் என்று இன்னுதாகிறாள்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. ''இவன் 'போகவொட்டேன்' என்று வளைத்துக்கிடந்ததுக்கு ப்ரயோஜநமுள்ளது இவனுக்கு நினைத்தபடி பரிமாறப் பெற்றாலன்றோ? ஒருதேசவிசேஷத்திலே முக்தர் ஸம்ஸாரிகளோடு உறவற்றிருக்குமாபோலே இவன்முகம்பாராதே யிருக்கிறோம்'' என்று அத்யவஸித்துப் பேசாதேயிருந்தவாறே, ''தன்னை நினைத்துக்கொண்டிருந்தோம் என்றிருக்குமிவன்'' என்று ''அந்யபரதைதோற்றச் சிற்றிலிழைப்போம்'' என்று இழைக்கப்புக, ''என்னைப்பாராதே இருப்பதுமன்றிக்கே சிறிது அந்யபரதை பண்ணுவதே!'' என்று சிற்றிலையும் சிறுசோற்றையும் தன் திருவடிகளாலே அழிக்க, அத்தாலே அவர்களுக்குச் சீற்றம் பிறந்து, தங்கள் ஸங்கல்பத்தை மறந்து, அவன்முகத்தைப் பார்த்துச் சொல்லுகிறார்கள். அவனுடைய அபிமதஸித்திக்கும் ஸாதநம் திருவடிகள்காணும். அடியுடையார்க் கெல்லாம் ஸாதித்துக்கொள்ளலாமே.

[உகவையால் நெஞ்சமுள்ளுருகி] - வாராய்! உன்ப்ரவ்ருத்தி வ்யர்த்தப்ரவ்ருத்தி காண்; பிரிந்து நெஞ்சைப் புண்படுத்துகையாலே வந்த உருகுதலொழிய, எங்களுக்கு உகவையால் நெஞ்சமுள்ளுருகிப் பண்ணவிறே நீ பார்த்தது; அதுசெய்யப்போகாது. [உன்தாமரை யித்யாதி] - பகற்கண்டகுழியிலே விழவிட்டகப்படுத்துவான்; த்ருஷ்டிபந்தத்தாலேயிறே அநந்யார்ஹமாக்குவது. தாமரைபோலே பரிமளத்தையும் குளிர்த்தியையும் சிவப்பையுமுடைத்தாய், போக்தாக்களால் உண்டறுக்கவொண்ணாத போக்யதா ப்ரகர்ஷத்தையுடைய திருக்கண்களின் நோக்காகிற வலையுள்ளே அகப்படுத்துகைக்காக. [அகவலை] - வலைக்குள்ளே. அகவலை - அகவிய வலை என்றுமாம். கண்ணென்னும் நெடுங்கயிறிறே. கண்ணிலே யகப்பட்டால், ஜ்வரஸம்நிபதிதரைப்போலப் பிதற்றுபித்தனையிறே; 'தாமரைக்கண்ணனை விண்

ளுணர்பரவுந்தலைமகனை' என்கிறபடியே. [அழித்தா யுன்திருவடியால்] - ஸங்கல்பத்தாலழிக்க லாவது தன்சிற்றிலிறே; இவர்களுடைய சிற்றில் ஸ்பர்சித்தழிக்கவேணுமே: உன்சிற்றி லழிக்கும் பரிகரமமையாதோ இதுக்கு? ஜகதுபஸம்ஹாரம் பண்ணுவது ஸங்கல் பத்தாலேயிறே. சேஷபூதனுக்குந் திருவடிகள் உத்தேச்யமானவோபாதி, ப்ரணயிநிகளுக்கும் திருவடிகளுத்தேச்யமாயிறேயிருப்பது. [அழித்தாய்] -வெறுஞ்சிற்றிலையன்றுகாண் நீயழித்தது. எங்களகவாயையும் அழித்தாய்காண்; சிற்றிலோ டெங்கள்சிந்தையும் சிதைத்தாய்காண். காலாலே சிற்றிலையழித்து, கண்ணாலே யெங்களபிஸந்தியையும் அழித்தாய்காண்'என்கிறார்கள். [தகவுசெய்திலை] - க்ருபையுடையார் செய்வதைச் செய்திலை. பிரிந்தபோதே ப்ரணயித்வம் போயிற்றிறே: இனிக் கண்ணுடையார் செய்வதும் செய்திலை. கண்படைத்ததுக்கு ப்ரயோ ஜநம் நல்லதுகண்டுகொண்டிருக்க வன்றோ? ''உன்முகந்தன கண்களல்லவே!'' ''நான் செய்த குறையென்? என்ன, - [எங்கள்சிற்றிலித்யாதி] - உன் ஸ்ருஷ்டிபோலே அநுபாதேயமோ எங்கள் ஸ்ருஷ்டி? உபாதேயமன்றோ? ''என்னுடைய ஸ்ருஷ்டி அநுபாதேயமானபடியென்? உங்கள் ஸ்ருஷ்டி உபாதேயமானபடியென்?'' என்னுமே அவன்; உன்னைப்போலே நெருப்பும் காற்றும் அன்னனுக் துன்னனுமாகவிட்டுக் கர்மாநுகுணமாக ஸ்ருஷ்டித்ததோ இது? வண்டல் நுண் மணல் தெள்ளி யாம் வளைக் கைகளால் சிரமப்பட்டதன்றோ இது! [யாமடுசிறுசோறுங் கண்டு] - நீயடுசிறுசோறு நிர்மால்யத்தோபாதி புறம்பு ஒருத்தர்க்கு புஜிக்கலாகாது; நீயே புஜிக்கு மத்தனை; (அத்தா பரமாத்மாவிறே.) நாங்களடுசிறுசோறு கூடநெய்பெய்து முழங்கை வழிவாரக் கூடியிருந்து புஜிக்குமதன்றோ? [கண்டு நின் முகவொளிதிகழ முறுவல்செய்துநின்றி லையே] - எங்களுடைய லீலாவிநோதங்கண்டு ப்ரீதனாய், உன்னுடைய முகவொளிதிகழ மந்த ஸ்மிதம்பண்ணி நிற்கமாட்டிற்றிலையே; இங்ஙன்செய்தவிடம் தக்கோர்மை செய்தாயல்லையே என்று இன்னாதாகிறார்கள். [தகவுசெய்திலை] - நாங்கள் சிற்றிலிழைக்கிறோமாகப் பாவித்துக் கடைக்கண்ணாலே உன்முகவொளியையும் முறுவலையுங் கண்டுகொண்டிருக்க வொட்டிற் றிலையே. முழுக்கப்பார்க்கில் எல்லாரோபாதியுமாமே: ப்ரணயியைப் பார்ப்பது கடைக்கண்ணா லேயிறே? எங்ஙனே பாராதேயிருந்து சிற்றிலிழைத்தார்கள்தான்.

நின்றிலங்குமுடியினாய் இருபத்தோர்காலரசுகளைகட்ட*
வென்றிநீண்மழுவா வியன்ஞாலம்முன்படைத்தாய்*
இன்றிவ்வாயர்குலத்தை வீடுய்யத்தோன்றியகருமாணிக்கச்சுடர்*
நின்றன்னால்நலிவேபடுவோமென்றும் ஆய்ச்சியோமே. (10)

ஒ.—[நின்றிலங்கு முடியினாய்] - அந்யபரைகளாய் நேராகப்பாராதேயிருந்த இப்பிராட்டியும் தோழிமாரும் நேரப்பார்க்கைக்காக, இழைக்கிறசிற்றிலைத் திருவடிகளாலே அழித்தருள, அவ்வந்யாயப் பாடறிவிப்பாரைப்போலே, அவனைத் திருவடிகளேதொடங்கித் திருமுடியளவும் நோக்குகையாலே அவனுக்குப்பிறந்த வழகையும், மேன்மையையும், தாங்கள் இவனோடேஸம்ச்லேஷிப்போமல்லோ மென்று அபிஸந்திபண்ணியிருக்க அத்தைஅழித்த ப்ரஸங்கத்தாலே இருபத்தொருபடிகால் க்ஷத்ரிய குலத்தையெல்லாம் கோலியறுத்த ஆண்பிள்ளைத்தனத்தையும், பண்டு ப்ரளயகாலத்தில் அஸத்கல்ப மானஜகத்தை உண்டாக்கினாப்போலே இடைச்சாதியடையத் தலையெடுக்கும்படிவந்து திருவவதாரம் பண்ணியருளின உபகாரத்தையும் பேசாநின்றுகொண்டு ஊடல்தீர்ந்து, அவனோடு ஸம்ச்லேஷித்து, ஏவம்விதனான உன்னால் இடைப்பெண்களான நாங்கள் நலிவேபடப்பிறந்தோமென்று தங்களுடைய ஆர்த்தியெல்லாந்தீரத் தாங்கள்பட்டநோவை அறிவிக்கிறாள்.

இ.—பத்தாம் பாட்டில், லீலையைத் திருவடிகளாலே அழித்த சீற்றத்தாலே முன்புத்தையவற்றை மறந்து, அவ்வந்யாயப்பாட்டை அறிவிப்பாரைப்போலே, ''இவனை முகம்பாரோம்'' என்ற ஸங்கல்பமழிந்து முகத்தைப் பார்த்தார்கள்; நெஞ்சில் மறமெல்லாம்போய் அந்தத்திருவடிகளே தொடங்கித் திருமுடியளவும் பார்க்க, அத்தாலே அவனுக்குப்பிறந்த விசேஷத்தைச்சொல்லுகிறாள்; [நின்றிலங்கு முடியினாய்] -

என்னைத் தோற்பிக்கையாலே நிலைநின்று விளங்காநின்ற திருவபிஷேகத்தை உடையவனே! அபிஷிக்த க்ஷத்ரியர் விஜயாபிஷேகம் பண்ணினாற்போலே, எங்களைத் தோற்பித்த பின்பு முடியும் நற்றரித்து விளங்குவதுஞ்செய்த தென்கை. இத்தலையில் - ஸத்தை உண்டாய் அத்தாலே ரக்ஷகத்வம் நிலைகின்றபடி. [இருபத்தோர்கால் இத்யாதி] - "உங்களபிஸந்தியைக்குலைத்து முகம்பார்க்கப் பண்ணினோமிறே" என்ன, உன்னோடு எதிரிட்டாரில் உன்னைவென்றாருண்டோ ? இருபத்தோர்படிகால் க்ஷத்ரியகுலத்தைக் கோலியறுத்த ஆண்பிள்ளையல்லையோ ? எதிரிகளை மழுவாலே அழித்தாப்போலே, அநுகூலரை அழகாலே அழிப்புதி. "பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம்" என்று ஆண்களை அழிக்கக்கடவநீ, அபலைகளை அழிக்கச்சொல்லவேணுமோ ? [வியன்ஞாலமுன்படைத்தாய்] - ப்ரளயத்திலே உருமாய்ந்து கிடந்த பூமியை உண்டாக்கினாப்போலேயிறே ப்ரணயரோஷத்தாலே அழிந்த எங்களை உண்டாக்கினபடி. வியன் - விஸ்மயம். ப்ரளயங்கொண்ட பூமியை எடுத்தாப்போலேயிறே விரஹப்ரளயங்கொண்ட எங்களை எடுத்தபடி. அங்கு விலக்குவாரில்லாமையாலே செய்யலாம்; நிஷேதிக்கச்செய்தேயன்றோ உண்டாக்கிற்று. [இன்று இத்யாதி] - இன்று இவ்விடைச்சாதி ஸபரிகரமாக உஜ்ஜீவிக்கும்படி தோன்றினவன். வீடுய்ய - ஸபரிகரமாக உய்ய. [கருமாணிக்கச்சுடர்] - ப்ரணயரோஷத்தாலே இருய்த்திருக்கிற எங்களை மேல் விழுந்து உன்னழகை அநுபவிப்பித்தவனே! [நின்தன்னால் நலிவே படுவோமென்றும்] - இவ்வநுபவம் ஸ்வப்நகல்பமாய், ஆற்றாமையிறே பெங்களுக்கு நிலைநின்று போருவதென்று தாங்கள் பட்டநோவை அறிவிக்கிறார்களென்னுதல்; "ஜிதந்தே" என்றும், "தோற்றோம்மடநெஞ்சம்" என்றும் தாங்கள் தோற்றபடியை அவன் தனக்குச் சொல்லுகிறார்களாகவுமாம். [ஆய்ச்சியோமே] - இடக்கையும் வலக்கையும் அறியாத நாங்கள்.

ஈ0.—பத்தாம்பாட்டு. "நின்முகவொளிதிகழ முறுவல்செய்து நின்றிலையே" என்று விழுக்காடறியாதே வாய்தப்பச் சொல்லிக்கொண்டு நின்றார்கள்; காலால் அழித்தது சிற்றிலையன்றே; இவர்கள் நெஞ்சில் மறத்தையயிறே; அந்த மறம் போனவாறே மேல்நோக்கிப் பாதாதிகேசாந்தமாகப் பார்த்தார்கள்; தங்களை ஜயிக்கையாலுண்டான ஹர்ஷம் வடிவிலே தோற்றும்படி நின்றான்; அவ்வடிவில் பிறந்த வேறுபாட்டைச் சொல்லுகிறார்கள்.

[நின்றிலங்குமுடியினாய்] - இவர்களை ஜயிப்பதற்குமுன்பு தலைச்சுமையாய்க் காணும் கிடந்தது; இப்போதாயிற்று நற்றரித்து ஒளிவிடத் தொடங்கிற்று. சில ராஜாக்கள் தந்தாம் எதிரிகளை யழித்து வீராபிஷேகமும் விஜயாபிஷேகமும் பண்ணி நிற்குமாபோலே, முன்பே முடிசூடியிருக்கச்செய்தேயும் இவர்களைத் தோற்பிப்பதற்குமுன்பு அஸத்ஸமமாய்க் காணும் இருந்தது. ராவணாதிகளை ஜயித்ததுக்குச் சூடின முடிபோலல்லவிறே ப்ரணயிகளை ஜயித்ததுக்குச்சூடின முடி யிருப்பது; இவர்கள் அபிஸந்தியைக் குலைத்துப் பொருந்தவிட்டுக்கொண்ட பின்பு காணும் மேன்மையையுடையனும் உஜ்ஜ்வலனுமாய் முடியும் நற்றரித்தது. *அபிஷிச்ய ச லங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம் க்ருதக்ருத்ய:* - ஸ்ரீபரதாழ்வானைப்போலே 'நான் முடிசூடேன் நீர்முடிசூடும்' என்று முடிக்கு இறாய்க்கிற் செய்வதென்?'; என்று உடம்பு வெளுத்துக் காணும் இவரிருந்தது; "ஒருபடி அத்தலைச்சுமையைக் கழித்துப்போந்தோம்; இதுவும் தலைச்சுமையாகிற் செய்வதென்?" என்று. இக்ஷ்வாகுவம்ச்யர்க்குப் பணியிறே முடிக்கு இறாய்க்கை. அடிக்கு இறாயாதிருக்கையும் முடிக்கு இறாய்க்கையுமிறே ஸ்வரூபம். "அதுகிடக்க; உங்கள் அபிஸந்தியைக்குலைத்து உங்களைவென்றோமிறே" என்றான். [இருபத்தோர் காலித்யாதி] - மிடுக்கரான ராஜாக்களை இருபத்தொருபடிகால்வென்ற உனக்கு அபலைகளான எங்களை வெல்லுகை பெரியபணியோ? "எனக்கு" என்றிருப்பாரையும் உனக்காக்கிக்கொள்ளவல்ல உனக்கு உனக்கேயா யிருப்பாரை வெல்லுகை பெரியஏற்றமோ? ஆஸுரப்ரக்ருதிகளாய் நாட்டைப் படஅடித்துத்திரிகிற க்ஷத்ரியகுலத்தைக் கிழங்கெடுத்த மிடுக்கனே! களைகட்டுகையாவது - எடுத்துப் போகடுகை. ராஜாக்களை வென்றவுனக்கு இடைச்சிகளைவென்றா யென்பது ஓரேற்றமோ? (ராஜாக்களை யுக்மூலமாய்ப்படிபண்ணின வெற்றியையுடைத்தான பெரியமழுவையுடையவனே!) [வியன்ஞாலமுன்படைத்தாய்] - ப்ரளயத்திலே உருமாய்ந்துகிடந்த பூமியை யுண்டாக்கினாப் போலேயிறே ப்ரணயரோஷத்தாலேயழிந்த எங்களையுண்டாக்கினபடி. வியன் - விஸ்மயம்.

ப்ரளயங்கொண்டபூமியை யெடுத்தாப்போலே, விரஹப்ரளயங்கொண்ட எங்களை யெடுத்தபடி. அங்கு விலக்குவார் இல்லாமையாலே செய்யலாம்; "கழகமேறேல்" என்று நிஷேதிக்கச்செய்தேயன்றோ உண்டாக்கிற்று? [இன்றித்யாதி] - *பஹுஸ்யாம்* என்று பொதுவான ஸ்ருஷ்டி தேடிப்போகவேணுமோ? இவ்விடைக்குலத்தேவந்து பிறந்து, இன்று இவ்விடைச்சாதியை ஸபரிகரமாக வடிவைக்காட்டி ரக்ஷித்தவனன்றோ? ஆச்ரிதவிஷயத்திற் பண்ணின ஓரம் தன் பேறு என்னுமிடம் வடிவிலே தோன்றும்படிகாணும் இருக்கிறது [வீடுய்ய] - *ஸபுத்ரபௌத்ரஸ் ஸகண:* என்கிறபடியே ஸபரிகரமாகவுய்ய. [தோன்றிய]-ஆவிர்ப்பவித்த. ப்ரணயரோஷத்தாலே "சேரோம்" என்றிருக்கிற தங்களைச் சேர்த்தபடியாலே 'கருமாணிக்கச்சுடர்' என்கிறார்கள் [நின்தன்னுலித்யாதி] - சத்ருக்களாய் முடிந்துபோகப் பெறாதே, ஸம்ஸாரிகளாய் அந்யபரராய்ப் போகப் பெறாதே நீ களியவும் நாங்கள் கோவுபடவுமாம்படி சமைந்துவிட்டதிறே! இரண்டு தலையுங்கூடி மேல்விழுந்தனைத்துக்கொண்டு நின்று சொல்லுகிற வார்த்தையிறே. இவ்வளவும் தங்கள் வெற்றியேயிறே சொல்லிப் போந்தது; இப்போதிறே தங்கள்தோல்விக்கு இசைந்தது. (இவ்வநுபவம் ஸ்வப்நகல்பமாய் ஆற்றாமையிறே எங்களுக்கு நிலைநின்று போருவதென்று, தாங்கள் பட்டகோவையறிவிக்கிறார்களென்னுதல்; அன்றிக்கே, *ஜிதந்தே* என்றும், "தோற்றோம்மடநெஞ்சம்" என்றும் தாங்கள் தோற்றபடியை அவன்றனக்குச் சொல்லுகிறார்களாகவுமாம்). [நலிவேபடுவோம்] - இதுதான் எங்களுக்கு மெய்யாகப்புகாநின்றதோ? எங்களுடையதேயிறே எங்களுக்கு ஸித்தித்துவிடுவது. இவர்களுடையதாவது - "கூடிலும் நீங்கிலும் யாம் மெலிதும்" என்று மெலிவேயாயிருக்கை. [ஆய்ச்சியோமே] - இடக்கையும் வலக்கையும் அறியாத நாங்கள்.

ஆய்ச்சியாகியவன்னையால் அன்றுவெண்ணெய்வார்த்தையுள்* சீற்ற[முண்டழு
கூத்தவப்பன்தன்னைக் குருகூர்ச்சடகோபன்*
ஏத்தியதமிழ்மாலை ஆயிரத்துள்இவையுமோர்பத்திசையொடும்*
நாத்தன்னால்நவிலவுரைப்பார்க்கு இல்லைநல்குரவே. (11)

ஒ.—[ஆய்ச்சியாகிய அன்னையால்] - அதிஸ்நேஹிநியான யசோதைப் பிராட்டி 'வெண்ணெய் களவுகண்டாய்' என்று பொடிந்தபோதுபோலே, ஆழ்வார் தாம் ப்ரணயகோபத்தாலே "எம்பெருமானோடே கலப்பேனல்லேன்" என்றகல அதுபொறுக்கமாட்டாமை தளர்ந்த தளர்த்தியை அநுஸந்தித்து இளியராய், எம்பெருமானை ஏத்தின இத்திருவாய்மொழியை இப்பாவவ்ருத்தியின்றிக்கே வாங்மாத்ரத்தாலே சொன்னார்க்கும் எம்பெருமான் ஸந்நிஹிதனாய் இருக்கச்செய்தே பிறந்தி ஆழ்வார் தாம்பட்ட துக்கம் படவேண்டாவென்கிறார்.

இ.—நிகமத்தில், இப்பத்தை ஸாதரமாகக்கற்குமவர்கள், நான் பட்ட க்லேசம் படார் என்கிறார். [ஆய்ச்சியாகிய அன்னையால்] - அன்னையென்று பொதுவிலே சொன்னால் தேவகிப்பிராட்டிபக்கலிலும் ஏறுமென்று; 'ஆய்ச்சியாகிய' என்று விசேஷிக்கிறார். முலையுண்டு வளர்ந்த விடத்திலேயிறே அச்சமுள்ளது! [அன்று வெண்ணெய் வார்த்தையுள் சீற்றமுண்டு] - வெண்ணெய் களவுபோயிற்றென்கிற வார்த்தையிலே "இவனே செய்தான்" என்று தாயார் பொடியப் பொடியுண்டு கண்ணும் கண்ணீருமாய் நின்றாப்போலேயாயிற்று, இன்று இவர்கள் "திரளிற்புகுரவேண்டா" என்றபோது நின்றநிலை. [அழுகூத்தவப்பன்] - அழுகிறதசையில் கால்மாறிவிட்டபோது வல்லாராடினாப்போலே யிருந்தபடி. [அப்பன்தன்னை] - அந்நிலையைக்காட்டிச் சேர்த்துக்கொண்டு தம்மை யுண்டாக்கினபடி. [குருகூர்ச் சடகோபனேத்திய தமிழ்மாலை] - ப்ரணயரோஷம் போனவாறே, "போகுநம்பீ" என்றும், "புள்ளுவம் பேசாதே" என்றும் சொன்னவை எத்திற்றுவிட்டது. [இவையுமோர் பத்து] - அத்விதீயமானபத்து: ஆச்ரிதரோடுண்டான பாவபந்தத்தை வெளியிட்ட பத்து. [இசையொடும்] - வாங்மாத்ரத்தாலே. [நவில உரைப்பார்க்கு] - ஸாதரமாகச் சொல்லுவார்க்கு. [இல்லை நல்குரவே] - தூதுவிட்டு, அவன் வரக்கொண்டு, "புகுரவொட்டோம்" என்று பட்ட க்லேசம் படவேண்டா. சோறும் புடைவையும் கிடைக்கு

மென்கிறதன்று: பகவத்தாரித்ர்ய மில்லை யென்கிறது. "சென்றொன்றி நின்ற திரு" என்கிறபடியே அவன்தானேவந்து மேல்விழ, நித்யாநுபவம் பண்ணப்பெறுவர்கள்.

௯௫.—நிகமத்தில் - இத்திருவாய்மொழியை ஸாதரமாகச் சொல்ல வல்லார்க்கு பகவத் தாரித்ர்யமில்லை யென்கிறார்.

[ஆய்ச்சியாகிய அன்னையால்] - க்ஷத்ரியஸ்த்ரீ யொருதாயும் இடைச்சி யொருதாயுமாகை யாலே, பொதுவறுத்து இடைச்சியாகிய தாயாலேயென்கிறார். தேவகிப்பிராட்டியார் அடிக்கில் இத்தனை நோவாதுகாணும். "தாயெடுத்தசிறுகோலுக்குளைந்தோடி" என்கிறபடியே "இவள் நம்மை யதட்டுவதே!" என்று உளைந்திறே கிடப்பது. தைவமறியத் தாயா னதே யிறே தேவகியார்பக்கலுள்ளது; மூலைச்சுவடறிந்ததும் முகம்பழகிற்றும் வளர்த்தது மெல்லாம் இங்கேயிறே. [அன்றுவெண்ணெய்வார்த்தையுள்] - ஊரிலே வெண்ணெய் களவு போயிற்று" என்றார்கள்; அவ்வளவிலே 'நாமிறே இதுக்குஇலக்கு" என்று அழப்புக்கான். "மடம் மெழுகுவார் ஆர்" என்ன, "அச்ரோத்ரியன்" என்றார்கள்; "இப்பரப்பெல்லாம் என்னாலே மெழுகப்போமோ?" என்றான், அதுபோலே. ஆரேனுமேதேனும் செய்யிலும் இவனைச் சொல்லும்படியிறே இவன் தீம்புதான்; "பல்லாயிரவர் இவ்வூரில்பிள்ளைகள் தீமைகள் செய்வா ரெல்லாம் உன்மேலன்றிப்போகாது" என்னும்படியிறே யிருப்பது. [சிற்றமுண்டழு கூத்தவப்பன் தன்னை] - தாயார் பொடியப் பொடியுண்டழுகிற தசையில் "பையவேநிலையும்" என்கிறபடியே நிற்கிற நிலை வல்லாரடிநாப்போலே இருந்தபடி. அன்றிக்கே, அழுகையாகிற கூத்தையுடைய மஹோபகாரகனை யென்றுமாம். இதுவொன்றுக்கு நிதர்சநமாகச் சொல்லு கிறது: "போகுநம்பீ" என்றும், "கழகமேறேல்நம்பீ" என்றும் இவர்கள் சொன்னபோது நிரபேக்ஷனானவன் கால்வாங்கிப் போகமாட்டாதேநின்ற நிலைக்கு த்யோதகம். [அப்பன் தன்னை]- அந்நிலையைக் காட்டிச் சேர்த்துக்கொண்டு தம்மையுண்டாக்கினபடி. [குருகூர்ச் சடகோபன் ஏத்திய தமிழ்மாலை] - ப்ரணய ரோஷத்தாலே "போகுநம்பீ" என்றும், "கழகமேறேல்நம்பீ" என்றும், "உன்புள்ளுவமறியாதவர்க்கு உரைநம்பீ" என்றும் சொன்னவையெல்லாம் அந்த ரோஷம்போனவாறே ஏத்தாய்விட்டது. [ஆயிரத்துள்இவையுமோர்பத்து] - ஆச்ரிதரோடுண் டான பாவபந்தத்தை வெளியிட்ட அத்விதீயமான பத்து. [இசையொடும்] - வாங்மாத்ரத் தாலே. [நவிலவுரைப்பார்க்கு] - ஸாதரமாகச்சொல்லுவார்க்கு. [இல்லைநல்குரவே] - தாரித்ர்ய மில்லை. அதாவது - தூதுவிட்டு, அவன்வரக்கொண்டு "புகுரவொட்டோம்" என்று பட்ட க்லேசம் படவேண்டா. சோறும் புடைவையும் கிடைக்குமென்கிறதன்று; பகவத்தாரித்ர்ய மில்லையென்கிறது; "உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும்வெற்றிலையு மெல்லாங் கண்ணன்" என்றிருக்கிற இவருடைய நல்குரவிறே யாகையாலே. அதிகாராநுகூலமாயிறே அநுபாநாதி களுமிருப்பது. "உண்டியேயுடையேயுகந்தோடு மிம்மண்டலத்தொடுங் கூடுவதில்லையான்" என்கிறவர்கள் இத்தை ஐச்வர்யமாக நினையார்களே. "சென்றொன்றிநின்ற திரு" என்கிற படியே, அவன் தானேவந்து மேல்விழ நித்யாநுபவம் பண்ணப்பெறுவர்கள். 'அழுகூத் தவப்பன்' என்கிறவிடத்திலே "முழுதும் வெண்ணெயளைந்து தொட்டுண்ணும்" என்கிற பாட்டை யோஜித்துக்கொள்வது.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

மூன்றாந் திருவாய்மொழி—நல்குரவும் : ப்ரவேசம்

ஒ.—மூன்றாந்திருவாய்மொழியில், இப்படி ப்ரணயகோபம் தலையெடுத்து ''ஸர்வப்ரகாரத்தாலும் எம்பெருமானோடு ஸம்ச்லேஷிப்போமல்லோம்'' என்றிருந்த தம்மை, தன்னுற்றாமையையும் தன் அழகையுங்காட்டிச் சேர்த்துக்கொண்டு ஸம்ச்லேஷித்தபடியைக் கண்டு, '' 'தன்னோடு சேர்வோமல்லோம்' என்பாரையும் சேர்த்துக்கொள்ளவல்ல திருவிண்ணகரப்பனுடைய விருத்த கடநாஸாமர்த்த்யம் இருந்த படியென்?'' என்றுவிஸ்மிதராக, இப்ப்ரஸங்கத்தாலே ''இன்னமும்பாரீர்'' என்று தன்னுடைய விருத்த விபூதிகத்வத்தைக் காட்டியருளக்கண்டு, பண்டு ''தன்னைப்பிரிந்து மஹாவஸாதத்துக்கு உதவிற்றிலன்'' என்றின்னாதான ஆழ்வார், இப்படி உபகாரகனுக்கொண்டு தானே தமக்கு ப்ராப்யமும் ப்ராபகமும் மற்றுமெல்லாமாய் இருக்கிறபடியையும், அவனுடைய விருத்த விபூதிகத்வத்தையும், அகிலஹேயப்ரத்ய நீகத்வத்தையும், மற்றுமுண்டான ஸௌந்தர்யாதிகளையும் ப்ரீதராய்க்கொண்டு பேசுகிறார்.

இ.—மூன்றாந்திருவாய்மொழியில், கீழ் ப்ரணயரோஷத்தாலே ''அவனோடு ஸம்ச்லேஷிப்போமல்லோம்'' என்றிருந்ததம்மை, தன்னுற்றாமையையும் அழகையுங்காட்டிச்சேர்த்துக்கொண்டபடியைக் கண்டுவிஸ்மிதராக, ''நீர் இதுஒன்று கொண்டோ விஸ்மிதராகிறது? நாம் சேராதவற்றையெல்லாம் சேர்த்து ஆளவல்லோம் காணும்'' என்று தன்விருத்தவிபூதிகத்வத்தைக்காட்டக் கண்டு, முன்பு ''பிரிவாலேவந்த அவஸாதத்துக்கு உதவிற்றிலன்'' என்று வெறுத்தவர், ''ஸர்வகதனாய் தத்கததோஷைர ஸம்ஸ்ப்ருஷ்டனாய் ஸமஸ்தகல்யாணகுணாத்மகனான இவனே நமக்கு ப்ராப்யமும் ப்ராபகமும் மற்றுமுள்ள ஸர்வவிதபந்துவும்'' என்று அவன்பெருமையை அநுபவித்து ப்ரீதராய்க்கொண்டு பேசுகிறார். நித்ய ஸம்ஸாரியாய்ப்போனவன்றும் மயர்வறமதிநலத்தை நிர்ஹேதுகமாக அருளி என்னைப்பொருந்தவிட்டுக் கொண்டான்; வளவேழுலகில் அயோக்யதையை அநுஸந்தித்து அகலப்புக, தன்னீர்மையைக்காட்டிச் சேர்த்துக்கொண்டான்; இப்போது ப்ரணயரோஷத்தாலே அகன்று முடியப்புக, தன்னுடைய ஸர்வசக்தி யோகத்தாலே சேரவிட்டுக்கொண்டான். அவைபோலன்றிறே ப்ரணயரோஷம்: அகலவொண்ணாதே அணுகவொண்ணாதே இருப்பதொன்றிறே. இத்தாற்சொல்லிற்றாயிற்று - ''அகன்று முடிந்துபோவோம்'' என்பாரையும் ''உடையவன் முடிய விட்டுக்கொடான்'' என்கிறது. முதல் திருவாய்மொழியிலே, பரத்வத்தை அநுஸந்தித்து, பத்துடையடியவரிலே ஸௌலப்யத்தை அநுஸந்தித்தார்; இங்கு, மின்னிடை மடவாரிலே ஸௌலப்யத்தை அநுஸந்தித்து, இத்திருவாய்மொழியிலே பரத்வத்தை அநுஸந்திக்கிறார். இப்படி கண்ணழிவற்ற மேன்மையும் நீர்மையுமுள்ளது இவனுக்கேயென்று அநுஸந்தித்து ப்ரீதிப்ரகர்ஷத் தாலே பேசுகிறார்.

ஈடு.—'' 'இப்படி தாமறின்றவன் ஸர்வேச்வரனென்கிறார்' என்று பிள்ளான் பணிக்கும்'' என்றருளிச்செய்வர். அதாகிறது - ''யாவையும் யாவரும் பிழைபாமல் - பிணக்கி'' என்று கீழே ப்ரஸ்துதமான ஸர்வேச்வரத்வத்தை அருளிச்செய்கிறார் என்று. ''இதிலே ஒருவாசிதோற்ற பட்டரருளிச்செய்வர்'' என்று சீயரருளிச்செய்வர். அதாவது - ''சேரோம்'' என்ற அபிஸந்தியைக் குலைத்துத் தம்மைச் சேரவிட்டுக்கொண்ட ஆச்சர்யத்தைக்கண்டு விஸ்மிதராகிறா ரென்று. சேரவிட்டுக்கொண்டபடிதான் அநேகமிறே; முதல்தன்னிலே தம்மையும் அறியாதே அவனையும் அறியாதேயிருக்க, தன்படிகளையறிவித்துக் கூடவிட்டுக்கொண்டான்; உள்ளே புகுர நின்று ஸ்வநிகர்ஷத்தையும் அவனுடைய உத்கர்ஷத்தையும் அநுஸந்தித்து ''நாம் அங்குத்தைக்கு அயோக்யர்'' என்று அகல, தன்செல்லாமையைக்காட்டிப் பொருந்தவிட்டுக் கொண்டான்; (வளவேழுலகிலே.) இனி, அவைபோலன்றிறே இது; ஒன்றால் பரிஹரிக்கலாமதன்றே. அகலில் குற்றம், அணுகில் குற்றமாயிருப்பதொன்றிறே! ஜாதிசண்டாளனை சோதிக்கில் ப்ராயச்சித்தமுண்டு; ப்ரணயாபராதசண்டாளர்க்கு அதுவுமில்லை. ஆக இப்படி களாலே தன் செல்லாமையைக்காட்டி அவன் பொருந்தவிட்டுக்கொண்ட படியைக்கண்டு

விஸ்மிதராகிற இவர்க்கு, "இவ்வளவல்லகாணும் நம்முடைய ஆச்சர்யங்களிருக்கும்படி; லோகத்தில் தன்னில் தான் சேராத விருத்தபதார்த்தங்களுமெல்லாம் நம்மோடே சேர்ந்திருக்கிறபடி பாரீர்; ஆனபின்பு, நம்மோடுசேராதா ரில்லைகாணும்!" என்று தன்னுடைய விருத்தவிபூதிகத்வத்தைக் காட்டிக்கொடுக்கக் கண்டு, "இது இருந்தபடி என்?" கொடுத்த சைதந்யத்தைக்கொண்டு அகலுகைக்கு உடலாயிருக்கிற இவற்றையெல்லாம் கூடவிட்டுக் கொடு நிற்கிற படிகளும்—இனி நிமித்தமானது உபாதாநமாகமட்டாது; உபாதாநமானது நிமித்தமாகமாட்டாது; இங்ஙனேயிருக்க—இவையெல்லாம் தானேயிருக்கிறபடியையும் இவற்றோடுகூடியிருக்கச்செய்தேயும் இவற்றில் தோஷங்கள் தனக்கு ஸ்பர்சியாமலிருக்கிறபடியையும், தோஷந்தட்டாமல் கடக்கவிருக்கையன்றிக்கே நியந்தாவாயிருக்கிறபடியையும்,—இனி நாட்டில் ப்ராப்யமானது ப்ராபகமாகமாட்டாது; ப்ராபகமானது ப்ராப்யமாகமாட்டாது; இங்ஙனேயிருக்க—ப்ராப்யப்ராபகங்கள் இரண்டும் தானேயாயிருக்கிறபடியையும், மற்றும் இவனுடைய ஸௌந்தர்யசீலாதிகளையும் அநுஸந்தித்து, 'இப்படி உபகாரசீலனான ஸர்வேச்வரன் திருவிண்ணகரிலேவந்து ஸந்நிஹிதனானான். இவனல்லது நமக்கு பரமபந்துக்களில்லை' என்று அறுதியிட்டு, 'இவன் திருவடிகளல்லது பற்றில்லை, என்று பேசுகிறாராயிருக்கிறது.

முதல்திருவாய்மொழியிலே பரத்வாநுபவம்பண்ணி, மூன்றாந்திருவாய்மொழியிலே ஸௌலப்யத்தையநுஸந்தித்து "எத்திறம்" என்றுகிடந்தார். இங்கு, "போகுநம்பீ" என்று தள்ளச்செய்தேயும் கால்வாங்கமாட்டாதே நின்ற நீர்மையை அநுஸந்தித்து, அதுக்கு எதிர்த்தட்டான பரத்வத்தை அநுஸந்திக்கிறார்; மயர்வறமதிநலமருளப்பெற்றவரிறே: மேன்மையை அநுஸந்திப்பது நீர்மையை அநுஸந்திப்பதாமத்தனையிறே.

நல்குரவும்செல்வும் நரகும்சுவர்க்கமுமாய்*
வெல்பகையும்நட்பும் விடமுமமுதமுமாய்*
பல்வகையும்பரந்த பெருமான்என்னையாள்வானை*
செல்வம்மல்குகுடித் திருவிண்ணகர்க்கண்டேனே. (1)

ஒ.—முதற்பாட்டில், விருத்த விபூதிகனான ஸர்வேச்வரனைத் திருவிண்ணகரிலே காணப் பெற்றேன் என்கிறார். [நல்குரவும்] - தாரித்ர்யமும். [வெல்பகையும் நட்பும்] - வெல்லப்படும் பகையும் உறவும். [பல்வகையும் பரந்தபெருமா னென்னையாள்வானை] - இப்படி விபூதி முகத்தாலே பலபடியும் விஸ்த்ருதனான ஸர்வேச்வரனுயிருந்துவைத்து "நான் அல்லேன்" என்று அகலப்புகத் தான் மேல் விழுந்து என்னைச் சேர்த்துக்கொண்டு அடிமைகொள்ளுகிறவனை. [செல்வம்மல்கு] - ஸம்பத்துமிகுகை.

இ.—முதற்பாட்டில். விருத்தவிபூதிகனான ஸர்வேச்வரனைத் திருவிண்ணகரிலே காணப் பெற்றேன் என்கிறார். [நல்குரவும்] - தாரித்ர்யமும். [செல்வும்] - அதுக்கு எதிர்த்தட்டான ஐச்வர்யமும். [நரகும்] - து:க்காநுபவம் பண்ணும் நரகமும். [சுவர்க்கமும்] - ஸுகாநுபவம் பண்ணும் ஸ்வர்க்கமும். [வெல்பகையும்] - ஸமாதானத்தால் மீளுமதன்றிக்கே வென்றேவிடவேண்டும் பகையும். [நட்பும்] - அதுக்கு எதிர்த்தட்டான உறவும். [விடமும்] - முடித்தேவிடக்கடவதானவிஷமும். [அமுதமும்] - முடியாதபடியும்காத்து போக்யமுமாயிருக்கும் அம்ருதமுமாய். அநிஷ்டமான தாரித்ர்யாதிகளோடு இஷ்டமான ஐச்வர்யாதிகளோடு வாசியற ததீயத்வாகாரேண இவர்க்கு உத்தேச்யமாயிருக்குமிறே. இதில் தோஷாம்சம் அஸஹ்யம்அன்றோ? என்னில்,-தன்னை தேஹவிசிஷ்டனாக அநுஸந்தித்த போது த்யாஜ்யமாம்; சேஷத்வவிசிஷ்டனாக அநுஸந்தித்தபோது உபாதேயமாகக்கடவது. ராஜபுத்ரனுக்குப் பிதாவினுடைய ஓலக்கத்தோடு சிறைக்கூடத்தோடு வாசியற "பிதாவின் ஐச்வர்யம்" என்றிருக்குமிறே. [பல்வகையும் பரந்த] - இப்படி விபூதிமுகத்தாலே பலபடியும் விஸ்த்ருதனானவன். "நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே" என்று என்விபூதிக்கு எல்லையில்லையென்றிறே தானும்சொல்லுவது. [பரந்தபெருமானென்னையாள்வானை] - ஸர்வகதனானது தமக்காக என்றிருக்கிறார்; ஒருவனைப்பிடிக்கைக்கு சுட்டி ஒருரை

வனைவாரைப்போலே. இப்படி ஸர்வகதனான பெருமையையுடையனாய்வைத்து, ப்ரணயரோஷத்தாலே அகன்று முடியப்புக்கவென்னைத் தாழநின்று சேர்த்துக்கொண்ட உபகாரகனை என்றுமாம். [செல்வம்மல்குகுடி] - நிரவதிகஸம்பத்தை உடையதேசம். பிரிந்து தூதுவிட வேண்டாதே, ப்ரணயரோஷத்தாலே "கிட்டவொட்டோம்" என்று வ்யஸநப்படவேண்டாதே நித்யாநுபவம் பண்ணலாமிடமென்கை. "லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:" என்கிறபடியே இடைவிடாத பகவதநுபவஸ்ரீயிறே ஸம்பத்தாகிறது. [திருவிண்ணகர்க் கண்டேனே] - ஓரிடத்திலேகாண ஆசைப்பட்டு ஓரிடத்தேகாண்கையன்றிக்கே, தூதுவிட்ட அர்ச்சாவதாரத்திலே கண்டு அநுபவிக்கப்பெற்றேன்.

ஈடு.—முதற்பாட்டு. விருத்தவிபூதிகனான ஸர்வேச்வரனைத் திருவிண்ணகரிலே காணப் பெற்றேனென்கிறார்.

[நல்குரவும் செல்வும்] - தாரித்ர்யமும், அதுக்கு எதிர்த்தட்டான ஐச்வர்யமும். [நரகும் சுவர்க்கமும்] - து:கைகதாநமான நரகமும், ஸுகைகதாநமான ஸ்வர்க்கமும். [வெல்பகையும் நட்பும்] - ஸமாநாகத்தாலே ஹீநுமதன்றியிலே வென்றேவிடவேண்டும்பகையும், அதுக்கு எதிர்த்தட்டான உறவும். [விடமும் அமுதமுமாய்] - முடித்தே விடுவதான விஷமும், போன உயிரை மீட்கவற்றான அம்ருதமுமாய். போனவுயிரைமீட்டுத் தான்போக்யமுமாயிறே அம்ருதமிருப்பது. அநிஷ்டமான தாரித்ர்யாதிகளோடு இஷ்டமான ஐச்வர்யாதிகளோடு வாசியற ததீயத்வாகாரத்தாலே இவர்க்கு உத்தேச்யமாயிருக்குமிறே. 'ஆய்' என்றது, ப்ரதிபதம் சேர்த்துக் கொள்வது. [பல்வகையும் பரந்தபெருமான்] - ஜ்ஞாநாதிகனான தானுங்கூட விபூதியைப்பேசப்புக்கு *நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே* என்று இளைத்துக் கைவாங்கினத்தை, இத்தனை ப்ரேமத்தில் சுளமுடைய இவர்க்குச் சொல்லப்போகாதிறே. ஆனாலும் சிறிது பேசினாராகவும் வேணுமிறே. வஸ்துதனக்கு விசேஷணத்தையொழிய ப்ரதீதியில்லையிறே; *நிர்விசேஷம் வஸ்து* என்று விசேஷணரஹிதமாக மாயாவாதம் சொல்லுகிறானிறே. அங்ஙனேயாகில், மோக்ஷசாஸ்த்ரந்தான் வேண்டாவே. வஸ்துஸத்பாவங் கொள்ளும்போது விசேஷணம் வ்யாவர்த்தகமாயல்லதிராது. ஒன்றுக்கொன்று விசேஷணமாம்போது அயோகவ்யவச்சேதம் பண்ணிக் கொண்டல்லது விசேஷணமாகமாட்டாது; இங்கு இவனுக்கு ஸ்வவ்யதிரிக்தங்களடங்கலும் விசேஷணமாயிருக்கையாலே அயோகவ்யவச்சேதம் பண்ணவொண்ணாது; ஆனால், விருத்த விசேஷணங்கள் ஏகவ்யக்தியிலே ஸங்கதமாகிறபடி எங்ஙனே? என்னில்- அயோகவ்யவச்சேதம் பண்ணிக்கொண்டு ஸங்கதமாகிறது. இவர்தாம் அவனை அநுபவிக்கவாகில் இழிகிறது, இவ்விருத்தவிசேஷணங்களைச் சொல்லுகிற இவற்றால் ப்ரயோஜநமென்? என்னில்,—அவனையுள்ளபடிகண்டு அநுபவிக்கவேணுமே. ராஜபுத்ரனுக்கு ராஜாவினுடைய போகஸ்தாநமான ஓலக்கத்தோடு சிறைக்கூடத்தோடு வாசியற "என்பிதாவினைச்வர்யம்" என்றிருக்குமிறே. இவர் தமக்கு இங்குண்டான அநுஸந்தாநம், முக்தனுக்கு லீலாவிபூத்யநுஸந்தாநம்போலேயிறே. *நோபஜநம் ஸ்மரந் நிதம்சரீரம்* என்னுமிற்கச்செய்தே, முக்தனுக்கு லீலாவிபூதி ததீயத்வாகாரத்தாலே உத்தேச்யமாகாநின்றதிறே; இவர்க்கும் அப்படி முக்தரோடொக்க ததீயத்வாகாரமொழிய ஆகாராந்தரஸ்ம்ருதி இல்லாதபடி, இங்கேயிருக்கச் செய்தே மயர்வறுத்துக் கொடுத்தான். ஸ்வஸம்பந்தத்தாலே பார்த்தபோது கால்வாங்கவல்லது நிற்கவொண்ணாதபடி த்யாஜ்யமாய்த் தோற்றும்; ஜ்ஞாநாஜ்ஞாநங்களுக்குப் பொதுவான இவ்விருப்பைக்கழித்து, அதுக்குச் சுவக்கமில்லாத தேசத்திலேபோகையிலே த்வரிக்கக் கடவனிறே. [பல்வகையும் பரந்த பெருமான்] - இப்படி விபூதிமுகத்தாலே பலபடியாக விஸ்த்ருதனானவன். [பரந்தபெருமா னென்னை யாள்வானை] - இந்த வ்யாப்தியெல்லாம் தம்மை யகப்படுத்தவென்றிருக்கிறார்; ஒருவலை அகப்படுத்தலைத்தார் வலையையுமாபோலே. [செல்வம்மல்குகுடித் திருவிண்ணகர்க் கண்டேனே] - மருபூமியிலே பொய்கை கண்டாற்போலே. [செல்வம்மல்குகுடி] - மிக்கஸம்பத்தையுடைத்தான குடிகளையுடைத்தான திருவிண்ணகர். *லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:* என்னுமாபோலே ஸம்பந்தமொத்திருக்கச்செய்தே காட்டக்கிடந்த ஸ்ரீபரதாழ்வானைப்போலன்றிக்கே கிட்டநின்று அடிமைசெய்யும் இளையபெருமாளைப்போலே. [திருவிண்ணகர்க்கண்டேனே] -

"காணவேணும்" என்னுமாசைபோரப்பெருத்து தேசாந்தர ப்ராப்திபண்ணி தேசாந்தரத்திலே போய்க்காண்கையன்றிக்கே, பசித்தவிடத்தே சோறுபெறுமாபோலே ஆசைப்பட்டவிடத்தே அநுபவிக்கப்பெறுகை. "நான்சென்று நாடி நறையூரிற்கண்டேன்" என்னுமாபோலே.

கண்டவின்பம்துன்பம் கலக்கங்களும்தேற்றமுமாய்*
தண்டமும்தண்மையும் தழலும்நிழலுமாய்*
கண்டுகோடற்கரிய பெருமான்என்னையாள்வானூர்*
தெண்டிரைப்புனல்சூழ் திருவிண்ணகர் நன்னகரே. (2)

ஒ.—இரண்டாம்பாட்டில், விருத்தமான விபூதிவிஸ்தாரங்களையுடையனும் ஸ்வபாஹுபலத்தால் ஒருவராலும் காணவொண்ணாதபடி அறப்பெரியனாயிருந்துவைத்து என்னை அடிமைகொள்ளுகிறவனுடைய ஊரான திருவிண்ணகர் அவனுடைய திவ்யநகரங்களெல்லாவற்றிலும் நல்ல நகரம் என்கிறார். [கண்டவின்பம்] - பரிச்சின்ன ஸுகம். [தண்டமும் தண்மையும்] - கொடுமையும் நண்ணளியும். [தழலும் நிழலும்] - உஷ்ணிக்கும்நெருப்பும் குளிரும்நிழலும்.

இ.—இரண்டாம்பாட்டில், ஸ்வயத்நத்தால் ஒருவர்க்குங் காணவொண்ணாத பெருமையையுடையனாய் வைத்து, என்னை அடிமைகொள்ளுகிறவன் ஊரான திருவிண்ணகர் ஸர்வவிலக்ஷணமென்கிறார். [கண்ட இன்பம்] - பரிச்சின்னஸுகம். ப்ரத்யக்ஷஸித்தமன்றிக்கே சாஸ்த்ரஸித்தமாய் அபரிச்சிந்நமான ஸுகத்திலேயிறே தமக்கு அந்வயம். [துன்பம்] - அதுக்கு எதிர்த்தட்டான துக்கம். [கலக்கங்கள்] - அஜ்ஞாநங்கள். [தேற்றம்] - ஜ்ஞாநம். [தண்டம்] - கோபம். [தண்மை] - ப்ரஸாதம். [தழலும்] - உஷ்ணத்தைப்பண்ணும் அக்நியும். [நிழலும்] - சீதஸ்வபாவமான நிழலும். [கண்டுகோடற்கு அரிய பெருமானென்னையாள்வானூர்] - ஸ்வயத்நத்தாலேகாண ஆசைப்பட்டார்க்கு அரியனாயிருக்கிறவன்கிடீர், தான் மேல்விழுந்து என்னைக்காண ஆசைப்படுகிறான்; கண்டுகொள்வதற்கரிய ஸர்வேச்வரனாய் என்னை அடிமைகொண்டவனூர். [தெண்திரை இத்யாதி] - தெளிந்ததிரையை யுடைத்தான ஜலத்தாலே சூழப்பட்ட திருவிண்ணகர். பரமபத முத்தேச்யமானவாறே விரஜையுமுத்தேச்யமாமாபோலே, அவ்வூர் உத்தேச்யமானவாறே அங்குள்ள ஜலஸம்ருத்தியும் உத்தேச்யமாயிருக்கிறதிறே இவர்க்கு. [நன்னகரே] - கலங்காப் பெருநகரம் இதுக்கு ஸத்ருசமன்று; விடாய்த்தவிடத்திலே விடாய்தீரலாம்படி இருக்கிற ஏற்றமுண்டிறே இதுக்கு.

ஈடு.—இரண்டாம்பாட்டு. ஸ்வயத்நத்தாலே ஒருவர்க்கும் காணவொண்ணாத பெருமையை யுடையவனாய்வைத்து என்னை அடிமைகொள்ளுகிறவன் ஊரான திருவிண்ணகர் ஸர்வவிலக்ஷணமென்கிறார்.

[கண்டஇன்பம்] - "ஐங்கருவிகண்டவின்பம்" என்னுமாபோலே பரிச்சிந்நஸுகம். [துன்பம்] - நாமபேதமாத்ரமாய் அத்தோடொத்த து:க்கம். [கலக்கங்களும்தேற்றமுமாய்] - இதரவிஷயங்களினுடைய அலாபத்தால் வரும் கலக்கமும் அவற்றினுடைய லாபத்தால் வரும் தேற்றமும். [தண்டமும் தண்மையும்] - கோபமும், ப்ரஸாதமும். [தழலும்நிழலுமாய்] - உஷ்ணத்தைப் பண்ணக்கடவதான அக்நியும், சைத்யத்தைப்பண்ணக்கடவதான நிழலுமாய். [கண்டுகோடற்கரிய பெருமான்] - இவையெல்லாவற்றாலும் அவனுடைய அபரிச்சேத்யதை சொல்லிற்றாயிற்று. இவருடைய ஜ்ஞாந வைசத்யமிருந்தபடி என்தான்! இங்கே சில விசேஷணங்களைச் சொல்லா, கண்டுகோடற்கரிய பெருமானென்று அவனைச் சொல்லாநின்றார்; மேலே சிலவற்றைச்சொல்லா, "பல்வகையும் பரந்தபெருமான்" என்னாநின்றார்; இதென்ன அநுஸந்தாநக்ரமந்தான்! இவனையொழிந்ததொருவஸ்துவுக்கு ஸத்பாவமின்றிக்கேயிருக்கிறபடியிறே. நல்லாரும் நம்பிஸ்ரீஸேநாபதிதாஸருங் கூடத் திருமலைக்குப் போகாநிற்க, ஸ்ரீஸேநாபதிதாஸர்

தண்டையிட்டுத் தூற்றைநயடிக்க, நல்லார் "அர்த்தகாமநிமித்தமான த்வேஷம் இத்தோடின்றிக்கேயிருக்க, நிர்நிபந்தநமாக ஈச்வரவிபூதியை நலிவதே!" என்ற வார்த்தையை நினைப்பது. (ஸ்வயத்நத்தால் கண்டுகோடற்கரிய ஸர்வேச்வரன்.) [என்னையாள்வானூர்] - என்னை இழக்க மாட்டாமல் மின்னிடைமடவாரில் பிறுக்கெல்லாம்பட்டு என்னை அடிமைகொண்டவனூர். [தெண்திரையித்யாதி] - தெளிந்த திரைகளையுடைத்தான புனல்களாலே சூழப்பட்ட திருவிண்ணகராகிற நன்னகர். [தெண்திரைப்புனல்சூழ்] - திவ்யநதியான விரஜைக்குப் போலியான ஆறும் உண்டாகப்பெற்றது. அங்கிருக்கிறவன் இங்கேவந்தின்றால் அங்குள்ளவையெல்லாம் இங்கே உண்டாகத்தட்டில்லையே. [திருவிண்ணகர்நன்னகரே] - இவ்வளவில் முகங்காட்டாத ஸ்ரீவைகுண்டமும் ஒருதேசமாயிற்றதோ? அவன் விரும்பினவிடம் ப்ராப்யபூமியாமித்தனையிறே.

நகரமும்நாடுகளும் ஞானமும்மூடமுமாய்*
நிகரில்சூழ்சுடராய்இருளாய் நிலனாய்விசும்பாய்*
சிகரமாடங்கள்சூழ் திருவிண்ணகர்ச்சேர்ந்தபிரான்*
புகர்கொள்கீர்த்தியல்லாலில்லை யாவர்க்கும்புண்ணியமே. (3)

ஒ.—மூன்றாம்பாட்டில், திருவிண்ணகர்ச்சேர்ந்த பிரானுடைய கல்யாண குணங்களையொழிய ஒருவர்க்கும் உத்தாரகமில்லை என்கிறார். [நகரமும் நாடுகளும்] - சிறுமை பெருமையாலே விரோதஞ் சொல்லிற்று. [நிலனாய் விசும்பாய்] - ரூபியான நிலனும் அரூபியான விசும்புமாய். [புகர்கொள் கீர்த்தி] என்றது - திருநாட்டிற்காட்டில் திருவிண்ணகரிலே புகுந்தபின்பு அவனுடைய கல்யாண குணங்கள் நிறம்பெற்றபடி.

இ.—மூன்றாம் பாட்டில், திருவிண்ணகர்அப்பனுடைய கல்யாணகுணங்களையொழிய வேறு ஒருவர்க்கும் உத்தாரகமில்லை என்கிறார். [நகரமும் நாடுகளும்] - சிறுமை பெருமையால்வந்த விரோதமாதல்; நாகரிகர் போகப்ரதாநராய் உத்க்ருஷ்டராயிருப்பர்கள்; நாட்டிலுள்ளார் அபக்ருஷ்டராய் தேஹதாரணமாத்ரமே ப்ரயோஜநமாயிருக்குந்தாழ்வு உண்டு; அத்தால்வந்த விரோதமாதல், [ஞானமும் மூடமுமாய்] - ஜ்ஞாதாக்களும் அஜ்ஞருமாய். [நிகரில் சூழ்சுடராயிருளாய்] - ஒப்பின்றிக்கே சூழப்பட்ட ப்ரபையையுடைத்தான தேஜஸ்ஸாய், அதுக்கு எதிர்த்தலையான தமஸ்ஸாய். [நிலனாய் விசும்பாய்] - கடிநமான பூமியாய், அச்சமான ஆகாசமாய். [சிகரமாடமித்யாதி] - சிகரங்களைச் சேரவைத்தாற்போலே இருக்கிற மாடங்கள் சூழ்ந்த திருவிண்ணகரிலே நித்யவாஸம்பண்ணுகிற உபகாரகன். [புகர்கொள் கீர்த்தி] - ஸ்வபாவமேயிறே பரம பதத்திலுள்ளது; அந்தகாரத்தில் தீபம்போலே புகர்பெற்றது, இங்கேயிறே கீர்த்தி. [அல்லாலில்லையாவர்க்கும் புண்ணியமே] - மின்னிடைமடவாரில் இழய்த்த நமக்கே அன்றியே, இதில் இழியாதார்க்கும் கீர்த்தியல்லது உஜ்ஜீவந ஸாதநமில்லை.

ஈடு.—மூன்றாம்பாட்டு. திருவிண்ணகரப்பனுடைய கல்யாண குணங்களையொழிய வேறு ஒருவர்க்கும் உத்தாரகமில்லையென்கிறார்.

[நகரமும் நாடுகளும்] - போகப்ரதாநராய் ஸேவித்திருக்கும் நகரத்திலுள்ளார், கர்ஷகராய்க்கொண்டு தேஹயாத்ரை போக்கியிருக்கும் நாட்டிலுள்ளார். அன்றிக்கே, பரிச்சிந்நமாயுள்ளவையும், அபரிச்சிந்நமாயுள்ளவையும் என்றுமாம். [ஞானமும் மூடமுமாய்]-பதார்த்த ஸ்வபாவத்தையுள்ளபடி க்ரஹிக்கக் கடவதான ஜ்ஞாநமும், அத்தை விருத்தமாக ப்ரதிபத்தி பண்ணக்கடவதான அஜ்ஞாநமும். [நிகரில்சூழ்சுடராயிருளாய்] - உபமாரஹிதமாய்க் கொண்டு எங்கும் வ்யாபித்து நிற்கிற தேஜஸ்ஸாய், அதுக்கு எதிர்த்தட்டான அந்தகாரமாய். [நிலனாய் விசும்பாய்] - ரூபவதியான பூமியும், அரூபியான ஆகாசமுமாய். கடினையான பூமியும், அச்சமான ஆகாசமுமாய் என்றுமாம். [சிகரமித்யாதி] - பர்வத சிகரங்களைக் கொண்டுவந்து

சூழ வைத்தாற்போலே யிருக்கிற மாடங்களாலே சூழப்பட்ட திருவிண்ணகரிலே பொருந்தி நிற்கிற உபகாரகன். [புகர்கொள்கீர்த்தியல்லாலில்லை] - பரமபதத்தில் புகழ் மழுங்கியாகாதே கிடப்பது; அங்குள்ளாரில் தன்னிற்குறைந்தாரில்லையே; *மம ஸாதர்ம்யமாகதா:* *பரமம் ஸாம்ய முபைதி* "தம்மையேயொக்கவருள்செய்வர்" என்று தன்னோடு ஸாம்யாபந்நராயிறே அங்குள்ளாரிருப்பது. குறைவாளர்க்கு முகங்கொடுத்தாலிறே புகழ் நிறம்பெறுவது? [யாவர்க்கும் புண்ணியமே] - (மின்னிடைமடவாரிலிருப்பத்த நமக்கேயன்றிக்கே) ஸர்வர்க்கும் உத்தாரகம்அது வல்லதில்லை. தாந்தாம்தேடிக் கொள்ளுமவையெல்லாம் கழுத்துக்கட்டியாமத்தனை; மின்னிடை மடவாரில் - அவன்வர, "வேண்டா" என்று முடிந்துபோகப்புக்கதிறே; இவன்பார்க்குமுபாயம் இவனுக்கும் கழுத்துக்கட்டியாம்; அவன் காட்டுமுபாயம் அவனுக்கும் காற்கட்டாம்; இதிறே உபாயத்தில் அடிப்பாடு.

புண்ணியம்பாவம் புணர்ச்சிபிரிவென்றிவையாய்*
எண்ணமாய்மறப்பாய் உண்மையாய்இன்மையாய் அல்லனாய்*
திண்ணமாடங்கள்சூழ் திருவிண்ணகர்ச்சேர்ந்தபிரான் *
கண்ணனின்னருளே கண்டுகொண்மின்கள்கைதவமே. (4)

ஒ.— நாலாம்பாட்டில், புண்யபாபரூபாதியால் எம்பெருமானுக்கு விசேஷணத்வேந தோற்றுகிற விபூதியெல்லாம் அவன்க்ருபையாலே உண்டாயிற்று; இதுபொய்யல்லாமை ஆராய்ந்து பார்த்துக் கொள்ளுங்கோள் என்கிறார். [புணர்ச்சி பிரிவு] - புண்யபாப பலரூபமான ஸம்ச்லேஷவிச்லேஷங்கள், அல்லனாயென்கிறது - புண்யபாபாதிகளுக்கு நியாமகனாய் அவற்றுக்கு வச்யனன்றிக்கேயிருக்குமென் கிறது. இன்னருளென்கிறது ஒருகாரணமறப்பண்ணும் க்ருபை.

இ.—நாலாம்பாட்டில், இவ்விபூதியடங்க அவன்க்ருபையாலே உண்டாயிற்று; இது பொய்யல்லாமை பார்த்துக்கொள்ளுங்கோள் என்கிறார். [புண்ணியமித்யாதி] - ஸுகது:க்கஹேதுவான புண்ய பாபங்களும், தத்பலபூதமான அபிமதஸம்ச்லேஷ விச்லேஷங்களும், அநுகூலவிஷயமான எண்ணமும், ப்ரதிகூலவிஷயமான விஸ்ம்ருதியும், ஸத்பாவாஸத்பாவங்களுமாய். [அல்லனாய்] - புண்யபாபங்களை அநுபவியாநிற்கச்செய்தே தான் அகர்மவச்யனாய் [திண்ணமித்யாதி] - ப்ரளயத்திலும் அழியாத மாடங்கள். [பிரான் கண்ணன்] - அவ்வவதாரத்துக்குப் பிற்பட்ட என்னைப் பெறுகைக்காகத் திருவிண்ணகரிலேவந்து நிற்கிற க்ருஷ்ணனான உபகாரகன். [இன்னருளே] தன்பேறாகப்பண்ணும் க்ருபையாலே இதுஅடங்கவுண்டாயிற்று. [கைதவமே] - இதில் அர்த்தவாதமுண்டோ? இல்லையிறே. [கண்டுகொண்மின்கள்] - ஆராய்ந்துகொள்ளுங்கோள்.

ஈடு.—நாலாம் பாட்டு. புண்யபாபாதியாய் எம்பெருமானுக்கு விசேஷணத்வேந தோற்றுகிற விபூதியெல்லாம் அவன்க்ருபையாலே உண்டாயிற்று என்கிறார்.

[புண்ணியம்பாவம்] - ஸுகஸாதநமான புண்யம், து:க்கஸாதநமான பாபம். [புணர்ச்சி பிரிவு] - புண்யபலமான ஸம்ச்லேஷம், பாபபலமான விச்லேஷம். [எண்ணமாய்மறப்பாய்] - அபிமதவிஷயத்தில் ஸ்ம்ருதி, அநபிமதவிஷயத்தில் விஸ்ம்ருதி. [உண்மையாயின்மையாய்] - அஸ்தி சப்த வாச்யமுமாய், நாஸ்திசப்த வாச்யமுமாய். ஸத்பாவாஸத்பாவமென்னுதல். சேதநாசேதநங்களென்னுதல். [அல்லனாய்] - புண்யபாபாதிகளுக்கு நியாமகனாய், அவற்றுக்கு வச்யனன்றிக்கேயிருக்குமென்கிறது. [திண்ண மித்யாதி] - *வாஸுதேவக்ருஹம் த்வேகம் நப்லாவயதி ஸாகர:* என்கிறபடியே, ப்ரளய காலத்துக்கும் அழியாதபடி திண்ணியதான மாடங்களாலே சூழப்பட்ட திருவிண்ணகரிலே சேர்ந்து நிற்கிற உபகாரகனான க்ருஷ்ணன். [இன்னருளே] - புண்யபாபாதிகளாய்க் கொண்டு அவனுக்குவிபூதியாய்த் தோற்றுகிறவையெல்லாம் அவனுடைய க்ருபையாலே உண்டாயிற்று. பாபமும் அவன்க்ருபையாலேயோ என்னில்? அதுவும் அப்படியே; சேதநனுடைய பூர்வகர்மாநுகுணமாக ப்ரவர்த்திப்பிக்கையினாலே அதுவும் அவன்

க்ருபையாலே யாமத்தனை. எல்லாம் செய்தாலும், தீமை அவன்க்ருபையாலே வரக்கூடுமோ என்னில்?—தீயத்தைக்காட்டி வெருப்பி நல்வழி போக்குகையாலே கூடுமிறே. [இன்னருள்] - நிர்ஹேதுக விஷயீகாரம். [கைதவமே] - நான்சொல்லுகிற இதில் அர்த்தவாதமில்லை. [கண்டு கொண்மின்கள்] - நீங்களும் 'எல்லாங்கண்டுகொள்ளுங்கோள்;' அன்றிக்கே [கைதவமே] - க்ருதகமென்றபடியாய், பண்ணப்பட்டவையடங்கலும் அவனுடைய நிர்ஹேதுக விஷயீகாரத் தாலே.

கைதவம்செம்மை கருமைவெளுமையுமாய்*
மெய்பொய்இளமைமுதுமை புதுமைபழமையுமாய்*
செய்ததிண்மதிள்சூழ் திருவிண்ணகர்ச்சேர்ந்தபிரான்*
பெய்தகாவுகண்டீர் பெருந்தேவுடைமூவுலகே. (5)

ஒ.—அஞ்சாம்பாட்டில், சிறியார் பெரியார் என்னாதே எல்லார்க்கும் ரக்ஷகன் திருவிண்ணகர்ச் சேர்ந்த பிரான் என்கிறார். [பெய்தகாவு கண்டீர் பெருந்தேவுடைமூவுலகே] - ப்ரஹ்மாதிபிபீலிகாந்த மான ஸகல ஐந்துக்களும் அவனுக்கினசோலை. எல்லாரையுமொக்க ஸ்த்தாவரமாகப் பேசுகையாலே தந்தாமுடைய ஸர்வ நிர்வாஹகத்வமும் பகவததீநமென்று கருத்து.

இ.—அஞ்சாம்பாட்டில், சிறியார் பெரியார் என்னாதே ஸர்வர்க்கும் ரக்ஷகன் திருவிண்ணகர்ச் சேர்ந்த பிரான் என்கிறார் [கைதவம்] - க்ருத்ரிமம். [செம்மை] - ஆர்ஜ்ஜவம். [கருமை வெளுமை] - கறுப்பும் வெளுப்பும். [மெய் பொய்] - ஸத்யாஸத்யம். [இளமை முதுமை] - பால்யவார்த்தகம். [புதுமை பழமை] - அத்யதனமும் புராதனமும். [செய்ததிண்மதிள்] - புதிதாகச் செய்தாப்போலே தொழிலை யுடைத்தாய்த் திண்ணிதான மதிள். [பெருந்தேவுடை மூவுலகு - பெய்த காவுகண்டீர்] - ப்ரஹ்மாதி ஸ்த்தாவராந்தமான ஐந்துக்கள் அவனுக்கின சோலை. மூவுலகு - மேலும் கீழும் நடுவும். பெய்தகாவு - உண்டாக்கின சோலை. ஸர்வரையும் ஸ்த்தாவரமாகச் சொல்லுகையாலே, ஸர்வருடைய ரக்ஷணமும் பகவததீநம் என்கை. மின்னிடை மடவாரில்—"பொருந்தோம்" என்றதுவும் ஸ்வாதீநமன்றென்கை.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. சிறியார் பெரியாரென்னாதே ஸர்வர்க்கும் ரக்ஷகன் திருவிண்ணகர்ச் சேர்ந்த பிரானென்கிறார்.

[கைதவம்செம்மை] - அநார்ஜ்ஜவார்ஜ்ஜவங்கள். [கருமைவெளுமை]-கறுப்புவெளுப்பு. [மெய்பொய்]-ஸத்யாஸத்யம். [இளமை முதுமை]-பால்யவார்த்தகம். [புதுமைபழமை]-அத்ய தநமும், புராதனமும். [செய்தவித்யாதி] - காலம் செல்லச்செய்தேயும் இப்போது செய்தாப் போலே யிருக்கிற தொழிற் புதுமையைச் சொல்லுகிறது. (திக்கௌவை உடைத்தான மதி ளாலே சூழப்பட்ட திருவிண்ணகரிலே சேர்ந்த ஸர்வேச்வரன்) [பெய்தகாவுகண்டீர்] - வைத் தாக்கினசோலைகிடீர். (காவு-சோலை) [பெருந்தேவுடை மூவுலகே] - ஈச்வராபிமாநிகளான தேவர் களையுடைத்தான த்ரைலோக்யம். (மூவுலகு - மேலும் கீழும் நடுவும்.) இத்தால் சொல்லிற்று யிற்றென் என்னில்?—அச்சோலையானது தனக்கு வேண்டும் ரக்ஷையை யறிவிக்க மாட்டா திறே; நின்றவிடத்தே நின்று வாடிக்காட்டுகையும், பின்பு வைத்தாக்கினவனே அதுக்கு வேண்டும் ரக்ஷபண்ண வேண்டுகையும் இத்யாதிகளை யுடைத்தாகை; அப்படியே ஈச்வரே சிதவ்ய விபாகமற அவன்புத்த்யதீந மென்றபடி. (மின்னிடை மடவாரில் "பொருந்தோம்" என்றதுவும் ஸ்வாதீநமன்றென்கை.)

மூவுலகங்களுமாய் அல்லனாய் உகப்பாய்முனிவாய்*
பூவில்வாழ்மகளாய்த்தவ்வையாய்ப் புகழாய்ப்பழியாய்*
தேவர்மேவித்தொழும் திருவிண்ணகர்ச்சேர்ந்தபிரான்*
பாவியேன்மனத்தே உறைகின்றபரஞ்சுடரே. (6)

ஒ.—ஆறும்பாட்டில், "நான் அல்லேன்" என்னச் செய்தே தன்னுடைய குணசேஷ்டிதங்களைக் காட்டி மறக்க வொண்ணுதபடி என்னோடே கலந்து அத்தாலே க்ருதார்த்தனும் அத்யுஜ்ஜ்வலனுமிருக்கிறவன் திருவிண்ணகர்ச் சேர்ந்தபிரான் கண்டீர் என்கிறுர். [அல்லனுய்] - அவ்வளவன்றிக்கே மற்றும் விலக்ஷணமான விபூதிகளையுடையனுய். [பூவில்வாழ்மகளாய்த் தவ்வையாய்] - ஸ்ரீயும் அஸ்ரீயும் ஆய். [புகழாய்ப் பழியாய்] - கீழ்ச்சொன்ன இரண்டையு முடையவர்களுக்கு வரும்இரண்டையுஞ் சொல்லுகிறது. [தேவர்மேவித்தொழுந் திருவிண்ணகர்] - அயர்வறுமரர்களுக்கும் வந்து தொழும்படியான திருவிண்ணகர். எம்பெருமான் மேல்விழச்செய்தே, தாம் "அல்லேன்" என்றிருந்த இருப்பை நினைத்து'பாவியேன்' என்கிறுர்.

இ.—ஆறும்பாட்டில், "நானல்லேன்" என்னச்செய்தேயும் தன்குணசேஷ்டிதங்களைக்காட்டி, மறக்கவொண்ணுதபடி கலந்து அத்தாலே உஜ்ஜ்வலனுயிருக்கிறுன் திருவிண்ணகர்ச் சேர்ந்த பிரான்கிடீர் என்கிறுர். [மூவுலகங்களுமாய்] - க்ருதகம் அக்ருதகம் க்ருதகாக்ருதகம். [அல்லனுய்] - இவற்றைச் சொல்லி, அல்லனு யென்கையாலே, இவ்வளவன்றிக்கே அஸாதாரணமான நித்யவிபூதியையுடையனுய். [உகப்பாய் முனிவாய்] - ராகத்வேஷங்களாய். [பூவில்வாழ்மகளாய்த் தவ்வையாய்] - ஸ்ரீயும் அஸ்ரீயுமாய். தவ்வை அஸ்ரீ. [புகழாய்பழியாய்] - பிராட்டி கடாக்ஷத்தாலே வந்த புகழாய், அஸ்ரீஸம்பந்தத்தாலே வந்த பழியாய். [தேவர் மேவித் தொழும் திருவிண்ணகர்] - நித்ய ஸூரிகள் நித்யவிபூதிபோலே பொருந்தித் தொழும். ப்ரஹ்மாதிகள் வரை நாற்றம் பொறுக்கமாட்டாத தேசத்திலே. [திருவிண்ணகரின் நீர்மையை அநுபவிக்க நித்யஸூரிகள் படுகாடு கிடக்கிறபடி. [திருவிண்ணகர் சேர்ந்த பிரான்] - திருவிண்ணகரிலே நித்யவாஸம் பண்ணுகிறஉபகாரகன். நித்யஸூரிகள் மேல் விழ இருக்கிறவன் தான் மேல்விழ, "அல்லேன்" என்றிருந்த படியை நினைத்து "பாவியேன்" என்கிறுர். [மனத்தே உறைகின்ற] - 'போகுநம்பீ' என்று சொல்லிற்று, என் நெஞ்சை விடமாட்டாதவனைக் கிடீர்! [பரஞ்சுடரே] - நித்யஸூரிகளோடு கலந்ததிற் காட்டில் கிடீர் என்னைப்பெற்ற பின்பு பிறந்த புகர். "நின்றிலங்கு முடியினுய்" என்றதிறே.

ஈடு.—ஆறும்பாட்டு. "நானல்லேன்" என்னச்செய்தே தன்குணசேஷ்டிதங்களைக்காட்டி மறக்கவொண்ணுதபடி கலந்து அத்தாலே உஜ்ஜ்வலனுயிருக்கிறவன் திருவிண்ணகரிலே நின்றருளின ஸர்வேச்வரன்கிடீரென்கிறுர்.

[மூவுலகங்களுமாய்] - த்ரைலோக்யத்துக்கும் நிர்வாஹகனுய். க்ருதகம் அக்ருதகம் க்ருதகாக்ருதகமென்றும். [அல்லனுய்] - அல்லாத உபரிதநலோகங்களுக்கும் நிர்வாஹகனுய். இவற்றைச்சொல்லி, அல்லனுயென்கையாலே இவ்வளவன்றிக்கே அஸாதாரணமான நித்யவிபூதியையுடையனுயென்றும். [உகப்பாய்முனிவாய்] - அநுக்ரஹ நிக்ரஹங்களாய். [பூவில்வாழ் மகளாய்த் தவ்வையாய்] - ஸ்ரீயும்அஸ்ரீயுமாய். தவ்வை - அஸ்ரீ; [புகழாய்ப்பழியாய்] - ஸ்ரீயினுடைய கடாக்ஷமுடையார்க்கு வரும்புகழ், தவ்வையினுடைய கடாக்ஷமுடையார்க்கு வரும் பழி. [தேவரித்யாதி] - இந்த்ராதிகள் இங்குள்ளாருடைய ஹவிஸ்ஸைக்கொள்ளும்போது மூன்றுயோஜநம் அவ்வருகேநின்று முகத்தைத் திரியவைத்துவாங்கிச்சர்த்திபண்ணியாயிற்றுப்போவது. அப்படியிருக்கிறவர்களுடைய கந்தமும் பொறுக்கமாட்டாத நித்யஸூரிகள், திருவிண்ணகர் பூமியிலே யாகையாலே இங்கேவந்து பொருந்திவர்த்தியாநிற்பர்கள். அப்படிப்பட்ட திருவிண்ணகரிலே நித்யவாஸம்பண்ணுகிற உபகாரகன். [பாவியேன்மனத்தே] - மின்னிடை மடவாரில் அவன் மேல் விழத் தாம்இருந்தபடியை நினைத்து, 'பாவியேன்' என்கிறுர். நித்யஸூரிகள் தன்பக்கலிலே வந்து மேல்விழ, அத்தைத்தள்ளித் தான் என்பக்கலிலே வந்து மேல்விழாநிற்கக்கிடீர் நான் "அல்லேன்" என்றது. [மனத்தேயுறைகின்ற]-இப்போது நித்யஸூரிகளும் அந்த இருப்புங் கிடக்கக் கிடீர் என்னெஞ்சிலே புகுந்து நித்யவாஸம்பண்ணி நின்றுன். [பரஞ்சுடரே] தனக்குப்புறம்புண்டான வாஸஸ்தாநங்கள் கிடக்க, என்னெஞ்சிலே புகுந்துநின்றது எனக்குக் கார்யஞ்செய்தானு யிருக்கையன்றிக்கே, "தன்பேறு" என்று தோற்றும்படி உஜ்ஜ்வலனுனன். மின்னிடைமடவாரில் - "இவரையிழக்கிறேமோ?" என்று வந்த உறுவுதல்தீர, இவரைப்பெற்ற பின்பு அத்தாலே "நின்றிலங்குமுடியினுய்!" என்கிறபடியே வடிவிலேபிறந்த வேறுபாடுஇருக்கிறபடி.

பரஞ்சுடருடம்பாய் அழுக்குப்பதித்தவுடம்பாய்*
கரந்தும்தோன்றியும்நின்றும் கைதவங்கள் செய்தும்* விண்ணோர்
சிரங்களால்வணங்கும் திருவிண்ணகர்ச்சேர்ந்தபிரான்*
வரங்கொள்பாதமல்லாலில்லை யாவர்க்கும்வன்சரணே. (7)

ஒ.—ஏழாம்பாட்டில், எத்தனையேனுமளவுடையார்க்கும் வலிய புகல் அவனல்லதில்லையென்கிறார். [பரஞ்சுடருடம்பாய்] - அப்ராக்ருதமான திருவுடம்பை புடையனாய். [அழுக்குப்பதித்த வுடம்பாய்] - ஜகச்சரீரனாய். [கரந்துந் தோன்றியும் நின்றும் கைதவங்கள்செய்தும்] - அதிந்த்ரியனாயும் கண் காணவந்து திருவவதாரம்பண்ணியும் ஆச்ரிதர்க்காக அத்திருவுடம்போடே நெடுநாள் வர்த்தித்தருளியும் இப்படி ஸுலபனாய் வைத்து, தன்னை உகவாதார்திறத்து வஞ்சநங்கள் பண்ணியும்.

இ.—ஏழாம்பாட்டில், எத்தனையேனும் அள்வுடையார்க்கும் வலியபுகல் அவனல்லதில்லையென்கிறார். [பரஞ்சுடருடம்பாய்] - நிரவதிக தேஜோரூபனாய்: அப்ராக்ருதமான திருமேனியையுடையனாய். "தேஜஸாம்ராசிமூர்ஜ்ஜிதம் " [அழுக்குப்பதித்த வுடம்பாய்]-ஜகச்ச்சரீரனாய். [கரந்தும்]-"யமாத்மா நவேத" என்று அவற்றுக்கு அத்ருஷ்டனாய்க்கொண்டு அந்தராத்மாவாய் நின்றும். [தோன்றியும்] - "ஆவிர்ப்பூதம் மஹாத்மநா" என்று ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைப் பண்ணியும். [நின்றும்] - அவ்வோவிடங்களிலே பதினோராயிரமாண்டு நூறாண்டு நின்றும். [கைதவங்கள்செய்தும்] - தன்படிகள் சிசுபாலாதிகளுக்குத் தோற்றாதபடிபண்ணியும், ஆச்ரிதர்க்குத் தோற்றும்படி பண்ணியும். கைதவம் - வஞ்சநம். [விண்ணோர் இத்யாதி] - ப்ரஹ்மாதிகள் தலையாலே வணங்கும்படி திருவிண்ணகரிலே நித்யவாஸம் பண்ணுகிற உபகாரகன். [வரங்கொள் இத்யாதி] - வரையாதே எல்லார்க்கும் ஆச்ரயிக்கலாம்படியான ச்ரேஷ்டமான திருவடிகள். [யாவர்க்கும் வன்சரணே] - சிறியார்பெரியார் என்று அன்றிக்கே எல்லார்க்கும் தஞ்சமானபுகல் வேறில்லை. அல்லாதவை ஓட்டைஓடத்தோடே ஒழுகலோடமாய்க் கழுத்துக்கட்டியாயிறேயிருப்பது.

ஈடு.—ஏழாம்பாட்டு. எத்தனையேனும் அளவுடையார்க்கும் வலியபுகல் அவனல்லதில்லை யென்கிறார்.

[பரஞ்சுடருடம்பாய்] - சுத்தஸத்த்வமயமான அஸாதாரண திவ்யவிக்ரஹத்தையுடையனாய். *தேஜஸாம் ராசிமூர்ஜ்ஜிதம்*. [அழுக்குப்பதித்தவுடம்பாய்] - குணத்ரயவச்யமான ஜகச்ச்சரீரனாய். [கரந்தும்]-இவற்றுக்கு அந்தராத்மாவாய்ப் புக்கு நிற்கச் செய்தே, *யமாத்மா நவேத* என்று இவற்றுக்குத் தோன்றாதபடி நின்று, இவற்றின் ஸத்தையை நோக்கியும். [தோன்றியும்] காணவாராயென்றென்று கண்ணும் வாயும் துவர்ந்திருப்பார்க்குக் காணலாம்படி ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைப் பண்ணியும். [நின்றும்] - நாறாண்டு பதினோராயிரமாண்டு நின்றும். அவ்விடங்களிலே, [கைதவங்கள் செய்தும்] - க்ருத்ரிமங்களைப்பண்ணியும். அதாவது - அவதரித்துநிற்கச்செய்தே தன்படிகள் சிசுபாலாதிகளுக்குத் தோற்றாதபடி பண்ணியும், ஆச்ரிதர்க்குத் தோற்றும்படி பண்ணியும். [விண்ணோரித்யாதி] - ப்ரஹ்மாதிகள் 'தலைபடைத்த ப்ரயோஜநம் பெற்றோம்' என்று வணங்கும்படி திருவிண்ணகரிலே நிற்கிற உபகாரகன். [வரங்கொள்பாதமல்லாலில்லை] - எத்தனையேனும் தண்ணியாரும் கிட்டலாம்படி ச்ரேஷ்டமான திருவடிகளல்லது. [யாவர்க்குமித்யாதி] - எத்தனையேனும் கீழார்கீழார்க்கும் அதுவல்லது வலியபுகலில்லை. அவனை யொழிந்த சரண்யரடங்கலும் இவனைக்கொண்டு முழுகும்பேர்; இவனைக்கொண்டு கரையேற்றவல்ல வலியபுகல் அவன் திருவடிகளல்லதில்லை. அடியே பிடித்து ஜீவிக்கில் ஜீவிக்குமத்தனை.

வன்சரண்சுரர்க்காய் அசுரர்க்குவெங்கூற்றமுமாய்*
தன்சரண்நிழற்கீழ் உலகம்வைத்தும்வையாதும்*
தென்சரண்திசைக்குத் திருவிண்ணகர்ச்சேர்ந்தபிரான்*
என்சரணென்கண்ணன் என்னையாளுடையென்னப்பனே! (8)

ஒ.—எட்டாம்பாட்டில், எனக்கு சரணமான மாத்ரமேயல்ல; மற்றுமெல்லாம் திருவிண்ணகர்ச் சேர்ந்தபிரான் என்கிறார். [தன்சரணிழற்கீழ்உலகம்வைத்தும் வையாதும்] - அநந்யப்ரயோஜநரைப் பரிக்ரஹித்தும் அல்லாதாரை பஹிஷ்கரித்தும். [தென்சரண்திசைக்கு] - தெற்குத்திக்குக்கு சரணுக. [என்கண்ணன்] - எனக்குஸுலபன். [என்னையாளுடை யென்னப்பனே] - என்னை அடிமைகொண்டு உபகரித்தவன்.

இ.—எட்டாம்பாட்டில், எல்லார்க்கும் புகலென்ற மாத்ரமன்றிக்கே, எனக்கு விசேஷித்துப் புகல் என்கிறார்; எனக்குப் புகலான மாத்ரமன்றியிலே மற்றுமெல்லாம் திருவிண்ணகர்ச்சேர்ந்தபிரான் என்கிறார். [வன்சரணித்யாதி] - தேவஜாதிக்குத் தன்னை யழியமாறி ரக்ஷிக்கும்புகலாய், தத்ப்ரதிகூலர்க்கு வெங் கூற்றம் - "அந்தகன் தண்ணீர்" என்னும்படியான கூற்றமாய், தன்பாதச்சாயையிலே அயநப்ரயோஜ நரை வைத்தும் அல்லாதாரை பஹிஷ்கரித்தும். [தென்சரண்திசைக்கு] - "தக்ஷிணுதிக் க்ருதா யேந சரண்யா புண்யகர்மணு" என்கிறபடியே தெற்குத்திக்குக்கு சரணமான. [என்சரண்] - எனக்குப் புகலானவன். [என் கண்ணன்] - எனக்கு பவ்யனுனவன். [என்னையாளுடையென்னப்பனே] - என்னை அடிமைகொண்டு போகிறவன்; எனக்கு உபகாரகன்.

ஈடு.—எட்டாம்பாட்டு. எனக்குப் புகலான மாத்ர மன்றிக்கே மற்றுமெல்லாம் திருவிண் ணகர்சேர்ந்தபிரா னென்கிறார். (எல்லார்க்கும் புகலென்றமாத்ரமன்றிக்கே, எனக்கு விசேஷித் துப்புகலென்கிறு ராகவுமாம்.)

[வன்சரண்சுரர்க்காய்] - தேவர்களுக்காகத் தன்னை அம்புக்கு இலக்காக்கி அவர்களை நோக்கும் வலியரக்ஷகனுய். [அசுரர்க்கு வெங்கூற்றமுமாய்] - ஆஸுரப்ரக்ருதிகளுக்கு "அந்த கன் தண்ணீர்" என்னும்படி வெவ்வியகூற்றமுமாய். [தன் சரணித்யாதி] - தன்னுடைய பாதச் ச்சாயையுள்ளே, அநுகூலரான அர்ஜ்ஜுநாதிகளையிட்டுக்கொண்டும், ஸம்பந்தமொத்திருக்கச் செய்தே, ப்ரதிகூலரான துர்யோதநாதிகளைப் புறம்பிட்டும். [தென்சரண்திசைக்கு] *தக்ஷிணு திக் க்ருதா யேந சரண்யா புண்யகர்மணு* என்கிறபடியே, "தென்-திசைக்கு-சரண்"-தெற்குத் திக்குக்குப் புகலிடமான திருவிண்ணகரிலே கிட்டின உபகாரகன். [என்சரண்] - எனக்குப் புகலிடம். [என்கண்ணன்] - எனக்கு பவ்யனுனவன். [என்னை யாளுடை] - என்னை யடிமை கொள்ள உரியவன். [என்னப்பன்] - எனக்கு உபகாரகன். உலகமென்பது -உயர்ந்தோர்மாட்டு.

என்னப்பனெனக்காயிகுளாய் என்னைப்பெற்றவளாய்*
பொன்னப்பன்மணியப்பன் முத்தப்பனென்னப்பனுமாய்*
மின்னப்பொன்மதிள்சூழ் திருவிண்ணகர்ச்சேர்ந்தவப்பன்*
தன்னெப்பாரில்லப்பன் தந்தனன் தன தாள்நிழலே. (9)

ஒ.—ஒன்பதாம்பாட்டில், என்னுடைய ச்ரமமெல்லாந்தீரும்படி தன்னுடைய பாதச்சாயையை எனக்கு, "நானல்லேன்" என்ன, வலியத்தந்தா னென்கிறார். [என்னப்பனெனக்காய்] - எனக்கு உறுதியான என்பிதாவாய். [இகுளாய்] தோழியாய். [பொன்னப்பன் மணியப்பன் முத்தப்பனென் னப்பனுமாய்] - பொன்னும் மணியும் முத்தும்போலேயும் போக்யனுய், எனக்கு அவ்வளவன்றிக்கே மிகவும் உபகாரகனுய். [திருவிண்ணகர்ச் சேர்ந்தவப்பன்] - என்போல்வார்க்குஎளியனும்படி திருவிண்

ணகரிலே வருகையாகிற உபகாரத்தைப்பண்ணினவன். [தன்னொப்பாரில்லப்பன்] - உபகாரகனு மிடத்தில் தனக்கு ஒப்பில்லாதவன்.

இ.—ஒன்பதாம்பாட்டில், எனக்கு ஸர்வப்ரகாரத்தாலும் உபகாரகனாய், தன்பாதச்சாயையை, "அல்லேன்" என்ன, வலிய எனக்குத் தந்தானென்கிறார். [என்னப்பனெனக்காய்] - "பூதாநாம் யோऽவ்யய:பிதா" என்கிறபொதுவன்றிக்கே, எனக்கேஆன பிதாவாய். [இகுளாய்] - தோழியாய். இது தமிழர் நிர்வாஹம். நம்முடையவர்கள் "செவிலித்தாய்" என்று நிர்வஹிப்பர்கள். தாய்க்குத் தோழியாயிருக்குமிறே செவிலித்தாய்: அத்தைச்சொல்லுகிறது. [என்னைப் பெற்றவளாய்] - உடம்பு நொந்து பெற்றவளாய். [பொன்னப்பன் இத்யாதி] - பொன்னும் மணியும் முத்தும்போலே எனக்கு உபகாரகன். [மின்னப்பொன் இத்யாதி] - மின்னுகின்ற பொன்மதிள்சூழ்ந்த திருவிண்ணகரிலே நித்ய வாஸம் பண்ணுகையாகிற உபகாரத்தைப் பண்ணினவன். [தன்னொப்பாரில்லப்பன்] - உபகாரகரில் தன்னோடொப்பாரில்லாத உபகாரகன். ப்ரணயரோஷத்தாலே நான் அகலப்புக, தாழநின்று பொருந்த விட்டுக்கொண்டவன். [தந்தனன் தனதாள்நிழலே] - தன்தாள்நிழல் தந்தான்; தன் பாதச்சாயையைத் தந்தான். "அழித்தா யுன்திருவடியால்" என்கிறபடியே என்மனோரதத்தைத் திருவடிகளாலே அழித்துத் தன்திருவடிகளின்கீழே யிட்டுக்கொண்டான்.

௯டு.—ஒன்பதாம்பாட்டு. எனக்கு சரணமான மாத்ரமல்ல, மற்றுமெல்லாம் அவனே யென்கிறார். எனக்கு ஸர்வப்ரகாரத்தாலும் உபகாரகனாய், தன் பாதச்சாயையை, "அல்லேன்" என்ன, வலிய எனக்குத் தந்தானென்கிறார்.

[என்னப்பனெனக்காய்] - எனக்கு அஸாதாரணனாய் ஸத்தாஹேதுவாயுள்ள பிதாவாய். க்ஷாமகாலத்திலே ப்ரஜையை விற்றுண்ணும் தமப்பனைப்போலன்றியே, தன்னையறிய மாறியும் என்னைநோக்கக்கடவ பிதாவாய். [இகுளாய்] - இகுளையென்று தோழிக்குப்பேராய், அத்தைக் குறைத்து, இகுளென்று கிடக்கிறது. இத்தால் சொல்லிற்றாயிற்று-எனக்கு வ்ருத்த கீர்த்தனம் பண்ணுகைக்குத் தோழியுமாய். [என்னைப்பெற்றவளாய்] - வளர்த்துக்கொள்ளியான தாயைப் போலன்றியே, பத்துமாஸம் வயிற்றிலேவைத்து நோக்கிப்பெற்ற தாயாய். [பொன்னப்பனித்யாதி] - வேறே போக்யமாய்க்கொண்டு உபகாரகமாவன சில வஸ்துக்களுள; எனக்குஅவ்வோ முகங்களெல்லாம் தானாய்நின்றுஉபகரித்தவன். (பொன்னும்மணியும் முத்தும்போலே எனக்கு உபகாரகன்.) [மின்னைப்பொன்னித்யாதி] - மின்னுகின்றுள்ள பொன்மதிளாலே சூழப்பட்ட திருவிண்ணகரிலேநின்ற உபகாரகன். [தன்னொப்பாரில்லப்பன்] - சிலர்க்கு ஒன்றை உபகரிக்கு மிடத்தில், தன்னோடொக்க உபகரிக்கவல்லார் இல்லாதபடியான மஹோபகாரகன். இதுக்குச் சீயரருளிச்செய்யும்படி;—"மின்னிடைமடவாரிலே அவன்வந்துமேல்விழ 'நீ எனக்குவேண்டா' என்று நான் தள்ளத்தள்ள; நீ உனக்குஹிதமறிந்தாயோ? நான் உனக்கு வேணுங்காண் என்று தன்னையெனக்குத்தந்தவன்" என்று. [தந்தனன் தனதாள்நிழலே] - "உன்னையொழிந்தவெய் யிலேயெனக்கமையும்" என்று நான் அகலப்புக, "அழித்தாயுன்திருவடியால்" என்று தன்னு டைய திருவடிகளாலே என் மமதையைப்போக்கி, பாதச்சாயையை எனக்குத் தந்தான். அடி பட்டவாறே, "எனக்கு" என்று வைத்தவற்றையும் போகடுவர்களே.

நிழல்வெய்யில்சிறுமைபெருமை குறுமைநெடுமையுமாய்*
சுழல்வனநிற்பனமற்றுமாய் அவையல்லனுமாய்*
மழலைவாய்வண்டுவாழ் திருவிண்ணகர்மன்னுபிரான்*
கழல்களன்றி மற்றோர்களைகணிலம்காண்மின்களே. (10)

ஒ.—பத்தாம்பாட்டில், அவனுடைய திருவடிகளல்லது மற்றொருரக்ஷகமில்லை என்னுமிடத்தை புத்திபண்ணுங்கோளென்கிறார். [சிறுமை பெருமை] - அணுத்வ மஹத்த்வங்கள். [குறுமைநெடுமை] -

நடுவுள்ள ஹ்ரஸ்வதீர்க்கங்கள். [சுழல்வனநிற்பன] - ஸ்த்தாவரஜங்கமங்கள். [அவையல்லனுமாய்] - இவற்றில் இவனுக்குவ்யாப்தி கர்மநிபந்தநமல்லாமையாலே தன்பக்கல் அவற்றின்தோஷம் தட்டா தொழிகை. [மழலைவாய் வண்டு] - இனியமிடற்றோசையையுடைய வண்டு.

இ.—பத்தாம்பாட்டில், அவனுடைய திருவடிகளல்லது வேறு ரக்ஷகமில்லையென்று புத்திபண்ணுங்கோள் என்கிறார். [நிழல் வெய்யில்] - சீதஹேதுவான நிழலும், உஷ்ணஹேதுவான வெய்யிலும், [சிறுமை பெருமை] - அணுத்வ மஹத்த்வங்கள். [குறுமை நெடுமை] - மத்யமபரிமாணவஸ்துக்களிலுண்டான ஹ்ரஸ்வதீர்க்கங்கள். [சுழல்வனநிற்பன] - ஸ்த்தாவர ஜங்கமங்கள். [மற்றுமாய்] - அநுக்தமான ஸர்வமுமாய். [அவையல்லனுமாய்] - தத்கததோஷைரஸம்ஸ்ப்ருஷ்டனுயிருக்கை. [மழலைவாய் வண்டுவாழ் திருவிண்ணகர்] - மழலைப்பேச்சையுடைய வண்டுகள் தந்தாம்அபிமதங்கள் பெற்றுவாழ்கிறவூர். [மன்னுபிரான்இத்யாதி] - நித்யவாஸம்பண்ணுகிறஉபகாரகன்திருவடிகளல்லது வேறுபுகல்இல்லை. ''மாமேகம் சரணம் வ்ரஜ'' என்கிறவனன்றிக்கே, திருவ்டிகள்தானே தஞ்சமென்கை. [காண்மின்களே] - இத்தை எல்லாரும் புத்திபண்ணுங்கோள்.

ஈடு.—பத்தாம்பாட்டு. அவன்திருவடிகளல்லது மற்று ரக்ஷகமில்லையென்னுமிடத்தை புத்திபண்ணுங்கோளென்கிறார்.

[நிழல் வெய்யில்] - சீதஹேதுவான நிழலும், உஷ்ணஹேதுவானவெய்யிலும். [சிறுமை பெருமை] - அணுத்வ மஹத்த்வங்கள். [குறுமை நெடுமை] - மத்யமபரிமாணத்திலுண்டான ஹ்ரஸ்வதீர்க்கங்கள். [சுழல்வனநிற்பன] - ஜங்கம ஸ்த்தாவரங்கள். [மற்றுமாய்] அநுக்தஸமுச்சயம்; சொல்லப்படாததெல்லாமாய். [அவையல்லனுமாய்] - அவற்றுக்குஅந்தர்யாமியாய் நிற்கச்செய்தே அவற்றின்தோஷம் தட்டாதபடிநிற்குமென்று கீழே சொல்லிற்றிறே; இனியிங்கு என்? என்னில்—அவற்றுக்குவரும் அவஸ்த்தைகளையுமுடையனல்லனாய் என்றபடி. அவையாவன -சேதநகதமாயுள்ள ஸுகித்வ து:க்கித்வாதிகளும், அசேதநகதமான பரிணாமாதிகளும். [மழலைவாய்வண்டுவாழ்] - பருவத்தில் இளமையாலே இனியபேச்சுக்களையுடைத்தான வண்டுகள் வர்த்தியாநின்றுள்ள திருவிண்ணகரிலே நித்யவாஸம் பண்ணுகிற உபகாரகன் திருவடிகளையொழிய வேறு ரக்ஷகரையுடையோமல்லோம். [கழல்களன்றிமற்றோர்களைகணிலம்] *மாமேகம் சரணம் வ்ரஜ* என்றுமவனன்றிக்கே திருவடிகள்தானே தஞ்சமென்கை. [காண்மின்களே] - இது அர்த்தத்வாதஞ் சொல்லுகிறேனன்று; நீங்களும் பாருங்கோள்.

காண்மின்களுலகீரென்று கண்முகப்பேநிமிர்ந்த*
தாளிணையன் தன்னைக் குருகூர்ச்சடகோபன்சொன்ன*
ஆயிரத்துத் திருவிண்ணகர்ப்பத்தும்வல்லார்*
கோணையின்றிவிண்ணோர்க்கு என்றுமாவர்குரவர்களே. (11)

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழிவல்லார் அயர்வறுமமரர்களுக்குபோக்யராவர் என்கிறார். [காண்மின்களுலகீரென்று கண்முகப்பே நிமிர்ந்ததாளிணையன்தன்னை] - லோகத்திலுள்ள எல்லீரும் கண்டு க்ருதார்த்தராகுங்கோள் என்று அவர்கள்கண்ணெதிரே வளர்ந்த திருவடியையுடையவனை. [ஆயிரத்துத் திருவிண்ணகர்ப்பத்தும் வல்லார்] - ஆயிரம் திருவாய்மொழியிலும் அவனுடைய ஜகந்நிர்வாஹகத்வத்தைச் சொன்ன இத்திருவாய்மொழிவல்லார். [கோணையின்றி] - மீறுக்கு இன்றிக்கே. [குரவர்கள்] - கௌரவ்யர்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழிவல்லார் நித்யஸூரிகளுக்கு கௌரவ்யரென்கிறார். [காண்மின்கள் இத்யாதி] - நோக்குவித்யை காட்டுவாரைப்போலே, இதோராச்சர்யம் பாருங்கோளென்று லௌகிகர் எல்லாருடையவும் கண்ணெதிரே வளர்ந்த திருவடிகளையுடையவனை. ''உங்கள்தலையிலே

திருவடிகளை வைக்க வாருங்கோள்'' என்று விசைவாரில்லையே. [குருகூர்ச்சடகோபன்சொன்ன] - இந்த ஸௌலப்யத்தை அநுஸந்தித்தவர் சொன்ன வார்த்தையாகையாலே ஆப்தமென்கை. [ஆணையாயிரத்து] - "பீஷா஽஽ஸ்மாத் வாத: பவதே'' என்கிறபடியே ஆயிரத்திலும் ஐகஶ்வர்யமனத்தைச்சொன்ன, திருவிண்ணகரை விஷயமாக உடைய பத்து. இத்தை அப்யஸிக்கவல்லார். [கோணையின்றி] - மிறுக்கின்றிக்கே, நித்ய ஸூரிகளுக்கு என்றுமொக்க கௌரவ்யராவர்.

ஈடு.—நிகமத்தில் - இத்திருவாய்மொழிவல்லார் நித்யஸூரிகளுக்கு நாள்தோறும் கௌரவ்யராவரென்கிறார்.

[காண்மின்களுலகீரென்று கண்முகப்பேநிமிர்ந்த தாளிணையன் தன்னை] - "உங்கள் தலையிலே நான் காலைவைக்கக்கொடுவாருங்கோள்'' என்றால் இசையாரென்று பார்த்து, நான் காட்டப்புகுகிறதொரு விஸ்மயம் பாருங்கோள் என்பாரைப்போலே இவர்கள் கண்முகப்பே நிமிர்ந்த திருவடித்தாமரைகளையுடையவனை. [காண்மின்கள்] - இதொரு விஸ்மயம் என்ன வேண்டிற்றுக் காணும், "தலையிலே யடிபடப்புக்கவாறே இருப்பர்கள்'' என்று. [குருகூர்ச் சடகோபன்சொன்ன] - இந்தஸௌலப்யத்தை யநுபவித்தவர்சொன்ன வார்த்தையாகையாலே ஆப்தமென்கை. [ஆணையாயிரத்து] - ஈச்வரனுடைய ஐகதநுசாஸநத்தைச்சொன்ன இத்திருவாய்மொழிவல்லார். விண்ணோருண்டு - நித்யஸூரிகள், அவர்களுக்குக் காலதத்தவமுள்ளதனையும், குருக்களாவர் - கௌரவ்யராவர். இதில், கோணையில்லை - ஒருமிறுக்கில்லை. ஆவதென்? அஸ்ப்ருஷ்டதோஷகந்தரான நித்யஸூரிகளுக்கு, நித்யஸம்ஸாரியானவன் இத்தைக் கற்கும் காட்டில் கௌரவ்யனாம்படி யெங்ஙனே? என்னில்,—அங்கேயிருந்துவைத்தே ததீயத்வாகாரத்தாலே விலாஷிபூத்யநுஸந்தாநம்பண்ணி த்ருஷ்டராம் நிலையுள்ளது முக்தர்க்காகையாலே, இங்கேயிருந்தே அவர்கள்அநுஸந்தாநத்தைப் பண்ணுகிற இவனை, "ஸம்ஸாரத்தேயிருந்துவைத்தே நம்படி யொருவனுக்கு உண்டாவதே!'' என்று கொண்டாடியிருப்பர்கள்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

நான்காந் திருவாய்மொழி—குரவை - ப்ரவேசம்

ஒ.—நாலாந் திருவாய்மொழியில், ராமவ்ருத்தாந்தத்தில் திருவடியைப்போலே க்ருஷ்ணவ்ருத்தாந்தத்திலே ஸக்தரான ஆழ்வார், தாம் ப்ரணயகோபத்தாலே மின்னிடைமடவாரில் "எம்பெருமானோடு ஸம்ச்லேஷிப்பேனல்லேன்'' என்று மிறங்கின தம்மை "ஆவேன்'' என்னப் பண்ணியருளின உபகாரத்தை நல்குரவிலே அநுஸந்தித்து, மாசறுசோதியில் "சேணுயர்வானத்திருக்கும்'' என்கையாலே-தூரஸ்த்தனென்று இன்னாதான ஆழ்வார், அவியவா யெண்ணிமுடிக்கவொண்ணாதனவாயுள்ள க்ருஷ்ண வ்ருத்தாந்தங்களைக் காட்டியருளக்கண்டு, 'தொல்லருணல்வினையால் சொலக்கூடுங்கொல்'' என்று மநோரதித்தபடியே இனிதாகப்பேசி அநுபவிக்கிறார். பிறந்தவாற்றில் - பலஹாநியாலே பேசமாட்டிற்றிலர்; குரவையாய்ச்சியரில் - ப்ரீதியாலே எல்லா சேஷ்டிதங்களையும் தரித்துப்பேசுகிறார்.

இ.—நாலாந்திருவாய்மொழியில், பிறந்தவாற்றிலே - குணங்களை தரித்துநின்றுஅநுபவிக்க வல்லனாம்படி பண்ணியருளவேணுமென்று சரணம்புக்கார்; திருவண்வண்டூரிலே தூதுவிட்டார்; அவன் வரக்கொண்டு மின்னிடைமடவாரிலே ப்ரணயரோஷத்தாலே அகலப்புக்க தம்மைச் சேரவிட்ட உபகாரத்தை அநுஸந்தித்தார், "ஸர்வநியந்தாவான மேன்மையையுடையவன் என்னைத் தாழநின்று பொருத்துவித்தும்

கொள்வதே!'' என்று உபகாரஸ்ம்ருதியாலே ஏத்தினர்; இதில் - க்ருஷ்ணாவதாரசேஷ்டிதங்களை அநுஸந்தித்து ப்ரீதராகிறார். ''பாவோ நாந்யத்ர கச்சதி'' என்று - திருவடி ராமாவதாரத்திலே ப்ரவணனாயிருக்குமாபோலே இவரும் க்ருஷ்ணாவதாரத்திலே ப்ரவணராயாயிற்றிருப்பது. மாசறுசோதியிலே, ''சேணுயர்வானத்திருக்கும்'' என்று - தூரஸ்தனென்று இன்னாதான இழவுதீர இந்த லோகத்திலே ஸ்ரீப்ருந்தாவநத்திலே பெண்களோடே பரிமாறின பரிமாற்றத்தைக் காட்டிக்கொடுக்க அநுஸந்தித்து ப்ரீதராகிறார். மானேய்நோக்கிலே, ''தொல்லருவல்வினையால் சொலக்கூடுங்கொல்'' என்று - நாக்கு நீர்வந்து திருநாமம்சொல்லுவது என்றோ வென்று ஆசைப்பட்ட இழவுதீர க்ருஷ்ணகுணங்களை அநுபவித்துப் பேசி ப்ரீதராகிறார். சன்மம்பலபலவிலேயும் ''ஓர் குறைவிலன்'' என்றார்; 'இதிலும் ''என்ன குறைவு எனக்கு'' என்றார். அதுக்கும் இதுக்கும் வாசியென்? 'என்னில், - அங்கு ஸம்ஸாரிகளிற்காட்டில் வ்யாவ்ருத்தனாகப்பெற்றேன் என்றார்; இதில் குணாநுபவப்ரீதிப்ரகர்ஷத்தாலே, எனக்கு ஒருகுறைவுமில்லை யென்கிறார்.

ஈடு.—இத்திருவாய்மொழியில் ஆழ்வார் ஸ்ரீவால்மீகிபகவானோடொப்பர். அவனும் ராமாவதாரமல்லது போக்யமறியான்; அவனுடைய ப்ரபந்தமும் அப்படியே; இவரும் க்ருஷ்ணாவதாரமல்லதறியார்; இத்திருவாய்மொழி - க்ருஷ்ண வ்ருத்தாந்தமொழிய வேறொன்றைச் சொல்லாது. *பாவோ நாந்யத்ர கச்சதி* என்றுகொண்டு 'பரதனையுங்கூட வேண்டேன்' என்ற திருவடியைப் போலேயாயிற்று இவரும் க்ருஷ்ணாவதாரமொழிய வேறொன்று அறியாதபடி.

''சேணுயர் வானத்திருக்கும் தேவபிரான்'' என்கிறபடியே-கிட்டிநின்று அநுபவிக்கப் பெற்றிலோமென்கிற இழவுதீர, பூமியிலேயாகப்பெற்றது; தொல்லருவல்வினையால் சொலக் கூடுங்கொல்?'' என்றிறே இவர் ஆசைப்பட்டது; அதாவது - நா நீர்வந்து திருநாமம் சொல்லுகையாகிறது ஸாக்ருதபலமிறே. பிறந்தவாற்றில் இவர்க்கு உண்டான இழவெல்லாம் தீரும்படி ஸ்ரீப்ருந்தாவநவ்ருத்தாந்தத்தைக் காட்டிக் கொடுக்கக் கண்டு, அது பூதகாலமாய்த் தோற்றுகையன்றிக்கே ஸமகாலம்போலே கிட்டிநின்றநுபவிக்கிறார். மின்னிடைமடவாரிலே "அல்லோம்'' என்று அகன்று முடிந்து போகப்புக்க தம்மை ''ஆவோம்'' என்னப்பண்ணிச் சேர்விட்டுக்கொண்டபடியை யநுஸந்தித்து, இப்படி வல்லார் இவனல்லதில்லையென்று தலைக்கட்டுகிறாராயிருக்கிறது. சன்மம்பலபலவிலும் இப்படியிருப்பதொரு ஹர்ஷமுண்டே; அதில் இதுக்கு வாசியென் ? என்னில் - அங்கு - இதர வ்யாவ்ருத்தி மாத்ரத்தால் உண்டான ஜ்ஞாநலாபத்தால் வந்த ஹர்ஷம்; இங்கு - அவன் தன் குணங்களை நேரே இவரை நெருங்கி யநுபவிப்பிக்க, ஸ்வவசரல்லாதபடி அநுபவித்து ஹ்ருஷ்டராய் வாய்விடுகிறார்.

குரவையாய்ச்சியரோடுகோத்ததும் குன்றமொன்றேந்தியதும்*
உரவுநீர்ப்பொய்கைநாகம்காய்ந்ததும் உட்படமற்றும்பல*
அரவிற்பள்ளிப்பிரான்தன் மாயவினைகளையேயலற்றி*
இரவுநன்பகலும்தவிர்கிலம் என்னகுறைவுஎனக்கே. (1)

ஒ.—முதற்பாட்டில், 'ப்ரீதிபூர்வகமாக இரவும்பகலும் க்ருஷ்ணசேஷ்டிதங்களை அநுபவிக்கப் பெற்றேன்: எனக்கு இனி என்னகுறை யுண்டு?' என்கிறார். உரவுநீராவது - விஷஜலம், வலியநீர் என்றுமாம். [அரவில்பள்ளிப்பிரான்] - திருவவதாரம்பண்ணுகைக்காகத் திருப்பாற்கடலிலே கண் வளர்ந்தருளினவன். நாகணைமிசை நம்பிரான் ப்ரத்யபிஜ்ஞைபண்ணுகிறது. [மாயவினைகள்] - ஆச்சர்யமான சேஷ்டிதங்கள். [இரவுநன்பகலும்] - எம்பெருமானைப்பெற்று அநுபவிக்கிற காலமாகையாலே நன்றான இரவும் பகலும்.

இ.—முதற்பாட்டில், அஹோராத்ரம் க்ருஷ்ணசேஷ்டிதங்களை ப்ரீதிபூர்வகமாக அநுபவிக்கப் பெற்ற எனக்கு என்னகுறை உண்டு என்கிறார். [குரவையாய்ச்சியரோடு கோத்ததும்] - மின்னிடைமட

வாரிலே அகலப்புகத் தாழநின்று பொருந்தினபடி, இடைப்பெண்களோடே பொருந்தினாற்போலே இருக்கிறதாயிற்று. தன்னோடே அவர்களைக்கோக்கையன்றியே, அவர்களோடே தன்னைக் கோத்தபடி. பஞ்சலக்ஷங்குடியில் பெண்களோடே கலந்த ப்ரீதிஉண்டாயிற்று இவரோடேகலந்த ப்ரீதி. கோக்கை - தொடுக்கை, கைகோத்துக்கொண்டு ஆடுங்கூத்திறே - குரவைக்கூத்தாவது. [குன்றமொன்று இத்யாதி] - அவர்களை அநுபவிக்கையன்றிக்கே, அவர்களுக்குவந்த ஆபத்தைப் போக்கினபடி. இந்த்ரன் பசிக்ராஹத்தாலே அழியவர்ஷிக்கத்தொடங்கினவாறே, முன்னேநின்றதொருமலையை எடுத்து ரக்ஷித்தபடி. [ஏந்தியதும்] - ஏழுவயஸ்ஸிலே ஏழுநாள் ஒருபடிப்பட மலையை எடுத்துக்கொடு நிற்கச்செய்தேயும், ஆச்ரிதார்த்த ப்ரவ்ருத்தியாகையாலே வருத்தமற்றிருந்தபடி. [உரவுநீர்] - வலியை உடைத்தான நீர். விஷத்தாலே பாதகமான வலியாதல், முதுநீர் ஆகையாலே வலிய நீர் என்னுதல். உரவு - விஷமென்னுதல் வலியென்னுதல். [நாகங்காய்ந்ததும்] - "பெண்களோட்டை ஜலக்ரீடைக்கு விரோதி" என்று காளியனை ஓட்டினதுவும். [உள்பட மற்றும்பல] - இவைமுதலான சேஷ்டிதங்களுக்குத் தொகையில்லை. பிறந்தவாற்றில் - பலஹாகியாலே சொல்லமாட்டிற்றிலர்; இங்கு - ப்ரீதிப்ரகர்ஷத்தாலே தரித்துச்சொல்லமாட்டாதொழிகிறார். [அரவிற்பள்ளிப்பிரான்] - அவதரிக்கைக்காகத் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளினவன். ஆச்ரிதவிரோதியான ஸர்ப்பத்தைப் போக்கினான், அஜ்ஜாதியிலே ஒருவனுக்கு உடம்பு கொடுத்தான்; ஜாதிப்ரயுக்தமன்று நிரஸநம், ஆச்ரிதவிரோதி யென்று. பிறந்தவாற்றில் நாகணைமிசைநம்பிரானை ப்ரத்யபிஜ்ஞைபண்ணுகிறார். [மாயவினைகளையேயலற்றி] - ஆச்சர்யசேஷ்டிதங்களை ப்ரீதியாலே அடைவுகெடச்சொல்லி. [இரவுநன்பகலும்] - நல்ல இரவும் நல்லபகலும்; "சுடர்கொளிராப்பகல்" என்று - விரஹத்தில் அக்நிகல்பமான அஹோராத்ரம்போலன்றிறே. [தவிர்கிலம்] - விடுகிறிலேன். [என்னகுறைவெனக்கே] - காலபேதமுள்ள தேசத்திலேயிருந்து ஏகரூபமாக அநுபவிக்கப்பெற்ற எனக்கு "ஒரு தேசத்திலே போகவேணும்" என்னுங் குறையுண்டோ ?

ஈடு.—முதற்பாட்டு. அஹோராத்ரம் க்ருஷ்ணகுணங்களை ப்ரீதிபூர்வகமாக அநுபவிக்கப்பெற்ற எனக்கு இனி ஒருகுறையில்லை என்கிறார்.

[குரவையாய்ச்சியரோடுகோத்ததும்] - பிறந்தவாறும் என்றாப்போலே தொடங்கி அவதாரம்முன்னாக இழியாதே, இதிலே இழிவானேன்? என்னில்,—மின்னிடைமடவாரிலுண்டான தம்முடைய ப்ரணயரோஷத்தைப்போக்கித் தம்மைச் சேரவிட்டுக்கொண்டபடி, திருக்குரவையிற் பெண்களோடே கலந்து அவர்களை அநுபவிப்பித்தாப்போலே யிருக்கை யாலே, அது முன்னாகப் பேசுகிறார். தாம் அநுஸந்திக்கிலிறே அவதாரக்ரமத்திலே இழிவது! அவனநுபவிப்பித்தபடியே பேசுகிறாராகையாலே; திருக்குரவையிற் பெண்களோடுண்டான கலவியையாயிற்று இவர்க்குமுதலிலே காட்டிக்கொடுத்தது. பஞ்சலக்ஷங்குடியிற் பெண்களெல்லாரோடுங்கலந்த ப்ரீதியுண்டாயிற்று, இவரொருவரோடே கலந்த ப்ரீதி. தன்செல்லாமையாலே இடைப்பெண்களுடைய மாலையிலே தன்னை அப்ரதாநனாக்கிக்கொண்டு கோத்ததும். "குரவை பிணைந்த குழகும்" என்று ஆசைப்பட்டபடியே அநுபவிக்கிறார். பெண்களுடைய மாலையிலே இடையீடாகத் தன்னைக்கோக்கிறபோது, "விஜயாதியெனொருவன் கலந்தான்" என்று தோற்றாதபடி அவர்களோடேயொரு நீராகக் கலந்தபடி. பெண்களும் பெண்களுமிறே கைகோத்து விளையாடுவார். திருக்குரவையில் இவனையொழியப் பெண்களுக்குச் செல்லாதாப்போலே காணும் மின்னிடைமடவாரில் ஆழ்வாரையொழிய இவனுக்குச் செல்லாமை விளைந்தபடி. கோக்கை - தொடுக்கை. கைகோத்துக்கொண் டாடும் கூத்திறே - குரவைக்கூத்தாகிறது. [குன்றமொன்றேந்தியதும்] - ஸ்வர்க்கம் என்று கொண்டு ஒரு போகபூமியாய், அங்கே அப்ஸரஸ்ஸுக்களோடே கூடியிருந்து புண்யபலாநுபவங்கள்பண்ணி ஸப்ரதாநனாயிருப்பான் இந்த்ரனென்றொருவன் உண்டிறே; அவ்வநுபவத்தைப் பூமியிலே ஒருபருவத்திற் பெண்களோடேகூட ஸ்வைரமாக அநுபவித்திருக்கிற இருப்பைக் கண்டு, அது பொறுக்கமாட்டாமை அஸூயையைவர்த்தித்து, "நமக்கிட்ட சோற்றை யுண்டான்" என்று ஒரு வ்யாஜமாகக் கல்வர்ஷத்தை வர்ஷிப்பித்தான்; அப்போது கைக்கு எட்டிற்றொருமலையையெடுத்துத் தரித்துக் கொண்டு நின்றபடி. ஒருவன் இங்கே ஒருநாள் சூக்குப் புதைக்குங் காட்டில், "நம்முடைய போகம் பகுந்துபோகப்புகாநின்றது" என்றுஅஞ்சி அவரை உவரை வரவிட்டுக்

கலக்குமவனிறே. "இப்படி யநுபவிக்கிறான் ஸர்வேச்வரன்" என்று அறியானிறே; இவன் தன்னை மநுஷ்யஸஜாதீயனாக்கி வைத்துக் கொண்டிருக்கையாலே. அன்றைக் கல்வர்ஷத்தில் பசுக்களுக்கும் இடையர்க்கும் வந்த ஆபத்தைத் தீர்த்தாப்போலேயாகாதே, இவர்க்கும் பின்னிடைமடவாரில் வந்த ஆபத்தைத் தீர்த்தபடியும். [ஏந்தியதும்] - பாரார்த்தமாகையாலே கைக்கு ஓராபரணம்போலேயாயிற்று. அதுதான் வருத்தமற்றிருந்தபடி. பூ ஏந்தினாப்போலே யிருந்தது. ஏழுவயஸ்ஸிலே ஏழுநாள் ஒருபடிப்பட தரித்துக்கொண்டிறே நின்றது! [குன்றமொன்றேந்தியதும்] - "இப்படி ஏழுவயஸ்ஸிலே ஏழுநாள் தரித்ததுக்கு என்செய்வோம் நாம்" என்று ஒருவர் நெஞ்சாறல்படாதபடி ஸஹோத்ரீயாய் நின்றிறே இவன் இவற்றை ரக்ஷித்தது. [உரவுநீர்] - தரை காணவொண்ணாமையாலுண்டான ஆழத்தையுடைத்தான மிடுக்கையுடைய நீரென்னுதல்; அன்றியே, காளியன்விஷத்தாலே ஒருவர்க்கும் கிட்டவொண்ணாத வலியென்னுதல்; முதுநீராகையாலே வலியநீரென்னுதல்; (விஷத்தாலே பாதகமான வலியென்னுதல்). உரவு - விஷமென்னுதல். [நாகங்காய்ந்ததும்] - நாகத்தையோட்டியதும். பாம்படித்து மேலிட்டுக்காணும் பெண்களோடே ஜலக்ரீடை பண்ணிற்று. [உள்படமற்றும்பல] - இவை முதலான சேஷ்டிதங்களுக்கு ஓரெண்ணில்லை. பிறந்தவாற்றில் பலஹானியாலே சொல்லமாட்டிற்றிலர்; இங்கு உகப்புத் தலைமண்டையிட்டுச் சொல்லமாட்டுகிறிலர். மற்றும்இப்படி பெண்களோட்டைக் கலவிக்கு விரோதிகளான தண்ணீர்த்துரும்பறுத்தவை அநேகங்கள். [அரவில்பள்ளிப்பிரான்] - காட்டார்உறக்கம் தமோகுணபிபூதமாய் ஸ்வார்த்தமாயிருக்கும்; இவன்உறக்கம் பிறருடைய ரக்ஷணார்த்தமாயிருக்கும். "உறங்குவான்போல் யோகுசெய்த பெருமா னிறே. உறங்கினானில் பரரக்ஷணத்துக்கு உடலாயிருக்கும்; உணர்ந்திருந்தானாகிலும் அப்படியே; இதென்ன உபகாரந்தான்! [அரவிற்பள்ளிப்பிரான்] - கீழ் ஒருபாம்போடுண்டான சேராமை சொல்லிற்று; இங்கு ஒருபாம்போடுண்டான சேர்த்தி சொல்லுகிறது. அங்கு போகத்தைக் காற்கடைக்கொண்டமை சொல்லிற்று; இங்கு போகப்ராவண்யம் சொல்லுகிறது. ப்ரதிகூலனான காளியனைப் பறக்கவோட்டினான்; அநுகூலனானவனைப் படுக்கையாகக் கொண்டான். இவன்தான் அகந்தமுகமாக அநுகூலிக்கும்; அவனும் அகந்தமுகமாக அடிமை கொள்ளும். "ஆயிரம் பைந்தலைய அனந்த" னிறே. [அரவிற்பள்ளிப்பிரான்] - அவதாரங்களுக்கு அடி திருப்பாற்கடலாகையாலே அத்தைச்சொல்லுதல்; அன்றியே, "நாகணைமிசை நம்பிரான் சரணேசரண்" என்றத்தை ப்ரத்யபிஜ்ஞை பண்ணுகிறாராதல். [தன்மாயவினைகளையேயலற்றி] - அவனுடைய ஆச்சர்யசேஷ்டிதங்களையே வாய்விட்டு ஸ்தோத்ரம்பண்ணி. [இரவுநன்பகலும் தவிர்கிலம்] - பகவதநுபவத்துக்கு உறுப்பாகாதவன்றிறே சுடர்கொள் இராப்பகலாயிருப்பது; அநுபவயோக்யமான காலமாகையாலே - நல்ல இரவும் நல்ல பகலுமென்கிறார். விச்லேஷித்தபோதிறே நெருப்பையுருக்கி எறட்டினாப்போலேயிருப்பது. [என்ன குறைவு எனக்கே] - *நகாலஸ் தத்ர வை ப்ரபு:* என்றுகொண்டு பகலும் இரவும் நடையாடாததொரு தேசவிசேஷந்தேடி அநுபவிக்கைக்குப் பட்டைப்பொதிசோறு கட்ட வேண்டும்படி குறைவாளனாயிருந்தேனோ? ஏகாகாரமான அநுபவமிறே அங்குள்ளது; *விஜஹாரபஹூந் ருதூந்* என்கிறபடியே, அவ்வோகாலங்கள்தோறுமுண்டான அநுபவ விசேஷங்களை புஜிக்கப்பெற்ற எனக்கு ஒருகுறையுண்டோ? பரத்வாநுபவமிறே யங்குள்ளது; சீலகுணாநுபவமுள்ளது இங்கேயிறே.

கேயத்தீங்குழலூதிற்றும் நிரைமேய்த்ததும்* கேண்மையோண்கண்
வாசப்பூங்குழல்பின்னைதோள்கள் மணந்ததும்மற்றும்பல*
மாயக்கோலப்பிரான்தன் செய்கைநினைந்துமனங்குழைந்து*
நேயத்தோடுகழிந்தபோது எனக்கெவ்வுலகம் நிகரே. (2)

ஔ.—இரண்டாம்பாட்டில், "தொல்லருளால்வினையால் சொலக்கூடுங்கொல்" என்று ப்ரார்த்தித்தபடியே பெறுகையால், திருநாட்டில்தான் என்னோடு ஒப்பாருண்டோவென்கிறார். [கேயத்தீங்குழ

லூதிற்றும்] - காநந்தோடே இனியகுழலை ஊதிற்றும். [நிரைமேய்த்ததும் கெண்டையொண்கண்வாசப் பூங்குழல் பின்னைதோள்கள் மணந்ததும்] - பசுமேய்த்துவந்த இளைப்புத்திரும்படி அவனைத் தன்னுடைய முக்தமான அழகிய கண்களாலே அம்ருதத்தை வர்ஷித்தாப்போலே குளிரநோக்கித் திருக்குழலில் பரிமளம் அவன்திருமேனியெல்லாம் வெள்ளமிடும்படிதழுவின நப்பின்னைப்பிராட்டியுடைய தோள்களிலே கலந்ததுவும். [மாயக்கோலப்பிரான்] - நப்பின்னைப்பிராட்டியோட்டை ஸம்ச்லேஷத்தாலே அத்யாச்சர்யமான அழகையுமுடையனாய் அநுக்ரஹசீலனுமிருக்கை. [நேயத்தோடு கழிந்தபோது] - இனிமையோடே போன காலம்.

இ.—இரண்டாம் பாட்டில், ''தொல்லரு ணல்வினையால் சொலக்கூடுங்கொல்'' என்று ப்ரார்த்தித்தபடியே பெறுகையாலே, திருநாட்டிலேதான் என்னோடு ஒப்பாருண்டோ? என்கிறார். [கேயத் தீங்குழல் ஊதிற்றும்] - கேயமென்று காநம்; தீங்குழல் - இனியகுழல். ''பரதந்த்ரனாய்ப்பசுமேய்க்கப் போகையாலே வரவுதாழ்த்தேன் இத்தனை'' என்றாப்போலே சிலபாசுரங்களை நெஞ்சைவருத்தும் இசையோடேகூட்டிப் பெண்கள்நெஞ்சில்மறம்மாறும்படி குழல்ஊதிற்றும். [நிரைமேய்த்ததும்] - அக் குழலோசையே தாரகமாக வளருமவையாயிற்று பசுக்கள்; பெண்களும் அக்குழலோசைவழியேசேருமவர்கள்; ஒன்றைக்கொண்டு எல்லாக்கார்யமும் செய்யவல்லவனிறே. [கெண்டை இத்யாதி] - பசுமேய்த்த விடாய்தீருவது நப்பின்னைப்பிராட்டிதோளோடே அணைந்தாயிற்று. நப்பின்னைப்பிராட்டி முக்தமான அழகியகண்ணாலே குளிரநோக்கி, அழகிய திருக்குழலில் பரிமளத்தாலே திருமேனியை வாஸிதமாக்கி பசுமேய்த்துவந்த ச்ரமந்தீர. ''பர்த்தாரம் பரிஷஸ்வஜே'' என்கிறபடியே அணைக்க, அவள்தோளோடே கலந்ததும். [மற்றும்பல] - மற்றுமுண்டான பிராட்டிமாரோடே கலந்தபடி. [மாயக்கோலப்பிரான்] - நப்பின்னைப்பிராட்டியோட்டைக் கலவியால்வந்த ஒற்றுமஞ்சளும் மாளிகைச்சாந்துமான அத்யாச்சர்யமான ஒப்பனையையுடையனாய் உபகாரசீலனானவனுடைய. [தன்செய்கை யித்யாதி] - க்ருஷ்ண சேஷ்டிதங்களை நினைத்து அத்தாலே நெஞ்சுநெகிழ்ந்து. [நேயத்தோடு கழிந்தபோது] - இனிமையோடே கழிந்த காலம். [எனக்கெவ்வுலகம் நிகரே] - ஒருதேசவிசேஷத்திலே தான் எனக்குஎதிருண்டோ? ஸ்மர்த்தவ்ய விஷயஸாரஸ்யத்தாலே அநுபவவேளையிற்போலே ஸ்ம்ருதிவேளையிலும் இனிமையோடே செல்லக்கடவதானால் எனக்குஎங்கே எதிர் ?

ஈடு.—இரண்டாம்பாட்டு. ''தொல்லருணல்வினையால் சொலக்கூடுங்கொல்'' என்று ப்ரார்த்தித்தபடியே பெறுகையாலே திருநாட்டிலேதான் என்னோடொப்பாருண்டோ? என்கிறார்.

[கேயத்தீங்குழலூதிற்றும்] - கேயமென்று பாட்டு: தீயென்று இனிமை; இனிமையையுடைய பாட்டென்றபடி. தான்நினைத்த பெண்களுடைய பேரைவைத்துப்புணர்த்துச்சுவைப் பாட்டாகவைத்து ஊதிற்றும். [நிரைமேய்த்ததும்] - பெண்களையழைக்கைக்கும் பசுமேய்க்கைக்கும் ஒன்றே பரிகரம்; குழலையூதவே பசுக்கள்வயிறுநிறையும். சக்ரவர்த்திதிருமகனுக்கு வில்லு கைவந்திருக்குமாபோலேயாயிற்று, க்ருஷ்ணனுக்குக் குழல் கைவந்திருக்கும்படி. [கெண்டையித்யாதி] - கரவதத்தினன்று பிராட்டி. *பர்த்தாரம் பரிஷஸ்வஜே* என்று அணைத்தாப்போலேயாயிற்று, பசுமேய்த்துவந்த ச்ரமமெல்லாம்போம்படி நப்பின்னைப்பிராட்டி முக்தமான அழகிய கண்ணாலே குளிரநோக்கி அழகிய திருக்குழலில் பரிமளத்தாலே திருமேனியை வாஸிதமாக்கித் தன்தோளோடேயணைத்ததுவும். [கெண்டையொண்கண்] - கெண்டைபோலே அதிமுக்தமாய் அம்ருதத்தை வர்ஷித்தாப்போலே குளிரநோக்குகிற கண்கள். [வாசப்பூங்குழல்] வாசஞ்செய்பூங்குழலிற்காட்டிலும் பொலிவையுடைத்தான தன்னேற்றமுடைய குழலையுடையவள். [பின்னைதோள்கள் மணந்ததும்] - அவளுடைய தோள்களுடனே கலந்ததுவும். மணத்தல்—கலத்தல். ''தோளி'' என்கிறபடியே இவளுக்குஅழகு கைவிஞ்சியிருக்குமே. [மற்றும்பல] - மற்றைப்பிராட்டிமாரோடு கலந்தபடி. சக்ரவர்த்தி திருமகனுக்கு அத்யயநம், ஆசார்யஸேவை அஸ்த்ர சஸ்த்ராப்யாஸங்களுண்டாமாபோலே, இவனுக்கு எல்லாமிவையேயிறே. [மாயக்கோலப்பிரான்] - நப்பின்னைப்பிராட்டியோடுகலந்த ஒற்றுமஞ்சளும்சாந்துமான அத்யாச்சர்யமான ஒப்பனையுடைய வுபகாரகன். [மாயக்கோலப்பிரான்] - நப்பின்னைப் பிராட்டியோடு கலந்தாப்போலே, அல்லாதபிராட்டிமார் ''கொங்கைமேல்குங்குமத்தின் குழம்

பழியப் புகுந்தொருநாள், தங்குமேலென்னாவி தங்கும்'' என்றிருக்குமவர்களுடைய திருமுலைத் தடத்தில் குங்குமக்குழம்பும் கோயிற்சாந்துமாய் நின்ற அழகைச் சொல்லவுமாம். [தன் செய்கைநினைந்து மனங்குழைந்து நேயத்தோடுகழிந்தபோது] - அவன் செயல்களை நினைத்த வாறே நெஞ்சு தன்வசமின்றியழியும்படி. "நினைதோறும் - நெஞ்சிடிந்துகும்'' என்றிறே யிருப்பது. [நேயத்தோடு கழிந்தபோது] - ஸ்மர்த்தவ்யவிஷயரஸ்யதையாலே ஸ்மரணந்தான் இனிதாய்க் கழிந்தபோது. நேயம் - நேசம். [எனக்கெவ்வுலகம் நிகரே] - ஒருதேசவிசேஷத்தில் தான் எனக்கு எதிருண்டோ ? அநுபவ வேளைபோலே ஸ்ம்ருதிவேளையிலும் இனிமையோடே செல்லக்கடவதானால் எனக்கு எங்கே எதிர்? ஆகாசவாயர் எனக்குஎதிரோ! வாய் - இடம். பரமாகாசமென்கிற பரமபதமாகிற இடத்திலுள்ளார்தான் எனக்குஒப்பாரோ!! உலகமென்பது உயர்ந்தோராகையாலே, ஸூரிகளென்றபடி.

நிகரில்மல்லரைச்செற்றதும் நிரைமேய்த்ததும்* நீள்நெடுங்கைச்
சிகரமாகளிறட்டதும் இவைபோல்வனவும்பிறவும்*
புகர்கொள்சோதிப்பிரான்தன் செய்கைநினைந்துபுலம்பி* என்றும்
நுகரவைகல்வைகப்பெற்றேன் எனக்கென்னினிநோவதுவே. (3)

ஒ.—மூன்றும்பாட்டில், க்ருஷ்ணசேஷ்டிதங்களை அநுபவித்துக்கொண்டு எனக்குக் காலமெல் லாம் போகப்பெற்றேன்; "இன்னது பெற்றிலேன்'' என்று நோவவேண்டுவதில்லை யென்கிறார். [நிகரில்மல்லரைச்செற்றதும் நிரைமேய்த்ததும்] - தங்கள்மிடுக்குக்கு லோகத்தில் ஒப்பின்றிக்கே யிருக்கிற மல்லரைச்செற்றது பசுமேய்த்தாப்போலே வருத்தமில்லாத லீலாமாத்ரமே. [புகர்கொள் சோதி] - ப்ரதிகூலநிரஸநத்தாலே ஒளிபெற்ற தேஜஸ்ஸு. [நுகர வைகல் வைகப்பெற்றேன்] - அநு பவிக்கைக்கு ஈடாகக்காலம் நெடுகப்பெற்றேனென்றுமாம்.

இ.—மூன்றும்பாட்டில், க்ருஷ்ணசேஷ்டிதங்களை அநுபவித்துக்கொண்டு காலம் போக்கப்பெற்ற எனக்கு ஒருவிச்லேஷமாகிறநோவு இல்லை என்கிறார். [நிகரில் மல்லரைச்செற்றதும்] - மிடுக்குக்கு ஸத்ருசமின்றிக்கே இருக்கிற மல்லரைச்செற்றதும். க்ஷத்ரிய ஜந்மத்துக்கு அநுரூபமாக விரோதி நிரஸநம் பண்ணினதும். [நிரைமேய்த்ததும்] - கோபஜந்மத்துக்கு அநுரூபமாகப் பசுமேய்த்ததும். பசுமேய்த்த அநாயாஸத்தோபாதியாயிற்று, மல்லரை லீலையாக நிரஸித்ததும். [நீள்நெடுங்கை] - வீப்ஸை யாலே அறநெடிய கையென்கை: கடக்கப்போனாலும் எட்டிப்பிடிக்கவல்ல கை. அவன் அதுக்குத் தப்பின பின்பும் இன்று இவர் வயிறுபிடிக்கிறார். [சிகரமாகளிறட்டதும்] - பர்வதசிகரம்போலே உரத்துப்பெருத் திருக்கிற குவலயாபீடத்தை நிரஸித்ததும். [இவைபோல்வனவும் பிறவும்] - இவைபோலே மற்றுமுண்டான கேசிநிரஸநாதிகளும். [புகர்கொள்சோதி] - விரோதிநிரஸநத்தாலே ஒளிபெற்ற தேஜஸ்ஸு. [பிரான்] - உபகாரசீலன். [தன்செய்கைஇத்யாதி] - தன் சேஷ்டிதங்களை அநுஸந்தித்து நாள்தோறும் அடைவு கெடக்கூப்பிட்டு. [நுகரவைகல்வைகப்பெற்றேன்] - அநுபவத்தோடே காலம் கழியப்பெற்றேன் என் னுதல்; அநுபவிக்கலாம்படி காலம் நெடுகப்பெற்றேன் என்னுதல். [எனக்கென் இனி நோவதுவே] - ப்ரீதிப்ரேரிதனாய் அநுபவிக்கிற எனக்கு இப்படி காலம் நித்யமான பின்பு, விச்லேஷமாகிற நோவு உண்டோ ?

ஈடு.—மூன்றும்பாட்டு. க்ருஷ்ணசேஷ்டிதங்களையே அநுபவித்துக்கொண்டு காலம் போக்கப்பெற்ற எனக்கு "இன்னது பெற்றிலேன்'' என்று நோவவேண்டுவதில்லையென்கிறார்.

[நிகரில் மல்லரைச் செற்றதும்] - மிடுக்குக்கு ஸத்ருசமின்றிக்கேயிருக்கும் மல்லரைச் செற்றதும். கவ்ய ஸேவையாலே ம்ருதுஸ்வபாவராயிருப்பார் இரண்டுபிள்ளைகளிறே, அபக்ஷ்ய பக்ஷணங்களாலும் சஸ்த்ராஸ்த்ர சிக்ஷைகளாலும் மலைபோலே திண்ணிதான தோளையுடைய மல்லரைப் பொடிபடுத்தினார்கள்: புழுக்குறித்தது எழுத்தானாப்போலே இங்ஙனே வாய்த்தது.

கொண்டு நிற்கக்கண்டதித்தனை; இல்லையாகில் சிலமுக்தருடைய வ்யாபாரமாகமாட்டாதிறே. *ஸமம் யுத்தமித்யாஹு: என்று கொண்டு ஸர்வரும் அஞ்சும்படியிறே அற்றைச்செயல். "ஏவிற்றுச்செய்வானேன்றெதிர்ந்துவந்த மல்லரை" - ஸ்வதந்த்ரராய்வந்து மேல்விழிலிறே "முடியாது" என்றுகைவாங்கலாவது? கம்ஸனுக்குப் பரதந்த்ரராய் வருகையாலே இங்குத் தோற்றார்களாகில் அவன் அங்கே தோள்களைக் கழிக்குமாயிற்று; ஆனபின்பு, "கோளைமுகளாய்க் கொலையுண்பதில் புகழோடேமுடியவமையும்" என்று மேலிட்டார்கள். "சாவத்தகர்த்த சாந்தணிதோள்சதுரன்"—கூனி சாத்திவிட்ட சாந்து குறியழியாமேகாணும் அவர்களோடு வ்யாபரித்தது. மல்லரோடே கூட ஸர்வாவயங்களும் பொருந்தி வ்யாபரியாநிற்கச்செய்தே, சாத்தின சாந்து குறியழிந்ததில்லைகாணும். கூனி சாத்திவிட்ட அநந்தரத்திலே பெண்கள் கண்ணாலே இலச்சினையிட்டு விடுகையினாலே இவனாலழிக்கவும் போகாதிறே. இவர் கள் கண்ணாலே இலச்சினையிடுகையாவது - அவன்தோளிலே சேலும்கயலும் பிடுகையிறே. இவன் மல்லரோடே அழித்தானாகிலும், "மற்றெங்கேனும் அழித்தான்" என்றிறே அவர்கள் இருப்பது. இது அழித்துப்போனானாகில், பின்பு பெண்கள்கோஷ்டிக்கு ஆளாகானே. என்று எதிர்ந்துவருகையாவது - பொரக்கடவோமென்று நெஞ்சிலே துணிந்துவருகை. [நிரைமேய்த்ததும்] - முதற்பிறவிக்குசடாகச்செய்த செயலும், இரண்டாம் பிறவிக்கு ஈடாகச் செய்த செயலும்: க்ஷத்ரியஜந்மத்துக்கு ஈடாம்படி மல்லரோடே யுத்தம்பண்ணினான்; கோப ஜந்மத்துக்கு ஸத்ருசமாம்படி பசுக்களை மேய்த்தான். பசுமேய்த்த போதை ஆயாஸமாகாதே, மல்லரோடு பொருதபோதுமுள்ளது. [நீள்நெடுங்கைச் சிகரமாகளிறட்டதும்] - மல்லர்க்குத் தப்பிலும் தப்பவொண்ணாதுமவர் இதுக்கு. [நீள்நெடுங்கை] - தூரப்போய்த்தப்பவொண்ணாதபடி கையாலே வளைத்துக்கொள்ளவற்றாயிருக்கை. 'நெடுங்கை' என்னாநிற்கச்செய்தே, 'நீள் நெடுங்கை' என்கிறதிறே-இதின் பெருமை யிருக்கிறபடி! [சிகரமாகளிறட்டதும்] - ஒருகை வேணுமோ? இதுதன்னைக் காணவமையாதோ? "ஆனைமாமலை" என்னக் கடவதிறே. பர்வத சிகரம்போலே யாயிற்றுப் பெருத்திருக்கிறபடி. [அட்டதும்] - முடித்ததும். [இவைபோல் வனவும்பிறவும்] - இவைதொடக்கமான கேசிநிரஸநாதிகளும். [புகர்கொள்சோதி] - குவலயா பீடநிரஸநத்துக்கு அநந்தரம் வடிவிற்பிறந்த ஒளிபெற்றதேஜஸ்ஸு. [பிரான்] - உபகாரசீலன். *ஸக்ய: பச்யத* என்னும்படியிருக்குமிறே. *ஸ்வேதாம்புகணிகாசிதம்* ஆனையோடே பொரு தாலும் இங்ஙனையோ வேர்ப்பது? மலையாகிற மலையோடு பொருதத்தோடு ஆனையாகிற மலை யோடு பொருதத்தோடு வாசியில்லைகாணும் இவனுக்கு. [தன்செய்கை நினைந்து புலம்பி] - உபகாரசீலனானவனுடைய சேஷ்டிதங்களை அநுஸந்தித்து, அது உள்ளடங்காமை புலம்பி. [என்றும்நுகர வைகல் வைகப்பெற்றேன்] - நாடோறும்புஜித்துக்கொண்டு, வைகலானது வைகப்பெற்றேன்: காலமானது கழியப்பெற்றேன். வைகலென்பது - காலம். வைகுகை யாவது - கழிகை. அன்றிக்கே, அநுபவிக்கைக்குப்போரும்படி காலமானது நெடுகப்பெற்றே னென்றுமாம். அப்போது, வைகுகையாவது - நெடுகுகை. [எனக்கென் இனி நோவதுவே]. "காலம் நெடுகுவது குறுகுவதாகாத இடந்தேடி யநுபவிக்கப்பெற்றிலேன்" என்கிற அதிருப்தி யுண்டோ எனக்கென்கிறார். [எனக்கென் இனி நோவதுவே] - அவனுக்கு வரும் நோவிறே, இவர்க்கு நோவாவது; அது கழியப் பெற்றதிறே. இவர்நோவு போக்கும் அவனுக்கு வரும் நோவிறே, இவர்க்கு நோவாவது: அதுபோகவே இவர்க்கு நோவு போயிற்றதாமிறே. உயிருக்கு வரும் நோவு உடம்புக்கு நோவாமிறே;

நோவவாய்ச்சியுரலோடார்க்க இரங்கிற்றும்* வஞ்சப்பெண்ணைச்
சாவப்பாலுண்டதும் ஊர்சகடமிறச்சாடியதும்*
தேவக்கோலப்பிரான்தன் செய்கைநினைந்துமனங்குழைந்து*
மேவக்காலங்கள்கூடினேன் எனக்கென்னினிவேண்டுவதே. (4)

ஒ.—நாலாம்பாட்டில், யசோதைப்பிராட்டிக்கு அத்யந்தம்பவ்யனும் அவ்விருப்பிலே ப்ரதிகூலரை மாய்த்த க்ருஷ்ணனை அநுபவிக்கப்பெற்ற எனக்கு இனி அவாப்தவ்யம் இல்லை என்கிறார். [தேவக்கோலப்பிரான்] - வருகிற சகடத்தைத் தப்பாதபடி நிரஸித்திருந்த அப்ராக்ருதமான அழகை உடையான்.

இ.—நாலாம்பாட்டில், ஆச்ரிதபவ்யனை இருப்பிலே ப்ரதிகூலரைமாய்த்த க்ருஷ்ணனை அநுபவிக்கப்பெற்ற எனக்கு அவாப்தவ்யம் உண்டோ என்கிறார். [நோவ] - தாயார்க்கு ப்ரேமம்உள்ள அளவும் சீற்றம் உண்டிறே. இவர் தம்திருமேனியிலே கட்டினப்போலே: நோவுபடுகிறார். [ஆய்ச்சியுரலோடார்க்க இரங்கிற்றும்] - தாயார்கட்டின கட்டுக்கு ப்ரதிக்ரியை இல்லாமையாலே நோவுபட்டு பேதனாய் இருந்ததும். ஆச்ரிதகர்மபந்தமும் ப்ரதிகூலர் பந்தித்த பந்தமுமிறே அறுக்கலாவது. [வஞ்சமித்யாதி] - தாய்வடிவு கொண்டுவந்த பூதனை முடியும்படி நச்சுப்பாலுண்டதும், சூர்ப்பணகையைப்போலே பின்பிருந்து பூசல்விளைக்கவையாதே முடிக்கப்பெற்றபடி. [ஊர்சகடமித்யாதி[- பரிஹாரமாகவைத்த சகடம் அஸுராவேசத்தாலே வந்து நலியப்புக, திருவடிகளாலே துகளாம்படி சாடியதும்; முலைவரவுதாழ்த்துத் திருவடிகளை நிமிர்த்தமாத்ரத்திலே சகடாஸுரன் அழிந்தபடியாலே - சாடியது என்கிறார். [தேவக்கோலப்பிரான்] - விரோதியை அழிக்கையால்வந்த அப்ராக்ருதமான அழகை எனக்கு உபகரித்தவன். அவன்சேஷ்டிதங்களை அநுபவித்து நெஞ்சுநெகிழ்ந்து இச்சேஷ்டிதங்களோடே பொருந்தும்படி காலங்களைக்கூடப் பெற்றேன்; இனி, எனக்கு வேண்டுவது என்? இவ்வநுபவத்தோடே காலம் செல்லப்பற்ற எனக்கு அவாப்தவ்யம் உண்டோ ?

ஈடு.—நான்காம்பாட்டு. ஆச்ரிதபவ்யனை இருப்பிலே ப்ரதிகூலரை மாய்த்த க்ருஷ்ணனை யநுபவிக்கப் பெற்ற எனக்கு அவாப்தவ்யமுண்டோ? என்கிறார்.

[நோவஆய்ச்சி உரலோடார்க்க இரங்கிற்று] - சீயர் இப்பாட்டை இயலருளிச்செய்யப் புக்கால் "நோவ" என்றருளிச்செய்யும் அழகுகாணும். நோவவென்கிறார்காணும் ஆழ்வார், தம்திருமேனியிலே கயிறு உறுத்தினப்போலே. [ஆய்ச்சி உரலோடார்க்க இரங்கிற்றும்] - ஒருத்வேஷமுண்டாய்க் கட்டிற்று அல்லவிறே, ஸ்நேஹகார்யமான கோபமாகையாலே ஸ்நேஹமுள்ளவளவும் இடைநிற்குமிறே கோபமும். தாயெடுத்த சிறுகோலுக்குளைந்தோடியிறே, விளியாவார்க்கவாப்புண்டு :விம்மியழுதான்; வாய்விட்டழமாட்டாததிறே இவரை வருத்துகிறது. (விளியாவார்க்க-கோபித்துக்கட்ட.) [ஆய்ச்சியுரலோடார்க்க] - "தறியார்ந்தகருங்களிறேபோலே நின்று தடங்கண்கள்பனிமல்கும் தன்மையானை" - ஒரு மத்தகஜத்தைத் தறியோடே சேர்த்தாப்போலேகாணும் இவன் கட்டுண்டு நின்ற நிலை! ஓர்அபலை கட்டின கட்டு அவிழ்த்துக்கொண்டு போகமாட்டாதே, நின்றழுகையே ஸ்வபாவமாயிருந்தபடி. *பதி சக் நோஷி* என்னுமிறே. [உரலோடார்க்க இரங்கிற்றும்] - உரலோடேகட்ட இரங்கிற்றும்; துர்யோதநாதிகளுடைய பந்தமாகிலிறே அறுக்க விரகு சிந்திப்பது. [இரங்கிற்றும்] - மாநஸபீடையை அநுஸந்தித்தபடி. இரக்கம் - ஈடுபாடு. [வஞ்சப்பெண்ணைச் சாவப்பாலுண்டதும்] - கெட்டேன்! பேய்த்தாய்பக்கலிலும் அங்ஙனிருந்தானாகில் என்படக்கடவது தான்? [சாவப்பாலுண்டதும்] - சூர்ப்பணகியைப்போலே அங்கஹாநியைப் பண்ணிவிட்டுப் பூசலைவிளைப்பியாதே முடித்துவிடப் பெற்றபடி. [பாலுண்டதும்] - யசோதைப்பிராட்டி முலையுண்ணும்போதும் தான்உயிர்பெற உண்ணுமாபோலேகாணும் இவன்முலையுண்கிற போதும் தான்உயிர்பெறமுலையுண்டபடி. 'பெருமுலையூடுயிரைவற்ற வாங்கியுண்டவாய'னிறே. இவன் பிள்ளையாயே முலையுண்டானத்தனை; வஸ்துஸ்வபாவத்தால் ப்ரதிகூலர் முடிந்ததித்தனையிறே. [ஊர்சகடமிறச்சாடியதும்] - ப்ரேரகர் வேண்டாதபடி தானே வந்து நலிந்தபடி. ஒருமநுஷ்யவடிவுகொண்டு வந்து நலியிலிறே பரிஹரிக்கலாவது. இத்தால் சொல்லிற்றாயிற்று - ஸஹாயாந்தரநிரபேக்ஷமாக பாதகத்வத்தில் உறைப்புச் சொன்னபடி. [இறச்சாடியதும்] - "தளர்ந்தும் முறிந்தும் சகடவசுரர் உடல் வேறாப் பிளந்து" என்று சொல்லக்கடவதிறே [சாடியதும்] அநாயாஸேந திருவடிகளை நிமிர்க்கச் செய்தேயும், ஒருமுக்தனுடைய

வ்யாபாரமாகையாலே போரப் பொலியச் சொல்லுகிறார். "பேர்க்தோர் சாடிறச் செய்யபாத மொன்றால் செய்த நின்சிறுச்சேவகமும்" என்னக்கடவதிறே. [தேவக்கோலப்பிரான்] - ப்ராக்ருதஸஜாதீயனாய் நின்று செய்யவும் பெற்றதில்லையே. அதிபால்யத்திலே செய்த செயலாகையாலே அப்ராக்ருதமா யிருப்பதோர் ஒப்பனைபோலேயிருக்கிறபடி. (அப்ராக்ருதமான அழகை எனக்கு உபகரித்தவன். கோலம் - ஒப்பித்த விக்ரஹம்.) [தன்செய்கைநினைந்து மனங்குழைந்து மேவக்காலங்கள் கூடினேன்] - அவனுடைய சேஷ்டிதங்களை யநுஸந்தித்து அகவாயுடைகுலைப்பட்டு அநந்யப்ரயோஜநனாய்க்கொண்டு காலம் போக்கப்பெற்றேன். நெஞ்சு நெகிழ்ந்து சேஷ்டிதங்களோடே பொருந்தும்படி காலங்களைக் கூடப்பெற்றேன். [எனக்கென்னினிவேண்டுவதே] - இனி அவாப்தவ்ய மொன்றில்லை யென்கிறார்.

வேண்டித்தேவரிரக்கவந்துபிறந்ததும் வீங்கிருள்வாய்*
பூண்டன்றன்னைபுலம்பப்போய் அங்கோராய்க்குலம்புக்கதும்*
காண்டலின்றிவளர்ந்து கஞ்சனைத்துஞ்சவஞ்சம்செய்ததும்*
ஈண்டுநானலற்றப்பெற்றேன் எனக்கென்ன இகலுளதே. (5)

ஒ.—அஞ்சாம்பாட்டில், திருவவதாரம் பண்ணியருளின பின்பு கம்ஸன் அறியாதபடி வளர்ந்து கம்ஸனை மாய்த்தபடி இன்றுஇருந்து அநுபவிக்கப்பெற்ற எனக்கு இனி ஒருமிடியில்லை யென்கிறார். எதிர்உண்டோ என்றுமாம். [வேண்டித்தேவரிரக்க வந்து பிறந்ததும்] - தேவர்கள் இரக்கத் தானே அபிநிவிஷ்டனாய்வந்து பிறந்ததும். இருளிலேவந்து பிறந்தான் என்றுமாம். கம்ஸபயத்தாலும், "விச்லேஷிக்கிறேன்" என்னும் வ்யஸநத்தாலும் கட்டிக்கொண்டு தாயார் கதற இருளிலேபோனான் என்னவுமாம். [ஈண்டு நானலற்றப்பெற்றேன்] - ஸமகாலத்திலேயிருந்து பயப்படாதே இப்போது நிர்ப்பயனாய் இனிதாக அநுபவிக்கப்பெற்றேன்.

இ.—அஞ்சாம்பாட்டில், அவதரித்து, கம்ஸன் அறியாதபடி வளர்ந்து கம்ஸனை மாய்த்தபடியை இன்று இருந்து அநுபவிக்கப்பெற்ற எனக்கு எதிர் இல்லையென்கிறார். [வேண்டி இத்யாதி] - தேவர்கள் அர்த்திக்க, வேண்டிவந்து தன்னுகப்பாலே பிறந்ததுவும். "பிதரம் ரோசயாமாஸ", "ஸம்ச்லேஷே பஜதாம் த்வராபரவச:", "பரித்ராணாய ஸாதூநாம்". [வீங்கிருள்வாய்] - வளருகிற இருளிலே. வீங்கிருள்வாய் பிறந்ததும் என்னுதல், வீங்கிருள்வாய் ஆய்க்குலம் புக்கதுவும் என்னுதல், "வீங்கிருளினுண்டுளியாய்" என்று பயஹேதுவானஇருள் அன்றிக்கே, பயநிவ்ருத்திக்கு உடலான இருளிறே. [பூண்டன்று அன்னை புலம்ப] - பிறந்த அன்றே தேவகியார், முன்பே ஆறுபிள்ளைகளை இழக்கையாலும், புத்ரவாத்ஸல்யத்தாலும், கம்ஸ பயத்தாலும் திருவடிகளைக் கட்டிக்கொண்டு கதற. [போய்] - மூலைச்சுவடு அறியாமையாலே இவனுக்குப் போகலாமிறே. [அங்கோராய்க்குலம்புக்கதும்] - அத்தசையிலே அஞ்சினான் புகலிடமாயிருப்பது ஓர் இடைச்சேரி உண்டாவதே! கம்ஸனுக்குக் குடிமக்களாய் இருக்கச்செய்தேயும் "அவனுக்கு அநிஷ்டம்" என்று பாராதே மறைத்துவைத்து அடைக்கலம் நோக்கவல்ல ஊர். [காண்டலின்றி வளர்ந்து] - கம்ஸன் வஞ்சித்து வரக்காட்டின துஷ்ப்ரக்ருதிகள் அறியாதபடி வளர்ந்து. [கஞ்சனைத் துஞ்சவஞ்சம்செய்ததும்] - கம்ஸன் அழைத்து வஞ்சிக்கநினைக்க, அவன்நினைவை அவன்தன்னோடே போக்கினதுவும்; ராமாவதாரம்போலே "செவ்வைப்பூசல் அல்லது அறியான்" என்று இராமையிறே பிழைத்தது- [ஈண்டுநான் அலற்றப்பெற்றேன்] இங்கேஇருந்து அநுபவித்து ப்ரீதியாலே அடைவுகெடப் பேசப்பெற்றேன். ஈண்டு - இங்கு என்றபடி; இப்போது என்னவுமாம்; இக்காலத்திலே; அதாகிறது - தேவகியாரையும் ஸ்ரீவஸுதேவரையும்போலே ஸமகாலத்திலே இருந்து வயிறு எரியாதே, கம்ஸவிஜய பர்யந்தமாக இக்காலத்திலே அநுபவிக்கப்பெற்றேன். [எனக்கென்ன இகலுளதே] - எனக்கு என்ன எதிர்உண்டு என்னுதல், எனக்கு என்ன க்லேசம் உண்டு என்னுதல். இகல் - யுத்தம்; யுத்தத்தாலே வரும் க்லேசமாதல், யுத்தத்தில் வரும் எதிர் ஆதல்.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. அவதரித்து கம்ஸனையறியாதபடிவளர்ந்து கம்ஸனை மாய்த்தபடியை இன்றிருந்தநுபவிக்கப்பெற்ற எனக்கு ஒரு குறையில்லையென்கிறார்.

[வேண்டித்தேவரிரக்கவந்துபிறந்ததும்] - தேவரிரக்க வேண்டி வந்துபிறந்ததும். "எங்களளவறியாதே ஒருவனுக்கு வரங்கொடுத்து அவனையுபரப்பார்த்தோம்; எங்களுக்குக் குடியிருப்பு அரிதாயிற்று" என்று தேவஜாதி கப்படங்கட்டிக்கொண்டு செல்ல *பிதரம் ரோசயாமாஸ* என்கிறபடியே தான் அர்த்தியாய்வந்து பிறந்ததுவும். *ஆத்மமாயயா* என்னும்படியிறே; ஆத்மேச்சயா என்றபடி; *மாயா வயுநம் ஜ்ஞாநம்*. இரக்கிறவர்களளவுபார்த்தல், தன்னளவு பார்த்தல் செய்கையன்றிக்கே வந்து பிறந்தபடிகாணும், இவரை வருத்துகிறது. தான் இரப்பாளனும்க் காரியம்செய்யுமவன், பிறர்இரந்தால் பொறுக்கமாட்டானிறே. [பிறந்ததும் வீங்கிருள்வாய்] - *மத்யராத்ரேகிலாதாரே ஜாயமாநே ஜநார்த்தநே* என்னும்படியிறே. "இவனும் விழுக்காடறியாதே பயப்பட்டுக்கொடுநின்றான், கம்ஸபயமும் ப்ராப்தமாயிராநின்றது. இருளாவேயிறே நாம் பிழைத்தது! இனி இவ்விருளைச் சரணம்புகுமித்தனையிறே" என்று பிள்ளையுறங்காவில்லிதாஸர் பணிப்பராம். ஊரெல்லாம் துஞ்சியில்கூற்றமான இருள் இவர்க்கு இப்போது ஆதாரத்துக்கு விஷயமாயிற்றிறே. வீங்கிருள்வாய் பூண்டன்றன்னை புலம்பப்போய் என்றுமாம். "மக்களறுவரைக் கல்லிடைமோத விழந்தவள்" என்கிறபடியே பெற்றுப்பெற்று இழந்த வளாகையாலே, இவனையும் இழக்கிறோமோ!" என்று விரஹகாதரதையாலே காலைப்பூண்டு கிடந்து கூப்பிடப்போய். பிள்ளைபக்கல் வாத்ஸல்யத்தாலே இவள் கூப்பிட, இவன் முலை சுவடறியாமையாலே போனபடி. வீங்கிருள் - வளர்கிற இருள். [அங்கோராய்க்குலம் புக்கதும்] - அவ்வவஸ்த்தையிலே இடையிலே வளருகைக்கு ஓர் அஞ்சிறைன்புகவிடமுண்டாவதே! [ஆய்க்குலம்] - "கம்ஸன்பாதகன்" என்று பயப்படவறியாதவர்கள். "குடிவாய் உடன் படவிருந்தானாகில் இருக்கிறான், இல்லையாகில் உறக்கோலாலே தகர்க்கிறோம்" என்றிருப்பர்கள். [காண்டலின்றி வளர்ந்து] - கம்ஸனும் அவன்வரக்காட்டின பாதகவர்க்கமும் காணாதபடி வளரப்பெறுவதே! [கஞ்சனைத்துஞ்ச வஞ்சம் செய்ததும்] - ஸ்ரீநாரதபகவான் அறிவித்த பின்பு ஒருபோதுதாழாதேவந்து, அவன்தான் நினைத்தவஞ்சனையை அவன்தன்னோடே போக்கினதும். கம்ஸன் முடியும் படியாக வஞ்சனைசெய்தது, ராமாவதாரம்போலே "செவ்வைப்பூசலல்லதறியேன்" என்றிராமையிறே. [ஈண்டுகானலற்றப்பெற்றேன்] - தேவகியாரைப்போலே ஸமகாலத்திலேயிருந்து பயப்படாதே, இப்போது பயங்கெட்டிருந்து அநுபவிக்கப்பெற்றேன் ஈண்டு - இப்போது. [எனக்கென்ன இகலுளதே] - கம்ஸன்பட்ட பின்பு எனக்கு சத்ருக்களுண்டோ? இகல் - சத்ரு. (எல்லாரும் சேஷபூதராகையாலே தமக்கு சத்ருவில்லை. அவனும் நாராயணனாகையாலே அவனுக்கு சத்ருவில்லை. இனி யிவர்சத்ருக்கள் பகவத்விமுகரிறே.) கம்ஸனைமுடித்தபடியை இன்றிருந்து அநுபவிக்கப்பெற்ற எனக்குஇனி ஒரு மிடியில்லை என்கிறாராகவுமாம்.

இகல்கொள்புள்ளைப்பிளந்ததும் இமிலேறுகள்செற்றதுவும்*
உயர்கொள்சோலைக்குருந்தொசித்ததும் உட்படமற்றும்பல*
அகல்கொள்வையமளந்தமாயன் என்னப்பன்தன்மாயங்களே*
பகலிராப்பரவப்பெற்றேன் எனக்கென்னமனப்பரிப்பே. (6)

ஈ.—ஆறும்பாட்டில், க்ருஷ்ணனுடைய ப்ரதிகூலநிரஸந பரம்பரைகளை அநுபவிக்கப்பெற்ற எனக்கு இனி ஒரு மநோதுக்கம் இல்லை என்கிறார். [இகல்கொள்புள்ளைப்பிளந்ததும்] - எதிரிட்ட புள்ளைப்பிளந்ததும். இமில்என்று கருத்தைச்சொல்லுகிறது. [உயர்கொள்சோலைக்குருந்தொசித்ததும்] - ஸ்ப்ருஹணீயமாம்படி உயர்ந்து தழைத்துநின்ற குருந்தின்வடிவைக்கொண்ட அஸுரனை முடித்ததும்.

இ.—ஆறாம்பாட்டில், க்ருஷ்ணனுடைய ப்ரதிகூல நிரஸந பரம்பரையை அநுபவிக்கப்பெற்ற எனக்கு ஒருமநோது:க்கம் இல்லை என்கிறார். [இகல்கொள் இத்யாதி] - யுத்தோந்முகனான பகாஸுரனைப் பிளந்ததும். பக்ஷிவேஷத்தாலே வந்து எதிரிட்டானுமிற்று பகாஸுரன்; அவனை அநாயாஸேந பிளந்தான். [இமிலேறு இத்யாதி] - கண்டார்க்கு பயாவஹமான கருத்துக்களையுடைய ரிஷபங்களை நிரஸித்ததும். இமில் - கருத்து. [உயர்கொள் இத்யாதி] - ஓங்கித்தழைத்திருந்துள்ள குருந்தை முறித்ததும்; தர்சநீயமான ஸ்த்தாவரவேஷத்தைக் கொண்டு வந்த மஹாஸுரனை முடித்ததும். [உட்படமற்றும்பல] - கன்றும் விளவாயும் வந்த அஸுரர்முதலாக வேறும்நிரஸித்தவை அநேகங்கள். இந்த திர்யக்ஸ்த்தாவரங்களை நித்யஸூரிகள் கைங்கர்யத்துக்காகப் பரிக்ரஹிப்பர்கள்; இங்கு ப்ராதிகூல்யத்துக்கு உறுப்பாகக் கொண்டவடிவுகளிறே இது. இதுக்குப் பாபப்ராசுர்யம் அடி; அதுக்குஇச்சை அடி. [அகல்கொள்இத்யாதி] - பரப்பையுடைத்தானபூமிஅடங்கலும் தன்திருவடிகளின்கீழே யிட்டுக்கொண்ட ஆச்சர்யத்தை யுடையவன். வரையாதே நீண்டும் ஸ்வபாவ ஸாம்யத்தாலே சொல்லுகிறது. [என்னப்பன்] - இவ்வபதாநம் தமக்குஉதவ ப்பலித்தது என்று இருக்கிறார். [மாயங்களே] - ஆச்சர்யசேஷ்டிதங்களையே. [பகலிரவு இத்யாதி] - இரவோடு பகலோடு வாசியற அநுபவித்து ப்ரீதியாலே அடைவுகெடப்பேசப் பெற்றேன். [எனக்கென்ன மனப்பரிப்பே] - எனக்குஎன்ன மநோது:க்கமுண்டு. பரிவு என்கிறத்தை ச்சந்தஸ்ஸுக்குச்சேர 'பரிப்பு' என்று சொல்லுகிறது.

ஈடு.—ஆறாம்பாட்டு. க்ருஷ்ணனுடைய ப்ரதிகூல நிரஸந பரம்பரையை அநுபவிக்கப் பெற்ற எனக்கு ஒரு மநோது:க்கமில்லையென்கிறார்.

[இகல்கொள்புள்ளைப்பிளந்ததும்] - (இகல் - யுத்தம்.) கேவலம் புள்மாத்ரமாய்வந்து தோற்றுகை யன்றிக்கே, யுத்தோந்முகமாய்க்கொண்டு எதிரிட்ட புள்ளை நிரஸித்ததும். அசுராவேசத்தோடேவரச்செய்தேயும் 'பாதிக்கவருகிறது' என்று பிறரஞ்சாத வடிவுகொண்டு வந்தபடி. பள்ளத்தில் மேயும் பறவையுருக்கொண்டுவந்து. [இமிலேறுகள்செற்றதும்] - கருத்தை யுடைத்தான வ்ருஷபங்களைச் செற்றதும். [உயர்கொள்சோலைக்குருந்தொசித்ததும்] - ஓக்கத்தை யுடைத்தாய்ச் சோலைசெய்துநின்ற குருந்தை முறித்ததும். "முக்தராயிருப்பார்க்கு ஆகர்ஷகமாயிருக்கும்" என்று தழைத்துநின்றது; "இனியித்தைமுறித்துக் கார்யங்கொள்வோம்" என்று பொடிபடுத்தினான். [உட்படமற்றும்பல] - இப்படையிலே மற்றுமுண்டான ப்ரதிகூல நிரஸநங்கள் அநேகமிறே. [அகல்கொள்வையமித்யாதி] - பரப்பையுடைத்தான பூமியடங்கலும் அநாயாஸேந வளர்ந்த ஆச்சர்யபூதனான உபகாரகனுடைய ஆச்சர்யசேஷ்டிதங்களையே. [பகலிராப்பரவப்பெற்றேன்] - நாட்டார் அபிமத விஷயங்களை புஜிக்கைக்கு 'பகல் இரா' என்று கூறிட்ட காலம் இரண்டும் இவ்விஷயத்திலே அநுபவிக்கப்பெற்ற எனக்கு. இரவுபகல் புறம்பேவிஷயங்களை யநுபவிப்பாருடைய மநோது:க்கமுண்டோ? 'பரிவென்று' - து:க்கம். அதிலே ஒரு ஒற்றெழுத்தேறினாலும் அவ்வர்த்தத்தையே காட்டக்கடவது.

மனப்பரிப்போடு அழுக்குமானிடசாதியில்தான்பிறந்து*
தனக்குவேண்டுருக்கொண்டு தான்தனசிற்றந்தினைமுடிக்கும்*
புனத்துழாய்முடிமாலைமார்பன் என்னப்பன்தன்மாயங்களே*
நினைக்கும்நெஞ்சுடையேன் எனக்கினியார்நிகர்நீணிலத்தே. (7)

ஒ.—ஏழாம்பாட்டில், ஆச்ரிதருடைய நோவு பொறுக்கமாட்டாமை அப்ராக்ருத திவ்யஸம்ஸ்த்தாநத்தோடேகூட தானேவந்து பிறந்தருளி, ஆச்ரிதவிரோதி நிரஸநத்தைப் பண்ணியருளினவனுடைய சேஷ்டிதங்களை நினைக்கும் நெஞ்சுடைய எனக்கு ஆர் நிகர் நீணிலத்து? என்கிறார். [தனக்குவேண்டுருக்கொண்டு] - தனக்கு அபிமதமான த்விபுஜசதுர்ப்புஜாதிரூபங்களைக்கொண்டு- [தான் தனசிற்றத்தினை முடிக்கும்] - ஆச்ரிதருடையவிரோதிகளைப் போககினுல் அவர்களுக்கு ஒரு காரியஞ்செய்தானுமன்றிக்கே தன்னுடைய சீற்றத்தை முடித்தானுமிருக்கும். [புனத்துழாய் முடிமாலை மார்பன்] -

ஆச்ரிதருடைய விரோதிகளைப்போக்கித் திருமஞ்சனமாடியருளி ஒப்பித்த அழகிய திருத்துழாய மாலையைத் திருமுடியிலும் திருமார்பிலும் உடையவன்.

இ.—ஏழாம்பாட்டில், ப்ரதிகூலர் அநுகூலரை நலியுமது பொறுக்கமாட்டாமை அவதரித்து, அவர்களை அழியச்செய்யும் சேஷ்டிதங்களை நினைக்கும் நெஞ்சுடைய எனக்கு பூமியில் எதிர்இல்லை என்கிறார். [மணப்பரிப்போடு] - “நமக்கு அநர்ஹ சேஷமாயிருக்கிற இவ்வஸ்து, தேஹஸம்பந்தத்தாலே பஹுமுகமாக நோவுபடுவதே!” என்னும் மநோதுக்கத்தோடேயாயிற்று திருவவதரித்தது. [அழுக்குமானிடசாதியில்] - ப்ரஹ்மாதிகளுங்கூட அருவருக்கும் மனுஷ்யஜாதியிலே. [தான்பிறந்து] - ஹேயப்ரத்யநீகனான தான் அப்ராக்ருததிவ்யஸம்ஸ்தாநத்தோடே கர்ப்பவாஸம் பண்ணிக்கொண்டு அவதரித்து. “மாநுஷே லோகே ஜஜ்ஞே”. தன்ஜந்மத்தை அநுஸந்திக்க, ஸம்ஸாரிகளுடைய ஜந்மஸம்பந்தம் போம்படிதான தான் பிறந்து. [தனக்கு வேண்டுருக்கொண்டு] - சதுர்ப்புஜனுவது, த்விபுஜனுவது, கோபாலனுவது, ஸ்வச்வரூப்பத்தைக் கொள்வதாகை. இவைதான் ஆச்ரிதார்த்தமாகையாலே தனக்கு அபிமதமாயிருக்கும். [வேண்டுரு] - ஐச்சம் என்றுமாம். [தான் தனசீற்றத்தினை முடிக்கும்] - ஆச்ரிதவத்ஸலனான தான் ஆச்ரித விரோதிகளைப்போக்கி, அத்தாலே தன்சினம் தீர்ந்தானய் இருக்கும். ப்ரஜையை நலிந்தவர்களைத் தாய் ‘தனக்குசத்ரு’ என்று இருக்குமாபோலே. [புனத்துழாய் முடிமாலைமார்பன்] - ஆச்ரிதவிரோதிகள் போகப்பெற்றவத்தாலே ஒப்பித்திருக்கிறபடி. [தன்மாயங்களே] - அவனுடைய ஆச்சர்யசேஷ்டிதங்களையே இடைவிடாமல் அநுஸந்திக்கும் நெஞ்சுடையேன். “காரணம் பந்தமோக்ஷயோ:” என்கிறபொதுமை தவிர்ந்து, அஸாதாரணமான நெஞ்சைப் பெற்றேன். [எனக்கு இனியார் நிகர் நீள்நிலத்தே] - பஞ்சாசத் கோடி விஸ்தீர்ணையான பூமியில் எனக்கு எதிர் ஆர் ?

ஈடு.—ஏழாம்பாட்டு. ப்ரதிகூலர் ஆச்ரிதரை நலியுமது பொறுக்கமாட்டாமை அவதரித்து அவர்களை யழியச்செய்யும் சேஷ்டிதங்களை நினைக்கும் நெஞ்சுடைய எனக்கு பூமியில் நிகரில்லையென்கிறார்.

[மணப்பரிப்போடு அழுக்கு மானிடசாதியில் தான்பிறந்து] - நாட்டாரை அழுக்குடம்பு கழிக்கும் தான்இவர் அழுக்கு மானிடசாதியிலே வந்து பிறந்தான். ப்ரஜை கிணற்றிலே விழுந்தால் எடுக்க வருந்தாய் நெஞ்சுளொக் துவந்து எடுக்குமாபோலே, “இவற்றுக்கு உதவப்பெற்றிலோம்” என்னும் திருவுள்ளத்தில் தளர்த்தியோடே வந்து பிறக்கை. [தான் பிறந்து]- ஹேயப்ரத்யநீகனான தான் அப்ராக்ருத திவ்ய ஸம்ஸ்த்தாநத்தோடே கர்ப்பவாஸம் பண்ணிக்கொண்டு அவதரித்து: பிறக்கைக்குக் கர்மம்பண்ணிவைத்தவருங்கூட அருவருக்கும் ஜந்மத்திலே இவர் அகர்மவச்யனான தான் பிறந்தது; இதுக்கடி காருண்யமிறே. [தனக்குவேண்டுருக்கொண்டு] - அப்ராக்ருத திவ்ய ஸம்ஸ்த்தானத்தை யுடையனாய்க்கொண்டு. அப்படி பிறந்தால் ஒருபடிப்பட்டிருக்கப் பெற்றேமோ! *த்விபுஜோவா சதுர்ப்புஜோவா* என்னும்படியிறே பட்டபடி. ஈச்வரத்வத்தைக் கைகழியவிட்ட பின்பிறே இவனுக்கு இங்கு இடங்கொடுத்தது. இவைதான் ஆச்ரிதார்த்தமாகையாலே தனக்கு அபிமதமாயிருக்கும். ஐச்சமென்றுமாம். [தான் தனசீற்றத்தினை முடிக்கும்] - ஆச்ரிதவிரோதி போக்கினானயிருக்கை யன்றிக்கே தன்சினம் தீர்ந்தானயிருக்கை; மாதாவானவள், ப்ரஜையைநலிந்தவர்களைத் தான் நலிந்து தன்சினந்தீருமாபோலே, *கோபஸ்ய வசமேயிவாந்*. [புனத்துழாய்முடிமாலை மார்பன்] ஆச்ரிதவிரோதிகளைப் போக்கித் திருமஞ்சனம்பண்ணியொப்பித்து, திருமேனியின் ஸ்பர்சத்தாலே தன்நிலத்திலே நின்றாப்போலே செவ்விபெற்றிருக்கிற திருத்துழாய்மாலையைத் திருமுடியிலும் திருமார்பிலுமுடையனாய் அவ்வொப்பனையாலே என்னை யெழுதிக்கொண்டான். [தன்மாயங்களே நினைக்கும் நெஞ்சுடையேன்] - *காரணம் பந்தமோக்ஷயோ:* என்று பொதுவாகையன்றிக்கே, அவனுடைய ஆச்சர்ய சேஷ்டிதங்களையே அநுஸந்திக்கும் நெஞ்சையுடையேன். [எனக்கு இனி யார் நிகர் நீள்நிலத்தே] - பூமி பரப்புடைத்தென்று, எனக்கு ஒப்பாருண்டோ? பரமபதத்தையொன்றாக நினைக்கிறிலர்; தம்மைப்போலே கவிபாடி அடிமைசெய்வாரில்லாமையாலே ஸம்ஸாரத்தேயிருந்து கவிபாடி அடிமை செய்யப்பெற்ற எனக்கு, பூமியில் ஓர் எதிருண்டோ? என்கிறார்.

நீணிலத்தொடுவான்வியப்ப நிறைபெரும்போர்கள்செய்து*
வாணனாயிரந்தோள்துணித்ததும் உட்படமற்றும்பல*
மாணியாய்நிலம்கொண்டமாயன் என்னப்பன்தன்மாயங்களே*
காணும்நெஞ்சுடையேன் எனக்கினியென்னகலக்கமுண்டே. (8)

ஒ.—எட்டாம்பாட்டில், பாணவிஜய ப்ரமுகமான க்ருஷ்ணசேஷ்டிதங்களையே அநுஸந்திக்கும் நெஞ்சையுடைய எனக்கு இனி கலக்கம் உண்டோ? என்கிறார். [காணும் நெஞ்சுடையேன்] - அநுஸந்திக்கும் நெஞ்சுடையேன்.

இ.—எட்டாம்பாட்டில், பாணவிஜய ப்ரமுகமான க்ருஷ்ணசேஷ்டிதங்களை அநுஸந்திக்கும் நெஞ்சுடைய எனக்கு ஒருகலக்கமில்லையென்கிறார். [நீணிலத்தொடு வான்வியப்ப] - பரப்பையுடைத்தான பூமியில் உள்ளாரோடே தேவர்களுங்கூட விஸ்மயப்படும்படி பராபிபவஸாமர்த்யத்தையுடையதேவர்களோடு எளியரான மநுஷ்யர்களோடு வாசியற ஆச்சர்யப்படும்படி இருக்கை. "ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை:" என்று எதிரிகளுங்கூட விஸ்மயப்படும்படி இருப்பது. [நிறைபெரும்போர்கள் செய்து] - வலிதாய்ப் பெரிதான யுத்தத்தைப்பண்ணி. [வாணன் இத்யாதி] - அப்ராப்தவிஷயத்திலே அஞ்ஜலிபண்ணினதுக்கு ப்ராயச்சித்தம் பண்ணுவாரைப்போலே பாணனுடைய பாஹுவநத்தைச் சேதித்ததும். உஷை பித்ருஹீநையாகாமைக்காக இறே கொல்லாதொழிந்தது. [உட்பட மற்றும்பல] - "பாணனை ரக்ஷிக்கிறேன்" என்று ஏறட்டுக்கொண்டு, பசுவும்குட்டியும் தானுமாக முதுகிட்டுப்போனபடியும், "க்ருஷ்ணக்ருஷ்ண மஹாபாஹோ ஜாநே த்வாம் புருஷோத்தமம்" என்று முதுகிலே அம்பு தைத்தபின்பு ஸர்வேச்வரனாக அறிந்தபடியும்; வேறும் அநேகம். [மாணியாய் நிலங்கொண்ட] - ஆச்ரித ரக்ஷணத்திலே, அர்த்தியாய்த்தன்னை அழியமாறி ரக்ஷித்தவன். [மாயன்] - தன்னுடைமையைப் பிறரதாக்கி இரந்து, சிறுகாலைக்காட்டிப் பெரியகாலாலே அளந்துகொண்டும், தன் அழகாலும் சீலத்தாலும் சுக்ராதிகள் வார்த்தை செவிப்படாதபடி மஹாபலியை எழுதிக்கொண்டும், இப்படி ஆச்சர்ய சேஷ்டிதங்களையுடையவன். [என்னப்பன்] - அவர் தலையிலே திருவடிகளைவைத்த இது தம்பேறாக நினைத்திருக்கிறபடி. இப்படி தனித்தனியே அநுபவித்துமுடிக்கவொண்ணாத ஆச்சர்யசேஷ்டிதங்களையே அநுஸந்திக்கும் நெஞ்சையுடையேன். [காணும் நெஞ்சு] அநுஸந்திக்கும் நெஞ்சு. "நெஞ்சென்னும் உட்கண்" என்னக்கடவதிறே. அங்ஙனன்றியே, "முடியானேயிற் கரணங்களையுடையராகையாலே, மநஸ்ஸு சக்ஷுரிந்த்ரியவ்ருத்தியையும் லபிக்கவற்றானபடி சொல்லுகிறது" என்று பிள்ளான் பணிக்கும். [எனக்கினியென்னகலக்கமுண்டே] - இதர தேவதைகளை "ரக்ஷகர்" என்று இருக்கிற கலக்கமும், ஈச்வரனுடைய ரக்ஷணத்தில் அதிசங்கை பண்ணும் கலக்கமும், "தனக்குத்தானே கடவன்" என்கிற கலக்கமும் இல்லை.

ஈடு.—எட்டாம்பாட்டு. பாணவிஜயப்ரமுகமான க்ருஷ்ணசேஷ்டிதங்களையே அநுஸந்திக்கும் நெஞ்சையுடைய எனக்கு ஒரு கலக்கமில்லை என்கிறார்.

[நீள்நிலத்தொடுவான்வியப்ப] - பூமியிலுள்ளாரோடு ஸ்வர்க்கத்திலுள்ளாரோடு வாசியற விஸ்மயப்பட. கண்டதுக்கெல்லாம் ஆச்சர்யப்படும் மநுஷ்யரோடொக்க, ஒன்றுக்கும் விக்ருதராகாதே தந்தாமைப்போரப்பொலிய நினைத்திருக்கும் தேவர்களும் விஸ்மயப் படும்படி. கும்பிடுவாரோடு கும்பீடுகொள்வாரோடு வாசியறும்படியாக. "வியப்ப" என்றுமேலேயிட்டகையாலே, மஞ்சா:க்ரோசந்திபோலே யிருக்கிறது. [நிறைபெரும்போர்கள்செய்து] - குறைவற்ற மஹாயுத்தத்தைப்பண்ணி, அதாவது-ஈச்வராபிமாநிகளான ருத்ராதிகளும் கெட்டோடும்படியான போரைச்செய்து. (பஹுபரிகரபூர்ணமான மஹாயுத்தங்களைப்பண்ணி). [வாணனாயிரந்தோள் துணித்ததும்]-வகாதவிஷயங்களை அநுவர்த்தித்த தோள்களைக்கழித்தபடி. "இவன் கரபத்தை ஆற்றமட்டாமல் கண்டார்காலிலெல்லாம் குனிந்துதிரியாநின்றான்" என்று அக்கரத்தைக் கழித்து விட்டான். [வாணனித்யாதி]-"கைகழியப்போய் ருத்ரனை யாச்ரயித்தான். இவன் கரபாதை

யாற்றுமை'' என்று அத்தைப் படைக்கு அடைத்துவிட்டான். [வாணலித்யாதி] - வாணன் "தேவதாந்தரபஜநம் பண்ணுகையிறே அவனுக்கு இங்ஙன் கைபிழைப்பாடுவந்தது'' என்று நாட்டார்கைவந்தபடிசெய்கைக்காகச் செய்தான். "ஈச்வராய'' என்றிறே தேஹஸம்பத்தியைக் கொடுத்தது. ஈச்வரன் கைவந்தபடி செய்யாதவர்களைக் கைமேலே தண்டிக்கை ப்ராப்தமிறே. ஸர்வேச்வரன் தன்னை ஆச்ரயிக்கைக்காக இவனோடே கைசெய்திறே அடியிலேவிட்டது. "அத்தை மதித்திலன், இவன் அறக்கைவிஞ்சினன்'' என்று தண்டித்துவிட்டான். தேவதாந் தரத்தை ஆச்ரயித்துக் கையிலே பலம்பெற்றுவிட்டான். பகவத்ஸமாச்ரயணம் பண்ணுகைக் குக் கைம்முதலில்லாமைவிட்டானன்றே. (ருத்ரனையாச்ரயித்ததொன்றுமேயிறே அவனைக் கைதப்பிற்று.) [உட்பட மற்றும் பல] அவனுக்குப் பெருநிலைநின்றாரையும் முதுகுகாட்டும் படி பண்ணுவித்தபடி: *க்ருஷ்ண க்ருஷ்ண மஹாபாஹோ* என்று பின்பிறே அவன் இவனை யுள்ளபடியறிந்தது. [மாணியாய்நிலங்கொண்ட மாயன்] - பெறில் ஜீவிப்பானாய் பெறாவிடில் முடிவானும்படியாய், இரப்பிலே தழும்பேறின வடிவைக்கொண்டு. இவர் அவ்வவதாரத்தில் கால்வாங்குகிறாரல்லர்: கண்ணறிவற்ற அழகாலும், வரையாதே யெல்லாரையும் நீண்டுகை யாலும், ஆச்ரிதவிஷயத்தி லோரத்தாலும், செய்யும் ஆனைத்தொழில்களாலும் க்ருஷ்ணாவ தாரத்தோடு ஒத்திருக்கையாலே ஸ்ரீவாமநாவதாரத்தை அநுபவிக்கிறார். [நிலங்கொண்ட மா யனென்னப்பன்] - "திருவுலகளக்க'' என்று ஒருவ்யாஜத்தையிட்டு அளந்துகொண்டது தம் மையென்றிருக்கிறார். [அப்பன் தன் மாயங்களே காணும் நெஞ்சுடையேன்] - "'முடியானே யிற்கரணங்களையுடைய ஆழ்வாராகையாலே நெஞ்சுதானே நினைக்கவும்வற்றாய்க் காணவும் வற்றாயிருக்கும்' என்று பிள்ளான் பணிக்கும்'' என்றருளிச்செய்வர். அதவா, "கட்கண்'' என்றும், "உட்கண்'' என்றும் சொல்லுகிறபடியே நெஞ்சுதன்னையும் கண்ணாகச்சொல்லக் கடவதிறே; அதாகவுமாம். [எனக்கினியென்னகவக்கமுண்டே] - "இவ்விஷயத்தைக் காணப் பெற்றிலோம்'' என்கிற கலக்கம் எனக்குண்டோ? அதவா, தேவதாந்தரங்களை "ரக்ஷகர்'' என்றிருக்கிற கலக்கமும், ஈச்வரனுடைய ரக்ஷணத்திலே அதிசங்கைபண்ணும் கலக்கமும், "தானே தனக்குக்கடவன்'' என்னும் கலக்கமும் இல்லை.

கலக்கவேழ்கடலேழ்மலை உலகேழும்கழியக்கடாய் *
உலக்கத்தேர்கொடுசென்றமாயமும் உட்படமற்றும்பல *
வலக்கையாழிஇடக்கைச்சங்கம் இவையுடைமால்வண்ணனை *
மலக்குநாவுடையேற்கு மாறுளதோ இம்மண்ணின்மிசையே. (9)

ஒ.—ஒன்பதாம்பாட்டில், ஸர்வேச்வரனை மலங்கப்பண்ணும் நாவீறுடைய எனக்கு, பூமியில் எதிர்உண்டோ? என்கிறார். [கலக்க வேழ்கட லேழ்மலை யுலகேழுங்கழியக்கடாய்] - ஏழுகடலையும் ஏழு மலையையும் ஏழுலோகங்களையும் கழியத் தறையிலேநடத்தினாப்போலே ஒக்கநடத்தி. இவையெல்லாம் கலங்கஎன்றுமாம். ஆவது - அதிருகை. உலக்க - முடிய. [மால்வண்ணனை] - கறுத்த திருநிறத்தை உடையவனை.

இ.—ஒன்பதாம்பாட்டில், வைதிகபுத்ராநயநந்தொடக்கமான அபதானங்களையுடைய ஸர்வேச் வரனை மலக்கும் நாவீறுடைய என்னோடு ஒப்பாருண்டோ? என்கிறார். [கலக்க இத்யாதி] - ஏழுகடலையும் ஏழுமலையையும் ஏழுலோகங்களையும் கழியத் தறையிலே நடத்தினாப்போலே நடத்தி. நீருக்கும்மலைக்கும் ஆகாசத்துக்கும் வாசிதெரியாதபடி நடத்தி. கலங்கவென்றாய் - எங்கும்ஒக்க அதிரநடத்தினென்றுமாம். [உலக்க இத்யாதி] - தமஸ்ஸுக்கு அவ்வருகேசெல்ல முடியத் தேரைக்கொண்டு சென்ற ஆச்சர்யமும் உலக்க - முடிய. கார்யரூபமான தேரைக் காரணத்திலே கார்யாகாரம் குலையாமல் நடத்தின ஆச்சர்யம். [உட்பட மற்றும்பல] - வைதிகபுத்ரர்களை இத்தேசத்தில்நின்றும் கொடுபோருகையும், போனசெவ்வியிலே கொடு வந்து 'கொடுக்கையும், ப்ராதஸ்ஸவநத்துக்குப்பின்பு மாத்யந்திநஸவநத்துக்கு முன்னே இது அடங்கச்செய்கையும். [வலக்கையாழி இத்யாதி] - "தமஸ:பரமோ தாதா சங்கசக்ரகதாதர:'' என்று -

ஸர்வாதிகவஸ்துவுக்கு லக்ஷணமாயிற்று திவ்யாயுதங்கள். வலக்கையிலே திருவாழியும் இடக்கையிலே ஸ்ரீபாஞ்சஜந்யமும் இவற்றையுடையவனுமாய், கறுத்தநிறத்தை உடையவனை. ''மால்வண்ணனை'' என்ன அமைந்திருக்க, திவ்யாயுதங்களைச்சொல்லுவானென் ?'' என்று கஞ்சனூர்வண்டுவரைப் பெருமாள் பட்டரைக்கேட்க, ''அவிக்ருதவஸ்துவுக்கு லக்ஷணமிறே திவ்யாயுதங்கள்'' என்றார். [மலக்கு நாவுடையேற்கு] ''அவாக்யநாதர:'' என்கிற ஸர்வாதிகவஸ்துவை விக்ருதமாக்கும்நாவீறுடைய எனக்கு. சோளேந்த்ரஸிம்ஹனையுளுக்காக்கப்பண்ணவல்ல நாவைப் படைத்த எனக்கு. [மாறுளதோ] - பூமியில் எதிர்உண்டோ? ஈச்வரன் உளுக்காக்கும்படி கவிசொல்லவல்லார் தம்மையொழியச் சிலவர் இல்லாமையாலே, வேறு என்னோடு ஒப்பார்இல்லை என்கிறார்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. வைதிகபுத்ராநயநம் முதலான அபதாநங்களையுடைய ஸர்வேச்வரனை மலக்கும் நாவீறுடைய என்னோடு ஒப்பாருண்டோ? என்கிறார்.

[கலக்கவேழ்கடலேழ்மலையுலகேழும்கழியக்கடாய்]-ஏழ்கடலேழ்மலையுலகேழும் கலக்கக் கழியக்கடாய். கலக்க ஒக்க; அதாவது - தேரைநடத்துகிறபோது நீரோடு மலையோடு தரையோடு வாசியற ஒக்கநடத்தினபடி. அன்றிக்கே கலக்க - ஏழ்கடல் என்று கடலுக்கு விசேஷணமானபோது, க்ஷோபத்தை யுடைத்தான கடல் என்றபடி. அங்ஙனுமன்றிக்கே, ஏழ்கடலேழ்மலையுலகேழையும் கழியநடத்துகிறபோது அதிர நடத்தியென்றுமாம் [உலக்கத் தேர்கொடுசென்றமாயமும்] - கார்யமான தேரைக் காரணமான மூலப்ரக்ருதியிலே நடத்துகிற விடத்தில் அழியாதபடி நடத்தின ஆச்சர்யமும். உலக்க - முடிய. [உட்படமற்றும்பல] - வைதிகபுத்ரர்களை இத்தேசத்தினின்றும் கொண்டுபோருகையும், போனசெவ்வியிலே கொடுவந்து கொடுக்கையும், ப்ரளயஸ்லவநத்துக்குப் பின்பு ஸாத்யந்திரஸவநத்துக்கு முன்பே இது அடங்கச்செய்கையும். [வலக்கை யித்யாதி] - இவ்விடத்தை பட்டரருளிச்செய்யாநிற்கச் செய்தே கஞ்சனூரில் வண்டுவரைப்பெருமாளிருந்தவர், '' 'மால்வண்ணனை மலக்கு நாவுடையேன்' என்னவமையாதோ' 'வலக்கையாழியிடக்கைச்சங்கமிவையுடை' என்கிற இதுக்குத் தாத்பர்யமென்?'' என்ன:-''சோளேந்த்ரஸிங்கனை யுளுக்காக்கப்பண்ணுகிறேன் என்கிறார். காண்!'' என்றருளிச்செய்தார். ஸர்வாதிக வஸ்துவுக்கு லக்ஷணமிறே சங்க சக்ரங்கள் *அவாக்யநாதர:* என்கிற ஸர்வாதிகவஸ்துவை விக்ருதமாக்கும் நாவீறுடையேனென்கிறார். [மால்வண்ணனை] - கறுத்த நிறத்தையுடைய ஸர்வேச்வரனை. [மலக்குநாவுடையேற்கு] - இவருக்தியில் கலங்குமாகாதே யவன்தான். இவர் கலங்கிச்சொல்லச் சமைந்தாப்போலே யாகாதே அவனும் கலங்கிக் கேட்கச் சமைந்தபடி. [மாறுளதோ இம்மண்ணின்மிசையே] - பரமபதத்தில் அநுபவம் வாய்ப்புகுநீராகையாலே அத்தை யொன்றாக நினைத்திருக்கிறிலர். (இனியுண்டாகில் பூமியிலே; அதிலுமில்லையென்கிறார்.) [இம்மண்ணின்மிசை - மாறுளதோ] - ''ஒப்புண்டு இல்லை'' என்று அதிசங்கைபண்ணுகைக்குத்தான் விஷயமுள்ளது நித்யவிபூதியிலேயன்றோ ?

மண்மிசைப்பெரும்பாரம்நீங்க ஓர்பாரதமாபெரும்போர்
பண்ணி * மாயங்கள்செய்து சேனையைப்பாழ்படநூற்றிட்டுப்போய் *
விண்மிசைத்ததாமமேபுக மேவியசோதிதன்தாள் *
நண்ணிநான்வணங்கப்பெற்றேன் எனக்கார்பிறர்நாயகரே. (10)

ஒ.—பத்தாம்பாட்டில், ஸம்ஸாரத்திறுள்ளேவந்து திருவவதாரம் பண்ணியருளி, நிரபாயமான திருநாட்டிலே போய்ப்புக்கபடியை அநுபவிக்கப்பெற்ற எனக்கு வேறு சில நிர்வாஹகர் வேண்டும்படி குறையுடையேனல்லேன் என்கிறார். [மாயங்கள் செய்து] - ஐமத்ரதவதத்தினன்று திருவாழியாலே ஆதித்யனை மறைக்கை தொடக்கமான மஹா ஆச்சர்யங்களையுடையவனை. [நூற்றிட்டு] - மந்த்ரித்து.

இ.—பத்தாம்பாட்டில், ஸம்ஸாரத்திலேவந்து அவதரித்து நிரபாயமாகப் பரமபதத்திலே புக்கபடியை அநுஸந்திக்கப்பெற்ற எனக்கு வேறு சிலர் நிர்வாஹகர் வேண்டும்படி குறையுடையவனோ நான்?

என்கிறார். [மண்மிசைப் பெரும்பாரம்நீங்க] த்ரிபாத்விபூதியிலே, "யத்ர பூர்வே ஸாத்யாஸ் ஸந்தி தேவா:"- என்கிறபடியே கனத்தார் உண்டாய் இருக்கச்செய்தேயும் பாரமில்லையிறே, அஹங்காரஸ்பர்சமுடையார் இல்லாமையாலே. ஆகையிறே - மண்மிசைப் பெரும்பாரம் என்று விசேஷிக்கிறது. [பெரும்பாரம்] - விச்வம்பரை பொறுக்கவொண்ணாதிருக்கை. [ஓர் பாரதம்] - மஹாபாரதம்; அதாகிற பெரும்போரை விளைத்து. [மாயங்கள்செய்து] - பகலை இரவாக்கிமும், "ஆயுதம் எடேன்" என்று ஆயுதம் எடுத்தும். [சேனையைப்பாழ்பட] - உபயஸேனையிலும் உள்ள பூபாரம் அடங்க வெறுந்தரையாம்படி. [நூற்றிட்டு] - மந்த்ரித்து. "யஸ்ய மந்த்ரீ ச கோப்தா ச" என்னக்கடவதிறே. "ஆயுதம் எடுக்கவொட்டோம்" என்கையாலே, சூழ்பாலே அழித்தான். [போய் விண்மிசை] - பொய்யாஸனம் இடுவார், பரிபவிப்பாரான தேசத்தை விட்டுப்போய், பரிவரேயான பரமபதத்திலே. [தனதாமமேபுக மேவியசோதி] - "கதஸ் ஸ்வம் ஸ்த்தாநமுத்தமம்" என்கிறபடியே தனக்கு அஸாதாரணமான ஸ்த்தாநத்திலே போய்ப்புக்கான். அவன் திருவடிகளைக்கிட்டி நான் அநுபவிக்கப்பெற்றேன்; எனக்கு வேறு நியந்தாக்கள் உண்டோ? புருஷார்த்த காஷ்ட்டையாக ததீயரை நினைத்திருக்கையாலே, அவர்களைப் பிறர் என்கிறிலர்.

ஈடு.—பத்தாம்பாட்டு. அபாயபஹுளமான ஸம்ஸாரத்திலே வந்தவதரித்து, நிரபாயமாகப் பரமபதத்திலேபோய்ப் புக்கபடியை யநுபவிக்கப்பெற்ற எனக்கு வேறே சிலர் நிர்வாஹகர் வேண்டும்படி குறையுடையவனோ தான் என்கிறார்.

[மண்மிசைப்பெரும்பாரம்நீங்க] - 'விச்வம்பரை' என்றும், 'க்ஷமை, பொறை' என்றும் பேரையுடைத்தாய்ப் பரிக்கக்கடவதான பூமியாலும் பொறுக்கவொண்ணாதபடியிறே துர்வர்க்கம் திரண்டபடி. த்ரிபாத்விபூதியில் *யத்ர பூர்வே ஸாத்யாஸ்ஸந்தி தேவா:* என்கிறபடியே-- கனத்தாருண்டாயிருக்கச்செய்தேயும், பாரமில்லையிறே அஹங்காரஸ்பர்சமுடையாரில்லாமையாலே. தங்கள்பாரத்தை அவன்தலையிலே வைத்திருக்குமவர்களிறே அவர்கள். [ஓர் பாரதமாபெரும் போர்பண்ணி] - அத்விதீயமான மஹாபாரதமாகிற மஹாயுத்தத்தைப்பண்ணி. [மாயங்கள்செய்து] பகலையிரவாக்குவது, "ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுப்பது, எதிரியுடையமர்மத்தைக் காட்டிக்கொடுப்பதானவை தொடக்கமானவற்றைச் செய்து. [சேனையைப் பாழ்பட நூற்றிட்டு] - சேனை வெறுந்தரையாம்படி மந்த்ரித்து. *யஸ்ய மந்த்ரீ ச கோப்தா ச* என்னக்கடவதிறே. "ஆயுதமெடுக்கவொட்டோம்" என்கையாலே, சூழ்ச்சியாலே யழித்தான். [போய்விண்மிசைத்தனதாமமேபுகமேவியசோதிதன்தாள்] - ப்ரதிகூலரை நிரஸித்ததுக்கு மேலேயன்றோ இவர்களிருந்தநிலத்திலிராதே பரமபதத்திலேபோய்ப்புகப்பெற்றபடி! என்றுகைக்கிறார். பொய்யாஸநமிடுவார், பரிபவிப்பாரான இந்நிலத்தைவிட்டுப் பரிவரேயான பரமபதத்தேறப்போகப்பெறுவதே! (வந்தகார்யம் சமைந்தவாறே யெழுந்தருளி, பரமாகாசத்திலே அஸாதாரணமான வாஸஸ்த்தாநத்திலே சென்று ப்ரவேசித்த ஜ்யோதிஸ் ஸ்வரூபனான தனக்கு க்ருஷ்ணனுடைய திருவடிகளை.) *க்ருத்வா பாராவதரணம்* இத்யாதி. ப்ருதிவ்யா:-பாராவதரணம் - க்ருத்வா - ப்ருதுலோசந: - மோஹயித்வா ஜகத்ஸர்வம் - ப்ரதிகூலரை யடங்கலும் முடக்கோலாலேவிழவிட்டு, அநுகூலரையடங்கலும் கண்ணாலேவிழவிட்டுப்போனான். *கதஸ் ஸ்வம் ஸ்த்தாநமுத்தமம்* - விண்மிசைத்தனதாமமேபுக. *உத்தமம்* - கம்ஸாதிகள் துர்யோதநாதிகளால்வரும் அச்சமின்றியே, தனக்குப்பரிவரானவர்களிருக்கிற நிலத்திலேபோய்ப்புகப் பெற்றபடி. ஒருதீர்த்தத்தினன்று காயிறுபோது ஆண்டாளும் எம்பாரும் தங்களிலேசந்தித்து, அஹங்காரமமகாரதூஷிதராயிருப்பார் பத்துக்கோடிபேர்நடுவே, அதிஸூகுமாரமான திருமேனியைக்கொண்டு பத்துநாளெழுந்தருளி, நிரபாயமாகப்புக்கருளப்பெற்றபடி கண்டதே!" என்று ஒருவரையொருவர் கண்டணிட்டுத் தழுவிக்கொள்ளாநிற்க, சீயர் கண்டேன் என்றருளிச்செய்வர். [நண்ணிநான் வணங்கப்பெற்றேன்] - காலயவநன் ஜராஸந்தன் தொடக்கமானாரைப் போலே எதிரிட்டுக்கிட்டுகையன்றிக்கே, முறையாலே கிட்டப்பெற்றேன். [எனக்கார்பிறர் நாயகரே] - அவனுடைய அவதாரந் தொடக்கமாக, நடுவுள்ள அபாயங்களைத்தப்பி ஆச்ரிதரை வாழ்வித்துத் தனக்கேற்ற நிலத்தேபோய்ப் புக்கபடியளவும் அநுபவிக்கப்பெற்ற எனக்கு ஆர்தான் நியாமகர்? என்கிறார். "பயிலுந்திருவுடையார் யவரேலும்" என்கிறத்தை மறந்தார்போலேயிருந்தது; அவர்களைப் பிறராக நினையாரிறே.

நாயகன்முழுவேழுலகுக்குமாய் முழுவேழுலகும் * தன்
வாயகம்புகவைத்துமிழ்ந்தவையாய் அவையல்லனுமாம் *
கேசவனடியிணைமிசைக் குருகூர்ச்சடகோபன்சொன்ன *
தூயவாயிரத்திப்பத்தால் பத்தராவர் துவளின்றியே. (11)

ஒ.—நிகமத்தில், க்ருஷ்ணசேஷ்டிதங்களைப் பேசின இப்பத்தும் கற்றார், ஆழ்வார் தம்மைப் போலே க்ருஷ்ணனுக்கே பக்தராவர் என்கிறார். "நாயகன் முழுவேழுலகுக்குமாய் முழுவேழுலகுந்தன் வாயகம் புகவைத்துமிழ்ந்தவையாய் அவையல்லனுமாய்கேசவனென்றது - கீழில் திருவாய்மொழியையும் இத்திருவாய்மொழியையும் அநுபாஷிக்கிறது" என்றுஞ்சொல்லுவர். [தூயவாயிரத்திப்பத்தால்]- ஆயிரம் திருவாய்மொழியிலும் க்ருஷ்ணசேஷ்டிதங்களைப் பேசின இத்திருவாய்மொழியால். துவள் - குற்றம்.

இ.—நிகமத்தில், க்ருஷ்ணசேஷ்டிதங்களைப் பேசின இப்பத்தைக்கற்றார், தம்மைப்போலே க்ருஷ்ணபக்தராவர் என்கிறார். [நாயகன் இத்யாதி] - ஸகல சேதநா சேதநங்களுக்கும் நியந்தாவாய், ப்ரளயாபத்திலே வயிற்றிலேவைத்து ரக்ஷித்து, உள்ளிருந்து நெருக்குப்படாமே வெளிநாடுகாணப் புறப்பட விட்டு, ஸர்வாவஸ்த்தையிலும் அவற்றை ப்ரகாரமாக உடையனாய், அவற்றின் பக்கலிலே நிற்கச்செய்தேயும் அசித்கதமான பரிணாமமும் சேதநகதமான து:க்கித்வாதிகளும் தன்பக்கல் தட்டாதபடிநிற்கும். இதிறே - கீழில் திருவாய்மொழியில் சொன்னது. அத்தை அநுபாஷிக்கிறது. [கேசவன்] - கேசிஹந்தா என்கையாலே, இத்திருவாய்மொழியில் க்ருஷ்ணவ்ருத்தாந்தத்தையிறே சொல்லிற்று. ஆக, இரண்டு திருவாய்மொழியையும் அநுபாஷிக்கிறது என்னுதல். "க்ருஷ்ணஏவஹி லோகாநாம், உத்பத்தி:" என்கிறபடியே க்ருஷ்ணவிஷயமே சொல்லுகிறது என்னுதல். [குருகூர் இத்யாதி] - ஆப்தரான ஆழ்வார் அருளிச்செய்த ஆயிரத்திலும். [தூயவாயிரத்திப்பத்தால்] - தூய்மையாவது, க்ருஷ்ண வ்ருத்தாந்தத்தில் கலப்பற்றிருக்கை. [துவளின்றியே - பத்தராவர்] - துவள் - குற்றம். அதாவது - பரத்வத்திலே நெஞ்சு செல்லுகை. அத்தைத் தவிர்ந்து, க்ருஷ்ணாவதாரத்திலே ப்ரவணராகப்பெறுவர். திருவடி ராமாவதாரத்திலே ப்ரவணனாய் இருக்குமாபோலே.

ஈடு.—நிகமத்தில் - க்ருஷ்ண சேஷ்டிதங்களைப் பேசின இப்பத்துங் கற்றார், தம்மைப் போலே க்ருஷ்ணபக்தராவரென்கிறார்.

[நாயகனித்யாதி] - ஸகல சேதநாசேதநங்களுக்கும் நியந்தாவாய், ப்ரளயாபத்தில் திருவயிற்றிலேவைத்து ரக்ஷித்து, உள்ளிருந்து நெருக்குப்படாமே வெளிநாடுகாணப் புறப்பட விட்டு, ஸர்வாவஸ்த்தையிலும் ஸகலபதார்த்தங்களும் "தான்" என்கிற சொல்லிலே அடங்கும்படி அவற்றை ப்ரகாரதயா சரீரமாகவுடையனாய், இப்படியிருக்கச்செய்தே தத்கததோஷை ரஸம்ஸ்ப்ருஷ்டனான. [கேசவனடியிணைமிசை] - கேசிஹந்தாவான ஸர்வேச்வரன் திருவடிகளிலே. "கீழிற்றிருவாய்மொழியிற் சொன்ன ஸர்வேச்வரத்வத்தையும், இத்திருவாய்மொழியிலே - கேசிஹந்தாவான க்ருஷ்ணனுடைய அவதாரத்தையும் அநுபாஷித்துத் தலைக்கட்டுகிறது" என்றுசொல்லுவர். "க்ருஷ்ணஏவஹி லோகாநாம்" என்கிறபடியே, க்ருஷ்ண விஷயமே சொல்லுகிறதென்னுதல். [தூயவாயிரத்திப்பத்தால் பத்தராவர் துவளின்றியே] இப்பத்தையும் அப்யஸித்தவர்கள் ஆழ்வாரைப்போலேயாவர். இப்பத்தையுடைத்தாகையாலே தூய்மையுடைத்தான ஆயிரமென்னுதல்; அன்றிக்கே, ஆயிரத்திலும் வைத்துக் கொண்டு, க்ருஷ்ண வ்ருத்தாந்தத்தைச் சொல்லுகையாலே, தூய்மையையுடைத்தான இப்பத்தென்னுதல். [துவளின்றியே-பத்தராவர்] - துவளாவது குற்றம். அதாவது - அவதாராந்தரங்களிற்போகாதே க்ருஷ்ண வ்ருத்தாந்தத்திலே கால்தாழ்வர்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஐந்தாந் திருவாய்மொழி—நுவளில்: ப்ரவேசம்

ஒ.—அஞ்சாந்திருவாய்மொழியில், குரவையாய்ச்சியரில் க்ருஷ்ணகுணசேஷ்டிதங்களை அநுபவித்த ப்ரீதிப்ரகர்ஷத்தாலே பரவசராய், செல்லுகிற ப்ரீத்யநுபவம் கலங்கி நோவுபடுகிற ஆழ்வார் பொய்ந்நின்றஞானந்தொடங்கி இவ்வளவும்வர பகவத்குணசேஷ்டிதாதிகளிலே ஈடுபட்டிருக்கிற தம் முடைய தசையை அநுஸந்தித்து, இத்தை அந்யாபதேசத்தாலே பேசுகிறார். இப்படி குரவையாய்ச் சியரிலே க்ருஷ்ணகுணசேஷ்டிதாதிகளை அநுஸந்தித்து மிகவும் ப்ரீதராய், பாஹ்யஸம்ச்லேஷத்திலே அபேக்ஷைபண்ணி, அதுபெறுமையால் தமக்கு ஓடுகிற தசையை அந்யாபதேசத்தாலே பேசுகிறார் என்று மாம். திருத்தொலைவில்லி மங்கலத்தில் ஸம்பத்திலும், அங்கு நின்று அருளுகிற தேவபிரானுடைய திருவழகிலும் அகப்பட்டு, பண்டுபழகின பழக்கத்தின் மிகுதியாலே மிகவும் ப்ரவணசித்தையாய் இருக்கிற பிராட்டிபடியைக்கண்டு, இவளுக்கு அவன்பக்கல் உண்டான அதிமாத்ரப்ராவண்யத்தைத் தவிர்க்கையிலே உபக்ராந்தைகளான திருத்தாய்மாரைக்குறித்து, இப்பிராட்டியுடைய கருத்தறிவா ளொருதோழி, "இவள் திருத்தொலைவில்லிமங்கலங்கண்ட அன்றுதொடங்கி அரவிந்தலோசனனை ஒழியப் புறம்புள்ள தொற்றெல்லா மற்று, அவனே எல்லாமுமாகக்கொண்டு அவன்பக்கலிலே இவ ளுடைய மநோவாக்காயங்கள் மிகவும் ப்ரவணமாயிற்று; இப்படி விளையும்படியான இவள் ப்ரக்ருதியை அறிந்துவைத்து இவளைத் திருத்தொலைவில்லிமங்கலத்திலே நீங்களேகொண்டுபுக்கு அங்குத்தைப்படி காட்டிக்கொடுத்து, இனி மீட்கநினைத்தால் முடியுமோ? ஆனபின்பு, இவள்பக்கலில் ஆசையறுங்கோள்" என்கிறாள்.

இ.—அஞ்சாந்திருவாய்மொழியில், "கீழே க்ருஷ்ணாநுபவத்தைப் பண்ணினார். அந்தப்ரீதி உள்ளடங்காமையாலே பாஹ்யஸம்ச்லேஷாபேக்ஷைபிறந்து, அது பெறாமையாலே தமக்குப்பிறந்த பாரவச் யத்தை அந்யாபதேசத்தாலே அருளிச்செய்கிறார்" என்று பூர்வர்கள் நிர்வாஹம். பட்டர், கீழ் நிரவதிக ப்ரீதியாய்ச் சென்றது: அதுக்கும் இதுக்கும் சேர்த்தி இங்ஙனே யொண்ணாது: தண்ணீர்குடியாநிற்க விக்கினால் ரஸாநுபவம்கலங்கி நோவுபடுமாபோலே, செல்லுகிற ப்ரீத்யநுபவங்கலங்கிப்பிறந்த பார வச்யாதிசயத்தை அருளிச்செய்கிறார்" என்று அருளிச்செய்வர். அதாவது - பொய்ந்நின்றஞானந் தொடங்கி இவ்வளவும்வர பகவத்விஷயத்தில் பூர்ணாநுபவமின்றிக்கே இருக்கையாலே தமக்குப்பிறந்த ப்ராவண்யாதிசயத்தை அருளிச்செய்கிறார்.

இத்திருவாய்மொழிக்குக் கீழ் எல்லாம் - ஸர்வேச்வரனைப்பேசினார்; இத்திருவாய்மொழியில் - தம்மைப்பேசுகிறார். "யதோ வாசோ நிவர்த்தந்தே" என்கிற விஷயத்தை வினாக்களைகொண்டு பேசுகைக் குத்தாமல்லது இல்லாதாப்போலே, இவ்விஷயத்தில் தம் அபிநிவேசத்தைப் பேசுகைக்கும் தாம்அல்லது இல்லையாயிற்று. தலைமகளாயும் திருத்தாயாராயும் தோழியாயும் பிறந்த அவஸ்தைகள் அடங்க இவர் தமக்கே பிறந்த தசாவிசேஷம் என்னும்படியிறே இவர்ப்ராவண்யாதிசயம். "ப்ராவண்யத்தை விளைக்கிற திருத்தாயாரும் தோழியும் நிஷேதிக்கிறது 'ஸாதகபுத்த்யா' என்றிறே" என்று, இவள்மேல் விழுகிறது ப்ராப்யபுத்தியாலே. இந்த ப்ராவண்யத்தை அந்யாபதேசத்தாலே அருளிச்செய்கிறார். திருத்தொலை வில்லிமங்கலத்திலே நின்றருளின தேவபிரானுடைய அழகிலும் அவ்வூரில் ஸம்பத்திலும் ப்ரவணசித்தை யாய் இருப்பாள் ஒரு பிராட்டியை "அதிப்ராவண்யம் ஆகாது" என்று மீட்கநினைத்த திருத்தாய் மாரை, இவள்கருத்து அறிந்த தோழி, "உங்களுக்கு இவளை மீட்கமுடியாது" என்கிற பாசுரத் தாலே அருளிச்செய்கிறார். ஜநகராஜன் திருமகள் அவதரித்தவளவிலே ஜ்யௌதிஷிகரைக் கேட்க, "ஸார்வபௌமனுக்குப்புகக்கடவள்; கனக்க ஜீவிக்கும்; நடுவே வநவாஸக்லேசமும் அநுபவிக்கக்கடவள்" என்றார்கள்: அதுபோலே "இவளுக்கும் ஓர் அபம்ருத்யு உண்டு: அதாவது:-திருத்தொலைவில்லிமங் கலத்தில் இவளைக் கொண்டுபோகாதொழியில் இவள் ஜீவிக்கும்" என்றார்கள். அவ்வூரில் கொண்டு புகாதபடி அல்லாமையாலே கொண்டுபுக்கார்கள்; அங்கே அவகாஹித்தபடியைக்கண்டு மீட்கப்புக, "இனி இவளை மீட்கமுடியாது; நீங்களும் இவள்வழியே ஒழுகப்பாருங்கோள்" என்று தோழிவார்த்தை யாய்ச் செல்லுகிறது. இத்தால் - சேஷத்வம் ஸத்தாப்ரயுக்தமானவோபாதி, ப்ராவண்யமும் ஸத்தாப்ர யுக்தம் என்னும் இடத்தை நிர்வஹிக்கிறதாயிற்று.

ஈ௫.—இத்திருவாய்மொழிக்குக் கீழும்மேலும் எல்லாம் எம்பெருமானைக் கவிபாடினர்; இத்திருவாய்மொழியில் தம்படி சொல்லுகிறார். ஸிம்ஹாவலோகந ந்யாயத்தாலே பொய்ந்நின்றஞானந்தொடங்கி இவ்வளவும்வரத் தமக்கு பகவத்விஷயத்திலுண்டான ப்ராவண்யாதிசயத்தை அந்யாபதேசத்தாலே பேசுகிறார். "இத்திருவாய்மொழி - ஆழ்வார்ப்ரக்ருதி சொல்லுகிறது" என்று நம்முதலிகளெல்லாரும் போர விரும்பியிருப்பர்கள். பகவத்ப்ரஸாதத்தாலே லப்தஜ்ஞாநராய் *யதோ வாசோ நிவர்த்தந்தே* என்கிற விஷயத்தை மறுபாடுருவப்பேசினதாமே வேணுமாகாதே தம்படி பேசும்போதும்.

ஸ்ரீஜநகராஜன் திருமகள் பிறந்த ஸமயத்திலே ஜ்யோதிர்வித்துக்களையழைத்து, "இவள் ஜீவிக்கும்படிகளென்?" என்று கேட்க: 'இவள் ஜீவிக்கும்படிகளில் ஒருகுறையில்லை: ஸார்வபௌமனாயிருப்பானொருவனைக் கைப்பிடிக்கவுங்கடவள்: இங்ஙனே இருக்கச்செய்தேயும் வநவாஸரஸம் அநுபவிக்கக்கடவள்" என்றார்கள்: அப்படியே இப்பெண்பிள்ளை பிறந்தபோது இவள்திருத்தாயார் உள்ளிட்டார் நிதாநஜ்ஞராயிருப்பாரை அழைத்து "இவள் ஜீவிக்கும்படிகளெங்ஙனே?" என்று கேட்க, "எல்லாம் நன்றாகத் தலைக்கட்டக்கடவது; ஆனாலும் இவளுக்கு ஓர் அபம்ருத்யுவுண்டு; அது தப்பினளாகில் லோகமேஜீவிக்கும். அதாவது திருத்தொலைவில்லிமங்கலத்திற் கொடுபோகாதே ஒழியப்பெறிலிவளைக்கிடைக்கும்" என்றார்கள். இவள் ஜீவியாதொழியிலும் திருத்தொலைவில்லிமங்கலத்தில் கொடுபோகாதொழியவல்ல குடியன்றே! "இவளங்கேபுக்கு முடியவமையும்" என்றிருப்பார் சிலரிறே. பிராட்டி வநவாஸரஸம் அநுபவியாதவன்றிறே இவள் திருத்தொலைவில்லிமங்கலத்தில் புகாதொழியவல்லளாவது? ஸ்ரீநஞ்சீயர் வார்த்தையையினைப்பது. (ஸ்ரீவாநரவீரர்கள், "மலையைக்கொண்டு கடலையணைசெய்கை ஸம்பாவிதமோ" என்ன:—ஸ்ரீநஞ்சீயர், "பெருமாள் காடேற எழுந்தருளுகையும், பிராட்டியை ராக்ஷஸ் அபஹரிக்கையும், பெருமாள் சோகிக்கையும் ஸம்பாவிதமோ? ஏதாகிலும் வருமவை தப்பாதிறே" என்றார். இது ஸ்ரீராமாயணத்திலுண்டானவிடத்தே கண்டுகொள்வது.) தேஹாத்மாபிமாநிகளாயிருப்பார்க்கு எத்தனையேனும் அறிவுபிறந்தாலும் *ஸ்தூலோஹம்க்ருசோஹம்* என்கிற நிலைமாறப்போகாதாப்போலே, இவரையும் ஸர்வப்ரகாரத்தாலும் உகந்தருளின நிலங்களிலேநின்றும் த்ருஷ்டத்தில் குறைசொல்லி மீட்கப்போகாது. க்ஷுத்ரவிஷய ப்ரவணராயிருப்பார் "அதர்மம்" என்றும், "பழி" என்றும், 'மேல்நரகம்" என்றும் சொன்னால் மீளார்களிறே. இங்கு குணாதிகவிஷயமாகையாலே ஒருகுறை சொல்லி மீட்கப்போகாதே. "குறைசொல்லுவோம் என்று நினைக்கிலும் குணாதிக்யத்தைச்சொல்லுமத்தனையிறே. அதுபின்னை ப்ராவண்யத்துக்கு உடலாமத்தனையிறே. பழியுமுண்டாயிடுக, மதிப்புக்கேடும் வருக; ஆனாலும் அதுகண்டு மீளமாட்டாத அத்யவஸாயமிறே இவளது. அங்ஙனேயாகிலும், இவர்கள் இவ்விஷயத்திலின்றும் இவளை மீட்கப் பார்க்கிறது என்? என்னில்,—"பருவம் நிரம்பாதிருக்கச்செய்தேயும் நம்மளவல்லாத அதிமாத்ரப்ராவண்யம் இவளுக்கு விளையாநின்றது; அது இவளை யிழக்கவரிற்செய்வதென்?" என்னும் அச்சமாயிற்று இவர்களுக்கு ஓடுகிறது. இனித்தான் அதிமாத்ரப்ராவண்யம் ஸாதகர்களையிலே கிடக்கக்காண்கையாலே "இவள்ஸாதநபுத்த்யா ப்ரவர்த்திக்கிற்செய்வதென்? என்னும்பயத்தாலே மீட்கவும்பார்ப்பரே: "இப்ப்ராவண்யம் ஸ்வரூபாதிரேகியாகிலிறே ஸாதநத்தில் அந்வயிப்பது" என்றிறேயிருப்பது இவள். "ஸ்வரூபபேதத்துக்கு இசைந்தால் ஸ்வரூபாநுரூபமான கார்யங்களுக்கு இசையவேண்டாவோ?" என்றுகாணும் இவள்கருத்து. சேஷிக்கு உபாயபாவம் ஸ்வரூபாநுபந்தியானபின்பு, சேஷபூதனுக்கும் ப்ராவண்யம் ஸ்வரூபாநுபந்தியாகக்கடவதிறே. இனித்தான் கீழில் திருவாய்மொழியோடு திருவாய்மொழி ஸங்கதமானபடியென்? என்னில்:—க்ருஷ்ண குணாநுபவத்தைப் பண்ணாநிற்கச்செய்தே, குடிக்கிற தண்ணீர் விக்கி அநுதானே பாரவச்யத்தை விளைப்பிக்குமாபோலே, அவ்வநுபவந்தானே ரஸாந்தரந்தேறுமட்டத் தமக்குப்பிறந்த அவஸாதத்தை யந்யாபதேசத்தாலே பேசுகிறார். அதாவது - பொய்ந்நின்றஞானந்தொடங்கி இவ்வளவும்வர, பகவத்விஷயத்தில் பூர்ணாநுபவமின்றிக்கே யிருக்கையாலே, தமக்குப்பிறந்த ப்ராவண்யாதிசயத்தை அருளிச்செய்கிறார் அன்றிக்கே, கீழநுபவித்த அநுபவந்தான் மாநஸாநுபவமாத்ரமாய், பாஹ்யஸம்ச்லேஷாபேக்ஷைபிறந்து, அது பெறாமையால்

வந்த கலக்கத்தை அந்யாபதேசத்தாலே பேசுகிறார் என்றுமாம். இப்பெண்பிள்ளைப்ரக்ருதி யறியச்செய்தேயும் தாய்மார் விழுக்காடறியாமையாலே,திருத்தொலை வில்லிமங்கலத்திலே கொடுபுக, அவள் "அரவிந்தலோசந" என்பது, "தேவபிரான்" என்பது, நீர்மையைச் சொல்லுவது, மேன்மையைச்சொல்லுவது, ஒப்பிலையாகியபின்தமை தோற்றச்சொல்லுவதாய் வாய்வெருவ, இவள்நிலை இருந்தபடியால் "இவளைக்கிடைக்கமாட்டாதாகாதே" என்று தாய்மார் வெறுத்துத்தோழிபாடேவந்து "இவள்படி யுனக்குத்தெரியாமையில்லை; இவளை மீட்கலாம் விரகு சொல்லவேணும்" என்ன; தோழி, "நீங்களே இவளுக்கு ப்ராவண்யத்தை யுண்டாக்கி இப்போதாக இவளைமீட்க ஆசைப்படுகிற இத்தால் ப்ரயோஜநமென்? ஏற்கவே பரிஹரிக்கப்பெற்றதில்லை; இனி இவள்பக்கல் நசையறுங்கோள்; இவளை நிஷேதிக்கப் பாராதே நீங்களும் ஸஹகரித்து இவள் உஜ்ஜீவிக்கும்படி பண்ணப்பாருங்கோள்!" என்கிறாள். தாய்மார்கேட்கத் தோழியிறேசொல்லுகிறாள்; பகவத்விஷயத்துக்கு "பழையார், புதியார்" என்றில்லை; தேசிகர்சொல்ல ஆதரமுடையார் கேட்குமித்தனை. *ஆசசக்ஷே஽த ஸத்பாவம் லக்ஷ்மணஸ்ய மஹாத்மந:* என்று இளையபெருமாள்படியை ஸ்ரீபரதாழ்வானுக்கு ஸ்ரீகுஹப்பெருமாளிறேசொல்லுகிறார். *ஆசசக்ஷே* - வாகிந்த்ரியத்துக்கு நிலமல்லாததும் சொல்லலாமாகாதே. *அத* - ஸ்ரீபரதாழ்வான்ஸ்பாவம் அறிந்தபின்பு. *ஸத்பாவம்* - *பால்யாத்ப்ரப்ருதி ஸுஸ்நிக்த:* என்றும் *பரவாநஸ்மி* என்றும் ஸத்தையோடு வ்யாப்தமான ஸ்பாவத்தைச் சொன்னான். *லக்ஷ்மணஸ்ய மஹாத்மந:* - கடலைக் கையாலேயிறைக்கத்தொடங்கினான். *பரதாயாப்ரமேயாய* "இன்னாரின்னார்க்கு உபதேசிக்க" என்றில்லையாகாதே. *குஹோ கஹநகோசர:* காட்டில் மரங்களில் வாசியறியுமவர் இவர்கள்நிலையறியும்படி நிலவரானார். அன்றிக்கே, ராம விரஹத்தாலே ஒருதூற்றடியிலே கிடந்தவன், தேசிகரைப்பெற்ற வாறே தலையெடுத்துப்புறப்பட்டானென்றுமாம். ("ப்ராப்யத்வரையினுடைய முறுகுதலுக் கடியான அதிமாத்ரப்ராவண்யம், ஆச்ரயமழியும்படிவருதல் உபாயத்திலே முதலிடுதல் செய்யுமாகில் அவத்யகரமாய்முடியும்] என்று பார்த்து, "இத்தை உபாயாத்யவஸாயாநுகுணமாக அமைத்து நடத்தவேணும்" என்று கருதி ஸம்பந்தஜ்ஞானத்தோடேசேர்ந்த உபாயாத்யவஸாயம் பார்த்தவிடத்து முதலிலே ப்ராப்யத்வராஸஹிதமாக குணுதிகவிஷயத்திலே யவகாஹித்து அத்வரைதன்னை இவ்வவஸ்த்தாபந்நையாக்கினபின்பு, உபாயாத்யவஸாயத்தின் கீழ் இத்தை யமைக்கப்போகாது; இனித்தான்ப்ராப்தவிஷய ப்ராவண்யம் ஸ்வரூபமாகையாலே அவத்யகரமன்று; ச்லாக்யமாமித்தனை" என்று தாம் அநுஸந்தித்தருளினார்.)

துவளில்மாமணிமாடமோங்கு தொலைவில்லிமங்கலம்தொழு
மிவளை *நீரினியன்னைமீர்!உமக்காசையில்லைவிடுமினோ*
தவளவொண்சங்குசக்கரமென்றும் தாமரைத்தடங்கணென்றும்*
குவளையொண்மலர்க்கண்கள் நீர்மல்க நின்றுநின்றுகு (மி)முறுமே. (1)

ஒ.—முதற்பாட்டில், திருத்தாய்மாரைக்குறித்து இவளுடைய தோழியானவள், இவள் ப்ரக்ருதி அறிந்துவைத்து இவளுக்குத் திருத்தொலைவில்லிமங்கலத்தைக் காட்டின நீங்கள் ஹிதோபதேசம் பண்ணினால் உங்களுக்கு ஒரு ப்ரயோஜநம் இல்லை என்கிறாள். [துவளில்மாமணி] - பழிப்பற்று ச்லாக்யமான மணி. [தொழுமிவளை] – தொழுகையே ஸ்வபாவமான இவள். [தவளவொண்சங்கென்று மேலுக்கு] - அதிதவளமாய் அழகிதாயிருக்கிற ஸ்ரீபாஞ்சஜந்யம் என்றும் திருவாழிஎன்றும் தாமரைத் தடாகம்போலே; இருக்கிற திருக்கண்கள் என்றும்சொல்லிப் பின்னையும் இவற்றை "காணவேணும்" என்றுசொல்ல உபக்ரமித்து, மாட்டாதே குவளைபோலே இருக்கிற அழகிய கண்கள் நீர்மல்கும்படியாக தன்னுடைய து:க்கத்தை வாய்விட்டுச் சொல்லமாட்டாதே நிரந்தரமாகக் குமுறுநின்றாள்.

இ.—முதற்பாட்டில், இவள்ப்ரக்ருதி அறியாதே திருத்தொலைவில்லிமங்கலத்தைக் காட்டினபின், உங்கள் ஹிதவசநத்துக்கு இவள் மீளுமோ? என்கிறாள். [துவளில் மாமணிமாடம்] - குற்றமற்று இருக்கையாலே பெருவிலையனான மணியாலேசெய்த மாடம். மணிக்குதோஷாபாவம் - வந்து கழிந்த தன்றிக்கே ப்ராகபாவமும் அன்றிக்கே, அத்யந்தாபாவமாயிருக்கை. முக்தனுடைய அபஹதபாப்மத்வாதி

கள்போலன்றிக்கே, ஈச்வரனுடைய அபஹதபாப்மத்வாதிகள்போலே யிருக்கை. திவாராத்ரவிபாகம் பண்ணவொண்ணாதபடி ப்ரகாசமான மாடம். [ஓங்கு] - ஆகாசாவகாசம் அடையும்படியான மாடம்- கலந்து பிரிகிறபோது, 'ஊர் ஏது?' என்ன; - அணிமை சொல்லுகைக்காக, "அவ்வூரில் மாடங்களின் நிழலன்றோ இது?" என்றானுமிற்று. [தொலைவில்லிமங்கலந் தொழுமிவளை] - பரவ்யூஹவிபவங்களிலே தொழுதவள் அல்லள்; அதுதன்னிலும், உள்ளுநிற்கிற அரவிந்தலோசநன் அளவாகிலன்றோ மீட்கலாவது: அவனோடு ஸம்பந்தமுள்ளவிடம் எங்கும்புக்கு அவகாஹித்தவளை மீட்கப்போமோ? விஷயம் பரோக்ஷமாய் "எட்டாதுகாண்" என்று மீட்கவோ? "ப்ரத்யக்ஷ விஷயம் பரிச்சின்னம்" என்று மீட்கவோ?[தொழுமிவளை]- ஜ்ஞாநாநந்தங்களுக்கு முன்னே நிரூபகமிறே பாரதந்த்ர்யம்: தொழுகையே நிரூபகமாயிருக்கிறவள். "தாஸோऽஹம்வாஸுதேவஸ்ய" "ப்ராஞ்ஜலிம் ப்ரஹ்வமாஸீநம்". ஒன்றை உருகுபதத்திலே பிடித்தால், வலித்தாலும் அப்படியே உருவகிற்குமாயிற்று. [நீர்] - இவளுடைய ப்ராவண்யத்திலே ஸாதநபுத்திபண்ணுகிற நீங்கள். [இனி] - இவளுக்கு இவ்வூரைக்காட்டினபின்பு. [அன்னைமீர்] - ப்ராப்தியைளவளையாளுலும், "பெற்றோம்" என்கிற ப்ராப்தியைக்கொண்டு மீட்கப்போமோ? அவ்வருகுபட்டாலும் நியந்த்ருதையைக் கொண்டு மீட்கவோ? [உமக்காசையில்லை] - வகுத்தவன் கைக்கொண்டால் உமக்கு ஆசையில்லை. [விடுமினோ] - ஹிதம் சொல்லுகிறத்தை விடுங்கோள். அநுகூலிக்கப்பாருங்கோள். பெற்ற எங்களை "விடுங்கோள்" என்கிறது ஏத்தைக்கொண்டு? என்ன, [தவளவொண்சங்கு இத்யாதி] - ச்யாமமான திருநிறத்துக்குப் பரபாகமான திருநிறத்தையுடைய ஸ்ரீபாஞ்சஜந்யம், [ஒண்சங்கு] - "உண்பது சொல்லிலுலகளந்தான் வாயமுதம்" என்று-பிராட்டிமாரும் ஆசைப்பட்டுச் சீறுபாறென்னும் செல்வைஉடையவன். [சக்கரம்] - அங்ஙன் ஒருவிசேஷணமிட்டுச் சொல்ல வொண்ணாத திருவாழி. [என்றும்] - "இவற்றைக் காணவேணும்" என்னுதல், "இவற்றோடே வரவேணும்" என்னுதல் சொல்லமாட்டுகிறிலள், பலஹாநியாலே. [தாமரைத் தடங்கணென்றும்] - தாமரையை ஒருவகைக்கு ஒப்பாகச் சொல்லலாய், போக்தாக்கள் அளவன்றிக்கே இரண்டாழ்வார்கள் அளவும் அலைவெறிகிற திருக்கண்கள். 'என்றும் என்றும்' என்கையாலே - துர்பலன் மலையை எடுத்தாற்போலே இருக்கிறபடி. [குவளை இத்யாதி] - குவளையும் ஒப்பாகமாட்டாத அழகிய கண்கள் நீர்மல்கும்படியாக; தாமரைத்தடங்கண் நீர்மல்க ப்ராப்தமாயிருக்க, இவள்கண் நீர்பாய்வதே! இவள் "ஜிதந்தே" என்பது கண்ணநீராலே ஆயிற்று. "கிமர்த்தம் தவகேத் ராப்யாம்" இவளை மீட்கப் போமோ? [நின்றுநின்று குமிறுமே] - கன்றைக் கிட்டக்கட்டிவைத்தால் ஸுரபிபடுமாபோலே படாநின்றாள். பெருவெள்ளத்தில் சுழிக்குமாபோலே அகவாயில் உள்ளது வெளியிடமாட்டாதே நின்று சுழிக்கிறபடி. "உகும், இறும்" என்றாப்போலே சிலர் சொன்னார்கள்; அவர்கள் இவளுக்கு ஓடுகிற பாவவ்ருத்தி அறியாமையாலே சொல்லுகிறார்கள். இவள் இப்படி அவகாஹித்த பின்பு, மீட்கப்பாராதே பின்செல்லப் பாருங்கோள் என்கிறாள்.

ஈடு.—முதற்பாட்டு. இவள்ப்ரக்ருதி யறியாதே திருத்தொலைவில்லிமங்கலத்தைக் காட்டின பின்பு உங்கள்ஹிதவசநத்துக்கு இவள் மீளுமோ? என்கிறாள்.

[துவள் இத்யாதி] - "உனக்குஇப்போது உதவாதபடி தூரஸ்த்தம்!" என்னுதல், "பூத காலத்தில் அவதாரங்கள்" என்னுதல், உகந்தருளின நிலங்களிலே உள்ளுநிற்கிறவனளவிலே ப்ரவணையாதல் செய்தாளாய் மீட்க நினைக்கிறீகோளோ? அசலிட்டுத் திருத்தொலைவில்லிமங்கலத்தை விரும்புகிற இவளை யெங்ஙனே மீட்கும்படி? சரமாவதியிலே நிற்கிற இவளை ப்ரதமாவதியிலேநிற்பார் மீட்கவோ? துவளென்பது - குற்றம்: அதின்றிக்கே யிருக்கை. அவ்வூர்ச்சரக்கிலே குற்றமுண்டாகிலன்றோ இவளைமீட்கலாவது? குற்றமுண்டாய்க் கழிந்ததல்ல. ஜீவபரர்களிருவர்க்கும் அபஹதபாப்மத்வாதிகளுண்டாயிருக்கச்செய்தே ஜீவாத்மாவுக்கு ஹேயமுண்டாய் பகவதநுக்ரஹத்தாலே கழியும்: பரமாத்மா ஹேயஸம்ஸர்க்காநர்ஹனுமேயிருக்கும்; அப்படியேயாயிற்று, அவ்வூரில் மாடங்களில் ரத்நங்களும். [மாமணி] - ஒளியேயல்ல, பெருவிலையனுமாயிருக்கும். [ஓங்கு] - அவ்வூரில் மாடங்களின் நிழலிடு இருகரியனவும் வந்துகாணுமிருப்பது. "இடமணித்து" என்றுபோலேகாணும் நாயகன் பிரிந்தது. மாளிகையின் நிழற்கீழே யிட்டு வைத்துக்காணும் பிரிந்தது. அவன் பிரிந்தபோது தொடங்கி அவ்வூரையும் அவ்வூரில் மாடங்களையும் அவற்றில் மாணிக்கங்களையும் பார்த்து, வைத்தகண் வாங்கமாட்டாதே யிருந்

தாளபோலே காணும். [தொலைவில்லிமங்கலம்] - அருப்புக்கூடாக அவ்வூரையன்றோ இவள் உகந்தது. [தொழுமிவளை] ''கறுத்திருக்கும்'' ''வெளுத்திருக்கும்'' என்னுமாபோலே, தொழுகை நிரூபகமாயிருக்கை. *ப்ராஞ்ஜலிம்ப்ரஹ்வமாஸீநம்* என்னுமாபோலே; ''கணபுரங்கைதொழும் பிள்ளை'' என்னுமாபோலே. [இவளை]-இவளை மீட்கப்பார்ப்பதே. இவள் படியை புத்தி பண்ணியன்றோ மீட்பது! [தொழுமிவளை] - இவள்படி கைமேலே காணநிற்கச்செய்தே நீங்கள் மீட்கத் தேடுகிறபடி யெங்ஙனே? [இவளை நீர்] - பழிசொல்லப் பணைக்கிறவள் இவள், பழி பரிஹரிக்கப் பார்க்கிறீர்கோள் நீங்கள். [இனி] - தொழுகை தேஹயாத்ரையானதற்கு முன்னேயன்றோ மீட்கப் பார்ப்பது. [அன்னைமீர்] - பகவத்விஷயத்திலே வ்யவஹரிக்க என்றொன்றில்லையோ? நியந்த்ருநியாம்யபாவமேயோ வேண்டுவது; பெற்றவர்களென்று, அசக்யங்களிலே மீறியக்கடவதோ? [உமக்காசையில்லை] - ப்ராப்தயௌவனைகளானார்பக்கல் பெற்றவர்களுக்கு ப்ராப்தியுண்டோ? புக்கவிடத்தே ப்ரவணையாகாநிற்க, பெற்ற ப்ராப்திகொண்டு மீட்கவோ? [விடுமினோ] - இவ்வளவில்நீங்கள் கைவாங்கவமையும். பெற்றதாய்மார் ''விடுமின்'' என்னுங்காட்டில் விடார்களிறே; பின்னையும் நிர்ப்பந்திக்க, வேண்டா, இவளுக்கு ஓடுகிற ரஸத்தைக்கண்டுகொடுநிற்கப் பாருங்கோள். இவளுடைய அநுபவத்துக்குத் தண்ணீர்த்துரும்பாகாதே இத்தைக் கண்டுகொடுநிற்கவமையுமென்கிறாள். எங்களை ''ஆசைப்படவேண்டா, விடுங்கோள்'' என்றதென்? என்னில்:— இவள்பேச்சிலும் நினைவிலும் நீங்களாதல் நாளுகலுண்டோ? (உங்களையாதல் என்னையாதல், சொல்லுதல் நினைத்தல் செய்கிறளோ;) த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச* என்னும் நிலையன்றோ இவளது! [தவளவொண்சங்கு] - ச்யாமமான திருமேனிக்குப் பரபாகமான வெண்மையையுடைத்தாய், ''உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம்'' என்கிற அழகையுடைத்தான சங்கு. [சக்கரம்] - அங்ஙனம் ஒரு விசேஷணமிட்டுச் சொல்லவொண்ணாத அழகையுடைய சக்கரம். [என்றும்] - ''இவற்றைக்காணவேணும்'' என்னுதல் ''இவற்றோடேவரவேணும்'' என்னுதல் சொல்லமாட்டுகிறிலள், பலஹாநியாலே. [தாமரைத்தடங்கணென்றும்] - அந்த ஆழ்வார்களன்வும் வந்து அலையெறிகிற திருக்கண்கள். தாமரையை யொருவகைக்கு ஒப்பாகச் சொல்லலாய், போக்தாக்களளவன்றிக்கே யிருக்கிற திருக்கண்கள் [என்றும் என்றும்] - ஒரு மலையெடுத்தாற்போலே, சொல்லுக்குச்சொல்லு தளர்ந்து நடுநடுவே விச்சேதித்தாயிற்றுச் சொல்லுவது. இவ்வாயுதங்களையும் கண்ணழகையுங் காட்டியாகாதே இவளைத்தோற்பித்தது. [குவளையித்யாதி] - இக்கண்களைக்கண்டால் தாமரைத்தடங்கணன்றோ நீர்மல்கவடுப்பது? கண்ணும்கண்ணநீருமாய் இவளிருக்கிற இருக்கை கண்டுகொண்டிருக்கவன்றோ உங்களுக்கு அடுப்பது? *ஆஹ்லாதசீதநேத்ராம்பு:* இத்யாதி. ஸதாதர்சநத்துக்கு ஒருதேசந்தேடிப்போக வேண்டாகாணும். குவளைப்பூப்போலே அழகியகண்கள் நீர்மல்க. அவள் தன்னுடைய ஸ்த்ரீத்வத்தைக் காற்கடைக்கொள்ள, நீங்கள் எங்ஙனே மீட்கப்பார்க்கும்படி? கண்ணநீர்பாய்கையாவது-ஸ்திரீத்வமழிகையிறே. [நின்றுநின்றுகுமிறுமே] - பேச்சுப்போய்க் கண்ணநீராய், கண்ணநீர்போய்த் தடுமாறுகிற அவஸ்த்தையிலே மீட்கப்போமோ? ராஜகோஷ்டியிலே ''உகும் இறும்'' என்று சிலர் பொருள் சொல்ல, விக்ரமசிங்கனென்பானொருவன், ''ஆங்ஙனல்ல கன்றைக் கடக்கக் கட்டிவைத்தால் மூலைக்கண் கடுத்துப் பசு அலமந்து படுமாபோலே, உள்ளோடுகிற க்லேசம் வாய்விடமாட்டாதே நோவுபடுகிற இவளுக்கு இதுவார்த்தையோ?'' என்றான். பெருவெள்ளத்தில் சுழிக்குமாபோலே, அகவாயிலுள்ளது வெளியிடமாட்டாள், உள்ளேநின்று சுழிக்கிறபடி. தொலைவில்லிமங்கலந் தொழுமென்கையாலே - காயிகவ்யாபாரம் சொல்லிற்று: தவளவொண்சங்குச்சக்கரமென்றும் தாமரைத்தடங்கணென்றும் என்று சொல்லுகையாலே - வாசிகவ்யாபாரம் சொல்லிற்று: குமிறுமென்கையாலே - மாநஸவ்யாபாரம் சொல்லிற்று.

குமிறுமோசைவிழவொலித் தொலைவில்லிமங்கலம்கொண்டுபுக்கு*
அமுதமென்மொழியாளை நீருமக்காசையின்றியகற்றினீர்*
திமிர்கொண்டாலொத்துநிற்கும் மற்றிவள்தேவதேவபிரானென்றே*
நிமியும்வாயொடுகண்கள்நீர்மல்க நெக்கொசிந்துகரையுமே. (2)

ஒ.—இரண்டாம்பாட்டில், இவளைத் திருத்தொலைவில்லி மங்கலத்திலே திருநாளிலே கொடு புகுவார் உண்டோ? என்கிறாள். [குமிறுமென்று தொடங்கி] - எழுத்தும் சொல்லும் பொருளும் தெரியாதே ஒன்றாய்எழுகிற த்வநியை உடைத்தான திருநாளில் ஆரவாரத்தை உடைத்தான திருத் தொலைவில்லிமங்கலத்திலே நான் அறியாதிருக்கிற இவளை, நீங்களே கொடுபுக்கு. [அமுதமென்று தொடங்கி] - இவளுடைய இனியபேச்சுக்கள் கேட்க ஆசையில்லாமையாலே நீங்கள் இவள் அகலும்படி பண்ணினீர்கோள். [திமிர்கொண்டாலொத்துநிற்கும்] - ஸ்தப்தையானுப்போலே இருக்கும். [மற்றென்று தொடங்கி] - பின்னையும் இவள் திருத்தொலைவில்லிமங்கலத்தில் எம்பெருமானுடைய திருநாமத்தைச் சொல்லவென்று உபக்ரமித்து முடியச்சொல்லமாட்டாதே கண்கள் நீர்மல்கி உள்ளோடுகிற அவஸாதத்தின் மிகுதியாலே சிதிலையுமாய் நீராகாநின்றாள். நிமிகை - உதடுநெளிக்கை.

இ.—இரண்டாம் பாட்டில், அவ்வூரில் கொண்டுபுக்கதுக்குமேலே, திருநாளிலேகொண்டு புகுவார் உண்டோ? என்கிறாள். [குமிறுமோசை விழவொலி] - ஒத்துச்சொல்லுவார், ஸங்கீர்த்தனம் பண்ணுவார், பாடுவாராய், எழுத்தும் சொல்லும் பொருளும் தெரியாதபடி விரவிக்கொண்டு எழுகிற த்வநியையுடைய திருநாளில் ஆரவாரம். [தொலைவில்லிமங்கலங் கொண்டுபுக்கு] - பரமபதத்திலே கொண்டுபுக்கிகோளாகிலும் மீட்கலாயிற்று. [கொண்டுபுக்கு] - இவள் அறியாதிருக்க, நீங்களே கொண்டு புக்கு. [அமுதமென்மொழியாளை] - இவள் பேச்சைக்கேட்டால் போன உயிரும் மீளுமாயிற்று. [மென்மொழி] - அம்ருதத்தில் வ்யாவ்ருத்தி, ச்ரவணயோக்யமாயிராதே அம்ருதம். [நீருமக்காசையின்றி யகற்றினீர்] "மதுரா மதுராலாபா" என்று இவள்பேச்சைக் கேட்க ஆசைப்பட்டிருக்குமவன் பெற்றுப் போனான்; நீங்கள் ஆசை இல்லாமையாலே அகற்றினீர்கோள். தந்தாமுக்கு அனர்த்தத்தைத் தாம்தாமே விளைத்துக் கொள்ளுவார் உண்டோ? அகற்றுகையாவது - அகலும்படி பண்ணினீர்கோள் என்கை. அதாவது - இவ்வூரிலே புக்கபின்பு இவர்களோடே வார்த்தைசொல்லத் தவிர்ந்தாளாயிற்று. [திமிர் கொண்டா லொத்து நிற்கும்] - ஸ்தப்தையானுப்போலே நிற்கும். வ்யாபாரக்ஷமையன்றியே இரா நின்றாள். "ஸ்தப்தோஸ்ய யுத தமாதேச மப்ராக்ஷ்ய:" என்கிறபடியே பரிபூர்ண ஜ்ஞாநரைப்போலே இரா நின்றாள். [மற்றிவள்] - வேறு இவள் வார்த்தைசொல்லப் புக்காளாகில். [தேவதேவபிரானென்றே] - இங்கே கண்டாலும், "அயர்வறுமமரர்களதிபதி இங்கேவந்து ஸுலபனானான்" என்றாயிற்று இவள் புத்திபண்ணுவது. [என்றே நிமியும்] - அந்த சீலவத்தையைச் சொல்லப்புக்குத் தலைக்கட்டமாட்டாதே உதடு நெளிக்கும். உதடுநெளிக்கிற வாயோடே கண்ணநீர்மல்க. [நெக்கு] சிதிலையுமாய். [ஒசிந்து] - பரவசையுமாய். [கரையும்] - நீராகாநின்றாள். [நெக்கொசிந்து கரையுமே] பெருவெள்ளத்தில் கரை யானது நெகிழ்ந்து ஓட்டுவிட்டு ஒசிந்து பொசிந்து அவயவியாகாதபடி கரைந்து 'போமா போலே யழிந்து போகாநின்றாள். இப்படி இவள் கரையாநிற்க, வன்னெஞ்சரான நாம் இதுக்குப்பாசுர மிடுவது, மீட்கத் தேடுவது ஆகாநின்றோமிறே!

ஈடு.—இரண்டாம்பாட்டு. அவ்வூரில் கொடுபுகவேண்டினால், திருநாளிலே கொடுபுகுவா ருண்டோ? என்கிறாள்.

[குமிறுமோசைவிழவொலி] - *தேஷாம் புண்யாஹகோஷோ3த கம்பீரமதுரஸ்வந:, அயோத்யாம் பூரயாமாஸ தூர்யகோஷாநுநாதித:* என்று, ஒத்துச்சொல்லுவார், ஸங்கீர்த்தநம்பண்ணுவார், பாடுவார், இயல்விண்ணப்பஞ்செய்வாராய், எழுத்தும் சொல்லும் பொருளும் தெரியாதபடி விரவிக்கொண்டெழுகிற த்வநியையுடைய திருநாளில்ஆரவாரம். பாவியேன்! இத்த்வநிசெவிப் பட்டால் கொண்டுமீளவன்றோ அடுப்பது! "இவ்விடம் பிள்ளைகொல்லி" என்று கூப்பிடுமா போலேகாணும் த்வநியிருக்கிறது. அவ்வூரும் திருநாளும் அங்குள்ளார்படுகிறதுங் கண்டு வைத்து இவளைக்கொண்டு புகுவாருண்டோ? [கொண்டுபுக்கு] - இவளை யறியாதிருக்க நீங்களே கொண்டுபுக்கு. [அமுதமென்மொழியாளை] - இவள்மொழி, கேட்டார்க்கு நித்யத்வத்தைக் கொடுக்குமே. இவ்வினிய பேச்சைக் கேளாதபடி பாக்யஹீனைகளாவதே நீங்கள். அதாவது - அவ்வூரிலே புக்கபின்பு இவர்களுடன் வார்த்தைசொல்லத்தவிர்ந்தாளாயிற்று. *மதுரா மதுரா லாபா* என்னும்படிகாணுமிருப்பது இதுகேட்க ஆசைப்பட்டிருக்குமவன் பெற்றுப்போனான். [மென்மொழி] - அம்ருதத்தில் வ்யாவ்ருத்தி. ச்ரவணயோக்யமாயிராதே அம்ருதம்; வேணு மாகில் ரஸ்யதைக்கு ஒருசொல்லுக்கு நிற்கிறது, மார்த்தவம் இதுக்கேயுண்டு இத்தனை. [நீருமக்

காசையின்றி யகற்றினீர்] - இவள்பேச்சுக் கேட்டுப்போருகிற நீங்களே உங்களுக்குஇவள் வழிபடாதபடி பண்ணினீர்கோள். [திமிர்கொண்டா லொத்துநிற்கும்] - *ஸ்தப்தோ2ஸி* என்னுமாபோலே, அநுபாவ்யவிஷயத்தை யநுபவிக்கவும்மாட்டாதே ஸ்திமிதையாய் நில்லாநின்றாள். *ஸ்தப்தோ2ஸ்யுத* என்கிறபடியே, பரிபூர்ணஜ்ஞாநரைப்போலே யிராநின்றா ளென்றுமாம். [மற்றிவள்] - இவள்இதுக்குமேலே வார்த்தைசொல்லில். [தேவதேவபிரானென்றே] - இங்கே கண்டாலும் அயர்வறுமமரர்களதிபதி யிங்கேவந்து ஸுலபனானானென்றாயிற்று இவள்புத்தி பண்ணுவது. நாயகனுடைய மேன்மைக்குத்தோற்றுவார்த்தைசொல்லுகிற இவளை மீட்கப்போமோ? [என்றேமியும்] - "அப்பெரியவன் இப்படி ஸுலபனாய் சீலவானாவதே!" என்று அந்த சீலவத்தையைச்சொல்லப்புக்குத் தலைக்கட்டமாட்டாதே உதடுநெளிக்கும். உதடுநெளிக்கிற வாயோடே கண்கள் நீர்மல்க. [நெக்கு] - சிதிலையுமாய். [ஒசிந்து] - பரவசையாய். [கரையும்] நீராகாநின்றாள். [நெக்கொசிந்துகரையுமே] - பெருவெள்ளத்தில் கரையானது நெகிழ்ந்து ஒட்டுவிட்டொசிந்து பொசிந்து அவயவியாகாதபடி கரைந்துபோமாபோலே, ஓரவயவியாக்கிக்காணவொண்ணாதபடி கரைந்துபோகாநின்றாள்.

கரைகொள்பைம்பொழில்தண்பணைத் தொலைவில்லிமங்கலம்கொண்டுபுக்கு*
உரைகொளின்மொழியாளை நீருமக்காசையின்றியகற்றினீர்*
திரைகொள்பௌவத்துச்சேர்ந்ததும் திசைஞாலம்தாவியளந்ததும்*
நிரைகள்மேய்த்ததுமேபிதற்றி நெடுங்கண்ணீர்மல்கநிற்குமே. (3)

ஒ.—மூன்றும்பாட்டில், திருத்தொலைவில்லிமங்கலத்துக்குக் கொடுபோகிற நீங்கள், திருச்சோலையில் உள்ளிட்டுக்கொடுபோய்க் கெடுத்திகோள்! என்கிறாள். [கரையென்று தொடங்கி] - திருப்பொருநற்கரையை விழுங்கிக் குளிர்ந்த திருச்சோலையும் ச்ரமஹரமான நீர்நிலத்தையுமுடைய திருத்தொலைவில்லிமங்கலத்திலே கொண்டுபுக்கு. [உரைகொள் இன்மொழியாளை] - "ஒருத்திபேச்சே!" என்று நாடெல்லாம் உரைக்கும்படி யிருந்த இன்மொழியாளை. பொருளின்றி உரையே கொள்ளப்படும் மழலை வார்த்தை யுடையாள் என்றுமாம். [திரைகொள்என்று தொடங்கி] - தன்னுடைய ஸந்நிதாநத்தாலேகளித்துத் திரைமோதாநின்றுள்ள திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளினபடியும் திக்குகளோடுகூடின ஜகத்தையெல்லாம் அநாயாஸேந வளர்ந்து அளந்து கொண்டருளினபடியும் பசுமேய்த்தருளினபடியுமாகிற ஆச்ரிதார்த்தப்ரவ்ருத்திகளையே அடைவுகெடச்சொல்லித் தன்கண்ணிற் பரப்பெல்லாம் நீர்மல்கப் பிதற்றவும்க்ஷமையன்றிக்கே நிற்கும்.

இ.—மூன்றும்பாட்டில், திருநாளிலேதான் கொண்டு போகிறிகோள்: திருச்சோலை யுள்ளிட்டு இவளைக் கொண்டுபோய்க் கெடுத்திகோள்! என்கிறாள். [கரைகொள் இத்யாதி] - திருப்பொருநற்கரையை விழுங்கிப் பரந்து இருந்துள்ள சோலையையும் நீர்நிலங்களையும் உடைத்தான திருத்தொலைவில்லிமங்கலத்திலே இவளைக் கொண்டு புக்கு. போகிற நீங்கள் திருச்சோலையூடே கொண்டுபோகவேணுமோ? [உரைகொள் இன்மொழியாளை] - கேட்டாரடங்க "இது ஒரு பேச்சே!" என்று கொண்டாடும்படியான இனியமொழியை யுடையவள் என்னுதல்; அர்த்தத்தில் இழியவேண்டாதே, சப்தமே அமைந்திருக்கும் என்னுதல். "பாலேய்தமிழ ரிசைகாரர் பத்தர் பரவுமாயிரம்" என்று, நின்றார் நின்ற துறைகளிலே ஈடுபடும்படி இருக்கை. மாற்றும் உரையும் அற்றபேச்சு என்னுதல். உரை என்று - ஸ்ரீராமாயணமாய், அதுகுத்துண்ணும்படி இருக்கும் என்னுதல். [உமக்காசையின்றி யகற்றினீர்] - அவ்வூரிலே கொடுபுகுகையும், இவள்பக்கல் நசையறுகையென்றும் பர்யாயமன்றே. இவளை வேண்டாமையிறே கொடுபுக்கது. [திரைகொள் பௌவத்துச் சேர்ந்ததும்] - வ்யூஹவிபவங்களையும் இங்கே அநுபவிக்கும்படியிறே இவள் அவகாஹித்தது. ஸ்வஸ்பர்சத்தாலே திரைக்கிளர்த்தியுடைத்தாய்க் களித்து வருகிற திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளிற்றும் பரமபதத்தைவிட்டு, ப்ரஹ்மாதிகள்கூக்குரல் கேட்கைக்காக வந்துகிடக்கிற நீர்மையிலே சிதிலையாகாநின்றாள். [திசைஞாலம் இத்யாதி] - "மஹாபலியாலே பூமி அபஹ்ருதையாயிற்று" என்று கேட்டவாறே அப்படுக்கையில் பொருந்தாதே, திக்குக்களோடேகூடின பூமியை

அநாயாஸேந எல்லை நடந்து கொண்டதும், அது பரதசையென்னும்படி கோபஸஜாதீயனுக்குக் கையிலே கோலைக்கொடுத்து "பசு மேய்த்துவா" என்னலாம்படியான நீர்மையையும் அநுஸந்தித்து: இப்படிப்பட்ட ஆச்ரிதார்த்த ப்ரவ்ருத்திகளை "ஜாமதக்ந்யஸ்யஜல்பத:" என்கிறபடியே அடைவுகெடச்சொல்லி. [நெடுங்கண்ணீர்மல்க] - இக்கண்ணில் பரப்படைய நீர்மல்கும்படி. [நிற்குமே] - பிதற்றவும் க்ஷமையன்றிக்கே ஸ்தப்தையாய் இராநின்றாள்.

௪௫.—மூன்றாம்பாட்டு. திருநாளிலேதான் கொண்டுபோகவேண்டினால், திருச்சோலையுள்ளிட்டுக் கொடுபுகுவாருண்டோ? என்கிறாள்.

[கரைகொள்பைம்பொழில்] - திருப்பொருநற்கரையைப் பொழில் விழுங்கியிருக்கை. கரையைப் பொழில்கொண்டாற்போலே, இவளைக் குணங்கொண்டபடி. அத்திருச்சோலையை யுங்களுடைய ஹிதவசநத்தாலே பேர்த்துக்கொடுபோமன்றன்றோ இவள்நிலையை யுங்களால் பேர்க்கலாவது! பரந்த பொழிலையும் குளிர்ந்த நீர்நிலங்களையுமுடைய திருத்தொலைவில்லிமங்கலத்திலே கொடுபுக்கு. [உரைகொள் இன்மொழியாளை]-"பாட்யே கேயே ச மதுரம்" என்னும் ஸ்ரீராமாயணம் குத்துன்னும்படியான பேச்சென்னுதல்; அர்த்தத்தி லிழியவேண்டாதே, "உரையேயமையும்" என்னும்படியான பேச்சென்னுதல். (பரவ்யூஹ விபவங்களையும் இங்கே யநுபவிக்கும்படியிறே இவள் அவகாஹித்தது) "இதோருரையே! - பேச்சே!" என்று நாட்டார் கொண்டாடும்படியான பேச்சென்னுதல். அப்பேச்சில் வாசியறிந்து அநுபவிக்க மாட்டாதே, நீங்களே யாசையின்றி அகற்றினீர்கோள். [உரைகொள் இன்மொழி] - மாற்றும் உரையுமற்ற பேச்சென்னுதல்; உரை - அடைவுசொல். [உமக்காசையின்றி யகற்றினீர்] - அவ்வூரிலே கொடுபுகுகையும், இவள்பக்கல் நசையறுகையென்றும் பர்யாயம். ஆயிட்டு "இவளைவேண்டா" என்றன்றோ கொடுபுக்கதென்கிறாள். [திரைகொளிப்பாதி] - ஸ்வஸங்கிதாநத்தாலே இளராநின்றுள்ள திரைகளை யுடைத்தான திருப்பாற்கடலிலே ப்ரஹ்மாதிகள் கூக்குரல் கேட்கும்படியாகக் கண்வளர்ந்தருளினதுவும், இவர்களார்த்தி கேட்ட பின்பு இந்த்ராதிகளுக்குக் குடியிருப்புப் பண்ணிக்கொடுக்க அடியிட்டபடியும். [திசைஞாலம்தாவியளந்ததும்] திக்குக்களோடே கூடின பூமியை இரப்பாளனாயிரந்து அநாயாஸேந வளர்ந்து அளந்தபடியும். [திசைஞாலம்தாவியளந்ததும்] - "இந்த்ராதிகளை ரக்ஷிக்கவேணும்" என்றாசைபோடே காணும் பூமியையளந்தது. ஆசை - திக்கு. "இவன் திருவடிகளாலே நம்மை ஸ்பர்சிக்கவேணும்" என்றாசைப்பட்டுக்காணும் கிடக்கிறது பூமி. படுகை - உடைத்தாகை. பூமியினுடைய ஆசையாவது - திக்குப்பட்டிறேயிருப்பது. அவ்வளவன்றிக்கே, அறிவுகேட்டுக்குத் தலையான பசுக்களோடே சேர்ந்து வர்த்தித்தபடியுமேசொல்லி யடைவுகெடக்கூப்பிட்டு. [நெடுங்கண்ணீர்மல்க] - இக்கண்ணில் பரப்படங்கலும் பரப்புமாற ஜலதத்த்வமுண்டாவதே! [நிற்குமே]-பிதற்றவும் க்ஷமையன்றிக்கே, கண்ணநீர்மல்குகை "ஸ்வஸ்த்ததசை" என்னும்படி ஸ்தப்தையாய் நில்லாநின்றாள்.

நிற்கும்நான்மறைவாணர்வாழ் தொலைவில்லிமங்கலம்கண்டபின்*
அற்கமொன்றுமறவுறாள் மலிந்தாள்கண்டீரிவளன்னைமீர்!*
கற்கும்கல்வியெல்லாம் கருங்கடல்வண்ணன்கண்ணபிரானென்றே*
ஒற்கமொன்றுமிலள் உகந்துகந்துள்மகிழ்ந்துகுழையுமே. (4)

௪௬.—நாலாம்பாட்டில், திருத்தொலைவில்லிமங்கலத்தையும், அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸம்ருத்தியையும் யாதொருநாள் கண்டாள், அன்றுதொடங்கித் தடைநிற்கைதவிர்ந்தாள் என்கிறாள். [நிற்குமென்று தொடங்கி] - அபௌருஷேயமாய் நித்யமான வேதங்கள் தாங்களிட்ட வழக்காகையாலே வ்யாஸபதஞ்செலுத்த வல்லராயுள்ளவர்கள் அந்த வேதார்த்தபூதனான எம்பெருமானைப்பெற்று வாழுகிற திருத்தொலைவில்லிமங்கலத்தைக் கண்டபின் ஒன்றும் தடைநில்லாள் ; அன்னைமீர் ! இவள்

நம்மைக் கைகடந்தாள்கிடீகோள். [கற்குமென்று தொடங்கி] - சொல்லுஞ் சொல்லெல்லாம் திரு நாமங்களேயாய்ச் செல்லாநின்றுள். வருத்தமும் ஒன்றும் இன்றிக்கே அத்திருநாமங்கள்வழியே அவன் அழகையும் அவன்குணங்களையும் அநுஸந்தித்து மேன்மேலென ப்ரீதையாய் அந்த:கரணமும் ப்ரீதமாய் அந்த ப்ரீத்யதிசயத்தாலே அழியாநிற்கும்.

இ.—நாலாம்பாட்டில், அவ்வூரையும் அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்களையும் கண்டபின், தடைநிற்கை தவிர்ந்தாள் என்கிருள். [நிற்கும் நான்மறை] - அபௌருஷேயமாய் நித்யமான வேதங்கள். [வாணர்] - வேதங்கள் தாங்களிட்ட வழக்காய்ச் செல்லுகையாலே வ்யாஸபதஞ் செலுத்தவல்லவர்கள். [வாழ்தொலை வில்லிமங்கலம்] - வேததாத்பர்யபூதனானவனைக்கண்டு நித்யாநுபவம்பண்ணுகிறவூர். "ஸ்வாத்யாயாத் யோக மாஸீத" என்னுமளவன்றிக்கே, "யோகாத் ஸ்வாத்யாயமாமநேத்" என்று ஆரூடயோகராயிருக்கு மவர்கள். [கண்டபின்] - அவ்வூரில் ஸ்ரீவைஷ்ணவர்களும் அவனுமான சேர்த்தியைக் காட்டிக்கொடுத்துக் கெடுத்திகோள். [அற்கமொன்றும் அறவுறுள்] - அற்கம் - அல்குதல், அடங்குதல் தாயார்சொல் வழிவரு மத்தை ஒன்றையும் அறவிட்டாள். [மலிந்தாள் கண்டீரிவள்]-இவளுடைய பகவத்ப்ராவண்யம் எனக்குத் தெரியாதபடி விஞ்சினுள்கிடீகோள் [அன்னைமீர்!]-மீட்கத்தேடுகிற உங்களோடு, இவள்கருத்தறிந்தேனுய்ச் சொன்ன என்னேடு வாசியில்லை தெரியாமைக்கு. நித்யஸூரிகள்யாத்ரை ஸம்ஸாரிகளுக்குத் தெரியி லன்றே நமக்கு இவள்அளவு தெரிவது? [கற்குங்கல்வி இத்யாதி] - சொல்லும் சொல்லெல்லாம் திருநாம மேயாய், இதுதன்னிலும், வடிவழகுக்கும் ஆச்ரிதபாரதந்த்ர்யத்துக்கும் வாசகமான திருநாமங்களையே சொல்லாநின்றுள். "க்ருஷ்ணனுகில் ஆச்ரிதபரதந்த்ரன்" என்று ப்ரஸித்தமிறே. [பிரான்] - உபகாரசீலன். [என்றே ஒற்கமொன்றுமிலள்] - திருநாமங்களை இடைவிடாதே சொல்லாநின்றுல் இளைப்பு ஒன்று மின்றிக்கே இராநின்றுள். ஒற்கம் - ஒல்குதல், அதாவது - ஒடுங்குதல், இளைப்பு. [உகந்து உகந்து] - திருநாமங்களின் வழியே அவன்அழகையும் குணங்களையும் நினைத்து மேன்மேலென ப்ரீதையாய். [உள் மகிழ்ந்து குழையுமே] - அந்த:கரண ப்ரீத்யதிசயத்தாலே ஆச்ரயம் அழியாநிற்கும்.

ஈடு.—நாலாம்பாட்டு. அவ்வூரையும் அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்களையும் யாதொரு நாள் கண்டாள், அன்றுதொடங்கித் தடைநிற்கை தவிர்ந்தாளென்கிருள்.

[நிற்கும்நான்மறை] - நித்யமான நாலுவேதங்கள். நித்யத்வமாவது - பூர்வபூர்வோச் சாரண க்ரமத்தைப்பற்ற உத்தரோத்தரோச்சார்யமாணத்வம். ஆகையாலே நித்யமானவேதம் அபௌருஷேயமாகையாலே நிர்த்தோஷமாயிருக்குமிறே. [வாணர்] - வ்யாஸபதஞ் செலுத்த வல்லராயிருப்பர்கள். [வாழ்] - வேதார்த்தபூதனைக் கண்ணாலே கண்டு வாழாநிற்பர்கள். [வாழ் தொலைவில்லிமங்கலம்] - வேததாத்பர்யபூதனைக்கண்டு நித்யாநுபவம்பண்ணுமிறவூர். *ஸ்வாத் யாயாத் யோகமாஸீத* என்னுமளவன்றியே, *யோகாத் ஸ்வாத்யாயமாமநேத்* என்று ஆரூட யோகராயிருக்குமவர்கள். [கண்டபின்] - அவ்வூரில் வைஷ்ணவர்களும் அவனுமான சேர்த் தியைக் காட்டிக்கொடுத்துக் கெடுத்திகோள். [அற்கமொன்றும் அறவுறுள்] - அற்கம் - அல் குதல், அதாவது - அடக்கம். நம் சொல்வழி வந்திருக்கும் இருப்புத் தவிர்ந்தாள். (தாயார் சொல்வழிவருமத்தை யொன்றையுமறவிட்டாள்.) [மலிந்தாள்] - நம்மால் ஹிதஞ்சொல்லி மீட்க வொண்ணுதபடி மிக்காள். மீட்கைக்கு யோக்யதையுமில்லாதபடியாளுள். [மலிந்தாள் கண்டீர் இவள்] - இவளுடைய பகவத்ப்ராவண்யம் எனக்குத் தெரியாதபடி விஞ்சினுள்கிடீகோள். [அன்னைமீர்] - மீட்கத்தேடுகிறவுங்களோடு, இவள்கருத்தறிந்தேனகச் சொல்லுகிற என்னேடு வாசியில்லை தெரியாமைக்கு. நித்யஸூரிகள்யாத்ரை ஸம்ஸாரிகளுக்குத் தெரியிலன்றே நமக்கு இவள்அளவு தெரிவது! [கற்குமித்யாதி] - சொல்லும் சொல்லெல்லாம் திருநாமமேயாய், அது தன்னிலும் வடிவழகுக்கும் ஆச்ரிதபாரதந்த்ர்யத்துக்கும் வாசகமான திருநாமங்களையே சொல் லாநின்றுள். "க்ருஷ்ணனுகில் ஆச்ரிதபவ்யன்" என்று ப்ரஸித்தமிறே. [பிரான்] - அவ்வடிவழ கைத் தாழ்வின்றி என்னை அநுபவிப்பித்த உபகாரகன். [என்றேயொற்கமொன்றுமிலள்] - திரு நாமங்களை இடைவிடாதே சொல்லாநின்றுல் இளைப்பொன்றுமின்றிக்கே யிராநின்றுள். "விரஹவைதன்ய்பல்யத்தாலே திருநாமத்தை முட்டச்சொல்லமாட்டாள்" என்றிராநிற்கச் செய்தே, வருத்தமறச் சொல்லாநின்றுள். திருநாமந்தான் தரிப்பைக்கொடுத்துச் சொல்லுவிக்

கும்போலேகாணும்; "பாடியிளைப்பில"பிறே. ஒற்கம் - மிடி: இளைப்பின்றிக்கே யென்னுதல்; அன்றிக்கே, ஒற்கமாவது - ஒடுக்கமாய், தாய்மார்முன்பே 'இப்படிசொல்லாநின்றோமே' என்னும் லஜ்ஜையின்றிக்கே யென்னுதல். [உகந்துகந்து] - திருநாமத்வாரா அவன்ஸௌந்தர்ய சீலாதிகளை யநுஸந்தித்து மேன்மேலென ப்ரீதையாகாநின்றாள். [உள்மகிழ்ந்துகுழையுமே] - அந்த:கரணப்ரீத்யதிசயத்தாலே ஆச்ரயம் அழியாநிற்கும்.

குழையும்வாண்முகத்தேழையைத் தொலைவில்லிமங்கலம்கொண்டுபுக்கு*
இழைகொள்சோதிச்செந்தாமரைக்கண்பிரான் இருந்தமைகாட்டினீர்*
மழைபெய்தாலொக்கும் கண்ணநீரினொடு அன்றுதொட்டும்மையாந்து* இவள்
நுழையும்சிந்தையள் அன்னைமீர்! தொழுமத்திசையுற்றுநோக்கியே. (5)

ஒ.—அஞ்சாம்பாட்டில், இவளுடைய ஸ்வபாவத்தை அறிந்துவைத்து, இவளைத் திருத்தொலைவில்லிமங்கலத்திலே கொடுபுக்கு எம்பெருமானுடைய அழகைக்காட்டிக்கொடுத்துக் கெடுத்திகோள் என்கிறாள். [குழையுமென்று தொடங்கி]-தன்னுடைய மார்த்தவத்தாலே நையும் ஸ்வபாவையாய் நிரதிசயதிப்தியுக்தமான திருமுகத்தை யுடையளாய் அதிசபலையுமாயிருக்கிற இவளை திருத்தொலைவில்லிமங்கலத்திலே கொண்டுபுக்கு வேறு ஓர் ஆபரணம் வேண்டாதே தானே ஆபரணமான தேஜஸ்ஸை யுடையனாய்ச் சிவந்ததாமரைப்பூப்போலேஇருக்கிற திருக்கண்களையுடையனாய்க் கண்களைக்காணவே அறிந்துகொள்ளலாம்படியான தண்ணளியையும் உடையனாயிருக்கிறவனுடைய, ஒருவர்க்கும் கோசரமன்றிக்கேயிருக்கிற இருப்பில் அழகையும் நீங்களே காட்டிக்கொடுத்திகோள். [இழைகொள்சோதி] - ஆபரணத்தின்ஒளி தன்னுள்ளே அடங்கின சோதி என்றுமாம். [இருந்தமை] - அவன்படிகளை எல்லாம் என்றுமாம். [மழைபெய்தாலென்று மேலுக்கு] - அன்னைமீர்! வர்ஷதாரைபோலே மிக்கிருந்துள்ள கண்ணநீரோடே அன்றுதொடங்கி மயங்கி அவ்விருப்பிலும் பகவத்குணங்களிலே உட்புகாநின்ற சிந்தையைஉடையளாய்த்திருத் தொலைவில்லிமங்கலத்தின் திக்கை ஏகாக்ரசித்தையாய்க்கொண்டு நோக்கி அபிநிவேசத்தாலே தொழாநிற்கும்.

இ.—அஞ்சாம்பாட்டில், இவள்ஸ்வபாவத்தை அறிந்துவைத்து, தேவபிரானுடைய அழகைக் காட்டிக் கெடுத்திகோள் என்கிறாள். [குழையும் வாண்முகத்தேழையை] - ஒரு ஸம்ச்லேஷவிச்லேஷம் வேண்டாதே, ஸ்வபாவஸித்தமான மார்த்தவத்தாலே நையும் ஸ்வபாவையாய், "உகந்துகந்துண்மகிழ்ந்து குழையும்" என்கிற பகவதநுபவத்தாலே ஒளியையுடைத்தான முகத்தை யுடையளாய், "கிடையாது" என்றாலும் மீளமாட்டாத சாபலத்தையுடையவளை; பெருக்காற்றிலே கொடுபுகுவாரைப்போலே திருத்தொலைவில்லிமங்கலத்திலே கொடுபுக்கு, அதுதனக்குமேலே ஆழங்காலிலே கொடுபுகுவாரைப்போலே அங்கிருந்தஇருப்பைக் காட்டினீர். [இழைகொள்சோதி] - ஆபரணங்களினுடைய ஒளியை யுடைத்தாயிருக்கை என்னுதல்; வேறு ஆபரணம் வேண்டாதே தானே ஆபரணமான தேஜஸ்ஸென்னுதல்; ஆபரணவொளி தன்னுள்ளே அடங்கும்படி இருக்கும் சோதி என்னுதல். [செந்தாமரைக்கண்] - விகாஸம், செவ்வி, குளிர்த்தி நாற்றம் இவற்றாலே தாமரையை ஒப்பாகச்சொல்லலாயிருக்கும் திருக்கண். அகவாயில் தண்ணளிக்கு ப்ரகாசகமான கண்கள். [பிரான்] - "பக்தாநாம்" என்கிறவடிவு. [இருந்தமை காட்டினீர்] - கிடையைக்காட்டுதல்; நின்றமையைக் காட்டுதல் அன்றிக்கே, இருந்தபடியைக் காட்டினிகோள். கிடந்தானாகில், "கிடந்ததோர் கிடக்கை" என்பர்கள்; நின்றானாகில், "நிலையாரநின்றான்" என்பர்கள்; இருந்தானாகில், "பிரானிருந்தமைகாட்டினீர்" என்பர்கள்; இருந்தபடியே உத்தேச்யமாயித்தன. [காட்டினீர்] - தானே கண்டு மீளவொட்டாதே, "நோக்கிருந்தபடி கண்டாயே! முறுவலிருந்தபடி கண்டாயே" என்று காட்டிக்கொடுத்துக் கெடுத்திகோள். [மழை இத்யாதி] - வர்ஷதாரைபோலே மிக்க கண்ணநீரையுடையளாயிராநின்றாள். காட்டின உங்களைப்போலே குறியழியாதே இருக்கிறாளோ? "ஏழை" என்றவிடத்தை முதலிக்கிறாள்;—[அன்று தொட்டும்] - நீங்கள்காட்டின அன்று தொடங்கி, [மையாந்து] - மயங்கி. "குழையும்" என்றவிடத்தை முதலிக்கிறாள்.:—[இவள் நுழையும் சிந்தையள்] - அவன்குணங்களிலே உட்புகாநின்ற நெஞ்சையுடையவள். ஸ்வரூபத்தையும் ஆத்மகுணத்தையும்ஒழிய

வடிவழகிலே இடங்கொள்ளாநின்றாள். [அன்னைமீர்!] - இவளை மீட்கப்பார்க்கிறவனளிறே உங்களது, [அத்திசையுற்று நோக்கி - தொழும்] - அவ்வூரின் திக்கை ஏகாக்ரசித்தையாய் நோக்கித் தொழாநின்றாள்.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. இவள்ஸ்வபாவத்தை யறிந்துவைத்து, தேவபிரானுடைய அழகைக் காட்டிக் கெடுத்திகோளென்கிறாள். அன்றியே, அவ்வூரில் வர்த்திப்பார்படியைக் காட்டினால், அவர்கள்ஜீவநத்தையும் இவளுக்குக் காட்டிக்கொடுக்கவேணுமோ? என்கிறாளென்றுமாம்.

[குழையுமித்யாதி] - ஒரு ஸம்ச்லேஷம் வேண்டாதே ஸ்வபாவஸித்தமான மார்த்தவத்தாலே குழையும் ஸ்வபாவையாய், "உகந்துகந்து உள்மகிழ்ந்துகுழையும்" என்கிற பகவதநுபவத்தாலே ஒளியையுடைத்தானமுகத்தை யுடையவளாய், "நிடையாது" என்றாலும் மீளமாட்டாத சாபலத்தை யுடையவளை. [தொலைவில்லிமங்கலங்கொண்டுபுக்கு] - பகவத்பரிக்ரஹமான தேசத்திலே கொடுபுகத் தவிராதபின்பு, ஸ்ரீவைகுண்டத்திலே மேன்மையைக் காட்டவன்றோ அடுப்பது! நீர்மைக்கு எல்லைநிலமானவிடத்தே கொடுபுகுவாருண்டோ? வாள் - ஒளி. [இழைகொள்சோதி] - ஆபரணங்களினுடைய ஒளியை யுடைத்தாயிருக்குமென்னுதல், வேறோராபரணம் வேண்டாதே தானேயாபரணமான தேஜஸ்ஸு என்னுதல்; ஆபரணவொளி தன்னுள்ளேயடங்கும்படியான ஸ்வாபாவிகமான புகரென்னுதல். [செந்தாமரைக்கண்பிரான்] விகாஸாதிகளுக்குத் தாமரையை ஒப்பாகச் சொல்லலாயிருக்கிற திருக்கண்கள். அகவாயில் தண்ணளிக்கு ப்ரகாசகமான திருக்கண்கள். [பிரான்] - *பக்தாநாம்* என்கிற வடிவு. [இருந்தமைகாட்டினீர்] - நீங்கள் கெடுத்திகோள். இவளறியாத விஷயங்களும் நீங்களே காட்டிக் கொடுத்துக் கெடுத்திகோள். [இருந்தமை] - இருப்பில் வீறு அங்கே பர்யவஸிதம் போலே. நின்றானாகில், "நிலையாரநின்றான்" என்பர்கள்; இருந்தானாகில் "இருந்தமைகாட்டினீர்" என்பர்கள்; கிடந்தானாகில் "கிடந்ததோர்கிடக்கை" என்பர்கள்; அவன்ஸ்வபாவத்தைக் காட்டினிகோள் என்றுமாம். [காட்டினீர்] - நோக்கிருந்தபடி கண்டாயே, மூறுவலிருந்தபடி கண்டாயேயென்று. இப்போது அதுக்கு வந்ததென்? என்னில்; [மழைபெய்தாலொக்கும் கண்ணநீரொடு] கண்டவநந்தரம் வர்ஷதாரைபோலே கண்ணநீர் வெள்ளமிடுகிறபடி பாரீகோள்! ஆளவந்தார் மணக்கால்நம்பிபக்கலிலே எம்பெருமானைக் கேட்டவநந்தரம், "உபாயம் இதுக்குமேலில்லை: இவ்விஷயத்தை இப்போதே ஸாக்ஷாத்கரிக்க விரகில்லையோ?" என்றாராம். அப்படி கண்டவநந்தரம் கண்ணநீர் வெள்ளமிடப்புக்கதத்தனை. "ஏழை" என்றவிடத்தை மூதலிக்கிறாள்;—[அன்றுதொட்டும்] - நீங்கள் காட்டின அன்று தொடங்கி. [மையாந்து] - மயங்கி. "குழையும்", என்கிறவிடத்தை மூதலிக்கிறாள்;—[இவள் நுழையும் சிந்தையள்] - அவன்குணங்களிலே உட்புகாநின்ற நெஞ்சையுடையவள். ஸ்வரூபத்தையும் ஆத்மகுணத்தையும் ஒழிய வடிவழகிலே இடங்கொள்ளாநின்றாள். அங்கே சுழித்து நின்று, "இதொருவடிவழகே! இதோரொப்பனையே! இதொரு கண்ணழகே!" என்று இடங்கொள்ளாநின்றாள். [அன்னைமீர்] - இவளை மீட்கப் பார்க்கிறவளன்றே யுங்களது. [தொழும்] - *ஏகஸ்த்தஹ்ருதயா நூநம் ராமமேவாநுபச்யதி* என்கிறபடியே, அத்திக்கை மறுபாடுருவப்பார்த்துத் தொழாநிற்கும். இவள்தொழிலும் ஒரு திக்குப் பட்டல்லதிராது காணும்.

நோக்கும்பக்கமெல்லாம் கரும்பொடுசெந்நெலோங்குசெந்தாமரை*
வாய்க்கும்தண்பொருநல் வடகரைவண் தொலைவில்லிமங்கலம்*
நோக்குமேலத்திசையல்லால் மறுநோக்கிலள்வைகல்நாடொறும்*
வாய்க்கொள்வாசகமும் மணிவண்ணன் நாமமேயிவளன்னைமீர். (6)

ஒ.—ஆறும்பாட்டில், இக்கலக்கத்திலும் திருத்தொலைவில்லிமங்கலத்தை நோக்கினாளாகில் மற்று ஓர்இடமும் நோக்காள் என்கிறான். [நோக்கும் பக்கமெல்லாம்] - பார்த்தபார்த்த இடமெல்லாம். [வாய்க்கும்] - ஸம்ருத்தமாகை. [நோக்குமேல்] - நோக்க க்ஷமையாகில், [வைகல் நாடோறும் என்று

மேலுக்கு] - என்றும்ஒக்க நிரந்தரமாக இவள் பகவத்ஸௌந்தர்யாதிகளாலே வித்தையாகையாலே வாயில்புறப்படும் சொல்லும் திருநாமமே. [வைகல் நாடொறும்] - தாழ்த்துவிடிகிற நாள்தோறும் என்றுமாம். அன்னைமீர்! என்ற ஸம்போதநத்துக்குக்கருத்து - ஒருத்திபடிகண்டிகோளே! என்கிறது.

இ.—ஆறும்பாட்டில். கலக்கத்தாலே முதலிலே பார்க்கமாட்டாள், பார்த்தாளாகில் மற்று ஓர் இடமும் நோக்காள் என்கிறாள். [நோக்கும் பக்கமெல்லாம்] - பார்த்த பார்த்த இடமெல்லாம். "பொருநல்- நோக்கும் பக்கமெல்லாம்" என்று பாடுவாருமுண்டு. கரும்புக்கும், அத்தோடேகூட எழுந்த செந்நெலுக்கும், செந்தாமரையானது நிழல் செய்யாநின்றது; "உரம்பெற்ற மலர்க்கமலம் உலகளந்த சேவடி போல் உயர்ந்து காட்ட" என்கிறபடியே. [வாய்க்கும்] - ஸம்ருத்தமாம் என்னுதல், இட்டதெல்லாம் சதசாகமாகப்பணைக்கும் என்னுதல். ச்ரமஹரமான திருப்பொருநலின் வடகரையிலே, நகரங்களுக்குண்டான சிறப்புக்களில்ஒன்றும்குறையாத அந்தவூரை. [நோக்குமேல்] - முதலிலே பார்க்கமாட்டாள்; பார்த்தாளாகில், அத்திக்கையல்லால் வேறு ஒரு திக்கை நோக்குகிறிலள். [வைகல் நாடொறும்] - கழிகிறநாள்தோறும என்னுதல், தாழ்த்துவிடிகிற நாள்தோறும் என்னுதல். [வாய்க்கொள் வாசகமும்] - சொல்லும் வார்த்தையும். [மணிவண்ணன் நாமமே] - குணவிஷயமாதல், விபூதிவிஷயமாதல் அன்றிக்கே, அழகுக்கு வாசகமான திருநாமங்களே இவள் சொல்லுகிறது. [அன்னைமீர்] - இவ்விஷயத்திலே இவள் அவகாஹித்தபடி கண்டிகோளே.

ஈடு.—ஆறும்பாட்டு. தௌர்ப்பல்யத்தாலே முதலிலே பார்க்கமாட்டாள், பார்த்தாளாகில் மற்றோரிடமும் பாராளென்கிறாள்.

[நோக்கும் பக்கமெல்லாம்] - பார்த்தபார்த்தவிடமெல்லாம். "திருப்பொருநல் நோக்கும் பக்கமெல்லாம்" என்று பாடுவாருமுண்டு. [கரும்பு இத்யாதி] - கரும்பும், அத்தோடேகூட இசலிவளருகிற செந்நெலும், இரண்டுக்கும் நிழல்செய்கிற செந்தாமரையும். [வாய்க்கும்] - ஸம்ருத்தமாமென்னுதல், இட்டதெல்லாம் சதசாகமாகப்பணைக்குமென்னுதல். (அதாவது - பஹுஸ்வாகவுண்டென்னுதல், ஒன்று நூறுமென்னுதல்.) [தண்பொருநல்இத்யாதி] - ச்ரமஹரமான திருப்பொருநல்வடகரையிலேயான ஐச்வர்யத்தையுடைய தொலைவில்லிமங்கலம். [நோக்குமேல்] - முதலிலேநோக்க சக்தையல்லள்; வருந்திப் பார்த்தாளாகில் அத்திக்கையொழிய முகமெடுத்துப் பார்க்கிறிலள். [வைகல்நாடொறும்] - கழிகிறநாள்தோறும். [வாய்க்கொள்வாசகமும்] - வாயாலே சொல்லுகிற சொலவும். [மணிவண்ணன்நாமமே] - வடிவழகுக்கு வாசகமானவற்றையே சொல்லாநின்றாள். குணவிஷயமாதல் விபூதிவிஷயமாதலன்றிக்கே, வடிவழகுக்குத் தோற்றமை தோற்றச் சொல்லாநின்றாள். இவள்நிலையேது? நம்நிலையேது? உங்களது ஸ்வருபஜ்ஞாநம், இவளது ரூபஜ்ஞாநம்.

அன்னைமீர்! அணிமாமயில் சிறுமானிவள் நம்மைக்கைவலிந்து*
என்னவார்த்தையும்கேட்குறாள் தொலைவில்லிமங்கலமென்றல்லால்*
முன்னம்நோற்றவிதிகொலோ முகில்வண்ணன்மாயங்கொலோ?* அவன்
சின்னமும்திருநாமமும் இவள்வாயனகள்திருந்தவே. (7)

ஒ.—ஏழாம்பாட்டில், எம்பெருமானுடைய சிஹ்நங்களும் திருநாமங்களுமடைய இவள்வாயிலே பட்டபின்பு நிறம்பெற்றன என்கிறாள். [அன்னைமீர் என்று தொடங்கி] - அன்னைமீர் அழகிய மாமை யுடைய மயில்போலே இருக்கிற இச்சிறுப் பெண்பிள்ளை நம்மைக் கைகடந்து அந்தரங்கையாகக்கொண்டிருக்கிற நான் சொல்லிலும் திருத்தொலைவில்லிமங்கலம் என்கையொழிய மற்றொன்றும் கேளாள். 'எனவார்த்தை' என்றது - ஏதேனும் ஒருவார்த்தையாகிலும் கேளாள் என்றுமாம். [முன்னம் நோற்ற விதிகொலோ? முகில்வண்ணன் மாயங்கொலோ?] - பண்டுபண்ணின பாக்யபலமோ! எம்பெருமான் தன்வடிவழகைக் காட்டிப் பண்ணின ஆச்சர்யமான செயலோ! [அவன் சின்னமுமென்று

தொடங்கி] - அவனுடைய திருவாழி தொடக்கமான சிஹ்நங்களும் குணசேஷ்டிதங்களுக்கு ப்ரதிபாதக மான திருநாமங்களும் நிறம்பெறும்படி இவள் வாயனஆயின.

இ.—ஏழாம்பாட்டில், அவன்சின்னங்களும் திருநாமங்களும் இவள்வாயிலே பட்டபின்பு நிறம் பெற்றன என்கிருள். [அன்னைமீர்] - இவள் பருவமிது, நமக்கு அவ்வருகேபோன ஆச்சர்யம் பாரிகோள்; "மைத்ரேய" என்னுமாபோலே. [அணிமாமயில்சிறுமான்] - அழகிய நிறத்தையுடையளாய். முக்தமான மான்போலே அதிபாலையாயிருக்கிறவள். அழகிதாய் ச்லாக்யமாகமாயிருக்கிற மயில் போலே இருக்கிற சிறுப் பெண் என்றுமாம். [இவள் நம்மைக் கைவலிந்து] - முக்தையான இவள் நம்மைக் கைவிஞ்சி. நம்மிற்காட்டிலும் அந்தரங்கையாளுள். [எனவார்த்தையும் இத்யாதி] - தொலைவில்லிமங் கலம் என்கையொழிய ஏதேனும் ஒருவார்த்தையும் கேட்கிறிலள் என்னுதல், என்னுடைய வார்த்தையும் கேட்கிறிலள் என்னுதல். உங்களை மறைத்ததும் சொல்லுவது எனக்கிறே. அவ்வூரை நான் சொல்லி லும் கேட்கும். [முன்னம்நோற்ற விதிகொலோ] - முன்னேபண்ணின பாக்யபலமோ? "ஜந்மாந்தர ஸஹஸ் ரேஷு" "பஹூநாம் ஜந்மநாமந்தே". [முகில்வண்ணன் மாயங்கொலோ] - அதுக்கு இத்தனை கனத்தபலம் உண்டாகமாட்டாது; அழகைக்காட்டிப் பண்ணின ஆச்சர்யசேஷ்டிதங்களோ! அதில் ஸம்சயம் - இத்தலை யாலே ஸாதித்ததுக்கு இத்தனைகனத்தபலம் உண்டாகமாட்டாதென்று; இதில் ஸம்சயம் - இதுக்குமுன்பு ஒரு வ்யக்தியில் இப்படி பிறக்கக்காணுமையாலே. [அவன் சின்னமும்] - "தவளவொண்சங்கு சக்கரம்" என்று ஆபரணத்தோடே விகல்பிக்கலான சங்கசக்ராதி சிஹ்நங்களும். "அரவிந்தலோசநன், தேவ பிரான்" என்று அவனுக்கு வாசகமான திருநாமங்களும். [திருந்தவே - இவள் வாயனகள்] - நிறம் பெறும்படி இவள் வாயனவாயின. அல்லாதார், தாங்கள் திருந்துகைக்காகத் திருநாமங்கள் சொல்லு வர்கள்; திருநாமம் திருந்துகைக்கு இவள் சொல்லவேணும். நாமும் திருநாமங்கள் சொல்லுகிறோம், இவள் வாயிலேபட்டவாறே இங்ஙனே உயிர்பெறவேணுமோ? என்கிருள்.

ஈடு.—ஏழாம்பாட்டு. அவன்சின்னமும் திருநாமமும் இவள் சொல்லப்புக்கவாறே நிறம் பெற்றன என்கிருள்.

[அன்னைமீர்] - இவள் பருவம் இது; நமக்கவ்வருகேபோன ஆச்சர்யத்தைப் பாரிகோள். *மைத்ரேய* என்னுமாபோலே. (அன்னைமீரென்கிருள், ஸந்தோஷத்தாலே.) [அணிமாமயில் சிறுமான்] - அழகிய நிறத்தையுடைய பெண்பிள்ளை. அழகியதாய் ச்லாக்யமான மயில்போலே யிருக்கிறபெண்பிள்ளை என்னுதல். [சிறுமானிவள் நம்மைக்கைவலிந்து] - நாம்கற்பித்த திரு நாமங்களையும் சொப்பனச்சொல்லமாட்டாதவள் நமக்குஎட்டாதபடியானுள். [கைவலிந்து] - கைகடந்து. [எனவார்த்தையும் கேட்குருள்]-தன் நினைவை நான் சொல்லிலும் மீட்கவொண்ணாதுச் சொல்லுகிறேனென்று, என்வார்த்தையும் கேட்கத்தவிர்ந்தாள்; திருத்தொலைவில்லிமங்கல மென்னில் நான்சொன்ன வார்த்தையுங்கேட்கும். எனவார்த்தை - என்னுடையவார்த்தை. [முன்னம்நோற்ற விதிகொலோ] - ஒக்கப் பிறந்து வளர்ந்தோம், பின்பு இது ஸாதிக்கக்கண்டி லோம். முன்பே பண்ணிவைத்த ஸுக்ருதபலமோ இது! *விதிர் விதாநம்* என்னக்கடவதிறே. இவளாலே யநுஷ்டிதமான தர்மத்துக்கு இத்தனைபலம் கனக்கவுண்டாகமாட்டாது; இது ஸித்ததர்ம பலமாகவேணும்; ஆகையால், [முகில்வண்ணன்மாயங்கொலோ] - பீடாத்தை விழ விட்டு வடிவைக் காட்டினனே? அதில் ஸம்சயம் - இத்தலையாலே ஸாதித்ததோர் அசேதநக்ரி யைக்கு இத்தனை கனத்த பலமுண்டாகமாட்டாதென்று. இதில் ஸம்சயம் - இப்படி இதுக்கு முன்பு ஒருவ்யக்தியில் பலிக்கக் காணுமையாலே. [அவன்சின்னமித்யாதி] - "தவளவொண் சங்குசக்கரம்" என்பதான சிஹ்நங்களும், "அரவிந்தலோசநன்" "தேவபிரான்" என்பதான திருநாமங்களும். [இவள்வாயனகள் திருந்தவே] - பண்டே திருந்தியிருக்கிறவை இவள் சொல் லப்புக்கவாறே உயிர்பெற்றிராநின்றன. (திருந்தவே - இவள் வாயனகள் - நிறம்பெறும்படி இவள்வாயனவாயின.) பட்டர் "அழகியமணவாளப்பெருமாள்" என்றால் திருநாமம் நிறம்பெறு மாபோலேயும், சோமாசியாண்டான் "எம்பெருமானுர்" என்றால் திருநாமம் நிறம்பெறுமாபோ லேயும், அநந்தாழ்வான் "திருவேங்கடமுடையான்" என்றால் திருநாமம் நிறம்பெறுமாபோ லேயும்; *யே த்வயா கீர்த்திதா குணா:* என்னுமாபோலே.

திருந்துவேதமும்வேள்வியும் திருமாமகளிரும்தாம்* மலிந்
திருந்துவாழ்பொருநல் வடகரைவண்தொலைவில்லிமங்கலம்*
கருந்தடங்கண்ணிகைதொழுத அந்நாள்தொடங்கியிந்நாள்தொறும்*
இருந்திருந்தரவிந்தலோசன! என்றென்றேநைந்திரங்குமே. (8)

ஒ.—எட்டாம் பாட்டில், திருத்தொலைவில்லிமங்கலம் திருவடிதொழுத அன்றுதொடங்கி இன்றளவும் பிராட்டிக்கு உண்டான சைதில்யத்தைச்சொல்லுகிறாள். [திருந்து என்றுதொடங்கி] - அங்குள்ளார் பரிக்ரஹிக்கையாலே நிறம்பெற்ற வேதமும், வைதிகஸமாராதநங்களும், பெரியபிராட்டியாரும் தானும் ஸம்ருத்தமாயிருந்து வாழ்கிற திருப்பொருநல்வடகரையான திருத்தொலைவில்லிமங்கலத்தை; வேதமும் வைதிகஸமாராதநங்களும் அத்தால்வந்த ஸம்பத்துமானவை மிக்கிருந்து வாழ்ந்துசெல்லுகிற திருத்தொலைவில்லிமங்கலம் என்றுமாம். [கருந்தடங்கண்ணி கைதொழுதவந்நாள் தொடங்கியிந்நாள்தொறும்] - கறுத்துப் பெருத்திருக்கிற திருக்கண்களையுடைய இவள் திருவடிதொழுத அன்று தொடங்கி இன்றளவும் நெடும்போதோடுகூடி வருந்தி அரவிந்தலோசன என்று இப்படி நிரந்தரமாகச் சொல்லி அவ்வழியாலே அவனுடைய அழகையும் குணங்களையும் நினைத்து சிதிலையாய் நோவுபடாநின்றாள்.

இ.—எட்டாம்பாட்டில், திருத்தொலைவில்லிமங்கலம் திருவடிதொழுத அந்நாள்தொடங்கி இன்றளவும் உண்டான இவளுடைய சைதில்யத்தைச் சொல்லுகிறாள். [திருந்துவேதமும்] - வேதம் கட்டளைப்பட்டது அவ்வூரார் பரிக்ரஹித்தபின்பாயிற்று. "ஸ்வரூபம் ஜ்ஞானமாத்ரம்" என்கிற ச்ருதிகள், ஜ்ஞாத்ருத்வ ச்ருதிகள், பேதாபேத ச்ருதிகள், ஸகுணச்ருதிகள், நிர்க்குணச்ருதிகள் இவையடங்கவிஷய விபாகத்தாலே ஒருங்கவிட்டுக்கொண்டு இருக்குமவர்கள். [வேள்வியும்] - வைதிகஸமாராதநமும். [திருமாமகளிருந் தாம் மலிந்திருந்துவாழ்] - ஆராத்யரான பெரியபிராட்டியாரும் தானும் ஸம்ருத்தமாயிருந்து வாழுகிற ஊரை. வேதமும் வைதிக ஸமாராதநமும் அதின் ப்பலமான ஸம்பத்துமானவை மிக்கிருந்துவர்த்திக்கிற ஊரை யென்றுமாம்; தாம்என்றது - கீழ்ச்சொன்னவைதாமென்கை. [கருந்தடங்கண்ணி] - கண்ணழகுக்கு அவிதேஸஷணயோடு ஒக்கும். [தடங்கண்ணி] - அவளில்காட்டில் வ்யாவ்ருத்தி; அவனை அநுபவிக்கையாலே வந்ததிறே அவளுக்கு; அம்மிதுநத்தை அநுபவிக்கும் ஏற்றம் உண்டிறே இக்கண்ணுக்கு. இவள் கருந்தடங்கண்ணி, அவன் அரவிந்தலோசநன் [கைதொழுத இத்யாதி - திருவடிதொழுத அன்றுதொடங்கி இன்றைவரையும் என்னுதல்; அன்றுதொடங்கி இக்காலமெல்லாம் என்னுதல் [இருந்திருந்து அரவிந்தலோசனவென்று] - ஒருகால் "அரவிந்தலோசந" என்னும்போது, நெடும்போதுகூடிப் பெருவருத்தத்தோடே சொல்லவேண்டியிருக்கை. [என்றென்றே] - இருக்கமாட்டாதே நிரந்தரமாகச் சொல்லாநின்றாள். அவ்வழியாலே அழகையும் குணங்களையும் நினைத்து நையாநின்றாள். [இரங்குமே] - சரீரத்தளவன்றிக்கே நெஞ்சும் சிதிலமாகாநின்றது.

ஈடு.—எட்டாம்பாட்டு. அவ்வூரைத் தொழுத அன்றுதொடங்கி இன்றளவும் உண்டான இவளுடைய சைதில்யத்தைச் சொல்லுகிறாள்.

[திருந்துவேதமும்] - வேதம் கட்டளைப்பட்டது அவ்வூரிலுள்ளார் பரிக்ரஹித்த பின்பாயிற்று. ஸ்வரூபம் ஜ்ஞானமாத்ரமென்கிற ச்ருதிகள், ஜ்ஞாத்ருத்வச்ருதிகள், பேதா பேத ச்ருதிகள், ஸகுணச்ருதிகள் நிர்க்குணச்ருதிகள் இவையடங்க விஷயவிபாகத்தாலே ஒருங்கவிட்டிருக்குமவர்கள். [வேள்வியும்]-வைதிகஸமாராதநமும். கற்றகல்வி அநுஷ்ட்டாந சேஷமாயிருக்கிறபடி. [திருமாமகளிருந்தாம்]-ஆராதகருடைய பௌஷ்கல்யம் இருக்கிறபடி. [திருமாமகளிரும்]-ஸம்பத்தும் ('தாம்' - வேதமும், வைதிகக்ரியையும், ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பதபிவர்த்தகையான லக்ஷ்மியுமாகிற தாங்கள் பகவத்ஸம்ச்லேஷத்தாலே அபிவ்ருத்தியுடையாராய் ப்ரதிஷ்ட்டிதராயிருந்து வாழுகிற.) அன்றிக்கே, ஆராத்யரான பிராட்டியும் அவனுமாகவுமாம். தாம் = தான். ப்ரமாண ப்ரமேய ப்ரமாதாக்கள் குறைவற்றுவர்த்திக்கிற தேசம். (ப்ரமாதாக்கள் = அர்த்தாத் ஸித்தம்.)

[மலிந்திருந்து] - பரமபதத்தில் உள்வெதுப்போட்டபோலே யாகாதே இருப்பது. [பொருநல் வடகரை] - விரஜைக்கு அக்கரை என்னுமாபோலே. [கருந்தடங்கண்ணி] - கண்ணழகுக்கு அஸிதேக்ஷணையோடொக்கும். [தடங்கண்ணி] - அவனிற்காட்டில் வ்யாவ்ருத்தி. அவனையநுபவிக்கையால் வந்ததிறே யவனுக்கு; அவனிற்காட்டில் ஏற்றமுண்டிறே, அம்மிதுநத்தையநுபவிக்கையாலே இவள்கண்ணுக்கு; தொழும்போதும் வடிவழகியராயிருப்பார் தொழவேணுமாகாதே. [கைதொழுத அந்நாள் தொடங்கி] - திருவடிதொழுத அன்றுதொடங்கி இன்றளவும்வர என்னுதல்; தன் ஸத்தையுண்டான அன்று தொடங்கி இன்றளவும்வர என்னுதல். *அஸந்நேவ*, "அன்றுநான்பிறந்திலேன்," இதிறே முன்புத்தைநிலை. அவன்கையிலு மன்றிக்கே, பிறர்கையிலு மன்றிக்கே தன் கையதாயிருந்தபடி என் தான் தன்ஸத்தை? "தொழுதெழு"விறே. [இருந்திருந்து அரவிந்தலோசந என்றென்றே] - ஒருகால் "அரவிந்தலோசந" என்னும்போது, நடுவே பதின்கால் பட்டைப்பொதிசோறு அவிழ்க்கவேணும்- [என்றென்றே "தௌர்ப்பல்யத்தாலே சொல்லமாட்டாளே?" என்றிருக்கச் செய்தே, சொல்லித் தலைக்கட்டாநின்றாள். அவன் அரவிந்தலோசநன்; இவள் கருந்தடங்கண்ணி. இருவரும் ஒருமுகத்திலே காணும் அகப்பட்டது. [நைந்திரங்குமே]-சிதிலையாய் அழியாநின்றாள். சரீரத்தளவுமன்றிக்கே, நெஞ்சும் சிதிலமாகாநின்றது. இரக்கம்-சடுபாடு.

இரங்கிநாடொறும்வாய்வெரீஇ இவள்கண்ணநீர்களலமர*
மரங்களுமிரங்கும்வகை மணிவண்ணவோவென்றுகூவுமால்*
துரங்கம்வாய்பிளந்தானுறை தொலைவில்லிமங்கலமென்று* தன்
கரங்கள்கூப்பித்தொழும் அவ்வூர்த்திருநாமம்கற்றதற்பின்னையே. (9)

ஓ.—ஒன்பதாம் பாட்டில், இப்பெண்பிள்ளையுடைய மனோவாக்காயங்கள் மூன்றும் எம்பெருமான் பக்கலிலே மிகவும் ப்ரவணமாயிற்றின என்கிறாள். [இரங்கியென்றுதொடங்கி] - இவள் நாள்தோறும் நோவுபட்டு எம்பெருமானுடைய குணங்களை வாய்வெருவி மிகவும் கண்ணநீர்கள்பாய மரங்களும் இரங்கும்படி திருநாமத்தைச்சொல்லிக் கூப்பிடாநின்றாள். [துரங்கமென்று தொடங்கி] - கேசிஹந்தாவான க்ருஷ்ணன்வர்த்திக்கிற தேசம் என்று தன்னுடைய அழகிய கைகளைக் கூப்பித்தொழும் திருத்தொலைவில்லிமங்கலம் என்னக் கற்றபின்பு. அவ்வூர்த் திருநாமம் என்பானென்? என்னில்; பெண்பிள்ளை "திருத்தொலைவில்லிமங்கலம்" என்றால் உள்ளஇனிமை, தன்வாயாலே சொன்னவிடத்திற் பிறவாமையாலே.

இ.—ஒன்பதாம்பாட்டில், இவள்மனோவாக்காயங்கள், முதலிலே தொடங்கி அவன்பக்கலிலே ப்ரவணமாயிற்றின என்கிறாள். [இரங்கி] - மநஸ்ஸு நெகிழ்ந்து. [நாடொறும் வாய்வெரீஇ] - அகவாய் அழிந்தவழிபுக்குப் போக்குவீடு இருக்கிறபடி. [நாடொறும்] - வாஸனையே உபாத்யாயராகச் சொல்லுமதொழிய, உணர்த்தியோடே சொல்வது ஒருநாளுமில்லை. 'நாடொறும் வாய்வெரீஇ' என்றது - பொய்ந்நின்றஞானந்தொடங்கி இவ்வளவும் வரக் கூப்பிட்ட கூப்பீட்டையிறே. [இவள் கண்ணநீர்களலமர] - கண்கள் வாய்வெருவுகிறபடி. கண்ணாலே போக்குவிடுகிறபடி. [மரங்களுமிரங்கும்வகை] - அசித்கல்பமான ஸ்தாவரங்களும் இரங்கும்படியாயிற்று, இவள் ஆர்த்தத்வநி. "அபிவ்ருக்ஷா பரிம்லாநா:" என்று ராமவிச்லேஷத்தில் பட்டது அடங்க இவள்பேச்சிலே படாநின்றன. [மணிவண்ணவோவென்று கூவுமால்] - வடிவழகுக்கு வாசகமான திருநாமத்தையே சொல்லாநின்றாள். நீலமணிபோலே குளிர்ந்திருக்கிற திருநிறத்தையுடையவனே! என்னாநின்றாள். [துரங்கமென்று தொடங்கி] - கேசிஹந்தாவான க்ருஷ்ணன், அவதாரத்தில் பிற்பாடருடைய விரோதிகளைப் போக்குகைக்கு நித்யவாஸம் பண்ணுகிற திருத்தொலைவில்லிமங்கலமென்று. [தன்கரங்கள் கூப்பித்தொழும்] - "இவள்தொழுவித்துக் கொள்ளுமவள்" என்றிருக்கிறாள் தோழி. அத்தலை இத்தலையாவதே! என்கிறாள். இதுதான் என்று தொடங்கி? என்னில், [அவ்வூர்த்திருநாமங்கற்றதற்பின்னையே] - வார்த்தைசொல்லக் கற்றபின்பு. திருநகரியிலுள்ளார் "திருத்தொலைவில்லிமங்கலம்" என்றாயிற்று வார்த்தைகற்பது; கோயிலில் உள்ளார்

''கோயில்'' என்றும், ''பெருமாள்'' என்றும் கற்குமாபோலே. அவ்வூர்த்திருநாமம் என்கிறது - இவள் வாயால் ''திருத்தொலைவில்லிமங்கலம்'' என்றமையில் உள்ள இனிமை, தான்சொன்னால் பிறவாமையாலே.

௯௫.—ஒன்பதாம்பாட்டு. இவள் மனோவாக்காயங்கள் முதலிலே தொடங்கி அவன் பக்கலிலே ப்ரவணமாயிற்றின என்கிறாள்.

[இரங்கி] - நெஞ்சழிந்து. [வாய்வெரீஇ] - அடியற்ற பேச்சாயிரா நின்றது. *விசிந்த்ய வாசா ப்ருவதீ தமேவ* என்னுமாபோலே மாஸ்ஸஹகாரமின்றிக்கேயிருக்கை. [நாள்தொறும்] - மயர்வறமதிநல மருளப்பெற்றவன்றே அறிவுகேடும் குடிபுகுந்ததுகாணும். பக்திரூபாபந்ந ஜ்ஞாநமிறே பெற்றது. [இவள் கண்ணநீர்களல்மர] - கண்கள் வாய்வெருவுகிறபடி. நாடோறும் வாய்வெரீஇ யென்றது, பொய்நின்ற ஞானந்தொடங்கி இவ்வளவும்வரக் கூப்பிட்ட கூப்பீட்டையிறே. [மரங்களுமிரங்கும்வகை] - சேதநாசேதநவிபாகமற அழியும்படி காணும், இவள் வாய்விட்டுக் கூப்பிடும்படி. எம்பாரை ''மரங்களுமிரங்கக் கூடுமோ?'' என்று கேட்க, ''இது அருளிச்செய்த அன்று தொடங்கி எத்தனை பாவசுத்தியில்லாதார் வாயிலே புக்கதென்று தெரியாது; இங்ஙனே யிருக்கச் செய்தே, யமநியமாதி க்ரமத்தாலே பதஞ்செய்யப் பார்த்தாலும் சுக்கான் பருக்கைபோலே நெகிழாதேயிருக்கிற நெஞ்சுகளும் இன்று அழிகிறபடிகண்டால் ஸமகாலத்தில் மரங்கள் இரங்கச் சொல்லவேணுமோ?'' என்றருளிச்செய்தார். ''மரங்களின் று மதுதாரைகள் பாயும் மலர்கள் வீழும் வளர்கொம்புகள் தாழும்'' என்று அவதாரத்தில் திருக்குறுங்லோசையிற்பட்டதெல்லாம் இவ்வார்த்தாதத்திலே படுமாயிற்று: *அபிவ்ருக்ஷா: பரிம்லாநா:* என்று, ராமவிச்லேஷத்தில் பட்டதெல்லாம் இவள்பேச்சில் படாநின்றன. பகவத் குணங்களிலும் குணநிஷ்டர்பாசுர மழிக்கும்போலே. [மணிவண்ணவோவென்று கூவுமால்]- இவளையோதான் நீங்கள் மீட்கப்பார்க்கிறது! வடிவழகைச் சொல்லியன்றோ கூப்பிடுகிறது. [துரங்கமித்யாதி] - பண்டு உபகரித்தவன் இப்போது உபகரிக்கைக்கு வந்திருக்கிற தேசம். கேசிவாயை அநாயாஸேந கிழித்தவன் வர்த்திக்கிறஇடம். [தொலைவில்லிமங்கலமென்று தன் கரங்கள் கூப்பித்தொழும்] - (அத்தலைபித்தலைபாவதே! என்கிறாள்.) தன்னூரின்பேரைச்சொல்ல எல்லாரும் கையெடுக்கும்படி பிறந்தவள்கிடீர் தான் அவனூரைச் சொல்லித் தொழுகிறாள்: இக்கைகண்டார் தொழுமத்தனையென்றுபோலேகாணும் இவளிருப்பது. தான் தொழுவது ஸ்த்ரீத்வத்துக்குப் போராதிறே. இதுதான் என்று தொடங்கி? என்னில், [அவ்வூர்த் திருநாமம் கற்றதற்பின்னையே] - இவள் சொற்கற்றபின்பு. திருநகரியிலுள்ளார் சொற்கற்பது ''திருத் தொலைவில்லிமங்கலம்'' என்றுபோலே காணும். இவள் பேச்சுக்கற்கையென்றும், திருநாமஞ் சொல்லுகையென்றும் இரண்டில்லை. கோயிலிலுள்ளார் ''கோயில்'' என்றும், ''பெருமாள்'' என்றும் கற்குமாபோலே. தோழி தன் வாயாலே ''திருத்தொலைவில்லிமங்கலம்'' என்றால் இவள் சொன்ன இனிமை பிறவாமையாலே, அவ்வூரென்கிறாள் காணும். என்தான்! முன்பு சொன்னாளேயென்னில்; அது அப்படியிராமலிறே அவ்வூரென்கிறது.

பின்னைகொல்நிலமாமகள்கொல் திருமகள்கொல்பிறந்திட்டாள்*
என்னமாயங்கொலோ இவள்நெடுமாலென்றேநின்றுகூவுமால்*
முன்னிவந்தவன்நின்றிருந்துறையும் தொலைவில்லிமங்கலம்
சென்னியால்வணங்கும்* அவ்வூர்த்திருநாமம்கேட்பதுசிந்தையே. (10)

ஒ.—பத்தாம்பாட்டில், இவள் எம்பெருமான்பக்கலிலே அதிப்ரவணையா யிருக்கிறபடியையும், இவளுக்கு அவனல்லது செல்லாதிருக்கிறபடியையும் கண்டு, இவளோடொக்க மற்று சங்கிக்கலாவார் ஒருவரும் இல்லாமையாலே, பிராட்டிமாரிலே ஒருத்தியோ? என்று சங்கிக்கிறாள். [பின்னையென்று தொடங்கி] - இவர்களிலே ஒருத்தியோ? என்று சங்கித்து, அவர்களுக்கும் இப்படியில்லாமையாலே லோகமெல்லாம் வாழ்கைக்கு இவள் ஒருத்தி பிறந்தாள் என்றுமாம். [என்னவென்று தொடங்கி] - இவள் திருநாமத்தைச்சொல்லி நிரந்தரமாகக் கூப்பிடாநின்றாள். இதுஎன்ன ஆச்சர்யம்! [முன்னி

என்று தொடங்கி] - "இப்பெண்பிள்ளையைக்கிடைக்கும்" என்று முற்கோலி வந்து பதறிநின்றருளியும் இருந்தருளியும் நிரந்தரமாக வர்த்தித்தருளுகிற திருத்தொலைவில்லிமங்கலத்தைத் தலையாலே வணங்கும்; அவ்வூர்த்திருநாமம் கேட்கையிலே இவளுக்கு மனோரதமும்.

இ.—பத்தாம்பாட்டில், அவனுலல்லது செல்லாதபடியான இவளுடைய ப்ராவண்யாதிசயத்தைக் கண்டு, பிராட்டிமாரிலே ஒருத்தியோ! என்று சங்கிக்கிருள். [பின்னைகொல்] - "நப்பின்னைப்பிராட்டி பிறந்திட்டாளோ? அங்ஙனன்றியே, ஸ்ரீபூமிப் பிராட்டி பிறந்திட்டாளோ? எல்லார்க்கும் இவ்வேற்றங்களைக் கொடுக்கும் பிராட்டிதானே பிறந்திட்டாளோ?" என்பர்கள் பூர்வர்கள். ஸர்வேச்வரனுக்கு ஸம்பத்தாயிருக்குமவள் பிறந்தாளோ, அதுக்கு விளைபூமியாயிருக்குமவள் பிறந்தாளோ. அவ்விளைபூமியினுடைய ப்பலஸ்வரூபமாயிருக்குமவள் பிறந்தாளோ? அங்ஙனன்றியே, அவர்களுக்கும் இவள்படி இல்லாமையாலே அவர்களோடு ஒப்பன்று; லோகமெல்லாம்வாழ்கைக்கு இவள்ஒருத்தி பிறந்தாளோ என்றுமாம். "விஷ்ணுநா ஸத்ருசோ வீர்யே" என்றாப்போலே நாய்ச்சிமார்பக்கலிலும் ஒருவகைக்குஒப்புச்சொல்லலாம்படியிருக்கையாலே கதிர்பொறுக்குகிருள். "உபமாநமசேஷாணாம் ஸாதூநாம் யஸ்ஸதாऽபவத்" என்கிறபடியே எல்லார்க்கும் இவரை ஒப்பாகச்சொல்லலாம்; இவர்க்கு ஒப்பாவார் ஒருவருமில்லை. [என்னமாயங்கொலோ] - இவள் திருநாமத்தைச்சொல்லிக்கூப்பிடாநின்ருள். இது என்ன ஆச்சர்யமோ? இவ்விபூதியிலே இங்ஙனேயிருப்பாரையும் காணலாமாகாதே! அவன் தன்பக்கல்பண்ணின வ்யாமோஹாதிசயத்தைச் சொல்லிக் கூப்பிடாநின்ருள். [முன்னி இத்யாதி] - தன்னுடைய வ்யாமோஹத்துக்கு அவன் க்ருஷிபண்ணினபடி. முற்பாடனாய்வந்து, அவன் நிற்பதிருப்பதாய்க்கொண்டு நித்யவாஸம் பண்ணுநிற்கும் ஊர். பசியன் சோறுதாழ்த்தால் படுமாபோலே. [சென்னியால் வணங்கும்] - தன்கரங்கள் கூப்பித்தொழுகையும் ப்ரார்த்த்யமானபடி; இருந்தவிடத்தே இருந்து தலையைச் சாய்க்கும்படியாளுள். இவள் அகவாய் ஒடுகிறது அவ்வூர்த்திருநாமங்கேட்கையிலே. "திருநாமத்தைக் கேட்கவல்லேனே" என்ருயிற்று இவள் மனோரதம். "இவள்வாயாலே சொல்லக்கடவ திருநாமத்தை நாம் சொல்லிக் கெடுக்கக்கடவோமல்லோம்" என்று அவ்வூர் என்கிருள்.

ஈடு.—பத்தாம்பாட்டு. அவனுலல்லது செல்லாத இவளுடைய ப்ராவண்யாதிசயத்தைக் கண்டு, பிராட்டிமாரிலே பொருத்தியோ? என்று சங்கிக்கிருள்.

[பின்னைகொல்] - பின்னை பிறந்திட்டாளோ? அங்ஙனன்றியே, ஸ்ரீபூமிப்பிராட்டி பிறந்திட்டாளோ? அன்றிக்கே, எல்லார்க்கும் இவ்வேற்றங்களைக் கொடுக்கும் பிராட்டிதானே பிறந்திட்டாளோ? ஸர்வேச்வரனுடைய ஸம்பத்தாயிருக்குமவள் பிறந்திட்டாளோ? அஸ்ஸம்பத்து விளையும் பூமியாயிருக்குமவள் பிறந்தாளோ? அவ்விளைபூமியினுடைய ப்பலரூபமாயிருக்குமவள் பிறந்தாளோ? அங்ஙனன்றிக்கே, [பிறந்திட்டாளோ] - அவர்களுக்கு இவள்படி யில்லாமையாலே அவர்களொப்பன்று; லோகமெல்லாம் வாழுகைக்கு இவளொருத்தி பிறந்தாளோ! என்றுமாம். "விஷ்ணுநா ஸத்ருசோ வீர்யே" என்றாப்போலே, நாய்ச்சிமார்பக்கலிலேயும் ஓரோவகைக்கு ஒப்புச் சொல்லலாயிருக்கையாலே கதிர்பொறுக்குகிறுள். "உபமாநமசேஷாணாம் ஸாதூநாம் யஸ்ஸதாऽபவத்" என்கிறபடியே இவரை எல்லார்க்கும் ஒப்பாகச்சொல்லலாய் இவர்க்கு ஒப்பாவார் ஒருவருமில்லைகாணும். [என்னமாயங்கொலோ] - பகவத்விபூதியில் கூடாததில்லையாகாதே! இதென்ன ஆச்சர்யந்தான்! [இவள்நெடுமாலென்றேநின்றுகூவும்] - தன்பிச்சைக் காற்கடைக்கொண்டு, அவன்பிச்சைச்சொல்லிக் கூப்பிடாநின்றுள். [ஆல்] - ஆச்சர்யத்திலே, அசை. [முன்னி இத்யாதி] - தன்னுடைய வ்யாமோஹத்துக்கு அவன் க்ருஷிபண்ணினபடி. முற்பாடனாய்வந்து அவன் நிற்பதிருப்பதாய்க்கொண்டு நித்யவாஸம் பண்ணுகிறவூர். பசியன், சோறு தாழ்த்தால் படுமாபோலே. [சென்னியால்வணங்கும்] - தன்கரங்கள் கூப்பித்தொழுகையும் ப்ரார்த்த்யமானபடி. இருந்தவிடத்தேயிருந்து தலைசாய்க்கும்படியாளுள். [அவ்வூர் இத்யாதி] - அவ்வூர்த் திருநாமங்கேட்கச் செவிதாழ்க்கையிலே இவளுக்கு மனோரதம். இவள், அவ்வூரென்கிறது - பெண்பிள்ளை சொன்னுப்போலே யிராமை. ஆனால் ஒருகால் சொன்னுளோ? என்னில், "அது வரைமுறுகலாகையிறே பின்பு தவிர்ந்தது" என்றருளிச்செய்வர்.

சிந்தையாலும்சொல்லாலும்செய்கையினாலும் தேவபிரானையே*
தந்தைதாயென்றடைந்த வண்குருகூரவர்சடகோபன்*
முந்தையாயிரத்துள்ளிவை தொலைவில்லிமங்கலத்தைச்சொன்ன*
செந்தமிழ்ப்பத்தும்வல்லார் அடிமைசெய்வார்திருமாலுக்கே. (11)

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழியில் கருத்தை வ்யக்தமாக்காநின்றுகொண்டு இந்தைக்கற்றவர்கள் இதுக்கு அநுரூபமான கைங்கர்யத்தைப் பண்ணப்பெறுவர் என்கிறூர். [சிந்தையால் என்று தொடங்கி] - மநோவாக்காயங்களினுல் திருத்தொலைவில்லிமங்கலத்தில் எம்பெருமானையே எல்லா உறவுமுறையும் என்று பற்றுவதும் செய்து, திருநகரியில் உள்ளார்க்கு ஸர்வவிதமுமான ஆழ்வார் அருளிச்செய்த. [முந்தையாயிரம்] - அர்த்தப்பழமையாலே பழையதான ஆயிரம்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழியில் கருத்தைச் சொல்லிக்கொண்டு, இது கற்றவர்கள் இதுக்கு அநுரூபமான கைங்கர்யத்தைப் பண்ணப்பெறுவர் என்கிறூர். [சிந்தையாலும் இத்யாதி] - மநோவாக்காயங்கள் மூன்றும் ஒருபடிப்பட அவன்பக்கலிலே ப்ரவணமாயிருக்கிறபடி. ''இரங்கி'' என்றும் ''மணிவண்ணவோவென்று கூவுமால்'' என்றும், ''தன்கரங்கள் கூப்பித்தொழும்'' என்றும் - மூன்றுலும் இவர்க்கு உண்டான ப்ராவண்யாதிசயமிறே இத்திருவாய்மொழியில் சொல்லிற்று. [தேவபிரான் இத்யாதி] - அயர்வறுமமரர்களதிபதியாய்வைத்துத் திருத்தொலைவில்லி மங்கலத்திலே ஸுலபனும் இருந்தவனையே ஸர்வவிதபந்துவுமென்று, அப்படியே பற்றுவதும் செய்தவர். [வண்குருகூரவர்சடகோபன்] - அவனே தமக்கு ஸர்தவிதபந்துவுமானுப்போலே, அவ்வூரிலுள்ளார் ''ஆழ்வாரே எல்லாஉறவுமுறையும்'' என்ருயிற்று இருப்பது. ''அன்னையாயத்தனும்'' என்னும்ஸ்ரீமதுரகவிகளைப்போலே. [முந்தையாயிரம்] - பழையதான வேதார்த்தத்தை அருளிச்செய்கையாலே. ஸர்வேச்வரன் இதரஸஜாதீயனுனுப்போலே வேதமும் தமிழாய்வந்து இவர்பக்கலிலே அவதரித்தபடி. [செந்தமிழ்] - செவ்வியதமிழ், பசுந்தமிழ். அர்த்தத்தை விசதமாகக்காட்டுமது. இப்பத்தை அப்யஸிக்கவல்லார் ச்ரிய:பதிக்கு அடிமைசெய்யப்பெறுவர்.

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழியிற்கருத்தை வ்யக்தமாக்காநின்றுகொண்டு இத்தைக் கற்றவர்கள் இதுக்குஅநுரூபமான கைங்கர்யத்தைப்பண்ணப்பெறுவர் என்கிறூர்.

[சிந்தையாலும் இத்யாதி] - மநோவாக்காயங்கள் மூன்றும் ஒருபடிப்பட அவன்பக்கலிலே ப்ரவணமாயிருக்கிறபடி. ''இரங்கி'' என்றும், ''மணிவண்ணவோ'' என்றும், ''தன்கரங்கள் கூப்பித்தொழும்'' என்றும் மூன்றுலும் - இவர்க்கு உண்டான ப்ராவண்யாதிசயமிறே இத்திருவாய்மொழியிற் சொல்லிற்று. [தேவபிரானித்யாதி] - அயர்வறுமமரர்களுக்கு அதிபதியாயிருந்துவைத்துத் திருத்தொலைவில்லிமங்கலத்திலே ஸுலபனுயிருந்தவனே ஸர்வவிதபந்துவுமென்று அறிதியிட்டபடியே பற்றுவதும் செய்தவர். [வண்குருகூரவர்சடகோபன்] - அவனே யிவர்க்கு ஸர்வவிதபந்துவுமானுப்போலே, அவ்வூரிலுள்ளார் ஆழ்வாரையே எல்லாவுறவுமுறையாகப் பற்றியாயிற்றிருப்பது. ''அன்னையாயத்தனும்என்னையாண்டிடும் தன்மையான்'' என்றும், *மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதி ஸ்ஸர்வம்* என்றும் சொல்லுகிறபடியே இருப்பர்கள். [முந்தையாயிரம்] - பழையதான வேதார்த்தத்தையருளிச்செய்கையாலே. ஸர்வேச்வரன் இதரஸஜாதீயனுய் அவதரித்தாப்போலே வேதமும் தமிழாய் வந்து இவர்பக்கலிலே அவதரித்தபடி. [செந்தமிழ்] - செவ்வியதமிழ், பசுந்தமிழ். அர்த்தத்தை விசதமாகக்காட்டுவது. இத்தை அப்யஸிக்கவல்லார் ச்ரிய:பதிக்கு அடிமை செய்யப்பெறுவர். பெருமாளும் பிராட்டியும் சேரவிருக்க இளையபெருமாள் அடிமைசெய்தாப்போலே விசிஷ்டவேஷத்திலே அடிமைசெய்யப்பெறுவர்.

ஆழ்வார் எம்பெருமானர் ஜீயர் திருவடிகளே சரணம்

ஆருந்திருவாய்மொழி—மாலுக்கு : ப்ரவேசம்

ஒ.—ஆருந்திருவாய்மொழியில், கீழில் திருவாய்மொழியில் பிறந்த வ்யஸநம் முறுகப்பிடுகை யாலே இப்பிராட்டியும் மோஹித்து, அது பொறுக்கமாட்டாமை இவளுடைய தோழியும் மோஹித்த தசையிலும், இவளை ஜீவிப்பிக்கைக்கு விரகுகளை மநோரதிக்கையாலே தரித்திருக்கிற திருத்தாயாரான வள், இவளுடைய வலயாதிகள் காணக்காண சிதிலமாய்ப்போகிறபடியைக்கண்டு, அவற்றைத் தனித் தனியே சொல்லி சோகிக்கிறாள்.

இ.—ஆருந்திருவாய்மொழியில், கீழ் இவளுக்குப்பிறந்த தசைமுற்றி வ்யஸநம் அதிசயிக்கை யாலே மோஹங்கதையாய், அதுபொறுக்கமாட்டாமையாலே இவளுடையதோழியும் மோஹிக்க, இத் தசையிலும் இவளை ஜீவிப்பிக்க விரகுகளை மநோரதிக்கையாலே தரித்திருக்கிற திருத்தாயார், இவளுடைய வலயாதிகள் காணக்காண சிதிலமாய்ப்போகிறபடியைக்கண்டு, அவற்றைத் தனித்தனியே சொல்லிக் கூப்பிடுகிறாள். நகரபத்நாதிகள் வேவப்புக்கால், "அதுவிழுந்தது, உதுவிழுந்தது" என்னுமாபோலே, விரஹாக்நியாலே தன்மகள் இழந்தவற்றைச் சொல்லுகிறாள். கீழில் திருவாய்மொழியில் அலாபதசை யோபாதி, "கிடையாது" என்றாலும் விடமாட்டாதபடி தன்னுடைய மநோவாக்காயங்கள் இவ்விஷயத்திலே அதிப்ரவணமானபடி சொல்லிற்று; இதில் - அந்த அலாபத்தால் வந்த பாரவச்யத்தைச் சொல்லுகிறது.

ஈடு.—கீழ் இவளுக்குப்பிறந்த தசைமுற்றி வ்யஸநம் அதிசயிக்கையாலே மோஹங்கதை யாய்க்கிடக்க, அதுகண்டு ஆற்றாளாய் இவளுடைய தோழியும் மோஹிக்க, இத்தசையிலும் இவளை ஜீவிப்பிக்க விரகுகளை மநோரதிக்கையாலே தரித்திருக்கிற திருத்தாயார் இவளுடைய வலயாதிகள் காணக்காண சிதிலமாகிறபடியைக்கண்டு, அவற்றைத் தனித்தனியே சொல்லிக் கூப்பிடுகிறாள். ஓரோ நகர பத்நாதிகள் வேவப்புக்கால், "ஒருமாடம் முறிந்தது, மாளிகை முறிந்தது" என்பாரைப்போலே. (விரஹாக்நியாலே தன் மகள் இழந்தவற்றைச் சொல்லு கிறாள்.) கீழ்த்திருவாய்மொழியில் அலாபதசையாய், "கிடையாது" என்றாலும் விடமாட்டாத படி தம்முடைய மநோவாக்காயங்கள் அவ்விஷயத்திலே அதிப்ரவணமானபடிசொல்லிற்று; இதில், அந்த அலாபத்தால்வந்த பாரவச்யத்தைச் சொல்லுகிறது. "நெடுமாலென்றே நின்று கூவுமால்" என்று தன் வ்யாமோஹத்தைக் காட்டியாயிற்று இவளையிப்படி விளைத்தது; பெரிய வன் தாழநின்றால் பொறுக்கலாயிராதிறே. *ராகவேணுபயே தத்தே ஸக்தா:* என்று இவன் தரைப் படும்படியிறே அவன்வ்யாமோஹம் இருப்பது.

(த்வராநுகுணமான அநுபவஅலாபத்தாலே ஆற்றாமைமுறுகி, கீழ்ச்சொன்னதசை கலங்கி, ஸம்பந்தஜ்ஞாநமும் தரிப்புக்கு உறுப்பாகையன்றிக்கே, தளர்த்திக்கு உறுப்பாய்விட, உபாயாத்யவஸாய மித்தனையும் கலங்காமலிருந்த, ப்ராப்யஅலாபநிபந்தநமான பாரவச்யத் தாலே, ஏறாளுமிறையோனில் - தாம் "வேண்டா" என்று உபேக்ஷித்த ஆத்மாத்மீயங்க ளெல்லாம், தன்னடையே அழிந்து செல்லுகிறபடியை அநுஸந்திக்கிறார்.)

மாலுக்கு வையமளந்தமணாளற்கு*
நீலக்கருநிற மேகநியாயற்கு*
கோலச்செந்தாமரைக் கண்ணற்கு*
என்கொங்கலரேலக்குழலி இழந்ததுசங்கே. (1)

ஒ.—முதற்பாட்டில், இவள் திருவுலகளந்தருளின எம்பெருமானுடைய குணசேஷ்டிதாதி களிலே அகப்பட்டு வளையிழந்தாளென்கிறாள். [மாலென்றுதொடங்கி] - ஆச்ரிதவிஷயத்தில் மிகவும் வ்யாமுக்தனாய் அதிமாநுஷசேஷ்டிதங்கள்பண்ணி ஆச்ரிதருடைய அபேக்ஷிதங்களை முடித்துக் கொடுத்த

இச்செயலாலே இவளை அகப்படுத்தி இவளுக்குபோக்தாவானவனுக்கு. [நீலக்கருநிறமென்று தொடங்கி] - அறநெய்த்துக்கறுத்த நிறத்தையுடைய மேகம்போலே ச்ரமஹரமானநிறத்தையும் அதினுடைய ஔதார்யாதிகளையும் உடையனும் ஆச்ரிதருடைய அபேக்ஷிதம் முடித்துக்கொடுக்கப்பெற்ற ஹர்ஷப்ரகர்ஷத்தாலே அழகுபெற்ற திருக்கண்களையும் உடையவனுக்கு. விசேஷணந்தோறும் 'அவனுக்கு' என்கிறது, தனித்தனியே ஈடுபடுத்துகையாலே. [என்னென்று தொடங்கி] - ஏலம்போலே நறுநாற்றத்தைக் கமழாநின்ற குழலையுடைய என்மகள்.

இ.—முதற்பாட்டில். இவள் ஸ்ரீவாமநப்ராதுர்ப்பாவத்தில் குணசேஷ்டிதாதிகளிலே அகப்பட்டு வளை யிழந்தாள் என்கிறாள். [மாலுக்கு] - "நீ எனக்குவேண்டா" என்று அகன்று முடியப்புகுகிற தசையிலே தன்செல்லாமையைக் காட்டிப் பொருந்தவிட்டுக்கொண்ட வ்யாமோஹத்தை உடையவனுக்கு. அவன் தன் பிச்சைக்காட்டியாயிற்று இவளைப் பிச்சேற்றிற்று. [வையமளந்த மணாளற்கு] - உகவாதாரையுங் கூட, தன்னை இரப்பாளனுக்கித் தன்திருவடிகளின்கீழேயிட்டுக்கொண்ட வ்யாமோஹத்தாலே அநந்யார்ஹ மாக்கித் தனக்குபோக்தாவானவனுக்கு. [நீலக்கருநிறமேகநியாயற்கு] - நெய்த்துக்கறுத்தநிறத்தையுடைய மேகஸ்வபாவற்கு. ப்ரயோஜநநிரபேக்ஷமாகக் கொடுக்கையும், கொடுக்கப்பெறாதபோது உடம்பு வெளுக்கையும், வ்யாமோஹமின்றிக்கே ஒழிந்தாலும் விடவொண்ணாத வடிவும் ஔதார்யமும் இருக்கிறபடி. [கோலச்செந்தாமரைக்கண்ணற்கு] - தர்சநீயமாய் வாத்ஸல்யத்தாலே சிவந்து விகாஸாதிகளை யுடைத்தான திருக்கண்களை யுடையவனுக்கு. "தாமரைத்தடங்கண் விழிகளின் அகவலைப்படுப்பான்" என்று கண்ணாலேயாயிற்று அகப்படுத்திக்கொண்டது. விசேஷணந்தோறும் தனித்தனியே 'அவனுக்கு' என்று, தனித்தனியே அகப்பட்ட துறைகளைச் சொல்லுகிறாள். தன்மகள்மேல் பட்ட காமபாணங்களை எண்ணுகிறாள்காணுந்தாயார், ஏலம்போல்கமழாநின்றுள்ள நறுநாற்றத்தையுடைய மயிர்முடியையுடைய என்மகள். கொங்கு - பரிமளம். இவள்மயிர்முடி ஒன்றுக்கும் தோற்றுக் குமிழிநீருண்ணுமவன்கிடீர் இவளை அழித்தான்; பங்களப்படைகொண்டு, தனிவீரஞ் செய்வாரை அழிக்குமாபோலே. [இழந்தது சங்கே] - இவளுக்குத்தோற்று அவன் இழக்குமத்தை இவள் இழந்தாள். சங்கு - வளை.

ஈடு.—முதற்பாட்டு. இவன் ஸ்ரீவாமநப்ராதுர்ப்பாவத்தில் குணசேஷ்டிதங்களிலே அகப் பட்டு வளையிழந்தாளென்கிறாள்.

[மாலுக்கு] - மின்னிடைமடவாரிலே, நீ எனக்கு வேண்டாவென்ன, நீ எனக்கு வேணு மென்று தடுமாறி நின்றநிலையைக் காட்டியாயிற்று இவளை இப்பாடு படுத்திற்று. ஸர்வேச் வரனை உத்கர்ஷந்தோற்ற நின்றநிலில் இப்பாடுபடாள்கிடீர்! (வ்யாமோஹத்தை யுடையவனுக்கு). [வையமளந்தமணாளற்கு] - உகவாதாரையுங்கூட விடமாட்டாத வ்யா மோஹம். "அழித்தாயுன் திருவடியால்" என்று இவளையும் தன்காற்கீழேயிட்டுக்கொண்டா னிறே. அச்செயலுக்கு எழுதிக்கொடுத்தாள் இவளொருத்தியுமேயிறே; "மூவடி மண் கொண்டளந்த மன்னன்சரிதைக்கே மாலாகிப் பொன்பயந்தேன்" என்கிறாள்: அவனிரந்து மண்பெற்றான், இவளிரந்து பொன்பெற்றாள். உகப்பாலே பெறுமது உரைபெற்றிருக்குமே. [மணாளன்] - போக்தா. [நீலக்கருநிறமேகநியாயற்கு] - நெய்த்துக்கறுத்தநிறத்தை யுடைய மேகஸ்வபாவற்கு. நியாயம் - ஸமம், ஒப்பு. ப்ரயோஜந நிரபேக்ஷமாகக் கொடுக்கையும், கொடுக்கப்பெறாதபோது உடம்பு வெளுக்கையும். வ்யாமோஹமின்றியே யொழிந்தாலும் விடவொண்ணாத வடிவும் ஔதார்யமுமிருக்கிறபடி. [நீலக்கருநிறமேகநியாயற்கு] - மஹாபலி யை வடிவைக்காட்டி அபஹரித்தாப்போலேகாணும் இவளையும் வடிவைக்காட்டி அபஹரித்த படி. இவள் பிச்சேறுகைக்கிட்ட மையிக்கிறபடி. மைப்படிமேனி"யிறே [கோலச் செந் தாமரைக் கண்ணற்கு] தர்சநீயமாய், வாத்ஸல்யத்தாலே சிவந்து, விகாஸாதிகளையுடைத்தான திருக்கண்களை யுடையவனுக்கு. "தாமரைத்தடங்கண்விழிகளின் அகவலைப்படுப்பான்" என்று கண்ணாலேயாயிற்று அகப்படுத்திக்கொண்டது. விசேஷணந்தோறும் அவனுக்கு என்று தனித்தனியேயகப்பட்ட துறைகளைச் சொல்லுகிறாள். [மால்இத்யாதி] - தன்மகள்மேல்பட்ட அம்புகளை யெண்ணுகிறாள்: இதொரு குத்து, இதொரு வெட்டு, இதோரம்பு என்று. [என் கொங்கலரேலக் குழலி]-மதுஸ்யந்தியாகின்றுள்ள பூவையுடைத்தாய், நறுநாற்றத்தையுடைத்

தான குழலையுடைய என் பெண்பிள்ளை. கொங்கென்பது-தேன். அலரென்பது- பூ ஏலம்-நறு நாற்றம். இவள் மயிர்முடியொன்றுக்குத் தோற்றுக் குமிழிநீருண்ணுமவன்கிடீர் இவளையழித் தான்! பங்களப்படைகொண்டு, தனிவீரம் செய்வாரையழிக்குமாபோலே. [இழந்தது சங்கே] இவள் மயிர்முடிகண்டு அவனிழக்கக் கடவத்தை இவளிழந்தாள். சங்கு-வளை.

சங்குவில்வாள்தண்டு சக்கரக்கையற்கு*
செங்கனிவாய்ச் செய்யதாமரைக்கண்ணற்கு*
கொங்கலர்தண்ணந்துழாய் முடியானுக்கு* என்
மங்கையிழந்தது மாமைநிறமே. **(2)**

ஒ.—இரண்டாம் பாட்டில், திருவுலகளந்தருளின எம்பெருமானுடைய ஸ்ரீபஞ்சாயுத தாரணத் தாலேவந்த அழகிலே அகப்பட்டு என்மகள் தன்னுடைய அழகிய நிறத்தை இழந்தாள் என்கிறாள். [சங்கென்று தொடங்கி] - திருப்பவளத்தில் அழகும் திருக்கண்களில் அழகும்போலே தகுதியான ஸ்ரீபஞ்சாயுதங்களைத் திருக்கையிலே தரித்த அழகையுடையவனுக்கு. இவை ஸர்வாயுதங்களுக்கும் உபலக்ஷணம். [கொங்கலர்] - பரிமளம்மிகுகை.

இ.—இரண்டாம் பாட்டில், திருவுலகளந்தருளினபோதை திவ்யாயுதங்களின் அழகிலே அகப் பட்டுத் தன்னுடைய அழகியநிறத்தை இழந்தாள் என்கிறாள். [சங்குவில்வாள் இத்யாதி] - ஸ்ரீபஞ்சாயுதங் களின் சேர்த்தியழகிலேயாயிற்று இவள் ஈடுபட்டது. இவளுடைய நிறங்கொள்ளுகைக்கு எத்தனை ஆபரணம்வேணும்? ஸ்மிதமும் நோக்கும்போலே ஆயுதச்சேர்த்தியும் தகுதியாய் இருக்கிறபடி. [கொங் கலர்] - பரிமளம் ப்ரவஹிக்கிற குளிர்ந்த திருத்துழாய் வளையத்தை யுடையவனுக்கு. ஆபரணம்! அவயவங்கள்! ஒப்பனை! எத்தனை செயல்வேணும், இவள்நிறங்கொள்ளுகைக்கு? [என்மங்கை] - தன் பருவத்தாலே இவற்றையடங்கத் தோற்பிக்குமவள் கிடீர். மாமை என்றும், நிறம் என்றும் - பர்யாயம்; இவ்விடத்தில் நிறமென்றது அழகாய், நிறத்தில் அழகை இழந்தாள்.

ஈடு.—இரண்டாம்பாட்டு. திருவுலகளந்தருளினபோதை திவ்யாயுதாதிகளில் அழகி லேயகப்பட்டுத் தன்னுடைய அழகிய நிறத்தையிழந்தாளென்கிறாள்.

[சங்குஇத்யாதி] - ஸ்ரீ பஞ்சாயுதங்களின் சேர்த்தியழகிலேயாயிற்று இவள் ஈடுபட்டது. இவளுடைய ஓராபரணம் வாங்குகைக்கு எத்தனையாபரணம் பூண்டு காட்டினான்? கைக்கு மேல் ஏந்துங்காட்டிக்காணும் இவளுடைய ஆபரணம் வாங்கிற்று. ஆபரணகோடியிலும் ஆயுதகோடியிலும் இருபுடைமெய்க்காட்டிறே இவைதாம்! [செங்கனிவாய்ச் செய்யதாமரைக் கண்ணற்கு]-கையிலே யொன்றை தரித்துக்காட்டி ஆகர்ஷிக்கவேண்டியிருந்ததோ? ஸ்மிதமும் நோக்குமமையாதோ நலிகைக்கு? [கொங்கலரித்யாதி] - மதுஸ்யந்தியான திருத்துழாய்மாலை யை, ஆதிராஜ்யஸூசகமான திருவபிஷேகத்திலேயுடையவனுக்கு. வைத்த வளையத்தைக் காட் டிக்காணும் இவள்நிறத்தை யபஹரித்தது. ஆபரணசோபை அவயவசோபை ஒப்பனை யழகு, எத்தனை செய்யவேணும் இவள்நிறங் கொள்ளுகைக்கு. [என்மங்கை] - தன் பருவத் தாலே இவற்றையடையத் தோற்பிக்குமவள்கிடீர் நிறமிழந்தாள்! மாமைநிறம்-அழகியநிறம். மாமை - அழகு. அழகிய நிறத்தையிழந்தாள்.

நிறங்கரியானுக்கு நீடுலகுண்ட*
திறங்கிளர்வாய்ச் சிறுக்கள்வனவற்கு*
கறங்கியசக்கரக் கையவனுக்கு* என்
பிறங்கிருங்கூந்தல் இழந்ததுபீடே. **(3)**

ஒ.—மூன்றும்பாட்டில், ஆலிலையிலே கண்வளர்ந்தருளினவனுடைய ஸௌந்தர்யாதிகளிலே அகப்பட்டு, என்பெண்பிள்ளை தன்னுடைய பெருமையை இழந்தாள் என்கிறாள். [நீடுலகுண்டதிறங்கிளர் வாய்ச் சிறுக்கள்வனவற்குஎன்றுதொடங்கி] - இம்மஹாலோகத்தையெல்லாம் திருவயிற்றிலே வைத்துக்கொண்டமை தெரியும்படியான திருப்பவளத்தையுமுடையனாய் தான்சிறுத்து ஒருவர்க்கும் பரிச்சேதிக்கவொண்ணாத அத்யாச்சர்யசேஷ்டிதங்களை யுடையவனுக்கு. ப்ரதிபக்ஷத்தை மாய்க்கையில் உண்டான த்வரையாலே எப்போதும் சுழன்றுவாராநின்றுள்ள திருவாழியைத் திருக்கையிலே உடையனானக்ருஷ்ணனுக்கு. [என் பிறங்கிருங்கூந்தல்] - வளர்ந்து பெருத்து இருந்துள்ள கூந்தலை யுடைய என்பெண்பிள்ளை.

இ.—மூன்றும்பாட்டில், வடதளசாயிபடிகளிலே அகப்பட்டுத் தன்பெருமையை யிழந்தாள் என்கிறாள் [நிறங்கரியானுக்கு] - ச்ரமஹரமானவடிவிலேயாயிற்று இவள் தோற்றது. "நீலக்கருநிறமேக நியாயற்கு" என்ன வேண்டாவாயிற்று, நிறத்துக்கு ஒப்பாகமாட்டாமையாலே. [நீடுலகு] - பரப்பை யுடைத்தான பூமியைத் திருவயிற்றிலேவைத்த ப்ரகாரத்தைக் கோட்சொல்லாகின்ற திருவதரத்தையுடைய. "வையமேழுங்கண்டாள் பிள்ளைவாயுளே" என்னக்கடவதிறே. ரக்ஷகத்வ ப்ரகாசகமான திருவதரம். [சிறுக்கள்வனவற்கு] - சிறியவடிவிலே பெரிய லோகங்களைவைத்து, ஒருவர்க்கும் பரிச்சேதிக்க வொண்ணாத சேஷ்டிதத்தை யுடையவனுக்கு. வடிவுக்குச்சேராத சேஷ்டிதம், சேஷ்டிதத்துக்குச் சேராத வடிவு. தன்னுடைய ரக்ஷகத்வத்தையும் அகடிதகடநா ஸாமர்த்த்யத்தையும் காட்டியாயிற்று, இவளை அகப் படுத்திற்று. விரோதிநிரஸந த்வரையாலே சுழன்றுவாராகின்ற திருவாழியைக் கையிலேயுடையவனுக்கு. வடிவழகும் ரக்ஷகத்வமுமன்றியே ரக்ஷணத்தில் உத்யுக்தபரிகரத்தையுடையவன் என்கை. [என்பிறங் கிருங்கூந்தல்] - சுற்றுடைத்தா யொழுகுநீண்ட மயிர்முடியை யுடையவள். பிறங்கு என்று பெருமை; இருமைஎன்றும் பெருமை; சுற்றுடைமையிலும், ஒழுகுநீட்சியிலுமாய் இருக்கிறது. கூந்தல்"- மயிர்முடி. எதிர்த்தலையைத்தோற்பிக்கும் கூந்தலை உடையவள்கிடீர் தன் பெருமையை இழந்தாள்! "யஸ்ய ஸா ஜநகாத் மஜா—அப்ரமேயம் ஹி தத்தேஜ:" என்று அவனுக்கும் ஏற்றத்தைக்கொடுக்கும் பெருமையைக் கிடீர் இவள் இழந்தது! பீடு - பெருமை.

ஈடு.—மூன்றும்பாட்டு. வடதளசாயிபடிகளிலே அகப்பட்டு இவள் தன்பெருமையை யிழந்தாளென்கிறாள்.

[நிறங்கரியானுக்கு] - "இழந்ததுமாமைநிறம்" என்றாள்; அந்நிறமும் அவன்பக்கலிலே கிடக்கையாலே இரட்டித்துக் காட்டிற்று வடிவு. தன்னிறத்துக்குமேலே ஒருநிறம் உண் டாயிற்று. "நீலக்கருநிறமேகநியாயற்கு" என்னவேண்டாவாயிற்று; நிறத்துக்கு ஒப்பாக மாட்டாமையாலே. நெய்த்துக்குளிர்ந்து ச்ரமஹரமான வடிவுதன்னையே சொல்லுகிறாள். [நீடுலகுஇத்யாதி] - பரப்பையுடைத்தான பூமியைத் திருவயிற்றிலே வைத்த ப்ரகாரத்தைக் கோட்சொல்லாநின்ற திருவதரத்தையுடைய. கிளருகை-சொல்லுகை; "வையமேழுங்கண் டாள் பிள்ளைவாயுளே" என்னக்கடவதிறே. ரக்ஷகத்வப்ரகாசகமான திருவதரம். [சிறுக்கள் வனவற்கு] - சிறுவயிற்றிலே பெரியலோகங்களை வைத்து, பரிச்சேதிக்க வொண்ணாத சேஷ்டி தத்தையுடையவனுக்கு. [நீடுலகுண்ட திறங்கிளர்வாய்] - வேறொருவர்வாயால் கேட்கவேண் டாதே, இவன் வாயாலே சொல்லக் கேட்கலானபடி. [சிறுக்கள்வனவற்கு] - வடிவில் சிறுமையும், ரக்ஷகத்வத்தில் பரிப்புமிருக்கிறபடி. தன்னுடைய ரக்ஷகத்வத்தையும் அகடி தகடநாஸாமர்த்த்யத்தையுங் காட்டியாயிற்று, இவளையகப்படுத்திற்று. [கறங்கியசக்கரக் கையவனுக்கு] - கறங்குகை - சுழலுகை; விரோதிநிரஸநத்வரையாலே எப்போதும் சுழலா நின்றுள்ள திருவாழியைத் திருக்கையிலேயுடையவனுக்கு; தான் ரக்ஷகனானவளவன்றியே, பரிகரமும் ரக்ஷணத்திலே உத்யுக்தமாயிருக்கிறபடி. அவன் கைப்பிடித்தார் எல்லாரும் ரக்ஷணத்வரையுடையாராயிறேயிருப்பது. ஸ்ரீ பாஞ்சஜந்யாழ்வானும், "ஒருவினையுண்டா கவற்றே, நாம் வாய்க்கரையிலேயிருந்து ஓசையை விளைத்துவினைதீர்க்க!" என்று ப்ரார்த்தியா நிற்கும். [என்பிறங்கிருங் கூந்தல்] - சுற்றுடைத்தாய் ஒழுகுநீண்ட மயிர்முடியையுடையவள்.

மிகவும் பெரிய குழலையுடையவளென்றுமாம். இருமை-பெருமை. இங்குப் பெருமையாவது-நீட்சி. பிறங்குதல்-மிகுதி. கூந்தலென்கிறது-மயிர். "ஐம்பால் கூந்தல் குழல்" என்றிவை பர்யாயம். எதிர்த் தலையைத் தோற்பிக்கும் குழலையுடையவள்கிடீர் தன்பெருமையிழந்தாள். பீடு-பெருமை *யஸ்யஸா ஜநகாத்மஜா-அப்ரமேயம்ஹி தத்தேஜ* என்று அவனுக்கும் பெருமையைக் கொடுக்கும் பெருமையைக்கிடீர் இவளிழந்தது.

**பீடுடை நான்முகனைப் படைத்தானுக்கு*
மாடுடைவையம் அளந்தமணாளற்கு*
நாடுடைமன்னர்க்குத் தூதுசெல்நம்பிக்கு*
என்பாடுடையல்குல் இழந்ததுபண்பே. (4)**

ஒ.—நாலாம்பாட்டில், சதுர்முகனுக்கு ஸ்ரஷ்டாவாய் வைத்து தன்மேன்மைபாராதே ஆச்ரிதாபிமதங்களைச் செய்தருளும் மஹாகுணத்தை யுடையவனுக்கு, என் பெண்பிள்ளை தன்னுடைய நீர்மை இழந்தாள் என்கிறாள். [மாடென்று தொடங்கி] - வஸுமதியானபூமியை இந்த்ரன் இழந்தான் என்று பார்த்து, அவனுக்கு வாங்கிக் கொடுத்தருளுகைக்காகப் பண்ணின க்ருத்ரிமசேஷ்டிதத்தாலே தன்னை அகப்படுத்தினவனுக்கு. [நாடென்று தொடங்கி] - நாடுடைய ராஜாக்களான பாண்டவர்களுக்கு தூதக்ருத்யம்பண்ணி அத்தாலே பரிபூர்ணனானவனுக்கு. இடமுடைத்தான கடிப்ரதேசத்தை யுடைய என் பெண்பிள்ளை.

இ.—நாலாம்பாட்டில், சதுர்முகஸ்ரஷ்டாவான பெருமையைப் பாராதே ஆச்ரிதார்த்தமான மஹாகுணத்தை யுடையவனுக்கு இவள் தன்னீர்மையை இழந்தாள் என்கிறாள். [பீடுடை இத்யாதி] - சதுர்த்தச புவநத்தையும் ஸ்ருஷ்டிக்கவல்ல பெருமையையுடைய சதுர்முகனை ஸ்ருஷ்டித்தவனுக்கு. மாடென்று - தநம், வஸுமதியான பூமி என்னுதல்; மாடென்று இடமாய், பரப்பையுடைத்தான பூமிஎன்னுதல். திருவுலகளந்தருளின க்ருத்ரிமசேஷ்டிதத்தாலே தன்னை அநந்யார்ஹையாக்கினவனுக்கு. நாடுடையராஜாக்களான பாண்டவர்களுக்கு. தூதக்ருத்யத்தைப்பண்ணி, அத்தாலே பூர்ணனானவனுக்கு. [நாடுடை] - நாடுடையார் வேறே சிலராக்கி, அவர்களுக்கு ஏவலாளாய்த்திரியும். [நம்பிக்கு] - "இன்னார்தூதன் என நின்றான்" என்று அச்செயலாலே இட்டசட்டை பீறும்படியாய் இருக்கை. அடியிலே ஜகத்தை யுண்டாக்கி, அபஹரித்தார் உண்டாகில் எல்லைநடந்து மீட்டுக்கொண்டு, அத்தை ஆச்ரிதர்க்கு ஆக்குகைக்கு இழிதொழில்செய்து, அந்நீர்மையைக்காட்டி இவள்நீர்மையை அபஹரித்தான். [என்பாடுடையல்குல்] - இடமுடைத்தான கடிப்ரதேசத்தை உடையவள். பாடு - இடம். "பும்பாவம் மநஸா யயு:" என்று ஸஜாதீயரையும் அழிக்கும் வடிவழகு. அவன் பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரியாய் இருக்கிறப்போலே. பண்பு - நீர்மை.

ஈடு.—நாலாம்பாட்டு. சதுர்முக ஸ்ரஷ்டாவான மேன்மையைப் பாராதே ஆச்ரிதார்த்தமான மஹாகுணத்தையுடையவனுக்கு இவள் நீர்மையை யிழந்தாளென்கிறாள்.

[பீடுடையித்யாதி] - சதுர்த்தச புவநத்தையும் ஸ்ருஷ்டிக்கவல்ல பெருமையையுடைய சதுர்முகனை ஸ்ருஷ்டித்தவனுக்கு. பீடு-பெருமை. [மாடுஇத்யாதி] - மாடு-தநம். வஸுமதியான பூமியென்னுதல்; மாடென்று-இடமுடைமையாய், பரப்பையுடைய பூமியென்னுதல். திருவுலகளந்தருளின க்ருத்ரிமசேஷ்டிதத்தாலே தன்னை யநந்யார்ஹமாக்கினவற்கு. [நாடுஇத்யாதி] - நாடுடைய ராஜாக்களான பாண்டவர்களுக்குத் தூதுபோய் அத்தாலே பூர்ணனானவனுக்கு. பகவதபிப்ராயத்தாலே, அவர்களை நாடுடைமன்னரென்கிறார்காணும், "இருக்கைக்கு ஒரு குறிச்சியுங்கொடோம்" என்று ராஜ்யம் பண்ணுகிறார்கள் துர்யோதநாதிகளாயிருக்க: *அபிஷிச்ய ச லங்காயாம்* இத்யாதிவத். [நம்பிக்கு] - இன்னார்தூதன் என நின்ற செயலாலே இட்டசட்டை பீறும்படியிருக்கை. அடியிலே ஜகத்தையுண்டாக்கி, அபஹரித்

தாருண்டாகில் எல்லைகடந்து மீட்டுக்கொண்டு, அத்தை ஆச்ரிதர்க்கு ஆக்குகைக்கு இழிதொழில் செய்த இக்கீர்மையையுங்காட்டி இவள்கீர்மையை யபஹரித்தான். [என்பாடுடையல்குல்]-இடமுடைத்தான நிதம்பப்ரதேசத்தையுடையவள். பாடு - இடம். *பும்பாவம் மநஸா யயு.*- ஸஜாதீயரை யழிக்கும் வடிவழகு. அவன் பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரியானுப்போலே. பண்பு - கீர்மை.

பண்புடைவேதம் பயந்தபரனுக்கு*
மண்புரைவையம் இடந்தவராகற்கு*
தெண்புனற்பள்ளி எம்தேவபிரானுக்கு*
என்கண்புனைகோதை இழந்ததுகற்பே (5)

ஒ.—அஞ்சாம்பாட்டில், வேதப்ரதாநாத்யுபகாரங்களைப் பண்ணினவனுக்கு என்மகள் கற்பிழந்தாள் என்கிருள். [பண்பென்று தொடங்கி] - தன்னை ப்ரதிபாதிக்கவற்றான வேதத்தை ப்ரஹ்மாவுக்காக ஆவிஷ்கரிப்பதுஞ்செய்து எல்லாரிலும் பரனாய் மண்மிக்க ப்ருதிவியைஇடந்த ஸ்ரீவராஹமானவனுக்கு. மண்மிகுதி சொல்லிற்று, எடுக்கையில் அருமைதோற்றுகைக்காக [தெண்புனல் என்று தொடங்கி] - கண்வளர்ந்தருளுகைக்கு ஈடாம்படி ஸ்வச்ச்மான நீர்வெள்ளத்தையுடைத்தான ஏகார்ணவத்திலே கண் வளர்ந்தருளாநின்று ப்ரஹ்மாதி தேவர்களுக்கும் ஸ்ருஷ்ட்யாத்யுபகாரகனானவனுக்கு. கண்டாருடைய கண்ணைப்பிணிக்கவல்ல அழகையுடைய என்பெண்பிள்ளை தன்னுடைய கல்வியை இழந்தாள்.

இ.—அஞ்சாம்பாட்டில், வேதப்ரதாநம் முதலான உபகாரங்களைப் பண்ணினவனுக்கு என்மகள் கற்பிழந்தாள் என்கிருள். [பண்புடை வேதம்] - ஈச்வரனை உள்ளபடியே காட்டித்தரும் கீர்மையையுடைய வேதம். [பயந்த] - ப்ரஹ்மாவை ஓதுவிக்கை. [பரனுக்கு] - வேதப்ரதிபாத்யனுகையாலும், ப்ரஹ்மாவுக்கு வேதசக்ஷுஸ்ஸைக்கொடுக்கையாலும் ஸர்வஸ்மாத் பரனானவனுக்கு. அறிவு இழந்தார்க்கு அறிவு கொடுக்குமவன் கிடீர் இவள் அறிவை அழித்தான்! [மண்புரைவையம்] - மண்மிக்கபூமி. [இடந்தவராகற்கு]-பிறருடைய ஸ்வரூபஸித்த்யர்த்தமாகத் தன்னை அழிய மாறுமவன். ''மானமிலாப்பன்றியாந்தேசு'' என்னக் கடவதிறே. மண்மிகுதி சொல்லிற்று - எடுக்கையில் அருமை தோற்றுகைக்காக. [தெண்புனற்பள்ளி] - தெளிந்தபுனலை யுடைத்தான ஏகார்ணவத்தைப் படுக்கையாக வுடையவன். முதலிலே ஸ்ருஷ்ட்யுந்முகனாய் ஸ்வச்சமான நீரையுடைய ஏகார்ணவத்திலே ஜகத்ரக்ஷணோபாயசிந்தைபண்ணிக்கொண்டு கண்வளர்ந்தருளுமவன் என்கை. [தேவபிரானுக்கு] - ப்ரஹ்மாதிகளுக்கு ஸ்ருஷ்ட்யாத்யுபகாரகனானவனுக்கு என்னுதல்; அயர்வறுமமரர்களதிபதி கிடீர் ஒருவர் இல்லாதாப்போலே ஸ்ருஷ்ட்யுந்முகனாய் இருக்கிறன் என்னுதல். [என்கண்புனை கோதை] - கண்டார்கண்களை ஆபரணமாகவுடைய மயிர்முடி, அதாகிறது - கண்டார்க்கு வைத்த கண் வாங்கவொண்ணாதபடி கண்ணைப் பிணிக்கவற்றாயிருக்கை. ''கண் என்று - பீலிக்கண்ணாய், அத்தைப்புனைந்த கோதை என்று, ஜாத்யுசிதமான ஆபரணம்'' என்றான் ஒருதமிழன். [இழந்தது கற்பே] - ஸர்வர்க்கும் ஜ்ஞாநப்ரதனான தனக்குங்கூட அறிவுகொடுக்குமவன் அறிவைக் கிடீர் இழந்தது! கற்பு - கல்வி; அதாவது - ஜ்ஞாநம்.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. வேதப்ரதாநம் முதலான உபகாரங்களைப் பண்ணினவனுக்கு என்மகள் கற்பிழந்தாளென்கிருள்.

[பண்புடை வேதம்] - ஈச்வரனை உள்ளபடியே காட்டித்தரும் கீர்மையை யுடைய வேதம். [பயந்த] - ஸாபத்ப்ரபுத்தந்யாயத்தாலே ப்ரஹ்மாவை யோதுவிக்கை. [பரனுக்கு] - *யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோ வை வேதாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை* என்கிறபடியே - ப்ரஹ்மாவுக்கு வேதசக்ஷுஸ்ஸைக் கொடுக்கையாலும், வேதைகஸமதிகம்யனுகையாலும் ஸர்வஸ்மாத் பரனானவனுக்கு. அறிவிழந்தார்க்கு அறிவு கொடுக்குமவன்கிடீர் இவளறிவை அழித்தான். [மண்புரைவையம்] - மண்மிக்கபூமி. [இடந்தவராகற்கு]-மண்ணோடு விண்ணோடு

வாசியற, தன்முகேந ரக்ஷித்தபடி. பிறருடைய ஸ்வரூபஸித்த்யர்த்தமாகத் தன்னையழிய மாறுமவன். அழிவுக்கிட்ட வடிவுக்கு ஆலத்திவழிக்க வேண்டும்படியிறே இருப்பது. "மானமிலாப் பன்றியாந்தேசு" என்னக்கடவதிறே. மண்மிசுதிசொல்லிற்று - எடுக்கையில் அருமை தோற்றுகைக்காக. [வராகற்கு] - அல்லாதரக்ஷணம்போலன்றியே முக்யமான ரக்ஷணம் இதிறே எல்லார்க்கும் ஏற; "எயிற்றிடை மண்கொண்ட எந்தை யிராப்பக லோதுவித் தென்னைப் பயிற்றிப் பணிசெய்யக் கொண்டான்" என்று இவளோட்டையார்க்கு ஜ்ஞாநப்ரதாநம்பண்ணினவன் இவளை அறிவழித்தான். [தெண்புனற்பள்ளி] - தெளிந்த புனலையுடைய ஏகார்ணவத்தைப் படுக்கையாக வுடையவன். அழிந்த ஜகத்தை ஸ்ருஷ்டித்து, ஸ்ருஷ்டரான சேதநர்க்கு அறிவுகொடுக்கக் கிடக்கிறவனுக்கு. ஸத்தையே பிடித்து உண்டாக்கி அறிவு கொடுக்கக் கடவ அவன்கிடீர் உண்டான அறிவை வாங்கிக்கொள்ளுகிறான்! [எம்தேவ பிரானுக்கு] - ப்ரஹ்மேசாநாதிகளுக்கும் உபகாரகனானவனுக்கு. "சச்வரோzஹம்" என்றிருந்தாளாகில் அறிவிழக்கவேண்டாகிடீர்! [என்கண்புனைகோதை] - கண்டார்கண்கள் பிணிப்புண்கையாலே, அவற்றை ஆபரணமாகவுடைய மயிர்முடியை யுடையவள். அதாவது - வைத்த கண் வாங்கவொண்ணாதிருக்கை. கண்களுக்கு விஷயம் தலையாய்விட்டது. [இழந்தது கற்பே] - ஸர்வர்க்கும் ஜ்ஞாநப்ரதனான தனக்குங்கூட அறிவுகொடுக்கும் இவள் அறிவைக் கிடீர் இழந்தது, *அபிஜ்ஞா ராஜதர்மாணாம்*. கற்பு - கல்வி, அதாவது - ஜ்ஞாநம்.

கற்பகக்காவன நற்பலதோளற்கு*
பொற்சுடர்க்குன்றன்ன பூந்தண்முடியற்கு*
நற்பலதாமரை நாண்மலர்க்கையற்கு*
என்விற்புருவக்கொடி தோற்றதுமெய்யே. (6)

ஒ.—ஆறும்பாட்டில், ஏகார்ணவசாயியான எம்பெருமானுடைய திவ்யாவயவஸௌந்தர்யத்திலே அகப்பட்டு என்பெண்பிள்ளை தன்னுடைய மெய்யிழந்தாள் என்கிறாள். [கற்பகக்காவென்று தொடங்கி] - ஒருசாயல் கற்பகச்சோலைபோலேயாய் அவ்வளவன்றிக்கே நன்றான பல திருத்தோள்களையுடையனும் ஒளியை யுடைய பொன்மலைபோலேயாய் அழகியதாய்த்திருமுடிக்கு அநுகூலமான திருவபிஷேகத்தை உடையவனுக்கு. திருவபிஷேகம் - ஸர்வாபரணங்களுக்கும் உபலக்ஷணம். [நற்பலவென்று தொடங்கி] - அழகியதாய்ப் பலவாய்ச் செவ்வித்தாமரைப்பூப்போலே யிருக்கிற திருக்கைகளை யுடையவனுக்கு வில் போலேயிருக்கிற புருவத்தையுடைய என்னுடைய பெண்பிள்ளை உடம்பு இழந்தாள்.

இ.—ஆறும்பாட்டில், ஏகார்ணவசாயியானவனுடைய ஸௌந்தர்யத்திலே அகப்பட்டு இவள் தன்னுடம்பை இழந்தாள் என்கிறாள்.]கற்பகம் இத்யாதி] - ஒரு சாயை கற்பகச் சோலை போலேயாய், அவ்வளவன்றிக்கே விலக்ஷணமான தோள்களை உடையவனுக்கு. ஒளியையுடைய பொன்மலைபோலேயாய், தர்சநீயமாய்த் திருமுடிக்கு அநுகூலமான திருவபிஷேகத்தை யுடையவனுக்கு. பூவென்று-மாலைகளாலே அலங்க்ருதம் என்றுமாம். இது-ஸர்வாபரணங்களுக்கும் உபலக்ஷணம். [நற்பலவித்யாதி] - நன்றாய்ப் பலவாய்ச் செவ்வித்தாமரைப்பூப்போலேயிருக்கிற திருக்கையை யுடையவனுக்கு. [என்விற்புருவக்கொடி] வில்போலே இருக்கிற புருவத்தை உடைய என்பெண். ப்ரஹ்மாஸ்த்ரத்தைக்கொண்டு முடிந்துகிடப்பாரைப்போலே, ஜயஹேதுவான பரிகரத்தைக்கொண்டுகிடீர் தோற்றது. [தோற்றதுமெய்யே] - "ஊர்த்த்வம் மாஸாந்ந ஜீவிஷ்யே" என்னும்வடிவைக்காட்டி, "நஜீவேயம் க்ஷணமபி" என்னப்பண்ணும் வடிவைக்கிடீர் கொண்டது!

ஈடு.—ஆறும்பாட்டு. ஏகார்ணவசாயியானவனுடைய அவயவஸௌந்தர்யத்திலே அகப்பட்டு இவள் தன்னுடைய மெய் இழந்தாளென்கிறாள்.

[கற்பகக்காவித்யாதி] - தன் அவயங்களைக் காட்டி இவள் அவயவங்களைக் கொண்டான். கற்பகச்சோலைபோலேயாய், அவ்வளவன்றியே விலக்ஷணமான பல திருத்தோள்களையுடைய

வனுக்கு. [பொற்சுடரித்யாதி] - ஒளியையுடைய பொன்மலைபோலேயாய் தர்சனீயமாய்த் திருமுடிக்கு அநுரூபமான திருவபிஷேகத்தையுடையவனுக்கு. பூவென்று மாலைகளாலே அலங்க்ருதமென்றுமாம். இது ஸர்வாபரணங்களுக்கும் உபலக்ஷணம். [நற்பலவித்யாதி] - நன்றாய்ப் பலவாய்ச் செவ்வித்தாமரைப்பூப்போலே யிருக்கிற திருக்கைகளையுடையவனுக்கு. [என்விற்புருவக்கொடி] - வில்போலேயிருக்கிற புருவத்தையுடைய என்பெண். (கொடிபோலே யிருக்கிறவள்) ப்ரஹ்மாஸ்த்ரத்தைக்கொண்டு பட்டுக்கிடப்பாரைப்போலே, விஜயஹேதுவான பரிகரத்தைக்கொண்டு இவர் தோற்றது! [தோற்றதுமெய்யே] - *உர்த்வம்மாஸாந்நஜீவிஷ்யே* என்னப்பண்ணும் வடிவைக் காட்டி, *நஜீவேயம் க்ஷணமபி* என்னப்பண்ணும் வடிவைக் இவர் கொண்டது. அவிதேயசரீரையானுள் என்று கருத்து.

மெய்யமர்பல்கலன் நன்கணிந்தானுக்கு*
பையரவினணைப் பள்ளியினானுக்கு*
கையொடுகால்செய்ய கண்ணபிரானுக்கு* என்
தையலிழந்தது தன்னுடைச்சாயே. **(7)**

ஒ.—ஏழாம்பாட்டில், க்ஷீரார்ணவசாயியான எம்பெருமானுடைய ஆபரண சோபையிலேயகப்பட்டு என்பெண்பிள்ளை தன்னுடைய லாவண்யத்தை இழந்தாள் என்கிறாள் [மெய்யென்று தொடங்கி] - திருமேனிக்குச்சேர்ந்திருந்துள்ள பல திருவணிகலன்களையும் அழகிதாகச் சாத்தியருளித் தன்னுடைய ஸ்பர்சத்தாலே பணம்விரித்திருக்கிற திருவனந்தாழ்வான்மேலே அவ்வொப்பனை நிறம்பெறும்படி கண்வளர்ந்தருளினவனுக்கு. [கையொடுகால்செய்ய கண்ணபிரானுக்கு] - கறுத்ததிருநிறத்திலே பகைத்தொடையாய்ச் சிவந்திருந்துள்ள திருக்கைகள்திருவடிகள்முதலான திவ்யாவயவங்களையுமுடையனாய் அநுக்ரஹசீலனான க்ருஷ்ணனுக்கு. லாவண்யமாவது - ஒளி.

இ.—ஏழாம்பாட்டில், க்ஷீரார்ணவசாயியுடைய ஆபரணசோபாதிகளிலே அகப்பட்டு இவள் லாவண்யத்தை இழந்தாள் என்கிறாள். [மெய்யமர் பல்கலன்] - திருமேனியிலே பூத்தாப்போலே பொருந்தியிருந்துள்ள கிரீடாதிநூபுராந்தமான திருவாபரணங்கள். [நன்கணிந்தானுக்கு] - பூணவல்லபடியாலே வந்த அழகு. [பையரவினணை] - ஸ்வஸ்பர்சத்தாலே விகஸிதமான பணங்களை யுடையனாய், நாற்றம் மென்மை குளிர்த்தி இவற்றை ப்ரக்ருதியாக வுடையவனைப் படுக்கையாக உடையனாய் அதிலே கண் வளர்ந்தருளினவனுக்கு. இதுவும் ஓர் ஆபரண விசேஷம்போலேகாணும். கீழ்ச்சொன்ன ஒப்பனை நிறம் பெறும் படுக்கையிறே. [கையொடுகால் இத்யாதி] - திருமேனிக்குப் பரபாகமான சிவப்பையுடைய திருக்கைகளையும் திருவடிகளையுமுடையனாய் உபகாரசீலனான ஸௌலப்யனுக்கு. திருவனந்தாழ்வானோட்டைச் சேர்த்தியாலே யாயிற்று, அவயவங்கள் தொடக்கமானவை பூர்ணமாயிற்று. [என்தையல் இத்யாதி] - என்பெண்பிள்ளை இழந்தது, மாணிக்கத்தின் ஒளிபோலே தனக்கு நிறங்கொடுக்கும் லாவண்யத்தை. கழற்றிப்பூணும் ஆபரணத்தைக்காட்டிக் கழற்றவொண்ணாத ஆபரணத்தைக் கொண்டான். தையல் - பெண், சாய்-லாவண்யம்.

ஈடு.—ஏழாம்பாட்டு. க்ஷீரார்ணவசாயியுடைய ஆபரணசோபாதிகளிலே அகப்பட்டு இவள் லாவண்யத்தை யிழந்தாளென்கிறாள்.

[மெய்யமர்பல்கலன்] - திருமேனியிலே பூத்தாப்போலே பொருந்தியிருந்துள்ள கிரீடாதி நூபுராந்தமான ஆபரணங்கள். [நன்கணிந்தானுக்கு] - பூணவல்லபடியாலே வந்த அழகு. [பையரவித்யாதி] - ஸ்வஸ்பர்சத்தாலே விகஸிதமான பணங்களையுடையவனாய், நாற்றம் மென்மை குளிர்த்தி இவற்றை ப்ரக்ருதியாகவுடையவனைப் படுக்கையாக உடையவனாய், அதிலே கண்வளர்ந்தருளுகிறவனுக்கு: இதுவும் ஓர்ஆபரணவிசேஷம் போலேகாணும்: அந்தரங்கமான ஆபரணமிறே. கீழ்ச்சொன்ன ஒப்பனை நிறம்பெறும் படுக்கையிறே. [கையித்யாதி] - திருமேனிக்குப் பரபாகமான சிவப்பையுடைய திருக்கைகளையும், திருவடிகளையுமுடையவனாய்

உபகாரசீலனான க்ருஷ்ணனுக்கு. திருவாய்மொழிக்கு இத்தனையும் சேர்த்தியாயிற்று அவய வங்கள் தொடக்கமானவை பூர்ணமாயிற்று. [என்தையலித்யாதி] - என்பெண்பிள்ளையிழந்தது மாணிக்கத்தின் ஒளிபோலே தனக்கு நிறங்கொடுக்கும் லாவண்யத்தை; கழற்றிப் பூணும் ஆபரணத்தைக்காட்டி, கழற்றவொண்ணாத ஆபரணத்தைக் கைக்கொண்டான். தையலென் பது-பெண்பேர். சாய்-லாவண்யம்.

சாயக்குருந்தம் ஒசித்ததமியற்கு*
மாயச்சகடம் உதைத்தமணாளற்கு*
பேயைப்பிணம்படப் பாலுண்பிரானுக்கு*என்
வாசக்குழலி இழந்ததுமாண்பே. (8)

ஒ.—எட்டாம் பாட்டில், ப்ரதிகூல நிரஸநபரம்பரைகளை உடையனான க்ருஷ்ணனுக்கு என் பெண்பிள்ளை மாண்பையிழந்தாள் என்கிறாள். [சாயக்குருந்தம் ஒசித்ததமியற்கு] - அஸுரவடிவான குருந்தை வேரோடே சாய்ந்து விழும்படி தனியேநின்று முறித்து ஆஸுரமான க்ருத்ரிமசகடத்தைப் பொடியாம்படி உதைத்த இச்செயலாலே இவள் தனக்கேயாம்படி பண்ணிக்கொண்டவனுக்கு. [பேயை யென்று தொடங்கி] - பூதனையைப் பிணமாய் விழும்படி முலைப்பால் உண்ண வல்ல மஹோபகாரகனுக்கு. [என்வாசக்குழலி இழந்ததுமாண்பே] - நைஸர்க்கிகபரிமளமான குழலையுடைய என்னுடைய பெண் பிள்ளை தன்னுடைய மாட்சியை இழந்தாள். அதாவது - ஸ்த்ரீத்வம்.

இ.—எட்டாம்பாட்டில், க்ருஷ்ணனுடைய விரோதிநிரஸநங்களுக்குத் தோற்று இவள் தன்ஸ்த்ரீ த்வத்தை இழந்தாள் என்கிறாள். [சாயக்குருந்தமொசித்த] - அஸுராவிஷ்டமான குருந்தத்தை வேரோடே சாய்ந்து விழும்படி முறித்த. [தமியற்கு] - நம்பி மூத்தபிரானை ஒழியவே தனிவீரம் செய்தவனுக்கு. தான் தனிமையிலே சென்று உதவக்காணும் இவளுக்கு நினைவு. [மாயச்சகடமுதைத்த] - க்ருத்ரிம சகடம் என்னுதல் ''தளர்ந்தும் முறிந்தும்'' என்கிறபடியே சகடம் உருமாயும்படி என்னுதல். [மணாளற்கு] - ஸ்ரீ ஜநகராஜன்திருமகளுக்கு தநுர்ப்பங்கம் போலே இவ்வபதானத்தைக் காட்டியாயிற்று இவளை அநந்யார்ஹையாக்கிக் கொண்டது. [பேயைஇத்யாதி] - சூர்பணகாவைப்போலே ஓர் அநர்த்தத்தை விளைக்க உயிரோடேவிடாதே, பூதனையைப் பிணமாய்விழும்படி முலைப்பாலுண்ணவல்ல மஹோப காரகனுக்கு. [என்வாசக்குழலி] - நைஸர்க்கிகபரிமளமான குழலையுடைய என்பெண். அவளை ''ஸர்வகந்த:'' என்று சொல்லுகைக் கடியான குழல் என்கை ''வாசஞ்செய் பூங்குழலா''ளிறே. [இழந்தது மாண்பே] - தன் பும்ஸ்த்வப்ரயுக்தமான செயல்களையெல்லாம் காட்டி இவளுடைய ஸ்த்ரீத்வத்தைக் கொண்டான். மாண்பு - மாட்சிமை, ஸ்த்ரீத்வம்.

ஈடு.—எட்டாம் பாட்டு. க்ருஷ்ணனுடைய விரோதிநிரஸநத்துக்குத் தோற்று இவள் தன்னுடைய ஸ்த்ரீத்வத்தை இழந்தாள் என்கிறாள்.

[சாயக்குருந்தமொசித்ததமியற்கு] - அஸுராவேசத்தாலே தழைத்துப் பூத்துநின்ற குருந்தத்தை வேரோடே சாய்ந்துவிழும்படி முறித்த தனியற்கு. நம்பி மூத்தபிரானை ஒழியவே தனிவீரஞ்செய்தவற்கு. தான் அத்தனிமையிலே சென்று உதவக்காணும் இவளுக்கு நினைவு. [மாயச்சகடமுதைத்தமணாளற்கு] - க்ருத்ரிமசகடமென்னுதல்; ''தளர்ந்தும் முறிந்தும் சகட அசுரருடல் வேறாப்பிளந்துவீய'' என்கிறபடியே சகடம் உருமாயும்படி என்னுதல். [மணா ளற்கு] - ஸ்ரீஜநகராஜன் திருமகளுக்கு தநுர்ப்பங்கம்போலே, இவ்வபதாநத்தைக் காட்டியா யிற்று இவளை அநந்யார்ஹையாக்கிற்று. [பேயைப்பிணம்படப்பாலுண்பிரானுக்கு] - சூர்ப் பணகாவைப்போலே ஓர் அநர்த்தத்தை விளைக்க உயிரோடேவிடாதே, பூதனையைப் பிணமாய் விழும்படி முலையுண்ணவல்ல மஹோபகாரகனுக்கு. [என்வாசக்குழலி] - நைஸர்க்கிக பரிமள மான குழலையுடைய என்பெண்பிள்ளை. அவளை *ஸர்வகந்த:* என்று சொல்லுகைக்கு அடி

இத்தலையையிட்டு. வாசஞ்செய்பூங்குழலாளிறே. [இழந்ததுமாண்பே] - தன் பும்ஸ்த்வப்ரயுக்தமான செயல்களையெல்லாங்காட்டி, இவளுடைய ஸ்த்ரீத்வத்தைக்கொண்டான். மாண்பு - மாட்சிமை. ஸ்த்ரீத்வம், அழகு என்றுஞ் சொல்லும் மாண்பை.

மாண்பமைகோலத்து எம்மாயக்குறளற்கு*
சேண்சுடர்க்குன்றன்ன செஞ்சுடர்மூர்த்திக்கு*
காண்பெருந்தோற்றத்து எம்காகுத்தநம்பிக்கு*
என்பூண்புனைமென்முலை தோற்றதுபொற்பே. (9)

ஒ.—ஒன்பதாம்பாட்டில், ச்ரீவாமநாத்யநேகாவதாரங்களைப்பண்ணியிருந்துள்ள எம்பெருமானுடைய திருவழகிலே அகப்பட்டு என்பிள்ளை தன்னுடைய பொற்பை இழந்தாள் என்கிறாள். [மாண்பென்றுதொடங்கி] - அழகுசமைந்த ஒப்பனையையுடையவனும் அத்யாச்சர்யபூதனும் ஆச்ரிதபவ்யனுமான ஸ்ரீவாமனனும் உயர்ந்திருந்துள்ளசுடர்க்குன்றுபோலேயாய்ச் செஞ்சுடரையுடையவடிவையுடையவனுக்கு. [காண்பெருந்தோற்றத்தெங்காகுத்தநம்பிக்கு] - ஸ்பருஹணீயமாய் அபரிச்சேத்யமான தோற்றத்தையுடையனும் ஸர்வகுணஸம்பந்நனும் ஆச்ரிதபரதந்த்ரனுமான காகுத்ஸ்தனுக்கு. ''ஜந்மராமஸ்ய ஸுமஹத்'' என்கிற அவதாரமஹத்வமாகவுமாம். [என்பூணென்று தொடங்கி] - ஆபரணங்களாலே அலங்க்ருதையாய், அதுவும் பொருந்த ஸௌகுமார்யத்தை உடையளான என்னுடைய மகள் தன்னுடைய அழகை இழந்தாள்.

இ.—ஒன்பதாம் பாட்டில், ஸ்ரீவாமநாத்யநேகாவதாரங்களில் அழகிலே ஈடுபட்டு இவள் தன் அழகை இழந்தாள் என்கிறாள். [மாண்பு இத்யாதி]- அழகு சமைந்த ஒப்பனையையுடையவனும், ஆச்சர்யமான வேஷத்தையுடைய ஸ்ரீவாமநனுக்கு. மாண்பு - அழகு. மாயம்என்று - வஞ்சனமாகவுமாம். [சேண்சுடர் இத்யாதி] - கையிலே நீர்விழுந்தவாறே வளர்ந்தபடி. ஓங்கிப்புகரையுடைய மலைபோலே சிவந்த ஒளியையுடைய வடிவையுடையவனுக்கு. [காண்பெருந்தோற்றத்து] - கண்ணுக்கினிதாய் அபரிச்சேத்யபோக்யமான ஸங்கிதியைஉடையவன் என்னுதல்; ''ஜந்ம ராமஸ்ய ஸுமஹத்'' என்கிற அவதாரமாதல். [எம்காகுத்தநம்பிக்கு] - குணபூர்ணனான சக்ரவர்த்திதிருமகனுக்கு. [என்பூண்புனைமென்முலை] - பூண் என்று ஆபரணமாய், அத்தாலே அலங்க்ருதமாய் விரஹஸஹமல்லாதமுலையையுடையவள். [தோற்றது பொற்பே] - பொற்புஎன்று அழகு. பூண்புனைமென்முலை என்கையாலே, ஒப்பனையால்வந்த அழகை இழந்தாள். அவனைத் தோற்பிக்கும் முலையை உடையவள் கிடீர்தோற்றாள்!

ரு.—ஒன்பதாம்பாட்டு. ஸ்ரீவாமநாத்யநேக அவதாரங்களிலே யகப்பட்டு இவள் தன்னழகை இழந்தாளென்கிறாள்.

[மாண்பு இத்யாதி] - அழகுசமைந்த ஒப்பனையையுடையனாய், ஆச்சர்யமான வேஷத்தையுடைய ஸ்ரீவாமநனுக்கு. மாண்பு - அழகு. மாயமென்று-வஞ்சனையாகவுமாம். [சேண்சுடர் இத்யாதி] - அடியிலே நீர்வார்த்துக்கொடுத்தவாறே வளர்ந்தபடி. ஓங்கிப்புகரையுடைய மலைபோலே அழகிய ஒளியையுடைய வடிவையுடையவனுக்கு. [காண்பெருந்தோற்றத்து] - தோற்றம் - அழகு. கண்ணுக்கினியதாய் அபரிச்சேத்யபோக்யமான ஸந்நிவேசத்தையுடைய என்னுதல், *ஜந்ம ராமஸ்ய ஸுமஹத்* என்கிற அவதாரமஹத்வமாதல். [எம் காகுத்த நம்பிக்கு] - குணபூர்ணனான சக்ரவர்த்திதிருமகனுக்கு. ''தயரதற்கு மகன்தன்னை யன்றி மற்றிலேன்'' என்னுமவரிறே. *குணைர்தாமகரோ மஹாந்*. [என்பூண்புனைமென்முலை] - ஆபரணத்தாலே அலங்க்ருதமாய், விரஹஸஹமன்றிக்கேயிருக்குமுள்ள முலையையுடையவள். [தோற்றதுபொற்பே] - பொற்பென்று அழகு. ''பூண்புனைமென்முலை'' என்கையாலே, ஒப்பனையால்வந்த அழகையிழந்தாள். ''மலராள் தனத்துள்ளான்'' என்கிறபடியே அவனைத் தன் முலையழகாலே புறம்பொன்று அறியாதபடிபண்ணி புஜிக்குமவள்கிடீர் தோற்றாளென்கை.

பொற்பமைநீண்முடிப் பூந்தண்டுழாயற்கு*
மற்பொருதோளுடை மாயப்பிரானுக்கு*
நிற்பனபல்லுருவாய் நிற்குமாயற்கு *என்
கற்புடையாட்டி இழந்ததுகட்டே. **(10)**

ஒ.—பத்தாம்பாட்டில், ஸ்ரீவைகுண்ட்டநாதனும் க்ருஷ்ணத்யவதாரங்களைப்பண்ணியும் ப்ரதிகூலநிரஸநங்களைப்பண்ணியும் ஜகதாகாரனும் இருக்கிற எம்பெருமானுக்கு என்மகள் கட்டிழந்தாள் என்கிறாள். [பொற்பென்று தொடங்கி] - மிகவும் அழகிதாய் ஸர்வைச்வர்யஸூசகமான திருவபிஷேகத்தையும் திருக்குழலில் ஸ்பர்சத்தாலேபூத்து ச்ரமஹரமான திருத்துழாய்மாலையையும் உடையனும், பூசினசந்தனமழியாதபடி மல்லரோடு பொருததோளையுடையவனும் இப்படி அத்யாச்சர்யமான மஹோபகாரங்களைப்பண்ணுமவனுக்கு. [நிற்பனவென்று தொடங்கி] - ஸ்த்தாவரஜங்கமாத்மகமான ஜகத்தைத் தனக்குசரீரமாகவுடையனும்நிற்கிற க்ருஷ்ணனுக்கு மிகவும் கற்புடையவளாயிருக்கிற என் மகள் எல்லாம் இழந்தாள். லோகயாத்ரையை இழந்தாள் என்றுமாம்.

இ.—பத்தாம்பாட்டில், பரத்வமென்ன! அவதாரமென்ன! ஜகதாகாரதையென்ன! இவற்றை அடங்கக்காட்டி இவளுடைய எல்லாவற்றையும் கொண்டான் என்கிறாள். [பொற்பு இத்யாதி] - அழகு சமைந்திருப்பதாய் ஆதிராஜ்ய ப்ரகாசகமான திருவபிஷேகத்தை உடையனும், அதின்மேலே ஐச்வர்யஸூசகமான திருத்துழாய் மாலையையும் உடையவனுக்கு. [பூந்தண் துழாய்] - ஸ்வஸ்பர்சத்தாலே பூத்து ச்ரமஹரமாயிருக்கை. வந்தவதரித்து, மற்பொருதோளை உடையவன். [மாயப்பிரானுக்கு] - சாத்தினசாந்து அழியாதபடி மற்பொருதவாச்சர்யம். "சாவத்தகர்த்த சாந்தணிதோள்சதுர னிறே" மற்றும் ஆச்சர்யமான உபகாரங்களைப்பண்ணினவன் என்றுமாம். [நிற்பன இத்யாதி] - ஸ்த்தாவரஜங்கமாத்மக ஸகலபதார்த்தங்களுக்கும் அந்தர்யாமியாய் நிற்கிற ஆச்சர்யபூதனுக்கு. [என்கற்புடையாட்டி] - மிக்க அறிவையுடைய என்மகள். "தத் தஸ்ய ஸத்ருசம்பவேத்" என்றிருக்கும் அறிவிறே. [இழந்தது கட்டே] - தனக்குள்ளவற்றை நேராகக்காட்டி, இவள்பக்கல் உள்ளவற்றை நேராகக்கொண்டான். கட்டென்று - மர்யாதையாய், அத்தைஇழந்தாள் என்றுமாம்.

ஈடு.—பத்தாம்பாட்டு. பரத்வமென்ன, அவதாரமென்ன ஜகதாகாரதையென்ன!! இவற்றையடங்கக்காட்டி இவளுடையது எல்லாவற்றையும் கொண்டான் என்கிறாள்.

[பொற்பமைஇத்யாதி] - அழகுசமைந்திருப்பதாய் ஆதிராஜ்யப்ரகாசகமான திருவபிஷேகத்தின்மேலே, ஐச்வர்யஸூசகமான திருத்துழாய்மாலையை யுடையவனுக்கு. [பூந்தண் துழாய்] - ஸ்வஸ்பர்சத்தாலே பூத்து ச்ரமஹரமாயிருக்கை. [மற்பொருஇத்யாதி] - வந்தவதரித்து மற்பொருதோளையுடையனாயிருக்கை. [மாயப்பிரானுக்கு] - சாத்தின சாந்தழியாதபடி மல் பொருத ஆச்சர்யம். [பிரானுக்கு] - ஸ்ரீமதுரையிற்பெண்களுக்கு அழகை உபகரிக்கை. "சாவத்தகர்த்த சாந்தணிதோள்சதுர"னிறே. மற்றும் ஆச்சர்யமான உபகாரங்களைப் பண்ணினவனுக்கு என்றுமாம். [நிற்பன இத்யாதி]- ஸ்த்தாவரஜங்கமாத்மகமான ஸகலபதார்த்தங்களுக்கும் அந்தர்யாமியாய் நிற்கச்செய்தே, தத்கததோஷைரஸம்ஸ்ப்ருஷ்டனுமாய்நிற்கிற ஆச்சர்யபூதனுக்கு. [என்கற்புடையாட்டி] - மிக்கவறிவையுடைய என்மகள் *தத் தஸ்ய ஸ்த்ருசம்பவேத்* என்றிருக்கும் அறிவிறே. [இழந்ததுகட்டே] - தனக்குள்ளவற்றை நேராகக்காட்டி இவள் பக்கல் உள்ளவற்றை நேராகக்கொண்டான். கட்டு - கட்டடங்க. கட்டென்று மர்யாதையாய் லோக மர்யாதையை இழந்தாளென்றுமாம்.

கட்டெழில்சோலை நல்வேங்கடவாணனை*
கட்டெழில்தென்குருகூர்ச் சடகோபன்சொல்*
கட்டெழிலாயிரத்து இப்பத்தும்வல்லவர்*
கட்டெழில்வானவர் போகமுண்பரே. (11)

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி வல்லவர்கள் அயர்வறுமமரர்களுடைய போகத்தை புஜிப்பார் என்கிறார். நாலுபாதத்திலும், கட்டு என்கிற சப்தம் - ஸாகல்யபரம். நாலுபாதத்திலும், கட்டுக்குப்பொருள்:— பரிமளமும், காவலும், தொடையும், பெருமையும் என்றுமாம்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லவர்கள், நித்யஸூரிகள்போகத்தைப் புஜிக்கப்பெறுவர் என்கிறார். [கட்டெழில் இத்யாதி] - கடி என்றத்தை கட்டு என்று வலித்ததாய், பரிமளத்தையுடைய நல்லசோலை. [நல்வேங்கடம்]-சேஷசேஷிகள் இருவர்க்கும் உத்தேச்யமான திருமலை. [வாணனை] - நிர்வாஹகனை. திருவேங்கடமுடையானையாயிற்றுக் கவிபாடிற்று; "திருவேங்கடத் தென்னானை யென்னப்பனெம்பெருமானுளனாக—என் நாவிலின்கவி யானொருவர்க்கும் கொடுக்கிலேன்" என்றிருக்குமவரிறே. [கட்டெழில்தென்குருகூர்]-கட்டுஎன்று அரண், அரணையுடைய திருநகரி. [கட்டெழிலாயிரம்] - கட்டு என்று தொடை; அழகிய தொடையை உடைத்தாகை. [கட்டெழில்வானவர்] - பெரிய வானவர். போகவிசேஷணமாகவுமாம். ஸம்ஸாரத்தில் போகம் கர்மநிபந்தநமாகையாலே அல்பமாய் அஸ்திரமாய் இருக்குமிறே. ஸ்வரூபாநுரூபமாகையாலே ஸம்ருத்தமாய் நித்யமாயிருக்கை. நாலடியிலும், கட்டு என்கிற சப்தம் ஸாகல்யபரமாகவுமாம். நீர்மைக்கு எல்லையான திருமலை ஆச்ரயணீயஸ்த்தலம், மேன்மைக்கு எல்லையான பரமபதம் அநுபவஸ்த்தலம்; "ஒன்றியாக்கைபுகாமை யுய்யக் கொள்வான் நின்ற வேங்கட"மிறே.

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழிவல்லவர்கள் நித்யஸூரிகள் போகத்தை புஜிக்கப் பெறுவரென்கிறார்.

[கட்டெழில் இத்யாதி] - கடியென்கிறஇத்தை கட்டென்றுவலித்ததாய், பரிமளத்தை யுடைத்தான நல்ல சோலை. [நல்வேங்கடம்] - சேஷசேஷிகள் இருவர்க்கும் உத்தேச்யமான திருமலை. [வாணனை] - நிர்வாஹகனை. திருவேங்கடமுடையானையாயிற்றுக் கவிபாடிற்று. "திருவேங்கடத்தென்னானை என்னப்பனெம்பெருமானுளனாக-என்னாவிலின்கவி யானொருவர்க்கும் கொடுக்கிலேன்" என்றிருக்குமவரிறே. [கட்டெழில்தென்குருகூர்] - கட்டென்று அரண்; அரணையுடைய திருநகரி. [கட்டெழிலாயிரம்] - கட்டென்று தொடை; அழகியதொடையை யுடைத்தாகை. [கட்டெழில்வானவர்] - (பெரியராய்) கட்டடங்க நல்லரான நித்யஸூரிகள். போகவிசேஷணமாகவுமாம். ஸம்ஸாரத்தில் போகங்கள் கர்மநிபந்தநமாகையாலே அல்பமாய் அஸ்த்திரமாயிருக்குமிறே, ஸ்வரூபாநுரூபமாகையாலே ஸம்ருத்தமாய் நித்யமாயிருக்கை. நாலடியிலும், கட்டென்கிற சப்தம் ஸாகல்யபரமாகவுமாம். நீர்மைக்கு எல்லையான திருமலை ஆச்ரயணீயஸ்த்தலம்; மேன்மைக்கெல்லையான பரமபதம் அநுபவஸ்த்தாநம்; "ஒன்றியாக்கைபுகாமையுய்யக்கொள்வான் நின்றவேங்கடம்" இறே.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

ஏழாந்திருவாய்மொழி—உண்ணுஞ்சோறு - ப்ரவேசம்

ஒ.—ஏழாந்திருவாய்மொழியில், இப்படி அப்ரக்ருதிங்கதையான இப்பிராட்டி நெடும்போதோடு கூட வுணர்ந்து, பின்னையும் எம்பெருமானைக் காணப்பெறாமையாலே அவனையொழியத் தரிக்க மாட்டாமை, தன்பந்துக்கள்பக்கலிலும் க்ரீடோபகரணாதிகளிலும் அத்யந்த விமுகையுமாய், எம்பெருமானைக் கண்டல்லது தரிக்கமாட்டாமையாலே தன்மர்யாதைகளை அதிலங்கித்துத் தனியே திருக்கோளூரேறப்போக, சோகநித்ரைபோய் உணர்ந்துஇப்பிராட்டியைத் தன்மாளிகையிற் காணாத் திருத்தாயார், "இவள்திருக்கோளூரிலே போனாள்" என்று அத்யவஸித்து, இவள் இங்கிருக்கும் போதும் அவனாலே போதுபோக்கி யிருக்கும்படியும், அதி ம்ருதுப்ரக்ருதியாயிருக்கிற இவள் அவ்வூரிலே தனியே எங்ஙனேபோகக் கடவள்என்றும், அங்கேசென்றால் அவ்வூரையும் அவனையும் கண்டால் எங்ஙனே உடைகுலைப்படக்கடவள் என்றும் சொல்லாநின்றுகொண்டு, தன் பெண்பிள்ளையுடைய அவஸாதத்தாலும், அவளைத் தான்பிரிகையாலும் மிகவும் நோவுபட்டு சோகிக்கிறாள்.

இ.—ஏழாந்திருவாய்மொழியில், கீழ் மோஹங்கதையான பிராட்டி, "சிரேண ஸம்ஜ்ஞாம் ப்ரதிலப்ய" என்று காலமுணர்த்த உணர்ந்து, அநந்தரம் அவனைக்காணப்பெறாமையாலே, அவனைக் கண்டல்லது தரிக்கமாட்டாத தசைபிறந்து, பந்துக்களையும் தன்னுடைய லீலாபரிகரங்களையும் பொகட்டுத் தன்மர்யாதைகளையும் அதிலங்கித்துத் தனிவழியே திருக்கோளூரேறப்போனாள்; திருத்தாயார் "வளையிழந்தாள், நிறமிழந்தாள்" என்று கூப்பிட்டு சோகநித்ராவிஷ்டையாய்க் கிடந்தவள் உணர்ந்து, இவளைத் தன்மாளிகையில் காணாமையாலே "எங்கேபோனாள்" என்று விசாரித்து, இங்கிருந்தபோதும் அவனையே போதுபோக்கியிருக்கக் காண்கையாலே "திருக்கோளூரிலே போனாள்" என்று நிச்சயித்து, "ம்ருதுப்ரக்ருதியாய் அதின்மேலே விரஹதூர்ப்பலையா யிருக்கிற இவள், அவ்வூர் தனிவழியே எங்ஙனே போகிறாள்; சென்றால்தான் அவ்வூரையும் அவனையும் கண்டு எங்ஙனே உடைகுலையப்படுகிறாள்" என்று, தன்மகள் அவஸாதத்தாலும், தான் அவளைப்பிரிகையாலும் மிகவும் நோவுபட்டுக் கூப்பிடுகிறாள். இங்குப் பொருந்தாமையும், அங்குப்புக்கல்லது தரிக்கமாட்டாமையும், தனிவழியே போகையும், பழிக்கஞ்சாமையும், இவையிறே கீழில் திருவாய்மொழியிற் காட்டில் இதுக்கு ஏற்றம். அவனைப்பார்த்திலள், தன்னைப்பார்த்திலள், என்னைப்பார்த்திலள், தனிவழியே போய் இத்தையெல்லாம் கடலிலே கவிழ்த்தாள் என்கிறாள். "அற்பசாரங்களவை சுவைத்தகன்றொழிந்தேன்" என்று சப்தாதி விஷயங்களிலே கைகழியப்போந்தேன் என்றவர், பகவத்விஷயத்திலே கைகழியப்போனபடி சொல்லுகிறது. நித்யஸித்தருடைய யாத்ரை ஸம்ஸாரத்திலே இவர்க்குப் பிறந்தபடிசொல்லுகிறது.

ஈடு.—கீழில் திருவாய்மொழியிலே, மோஹித்துக் கிடக்கிற தன்மகளுடைய அவஸாதத்தைக்கண்ட திருத்தாயாரானவள், "அதுபோயிற்றது இது போயிற்றது" என்று அவன் திருநாமத்தைச் சொல்லிக்கூப்பிட்டு இவள்தானும் மோஹித்தாள்; திருநாம ப்ரஸங்கத்தாலே பெண்பிள்ளை உணர்ந்தெழுந்திருந்து புறப்பட்டுத் திருக்கோளூரேறப் போனாள்; திருத்தாயாரும் வாஸனையாலேயுணர்ந்து படுக்கையைப்பார்த்தாள்; வெறும்படுக்கையாய்க் கிடந்தது; இனி, இவள் என் வயிற்றிற்பிறப்பாலும், தன் ப்ரக்ருதியாலும், இங்கிருந்த நாள் தேஹயாத்ரை யிருந்தபடியாலும் இவள் திருக்கோளூரேறப் புறப்பட்டுப்போனாள் என்று அறுதியிடுகிறாள். வலயாதிகளெல்லாம் இழந்தாளாகில் இவள்தன்னை நமக்கிழக்கவேண்டா விறே என்றிருந்தாள், கீழ்த்திருவாய் மொழியில். இத் திருவாய்மொழியில் இவள்தன்னை யும் இழந்தோமென்று கூப்பிடுகிறாள். ஆளவந்தார்கோஷ்டியிலே "உண்ணுஞ்சோற்றிற் பிராட்டிக்கோ கள்வன்கொல்லிற் பிராட்டிக்கோ அஞ்சவேண்டுவது?" என்றுகேட்க, "இருவராய்ப் போனவர்களுக்கு வயிறெரிய வேணுமோ? தனிவழியே போனவளுக்கன்றோ வயிறெரியவேண்டுவது!" என்றிருந்த முதலிகள் சொல்ல, "அங்ஙனன்று காணுங்கோள்! இருவராய்ப் போனவர்களாகையாலே, இருவர்க்கும் அஞ்சவேணும்; தனியே போனவளுக்

கொரு பயமுண்டோ? என்றருளிச்செய்தார். அதுக்கடி - இருவரும் இருவர்க்கும் ஊமத்தங்காயாய், கடித்ததும் ஊர்ந்ததும் அறியார்கள். இவள் அங்கே புக்கல்லது தரியாள் என்று கருத்து. "அன்னலம்பூங்குழனி யணியாலி புகுவர்கொலோ! அன்றியே, லங்காத்வாரத்திலே புகுவர்கொலோ!" என்றிறே அங்கு வயிறுபிடி. ஆனாலும், எங்கேனும்போகிலும் இருவராயல்லது இராது அங்கு; "தனியேபோன இவளென் படுகிறாளோ?" என்று மிகவும் நொந்து கூப்பிடுகிறாள் இவளுடைய திருத்தாயார்.

"அற்பசாரங்களவை சுவைத்தகன்றொழிந்தேன்" என்கிறபடியே "பகவத்கோஷ்டிக்கு இனி ஆளாகமாட்டாராகாதே!" என்னும்படி சப்தாதிகளிலேகைகழிந்தஇவர் "ஸம்ஸாரிகளுக்கு இனி ஆளாகமாட்டார்" என்னும்படி நாட்டாரோடு இயல்வொழிந்து கொள்ள மானாவின்ப வெள்ளத்தைப் புதிக்கக் கைகழிந்தபடி சொல்லுகிறது நரகாவஹமான விஷயத்தைப்பற்றிப் பிறர் அறியாமே போகக்கடவ இவர், ஸ்வரூபாநுரூபமான விஷயத்தைப்பற்றிப் பிறர் அறியாமே போம்படியாய் விழுந்தது. க்ஷுத்ரவிஷயத்தைப்பற்றிப் பழிக்கஞ்சாதே போகக்கடவவிவர், குணாதிக விஷயத்தைப்பற்றிப் பழிக்கஞ்சாதபடியானார். "என்னுடைமை புக்கவிடத்திலே நானும்போய்ப் புக்கல்லது நில்லேன்" என்கிறாள்; *லக்ஷ்மணேந கதாம் கதிம்* என்கிறபடியே. *ஸர்வாந் போகாந் பரித்யஜ்ய* - தான் பண்டு விரும்பியிருக்குமவற்றோடு பெற்றவர்களோடு வாசியறப் போகட்டுப்போனாள். *பரித்யஜ்ய* - "மீண்டும் இவற்றிலே நசை பண்ணும்" என்று தோற்றாதபடி விட்டாள். *பர்த்ருஸ்நேஹபலாத்க்ருதா* ஒரு விஷயத்தில் ஸ்நேஹமானது எல்லாவற்றையும் விடப்பண்ணுமாகாதே; ஸ்வவசத்தாலே போனாளன்று இவள் *அசிந்தயித்வா து:க்காநி* - விட்டவற்றை நினையாவிட்டால், போய்ப்புகுகிறவிடத்தில் இழுக்காகத்தான் நினையாநின்றாளோ? இவள் பெருமாளையொழியத் தன்னைக்காணில்றே து:க்காநுஸந்தானம் பண்ணவல்லளாவது. *ப்ரவிஷ்டா நிர்ஜ்ஜநம் வநம்* "போகத்துக்கு ஏகாந்தஸ்த்தலம்" என்னுமதுவேயிறே இவள் நெஞ்சில்பட்டது. *புத்ரத்வயவிஹீநம் தத்* சக்ரவர்த்தி, பிள்ளைகளிருவரையும் தேடிப் போர நொந்தான். *ஸ்நுஷயாச விவர்ஜ்ஜிதம்* - "மீண்டும் இவ்விடத்தை விரும்புவர்கள்" என்று நினையாதபடி குழைசரக்கறுத்துக்கொண்டு போனபடி. *அபச்யத் பவநம் ராஜா நஷ்டசந்த்ரமிவாம்பரம்* - நிலவோடும் நக்ஷத்ரதாராகணங்களோடுங்கூட சந்த்ரன் குடிவாங்கின ஆகாசம்போலே கிடந்தது. அப்படியேயாயிற்று இத்திருமாளிகை கிடக்கிறது. "நல்லதோர் தாமரைப்பொய்கை" இத்யாதிப்படியேயாயிற்று இவள்திருமாளிகை கிடக்கிறது. திருத்தாயாரும் இம்மாளிகையைக்கண்டு வெறுத்து, 'போகக்கடவதாகத் துணிந்தால் என்னையுங்கூட்டிக்கொண்டு போனலாகாதோ? தனிவழியே போவதே, நான் கூடப்போகாவிட்டா லவனுடனே கூடப்போகவும் பெறுதொழிவதே! இவள் தான் எங்ஙனே போகிறாளோ! நாடடங்க வாழ்வித்துக்கொண்டு போகிறாளோ! அங்கே புக்காலென் படுகிறாளோ! வழியிலுள்ளார் என் சொல்லுகிறார்களோ! அங்கே புக்கால் அவ்வூரிற் சோலைகளையும் அங்குள்ள நீர்நிலைகளையும் அவன்குணங்களையுங் கண்டு உகக்கிறாளோ! கண்டு சிதிலையாகிறாளோ! இதெல்லாம் தான் அங்கே சென்று புக்காலிறே! என்றாப்போலே மநோரதித்துக்கொண்டு, தன்னைப் பார்த்தல் எங்களைப்பார்த்தல் செய்யாதே, இத்தையெல்லாம் கடலிலே கவிழ்த்துப் போவதே!' என்று திருத்தாயார் இன்னாதாகிறாள்.

உண்ணுஞ்சோறுபருகுநீர் தின்னும்வெற்றிலையுமெல்லாம்
கண்ணன்*எம்பெருமானென்றென்றே கண்கள்நீர்கள்மல்கி*
மண்ணினுளவன்சீர் வளம்மிக்கவனூர்வினவி*
திண்ணமென்னிளமான் புகுமூர் திருக்கோளூரே. (1)

ஈடு.—முதற்பாட்டில், இப்பிராட்டியுடைய திருத்தாயாரானவள், தன் பெண்பிள்ளையைத் தன் மாளிகையில் காணாதொழிந்து, தன்மகளாகையாலும் அவளுடைய ஸ்வபாவாநுஸந்தாநத்தாலுமாக, இவள் இங்குநின்றும் போய்ப்புகும் ஊர் திருக்கோளூரே என்று அத்யவஸிக்கிறாள். [உண்ணுஞ்சோ

றென்று தொடங்கி] - பசியில் உண்ணக்கடவ சோறும், தாஹத்தால் குடிக்கக்கடவ தண்ணீரும் தின்று தொழியில் தரியாததசையில் தின்னக்கடவ வெற்றிலையுமான தாரகாதிகளெல்லாம் எனக்கு என் ஸ்வாமியான க்ருஷ்ணனே என்றுநின்றுகொண்டு அவனைக் காணப்பெறாமையாலே கண் நீர்மல்கி, [மண்ணினுள் என்று மேலுக்கு] - அவனுடைய கல்யாணகுணங்களையும் ஸம்பந்நனானவன் விரும்பி யிருந்துள்ள ஊரையும் தனக்கு வழிபோகைக்கு உறுப்புண்டாம்படி வினவிக்கொண்டு என்பெண்பிள்ளை பூமியில் புகுமூர் திருக்கோளூரே. இது நிச்சிதம்.

இ-—முதற்பாட்டில், தன்மகளாகையாலும், அவன்தன் ஸ்வபாவத்தாலும், இவள் இங்குநின்றும் போய்ப்புகும் ஊர் திருக்கோளூர் என்று அத்யவஸிக்கிறாள். [உண்ணுஞ்சோறு] - ஜீவித்தல்லது தரிக்க வொண்ணாத சோறு. [பருகுநீர்] - தாஹித்தால் பாநம் பண்ணியல்லது நிற்க வொண்ணாத தண்ணீர். [தின்னும் வெற்றிலையும்] -தின்றாலல்லது புஷ்டனாக விரகின்றிக்கே இருக்கும் வெற்றிலையும். தாரகபோஷக போக்யமானவையெல்லாம், எனக்கு நாதனான க்ருஷ்ணன். ''வாஸுதேவஸ் ஸர்வம்'' என்றாயிற்று இவள் இருப்பது. [என்றென்றே கண்கள்நீர்கள்மல்கி] - இடைவிடாமல் இப்படியே சொல்லி, அவனைக் காணப்பெறாமையாலே கண்கள் சோகாச்ருவாலே நிரம்பி, அவ்விஷயத்தை இடைவிடாமல் அநுஸந்தித்து, ஸ்மர்த்தவ்யவிஷய ஸாரஸ்யத்தாலே ''ஆஹ்லாத சீதநேத்ராம்பு:'' என்கிறபடியே ஆநந்தாச்ருவாலே நிரம்பி என்னவுமாம். [மண்ணினுள்] - உகந்தருளின நிலங்களிலே ப்ரவணையாகையாலே விண்ணிற் போகாள் என்று இருக்கிறாள். [அவன்சீர்] - சீர் என்றது ஸௌசீல்யாதிகளை. அவை ஸ்புடமாக அநுபவிக்கலாவது இங்கே. பரமபதத்தில் குணஸத்பாவமிறே உள்ளது. [வளம் மிக்கவன்] - ஸம்பந்நனானவன். ப்ரணயதாரையில் விதக்தனானவன். [ஊர்] -பரமபதம் கலவிருக்கையென்னும்படி விரும்பி வர்த்திக்கும் உத்தம இது. [வினவி] - வழிக்குப்பாதேயமிருக்கிறபடி. ''திருக்கோளூர் எங்கே'' என்னவும், ''இங்கே'' என்னவும், ''இங்கேயோ'' என்று அநுபாஷிக்கையும், இதிறே வழிக்குதாரகம். [என்னிளமான்புகுமூர் திருக்கோளூரே - திண்ணம்] - என்வயிற்றிற் பிறப்பாலும் இவள்படியாலும் இவள் புகும் ஊர் திருக்கோளூரே, ஸுநிச்சிதம். என்னிளமான் - அவன்சீரையும் வளம்மிக்கவன்ஊரையும் வினவி - மண்ணினுள் புகுமூர் - திருக்கோளூரே - திண்ணம். மருபூமியில் தண்ணீர்போலேயிறே ஸம்ஸாரத்தில் திருக்கோளூர்.

ஈடு.—முதற்பாட்டு. தன்வயிற்றிற்பிறப்பாலும், இவள்தன் ஸ்வபாவத்தாலும் இவள் இங்குநின்றும் போய்ப்புகும் ஊர் திருக்கோளூர் என்று அத்யவஸிக்கிறாள்.

[உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும்வெற்றிலையு மெல்லாங்கண்ணன்] - இவள் அவ்வருகே ஒருவாய்ப்புகுநீர் தேடிப்போனாளே. இங்கிருந்த நாள் அந்நபாநாதிகளாலே தரித்து, அங்கேபுக்கு அவனாலே தரிக்கப்போனாளோ. *அஹமந்நம்-அஹமந்நாத:* என்றிருப்பார்க்கும் அவ்வருகு போகவேணுமோ? ''சோறு, தண்ணீர், வெற்றிலை'' என்னவமையாதோ? ''உண்ணுஞ்சோறு'' என்றாப்போலேயிருக்கிற விசேஷணங்களுக்குக் கருத்தென்? என்னில்;—''வெட்டெ பாழிலவைய வைபோலுமே - தோட்டார்கதுப்பினாடோள்'' என்று அவனும் சொன்னானிறே: (அதாவது-அபேக்ஷையுடையபோதில் அந்தவந்த சோறு தண்ணீர் வெற்றிலை போலாகுமிறே தோடுபொருந்தின கதுப்பையுடையவள்தோளின் ஸம்ச்லேஷம்;) அப்படியே, இவைதானே அபிமதமுமாயிருக்கும் ஒரோ அவஸ்தைகளிலே. அதுக்காக அபிமதவிஷயத்தில் இவைதான் யாதொரு படியிருக்கும் அப்படியேயாயிற்று இவர்க்குஎப்போதும் பகவத்விஷய மென்கைக்காக. தாரகபோஷக போக்யங்களெல்லாம். [எல்லாம்கண்ணன்.] - *வாஸுதேவஸ் ஸர்வம்* என்றுகொண்டு எல்லாம் க்ருஷ்ணன் என்றிருக்குமத்தனை. உண்ணுஞ்சோறென்கையாலே - அல்லாதது உண்டுசமைமையும் சோறென்கையும், இதுமாறாதே புஜிக்கும் சோறென்றுமதுவும் தோற்றுகிறது. ''கண்ணாணிலோவாத்தொழில்சார்ங்கன் தொல்சீரை நன்னெஞ்சே, போவாதழுறுகவுண்'' என்னக்கடவதிறே. மாறாதேபுஜிக்கலாவதும், மாளாததும் இதிறே; ''அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுதம்'' என்றும், ''கொள்ளமாளாவின்பவெள்ளம்''

என்றுமிறேயிருப்பது. [எம்பெருமான்] - இவற்றிலாகாததொன்றில்லையிறே, இவையெல்லாம் வகுத்தவனேயாயிருக்கை. இவள்ஸந்நிதியே யமையுமிறே எங்களுக்கு. [என்றென்றே] - இதொழிய வேறொன்றை "தாரகம்" என்றிருக்கிலிறே மற்றொன்றைச்சொல்லுவது. இது தன்னையே மாறாதே சொல்லி, ஒருகால் இத்தைச்சொல்லிப் பின்பு அனுஸந்தாநக்கத்தாலே போது போக்கலாம் விஷயமன்றே. [கண்கள்நீர்கள்மல்கி] - இவர்களுடைய உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும்வெற்றிலையும் எல்லாமிருக்கிறபடி. இவள்முகத்தாலேகாணும் இவர்களுக்கு ஜீவநம், தன்ஜீவநத்துக்குப் போகிறவள் எங்கள்ஜீவநத்தைக்கொண்டு போகவேணுமோ? ஒருவன் பகவத்குணவித்தனாய்க் கண்ணுங் கண்ணநீருமாயிருக்க, அவனைக் கண்டுகொண்டிருக்கவாகா தேயடுப்பது. "அழுநீர் துளும்ப வலமருகின்றன வாழியரோ" என்று சேதநராகில் மங்களாசாஸநம்பண்ணக்கடவது. நஞ்சீயர், "பிள்ளைதிருநறையூரரையரோடே மூன்று திருவாய்மொழி கேட்டேன், அதில் எனக்கொரு வார்த்தைகளும் போகாது; ஒரு திருவாய்மொழியை ப்ரஸ்தாவியா அவர்சிதிலராய்க் கண்ணுங்கண்ணநீருமாய் இருக்குமிருப்பை நினைத்திருப்பன்" என்று அருளிச்செய்வர். *ஆஹ்லாதசீதநேத்ராம்பு:* - விரஹத்தாலே கொதித்துப்புறப்படும் சோகாச்ருபோலன்றிக்கே, பகவதநுபவஜநிதமான ஹர்ஷப்ரகர்ஷத்தாலே குளிர்ந்த கண்ணநீரையுடையனாவது. *புலகீக்ருதகாத்ரவாந்* உடம்படைய மயிரெறிந்திருப்பது. *பரகுணாவிஷ்ட:* பகவத்குணாவிஷ்டனாவது, தைவாவிஷ்டரைப்போலே அவன், *ஸர்வதேஹிபி: - த்ரஷ்டவ்ய:* அவன் தேஹபரிக்ரஹம் பண்ணினார் எல்லார்க்கும் த்ரஷ்டவ்யன். தேஹபரிக்ரஹம் பண்ணினதுக்கு ப்ரயோஜநம் இவனைக்காண்கையாயிற்று. *ஸதா - த்ரஷ்டவ்ய:* ஸதா தர்சநம் பண்ணுகைக்கு ஒரு தேசவிசேஷம் தேடிப்போக வேணுமோ? அநந்தாழ்வான் சோழகுலாந்தகனிலே க்ருஷிபண்ணியிருக்கிறானொரு ஸ்ரீவைஷ்ணவனைக்கண்டு, "உம்முடைய ஊர் எது? என்று கேட்க, "என் ஊர் திருக்கோளூர்" என்ன, "அங்குநின்றும் போந்ததென்" என்ன, "தேஹயாத்ரை நடவாமையேபோந்தேன்" என்ன "அவ்வூரில் கழுதையை மேய்த்து ஜீவிக்கமாட்டிற்றிலை யோ? நிலையின்ற ஜீவனத்தை விட்டுப் போந்தாயாகாதே!" என்றானும். [கண்ணனெம்பெருமானென்றென்றே கண்கள் நீர்கள் மல்கி]-இந்த பாவநாப்ரகர்ஷத்தாலே பெற்றாப் போலேயிருந்து ஆநந்தாச்ரு புறப்படுகிறபடியாகவுமாம்; இவ்வநுஸந்தாநத்தாலே கண்ணநீர் மல்கி என்னவுமாம். [மண்ணினுள் இத்யாதி] மண்ணினுள் புகுமூர் திருக்கோளூரே. விண்ணில் ஒரூர் விசேஷிக்கவேண்டும்படியாயிராதிறே. [அவன்சீர் வளம்மிக்கவனூர்] - அவனுடைய கல்யாணகுணங்களையும் நிரவதிகஸம்பத்தையுடையவனுடைய ஊரையும். *ஸோஸ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹப்ரஹ்மணா* என்று அவனோடு அவன்குணங்களோடு வாசியற ப்ராப்யமாகிறவோபாதி அவன் விரும்பினதேசமும் ப்ராப்யாந்தர்க்கதமாகக் கடவதிறே. [அவன் சீர்] - அவன் கல்யாணகுணங்கள். அவையாகிறன, அவன் தன்திறத்தில் தாழநிற்கும் நிலைகள். [வளம்மிக்கவனூர்]-பரமபதம் கலவிருக்கையோபாதி உகந்த விஷயத்தைப் பெறும்இடமிறே ஊராகிறது! *கிம்கார்யம் ஸீதயாமமஇறே. பரமபதத்திற்காட்டிலும் ஆச்ரிதர் இருந்தஇடமிறே ஊராகிறதும், அவன் திருவுள்ளத்துக்குப்பொருந்தியிருப்பதும். [வளம்மிக்கவன்]-ப்ரணயதாரையில் வித்தன் என்றுமாம். இப்போது வைருத்யமாவது தானிருந்தவிடத்தே இவள்வரும்படி இத்தலையை யழித்தபடி. [வினவி] "திருக்கோளூரெத்தனை யிடம்போரும்" என்று எதிரே வந்தாரைக்கேட்டு, அவர்கள் "இன்னதனை யிடம்போரும்" என்ன. அதுதானே வழிக்கு பாதேயமாகப் போகை. *பாதேயம் புண்டரீகாக்ஷ* இத்யாதி. பூவலரும்போதைச் செவ்விபோலே "திருக்கோளூரெத்தனையிடம் போரும்" என்று கேட்கும்போதைத் திருப்பவளத்தில் செவ்வி காணப்பெற்றிலேன் என்று காணும் திருத்தாயார் தான்நோவுபடுகிறது. [என் இளமான் புகுமூர் திருக்கோளூரே] - என் வயிற்றிற் பிறப்பாலும், இவள்ப்ரக்ருதியாலும் அவ்வூரிலல்லது புகாள் என்கிறாளாயிற்று. தாய்வழிகொண்டே ஸ்வபாவங்கள் அறுதியிடலாமாகாதே. பெருமாளைக்கண்டல்லது தரிக்கமாட்டாதாளாய் வருகிற ஸ்ரீபரதாழ்வானைக் கண்டு வைத்தேயும், த்ரிகாலஜ்ஞரானாரை குஷியுங்கூட *கச்சிந்நதுஷ்டோ வ்ரஜஸி* என்று தாயாரையிட்டு வழக்குப் பேசுவித்துக்கொண்டு இவரைக் காடேறப் போகவிட்டாயாகில், இன்னம் "பெருமாள் இருக்கில் கீழ்வயிற்றில் கழலையாகிறது" என்று அங்குப்போய்ஸயைத்

தேடுகிறாயல்லையிறே என்றானிறே; அவன்படிகள் காணாதிருக்கச்செய்தேயும் மாத்ருஸம்பந்தங் கொண்டு சங்கித்தானிறே; பதார்த்த ஸ்வபாவங்களைக் கொண்டு பத்தும்பத்தாக மீந்தங்களை யறியக்கடவராயிருப்பர்களாயிற்று வேடர்; இங்ஙனே யிருக்கச்செய்தேயும், தம் எல்லையிலே இவள்வந்து புகுந்ததுக்கு ஹ்ருஷ்டராய் "அடிச்சேரியிலே வந்துபுகுவதே!" என்பது: "ஆனாலும், ராஜாக்களாயிருப்பார் வன்னியர்பற்றிலே புகும்போது 'கேள்விகொண்டன்றோ புகுருவது" என்றாப்போலே யிருக்க வெளிறும்காம்புமாகச் சொல்லி, தாய்வழியை நினைத்து அமர்த்தாரிறே ஸ்ரீகுஹப்பெருமாளும். அப்படியே இவளும் தன்வயிற்றிற்பிறந்த சக்தியே ஹேதுவாக "திருக்கோளூரிலேபுகும்" என்றறுதியிடுகிறாள். ராமாஸ்த்ரம் இலக்குத்தப்புமோ! என்மகள் புகுமூர் அதுவேயென்கிறாள். [இளமான்] - இப்பருவத்தில் இவளைத் தலக்கறுக்கும்போது அவ்வூரில் அவனேயாகவேண்டாவோ? [என்னிளமான்] க்ரமப்ராப்தி பற்றாதவள். தன் மார்த்தவம் பாராதே பதறிக்கொண்டு போனாள். [புகுமூர்] காட்டுத்தீயிலே யகப்பட்டவன் பொய்கையும் பொழிலுந் தேடிப் புகுமாபோலே; ஸம்ஸாரமாகிற பாலைநிலத்தில் காட்டுத்தீயிலே யகப்பட்டவனுக்கு உகந்தருளின நிலங்களானவை பொய்கையும் பொழிலும்போலே யிறே. புகுமூரென்கையாலே புக்கார்போகும் ஊர் அன்றென்கை. எம்பெருமானார் தெற்கேயெழுந்தருளாநிற்க, எதிரே வாராநின்றாள் ஒருபெண் பிள்ளையைக் கண்டு "எங்குநின்றும்?" என்ன "திருக்கோளூரில்நின்றும்" என்ன, அவ்வூரில்புக்கபெண்களும் போகக்கடவராயிருப்பர்களோ!" என்றருளிச்செய்தார். ('என்னிளமான்-மண்ணினுள்-புகுமூர் திருக்கோளூரே-இது திண்ணம்') இவள் போய்ப்புகுமூர் திருக்கோளூரே, இது நிர்சயம். இவ்வூரில் பிள்ளைகளைக் காணவிட்டால், கோயிலுக்குள்ளே தேடும் அத்தனையிறே.

ஊரும்நாடுமுலகமும் தன்னைப்போல்*அவனுடைய
பேரும்தார்களுமேபிதற்றக் கற்புவானிடறி*
சேரும்நல்வளஞ்சேர் பழனத்திருக்கோளூர்க்கே*
போருங்கொலுரையீர் கொடியேன்கொடி பூவைகளே. (2)

ஒ.—இரண்டாம்பாட்டில், திருக்கோளூரிலேபுக்க என் பெண்பிள்ளை மீளவருமோ? சொல்லிகோளென்று பூவைகளை திருத்தாயார் கேட்கிறாள். [அவனுடைய பேருந்தார்களுமே பிதற்ற] - தன் படியைக்கண்டு அவனுடைய திருநாமங்களையும் சின்னங்களையும் அடைவுகெட்டுப் பிதற்றும்படிபண்ணி. [கற்புவானிடறி] - கடக்கவரிதான தன்மர்யாதையை த்ருணம்போலே போகட்டு. [சேருநல்வளமென்று மேலுக்கு] - நல்ல ஸம்பத்தையுடைய திருக்கோளூர்க்கே போய்ச்சேரும் என் பெண்பிள்ளை, பூவைகாள்! உங்களைக்காண என்றாகிலும் வருமோ? சொல்லிகோள். [போருங்கொல்] - போகவல்லளோயோ என்றுமாம். இப்பெண்பிள்ளையைப் பிரிந்த இன்னாப்பாலே 'கொடியேன்' என்கிறாள்.

இ.—இரண்டாம்பாட்டில், திருக்கோளூர்க்கே புக்க என்மகள் வருமோ? சொல்லிகோளென்று பூவைகளைக்கேட்கிறாள். [ஊரும்] - தானிருந்த ஊரும் [நாடும்] - அத்தோடு சேர்ந்தநாடும். [உலகமும்] - அத்தோடே சேர்ந்த லோகமும். ராமாவதாரத்திலும் ஒரு ஊரிறே திருந்திற்று: இங்கு. "லோகேஷவதீர்ண பாமார்த்த ஸமக்ரபக்தியோகாய" என்கிறபடியேயாயிற்று திருந்திற்று. [தன்னைப்போல்] - இவ் விஷயத்தில் தன்னோபாதி பரவபந்தம் உண்டாம்படி திருத்துகை. அங்கே, பரமஸாம்யாபந்நரைத்தேடிப் போகிறாளாகில், தான் திருத்தினளாகாதோ. [அவனுடைய பேருந்தார்களுமே] - "அரவிந்தலோசநன்" என்றும், "மட்டவிழ் தண்ணந்துழாய்" என்றும், "விரைமட்டலர் தண்துழாய்" என்றுஞ் சொல்லாநிற்கை. [பிதற்ற] - ப்ரீதிப்ரேரிதராய் அக்ரமமாகச்சொல்லுகை. "ஜாமதக்ந்யஸ்ய ஜல்பத:" என்கிறபடியே. இப்படி, லோகமடங்க அக்ரமமாகச் சொல்லும்படிபண்ணி. [கற்பு வானிடறி] - வானனைகற்பை இடறி. வலிதானமர்யாதையை மதியாதே என்னுதல்; வலிய அறிவை என்னுதல். கடக்க அரிதான மர்யாதையை த்ருணம்போலே அதிலங்கித்து. [சேரும் இத்யாதி] - தகுதியான நல்ல

ஸம்பத்தையும் நீர் நிலங்களையுமுடைய திருக்கோளூர்க்கே புகுருமோ. தன் மனஸ்ஸு அங்கே முற்பட்டு நிற்கையாலே, வந்து புகுரவல்லளோ? என்கிறாள். திருக்கோளூர்க்கே புக்கவள் மீளுமோ ? என்றுமாம். [கொடியேன்] - இவளைப்பெறுகைக்கு பாக்யத்தைப்பண்ணி வைத்து, தனியே புறப்பட்டுப்போன இவளளவு [உங்களைக்கேட்டு அறியவேண்டும்படி பாபத்தைப் பண்ணினேன். [கொடி] - உபக்நத்தையொழியத் தரியாததசை. அவ்வூரில் புக்கல்லது தரிக்கமாட்டாள் என்கை. [பூவைகளே - உரையீர்] சொல்லா தொழிகைக்குப் பெற்ற குற்றமில்லையே உங்களுக்கு ? நான் ஹிதம்சொல்லுகையாலே மறைத்தாளாகிலும், இன்ன விடத்துக்குப்போகிறேன் என்றும், அங்குப்போனால் செய்யுமவையும் உங்களுக்குச் சொல்லிப் போகக்கூடுமிறே; சொல்லிகோள்! அறிவித்துப்போனாளாகில் ராமாவதாரத்தில்போலே லோகமாகப் பின் தொடருமிறே.

௬—இரண்டாம்பாட்டு. திருக்கோளூர்க்கே போய்ப்புக்க என் பெண்பிள்ளை மீள வருமோ? சொல்லிகோள்! என்று பூவைகளைத் திருத்தாயார் கேட்கிறாள்.

[ஊரும்நாடும் இத்யாதி] - இவ்விருப்பில் என்னகுறையுண்டு? இங்கே ஒரு குறை யுண்டாய், அங்கே அது தீரப்போனாளோ? இங்கே, போதயந்த:பரஸ்பரம்பண்ணுகைக்கு ஆளில்லாமை *யத்ர பூர்வே ஸாத்யாஸ் ஸந்தி தேவா:* என்றொரு தேச விசேஷம்தேடிப்போனாளோ? *நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி* என்று அவன் அங்குள்ளாரைத் தன்னோடு ஸாம்யாபந்நராம்படி பண்ணினாப்போலேயாகாதே, இங்குள்ளாரை இவள் தன்னோடொக்கப் பண்ணினபடி. [ஊரும் நாடும் உலகமுந் தன்னைப்போல்] - தானிருக்கவூரும், அத்தோடு தோள்தீண்டியான நாடும், அத்தோடுசேர்ந்த லோகமும், ராமாவதாரத்திலும ஒருரேயிறே திருந்திற்று: இங்கு ஸம்ஸார மாகத் திருந்திற்றுக்கிடீர்! என்கை. இன்று நம்மளவும்வர வேறிப்பாயும்படியிறே இவள் ஸம்பந்தம் வெள்ளமிட்டபடி. *லோகேஷவதீர்ணபரமார்த்த தஸமக்ரபக்தியோகாய* என்னும்படியே எல்லாமேடுகளிலும், ஏறிற்றென்கை. [ஊரும்நாடுமித்யாதி] 'காலை யெழுந்திருந்து கரிய குருவிக் கணங்கள் மாலின்வரவுசொல்லி'ப்ராஹ்ம முஹூர்த்தத்திலே திர்யக்குக்களுங்கூட எழுந்திருந்து, அவன் இவள்பக்கல் பிச்சேறிவரும்படியைச் சொல்லாநின்றன. தானிருந்தவிடத்தேசெல்ல வேண்டுமவன் இவளிருந்த இடத்தேற வரும்படியைச் சொல்லி. [தன்னைப்போல் அவனுடைய பேருந்தார்களுமேபிதற்ற] - அவன் மயர்வற மதிநலமருளவந்த பிதற்றிறேயிவளது! இவள் தான் அடியாகவந்த பிதற்றிறே யிவர்களது. [பிதற்ற] - நினைத்துச் சொல்லுகையன்றியே, பகவத்குணங்களிலே யவகாஹித்து உணர்த்தியற்றுச் சொல்லும்படியாகப்பண்ணி. [அவனுடைய பேருந்தார்களும்] - "சங்கென்னும் சக்கரமென்னும் துழாயென்னும்" என்பது "தேவ தேவபிரான்" என்பது, "விரைமட்டலர் தண்டுழாய்" என்பதாகை [பிதற்ற] - *சத்ரோஜய மர்த்ததே ராமஸ்ய ஜாமதக்ந்யஸ்ய ஜல்பத:* என்கிறபடியே. [கற்புவானிடறி] - வானை கற்பை இடறி, ஒருவரால் கடக்கவொண்ணாத மர்யாதையைக்கடந்து மலைபோலேயிருக்கிற மர்யா தையை. காற்கீழே அகப்பட்டதொரு க்ஷுத்ரபாஷாணத்தை இடறுமாபோலே இடறி. பெரு வெள்ளமானது சிறுக்கரைகளோடு பெரியகரைகளோடுவாசியற ஏறுமாபோலே, நாண் மடம், அச்சம் தொடக்கமானவற்றை மதியாதே போகை. [கற்புவானிடறி] - "ஷியஅறிவை யென்னுதல்; பெரிய ஜ்ஞாநத்தை யென்னுதல்" என்றும் சொல்லுவர்கள். அப்போது, கற்பென்று - கல்வியாய், அத்தாலே அறிவைச்சொல்லி, வானென்று - வலியைச்சொல்லிற்றாகிறது. அன்றிக்கே, கற்பென்று - கல்வியாய் அத்தாலே ஜ்ஞாநமாய், வானென்று - பெருமையாய், பெரிய ஜ்ஞாநத்தை யென்றுமாம். அபிநிவேசத்துக்கு ஓரளவு உண்டாகிலிறே ஜ்ஞாநத்திலே நடையிடப் பது. "ஞானவுங்கடந்து" என்னக்கடவதிறே. *யயௌச காசித் ப்ரேமாந்தா* ஒருத்தி புறப் பட்டுப் போனாள். இவளைக் கொண்டுபோனார் ஆர் என்னில்: ப்ரேமத்தாலே வந்த இருட்சி வழிகாட்டப் போனாள். *குரவ: கிங்கரிஷ்யந்தி தக்தாநாம் விரஹாக்நிநா* - "குருக்கள்கிடாய்" என்ன, வெந்துவிழுகிறதுக்கொரு குடநீர் சொரியவல்லர்களோ? [சேருமித்யாதி] - இங்கே அசலாக இருக்கிறவன் அங்கே தன்வயிறு வளர்க்கப் போவதே! இங்கே பிறர் இருக்கும்படி யிருக்கிற இவள் அங்கே இருக்கின விடந் தேடிப் போவதே! தன்னைக்கண்டு பிறர் வாழுமிருக்

றை இவள், தான் அவனைக்கண்டு வாழப்போவதே! [சேருநல்வளமித்யாதி] - ஸத்ருசமான நல்ல ஸம்பத்துச் சேர்ந்திருப்பதாய், நீர்நிலங்களையு முடைத்தாயிருக்கிற திருக்கோளூர்க்கே. [திருக்கோளூர்க்கே போருங்கொல்] - போருங்கொல் என்றது புகுங்கொல் என்றபடி. அன்றியே, இவளுக்கு முன்னே தன் நெஞ்சு முற்பட்டபடியாய், அங்கேயிருந்து அவள் வழியில் ஒருகுறைகளின்றியிலே வருமோ? என்கிறளாகவுமாம். அன்றியே, 'நல்வளஞ்சேர் பழனத்திருக்கோளூர்க்கே சேரும் - கொடி, பூவைகாள்! - போருங்கொல் உரையீர்!' என்னுதல். அதாவது மீண்டு புறப்பட்டு வரவல்லளோ? சொல்லிகோள்! [கொடியேன்] - இவளைப் பெறுகைக்கு பாக்யம் பண்ணிவைத்து, இவ்வளவு உங்களைக் கேட்கவேண்டும் படியான பாபத்தைப்பண்ணினேன். [கொடி] - உபக்ரத்தையொழியில் தரைப்படும். "கோல்தேடியோடுங் கொழுந்ததே போன்றதே மால்தேடியோடும் மன"மிறே. [கொடியேன் கொடி] - பெற்ற என்னையும்விட்டு வேறேயுமோர் அபாச்ரயமுண்டாம் படியான பாபத்தைப் பண்ணினேன். பெற்ற தாயாரை விட்டகலுகை குடிஸ்வபாவம்போலே காணும். (கள்வன் கொல்லியும், நல்லதோர்தாமரைப்பொய்கையிலு மூண்டிறே) - [பூவைகாள் - போருங் கொல்-உரையீர்] - பெற்ற தாயாரை விடலாம்; அத்தனையல்லது, பிறந்தாரைக் கைவிடப் போகாதென்றிருக்கிறள் காணும் தன்னையிட்டு. போக்குவரத்து எனக்கன்றோசொல்லலா காது, உங்களுக்கு ஒதுக்காதே சொல்லுமே. வயிற்றிற் பிறந்தாரை ஒளிப்பாரில்லையே: [உரையீர்] - அவள் சொல்லிப்போகச்செய்தே இவை சொல்லாதிருக்கிறன என்றிருக்கிறள். [போருங்கொல்] - என்கிற ஸம்சயத்துக்கடி, பாவியான நான் இருக்கையாலே மீளாதொழியவுங் கூடுமே, நீங்களிருக்கையாலே மீளவுங்கூடுமிறே; என் பாபமே ப்ரபலமாய் வாராதொழியுமோ? உங்களைப்பார்த்து வருமோ? சொல்லிகோள்! அறிவித்துப் போனளாகில் ராமாவதாரத் திற்போலே லோகமாகப் பின் தொடருமிறே; சுற்றமெல்லாம் பின்றொடர இறே போயிற்று!

* பூவைபைங்கிளிகள் பந்துதுரைதைபூம்புட்டில்கள்*
யாவையும்திருமால் திருநாமங்களேகூவியெழும்* என்
பாவைபோயினித் தண்பழனத்திருக்கோளூர்க்கே*
கோவைவாய்துடிப்ப மழைக்கண்ணொடென்செய்யுங்கொலோ. (3)

ஒ.—மூன்றும்பாட்டில், திருக்கோளூர் ப்ரத்யாஸந்நமானால் எங்ஙனே உடைகுலைப்படக்கடவள் என்கிறள். [பூவையென்று தொடங்கி] - பூவை பந்துமுதலான அழகிய லீலோபகரணங்களைக்கண்டால் ஸ்ரீபரதாழ்வானுக்கு ராஜ்யங்கண்டாப்போலே இவளுக்கு அஸஹ்யமாய் அவற்றாலுள்ள ரஸமும் பகவந்நாமோச்சாரணத்தாலேயாய் உஜ்ஜீவிக்கும் என் மகள். [போயினியென்று மேலுக்கு] - இதுக்கு மேலே ச்ரமஹரமான நீர்நிலங்களையுடைய திருக்கோளூர்க்கேபோய், என் பாவை, எம்பெருமானுடைய ப்ரத்யாஸத்தியாலே உடைகுலைப்பட்டு, தான் நெடுநாள் அவனைப்பிரிந்து பட்டபாடும், அவன் கைவிட் டிருந்தபடியையும் நினைத்து கோவைப்பழம்போலேயிருக்கிற திருப்பவளம்துடிப்ப மிக்கிருந்துள்ள நீரை யுடையகண்ணும் இவளுமாய் என்படக்கடவளோ?

இ.—மூன்றும்பாட்டில், திருக்கோளூர் ப்ரத்யாஸந்நமானால் எங்ஙனே உடைகுலைப்படக்கடவள் என்கிறள். [பூவை] - கிளியிலே அவாந்தரபேதம். [பைங்கிளி] - பச்சைக்கிளி, பூம்புட்டில்கள். [யாவையும்] - தன்னுடைய லீலோபகரணங்களான யாவையாலும் பிறக்கும் ரஸமெல்லாம் அவனுடைய திரு நாமத்தாலே பிறக்குமாயிற்று இவளுக்கு. அவனுடைய லீலோபகரணங்களோபாதியும் போருமாயிற்று இவளுடைய லீலோபகரணங்கள். [திருமால் திருநாமங்களே கூவியெழும்] - பகவந்நாமங்களைச் சொல்லி உஜ்ஜீவிக்கும்; திருநாமச்சுவடறிந்தபின்பு லீலோபகரணதர்சநம், ஸ்ரீபரதாழ்வானுக்கு ராஜ்யதர்ச நம்போலே அஸஹ்யமாயிருக்கும். இவளுடைய லீலோபகரணங்கள் அவனுக்கு போகோபகரணங்களா யிருக்கும். "இந்த லீலோபகரணங்கள் திருநாமத்தைச்சொல்லிற்றுணலோ?" என்று பெற்றிகேட்க, 'பந்து துரதை பூம்புட்டில்களில் ஏறுது' என்று பிள்ளை பரிஹரித்தார். அவற்றைத் திருநாமத்தைச்சொல்லி

அழைத்தாளானுலோ என்னில்: அது, "உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும்வெற்றிலையும் எல்லாம் கண்ணன்" என்றிருக்கிறதுக்குச் சேராது. [திருமால்] - இவன் திருநாமம் சொல்லும்போது த்வயத்தில் படியே ஸ்ரீமந்நாராயணன் என்றாயிற்று சொல்லுவது. [என்பாவை] - கிருபாதிகஸ்த்ரீவத்தையுடையவள். [போயினி] - லீலோபகரண ரஸமும் திருநாமமேயானவிருப்பை விட்டு. அங்கு என்ன ஏற்றஃகத்துக்குப் போனுள். [தண்பழனம்] - ச்ரமஹரமான நீர் நிலங்களையுடைய ஊர். [கோவையாய் துடிப்ப] - கலக்கிற போது தானே மேல்விழுந்து கலந்தபடியும், "பிரியேன், பிரியில்தரியேன்" என்று கலந்தபடியும், பிரிந்த படியும், வரவுதாழ்த்தபடியும், தனிவழியே தான் செல்லவிருந்தபடியும், சென்றபின்பு. "ஹ்ரீரேஷா ஹி மமாதுலா" என்று லஜ்ஜாவிஷ்டனுய்க் காலைப்பிடியாதொழிந்தபடியும், இவற்றை நினைத்து கோவைப்பழம் போலேயிருக்கிற அதரம்துடிக்க, மிக்கநீரையுடைய கண்ணேடே என்படுகிருளோ? தனிவழியே போனுள், நான்கூடப் போகப்பெற்றிலேன்! என்கிருள்.

௩ு.—மூன்ரும்பாட்டு. திருக்கோளூர் ப்ரஸ்யாஸங்கமானுல் எங்ஙனே உடை குலைப் படக் கடவள் என்கிருள்.

[பூவையித்யாதி] - வேறென்றைக்கொண்டு போதுபோக்கவேண்டும் பருவத்திலும் திருநாமத்தையே கொண்டு ஜீவித்திருக்குமவள்கிடீர் போனுள்! இங்கிருந்த நாள் மற்றொன்று தாரகமாய், அங்கேபோய் அவனுலே தரிக்கப்போனுளோ. பூவைதொடக்கமான லீலோபகரணங்களால் பிறக்கும் ஹர்ஷமெல்லாம் த்வயத்திற்படியே ச்ரிய:பதியென்கிற திருநாமத்தைச் சொல்லி அத்தாலேயுண்டாகாநின்றது. "'ஊரும்நாடு முலகமுந்தன்னைப்போல்' என்கிறபடியே இவைதாம் திருநாமத்தைச் சொல்லிற்றுனுலாகாதோ" என்று பெற்றி நம்பிள்ளையைக் கேட்க, "அதுக்கு வ்யபிசார முண்டு, 'பந்துஆதை' என்கிறவிடத்தே தட்டுப்பிறக்கும்" என்ன, "அங்ஙனேயிறே" என்று இசைந்துபோனுர். அவன் திருநாமங்களை இவற்றுக்கிட்டு அழைத்த தானுலோ? என்னில்; "(உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையும்) எல்லாங்கண்ணன்" என்றிருக்கிற அதிமாத்ர ப்ராவண்யத்துக்கு இதுசேராது. [பூவையித்யாதி] - திருநாமச்சுவடறிந்தபின்பு லீலோபகரணதர்சநம் இவளுக்கு அஸஹ்யமாயிருக்கும்; ஸ்ரீபரதாழ்வானுடைய ராஜ்யதர்சநம் அவனுக்கு அஸஹ்யமானுப்போலே. சக்ரவர்த்திக்கு சாஸ்த்ரார்த்தங்கள் பண்ணின அன்று நாயிறுபாடு, 'கைகேயிபண்ணின கச்மலத்துக்கு நாமும் கூடிமாலையிட்டோமென்று நாட்டார் நினைத்திருப்பதொன்றுண்டு; அத்தோஷம் நமக்கில்லை என்றறிவிக்கவேணும்' என்றுபுக்கான். ராஜலோகமடங்கலும்திரண்டு "கர்த்தாவானவனை இழந்தோம்; அநந்தரம் ப்ராப்தரானவர் காடேறப்போய்க்கொடுநின்ருர், இனி ராஜபுத்ரர்களில் நின்றுரைக்கொண்டு நிர்வஹிக்குமத்தனையிறே" என்றுபார்த்து, மங்களாவஹமான தூர்யகோஷங்களையும் பண்ணிக் கொண்டிருந்தார்கள். இத்வனி செவிப்பட்டபோது கருமாணிக்கமலையில் பிராட்டி ஸ்வயம் வரத்துக்கு மணமுரசு அறைந்தபோது தோழி பட்டதெல்லாம் பட்டான். *விலலாப ஸபாமத்யே* தனியிடத்திலன்றே பறிகொடுப்பது. தனக்கு சேஷத்வமிறே ஸ்வரூபம், ஸ்வரூபத்தையிறே அபஹரிக்கநினைக்கிறது! *ஜகர்ஹேச* ஸைத்யாவந்தரத்துக்குப் பிற்பட்டாரை சிஷ்டகர்ஹை பண்ணுமாபோலே. *புரோஹிதம்* இக்குடிக்கு நாங்கள் கைவாங்கியிருக்க, நீ மூன்னேடிக் காரியங்கள் நடத்தக் கடவதாகச் சமைந்தபடி சாலவுமுசிதாயிருந்தது. *ஸபாமத்யே ஜகர்ஹே* *நியமாதிக்ரமம் ரஹஸிபோதயேத்* என்கிற நிலையைக்குலைத்தான்: (புரோஹிதத்வமாகிற) ஹேது கழிகையினுலே. *ராஜ்யஞ்சாஹஞ்ச ராமஸ்ய* சேஷவஸ்துக்களிலே ஒன்றையொன்று ஆளுமோ? அங்ஙனேயானுறு: ராஜ்யந்தானெனக்குக் கடவதானுலோ? *தர்மம் வக்துமிஹார்ஹஸி* லோகத்திலே தமப்பன்மாரையும் தமையன்மாரையும் அழியச்செய்து தாந்தாம் ராஜ்யத்தைக் கைக்கொண்டு போருவதொன்றுண்டு; "அதுஇந்த வ்யக்தியிலும் செய்யும்" என்றிராதேகொள்ளாய்; என் ப்ரக்ருதியறிந்து அதுக்கீடாக வார்த்தை சொல்லப்பாராய். *கதம் தசரதாஜ்ஜாதோ பவேத் ராஜ்யாபஹாரக:*-அவர் பிரிந்த அநந்தரம் முடியவல்லவன்வயிற்றிலே பிறந்தேனும்படி எங்ஙனே? அவர்போகட்டுப்போன ராஜ்யத்தை நான் அபஹரித்தால். *நமஸ்யாமி க்ருதாஞ்ஜலி:* - அப்ராப்தம் அவன் சொல்ல செவிதாழ்த்ததுக்கு அபவாதப்ராயச்சித்தம் பண்ணுகிறுன். [என்பாவைபோயினி] - என் புத்யதீநமான வ்யாபாரத்தையுடையவள் கிடீர்

என்னையொழியப் புறப்பட்டுப்போனான். நிருபாதிகமான ஸ்த்ரீத்வத்தையுடையவளென்றுமாம். [இனி - போம் - லீலோபகரணங்களாற் கொள்ளும் கார்யமும் அவனேயாம்படியான இந்த ப்ராவண்யத்துக்குமேலே அங்குப்போய்ப் பெறுவது என்னாகப்போனாளோ? [தண்பழனத் திருக்கோளூர்க்கே] - ச்ரமஹரமான நீர் நிலங்களையுடைய திருக்கோளூர்க்கே. [கோவைவாய் துடிப்ப] - கோவைப்பழம்போன்ற சிவப்பையுடைத்தான அதரமானது ஸ்ப்புரிக்க "பிரியேன் என்றுபிரிந்தாய்; 'வருகிறேன்' என்று வந்திலை; என்னைத்தனியேயிட்டுவைத்தாய்; நான்வருமளவும்இருந்தாய்" என்றாப்போலேயிருக்கச் சில சொல்லலினைக்குமே; அதுதோற்றும்படி உதடுநெளிக்கிறபடி. [கோவைவாய்துடிப்ப மழைக்கண்ணொடு] - நினைத்ததுசொல்லித் தலைக்கட்ட வொட்டாமின்றதோ கண்ணநீர்! உடைகுலைப்பட்டுக் கண்ணநீராலே தலைக்கட்டாநின்றான். *உக்த்வாரயேதி க்ருஸதீகம் புநர்நோவாச கிஞ்சந* என்னும்படியே. [என்செய்யுங் கொலோ] - சொல்லமாட்டாள், தவிரமாட்டாள். அழாதொழியமாட்டாள்; எங்ஙனே படுகிறாளோ? நம்மையும் பிறரையும் விட்டு அவன்திருநாமங்களை அநுபவிக்கிறபோதை அழகுகாணப்பெற்றோம்! அவன்தன்னையே கண்டநுபவிக்கிறபோதை அழகு காணப்பெற்றிலோமே. அநுஸந்தாநவேளையிற்போலன்றிறே கண்டால்பிறக்கும் விகாரங்கள்; "காமனுடல் கொண்ட தவத்தாற்குமையுணர்த்த வண்டலம்பும் தாரலங்கல்" நீண்முடியான்தன் பெயரே கேட்டிருந்தங்காரலங்கலானமையால் - கண்டுவணங்கினார்க்கென்னாங்கொல்" என்றிறேயிருப்பது. அலாபத்தோடேயிருக்கும் இருப்புக்கண்டேன், லாபத்தோடேயிருக்கும் இருப்புக் காணப்பெற்றிலேன் என்கிறான்.

கொல்லையென்பர்கொலோ குணம்மிக்கனளென்பர்கொலோ*
சில்லைவாய்ப்பெண்டுகள் அயற்சேரியுள்ளாருமெல்லே*
செல்வம்மல்கியவன்கிடந்த திருக்கோளூர்க்கே*
மெல்லிடைநுடங்க இளமான்செல்லமேவினளே. (4)

ஒ.—நாலாம்பாட்டில், சிலுகுவாரிகளான நம் சேரியில் உள்ளாரும் அயற்சேரியில் உள்ளாரும்-அந்யஸ்த்ரீகளும் இவளுடைய வ்ருத்தாந்தத்தைக்கண்டு குணஹீநைஎன்பரோ? இம்மஹாகுணத்தை அறிந்து கொண்டாடுவரோ? என்கிறான். [கொல்லை] - வரம்புகடந்தாள். [செல்வம் மல்கி என்று மேலுக்கு] - ஸம்பத்தாலே மிக்கு அவன் கண்வளர்ந்த திருக்கோளூர்க்கே அத்யந்தமுக்தையான பெண்பிள்ளை தன்னுடைய ம்ருதுவான இடைதுவளப் போய்ப்புக்காள்.

இ.—நாலாம்பாட்டில், இவளை நாட்டார் குணஹீநை என்பார்களோ, குணாதிகையென்று கொண்டாடுவர்களோ? என்கிறான். [கொல்லை] - வரம்பழிந்த நிலம். அவன் தானே வரவிருக்கக்கடவ மர்யாதையை அழித்துப்போனாள் என்பர்களோ? குணாதிகவிஷயத்துக்குப் போரும்படி செய்தாள் என்று கொண்டாடுவர்களோ? "தத் தஸ்ய ஸத்ருசம் பவேத்" என்கிற வசநத்தைப் பார்த்து கர்ஹிப்பர்களோ? இவளுடைய ருசி விஷயத்துக்கு அநுரூபமாயிருந்தது என்பர்களோ? விதியைப்பார்த்து கர்ஹிப்பர்களோ? காம வசநத்தைப்பார்த்து 'நன்று' என்பர்களோ? "ந காமதந்த்ரே தவ புத்திரஸ்தி" விரக்தரான நீர் காமபரவசரான எங்களை என்படுத்துகிறீர் என்றாளிறே, தாரை இளையபெருமாளை. ஸ்வரூபத்தைப் பார்த்து கர்ஹிப்பர்களோ, விஷயத்தைப் பார்த்து உகப்பர்களோ! [சில்லை இத்யாதி] - சிலுகுவாரிகளான நம் சேரியில் உள்ளாரும், அயற்சேரியாரான அந்யஸ்த்ரீகளும்; வசநபரரானவர்களும், அவர்களுக்கு உடலன்றியே "இருந்தவூரி லிருக்கும் மானிடர் எத்தவங்கள் செய்தார்கொலோ" என்னும் ப்ரேமார்த்ர சித்தரும். [எல்லே] - என்னே என்று ஆச்சர்யமாதல்; சொல்லுகிறவர்களைக்குறித்து ஸம்போதநமாதல். [செல்வம்மல்கி] - "இவர்கள் சொல்லிற்றுச் சொல்லுகிறார்கள்" என்று அவள் செய்வது செய்தாள் ஸம்பத்தானது கரைபுரண்டு வரும்படியான தேசம். [அவன் கிடந்த] - தன்பெருமையைப் பாராதே, ஆர்த்தரக்ஷணார்த்தமாகவந்து கண்வளர்ந்தருளுகிற தேசம். [மெல்லிடை நுடங்க] - இவளும் தன் ஸ்வரூபத்தை அறிந்திலள்: தன் இடையை அறிந்தாளாகில் போக்கிலே ஒருப்படுமோ? ம்ருதுவான

இடைதுவள. [இளமான்] - முக்தையானபெண். தன்மார்த்தவத்தையும், வழியில் அருமையையும், அவன் ஸ்வரூபத்தையும் அறியமாட்டாத மௌக்த்யம். [செல்ல மேவினள்] - இவள்போக்கிலே ஒருப்பட்டாள்; கொல்லையென்பர் கொலோ ?

ஈடு.—நாலாம்பாட்டு. இவளைக்கண்ட நாட்டார், குணஹீநையென்பர்களோ ? குணாதிகையென்று கொண்டாடுவர்களோ ? என்கிறாள்.

[கொல்லையென்பர்கொலோ] - இவள் வாசல்கடந்து புறப்படக்கடவதல்லாத மர்யாதையைக் குலைத்தாள்: இவள் நிஷித்தாநுஷ்ட்டாநம் பண்ணினாள் : இவள் வரம்பழிந்த செயல்களைச் செய்தாள் என்பர்களோ ? கொல்லையென்று - வரம்பில்லாததுக்குப்பேர். [குணம்மிக்கனளென்பர்கொலோ] - குணாதிகவிஷயத்துக்குப் போரும்படி செய்தாளென்பர்களோ ? [கொல்லையென்பர்கொலோ குணம்மிக்கனளென்பர்கொலோ] - இவள் விதயதிக்ரமம் பண்ணினாள் என்பர்களோ: அன்றிக்கே விதாநந்தன்னையே சொல்லுவர்களோ? ஓரளவிலே நின்று நிஷேதித்தவற்றைக்கொண்டு, இது அப்ராப்தம் என்பர்களோ: ருசிஸ்வபாவத்தாலும் விஷயஸ்வபாவத்தாலும் இது ப்ராப்தமென்பர்களோ ? ஸாதநவிதியளவிலே நின்று தடுமாறுவர்களோ: ஸ்வஸ்வரூபத்தைப்பார்த்துத் தெளிவர்களோ! உபாயாம்சத்தைப் பற்றிநின்று, இது கடவதல்ல என்பர்களோ; ப்ராப்தாவின் ஸ்வரூபத்தையும் ப்ராப்யஸ்வரூபத்தையும்பார்த்து, இது கடவதென்பர்களோ? அந்யநிஷேதபூர்வகமான ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்தால், புறப்படப்ராப்தியில்லை; ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யாநுஸந்தாநம் பண்ணினால், போய்ப்புக்கல்லது நிற்கவொண்ணாது. விதியைப்பார்த்து கர்ஹிப்பர்களோ: காமவசநத்தைப்பார்த்து நன்றென்பர்களோ? *நகாமதந்த்ரே தவபுத்திரஸ்தி* - 'விரக்தரான நீர்காமபரவசரான எங்களை என்படுத்துகிறீர்?' என்றாளிறே தாரை, இளைய பெருமாளை. [சில்லைவாய்ப்பெண்டுகள்] - சிலுகுசிலுகு என்னும் ஸ்த்ரீகள். விஷயாதிகமாய்வருமத்தையும் வசநவித்ரம் என்றிருக்குமவர்கள். உபாயபுத்த்யா வருமவற்றிலிறே விதிக்கு விஷயமுள்ளது; குணப்ரேரிதமாய்ப்போமிடத்தில் விதிகோசரியாதே. [அயற்சேரியுள்ளாரும்] - (சிலுகுவாய்ச்சிகளான நம்சேரியிலுள்ளாரும் அயற்சேரியாரான அந்யஸ்த்ரீகளும்.) இவளிருந்தது ஒரூர்வாசியுங்கூட இல்லாதவர்கள். [எல்லே] - ஈறில் அவர்களை ஸம்போதித்ததாதல், இதோராச்சர்யமிருந்தபடியென் ! என்றதாதல். [செல்வமிதயாதி] - அவன்வரவை அஸத்ஸமமாக்கினாள். முற்பாடனாய்வந்தவனை, தான் காலடியிட்டுப் பிற்பாடனாம்படி பண்ணினாள். அவன்ஸ்வரூபத்தை யழித்தாள். பரவ்யூஹாதிகளைவிட்டு இங்குவந்துகிடக்கிறது இவளுக்கு முற்பாடனாய் உதவுகைக்கிறே. [செல்வம்மல்கியவன்கிடந்ததிருக்கோளூர்க்கே] - நிரவதிக ஸம்பத்தானது கரைபுரளும்படியாக அவன் வந்து கண்வளர்ந்தருளுகிற திருக்கோளூர்க்கே. ரக்ஷ்யவர்க்கத்தினுடைய ரக்ஷணத்திலே அந்வயித்தாலிறே நியந்தாவினுடைய ஐச்வர்யம் ப்ரகாசிப்பது! [அவன்கிடந்த] - அவன்வரவு பார்த்து இவளிருக்கையன்றிக்கே, இவள்வரவு பார்த்து அவன் அவஸரப்ரதீக்ஷனாய்க் கிடக்கிறபடி. [மெல்லிடை நுடங்க] - அவன்ஸ்வரூபஜ்ஞாந மில்லாவிட்டால், தன்ஸ்வரூபஜ்ஞாநமோதான் இவளுக்கு உண்டாயிருக்கிறது. இவளுக்கு விழுக்காடறியாமை எங்குமொத்ததுகிடீர்! தன்னிடையை யறிந்தாளாகில் தான் புறப்பட்டுப்போமோ? நடுவே அறியாமல் புகுந்தபிழையிறே. [மெல்லிடைநுடங்க] - ம்ருதுவான இடையானது துவளும்படியாக. இவ்விடையைக்கொண்டு இவள் நடக்கப்புக்கால் எதிரே புறப்பட்டு வரவேண்டாவோ? [இளமான்] - போகிற வழியில் அருமையும், தன்ப்ரக்ருதியும் அறிந்து மீளவல்ல பருவமல்ல கிடீர்! [செல்லமேவினளே] - போகவொருப்பட்டாள். இவள்கையிலும் இவர்கள்கையிலுமன்றிறே ப்ராப்தி கிடப்பது; அது அவன் கையதிறே; இத்தலையில் துணிவேயிறேயுள்ளது. கீழே - "போனாள்" என்னாநின்றாள், இங்கே - "போக்கிலேயொருப்பட்டாள்" என்னாநின்றாள்; இதுசேரும்படியென்? என்னில்:- இவள்போகையிலே ஒருப்பட்ட போதே போய்ப்புக்காளன்றோ? என்கிறாள். [இளமான் செல்லமேவினள் - கொல்லையென்பர் கொலோ, குணம்மிக்கனளென்பர்கொலோ] - அவள்கைகழிந்துகொடுநின்றாள்: இனியிருந்த நாம் என்கேட்கிறோமோ? இங்கிருந்தநாள் நம்

னுடைய ஹிதவசனங்கேட்கிலன்றே வழியிலுள்ளார்பரிகேட்பது அவள். இவன் வழிப் பட்டால் நல்வழியிலுள்ளார்வார்த்தை கேட்குமத்தொழியப் பெருவழியானர்வார்த்தை கேளான்.

மேவிநைந்துநைந்து விளையாடலுறாள் என்சிறுத்
தேவிபோய் * இனித்தன்திருமால் திருக்கோளூரில்*
பூவியல்பொழிலும் தடமுமவன்கோயிலும்கண்டு*
ஆவியுள்குளிர எங்ஙனேயுகக்குங்கொலின்றே. (5)

ஆ.—அஞ்சாம்பாட்டில், திருக்கோளூர்க்கு அணித்தான திருச்சோலையையும் அங்குள்ள பொய்கைகளையும் அவன்கோயிலையும் கண்டால் எங்ஙனே உகக்குமோ? என்கிறாள். [மேவி யென்று தொடங்கி] - அவனுடைய குணசேஷ்டிதாதிகளை அநுஸந்தித்து மிகவும் சிதிலையாய் விளையாட்டுகளிலும் மூனாள். ப்ராப்தயௌவனையன்றிக்கேயிருக்கிற பருவத்தில் இப்படி விலக்ஷணையாயிருக்கிற இப்பெண் பிள்ளை இதுக்கு மேலே தனக்கு ஸர்வஸ்வமான ச்ரிய:பதியுடைய திருக்கோளூரிலே போய். [பூவியல் பொழில்] - என்றும் பூத்திருக்கும்பொழில். [ஆவியுள் குளிர] - மிகவும் கமர்பிளந்திருக்கிற ஹ்ருதயம் உள் குளிரும்படி.

இ.—அஞ்சாம்பாட்டில், திருக்கோளூரில் சோலையையும் பொய்கைகளையும் அவன்கோயிலையும் கண்டால் எங்ஙனே உகக்குமோ ? என்கிறாள். [மேவி] - அவனுடைய ஸௌந்தர்யசீலாதிகளிலே நெஞ்சை வைத்து. [நைந்து நைந்து] - "நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சிடிந்துகும்" என்று சிதிலையாகா நின்றாள். [விளையாடலுறாள்] - பருவத்துக்கு அநுரூபமான வ்யாபாரத்தை விட்டாள். "மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர்தோள் கைவிட்டு" என்கிறபடியே அத்தலையைப் பற்றியாயிற்று இதில் உள்ளவற்றை விட்டது. [என்சிறுத்தேவி] - த்யாஜ்யோபாதேயவிபாகம், பருவம் நிரம்பாதவளவிலே இவள் உண்டாயிற்று! "பால்யாத் ப்ரப்ருதி ஸுஸ்நிக்த:" என்கிறபடியே, பருவம் நிரம்பாதிருக்கப் பிராட்டிமாரோடு ஒக்கச்சொல்லலாம்படி இருக்கிறபடி. [இனி - போய்] - இதிற்காட்டில் அங்கு என்ன? ஏற்றமுண்டாய்ப்போனாள். "தத் தஸ்ய ஸத்ருசம் பவேத்" என்றிருக்கமாட்டிற்றிலள். [தன்திருமால் திருக்கோளூரில்] - தனக்கு ஸர்வஸ்வமான ச்ரிய:பதி கண்வளர்ந்தருளுகிறவூரிலே. பிராட்டியோபாதி தன் பக்கல் வ்யாமுக்தனானவன் வர்த்திக்கிறவூரிலே என்றுமாம். [பூவியல் பொழிலும்] - நித்யவஸந்தமான பொழிலும். [தடமும்] - அதுக்குள்ளாகப் பரப்புமாறப்பூத்த தடாகங்களும்; அதுக்குள்ளாக அவன் கோயிலும் கண்டு. இங்கேயிருந்து அநுஸந்தித்து நோவுபட்டவள் காணப்பெறுகிறாளே! [ஆவியுள் குளிர] - கமர்பிளந்த ஹ்ருதயம் மறுநனையும்படி. [எங்ஙனேயுகக்குங்கொல்] - எங்ஙனே ப்ரீயப்படுகிறாளோ? இங்கேயிருந்து கிலேசப்பட்ட க்லேசத்ததைக்கண்ட நான், அந்த அநுபவப்ரீதி காணப் பெற்றிலேன். [இன்றே] - எனக்கு அவளைப்பிரிந்த சோகமேயாய்ச் செல்லுகிறது, அவளுக்கு நல்விடிவாய்ப் ப்ரீதியோடே செல்லுகிறதிறே.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. திருக்கோளூரில் சோலைகளையும் அங்குள்ள பொய்கைகளையும் அவன்கோயிலையுங் கண்டால் எங்ஙனே யுகக்குமோ? என்கிறாள்.

[மேவி] - பகவத்குணங்களிலே நெஞ்சைவைத்து. [நைந்துநைந்து] - ஆச்ரயங்களை யழிக்கும் பதார்த்தம்போலே குணங்கள் தானழிக்குமே: "நினைதொறும்சொல்லுந்தொறும்" இத்யாதி. இவள்மேவிற்று நிர்க்குணமாயிருப்பதொரு விஷயத்தோடன்றே; உயர்வறவுயர்நலமுடையவனையே யன்றே. [மேவி] - இங்கிருந்தகாலும் எங்களோடு பொருத்தமில்லை இவள். [நைந்துநைந்து] - நைந்துபின மாட்டாள்; தரித்திருக்கமாட்டாள். [விளையாடலுறாள்] - பருவத்துக்கு அநுரூபமான வ்யாபாரத்தைவிட்டாள். விளையாடுகையைத்தவிர்ந்துமேவி நைந்தாளன்று இவள்; இவ்விஷயத்திலே அவகாஹித்து, புறம்புள்ளவற்றை விட்டாளத்தனை. "மாற்பால்மனஞ்சுழிப்பமங்கையர்தோள்கைவிட்டு" - பகவத்குணங்கள் கொண்டு மூழ்க, புறம்புள்ளது கைவிட்டாள். நல்லதும்தீயதுமானால், தீயதுபோலன்றிறே நல்லது பண்ணிக்

கொள்ளும்படி. *பரமாத்மநி யோரக்தோ விரக்தோऽபரமாத்மநி* "மன்னாப்பால்பிறந்தார் பிறந்தெய்தும் பேரின்பமெல்லாம் துறந்தார் தொழுதாரத்தோள்" என்னுமாபோலே. [மேவினைந்துநைந்து விளையாடலுறாள்] – மௌக்த்யம் மாறி விதக்தையானாளல்லள். "சப்தாதிகள் ஹேயம்" என்று சாஸ்த்ரத்தாலேயறிந்து அவற்றை விட்டு "பகவத்விஷயம்நன்று" என்று கைவைத்தாளன்று. [என்சிறுத்தேவி] - தன்திருமால் என்று மேலே, பெரியதேவியைச் சொல்லுகையாலே, 'சிறுத்தேவி' என்று விசேஷிக்கிறாள். [என்சிறுத்தேவி] - பருவம் நிரம்பாதிருக்கச்செய்தேயும் பட்டங்கட்டின ப்ரதாநமஹிஷிகளோடொக்கச் சொல்லலாயிருக்கை. "என்பெண்பிள்ளை" என்கிற ப்ரதிபத்தியில்லைகாணும் இவள்தனக்கு. "பின்னைப்பிள்ளை பெண்பெறுவரே" இவளுக்கு ஹிதஞ்சொன்ன நாக்கைக் கழுவவேணுமென்கிறாள். [இனி-போய்] - வேறே சில கொண்டு போதுபோக்க வேண்டும் பருவத்திலே, அவற்றை விடும்படியான பாகம்பிறக்க இதுக்குமேலே ஓரேற்றஞ்சுமுண்டாகப்போகுமோ? [இனி] - இங்கேயிருக்கச்செய்தே *கோபஜநம்ஸ்மரந்நிதம்* பிறந்ததாகில், இனி அங்குப்போய் அநுபவிப்பதுண்டோ? [தன்திருமால்திருக்கோளூரில்] – அவள்பக்கல் இருக்குமாபோலேயாகாதே இவள்பக்கலிலும் அவன் இருக்கும்படி. லோகத்தில் சேஷசேஷிபாவம் போலன்றிறே ப்ரணயினிபக்கல் பரிமாற்றம். *பதிம் விச்வஸ்ய* என்கிறபடியே ப்ரமாணத்தைப்பார்த்துப் பரிமாறவொண்ணாதிறே, அபிமதவிஷயத்தில். தனக்கு ஸர்வஸ்வமான ச்ரிய:பதி கண்வளர்ந்தருளுகிற ஊரிலே. [பூவியல் பொழிலும்] - தழையும் தண்டும் கொம்பும் கொடியுமாய்த் தூராலாயிராதே, வெறும் பூவேயாயிருக்கை. நித்யவஸந்தமான சோலை. (பூவையியல்வான) [தடமும்] - அப்பொழிலை வளர்ப்பதாய்ப் பரப்புமாறப் பூத்த தடாகமும். [அவன்கோயிலுங்கண்டு] "மாமணிக்கோயிலேவணங்கி" என்கிறபடியே அவனிலும் அவன் விரும்பி வர்த்திக்கிற கோயிலையும் கண்களாரக் கண்டு. திவ்யாத்ம ஸ்வரூபத்துக்கு ப்ரகாசகமான திவ்யமங்களவிக்ரஹம்போலே, அவையிரண்டுக்கும் ப்ரகாசகமான கோயில். கோயிலைக் கண்டபோதே உள்ளுண்டான வஸ்துவையும் அறுதியிடலாயிருக்கை. உள்ளில் பொன்னுக்குத்தக்க செப்பாயிருக்குமிறே. [கண்டு] - இங்கேயிருந்து மாநஸாநுபவமாத்ரமாய் க்லேசப்பட்டவள் கண்ணாரக்கண்டு. "பிள்ளை திருநறையூரரையரும் பட்டருமாக உள்ளே ப்ரதக்ஷிணம்பண்ணாநிற்க, இட்ட அடி மாறியிடமாட்டாதே கண்களாலே பருகுவாரைப் போலே பார்த்து வாழ்ந்துகொண்டு போகிறபடியைப் பின்னே நின்று கண்டநுபவித்தேன்" என்று நஞ்சீயர் அருளிச்செய்வர். ஆச்சானும் ஆண்டானுமாகத் திறக்கே நடக்கிறபோது, திருப்பேருக்குத் திறக்குப் போகவும் மாட்டாதே, ஏறித்திருவடிதொழவும் மாட்டாதே, திருப்பேர்நகரான்கோயிலைப் பார்த்துக்கொண்டு இருந்தார்களாம். [ஆவியுள்குளிர] - இவ்விடத்தைப் பட்டர் அருளிச்செய்யாநிற்கச் செய்தே மேலெழ அருளிச்செய்தாராய், சீராமப்பிள்ளை யிருந்தவர் "சீயா! எம்பார் அருளிச் செய்யும்போது 'ஆவியுள் குளிர' என்று மூகந்துகொண் டருளிச்செய்யும்படி கேட்டறிகை யில்லையோ? என்றருளிச் செய்தார். கமர்பிளந்த பரப்படங்கலும் மறுநனையும்படியாயிருக்கை. [எங்ஙனேயுகக்குங்கொல்] - இவள் பருவம்நிரம்பாதிருக்கச்செய்தே புறம்புள்ளவற்றை விட்டு அவனை அநுஸந்தித்து சிதிலையாகிறபோது அவ்வழகுகண்டு அநுபவிக்கப்பெற்றேன்; அவனைக் கண்டநுபவிக்கிறபோதை அழகு நான் கண்டு வாழப்பெற்றிலேன் என்கிறாள். [இன்றே] எனக்கு சோகத்தாலே சூந்யமாய்க்கிடக்கிற இன்று அவளுக்கநுபவத்தாலே அடிக்கழஞ்சு பெற்றுச் செல்லுகிறதே! ஒருநாளிலே இப்படியாவதே! நான்வாசி யறிந்திருந்ததிறே விஷயாந்தரமாய் வருகையாலே.

இன்றெனக்குதவாதகன்ற இளமானினிப்போய்*
தென்திசைத்திலதமனைய திருக்கோளூர்க்கே
சென்று* தன்திருமால்திருக்கண்ணும் செவ்வாயுங்கண்டு*
நின்றுநின்றுநையும் நெடுங்கண்கள்பனிமல்கவே. (6)

ஒ.—ஆறும்பாட்டில், திருக்கோளூரிலேசென்று எம்பெருமானுடைய ஸ்நேஹபஹுமானமான வீக்ஷிதாதிகளைக்கண்டு ப்ரீதிப்ரகர்ஷத்தாலே மென்மேலென சிதிலையாகக் கடவளாகாதே யென்கிறாள். [இன்றுஎன்று தொடங்கி]-தன்னைப்பிரிந்து நோவுபடுகிற எனக்கு இத்தசைக்குத் துணையன்றிக்கேபோன சிறுப்பெண்பிள்ளை எனக்கு உதவாததுக்குமேலே தெற்குத்திக்குக்குத் திலகம்போலேயிருக்கிற திருக் கோளூரிலேபோய்ப்புக்குப் பெரியபிராட்டியார்பக்கல்போலே தன்பக்கல் ப்ரணயியானவன்.

இ.—ஆறும்பாட்டில், அவனுடைய ஸ்நேஹபஹுமாந வீக்ஷிதாதிகளைக் கண்டு ப்ரீதிப்ரகர்ஷத் தாலே சிதிலையாகக்கடவளாகாதே யென்கிறாள். [இன்றுஎனக்கு உதவாதகன்ற] - தன்னைப்பிரிந்து நோவு படுகிற இத்தசையில் துணையின்றிக்கேயிருக்கிற எனக்கு உதவாதே கைகழியப்போன. தன்னைப்பிரிந்து நோவுபடுமன்று உதவுகைக்கன்றோ தன்னைப்பெற்றது; இத்தசைக்கு உதவாளாகில், இனி எற்றைக்கு உதவ இருக்கிறாள்? ''இமாமவஸ்த்தாமாபந்நோ நேஹபச்யாமி ராகவம்''. [இளமான்] - ''உதவப்பெற்றிலோம்'' என்று அநுதபிக்கவும் அறியாத பருவம். [இனிப்போய்] - பெற்றாரை விடும்படி அவ்விஷயத்திலே அவகாஹித்த இதுக்குமேல் என்ன ஏற்றம் பெறப்போகுள்? பெற்றாரைவிட்டுப் பற்றுமதிறே ப்ராவண்யத் துக்கு எல்லை. [தென்திசை இத்யாதி] - தெற்குத்திக்குக்குத் திலதமான திருக்கோளூரிலேசென்று. பலஹாநியாலே போய்ப்புகுகையில் உண்டான அருமையைச் சொல்லுகிகிறது. [தன்திருமால்] - ''பிதாமாதாச மாதவ:'' என்று நிருபாதிகபந்தத்தைக் காட்டியாயிற்று ஸோபாதிகபந்தத்தை அறுத்தது. [திருக்கண்ணும்] - நெடுநாள் பிரிந்துபட்ட விடாய் தீர பஹுமாநந்தோற்ற நோக்கும் கண். [செவ்வாயும்]- ஸாபராதனுனேன் என்று தாழ்வுதோற்றச் சொல்லும் அதரமும். [கண்டு]-''நோபஜநம் ஸ்மரந் இதம்சரீரம்'' என்னும்விஷயத்தையிறே கண்டது. [நின்றுநின்று நையும்] - ப்ரீதிப்ரகர்ஷத்தாலே காணக்காண சிதிலை யாகாநின்றாளிறே. [நெடுங்கண்கள் பனிமல்கவே] - கண்களின் பரப்படங்கலும் ஆநந்தாச்ருவாலே பூர்ண மாகிறதிறே.

ஈடு.—ஆறும்பாட்டு. அவனுடைய ஸ்நேஹபஹுமாநவீக்ஷிதாதிகளைக் கண்டு ப்ரீதிப்ரகர் ஷத்தாலே சிதிலையாகக்கடவளாகாதே யென்கிறாள். இவள்தான் உகப்பது அங்கே புக்குத் தரித்துநிற்கவல்லளானுளிறே. ''எங்ஙனேயுகக்குங்கொல்'' என்றாள் கீழிற் பாட்டில்; இங்ஙனே புகக்குமென்கிறாள் - இப்பாட்டில்; மகள் காணப்புகுகிறவிஷயத்தை யநுஸந்திப்பது, தன் மகள் படியை யநுஸந்திப்பதாய்த் திருத்தாயார் படுகிறபாடு என்தான்!

[இன்று எனக்கு உதவாதகன்ற] - பிள்ளைபெற்று வளர்க்கிறது ஆபத்துக்கு உதவு கைக்கன்றோ? தன்னைப்பிரிந்த இத்தனிமைக்கும் இத்தசைக்கும் மேற்பட எனக்கோர் ஆபத் துண்டோ? இன்றெனக்கு உதவாதொழிவதே! *அதோநு கிம் துःக்கதரம் ஸோऽஹமிக்ஷ்வாகுநந்த நம், இமாமவஸ்த்தாமாபந்நோ நேஹபச்யாமி ராகவம்.* - நான் நெடுங்காலங்கூடி வருந்தித் தம்மைப் பெற்றது, தம்மைப்பிரிந்து நான் இவ்வவஸ்த்தையைப் ப்ராபித்த இற்றைக்கன்றோ? இன்று தம்மை நான் காணுதொழிவதே! என்றானிறே. [எனக்குதவாது] சக்ரவர்த்தியில் தனக்குண் டானவாசி: ''நின்று தூங்குகின்றேன்'' என்னுமாபோலே; அல்லாத தாய்மாரைப்போலேயோ நான் தனக்கிருப்பது? தன் உகப்பே எனக்கு உகப்பாக இருக்குமவளன்றோ நான். இவளுடைய அபிமதவிஷயத்துக்கு கடகையும் தானேயிறே, ''பிரானிருந்தமை காட்டினீர்'' என்று. ''அன்னை யும் அத்தனுமென்று அடியோமுக்கு இரங்கிற்றிலள்'' - பிள்ளைகாள்! போகட நினைப்பார் பழி யிட்டுப் போகவேணுமோ? அடியாரை நியாமகரென்னவேணுமோ? வழிக்குத் துணையானாரை நிவாரகர் என்று போகடுவதே! [அகன்ற] - இப்படி கைகழியப்போவதே! ஒருதேசத்தே நின்று தான் உதவாதொழியப்பெற்றேனோ? [இளமான்] - ''போகட்டது தாயையிறே'' என்றறிக்கு மளமாட்டாத பருவங்கிடீர்! இவளைநான் வெறுக்கிறதென்? பருவம் அதுவானால் செய்யலாவது உண்டோ? [இனிப்போய்] - உறவுமுறையாரில் தாய்க்கு மேற்பட்டார் இல்லையிறே! இப்படி தாயுங்கூடப் புறம்பாம்படி அவன்பக்கலிலேபிறந்த பாவபந்தத்துக்குமேலே ''அவ்வருகே யொன்றுண்டு'' என்று போனுளோ? வந்தேறியைக் கைவிட்டால், ஸ்வதஸ்ஸித்தமானதுக்குச் செய்யவேண்டுவதொன்றுண்டோ? [தென்திசை இத்யாதி] - ''தெற்குத்திக்கு'' என்றுகொண்டு,

ஆபரணங்களுக்குந் தப்லேச்சபூமியிறே: இங்ஙனே யிருக்கச்செய்தே, ஓர் ஆபரணந்தானே எல்லா ஆபரணங்களுக்கும் நிறங்கொடுக்கவற்றுமாபோலே, திருக்கோளூருண்டாகையாலே திக்காக ஸ்வர்க்கமானபடி. *தக்ஷிணா திக் க்ருதா யேந சரண்யா புண்யகர்மணா* என்னுமாபோலே. [திருக் கோளூர்க்கே சென்று]-திருத்தாயார்க்கு அரிதாய்த் தோற்றுகிறபடி. அவளுக்கு வழிப்போக் கோடு, ஊர்ல்புகுதியோடு, அவன் தன்னைக் காணுமத்தோடு வாசியற எல்லாம் உத்தேச்யமா யிருக்குமிறே. அர்ச்சிராதிகதியோடு, பரமபதத்தோடு, அங்குப்புக்கால் ஸதா தர்சகம்பண்ணும் ஸூரிகளோடு வாசியற ப்ராப்யாந்தர்க்கதமாகக் கடவதிறே. [தன் திருமால்]-*ஸர்வேஷாமேவ லோகாநாம் பிதா மாதா ச மாதவ:*-இங்குவிட்ட உறவெல்லாம் அங்கேயுண்டாயிருக்கிறபடி. அவனுடைய ப்ராப்யவேஷந்தான் லக்ஷ்மீபதியாயாகாதே யிருப்பது. விசிஷ்டவேஷத்திலல்லது ப்ரதிபத்தி பண்ணவறியாள். [திருக்கண்ணும்செவ்வாயுங்கண்டு] - "இவன் முற்படும்படி நாம் பிற்பாடரா னோமே!" என்று பொறைகொள்ளுகைக்குக் குளிர நோக்குகிறநோக்கும், சிலசொல்லப்புக்குத் தடுமாறுகிற திருப்பவளமும் இருக்கிறபடி. அவனுடைய கோவைவாய் துடிப்ப மழைக்கண்கள் இருக்கிறபடி. [நின்று நின்று நையும்] - நாட்செல்ல நாட்செல்ல இற்றிற்றுவிழும். கண்டால் முன்புத்தைப்பிரிவை நினைக்கஅறியாள்; எதிர்த்தலை படுகிறது கண்டு ஈடுபடுகிறபடி. "காணுங்காற்காணேன் தவறாய காணாக்கால், காணேன் தவறல்லவை" என்றிறே இருப்பது. (அதாவது - நாயகனை யுன்னைக் காணும்போது தப்பானது கண்டறியேன். காணாதபோது தப்பல்லாதது கண்டறியேன்.) [நெடுங்கண்கள்பனிமல்கவே] - இக்கண்ணில் பரப்படங்கலும் பரப்புமாறும்படி. இலதத்த்வம் உண்டாவதே! [நின்றுநின்றுநையும்] - மாறாதே சிதிலையாகா நின்றாள். கிண்ணகத்தில் இளகின கரைபோலே உடைகுலைப்படுகிறபடி. [நெடுங்கண்கள் பனிமல்கவே] நெஞ்சுக்கு சைதில்யம்போலேகாணும் கண்ணுக்குக் கண்ணநீர். காணப்புகக் கொண்டு கண்ணநீர் பகைகொண்டாடாநின்றது. ஆநந்தாச்ருவோடு சோகாச்ருவோடு வாசி யில்லையிறே; விலக்குமதெல்லாம் பாதகமாகக்கடவது; *த்ரஷ்டவ்ய:* என்னும் விஷயத்தை நான் அநுபவிக்கப்பெற்றிலேன்.

மல்குநீர்க்கண்ணொடு மையலுற்றமனத்தனளாய்*
அல்லுநன்பகலும் நெடுமாலென்றழைத்திளிப்போய்*
செல்வம்மல்கியவன்கிடந்த திருக்கோளூர்க்கே*
ஒல்கியொல்கிநடந்து எங்ஙனேபுகுங்கொலோசிந்தே? (7)

ஒ.—ஏழாம்பாட்டில், இவள்ப்ரக்ருதிமார்த்தவத்தையும் எம்பெருமானைப் பிரிந்து சிதிலையா யிருக்கிறபடியையும் அநுஸந்தித்து, இவள்புக்கால் படும்படியை அநுஸந்திக்கவேண்டுவது அவள் அவ்வளவும் சென்று புகவல்லளாகிலிறே என்கிறாள். [மல்கு என்றுதொடங்கி] - பகவத்குண ஸ்மரணத்தாலே நீர்துளும்பாநின்ற கண்ணையும் அநுஸந்தாநம்பண்ணவொண்ணாதபடி அறிவுகெட்ட மநஸ்ஸையும் உடையவளாய், அல்லாதார்க்குப்போலே வ்யர்த்தமேபோகிறகால மல்லாமையாலே, ச்லாக்யமான பகலும் இரவும் அதிவ்யாமுக்தனே! என்று கூப்பிட்டு இதுக்குமேலே ஒரு புருஷார்த்தம் தேடிப்போய். [செல்வம் மல்கி என்று மேலுக்கு] - ஐச்வர்யம்மிக்கு அவன் கிடந்த திருக்கோளூர்க்கே தன்னுடைய பலஹாநியாலே தளர்ந்து வாடிவாடி எங்ஙனே போய்ப்புகக்கடவள்?

இ.—ஏழாம்பாட்டில், இவள்ப்ரக்ருதிமார்த்தவத்தையும், பிரிவால் வந்த சைதில்யத்தையும் அநுஸந்தித்து, இவையெல்லாம் அவ்வளவும்செல்லப் போகவல்லளாகிலிறே என்கிறாள். [மல்குநீர் இத்யாதி] - பகவத்குண ஸ்ம்ருதியாலே நீர்மல்கின கண்களையும், அநுஸந்திக்கவொண்ணாதபடி அறிவு கெட்ட மநஸ்ஸையும் உடையளாய், உள்ளும்புறம்புமொக்க இருண்டுகிடக்க, எங்ஙனேபோம்படி? கண்ணநீராலே பதார்த்த தர்சநமில்லை; திக்ப்ரமமுண்டாம்படி அகவாய்இருண்டது. நல்ல இரவும் நல்ல பகலும், மநஸ்ஸஹகாரமுமின்றிக்கேயிருக்க, அதிவ்யாமுக்தனே! என்று கூப்பிடாநின்றாள். இழவிலும்

அவ்விஷயத்தையே சொல்லிக் கூப்பிடுகையாலே ச்லாக்யமான காலம் என்கிறாள். தன் வ்யாமோஹத்தைக் காட்டியிறே இவளை யலவலையாக்கிற்று. [இனிப்போய்] - அஹோராத்ரம் அவன்வ்யாமோஹத்தை அநுபவிக்கிற இவ்விடத்தைவிட்டு என்ன ஏற்றம் பெறப்போனாள்? "யௌவனச காசித் ப்ரேமாந்தா" என்கிறபடியே இருட்சி கைகொடுக்கவிறே போயிற்று. [செல்வம்மல்கி யவன்கிடந்த] - ஐச்வர்யம் மினுங்க அவன்கிடந்ததேசம். "ஸ்ரீமாந் ஸுகஸுப்த: பரந்தப:" என்ற கிடையழகு காணவாயிற்று இவள் போயிற்று. "கிடந்ததோர் கிடக்கை" என்னக்கடவதிறே. சாய்ந்தபோதாயிற்று அழகுமிக்கிருப்பது. [ஒல்கி யொல்கி] - ஒடுங்கியொடுங்கி; ஓரடியிடும்போது நடுவே பலகால் இளைப்பாறவேண்டும்படியிருக்கை. [ஒசிந்து] - துவண்டு எங்ஙனே போய்ப்புகக்கடவள்.

௭டு.—ஏழாம்பாட்டு. இவள்ப்ரக்ருதிமார்த்தவத்தையும் பிரிவில்வந்த சைதில்யத்தையும் அநுஸந்தித்து, இவையெல்லாம் அவ்வளவும்செல்லப் போகவல்லளானாளேயென்கிறாள். நாம் இங்ஙனே கலப்படுக்கிறேமத்தனையொழிய, இவள் போய்முடியப் புகாநின்றாளோ?

[மல்குநீர்க்கண்ணொடு மையலுற்றமனத்தனளாய்] - "என்றேனும் கட்கண்ணாற்காணாத அவ்வுருவை நெஞ்சென்னும் உட்கண்ணேற்காணும்" என்னும் இரண்டுமொழிய இவளெங்ஙனேபோனபடி? கண் - மல்குநீர்க்கண்ணாயிற்று: மனம் மையலுற்றமனமாயிற்று. அகவாயும் இருண்டு புறவாயும் இருண்டிருக்க, இவள் எங்ஙனே போனபடி? கண்ணநீராலே கண்தோற்றாது: ப்ரேமாந்தையாகையாலே நெஞ்சு இருண்டு தோற்றாது. [மல்குநீர்க்கண்ணொடு மையலுற்றமனத்தனளாய்] - இரண்டுக்கும் இரண்டும் நிரூபகமாயிருக்கிறபடி. [மையலுற்றமனத்தனளாய் நெடுமால் என்றழைத்து] - நெஞ்சொழியவோதான் கூப்பிட்டது. [அல்லும்நன்பகலும்] - பகவத்விஷயத்திலே அவகாஹித்துக் கூப்பிடுகிற காலமாகையாலே, நல்லிரவும் நன்பகலும் என்கிறாள். நாட்டார் க்ஷுத்ரவிஷயங்களை ஆசைப்பட்டுக் கூப்பிடாநிற்க, "எல்லாங்கண்ணன்" என்று கூப்பிடுகிறவாளிறே. [நெடுமால்என்றழைத்து] - அவன் தன்பக்கல் பிச்சேறியிருக்கும் படியைச் சொல்லிக்கூப்பிட்டு. [இனிப்போய்] - அவன் தன்பக்கல் பண்ணும் வ்யாமோஹத்தைச் சொல்லிக் கூப்பிடுமிதுக்குமேலே தன் வ்யாமோஹங்காட்டப்போனாளே. கண்ணுந் தோற்றாதே நெஞ்சும் பறியுண்டிருக்குமிதுக்கு மேலே, இனிப்போய், வேறேயொன்றுண்டோ அநுபவிப்பது? [செல்வம்மல்கி அவன் கிடந்ததிருக்கோளூர்க்கே] எதிரே பாதிவழிவந்து மூக்கிலேவிழித்து உடம்பிலே அணைத்துக்கொண்டு போகாதேபொழிந்தது ஐச்வர்யச்செருக்கிறே! ஐச்வர்யத்தால்வந்த செருக்கு அன்றாகில் இவ்வரவு அவனன்றோ வருவான்? வழியேபிடித்து வாழ்த்துகொண்டுபோகலாயிருக்க, செருக்காலே இழந்தானென்கிறாள். [செல்வம்மல்கியவன் கிடந்த] - *ஸ மயா போதித:ச்ரீமாந்* என்கிறபடியே, அழகுமிக்குக்கிடந்த என்னவுமாம். [அவன் கிடந்த] - *ஸுகஸுப்த:* என்ற கிடையழகுகாணவாயிற்று இவள் ஆசைப்பட்டுப்போயிற்று: "கிடந்ததோர்கிடக்கை" என்னக்கடவதிறே. [அவன்கிடந்த] - அவன்வரவு பார்த்து இவள் இருக்கையன்றிக்கே, இவள்வரவு பார்த்து அவன்கிடக்கும்படியாவதே! [ஒல்கியொல்கிநடந்து] ஓரடியிலே பத்தடியிட வேண்டும்படியாயிருக்கை. [ஒசிந்து] - துவண்டு. [ஒல்கியொல்கிநடந்து ஒசிந்து - எங்ஙனேபுகுங்கொல்] - ஒடுங்கியொடுங்கிநடந்து, அதுபொறாமல் துவண்டு, எங்ஙனே புகக்கடவளோ? [நடந்தெங்ஙனேபுகுங்கொல்] - நடந்திலளாகில், போய்ப்புகலாம்என்றிருக்கிறாள்காணும். அன்னமென்னடைப்பூங்குழலியாகையாலே, இவ்வன்னநடைகொண்டு புகமாட்டாள் என்றிருக்கிறாள்.

ஒசிந்தநுண்ணிடைமேல் கையைவைத்துநொந்துநொந்து*
கசிந்தநெஞ்சினளாய்க் கண்ணநீர்துளும்பச்செல்லுங்கொல்*
ஒசிந்தவொண்மலராள்கொழுநன் திருக்கோளூர்க்கே*
கசிந்தநெஞ்சினளாய் எம்மைநீத்தவெம்காரிகையே. (8)

ஒ.—எட்டாம்பாட்டில், திருக்கோளூரில் ஸங்கத்தாலே என்னைப் பொகட்டுப்போன என்பெண்பிள்ளை, அஸ்ஸங்கமே துணையாக அங்கேபோய்ப் புகவல்லளேயோ? என்கிறாள். [ஒசிந்த என்று தொடங்கி] - துவண்டு' நுண்ணிதாயிருக்கிற இடைமேலே தன்னுடைய ச்ராந்தியாலே கையைவைத்து

மிகவும் அவஸந்நையாய். [ஒசிந்த ஒண்மலராள் கொழுநன்] - தன்னோட்டை ஸம்ச்லேஷத்தாலே துவண்ட திருமேனியையுடைய பெரிய பிராட்டியார்க்கு நாயகனானவன். இத்திருவாய்மொழியில், பல விடத்திலும் "என்பெண்பிள்ளை" என்று சொல்லுகைக்குக் காரணம்:--அவள் நசையற்றபின்னும் அவள்மேல் தனக்கு நசையறுகை.

இ.—எட்டாம்பாட்டில், திருக்கோளூரில் ஸங்கத்தாலே என்னைப் பொகட்டுப்போனவள், அஸ்ஸங்கமே துணையாக அங்கேபோய்ப் புகவல்லளோ ? என்கிறாள். [ஒசிந்த நுண்ணிடைமேல்] - தொட்டார்மேலே தோஷமான நொய்ம்மை. அதுக்குமேலே ஸ்தநபாரத்தாலே வந்த துவட்சி. அதின் மேலே, [கையை வைத்து] - ச்ராந்தியாலே இடையிலே கையைவைத்தாள்; அது பொறுமையாலே ச்ராந்திஹேதுவாயிற்று. [நொந்து நொந்து] - மிகவும் அவஸந்நையாய். பலஹாநியைப் பரிஹரிக்கைக்காக விளைவதறியாதே செய்தாள்: அத்தாலே பலஹாநியை விளைத்தாளாய்விட்டது, [கசிந்த நெஞ்சினளாய்] - நெஞ்சில் பலஹாநியிருக்கிறபடி. [கண்ணநீர் துளும்ப] - நெஞ்சை நோவுபடுத்துகிற வகை யிருக்கிறபடி. [செல்லுங்கொல்] - அங்கேபோய்ப் புகவல்லளோ ? [ஒசிந்த ஒண்மலராள் கொழுநன்] - வண்டாலே ஆத்தஸாரமான புஷ்பம்போலே, நித்யஸம்ச்லேஷத்தாலே துவண்டிருக்கிற பிராட்டிக்கு நாயகன். இருவருடையவும் சேர்த்தியாயிற்று இவளைக் கொண்டுபோயிற்று. அவனுடைய ப்ரணயித்வமிறே இவளை யிருக்கவொட்டாதொழிந்தது. திருக்கோளூரிலே ஸங்கத்தைப்பண்ணின நெஞ்சையுடையவளாய். [எம்மை இத்யாதி] - என்னைப் பொகட்டுப்போன என் பெண்பிள்ளை தன்னை ஸங்யஸித்துப்போனபின்பும் தன் சாபலத்தாலே ஒருதலைவிடாதொழிகிறாள். [கசிந்த நெஞ்சினளாய் எம்மைநீத்த எங்காரிகை - கசிந்தநெஞ்சினளாய் - செல்லுங்கொல்] - அங்குத்தை ஸங்கம் என்னோட்டை உறவறுக்குமித்தனையோ ! அங்கே கொடுபோகவும் வற்றே !

ஈடு.—எட்டாம்பாட்டு. திருக்கோளூரில் ஸங்கத்தாலே என்னைப்பொகட்டுப்போன என் பெண்பிள்ளை, அஸ்ஸங்கமே துணையாகப் போய்ப்புகவல்லளேயோ? என்கிறாள்.

[ஒசிந்தவித்யாதி] - இவள் நடவாதேயிருந்தாலும், நினைத்தால் வயிறெரியவேண்டும்படி யன்றோ இடையிருப்பது! [நுண்ணிடைமேல் கையை வைத்து] - நடுவொன்றில்லையென்று அறிகிறிலள். தன் கையை வைக்கவும் பொறுதிறே தன்னிடைதான்; "மின்னையும் வஞ்சியையும் வென்றிலங்குமிடையாள்" என்று, அவன் கூடப்போகச்செய்தேயும் அஞ்சவேண்டும்படியான இடையிறே. ஒசிந்து - துவண்டு, நுண்ணிதாய் நேரிதான இடை. பலசொல்லியென்? நடுவொன்றில்லை என்கை. அதாவது - "இற்றது, முறிந்தது இப்போது, பின்னை" என்று பயப்படவேண்டும்படியாயிருக்கை. [ஒசிந்தநுண்ணிடைமேல் கையைவைத்து] - இப்படி விழுக்காடறியாதார் உண்டோ! நாயகன் கைவைக்கப்பொறுக்குமத்தனை போக்கித் தன்கைவைக்கப் பொறுக்குமோ? தொடுங்காலொசியும் இடையிறே. அடியே பிடித்துக் கரோபத்ரவம் கனத்திறேயிருப்பது. [கையைவைத்து] - மலைவைத்தென்னுமாபோலே. [நொந்துநொந்து] - கைவாங்கமாட்டாள்; நோவாதிருக்கமாட்டாள். ஸஹஜசத்ருக்களோடே கூடி ஜீவித்துக்கிடக்கலாம்; வந்தேறிகள் கீழ்ப்பிழைக்கவொண்ணாதிறே! [நொந்துநொந்து] - மிகவும்நொந்து: முதலிலே அபாவத்திலே நிலையான இடையிலே ஸ்தநபாரங்கொண்டு ஆற்றவொண்ணாதிருக்க, வந்தேறியான கைகொண்டு பொறுக்கவொண்ணுமோ? [கசிந்த நெஞ்சினளாய்] - இடையினுடைய நொய்ம்மைசொல்ல, நெஞ்சோதான் சாலப்பருத்திருக்கிறது? நெஞ்சில் ஈரமிருக்கிறபடி. [கண்ணநீர் துளும்ப] - இது தனக்கும் ஊற்றிறே அது. [செல்லுங்கொல்] - இனி ஸர்வதாபீனாளிறே. வழியில் பிறுக்குக்கள் கழித்துப் புகவல்லளோ? [ஒசிந்த இத்யாதி] - பிரிந்தார் துவட்சிசொல்லுகைக்குக் கலந்தாரோதான் துவளாதேயிருக்கிறார்? வண்டாலே ஆத்தஸாரமாயிருக்கிற பூப்போலேகாணும் நித்யஸம்ச்லேஷத்தாலே துவண்டிருக்கும்படி. ஒண்மலராள் கொழுநன் உண்டு அவளுடைய வல்லபன்; அவனுடைய திருக்கோளூர்க்கே. [கசிந்தநெஞ்சினளாய்] - ஸ்நேஹமான மநஸ்ஸையுடையளாய். பற்றுகைக்கு அவ்வூரேயாகவமையும், விடுகைக்கு நாத்தாயாகவமையும், [ஒண்மலராள்கொழுநன் திருக்கோளூர்க்கே கசிந்தநெஞ்சினளாய்] - அவனுடைய ப்ரணயித்வத்திலே அகப்பட்டவள் இனி மீளப்புகுகிறாளோ? ஒண்மலராள்கொழுநன் என்று

அவனுக்கு ஏற்றம் இருக்கிறபடி. திருமகளார் தனிக்கேள்வனென்னும் பெருமையுடைய பிரானுர். [எம்மை நீத்தவெங்காரிகையே] - அவளுக்கு இங்குள்ள மமகாரங் குறியக்குறிய, அது தானே ஹேதுவாகாநின்றது திருத்தாயாருக்குப் பற்றுகைக்கு. பகவத்விஷயத்திலே அவகாஹிக்கையும், வ்யதிரிக்தங்களை விடுகைக்கெல்லை இவ்வளவாகையும், இப்படிவிட்டால் பின்பு அவர்கள்தாங்களே உத்தேச்யரென்னுமிடமுஞ் சொல்லுகிறது. புறம்புள்ளவற்றை விடப் பண்ணுவித்துக்கொண்ட விஷயத்தில் ஜ்ஞாநலாபமிறே இவளுக்குவேண்டுவது! இவள்ஸம்பந்தமேயிறே திருத்தாயாருக்கு வேண்டுவது! [கசிந்தநெஞ்சினளாய் எம்மைநீத்தவெங்காரிகை ஒசிந்த ஒண்மலராள் கொழுநன் திருக்கோளூர்க்கே கசிந்தநெஞ்சினளாய்க் கண்ணநீர் துளும்பச் செல்லுங்கொல்] - இவள் என்னைவிடும்படி பண்ணிக்கொண்ட விஷயத்தில் ப்ராவண்யமானது அவ்வூரில் ப்ரவேசத்தையும் பண்ணிக்கொடுக்கவற்றோ? 'எம்மைநீத்த' என்று நிச்சயித்தாள்; 'செல்லுங்கொல்' என்று ஸம்சயியாநின்ருள்; ப்ரேமம் இரண்டையும் பண்ணிக்கொடுக்குமிறே; பாரவச்யத்தை விளைத்து இடையிலே பொகடிலும்பொகடும்; அன்றிக்கே, கொண்டு போய்ப் பொகடிலும் போகடுமிறே.

காரியம்நல்லனகளவைகாணில் என்கண்ணனுக்கென்று*
ஈரியாயிருப்பாள் இதெல்லாம்கிடக்கஇனிப்போய்*
சேரிபல்பழிதூஉயிரைப்பத் திருக்கோளூர்க்கே*
நேரிழைநடந்தாள் எம்மையொன்றும்நினைத்திலளே. (9)

ஒ.—ஒன்பதாம்பாட்டில், எம்பெருமான்பக்கலிலே அத்யந்தம் ப்ரவணையாயிருக்கிற இவள், சேரியில் உள்ளார் சொல்லும்பழியே வழிக்கு: பாதேயமாகக்கொண்டு திருக்கோளூர்க்கே போனாள் என்கிறாள். [காரியமென்று தொடங்கி] - முதலிலே ஒன்றும் அநுஸந்திக்கமாட்டாள்; அங்ஙனே இருக்கச்செய்தே, விலக்ஷணமான அவ்வவ பதார்த்தங்களை ஒருகால் அநுஸந்தித்தாளாகில் என் க்ருஷ்ணனுக்கு என்று மேலொன்றும் சொல்லமாட்டாதே நீராகா நிற்குமவள் இங்கு அவனை நினைத்திருக்கும் இருப்புகள் எல்லாம் தவிர அதுக்குமேலே ஒரு புருஷார்த்தம் தேடி. [சேரியென்று தொடங்கி] - தங்கள் சேரியிலுள்ளார் பலபழிகளைச் சொல்லி கோஷியாநிற்கத் திருக்கோளூரிலே பெண்பிள்ளை போனாள். திருக்கோளூர்க்குப் போகையாலே - தன் பெண்பிள்ளையேயாகிலும், நடந்தாளென்று ஸபஹுமானமாகச் சொல்லுகிறாள். [எம்மையென்று தொடங்கி] - எம்மைத் தனக்கு ப்ரதிகூல கோடியிலும் நினைத்திலள்.

இ.—ஒன்பதாம்பாட்டில், அவன்பக்கல் அத்யந்தம் ப்ரவணையாயிருக்கிற இவள், சேரியிலுள்ளார் பழியே பாதேயமாகத் திருக்கோளூர்க்கே போனாள் என்கிறாள். [காரியம் நல்லனகள் அவைகாணில்] - பதார்த்தங்களில் நன்றானவற்றைக் காணில். [என் கண்ணனுக்கென்று] - ஒன்றிலும் கண்வைப்பதில்லை; கண்டாளாகில், எனக்காகத் தன்னை யோக்கிவைத்த க்ருஷ்ணனுக்கென்னும். [ஈரியாயிருப்பாள்] - "க்ருஷ்ணனுக்கு" என்றால் மேலொன்றுஞ் சொல்லமாட்டாதே, அவன்குணங்களை அநுஸந்தித்து நீராயிராநின்றாள். ஈரித்திருக்கும்-ஆர்த்ரஹ்ருதயையாயிருக்கும். [இதெல்லாங்கிடக்க] - விலக்ஷண பதார்த்ததர்சநத்தில் "அவனுக்கு" என்கை, அவன்குணாநுஸந்தாநத்தாலே விக்ருதையாகை, இவற்றை அளவிறந்தஸம்பத்தாக நினைத்திருக்கிறாள் இவள். கண்டத்தை "மமேதம்" என்று இராதே, 'அவனுக்கு" என்றிருக்கையிறே ஸம்பத்து. [இனிப்போய்] - பாவசுத்தியாலே துஷ்டனுமவனுக் கொன்று செய்யப் புறப்பட்டுப்போனாளோ? இத்தலையிலுள்ளதொன்றில்லை, அவனுக்கு வேண்டுவதொன்றில்லை. "சேரியிலுள்ளார்பழிகளைச்சொல்லி, கடல்கிளர்ந்தாப்போலேகோஷிக்க. [பல்பழி] - "போகநினைத்தாள்," புறப்பட்டாள்," "தனிவழியே போனாள்," "தாயைப் பொகட்டுப் போனாள்," "குலத்தைப் பார்த்திலள்," "அவனைப் பார்த்திலள்" என்றாப்போலே. [நேரிழை இத்யாதி] - திருக்கோளூரிலே போகையாலே, போனாள் என்னாதே, நடந்தாள் என்கிறாள்: வயிற்றிற்பிறந்தாரேயாகிலும் பகவத்விஷயத்திலே யோரடிவராநின்றால் கௌரவித்து வார்த்தைசொல்ல வேணும்என்கை [எம்மை

யொன்றும் நினைத்திலளே] - வழித்துணையாக நினைத்திலள்; அங்கே நின்று எதிர்கொள்ளுவாரிலே ஒருத்தியாக நினைத்திலள்; பழிசொல்லுவார்கோடியாகவும் நினைத்திலள்; "குரவ: கிங்கரிஷ்யந்தி" என்றும் நினைத்திலள்.

௯.—ஒன்பதாம்பாட்டு. அவன்பக்கலிலே அத்யந்தப்ரவணையாயிருக்கிற இவள், சேரியிலுள்ளார்சொல்லும்பழியே பாதேயமாகத் திருக்கோளூர்க்கே போனாளென்கிறாள்.

[காரியம்நல்லனகள் அவைகாணில்] - பூதலிலே காண்பதில்லை; பதார்த்தங்களில் நல்லது காணில், தன்னை எனக்காக ஒக்கிவைத்த க்ருஷ்ணனுக்குளென்னப்புக்கு அந்த ப்ரஸ்தாவத்திலே நெஞ்சு நெகிழா, பின்பு அதுதானும் மாட்டாதேயிருக்கும். *த்ருஷ்ட்வா பலம்வா புஷ்பம்வா* என்று அவன் சொல்லுமவையெல்லாம் இவள்சொல்லுகிறபடி. நல்லதுகண்டால், "அவனுக்கு," என்று இருக்குமதுக்குமேலே அவ்வருகேயொன்று தேடிப்போனாளே! இவளுக்காகத் திருக்கோளூரிலேவந்து, தன்னை இவளுக்கோக்கிவைத்தபடி. [இதெல்லாங்கிடக்க] - *ஸர்வாந் போகாந் பரித்யஜ்ய* என்னுமாபோலே. "உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாங்கண்ணன்" என்றும், ஊரும்நாடும்உலகமுந்தன்னைப்போல் அவனுடைய பேருந்தார்களுமே பிதற்றக் கற்புவானிடழியும், பூவைபைங்கிளிகள் பந்துதூதை பூம்புட்டில்கள் யாவையும் திருமால்திருநாமங்களே கூவியெழுந்தும், காரியம்நல்லனகள் அவை காணில் என்கண்ணனுக்கு என்று ஈரியாயிருக்கும் இதெல்லாங்கிடக்க - இந்த நிரவதிகஸம்பத்துக் கிடக்க. [இனிப்போய்] - "தனக்கு" என்கிற ப்ரதிபத்திமாத்ரத்திலே உண்டறுக்க மாட்டாதவனுக்கு ஒன்றுகொடுத்துக் குறைதீரப்போனாளே. *தே-பூயிஷ்ட்டாம்* என்றிறே அவனிருப்பது. அவன்படியை நினைத்தால், இவளுக்கு இங்கேயிருக்க அமையாதோ! [சேரிபல் பழிதூஉயிரைப்ப] - பொகடும்வழித்துணைபெற்றவாறே போனாளத்தனை. ஒருவர் இருவரன்றே! இனி .யொருவர்சொல்லிற்றொருவர் சொல்லார்களிறே. [பல்பழிதூஉயிரைப்ப] - தன்னை அவனுக்குஆக்கிவைத்தாள்; பின்னையதுதானும் மாட்டிற்றிலள்; புறப்பட்டுப் போனாள்; தாயைப்பார்த்திலள்; ஊரார்பழிபார்த்திலள்; இத்தனையும் செய்தால் அவன்தான் எதிரேவரப் பெற்றதில்லை என்று இப்புடைகளிலே ஒருகோடியிறே சொல்லுவது. "அலரெழவாருயிர் நிற்கும்" என்று வழிக்கு தாரகமாமிறே. [நேரிழை நடந்தாள்] - கடைப் பணிக்கூட்டங் கண்டுகொண்டு பின்னேபோகவாகாதேதான் இவள் ஆசைப்படுகிறது. [நடந்தாள்] - தன்பெண்பிள்ளையே யாகிலும், "திருக்கோளூரிலேபோக" என்று நாலடி புறப்பட்ட இவளை இங்ஙனல்லது சொல்லவொண்ணாதிறே". தன்மகளை யெங்ஙனே கனக்க நினைத்திருக்கிறாள்தான்! வயிற்றிற் பிறக்கவுமாம், சிஷ்யர்களாகவுமாம்; பகவத்விஷயத்தில் ப்ரத்யாஸன்னர் உத்தேச்யராமத்தனை. ஒருநாள் நம்பிள்ளையை, சீயர், கோஷ்டியிலே வைத்துப் போரக் கொண்டாடியருளி, 'தன்சிஷ்யனைத் தான் கொண்டாடாநின்றான்' என்றிராதேயிடிகோள்! 'கணபுரங்கைதொழும்பிள்ளையைப் பிள்ளையென்றெண்ணப்பெறுவரே' என்று பண்டுசொன்னாரும் உண்டுகிடிகோள்" என்றருளிச்செய்தார். அம்முணியாழ்வான், தன் சிஷ்யனைத்தான் தண்டனிடாநிற்குமாம்; "இதுவென்?" என்றுகேட்க, "அல்லாத வைஷ்ணவர்களை வ்ருத்தத்தாலே அறியவேணும்; இவர்கள் நானறிய வைஷ்ணவர்கள் என்று ஆதரிப்பன்" என்றான். [எம்மையொன்றும் நினைத்திலளே] - வழிக்குத்துணையாகத்தான் கொடுபோகாவிட்டால், ஸ்மரிக்கத்தானாகாதோ? [ஒன்றும் நினைத்திலளே]. எதிர்கொள்வாரிலே சிலராகவாதல், வழித்துணையாவாரிலே சிலராகவாதல், ஏதேனும் ஓராகாரத்தாலேதான் நினைக்கலாகாதோ? "அத்தலையில் நினைவே கார்யகரமாவது" என்றிருக்கிறாள். பகவதாஸத்தியுடையாருடைய அபிமானமே உத்தேச்யம்.

நினைக்கிலேன் தெய்வங்காள் நெடுங்கணிளமானினிப்போய்*
அனைத்துலகுமுடைய அரவிந்தலோசனனை*
தினைத்தனையும்விடாள் அவன்சேர்திருக்கோளூர்க்கே*
மனைக்குவான்பழியும்நினையாள் செல்லவைத்தனளே. (10)

ஒ.—பத்தாம்பாட்டில், குடிக்கு வரும் பெரும்பழியைப்பாராதே திருக்கோளூரிலேபுக்கு அவனை ஒருகாலும் விடுகிறிலள் என்கிறாள். [நினைக்கிலேன்] - புகுந்த வ்ருத்தத்தை நினைக்கவும் க்ஷமையாகிறிலேன். தெய்வங்காள்! என்று தன்னாற்றாமையாலே சொல்லுகிறாள். [நெடுங்கணென்று தொடங்கி] - விசாலமான திருக்கண்களையுடைய சிறுப்பெண்பிள்ளை இங்கிருக்கிற இருப்புக்கு மேலே ஸர்வேச்வரத்வ ஸூசகமான அழகிய திருக்கண்களையுடையவனை ஒருக்ஷணமும் விடுகிறிலள். [அவன் என்று தொடங்கி] - குடிக்குவருகிற பெரும்பழியையும் பாராதே இத்தையெல்லாம் கடலிலே கவிழ்த்து அவன் கண்வளர்ந்தருளுகிற திருக்கோளூர்க்கே போனாள்.

இ.—பத்தாம்பாட்டில், குடிக்கு வரும் பெரும்பழியை நினையாதே திருக்கோளூரிலேபுக்கு அவனையொருகாலும் விடுகிறிலள் என்கிறாள். [நினைக்கிலேன்] - புகுந்த வ்ருத்தாந்தத்தை நினைக்கில் ஆழங்காலாயிராநின்றது. [தெய்வங்காள்] - தன்னோடொக்க உறங்காமையாலே தெய்வங்களைக் கூட்டிக்கொள்ளுகிறாள். [நெடுங்கண்] - போக்தாக்கள் அளவல்லாத கண். [இளமான்] - "தன்கையிலே ப்ரஹ்மாஸ்த்ரம்" என்று அறியாதபருவம். [இனிப்போய்] - ஸர்ப்பயாகத்திற்போலே அவன் தான் வந்து விழும்படியான கண்ணைப்படைத்த இவள், தான் போகை மிகையென்கை. உபயவிபூதியுக்தனென்னுமிடத்தைக் கோட்சொல்லுகிற கண்களையுடையவனை. இவள் நெடுங்கண் இளமான்; அவன் அரவிந்தலோசனன். அவன்கண் ஸர்வேச்வரத்வஸூசகம்; அவனையுங்கூட விலைக்குக்கொள்ளும் கண் இவளது [தினைத்தனையும் விடாள்] - க்ஷணகாலமும் விடாள் இங்கிருந்துபட்ட க்லேசத்தாலே, அங்கு அநுபவிக்கப்புக்கால், "பிரியேன்" என்னவும் நெஞ்சை விட்டுக்கொடாள். அவன் பொருந்தி வர்த்திக்கிற திருக்கோளூர்க்கே. [செல்லவைத்தனள்] - புகுகையிலே ஒருப்பட்டாள் என்னுதல், "நச புநரா வர்த்ததே" என்று தான் மீளாதபடி புகுகையாலே நாம் அங்கேசெல்லும்படி வைத்தாள் என்னுதல். [மனைக்குவான்பழியும் நினையாள்] - குடிக்குவரும் வலியபழியும் நினைக்கிறிலள். இவள்போய் அவனைப் பெறுகை குடிக்கு நிலைநின்ற பழியென்றிருக்கிறாள்.

ஈடு.—பத்தாம்பாட்டு. இக்குடிக்குவரும் பெரும்பழியை நினையாதே, திருக்கோளூரிலே புக்கு அவனையொருகாலும் விடுகிறிலளென்கிறாள்.

[நினைக்கிலேன்] - கடலைக் கரைகாணவொண்ணாதிறே. தன்னைப்பொகட்டுப் போனபடி, வழியில் மிறுக்குக்கள், அங்குப்புக்கால் இவள்படும்பாடுகள் அநேகங்களிறே. [தெய்வங்காள்] - இத்தை, "கொல்லை" என்பார் முகம்பார்த்துச் சொல்லவொண்ணாதே, பழிசொல்லாமையையும், சிறையுறவுபோலே தன்னோடொக்க உறங்காமையையும்பார்த்துச் சொல்லுகிறாள். [தெய்வங்காள்-நினைக்கிலேன்] - செயலற்றுக் கைவாங்கிச்சொல்லுகிற வார்த்தையிறே. [நெடுங்கணிளமான் இனிப்போய்] - விழுக்காடறியாமையாலே புறப்பட்டுப் போனாள் அத்தனைகிடீர்! இக்கண்ணுக்கு இலக்கானவர்கள், ஸர்ப்பயாகத்தில் ஸர்ப்பங்கள் சுருண்டுவந்து விழுமாபோலே தந்தாம் முதன்மையோடேவந்து விழவேணுங்கிடீர்! [இனிப்போய்] - ஆர் செய்யக்கடவத்தை யார்தான்செய்கிறார்? கண்படைப்பாளும்தானாய்ப் புறப்பட்டுப்போவாளுந்தானுவதே! இத்தலை ப்ரவர்த்தியாமைக்கு ஸ்வரூபமேயமையுமாகாதே. [அனைத்துலகுமுடைய அரவிந்தலோசனனை] - இவ்வளவே கிடீர் அவன்கண்ணுக்குத் தோற்றிருப்பது. ஒருபய விபூதிமாத்ரங்கிடீர் அவன்கண்ணுக்கு ஈடுபட்டிருப்பது; அவன் தன்னையும் தோற்பிக்கும் கண்ணிறே இவளது. அவன் அனைத்துலகுமுடைய அரவிந்தலோசனன்; இவள் நெடுங்கண் இளமான். அவன், தானும் தன் விபூதியும் இவள்கண்ணிலே ஒருமூலையிலே அடங்கும்படியாயிருக்கை. கண்ணில்அல்லாத பரப்பும் இவள்பருவமும் குமர்கிடந்து போமத்தனை. [தினைத்தனையும்விடாள்] - நெகிழ்த்தனைக்கவும்பொறாள். இங்கிருந்துபட்ட க்லேசத்தாலே 'இன்னைப் பிரியேன்" என்றுசொல்லவும் நெஞ்சுகொடாள். காரியப்பாட்டாலே பிரியிலும் நெஞ்சொழிந்து கேட்கவேணுமே. [மனைக்குவான்பழியும் நினையாள்] - மனைக்கு வலியபழியும்நினைக்கிறிலள். அபிமதலாபமல்லாதவளவேயன்று, விரோதி என்றிருக்கிறாள். "இத்தலையாலே செல்லுமது பழி" என்றேயிருந்தபடிபாரீர்! 'அத பாதகபீதஸ்த்வம் ஸர்வபாவேந பாரத' அடுத்தடுத்து ராஜஸூயமே பண்ணிப்போந்தவனுக்கு ஒருதடவைப்பொய்க்காக நரக தர்சநம் பண்ணு

மனவாய் நின்றவனையிறே இப்படியுபதேசிக்கிறது. ஸத்கர்மத்தோடு அஸத்கர்மத்தோடு வாசியற விரோதியாய் க்ருஷ்ணனே அபாச்ரயம் என்னுமிடத்தைத் தோற்றுவிக்கிறது. *விமுக்தாங்யஸமாரம்ப:* அசேதநக்ரியைகளைப் பற்றிக்கொண்டு நாலாதேகொள். *நாராயணபரோ பவ* உனக்கு வருத்தவன்தன்னையே பற்றப் பார். [செல்லவைத்தனனே] - போகையிலே நெஞ்சை வைத்தானென்னுதல், நமக்குமெல்லாங்காண அங்கேயானுனென்னுதல். அதாவது- தான் அங்கேசெல்லவொருப்பட்டானென்னுதல்; தான்மீளாதபடி புகுகையாலே நாம் அங்கே செல்லும்படி வைத்தானென்னுதல்.

வைத்தமாநிதியாம் மதுசூதனையேயலற்றி*
கொத்தலர்பொழில்சூழ் குருகூர்ச்சடகோபன்சொன்ன*
பத்துநூற்றுளிப்பத்து அவன்சேர்திருக்கோளூர்க்கே*
சித்தம்வைத்துரைப்பார் திகழ்பொன்னுலகாள்வாரே. (11)

ஒ.—நிகமத்தில், இப்பத்தும் வல்லார் இட்டவழக்காய் இருக்கும் திருநாடு என்கிருர். [வைத்த மாநிதியாம் மதுசூதனையேயலற்றி] - ஆயாஸப்படாதே உபயோகம் கொள்ளலாம்படி வைத்த மஹாநிதிபோலேயிருக்கிற ப்ரதிகூல நிரஸநஸ்வபாவனை எம்பெருமானையே சொல்லி ஆர்த்தியோடே கூப்பிட்டு. [கொத்தலர் பொழிலென்று மேலுக்கு] - தாம் விரஹதசையை அநுஸந்திக்க க்ஷமரல்லாதபடி பகவத்விஷயத்திலே ஏகாக்ரரூகையாலே தமக்குப்பிறந்த தேற்றத்தாலே ஸம்ருத்தமான திருநகரியுடைய ஆழ்வார் அருளிச்செய்த ஆயிரம்திருவாய்மொழியிலும் திருக்கோளூரிலே அருளிச்செய்த இத்திருவாய்மொழியை புத்திபூர்வகமாகச் சொல்லவல்லார்.

இ.—நிகமத்தில், இப்பத்தும் வல்லார் இட்ட வழக்கு பரமபதமென்கிருர். [வைத்த இத்யாதி] "உண்டு" என்ன உயிர்நிற்கக்கடவதாய் அநாயாஸபோக்யமாய் இஷ்டவிநியோகார்ஹமான மஹாநிதி போலேயாய், விரோதிநிரஸநஸ்வபாவனுனவனைச் சொல்லி ஆர்த்தியாலே கூப்பிட்டு. [கொத்தலர்] நித்யவஸந்தமான திருநகரி. விரஹத்தை அநுஸந்திக்க க்ஷமமல்லாதபடி அவன்பக்கலிலே ஏகாக்ர சித்தராகையாலே பிறந்த தேற்றத்தாலே ஊருக்குப்பிறந்த ஸம்ருத்தி. [பத்துநூற்றுள் இப்பத்து]. கிழிகிழியாகக் கொடுப்பாரைப்போலே. அவன் பொருந்திவர்த்திக்கிற திருக்கோளூர்க்கே நெஞ்சைவைத்துச் சொல்லுமவர்கள். [திகழ்பொன்னுலகாள்வாரே] - "தனிவழியே போனுள்" என்று கரையவேண்டாதபடி, அர்ச்சிராதிகணம் வழிநடத்தப் பரமபதத்திலேபுக்குநித்யாநுபவம் பண்ணப்பெறுவர்கள்.

ஈடு.—நிகமத்தில் இப்பத்தும்கற்றூர் இட்டவழக்கு திருநாடு என்கிருர்.

[வைத்தமாநிதியாம்] - இவன் தனிவழிபோகைக்கும் தாயாரை விடுகைக்கும் ஹேதுவிருக்கிறபடி. தநம் ஸஞ்சிதமாயிருக்க, எடுத்தழித்துக்கெடுத்து ஜீவியாதே ஆழியிருப்பாரில்லையே. [வைத்தமாநிதி] - "எய்ப்பினில் வைப்பினைக் காசினைமணியை" என்கிறபடியே தளர்ந்தார்தாவளமாய், எய்ப்பினில் வைப்பாய், "உண்டு" என்ன உயிர்நிற்கும்படியாய் உடையவன்காலிலே எல்லாரும் விழும்படியாய், உடையவனுக்கு அறவிட்டு ஜீவிக்கலாய், "அறவிட்டு ஜீவித்தான்" என்று ஏசாதபடியுமாய், அவன்தனக்குப் பெருமதிப்பைக் கொடுப்பதுமாய், உடையவனுக்கு ஒன்றுக்கும் கரையவேண்டாதபடியாய், எல்லாம் தன்னைக்கொண்டே கொள்ளலாய், எல்லா ரஸங்களும் போகங்களும் தன்னைக்கொண்டே கொள்ளலாய், ஏவமாதிகுணங்களையுடைத்தாயிருக்கையைப்பற்ற நிதியென்கிறது. மாநிதியென்றது மஹார்க்கமான நிதியென்றபடியாய்,அத்தால், தன்னைக்கொண்டே எல்லாங்கொள்ளாநின்றால் தனக்கொரு குறையற்றிருக்கை. அல்லாநிதி மாண்டுநிற்குமே. [மதுசூதனையேயலற்றி] - இந்நிதியைக்காத்தூட்டுவதும் தானேயென்கிறது. உத்தேச்யமானதுதானே விரோதியையும் போக்கி யநுபவிப்பிக்கவற்றாயிருக்கை. [கொத்தலர்பொழில்] - *ஸர்வஞ்ச குசலம் க்ருஹே*

என்னுமாபோலே. ஸ்ரீபரதாழ்வான் பெருமாள்பக்கலிலே நெஞ்சை வைக்கவைக்க, அத்தைக் கண்டு "அவர்வரவணித்து" என்று இருவயோக்யை தனிரும் முறியுமானாப்போலே, விரஹத்தை யநுஸந்திக்க க்ஷமரல்லாதபடி அவன்பக்கலிலே ஏகாக்ரசித்தராகையாலே பிறந்த தேற்றத்தாலே திருநகரியும் தனிரும் முறியுமானபடி. இத்தலையிலே யித்தனை த்வரை யுண்டானால் அத்தலையில் பலத்துக்குக்கண்ணழிவுண்டோ? *அபிவ்ருக்ஷா:* என்கைதவிர்ந்து, *அகாலபலினோ வ்ருக்ஷா:* என்னும்படியாயிற்று. [பத்து நூற்றுள் இப்பத்து] - கடலில் அம்ருதம் போலே, ஆயிரத்திலும் வைத்துக்கொண்டு இப்பத்து. [அவன்சேர்இத்யாதி] - அவன் பொருந்திவர்த்திக்கிற திருக்கோளூர்க்கே நெஞ்சைவைத்து. [உரைப்பார்] - சொல்லுவார். [திகழ்பொன்னுலகாள்வாரே] - ஒருத்தி கூப்பிட, ஒருத்தி தனியேபோகையன்றிக்கே, நித்யாநுபவம்பண்ணலாம் நிலத்திலே புகப்பெறுவர். தனிவழிபோகாதே, அர்ச்சிராதிகணம் சேவிக்க விலக்ஷணமான தேசத்தே போய்ப்புகப்பெறுவர்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

எட்டாந் திருவாய்மொழி—பொன்னுலகு : ப்ரவேசம்.

ஒ.—எட்டாந்திருவாய்மொழியில், பாஹ்யாநுஸந்தாநம்பண்ண கூடிய க்ஷமரல்லாதபடி, மோஹம்செல்லுகையாலே அந்த:கரணம் எம்பெருமான் பக்கலிலே மிகவும் ப்ரவணமாய் அவன் குணங்களை நெடும்போது அநுபவிக்கையாலே, பெருவிடாய் தட்டி நோவுபட்டவர்கள் நீரிலே முழுகித் தரித்தாப்போலே விச்லேஷ வ்யஸநத்தால் வந்த பலஹாநி நீங்கி தரித்து, ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானைப் போலே ஜகத்வ்ருத்தாந்தாநுஸந்தாநக்ஷமரான ஆழ்வார், பழையபடியே தமக்கு எம்பெருமானோடு உண்டான விரஹத்தை அநுஸந்தித்துத் தம்முடைய தசையை அந்யாபதேசத்தாலே பேசுகிறார். "திருக்கோளூர் ஏறப்போக" என்று தன்னுடைய நகரோபவநத்தளவுஞ்சென்று தன்னுடைய பலஹாநியாலே போகமாட்டாதிருக்கிற இப்பிராட்டி, பின்னையும் அவன் வரக்காணாமையாலே "வாராதொழிகைக்கு நிபந்தநம் தன் ஐச்வர்யப்பரப்பாலே; நான் ஆச்ரிதரோடு ஏகரஸனாகையால் அறிவிக்க வரும்" என்று பார்த்து, அவனை ப்ராபிக்கைக்குத் தன்தசையை அவனுக்கு அறிவிக்கையொழிய மற்றோருபாயம் காணாதே, அங்குள்ள பக்ஷிகளையுடைய, பெருமாள் பிராட்டிக்குத் தம்எதிர்கண்ட முதலிகளையுடைய தூதப்ரேஷணம்பண்ணினாப்போலே, எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் நிலங்களில் எங்கேனும்புக்காகிலும் அவனைக்கண்டு என் ஆர்த்தியையறிவித்து என்துக்கத்தைத் தீர்க்க வேணும் என்கிறாள். "திருக்கோளூரில் ஸம்ச்லேஷம் சிலகாலம் சென்று தைவயோகத்தாலே விச்லே பிறக்க, தூதுவிட்டுச் செல்லுகிறது" என்றும் சொல்லுவர்.

இ.—எட்டாந்திருவாய்மொழியில், "கீழில்திருவாய்மொழியிலே திருத்தாயார் எங்ஙனேபுகுங்கொல்? என்று நொந்ததுவே பலித்தது; தன் சாபத்தாலே புறப்பட்டு முடியப்போகமாட்டாமையாலே தன்னுடைய நகரோபவநத்தளவிலே தளர்ந்து கிடந்து, அவ்வளவிலும் வரக் காணாமையாலே தன் தசையை அவனுக்கு அறிவிக்கையொழிய மற்றோருபாயம் காணாமையாலே கண்ணால் கண்ட பக்ஷிகளைத் தூதுவிடுகிறாள்" என்று பட்டர் நிர்வஹிப்பர். பிள்ளான், "திருக்கோளூரிலே சென்று ஸம்ச்லேஷம் வ்ருத்தமாய் தைவயோகத்தாலே விச்லேஷம் பிறக்கத் தூதுவிடுகிறாள்" என்று நிர்வஹிக்கும். கீழ் இரண்டு திருவாய்மொழி மோஹமும் உணர்த்தியுமாய், இதில் தூதப்ரேஷணமாயிருக்கிறது. மயர்வற மதிநலமருளப்பெற்ற இவர்க்கு மோகமாவது - பாஹ்ய விஷயங்களில் அந்த:கரணம் நிவ்ருத்தமாய்

மநஸ்ஸுக்கு அவனே விஷயமாய் அவன் குணங்களையே அனுபவிக்கை: அதாவது - சரீரியான அவனே ஜ்ஞாநத்துக்கு விஷயமாய்த் தன்னை மறக்கை. உணர்த்தியாவது - ''ப்ரஹ்லாதோஸ் மீதி ஸஸ்மார''* என்ற ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானைப்போலே தம்மையும் உணர க்ஷமராய், ஜகத்வ்ருத்தாந்தத்தையும் அநுஸந்திக்க க்ஷமராயிருக்கை. கீழே, நெடும்போது அவன்குணங்களை அநுஸந்திக்கையாலே தரித்து பாஹ்யாநுஸந்தாநக்ஷமராய் பலஹாநி நீங்கி, தன்னுடைய தசையை அந்யாபதேசத்தாலே அருளிச்செய்கிறார். அஞ்சிறைய மடநாரையில் அபராதஸஹத்வம் பற்றாசாகத் தூதுவிட்டாள். வைகல் பூங்கழிவில் 'ஸர்வரக்ஷகனானவன் திருவண்வண்டூரில் போக்யதையாலே கால்தாழ்த்தானித்தனை; நம் ஆர்த்தியை அறிவிக்க வரும்' என்று அவன்ஸர்வரக்ஷகத்வம் பற்றாசாகத் தூதுவிட்டாள்; இதில், 'தன் ஐச்வர்யப் பரப்பாலே மறந்திருந்தானத்தனை; ஆச்ரிதரோடு ஏகரஸனாயிருக்கும்' என்று ஐகரஸ்யம் பற்றாசாகத் தூதுவிடுகிறாள். ''தக்கோர்மை பற்றாசாகத் தூதுவிடுகிறாள்'' என்று பிள்ளான் பணிக்கும்.

ஈடு.—கீழில் திருவாய்மொழி இரண்டும் மோஹமும் உணர்த்தியுமாய், இதில் தூதப்ரேஷணமாயிறே யிருக்கிறது; மயர்வறமதிநலம் அருளப்பெற்ற இவர்க்கு *மரணமூர்ச்சா ஸம்பத்தி:* என்னும் மோஹமில்லையே; இனி இவர்க்கு மோஹமாவது - பாஹ்யபதார்த்தாநுஸந்தாநக்ஷமரன்றிக்கே விஷயங்களில்நின்றும் அந்த:கரணம் நிவ்ருத்தமாய், மநஸ்ஸுக்கு அவனே விஷயமாய், அவன்குணங்களையே அநுபவிக்கை; அதாவது -சரீரியானவனே ஜ்ஞாநத்துக்கு விஷயமாய்த் தன்னை மறக்கை. கீழ் - *அஹம் மநுரபவம்* என்றும், *ஸர்வகத்வாதநந்தஸ்ய* என்றும் சொல்லுகிறவையிலேபோலே. உணர்த்ியாவது - *ப்ரஹ்லாதோஸ் மீதி ஸஸ்மார* என்கிற ஸ்ரீப்ரஹ்லாதனைப்போலே தம்மையும் உணர க்ஷமராய் ஜகத்வ்ருத்தாந்தத்தையும் அநுஸந்திக்க க்ஷமராகை. நிர்க்குணமான விஷயத்திலேயன்றே இவர் அவகாஹித்தது; குணாதிகவிஷயத்திலேயிறே. சேஷிபக்கலிலே அநுஸந்தாநமானால் சேஷபூதனான தன்னையும் காணுமிறே. கீழ் நெடும்போது அவன்குணங்களை அநுஸந்திக்கையாலே தரித்து பலஹாநி நீங்கி பாஹ்யபதார்த்தாநுஸந்தாந க்ஷமரானார்; அவ்வளவிலே, இவர் தரித்தவாறே பழைய அலாபமே தலையெடுத்து ஒரு பிராட்டிதசையைப் ப்ராப்தராய் அந்யாபதேசத்தாலே பேசுகிறார்.

கீழில் திருவாய்மொழியில், திருத்தாயார் ''எங்ஙனே புகுங்கொல் ?'' என்று நொந்ததுவே ப்பலித்து, தன் சாபலத்தாலே புறப்பட்டாள். முடியப்போய்ப்புகமாட்டாமை தன்னுடைய நகரோபவநத்திலே விழுந்து கிடந்து, அவ்வளவிலும் அவன் வரக்காணாமையாலே, கண்ட பக்ஷிகளைத் தூது விடுகிறாள். (''செல்ல வைத்தனளே'' என்றது - செல்லுகையிலே, பொருப்பட்டாளென்றதாய், முட்டப்போகாமல் கிடந்து ஐகரஸ்யம் பற்றாசாகத் தூது விடுகிறாள்'' என்று பட்டர்.) தனிவழியே புறப்பட்டுப் போம்படியாய் விழுந்த இவளுக்குத் தூது போவாரில்லையே; உண்டானாலும் இவள்தனக்கு முன்னே சடுபட்டுக் கிடப்பர்களே; இனித் தன்பரிஸரத்தில் வர்த்திக்கிற பக்ஷிகளுக்கு மேற்படக் கால்நடைதந்து போக வல்லாரில்லையே; இவ்வளவில் நீங்கள் என் தசையை அறிவிக்கவேணுமென்று அவற்றின் காலிலே விழுகிறாள். அஞ்சிறைய மடநாரையில்—என்னை நினைத்தானத்தனை, தன்னை மறந்தானென்றாள்; இத்தலையில் அபராதம் பாராதே, அத்தலையில் அபராத ஸஹத்வம் பற்றாசாக, அபராத ஸஹத்வத்தைப் பார்த்து வருவதென்று ஆள்விட்டாள். வைகல் பூங்கழிவாயில் - இருவரையும் அவ்வூரில் போக்யதை மறக்கப்பண்ணிற்று என்றாள்; விசேஷஜ்ஞனாகையாலே ஆர்த்தியைஅறிவிக்க வருமென்று ஆர்த்தரக்ஷணம் பற்றாசாகத் தூதுவிட்டாள். இத்திருவாய்மொழியில் வாராமைக்குஅடி பரப்பனாகையென்று பார்த்தாள்! ''தன்மன்னு நீள் கழல்மேல் தண்டுழாய் நமக்கன்றி நல்கான்'' என்கிறபடியே அஸாதாரணமான தன்றிறே வடிவு; ஆச்ரிதரோடு ஏகரஸனாகையிறே என்று பார்த்து ஐகரஸ்யம் பற்றாசாகத் தூதுவிடுகிறாள். பலபாட்டுக்களிலும் ''இதுவோ தக்கவாறு-என்கையாலே, ஆந்ருசம்ஸ்யம் பற்றாசாகத் தூதுவிடுகிறாள்''என்று பிள்ளான் பணிக்கும்படி. *புஞ்ஜாநா மாநுஷாந்போகாந் ஸர்வகாமஸம்ருத்திநீ, ஸஹா த்வாதச தத்ராஹம்* என்கிறபடியே பன்னிரண்டாண்டு தண்ணீர்த்துரும்பறக் கலந்து பிரிந்த பிராட்டியைப்போலே, அங்கேபுக்கு நெடுங்காலம் அவனையநுபவித்துப் பிரிந்து

தூதுவிடுகிறாள்' என்று பின்னான். 'புறப்பட்டவள் முடியப்போகமாட்டாதே நகரோபவநத்திலே கிடந்து தூதுவிடுகிறாள்'' என்று பட்டர் அருளிச்செய்யும்படி. *ஜீவந்தீம் மாம் யதா ராமஸ் ஸம்பாவயதி கீர்த்திமாந்* - பரபரிபவம் பொறாத குடிப்பிறப்புடையவரிறே. அதிலே தமக்கு வந்த அவத்யம் பரிஹரிக்கச்சொல்லவேண்டாவே. கடலையணைசெய்து ராவணனுதிகளை நிரஸித்துத் தாம் வரக்கொள்ள, இத்தலை வெறுந்தரையாய்க் கிடவாமே செய்ய நினைத்தாராகில் ஏற்கவே பரிஹரித்துத் தம்புகழைநோக்கிக்கொள்ளச் சொல்லென்று சொன்னளிறே; அப்படியே இவளும் தன் தசையை அறிவித்து விடுகிறாளாயிருக்கிறது.

பொன்னுலகாளீரோ புவனிமுழுதாளீரோ*
நன்னலப்புள்ளினங்காள் வினையாட்டியேன் நானிரந்தேன்*
முன்னுலகங்களெல்லாம்படைத்த முகில்வண்ணன் கண்ணன்*
என்னலம்கொண்டபிரான் தனக்கு என்னிலைமையுரைத்தே. (1)

ஒ.—முதற்பாட்டில், எம்பெருமானுக்கு என்னுடைய ஸ்த்திதியை அறிவித்து, அவனுடைய பரமபதத்தையும் ஸம்ஸாரவிபூதியையும் நான்தர ஆளவேணுமென்று சில புள்ளினங்களைப் பிராட்டியிரக்கிறாள். [நன்னலப்புள்ளினங்காள்] - அழகிய நீர்மையையுடைய புள்ளினங்காள். [வினையாட்டியேன்] - கையிலகப்பட்டவனைவிட்டு தூதப்ரேஷணம்பண்ணுகைக்கிடான பாபத்தைப்பண்ணின நான் இரந்தேன். [முன்னென்றுதொடங்கி] - ஸ்ருஷ்டிகாலத்தில் தரதமபாவம் பாராதே ஸகலலோகத்தையும் உண்டாக்கின பரமோதாரனுமாய் அக்குணசேஷ்டிதாதிகளாலே என்னை ஸர்வஸ்வஹரணம்பண்ணி அடிமைகொண்ட க்ருஷ்ணனானவனுக்கு.

இ.—முதற்பாட்டில், சிலபுள்ளினங்களைக்குறித்து, என்னுடைய ஸ்த்திதியை அவனுக்கு அறிவித்து அவனுடைய உபயவிபூதியையும் நான் தர ஆளவேணுமென்று இரக்கிறாள். [பொன்னுலகு இத்யாதி] - ஈச்வரவிபூதியானது விச்லேஷதசையில் அவனையும் தன்னையும் சேர்ந்தார்க்குப் பரிசிலாகக் கண்டதென்றிருக்கிறாள். உபயவிபூதியும் ஒருமிதுநத்துக்கு சேஷமிறே. அவ்வவஸ்த்தைபிறந்தால் சொல்லலாமிறே. நித்ய விபூதியைக் கொடுத்துப் பின்பு லீலாவிபூதியைக் கொடுக்கிறாள். இவளுக்கு இதிலும் நித்யவிபூதி விதேயமாயிருக்கிறபடி. அவன் அடியில்காட்டிக்கொடுத்த அடைவும் இதிறே; ''அயர்வறுமமரர்களதிபதி'', ''இலனதுடையனிது'' என்றதிறே. தான்பெற்ற அடைவிலே கொடுக்கிறாள். விலக்ஷணமான நித்யவிபூதியைக் கொடுத்துவைத்து லீலாவிபூதியைக்கொடுப்பானென் ? என்னில்:— பண்ணினவுபகாரத்திலேகலங்கிக் கொடுக்கிறாள்; 'அபராவர்த்திநாம் யாச யாச பூமிப்ரதாயிநாம்'' என்றுரைப்போலே. [ஆளீரோ] - உங்கள் விபூதியை அராஜகமாகவிட்டுவைக்கிறதென்? ஆளிகோளோ! தான் கொடுத்ததாக நினைத்திருக்கிறிலள். [நன்னலப்புள்ளினங்காள்] - அழகிய நீர்மையையுடைய புள்ளினங்காள். 'இருவருமான சேர்த்தியை ஒழிய வேறுமொன்றைத் தரவோ ?'' என்று சிரித்திருந்தன; ''அர்த்ததச்ச மயாப்ராப்தா தேவராஜ்யாதயோ குணா:, ஹதசத்ரும் விஜயிநம் ராமம்பச்யாமி ஸுஸ்த்திதம்''. [புள்] - நீர்மையோபாதி கமநபரிகரமும் உண்டாகப்பெற்றது. [இனங்காள்] - ப்ரேரிப்பாரும் அருகே உண்டென்கை. ''திசஶ்ஸர்வாஸு மார்க்கந்தே'' என்று எல்லாத்திக்கிலும் போகவிடலாம்படி திரளாகவிருந்தபடி யென்றுமாம். [வினையாட்டியேன்] - கைப்பட்டவனைவிட்டு உங்கள்காலிலே விழும்படியான பாபத்தைப்பண்ணினேன். [நானிரந்தேன்] ''தர்மத:பரிரக்ஷிதா:'' என்று, அவன் இரந்து தூதுவிடும்படி அறிவுதிகோளிறே. உபயவிபூதியும் கொடுத்தாலும் ''விஸத்ருசம்'' என்று, இரப்புக்குக் காரியம் செய்கிறிகோளென்றுமாம். ''க்ருத்ஸ்நாம்வா ப்ருதிவீம்தத்யாந் ந தத்துல்யம்கதஞ்சந'' இறே. நாங்கள் சொன்னவார்த்தையை அவன்கேட்குமோ ? என்ன; [முன்னுலகம் இத்யாதி] - ஸ்ருஷ்டிகாலத்தில் வரையாதே ஸகல லோகங்களையும் உண்டாக்கினவன். அழிந்தவற்றையுண்டாக்கினவன் உண்டான வஸ்துவை அழிக்குமோ ? உண்டாக்குமிடத்தில் தரமிடாதவன் ''தன்னைப் பெற வேணும்'' என்றிருப்பாரைத் தரமிடுமோ ? [முகில்வண்ணன்] - தரமிட்டாலும் விடவொண்ணாதவடிவு. தன்பேறாகக் கொடுக்குமவன் என்றுமாம் [கண்ணன்] - ஆச்ரிதர்க்குத் தன்னைக் கையாளாக்குமவன்; என்னை ''ஸர்வஸ்வா

பஹாரம் பண்ணினவன். என்னை அகங்யார்ஹ மாக்கின உபகாரகன். என்னுடைய ஸ்த்ரீத்வத்தை அழித்து, தூதுபோகைக்கு உங்கள்காலிலேவிழும்படி பண்ணினவனுக்கு. [என் நிலைமையுரைத்து] - அவன்படிக்குப் பாசுரமிட்டுச் சொன்னாள்; தன்படிக்குப் பாசுரமில்லை யென்கிறாள். [என்னிலைமை] - "யதோ வாசோ நிவர்த்தந்தே" என்கிற "ஏஹி பச்ய சரீராணி" என்று தன்வடிவைக் காட்டுகிறாள். [உரைத்து] "வாசா தர்மம விஷயத்துக்குப் பாசுரமிட்டவள், தன்னுற்றாமைக்குப் பாசுரமிடமாட்டுகிறிலள். வாப் நுஹி" என்று ஒருவார்த்தை நேரவமையும்.

ஈ௫.—முதற்பாட்டு, சில புள்ளினங்களைக் குறித்து, எம்பெருமானுக்கு என் தசையை அறிவித்து விபூதித்வயத்தையும் நான் தர நீங்கள் ஆளவேணுமென்று இரக்கிறாள்.

[பொன்னுலகாளீரோ] - ஈச்வரவிபூதியானது விச்லேஷ தசையில்அவனையும் தன்னையும் சேர்த்தார்க்குப் பரிசிலாகக் கண்டதென்றிருக்கிறாள். உபய விபூதியும் ஒரு மினுநத்துக்கு சேஷமிறே. அவ்வவஸ்தை பிறந்தால் சொல்லலாமிறே. ஸர்வேச்வரனிருக்க இவ்விடம் அரா ஜகமாய்க் கிடக்கிறதென்றிருக்கிறாள். ப்ரக்ருதிஸம்பந்தமற்று ஒரு தேச விசேஷத்திலே போய் அநுபவிக்குமதத்தை இங்கேயிருந்தே கொடுக்கிறாள். ப்ரக்ருதியோடே கொடுப்பாரும் ப்ரக்ருதி ஸம்பந்தத்தை அறுத்துக் கொடுப்பாருமாய் இருக்கிறபடி. ஒருவரையொருவர் பிரிந்து துமா வுகிற ஸமயத்திலே கொடுக்கை இருவர்க்கும் ஒக்கும். சேர்க்கைக்காக உடம்பிழப்பாரும் உடம் போடே கூடிநின்று சேரவிடுவாருமாயாகாதே இவர்களிருப்பது. [பொன்னுலகாளீரோ, புவனிமுழுதாளீரோ] - உங்கள் விபூதியும் நான்பட்டது படவேணுமோ? அபிமதனைப் பிரிந்து கடகரைத்தேடித் திரிகிற இவள், கூடிப்பிப்பார்க்கு உபய விபூதியையும் கொடுக்கிறாளிறே, அவனை நினைத்திருந்த கனம். கலந்தபோது தன்னையும் தன்னுடைமையையும் இவனுக்காக்காப் பிரிந்தபோது மாறுவாரொரு புல்லியனோடன்றே இவள் கலந்தது. தன் அஸந்நிதியிலும் இவள் தான் இப்படி உபய விபூதியையும் இஷ்டவிநியோகார்ஹமாக்கும் படியிறே, அவன் தன்னையும் தன்னுடைமையையும் இவளுக்கு ஆக்கிவைத்தபடி. அருளாளப்பெருமா னெம்பெருமானார் கோவிலே, பிள்ளையுறங்காவில்லிதாஸரைக்கொண்டு ஆழ்வான்புக, "ஆழ்வான் பண்ணின நெஞ்சாறல் ஆறுவது ஆளவந்தார்ஸ்ரீபாதத்தேறப் போனவிறே" என்ற வார்த்தையை நினைப் பது. (அதாவது ஆழ்வான், பெருமாள் திருவடிகளிலே ஒரு வார்த்தை விண்ணப்பஞ் செய்தா ரகில் அபிமத ஸித்தியாம் என்கை.) [பொன்னுலகாளீரோ, புவனிமுழுதாளீரோ] - ஒருவில் லெருதுகளோபாதி உபய விபூதியும் தன்னைச்சேர்ப்பார்க்கென்றிருக்கிறாள். (அதாவது வில் லெருதுகளை நிரவிக்கை அவர்களுடைய ஸம்ச்லேஷத்துக்கு ஹேதுவானாற்போலே, இவை உபயவிபூதியும் ஆளுகை அவனுடன் ஸம்ச்லேஷத்துக்கே ஹேதுவென்றாள் என்றபடி) [ஆளீரோ] - ஸ்வத்வம் ஒருவர் பண்ணிக்கொடுக்கவேண்டாதிருக்கிறபடி. "தத்தமஸ்யாபயம் மயா" என்றாரிறே பெருமாள்; அப்படியே அவற்றுக்கும் "தூதுபோக" என்று முகங்காட்டின போதே கொடுத்தற்றது அவன்கார்யஞ் செய்கிற இவற்றுக்கு அவனை யறிவித்துக் கொடுக்க வேண்டாவிறே. இவள்தானும் அவன்கார்யமிறே செய்கிறது. இவை தூதுபோகவே தான் உளளாம்; தான் உளளாகவே ஸவிபூதிகனான எம்பெருமானுளனும். இனி, இவள் தன் படுக்கைப்பற்றிறே கொடுக்கிறதும். [ஆளீரோ] - உங்கள்கார்யமே செய்ய வொண்ணாது; என் கார்யமுஞ்செய்யவேணும். இவள்கார்யஞ் செய்கையாவது, இவற்றை யாளுகையிறே. "இவள்தான் உபயவிபூதியையும் கொடாநின்றாளாகில் அவன் வந்தால் தானும் அவனும் எங்கேயிருப்பது?" என்ன, "இக்குருவி காட்டினவிடத்தே" என்று அகங்தாழ்வான் வார்த்தை. [பொன்னுல காளீரோ - புவனிமுழுதாளீரோ] - கைப்பட்டத்தைக் கொடுத்திறே மற்றொன்று தேடிக்கொடுப்பது. தனக்காக்கின அடைவே கொடுக்கிறாள். நித்ய விபூதியைக் கொடுத்திறே லீலாவிபூதியைக் கொடுத்தது; "அயர்வறுமமரர்களதிபதி" என்றபின்பிறே, "இலனது உடையனிது" என்று, லீலாவிபூதியோகஞ் சொல்லிற்று. இங்கேயிருந்தாலும் ஜ்ஞானம் பிறந் தால் அரித்தாய்த்தோற்றுவது அவ்விடமிறே; "அக்கரையென்னு மனத்தக்கடலுளழுந்தி யுன்பேரருளாலிக்கரையேறி யிளைத்து" என்று, அது இக்கரையாகவும், இது அக்கரை யாகவும் சொல்லா நின்றார்களிறே. "மாகவைகுந்தம் காண்பதற் கென்மனமேகமெண்ணும்"

என்றிறேயிருப்பது. ப்ராப்திதசையிலும் முற்பட்டிருப்பது அவ்விடமேயிறே; ததீயத்வாகாரத்தாலே யொருகால் உத்தேச்யமாமதிறே இவ்விடம். *ஸோபஜூஸம் ஸ்மரந்நிதம் சரீரம்* என்னுநிற்கச் செய்தேயும், அவனுடைய ஐச்வர்யத்திற் குறையநுபவிக்க வொண்ணாதென்று ததீயத்வாகாரேண ஒருகால் உபாதேயப்ரதிபத்தி உண்டித்தனையிறே. இல்லையாகில், 'புவனிமுழுதாளீரோ!' என்று, ஆகாராந்தரப் ரதிபத்தியுண்டாகில் கட்டடங்க உத்தேச்யமாய்த் தோற்றுமிறே. [பொன்னுலகாளீரோ-புவனிமுழுதாளீரோ] - அடிமைக்கு அடைத்தேற்றலாயிறே இவ்விடந்தானிருப்பது; அவ்விடம் அடிமையாலல்லது செல்லாதவிடமாயிறே இருப்பது தூது போனாரது பரமபதம், அதுடையாரது லீலாவிபூதி. [புவனிமுழுதாளீரோ] - உத்தேச்யமான நித்யவிபூதியைக் கொடுத்தவள், த்யாஜ்யமான லீலாவிபூதியைக் கொடுப்பானென்? என்னில்: இவை பண்ணுகிற உபகாரத்தை நினைத்து, 'இன்னது கொடுப்போம்' என்றறியாமல் கலங்கி, பண்டு கலங்கினாரும் இப்படியே செய்தார்கள்: - *அபராவர்த்திநாம் யாச யாச பூமிப்ரதாயிநாம்* என்று சொன்னார்கள். ப்ரீதி அளவுபட்டிருக்கில்லிறே தெளிந்திருப்பது. *ஹிரண்யம் வா ஸுவர்ணம் வா ரத்நாநி விவிதாநி வா, ராஜ்யம் வா த்ரிஷு லோகேஷு நைததர்ஹதி பாஷிதம்* என்று கலங்கினளிறே. இருவரும் கொடுக்கலாம்படி ஒரு மிதுனத்துக்கு சேஷமாயிறே உபயவிபூதியுமிருப்பது.

[நன்னலப்புள்ளினங்காள்] - அவனிலும் உங்களுக்குண்டான நீர்மையில் ஏற்றமிருந்தபடியென்? இவ்வளவில் ஆளிட்டழைக்கும்படி கடக்கவிராதே, நீங்கள் முன்னம் கிட்டநின்று முகங்காட்டப் பெறுவதே! உங்கள்படியிருந்தபடி கண்டேனுக்கு, ஸர்வஸ்வத்தையும் எனக்குத் தந்து தூதுபோம்படியாயிருந்ததீ! "அவனுக்குக்குணங்களிலேற்றம் ஆச்ரயத்தாலே" என்றிருந்தோம்: அது உங்கள்பக்கலிலே யாகாதே என்கிறாள். உங்கள் நீர்மையறியாதே, என் செல்லாமையாலே "அத்தைக்கொள், இத்தைக்கொள்" என்று நவின்றேனிறே! *குணைஸ் த்வய்யேவ சோபநா:* என்னுமவனும் புறம்பானான், உங்களைப் பார்க்க. "உங்கள் தரத்துக்கு இதுஒராறும் தாளிப்பூவுமிறே" என்பராம் பிள்ளையமுதனார். உங்களுக்கு நான் சில செய்தேனோ! வெறும் உங்கள் நீர்மையாலே செய்ததத்தனையிறே. பாண்டவர்களுக்குத் தூதுபோன க்ருஷ்ணனையும், ஆளவந்தார்க்குப் பச்சையிட்ட மணக்கால்நம்பியையும்போலே இருந்ததீ யுங்கள்படி! [நன்னலப்புள்ளினங்காள்] - அழகிய நீர்மையையுடைய புள்ளினங்காள் என்னுதல், மிக்க ஸ்நேஹத்தையுடைய புள்ளினங்காள் என்னுதல், இருவருமான சேர்த்தியொழிய வேறுமொன்றைத்தரவோ?" என்று சிரித்திருந்தன; *அர்த்தத்தச்ச மயா ப்ராப்தா தேவராஜ்யாதயோ குணா:, ஹதசத்ரும் விஜயிநம் ராமம் பச்யாமி ஸுஸ்த்திதம்* (பெருமாள் விஜயிகளாய்க்கொண்டிருக்கப் பார்த்தவர்களுக்கு தேவராஜ்யாதி நன்மைகள் தன்னடையே வந்ததிறே.) [நன்னலம்] - *அஹஞ்ச ரகுவம்சச்ச* இத்யாதி - *நஜீவேயம்க்ஷணமபி* என்றிருக்கிற நானும் என்னையொழிய ஜீவியாதபடியிருக்கிற பிள்ளை பரதனும், இருவர்க்கும் உஜ்ஜீவந ஹேதுவான பிள்ளையும். *வைதேஹ்யா.* - இவையெல்லாம் தருமென்கைக்காக. *தர்மத:பரிரக்ஷிதா:* - நீ செய்ததுக்கொரு ப்ரத்யுபகாரம் பண்ணலாமோ? வெறும் அறவனைகையாலே செய்தாய்அத்தனை. "உனக்கென்செய்கேன்" என்று காலதத்த்வமுள்ளதனையும் உழைக்கும் படியிறே நீ செய்தது. [புள்] - இந்நீர்மையில் ஏற்றமுடைய உங்களுக்கே கமநஸாதநமான பக்ஷபாதமுண்டாகப் பெறுவதே! "பிரிந்தாரைச் சேர்க்கை திர்யக்குக்களின் கார்யம்" என்றிருக்கிறாள், ராமாவதாரத்தில் வாஸனையாலே. [இனங்காள்] - *நகச்சிந்நாபராத்யதி* என்பாருங் கூடவுண்டாயிருக்கிறபடி. [இனங்காள்] - உடனுறையிருந் கூடக்கிடக்கப் பெறுவதே! *அக்ரதஸ்தே கமிஷ்யாமி* என்று முன் நடப்பாருங்கூட இருக்கப்பெற்றபடி. [இனங்காள்] - *திக்ஷு ஸர்வாஸு மார்க்கந்தே* என்று, எல்லாத்திக்கிலும் போகவிடலாம்படி திரளிருக்கிறபடியென்றும். [வினையாட்டியேன்] - கைப்புகுந்தவனைக் கைகழியவிட்டு உங்கள்காலிலே விழும்படியான பாபத்தைப் பண்ணினேன். உங்களுக்குக் குணங்கள் ஸ்வரூபமானாப்போலேயிறே எனக்கு பாக்யஹாநி ஸ்வரூபமானபடி. [நான்] - *தர்மத: பரிரக்ஷிதா:* என்றிருப்பான் அவன்கிடீர்! ஸ்ரீஜநகராஜன் திருமகளான வேண்டற்பாட்டோடே யாகாதே தான் தூது

விடுகிறது இவன்! [நானிரந்தேன்] - அத்தலையித்தலை யானபடி. [இரந்தேன்] - கீழே, அவன் திருவடிகளிலே நாலுப்ரயோகம் சரணம்புக்கார்; இப்போது ததீயர்பக்கலிலே ப்ரபத்திபண்ணுகிறார்: அது தப்பினும் இது தப்பாதிறே. இதுக்கு வேறு விலக்கடியில்லையே. ப்ரார்த்தநாமதியிறே சரணாகதியாகிறது. அவ்யபிசாரியான உபாயத்தைப் பற்றுகிறாள். [இனங்காள் - இரந்தேன்] - மிதுனமாயிருப்பார்க்கு இரந்தார்வாசி தெரியுமிறே. சரணாகதர்க்குத் தன்னுயிரைக் கொடுக்குமவையே. நன்னலப்புள்ளினங்களன்றியே படுகொலைக்காரர்க்கும் இரங்கவேண்டும்படியிறே என்னுடைய தசை. [நன்னலப்புள்ளினங்காள் - இரந்தேன்] - சரண்யதை குறைவற்றிருந்தபடியென்தான்! [நானிரந்தேன்] - அவனிறே *ஸுக்ரீவம் சரணம்கத:* என்று திர்யக்கின்காலிலே முற்பட விழுந்தான்; பின்பிறே இவள், *நதாகுரு துயாம்மயி* என்றது. [வினையாட்டியேன் நானிரந்தேன்] - எல்லாங்கொடுத்தாலும் அவற்றுக்கு ஒன்றும் செய்ததாகத்தோற்றாதே பல்காட்டுகிறாள். அவர்கள் பண்ணுகிற உபகாரம் அளவுபட்டிருக்கிலிறே ஸத்ருசமாக ஒன்று தேடிக்கொடுக்கலாவது. எல்லாங் கொடுத்தாலும் *க்ருத்ஸ்நாம்வா ப்ருதிவீம்தத்யாந் ந தத்துல்யம்கதஞ்சந* என்று "செய்ததுபோராது" என்னும் இதுவேயிறே நெஞ்சில் பட்டுக்கிடப்பது. *தஸ்மை ந த்ருஹ்யேத்* என்னுமளவில் நிற்குமதன்றே; *க்ருதமஸ்ய ஜாநந்* அங்குநின்றும் மீண்டாலிறே யதுதான்வேண்டுவது; (அவன் செய்த உபகாரத்தினின்றும் மீண்டாலிறே த்ரோஹசிஷேதம் சொல்லவேண்டுவது). இதெல்லாம் சொல்லவேணுமோ? அவன்தான் வரும்ஸ்வபாவனுகிலன்றோ நாங்களறிவிப்பதென்னில் என் பாக்யஹாநியாலே இழந்தேனத்தனைபோக்கி, அவன்படியைப் பார்த்தால் இழக்கவேணுமோ என்கிறாள். [மூன்னுலகம் இத்யாதி] - அழிந்தவற்றை அடியேபிடித்துண்டாக்குமவன்கிடீர்! இத்தலையுமழிந்திறேகிடக்கிறது. ஆர் பிரிவுக்குச் சளைத்துத் தளர்ந்து தூதுவிட, இவற்றையுண்டாக்கிற்று? வெறும் தன்க்ருபையாலே செய்தானித்தனையிறே! பண்டு இவனுக்கு ஆர்த்தரக்ஷணம் பண்ணுகைக்குத் தூதுவிடவேண்டாகிடீர்! [மூன்னுலங்களெல்லாம் படைத்த முகில்வண்ணன்]-ஜலஸ்த்தல விபாகம்பாராதே *பஹுஸ்யாம்* என்கிற ஸங்கல்பஜ்ஞாநத்தாலே ஏற்கவே யிவற்றையுண்டாக்கினவன். [முகில்வண்ணன்] - தாமிட்டாலும் விடவொண்ணாத வடிவு; தன்பேறாகக் கொடுக்குமவன் என்றுமாம். [முகில்வண்ணன் கண்ணன்] - ஜகத்காரணத்வத்துக்கும் அவதாரத்துக்கும் அடியான ஔதார்யாதி குணங்களைச் சொல்லுகிறது. அன்றிக்கே, அப்ராக்ருத இவ்யஸம்ஸ்த்தாநத்தோடே வந்து அவதரித்தபடியைச் சொல்லிற்றாகவுமாம். [என்னலங்கொண்ட பிரான்] - இதொரு பழங்கிணறு கண்வாங்குகிறதென்? என்னை ஸர்வஸ்வாபஹாரம் பண்ணின உபகாரகன்; உங்கள்காலிலே விழும்படி பண்ணினவன். இப்போது அகலவிருந்ததொழியப் பண்டுசெய்தவையெல்லாம் சாலநன்றுகிடீர்! எங்களோடு கலப்பதுக்கு முன்பு போர நீர்மையுடையான்; இப்போது வடிவழகே கிடீர் உள்ளது. [முகில்வண்ணன் என்னலங்கொண்ட] - அம்மேகம் வர்ஷிக்கும் இடமாகாதே, முகக்கும் இடமானேன். [தனக்கு என்னிலைமை] - அவன் வருவானாலும், நாங்கள் சொல்லுவதேதென்னில். 'என்னிலைமை' என்று - தன்வடிவைக் காட்டுகிறாள்; *ஏஹிபச்ய சரீராணி* என்னுமாபோலே. என்னைக்கண்ட நீங்களே பாசுரமிட்டுச்சொல்லுமத்தனை. ஜகத்காரணத்வம், அவதாரம், தன்பக்கல் பண்ணின விசேஷகடாக்ஷம் இவையெல்லாம் கண்ணழிவறச்சொன்னாள்; அவன்குணங்களிலே யவகாஹித்த தன்படி தன்னாலும் பேசப்போகிறதில்லை; தனக்குக் தன் தன்மை யறிவரியானைப்போலே. [உரைத்து] - தனக்குங்கூட நிலமல்லாத தன்படியை இவை பாசுரமிட்டுச் சொல்லவற்றாகக்கொண்டிருக்கிறாள். கரைமேலே நிற்கையாலே அவற்றுக்குச்சொல்லலாமிறே. "உரைத்து, கொண்டுவாருங்கோள்" என்னுதொழிவானென்? என்னில்; "ஈச்வரக்ருத்யம் நமக்கு பரமோ" என்றிருக்கையாலே; இவனுக்குப்பணி குறையை யறிவிக்கையிறே; மேலுள்ளதெல்லாம் அவன்பணியிறே. [என்னிலைமையுரைத்து - பொன்னுலகாளீரோ] - ஆர்த்தநாதம் கேளாதபடிபண்ணி ஜீவிக்கப்பாருங்கோள்! சக்ரவர்த்தி பெருமானை முடிசூட்டப் பாரித்தபோது, ருஷிகள் ராக்ஷஸராலே நோவுபடுகையாலே ராஜ்யம் இருக்ஷ்வாகுவம்சத்திற்பொருந்தாமை புறப்பட்டுப்போனாரிறே; அப்படியே ஸ்த்ரீவதமும் ஆர்த்தத்வநியும் கேட்டால் இவை உபயவிபூதியையும் ஆளமாட்டாதென்றிருக்கிறாள்.

மையமர்வாள்நெடுங்கண் மங்கைமார்முன்பென்கையிருந்து*
நெய்யமரின்னடிசில் நிச்சல்பாலொடுமேவீரோ*
கையமர்சக்கரத்து என்கனிவாய்ப்பெருமானைக்கண்டு*
மெய்யமர்காதல்சொல்லிக் கிளிகாள்விரைந்தோடிவந்தே. (2)

ஒ.—இரண்டாம் பாட்டில், எம்பெருமானுக்கு என்னுடைய ஸ்த்திதியை அறிவித்துவந்து நானும் தோழிமாரும் கொண்டாடுங் கொண்டாட்டத்தை அங்கீகரிக்க வேணுமென்று சில கிளிகளை இரக்கிறாள். [மையமர் என்று தொடங்கி] - உங்கள் வரவாலே அதிப்ரீதைகளாகையாலே மிகவுங்கறுத்து ஒளியையுடைத்தாய்ப் பெருத்திருந்துள்ள கண்களையுடைய மங்கைமார்ஸந்நிதியிலே என் கையிலேயிருந்து பாலோடும் நெய்யோடுங்கூடின அடிசிலை என்றும்மேவி எங்களை உஜ்ஜீவிப்பிக்கவேணும். [கையமர் சக்கரமென்று மேலுக்கு] - திருக்கையிலே மிகவும் பொருந்தியிருக்கிற திருவாழியையுமுடையனும் கனிந்திருக்கிற திருப்பவளத்தையுமுடையனும், அவ்வழகாலே என்னை அடிமைகொண்டவனைக் கண்டு அவன் வருவதற்குமுன்னே கடுகவந்து தன் திருமேனியில் உண்டான த்ருடஸம்ச்லேஷத்தில் அபிநிவேசத்தைச் சொல்லி.

இ.—இரண்டாம் பாட்டில், என்னுடைய ஆற்றாமையை அவனுக்கு அறிவித்துவந்து, நானும் என்தோழிமாரும் கொண்டாட அத்தையங்கீகரிக்க வேணுமென்று சிலகிளிகளை அர்த்திக்கிறாள். [மையமர் இத்யாதி] - இவர்கள் வரவால்வந்த ப்ரீதியாலே "அவன்வரவு தப்பாது" என்று இவர்கள் அலங்கரிக்க; அத்தாலே அலங்கரித்து ஒளியையுடைத்தாய்ப் பெருத்திருந்துள்ள கண்களையுடையவர்கள் என்னுதல்; இவள்தான் மையகண்ணாள்; ஆகையாலே ரூபஸாம்யம் தோழிமார்க்கும் உண்டாயிருக்கையாலே சொல்லுதல். [மங்கைமார்] - அவனுக்குத் தன்னேராயிரம் பிள்ளைகள்போலே இவளுக்கும் தன்பருவத்தில் தோழிமார் உண்டாயிருக்கிறதாயிற்று. [முன்பு] - எல்லாரும் சூழவிருந்து கொண்டாட. [என் கையிருந்து] - அவர்கள் ஆதரிக்க விட்டுக்கொடேன். அவர்கள் ஓலக்கமிருக்குமத்தனை. என் கையிலே யிருக்கவேணும். [என் கையிருந்து] - தன் கையை மதித்தபடி. "அடிச்சியோந்தலைமிசை நீயணியாய்" என்கிறது அவனுக்கும் உண்டாகையாலே, அவன் தலையிலே இருக்கக்கடவ கை. அத்தை உங்களுக்குப் பாதபீடமாக்கக் கடவேன்; உபயவிபூதியையும் கொள்ளுங்கோள் என்றாள் - கீழ்; உபயவிபூதியுக்தன் தலையிலே இருக்கக்கடவ கையை உங்களுக்குப் பாதபீடமாக்கக்கடவேன் என்கிறாள் - இதில். [நெய்யமர் இத்யாதி] - நெய்யோடும் பாலோடும்கூடின அடிசில். "நெய்யிடை நல்லதோர் சோறு" என்கிறபடியே ஆஜ்யமிச்ரமாய்ப் பால்முடிவான சோறு. [இன்னடிசில்] - "எல்லாங்கண்ணன்" என்றிருக்கிறவள் இவையுகப்பது தேடிக்கொடுக்கிறாள். பகவத்விஷயத்தில் உபகாரகர்க்கு "யதந்ந: புருஷோ பவதி" என்னுமளவுபோராது: அவர்கள் உவப்பது தேடியிடவேணும் என்கை. [நிச்சல்] - பகவத்விஷயத்தில் வாசியறியவறிய, உபகாரகரைக் கொண்டாடுமித்தனையிறே. [மேவீரோ] - ஸ்வீகரியீரோ ? என்பேறுக ஸ்வீகரிக்கவேணுமென்கை. "உபாயநாந்யுபாதாய மூலாநிச பலாநிச" என்று திருவடியை முதலிகள் கொண்டாடினாப்போலே. [கையமர் சக்கரத்து] - "கைகழலாநேமியான்" என்கிறபடியே கையும்திருவாழியுமான சேர்த்தியையும் முறுவலையுங்காட்டி என்னை அநந்யார்ஹையாக்கினவன். பிரிந்து போகிறபோது "இவன்ஸத்தை கிடக்கவேணும்" என்று பண்ணின ஸ்மிதத்துக்காயிற்று இவள் தோற்றது. ராஜ புத்ரர்கள்கையில் இடைச்சரி கடைச்சரிக்குத் தோற்று எழுதிக் கொடுப்பாரைப்போலே, கையுந்திருவாழியுமாயிருந்த சேர்த்திக்குத் தோற்றபடி "திருவாழிக்கு நித்யவாஸம் பண்ணும்படி கையைக்கொடுத்து என்னை முறுவலாலே தோற்பித்து எட்டாதபடி எழுகின்றான்" என்றுஞ்சொல்லுவர்கள். [கண்டு] - எனக்குமுன்னே நீங்கள் கண்படைத்த லாபம் பெறவிறே புகுகிறீகோள். [மெய்யமர் காதல்சொல்லி] - திருமேனியிலே அணையவேண்டும்படியான காதல்; 'என்னுடம்போடே அணையவேண்டும் காதல் என்றுமாம். "காத்ரைச் சோகாபிகர்சிதை: ஸம்ஸ்ப்ருசேயம்", என்னக்கடவதிறே. "குணஜ்ஞாநத்தாலே தரிக்குமளவன்று என்று சொல்லுங்கோள்" என்று சீயர் அருளிச்செய்வர். பிள்ளாள் "தம்மைப்போலே பொய்யாய் நிலைநில்லாத காதலன்று என்று சொல்லுங்கோள்" என்று பணிக்கும். [கிளிகாள் விரைந்தோடிவந்தே] - பிராட்டியைக்கண்டு மீண்டவாநந்தரம், முதலிகள்வந்து பெருமாளை உகப்பித்தாப்

போலேயும், திருவடிவந்து ஸ்ரீபரதாழ்வானை உகப்பித்தாப்போலேயும், நீங்கள் முன்பே வரவேணும். நீங்களும் அவனும் கூடவந்து வாய்புகு நீராகாமே, முன்பே உங்களைக்கொண்டாடி ப்ரீதிஸாத்மித்தால், பின்பு அவன்வரவாம்படி வரவேணும்.

௫.—இரண்டாம்பாட்டு. சிலகிளிகளைக்குறித்து, என் ஆற்றாமையை அவனுக்கு அறிவித்துவந்து, நானும் என்தோழிமாருங் கொண்டாட அத்தை அங்கீகரிக்கவேணும் என்கிறாள். [மையமர் இத்யாதி] - முதற்பாட்டில், அவன்பதங்கொடுத்தாள்; அதுக்குமேலே ஒருபதந் தேடிக்கொடுக்கிறாள் இப்பாட்டில். அவன்பதமாகிறது - உபயவிபூதியையுங் கொடுக்கையிறே; அதுக்குமேலான பதமாகிறது - அவனாலே விரும்பப்படும் தன்னைக்கொடுக்கை. தன்னைக் கொடுக்குமிடத்திலும், "பின்னை முன்னே" என்னாதே, எல்லாருங்காணக் கைமேலேயிறே கொடுக்கப்புகுகிறது.

[மையமர்வாணெடுங்கண் மங்கைமார்முன் பென்கையிருந்து] - அவன்பாடு தரம் பெற்றாரைக் கொண்டாடுவாரைப் போலேயோ, என்பாடு தரம்பெற்றாரைக் கொண்டாடுவார் இருப்பது! அந்த:புரத்தில் வர்த்திப்பாரெல்லாரும் ஒருபடிப்பட்டிருக்கிறபடி; ஒரு கண் பார்வையாயிருக்கிறபடி. "தம்மையே நாளும் வணங்கித்தொழுவார்க்குத் தம்மையே ஒக்க அருள் செய்வர்" என்கிறபடியே, இவனும் தன்னோடு ஸர்வதா ஸாம்யங் கொடுத்து வைத்தபடி. [மையமர்] - *அஸிதேக்ஷணா*, "கருந்தடங்கண்ணி" என்று சொல்லுகிற ஏற்றமெல்லாம் இவர்களுக்குமுண்டிறே. தன்னைப்போலே ஸ்வாபாவிகமான கண்ணில் கறுப்பைச்சொல்லிற்றாதல்; அன்றிக்கே, மங்களார்த்தமாக இடும் மையைச் சொல்லிற்றாதல். இவள் அலாபத்தில் இவர்கள் மையெழுதியிருக்கக் கூடாதிறே; நீங்கள்வந்தால் இவர்கள் கண்களிருக்கும்படி பாரீகோள்! வாள் - ஒளி. அதுவும் அழிந்திறேகிடக்கிறது. இவள் வடிவு புகரழிந்துகிடக்க, இவர்கள்கண்களில் ஒளியுண்டாகக்கூடாதே. [நெடுங்கண்] - கண்ணில் பரப்படங்கலும் ஸப்ரயோஜநமாவது அப்போதாகாதே. இல்லையாகில், தலைச்சுமையோபாதியாயிறே, "காணாதார்கண் ணென்றும் கண்ணல்ல" என்கிறபடியே. [மையமர் வாணெடுங்கண்] - உங்கள்வரவால் வந்த ப்ரீதியாலே "அவன்வரவு தப்பாது" என்று நான் அலங்கரிக்க, அத்தாலே யலங்கரித்து ஒளியையுடைத்தாய்ப் பெருத்திருக்குள்ள கண்களையுடையவர்கள் என்னுதல். [மங்கைமார்] - அவனுக்குத் தன்னேராயிரம்பிள்ளைகளைப்போலே இவளுக்குத் தன்பருவத்தில் தோழிமார் உண்டாயிருக்கிறபடி. [மங்கைமார்] - முக்தர் பஞ்சவிம்சதிவார்ஷிகரா யிருக்குமாபோலே. [மங்கைமார் முன்பு] - பின்பு இருக்கவொட்டார்களே! [மங்கைமார்] - ஒருவர் இருவரன்றே. எல்லாரும் தனித்தனியே "என்முன்பே, என்முன்பே" என்பர்களே! *ஹநூமந்தம் மஹாத்மாநம் பரிவார்யோபதஸ்த்திரே* என்று ஓலக்கமாக இருந்து திருவடியைக்கொண்டாடினாப்போலே. *மஹாத்மாநம்* - நாலுபேர் சூழவிருந்துகொண்டாடினார் என்கிற இதுதான் தரமோ இவனுக்கு? *உபாயநாந்யுபாதாய மூலாநிச பலாநிச* என்று பலமூலாதிகளைக்கொடுத்து ஸம்ப்ரமித்தார்களிறே முதலிகள்; அப்படியே நெய்யமர் இன்னடிசிலென்று இங்கும் எல்லாமுண்டாயிருக்கிறபடி. *பேஜிரே விபுலாநநா:* உண்டிறே அங்கு, இங்குமையமர்வாணெடுங்கண் எல்லார்க்குமுண்டாயிருக்கிறபடி. [என்கையிருந்து] - *ஏகம்து:க்கம் ஸுகஞ்சநௌ* என்று, ஸமாநஸுகது:க்கைகளாய் இருந்தார்களேயாகிலும், பசித்தாரேபுண்ணவேணுமிறே! அப்படியே, அவர்கள் ஓலக்கமிருக்குமத்தனை; இருப்பிடம் என்கையாகவேணும். அவன் திருமுடிக்கு ஆபரணமான என்னுடைய கையை உங்களுக்குப் பாதபீடமாக்குகிறேன். *ததௌ பாஹுஷ்தாம் ஸ்கந்தே* என்னுமாபோலே - அவனுக்கு ஸர்வஸ்வதாநம் பண்ணும் கை. பர்யங்கவித்யையிற்சொல்லும் படுக்கையில் இருப்புப் போலுமன்றாகாதே, இவள்கையில் இருப்பு. இவள் "அணிமிகுதாமரைக் கை" என்னுமது அவனுக்கும் உண்டிறே. மெய்யமர்காதல்சொல்லி, கிளிகாள்! விரைந்தோடிவந்து, என் கையிருந்து நெய்யமர் இன்னடிசில் நிச்சல் பாலொடுமேவீரோ! என்கிறாள். அதுவென்? போகிறபோதே லாலநம்பண்ணி விட்டாலோ? என்னில்; அதுக்குக் கைமுதலுண்டாக

வேணுமோ? *காத்ரைச்சோகாபிகர்சிதை:* என்றும், இட்டகாலிட்டகையளாயுமிறே இவள் கிடக்கிறது; இனித்தான் கொண்டாடுகைக்கு ஜலக்கபிருப்பாரும் வேணுமே! "எம்பின் முன்னவனுக்குமாய்வராலோ" என்றிறே அவர்களுங் கிடக்கிறது. [மெய்யமர் இத்யாதி] *ஏஷ ஸர்வஸ்வபூதஸ்து* என்று கொடுக்கைக்கு உடலில்லையே இவளுக்கு. மெய்யோடே கூடின இனிய அடிசில் நான்தோறும் பாலோடே கூட நான்தர, அத்தை ஸ்வீகரித்து நீங்கள் என்னை உஜ்ஜீவிப்பிக்கவேணும். "உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும்வெற்றிலையு மெல்லாங் கண்ணன்" என்றிருக்கக்கடவ இவள், இவை உகப்பதுதேடி இடுகிறாளிறே. இத்தால் சொல்லிற்றாயிற்று என்? என்னில்; பகவத்விஷயத்தில் உபகாரகராயிருப்பார்க்கு. "உண்பதி லொருகை பருந்திட்டோமாகில் செய்யலாவதுண்டோ?" என்று கைவாங்குமதல்ல; அவர்கள் விரும்பினவையே தேடியிடவேணும் என்னுமிடம் சொல்லிற்று. *யதந்ந: புருஷோபவதி* என்னலாவது அவன்பக்கல், [நீச்சல்] - சேர்ப்பதொருநாளே, இவர்களுக்குப்பின்பு அநுபவம் நித்யமாயிருக்கிறபடி. *அத்ர பாத்ரசாபி நித்யம் யதீசரணௌ சரணம்மதீயம்* என்னுமாபோலே. [கையமர்சக்கரத்துஎன் கனிவாய்ப்பெருமானைக்கண்டு] - உண்டாரை உண்ணப்பண்ணுவிக்கத் தேடுகிறாளிறே. இத்தால் சொல்லிற்று, இவர்க்குமுன்னே இவருடைய அபிமதம் இவரைப் பற்றினார்க்கு முற்பட்டிருக்கிறபடி; "வேறாகவேத்தியிருப்பாரை வெல்லுமே மற்றவரைச்சாத் தியிருப்பார் தவம்." [கையமர்சக்கரம்] - எப்போதும் கைகழலா நேமியானாயிருக்கை. [என் கனிவாய்] - கையுந்திரு வாழியுமான அழகைக் காட்டுவது, முறுவலைக்காட்டுவதாய், என்னை அநந்யார்ஹையாக்கினவன். பிரிந்துபோகிறபோது, "இவள்ஸத்தை கிடக்கவேணும்" என்று பண்ணின ஸ்மிதத்துக்காயிற்று தோற்றது. [என்கனிவாய்] - திருவாழிக்கு முற்றாட்டா யிற்றுத் திருக்கை; தமக்கு முற்றாட்டு இருப்பவளம். அவன்ஜீவநத்தை நித்யமாக்கினான், என்ஜீவநத்தைக் காதாசித்கமாக்கினான். அவனுக்கே கையடைப்பாயிற்றே. கைமேலே யிடுமே. [கண்டு] - எனக்குப்போலே ஸ்ம்ருதி விஷயமாமளவன்றிறே உங்களுக்கு. இவற்றின் கண்ணாலேகாணுதல், இவற்றைக்காணுதலிறே இவளுக்கு; நாம் ஸ்ப்ருஷ்ட்வாவாதல், சந்த்ரே த்ருஷ்டிஸ்மாகம: ஆதல்; தொட்டாரைத்தொடுதல் கண்டாரைக் காணுதலிறே இவளுக்கு. [மெய்யமர்காதல்சொல்லி]-திருமேனியிலே அணைய வேண்டும்படியான காதல் என்னுதல்; என்னுடம்போடு அணையவேண்டும்படியான காதல் என்னவுமாம். *காத்ரைச் சோகா என்றுதல், பிகர்சிதை:* ஸம்ஸ்ப்ருசேயம் என்னக்கடவதிறே. "ஸம்ஸத்தைகிடக்கக் கிடக்குமிறே" குணஜ்ஞாநத்தாலே தரித்திருக்கிறாள்" என்றுதல் நினைத்திருக்குமதல்லவென்று சொல்லுங் கோள். அங்ஙனேயும் தரித்திருந்தார் உண்டிறே; மாயாசிரஸ்ஸைக்காட்டினவன்றும் பிராட்டி லெனகிலரோடொக்கக் கண்ணநீர் விழவிட்டு, "அதுவேயாகிலும் அவருளராகிலல்லது நம் ஸத்தை கிடவாது" என்று தன்னைக்கொண்டு அறுதியிட்டு தரித்திருந்தாளிறே. *அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபாயதா* இறே; ஆதித்யன் உண்டாகிலல்லது ப்ரபையு மில்லையிறே. இங்ஙனேயிருக்கச்செய்தே ஒரு ஹேதுக்களாலே வரும் ஸங்கோசவிகாஸங் களேயிறேயுள்ளது. த்ரவ்யமாயிருக்கச்செய்தேயும் ப்ரகாரமாம் ஆகாரமுண்டே. அப்படி யேயன்றிறே இங்கு; உடம்பிலே பண்ணாந்து பிரிகதார்க்கு உடம்பை அணைத்தல்லது நிற்க வொண்ணாதிறே. [மெய்யமர்காதல்] - "தம்மைப்போலே பொய்யுமாய் நிலையில்லாதகாதலன்று எங்களது என்று சொல்லுங்கோள்" என்று பிள்ளான் பணிக்கும். அன்றிக்கே, [மெய்யமர் காதல்] - ஆத்மாநுபந்தியான காதல். மெய்யென்று ஆத்மாவாய், ஆத்மாவோடே பொருந் தினகாதல் என்றுமாம். "மெய்ம்மையே மிகவுணர்ந்து" என்கிறவிடத்தில், மெய்யென்கிறது ஆத்மாவையிறே. ஸத்யமான காதல் என்றபடி. [சொல்லி] தந்தாமுக்கு இல்லாதவை பிறர் வாயிலே கேட்டறியுமித்தனையிறே. தமக்கு உண்டாகில் இப்படி தூதுவிடப் பார்த்திராரே. காட்சிக்குமேலே ஓரேற்றம்போலேகாணும் தன்தசையை அவனுக்கு அறிவிக்கை. [இளிகாள்! விரைந்தோடிவந்தே] - பிராட்டியைக் கண்டு மீண்ட அநந்தரம் முதலிகள் வந்து பெருமானை யுகப்பித்தாப்போலவும், பெருமாள் மீண்டெழுந்தருளுகிற போது திருவடி முன்னேவந்து ஸ்ரீபரதாழ்வானை யுகப்பித்தாப்போலவும், நீங்கள் முன்னேவரவேணும். [இளிகாள்! விரைந் தோடிவந்தே] - அறிவித்துக் கூடவரவிராதே கிடிகோள். திருவடி பிராட்டியைத் தேடிப்

போகிறபோது பண்ணின அபிஸந்திகளெல்லாம் இக்கரையிலே கழித்துப் பின்பு லங்கையிலே போய்ப்புக்கு எங்கும்தேடி, அவளைக்கண்டு, அநந்தரம் "இக்காட்சியால் ப்ரயோஜநமுள்ளது அவ்வாச்ரயமுள்ளபோதே சென்றறிவிக்கையிறே" என்று ஒருநாளே வந்தானிறே; அதுக்கடி, போகிறபோது இவராற்றாமையைக்காண்கையாலே, "நாம்வருமளவும் இவரைக் கிடக்கை யரிது" என்றிருந்தான்; பெருமாள் தாமும், "பிள்ளாய்! நீயிருக்கிற போதைத் தரிப்புக் கொண்டு நீபோனாலும் இப்படியிருப்பன் என்றிராதேகிடாய்: என்னளவறிந்து கார்யஞ்செய்" என்றாரிறே. [விரைந்தோடிவந்தே] - நீங்கள் முற்படவந்த ப்ரீதிலாத்மித்தால், பின்பு அவன் வரவாகவேணும். அவனுடனே கூடவரில் வாய்புகுநீராய் உங்களைக் கொண்டாடவொண்ணாது ஆனபின்பு, நான் முறைகெடாமல் அநுபவிக்கும்படி வாருங்கோள்! உபகாரகரான உங்கள் காலிலே முற்பட விழுந்தபின்பு அவன்காலிலேவிழும்படி பண்ணுங்கோள். ஆகையிறே, நம் முதலிகள் குருபரம்பரைமுன்னாக த்வயாநுஸந்தாநம்பண்ணுகிறது. இனித்தான் சிஷ்யனுக்கு ஆசார்யாநுவர்த்தநம்பண்ணலாவது அவன் தேஹபரிக்ரஹம்பண்ணியிருக்கிற நாளிலேயிறே; பின்புள்ளதெல்லாம் பகவதநுபவத்திலே அந்வயிக்குமிறே இருவர்க்கும். அவன் "எனக்கு" என்னும் நாளிலேயிறே, இவன் "உனக்கு" என்று கொடுக்கலாவது?

ஓடிவந்தென்குழல்மேல் ஒளிமாமலரூதீரோ*
கூடியவண்டினங்காள் குருநாடுடையைவர்கட்காய்*
ஆடியமாநெடுந்தேர்ப்படை நீறெழச்செற்றபிரான்*
சூடியதண்துளபமுண்ட தூமதுவாய்கள்கொண்டே. (3)

ஒ.—மூன்றாம்பாட்டில், இனமாயிருக்கிற வண்டுகளைக்குறித்து, எம்பெருமானுக்கு தன் தசையை அறிவித்துவந்து என்தலைமேலே வர்த்தியுங்கோள் என்கிறாள். [ஒளிமாமலரூதீரோ] - உங்கள் வரவாலே தளிர்த்திருக்கிற என்னுடைய குழலில் ஒளியையுடைத்தாய்ப் பெருத்திருக்கிறபூவில் மதுவைப் பாநம்பண்ணீர்கோளோ. [குருநாடுடைஐவரென்று மேலுக்கு] - குருநாடுடைய தர்மபுத்ராதி களுக்காக மநோஹரமாம்படி ஸஞ்சரியாநின்றுள்ள குதிரைபூண்ட பெரியதேரையே உபகரணமாகக் கொண்டு ஸேனையைப் பொடியாம்படிமுடித்த மஹோபகாரகன் சூடியருளின திருத்துழாயில் மதுவைப் பாநம்பண்ணுகையாலே சுத்தமாய்த் தேனையுடைய வாய்களோடேகூட.

இ.—மூன்றாம்பாட்டில், சிலவண்டுகளைக் குறித்து, அவனுக்கு என் தசையை அறிவித்துவந்து என்தலைமேலே வர்த்தியுங்கோள் என்கிறாள். [ஓடிவந்து] - முன்பே அவற்றின்வார்த்தைகேட்கையில் உண்டான த்வரையாலேயாதல், அவற்றை அநுபவிக்கையில் உண்டான த்வரையாலேயாதல், சடக்கென வரவேணும் என்கிறாள். [என்குழல்மேல்] - அவனோடு போகஸாம்யமுண்டாம்படிபண்ணக்கடவேன். அவன் தனக்குத்தூதுபோனவர்களுக்கு ததிமுகன்காத்திருக்கிற காவற்காட்டை அழிக்கக்கொடுத்தானித் தனையிறே; அவன்காவற்காட்டை அழிக்கத்தருகிறேன் உங்களுக்கு என்கிறாள். "அஹமாவாரயிஷ்யாமி யுஷ்மாகம்பரிபந்திந:" என்று திருவடியைப்பற்றி அழிக்கவும்வேண்டாவிறே: இவளுடைய "ஏஷஸர்வஸ்வ பூதஸ்து" இருக்கிறபடி. உங்களுடையவரவாலே தளிர்த்திருக்கிற என்னுடைய குழலில், ஒளியை உடைத்தாய் ச்லாக்யமானமலரில் மதுவைப் பாநம்பண்ணீரோ. [ஊதீரோ] - மதுவின்ஸம்ருத்தியாலே, திண்ணகத்தில் இழிவாரைப்போலே இழியமாட்டாதேநின்று பறக்கிறபடி. உங்கள் கார்யமுமாய்ப் பரரக்ஷணமுமானால் ஆறியிருக்கிறதென் என்கை. [கூடிய வண்டினங்காள்] - மஹாராஜரைப்போலே படைதிரட்டவிராதே, என்னுடைய ரக்ஷணத்திலே ஒருப்பட்டு முன்பே திரண்டிருக்கப்பெற்றதிறே. [குரு நாடுடை ஐவர்கட்காய்] - நாடுடையவர்கள் ஐவருமேயென்றிருக்கிறாள். துர்யோதநாதிகள் கிடந்தாரே கண்டேறினவித்தனை. [ஐவர்கட்காய்] - "நாடுடைமன்னர்" என்கிறபடியே ராஜ்யமுடையவர்கள் அவர்கள், "நாமவர்களுக்குக் கையாளாய் வ்யாபரிக்கிறோம்" என்றாயிற்று அவன் நினைத்திருப்பது; அவன்நினைவிறே இவளுக்குநினைவு. [ஆடியமாநெடுந்தேர்] - மநோஹரமாம்படி ஸஞ்சரியாநின்ற குதிரைபூண்ட பெருந்தேரை உபகரணமாகக்கொண்டு; "மஹதி ஸ்யந்தநே" என்னக்கடவதிறே. [படை

நிறைச்செற்ற] - ஆயுதமெடாமைக்கு அநுமதிபண்ணுகையாலே, தேர்க்காலாலே ஸேனையைத் துகளாக்கினன். [பிரான்] - அவனுக்குப் பரார்த்தமாகவ்யாபரிக்கையே ஸ்வரூபம், தாழ்த்தது ஔபாதிகமென்றிருக்கிறாள். [கூடிய தண்டுளபமுண்ட] - ஸாரத்ம்யம்பண்ணும்போது வைத்த வனியத்திலே மதுபானம்பண்ணின: அவதாரங்களில் ஏதேனுமொன்றாலே வனியம்வைக்கிலும் அவ்வவஸ்தையை ப்ராபித்து அநுகூலிக்கிறது, திருத்துழாயாகக்கடவது. [தூமதுவாய்கள்கொண்டே] - அம்மதுவைப் பானம்பண்ணுகையாலே, சுத்தமாய்த் தேனையுடைய வாய்களோடேகூட; இனிதான பேச்சையுடைத்தாயிருக்கை என்றுமாம். வாய்-வார்த்தை; "த்ருஷ்டா ஸீதா" என்றாப்போலே. என்னையும் மதுபானம் பண்ணுவித்து நீங்களும் மதுபானம் பண்ணுங்கோள்.

ஈடு.—மூன்றாம்பாட்டு. சிலவண்டுகளைக்குறித்து, அவனுக்கு என் தசையை அறிவித்து வந்து என் தலைமேலே வர்த்தியுங்கோள் என்கிறாள்.

[ஓடிவந்து] - கடுக வரவேணும். என்னளவுகண்டுபோகிற உங்களுக்கு, நானுள்ள போதே வந்துகடவவேணும். அன்றிக்கே, அவற்றையநுபவிக்கையில் உண்டான த்வரையாலேயாதல், சடக்கென வரவேணுமென்கிறாள். [என்குழல்மேல்] - பேரளவுடையார்படும் ஈடுபாட்டைக் கண்டு, தன்குழல்வீறு தானறிந்திருக்குமே. "கூடியதண்டுளபமுண்ட தூமதுவாய்கள்கொண்டு ஓடிவந்தென்குழல்மேல் ஒளிமாமலரூதீரோ" என்பானென், கார்யஞ்செய்து சமைந்தால் கைக்கூலி கொடுப்பாரைப்போலே! என்னில்; இவற்றுக்கு இவள்குழலில் விஷயமுண்டாகவேணுமே. இப்போது, மதுமாறிச் சருகாயிறேகிடக்கிறது; இவைமீண்டாலிறே இத்தலையில்செவ்வி பிறப்பது. [என்குழல்மேல்] - அவனுக்குத் தூதுபோய்வந்தாரிற் காட்டில் இவளுக்குத் தூதுபோனார்க்கு உண்டான தன்னேற்றம் இருக்கிறபடி. அங்கு மஹாராஜருடைய மதுவநமிறேயழிந்தது; இங்கு அவன்காவற்காட்டை உங்களுக்குத் தருகிறேனென்கிறாள். அளகாடவியிறே, தலையான பரிசிலிறே இதுதான். ததிமுகப்ரப்ருதிகளுடைய விலக்குகையும் இல்லையிறே யிங்கு. சாந்தனை திருவடியிறே *அஹமாவாரயிஷ்யாமி யுஷ்மாகம் பரிபந்திந:* என்றான். பிராட்டியைக்கண்டுவந்தமை யறியாதேயிருக்கச்செய்தேயும் மதுவநம் அழிந்தமையைக்கண்டு, மஹாராஜருடைய வால் ருச்யமூக பர்வதத்திலே யறைந்ததிறே. "நம்மோடு பண்ணிப்போன ஸமயம் அதிக்ரமித்திருக்கச்செய்தேயும் மதுவநமழிக்கும்போது பிராட்டியைக் கண்டார்களாகவேணுமிறே." "பிராட்டியைக்கண்டஹர்ஷம், நடுவில் மதுவநமன்றாகில் ராஜபுத்ரர்கள் முதுகோடேபோம்" என்று பட்டரருளிச்செய்வர். [என்குழல் மேலொளிமாமலரூதீரோ] - என்றும் இவள்குழலில் மதுபானம்பண்ணப்பெறுவது வண்டுகளேயாகாதே. தூவியம்புள்ளுடைத்தெய்வ வண்டாதல் இவையாதல். அவனேயோ ஸாம்யாபத்தி தரவல்லான், நானும் உங்களுக்கு அவனோட்டை ஸாம்யாபத்தியைத்தருகிறேனென்கிறாள். "ஸோஶ்நுதே" என்கிறபடியே, உங்களையும் அவனையும் ஒருகலத்திலே யூட்டுகிறேனென்கிறாள். தலையானஊணிறே. [என்குழல்மேலொளிமாமலரூதீரோ] - உங்கள்வரவாலே தளிர்த்திருக்கிற என்னுடையகுழலில், ஒளியையுடைத்தாய் ச்லாக்யமான மலரில் மதுவைப் பானம்பண்ணீரோ? [ஊதீரோ] - மதுவின் ஸம்ருத்தியாலே, விண்ணகத்தில் இழிவாரைப்போலே தனித்து இழியமாட்டாதே நின்றுபறக்கிறபடி. உங்கள் கார்யமுமாய்ப் பரரக்ஷணமுமானால் ஆறியிருக்கிறதென்? என்கை. [கூடியவண்டினங்காள்] - மஹாராஜரைப்போலே படைதிரட்ட வேண்டாவிறே யுங்களுக்கு. என்னுடைய ரக்ஷணத்திலே யொருப்பட்டு முன்பே திரண்டிருக்கப்பெற்றதிறே. இளையபெருமாள் கிஷ்கிந்தா த்வாரத்திலே சென்று குணகீர்த்தனம் பண்ணின பின்பிறே படைதிரட்டிற்று! [குருநாடுடை ஐவர்கட்காய்] - பீறற் மஹிஷிகள் குழல்பேறுமையைக்கண்டு வருந்துமவன்கிடீர்; "மைத்துனன்மார்காதலியை மயிர் முடிப்பித் தவர்களையே மன்னராக்கி" என்கிறபடியே. ராஜ்யமுடையார் பாண்டவர்களே; நாம் அவர்களுக்கு ஏவல்தேவை செய்துநிற்கிறோமென்றாயிற்று அவன்நினைத்திருப்பது. [குருநாடுடைஐவர்] - துர்யோதநாதிகள் கிடந்தாலினகண் டேறினவோபாதியிறே. "நாடுடை மன்னர்" என்கிறபடியே ராஜ்யம் அவர்களதே. "துர்யோதநாதிகள் ராஜ்யம்பண்ணுகை

வண்டு'' என்றிருக்கும் பகவதபிப்ராயத்தாலே சொல்லுகிறார்; அவன்நினைவேயிறே இவர்க்கும் நினைவு. [ஆழியமாநெடுந்தேர்] - மநோஹரமாம்படி ஸஞ்சரியாநின்ற குதிரைபூண்ட பெருந் தேரை உபகரணமாகக் கொண்டு. *மஹதி ஸ்யந்தநே ஸ்த்திதௌ* என்னும்படியிருக்கிற தேரைக்கொண்டு. [படை நீறெழச்செற்றபிரான்] - ஆயுதமெடாமைக்கு அநுமதிபண்ணு கையாலே, தேர்க்காலாலே ஸேனையைத் தூளாக்கினான். [செற்றபிரான்] - தன்னைபற்றிய வரதியும் பரோபகாரம் பண்ணுகையே ஸ்வபாவமாகவுடையவன். தாழ்த்தது ஔபாதிக மென்றிருக்கிறாள். [செற்றபிரான்]-அர்ஜ்ஜுநாதிகளும் சஸ்த்ரங்களோபாதியிறே; *மயைவைதே நிஹதா:பூர்வமேவ* என்று தானே யருளிச்செய்தானிறே. [சூடியதண்டுளபமுண்ட] - ஸாரத்ய்யம்பண்ணுகிற போது வைத்த வனமாலையிலே மதுபாநம்பண்ணுகிற வண்டுகள். அவதாரங்களில் ஏதேனுமொன்றிலே வனமாலைவைக்கிலும், அவ்வவஸ்த்தையை ப்ராபித்தநுகூலிக்கிறது திருத்துழாயாகக்கடவது. [தூமதுவாய்கள்கொண்டே] - அவ்வனமாலையத்தில் மதுவைப்பாகம் பண்ணி சுத்தமாய் இனிதான வாய்களைக்கொண்டு; இனிதானபேச்சையுடைத்தாயிருக்கையென்றுமாம். [தூமதுவாய்கள்கொண்டு - ஓடிவந்தென்குழல்மேலொளிமாமலருதீரோ] - *வாஹிவாத* - சாக்ஷுஷமல்லாமையாலே நீ பெற்றபேறு என்? *த்வயி மே காத்ரஸம்ஸ்பர்ச:* - நம்முடைய கரணங்களுக்குஸ்பர்சம் உன்பக்கலிலேயாயிற்றே. நமக்குத் தொட்டாரைத் தொட்டாயிற்றே. *சந்த்ரே த்ருஷ்டிஸமாகம:* தர்சகத்தோடொத்ததிறே எனக்கு ஸ்பர்சமும். அற்றது பொருந்தும்படி வார்த்தைசொல்லவல்ல வாயைக்கொண்டு *த்ருஷ்டா ஸீதா* என்றாப் போலே, என்னையும் மதுபாகம்பண்ணுவித்து நீங்களும் மதுபாநம்பண்ணுங்கோள்.

தூமதுவாய்கள் கொண்டுவந்து என்முல்லைகள்மேல்தும்பிகாள்*
பூமதுவுண்ணச்செல்லில் வினையேனைப்பொய்செய்தகன்ற*
மாமதுவார்தண் துழாய்முடி வானவர்கோனைக்கண்டு*
யாமிதுவோ தக்கவாறு என்னவேண்டுங்கண்டீர் நுங்கட்கே. (4)

ஒ.—நாலாம்பாட்டில், என்னை நோவுபடுத்திப்போந்து எட்டாநிலத்திலே ஓலக்கமிருந்து வளையம்வைத்து போதுபோக்கி ஓரஞ்செய்கையோ நாம் தக்கோரானபடியென்று, திருநாட்டிலேசென்று எம்பெருமானுக்குச் சொல்லவேணுமென்று சில தும்பிகளைக்குறித்து அருளிச்செய்கிறாள். [தூமது வென்று தொடங்கி] - நான் வளர்க்கிற முல்லைகளிலே வர்த்திக்கிற தும்பிகாள் ! உங்களுடைய இனிய பேச்சுக்களோடே அங்கேசென்று. [பூமதுவுண்ணச்செல்லில்] - பூக்களில் மதுபாநம் பண்ணப்போகில். [வினையேனையென்று தொடங்கி] - என்னோடே ஸ்வப்நகல்பமான ஸம்ச்லேஷத்தைப்பண்ணி விச்லேஷித்து, அத்தாலே க்ருதக்ருத்யனாய், திருக்குழலில் செவ்வியாலே மிகவும் மதுதாரைகள் பாயாநின்றுள்ள திருத்துழாயாலே அலங்க்ருதமான முடியையுடைய அயர்வறுமமரர்கள் தன்னுடைய அழகையும் குணங்களையும் கொண்டாட இருக்குமவனைக்கண்டு. போகத்தில் அபர்யாப்தியாலே வினையேன் என்கிறாள். பொய் - ஸ்நேஹிப்பாரைப்போலேகாட்டி வஞ்சிக்கை.

இ.—நாலாம்பாட்டில், என்னை நோவுபடுத்திப்போய் எட்டாத நிலத்திலே ஓலக்கமிருக்கை தக்கோர்மையோ ? என்று திருநாட்டிலேசென்று சொல்லுங்கோள்! என்று சில தும்பிகளைக் குறித்துச் சொல்லுகிறாள். [என் முல்லைகள்மேல் தும்பிகாள் - தூமதுவாய்கள் கொண்டுவந்து] - நான் வளர்க்கிற முல்லைகளின்மேலே வர்த்திக்கிற தும்பிகாள்! இவள் உருவுகையாலே, பேணி நீர்வார்ப்பாரில்லாமையாலே உலுவின முல்லைகளின் மேலே பட்டினிவிடுகிறவையிறே; என்னோடொக்க நோவுபடப் பிறந்த நீங்கள். என் பரிஸரத்தில் முல்லைகள் என்றுமாம். இவள் வர்த்திக்கிற எல்லையடங்கச் சருகாயிறே கிடக்கிறது. சுத்தமாய் இனிதான பேச்சுக்களைக்கொண்டு சென்று; வரவு செலவைக் காட்டுகிறது. [பூமதுவுண்ணச் செல்லில்] - மதுவ்ரதங்களாகையாலே பூவுள்ளவிடந்தேடி மதுபாநம் பண்ணப்போகில். [வினையேனைப் பொய்செய்தகன்ற] - ''பிரியேன், பிரியிற்றரியேன்'' என்ற பொய்யை மெய் என்று ப்ரமிக்கும்படியான பாபத்தைப் பண்ணின என்னை, ''ராமோ த்விர்நாபிபாஷதே'' என்னுமவன் இரண்டுவார்த்தை சொல்லும்

படியான பாபத்தைப்பண்ணினேன். [பொய்செய்து] - இந்த்ரஜாலமென்றும், கனவென்றும், கலவியென்றும் பர்யாயமிறே. [அகன்ற] - தன்பேறாகக் கலந்து பொகட்டுக் கைகழியப் போனபடி. [மாமதுவார் தண்டுழாய்முடி] - திருக்குழலில் செவ்வியாலே மிகவும் மதுதாரையை யுடைத்தான திருத்துழாயாலே அலங்க்ருதமான திருமுடியையுடையவன். [அகன்ற மாமதுவார் தண்டுழாய்முடி] - இவள்பரிஸர மடங்கச் சருகாய்க்கிடக்கப் பிரிவே நீராக அவன் வைத்த வனையம் மது சொரிகிறதிறே. [வானவர் கோனைக் கண்டு] - அவ்வழகை நித்யஸூரிகளை அநுபவிப்பித்துக் கொண்டிருக்கிறவனை. புதியாரை நோவுபடவிட்டு, பழையார்க்கு ஓலக்கங்கொண்டு இராநின்றான்: ''த்வயி கிஞ்சித் ஸமாபந்நே'' என்கிறவிது உக்திமாத்ரமாய் விட்டதிறே. [கண்டு] - நீங்கள் முன்பே காணப்பெறுகிறீர்களிறே. [யாமிதுவோ தக்கவாறு] - நாம் தக்கோரானபடி இதுவோ ? என்னுங்கோள். ஸ்த்ரீவதம் பண்ணிப்போந்து, பிரிவறியாத அந்தரங்கர்க்கு ஓலக்கங் கொடுத்து ஆந்ருசம்ஸ்யங்கொண்டாடியிருக்குமதுவோ தக்கோர்மை! [என்னவேண்டுங்கண்டீர்] - அப்பேரோலக்கத்திலே பெரிய மதிப்பனைக்கண்டுவைத்து, ''இப்படி சொல்லவேணுமோ ?'' என்னுதே இவ்வார்த்தைஇத்தனையும் சொல்லவேணும். ''வாசா தர்மமவாப்நுஹி.'' [நுங்கட்கே] - கலந்துவைத்துப் பொகட்டுப்போனவனிற் காட்டில், ஆற்றாமையாலே முகங்காட்டின உங்களுக்கு இத்தனையும் செய்யவேண்டாவோ ?

ஊடு.—நாலாம்பாட்டு. என்னைநோவுபடுத்திப்போய் எட்டாநிலத்திலே ஓலக்கமிருக்கை தக்கோர்மையோ? என்று திருநாட்டிலேசென்று சொல்லுங்கோள்! என்று சில தும்பிகளைக் குறித்துச் சொல்லுகிறாள்.

[தூமதுவாய்கள்கொண்டுவந்து] - பரிசுத்தமாய் இனிதானபேச்சையுடைய வாயைக்கொண்டு சென்று. வந்தென்றது - சென்றென்றபடி. ஆர்த்தர்க்கு உஜ்ஜீவநஹேதுவாய் இனிதுமான பேச்சைக்கொண்டு. [என்முல்லைகள்மேல் தும்பிகாள்] - உடன்கேடராயொக்கப் பட்டினிவிட்டுக்கிடப்பாரைப் போலேயிறே நீங்கள் கிடக்கிறது. இவள்குழலில் பூவோடாக்க, உத்யாநத்திலுள்ள பூக்களும் சருகாயிறேகிடப்பது; *அபிவ்ருக்ஷா: பரிம்லாநா:* என்னுமாபோலே. [பூமதுவுண்ணச்செல்லில்] - மதுவ்ரதங்களாகையாலே பூவுள்ளவிடந்தேடி மதுபாநம் பண்ணப் போகக்கடவீர்களிறே. இவள்பரிஸரத்தி லுள்ளவையிறே உருவிக்கிடப்பன; அங்குள்ளவையெல்லாம் செவ்வி பெற்றிருக்குமிறே; மாமதுவார் தண்டுழாய்முடி வானவர் கோனிறே. அவர்களில் இவனுக்கு வாசி, கவித்தமுடியும்இட்டமாலையுமே யிறே. இங்குள்ள வண்டுகள்போலே பட்டினிகிடக்க வேண்டாவிறே அங்குள்ளார்க்கு. [மாமதுவார் தண்டுழாய்]- விரஹத்திலும் வற்றுமாறுதவிடங்காணும் அவ்விடம். [பூமதுவுண்ணச்செல்லில்] - இவள் தன்குழலிற் பூவும்வாடி மதுவும்வற்றினபின்பு இனி இவ்விபூதியிலுண்டாக மாட்டாதென்றிருக்கிறாள்; இனி விபூதிமான்பக்கலிலே யுண்டாகில் உண்டாமத்தனை யென்றிருக்கிறாள். [வினையேனை] - அவன் என்பக்கற் பேசின பேச்சுக்களையும் வ்யாமோஹத்தையும் ''மெய்'' என்றிருக்கும்படியான பாபத்தைப் பண்ணின என்னை. [வினையேனைப்பொய்செய்து] - கடுகப்பிரியில் இடிவிழுந்தாப்போலே இவள்முடியும்'' என்றுபார்த்து, ''உன்னைப்பிரியேன், பிரியிலுமாற்றேன் என்றாப்போலேயிருக்க, அவன் பிரிவையுணர்த்தினான்; நான் அதுக்குத் தாத்பர்யம் அறியாமை கெட்டேன். அறிந்தேனாகில், போகாதபடி காற்கட்டலாயிற்றுக்கிமர்! [பொய்செய்து] - ஸம்ச்லேஷத்தில் அபர்யாப்திபிருக்கிறபடி. சிரகாலம் ஜீவிக்கச் செய்தேயும் ''ஒருஸ்வப்நமாய்ப் போயிற்று'' என்னக்கடவர்களாயிற்று, விச்லேஷத்தோடே வ்யாப்தமாகையாலே. கனவென்றும், இந்த்ரஜாலமென்றும், பொய்யென்றும் - அபர்யாப்தமான போகத்தைச் சொல்லக்கடவது. [பொய்செய்தகன்ற] - அகலுகைக்கு இட்டவழி யிருக்கிறபடி. ''கலக்க'' என்று பேரையிட்டு, பர்யாப்தமாகக்கலவாதே வஞ்சித்து அகன்ற. [மாமதுவார்தண்டுழாய்முடி] - இங்குள்ளதும் அங்கேயாகையாலே மது இரட்டித்திருக்குமிறே. தலையான மதுவுமே அதுதான். ஸம்ச்லேஷவிச்லேஷங்களில் ஒருபடிப்பட்டிருக்குமவனைக் கண்டு. [வானவர்கோனைக் கண்டு] - தந்தாமைப்பேணுவார்க்கு உடம்புகொடுத்திருக்குமவனைக் கண்டு. *த்வயி கிஞ்சித் ஸமாபந்நே கிம்கார்யம் ஸீதயாமம* என்றத்தைத்தவிர்ந்து, பழைய உறவு கொண்டாடி யிருக்கிறவனைக் கண்டு. [யாம்] - ஸாபராதனாகையாலே தன்குற்றத்தை யநுஸந்தித்து, ஓலக்கமிருக்கிறு

னுகைப் பராக்கடித்து அநபிபவநீயனாயிருக்கும்; முதன்மைகண்டு கூசாதே நின்று நம்மைக் காணுமென்பது. இப்படி ஸம்போதித்தவாறே முகம்பார்க்கவேண்டிவரும்; அவன் பார்த்த முகம் மாறுவதற்குமுன்னே, இதுவோ தக்கவாறு என்பது. *ஆந்ருசம்ஸ்யம் பரோதர்ம:* என்று சிலர்க்குச்சொல்லிவைத்திரே. *நைவதம்சாந் நமசகாந் - ந மாம்ஸம் ராகவோபுங்க்தே நசாபிமது ஸேவதே* என்றவையெல்லாம் வடிவிலே கண்டோமிறே. [இதுவோதக்கவாறு] - ஸ்த்ரீவதம் பண்ணி வனையம்வைத்து ஓலக்கங்கொடுத்திருக்கையோ தக்கோர்மையாவது? [என்னவேண்டுங்கண்டீர்] - இவ்வோலக்கத்தையும் இவன்மேன்மையையுங் கண்டு "இத்தைநயெங்ஙனே யழிக்கும்படி?" என்று நீங்கள் ஆந்ருசம்ஸ்யங்கொண்டாடவொண்ணாது; அவ்வளவில் என்னைப் பார்த்துச்சொல்லுங்கோள். [நுங்கட்கே] - அவனல்லாத உங்களுக்கு இத்தனையும் செய்ய வேணும். இல்லையாகில், இவ்வளவிலேமுகங்காட்டின உங்களுக்கும் அவனுக்கும் வாசியில்லை. [நுங்கட்கே]-என்முலைகள்மேல் தும்பிகளன்றோ! உங்கள்ஜீவநம் நீங்களே நோக்கிக் கொள்ள வேணும்: அவன் ஸ்த்ரீவதம்பண்ணி ஸ்வரூபஹாநிபாராதே யோலக்கங்கொடுத்திருந்தான்; நான் பாடோடிக்கிடந்தேன்; இனி உங்கள்ஸ்வரூபஹாநி நீங்களே பரிஹரித்துக்கொள்ளுங் கோள்.

நுங்கட்குயானுரைக்கேன்வம்மின் யான்வளர்த்தகிளிகாள்*
வெங்கண்புள்ளூர்ந்துவந்து வினையேனைநெஞ்சங்கவர்ந்த*
செங்கண்கருமுகிலைச் செய்யவாய்ச்செழுங்கற்பகத்தை*
எங்குச்சென்றாகிலுங்கண்டு இதுவோதக்கவாறென்மினே. (5)

ஒ.—அஞ்சாம்பாட்டில், திருநாடாகவுமாம், மற்றேதேனும் அவனுகந்தருளின தேசங்களாகவுமாம், எங்கேனும் போயாகிலும் அவனைக்கண்டு தம்முடைய தக்கோர்மை யிருக்கும்படி இதுவோவென்னுங்கோளென்று, தன்னுடைய கிளிகளைக் குறித்துச் சொல்லுகிறாள். [வெங்கண்புள்ளென்று தொடங்கி] - ப்ரதிகூலர்க்கு பயங்கரமான த்ருஷ்டியையுடைய பெரிய திருவடியை நடத்திக்கொண்டு வந்து, தன்னை விச்லேஷித்தால் தரியாதபடியான பாபத்தைப் பண்ணின என்னுடைய நெஞ்சை நிச்சேஷமாகப் பறித்துக் கொள்வதுஞ்செய்து, அத்தால் பிறந்த ஹர்ஷப்ரகர்ஷத்தாலே சிவந்த திருக்கண்களையுடையனாய் காளமேகம்போலே ச்ரமஹரமான திருநிறத்தையும் சிவந்த திருப்பவளத்தையும் உடையனாய் அர்த்தித்தது கொடுக்கும் மாத்ரமன்றிக்கே, தாமே அபேக்ஷிதங்கள் அறிந்து கொடுக்கும் விலக்ஷண கல்பகமுமாயிருந்தவனை. என்னை ஸர்வஸ்வஹரணம் பண்ணி, விச்லேஷிக்கிற தசையிலே என்னை அநுபவிக்கைக்காக வடிவழகைக்காட்டிக் கண்ணாலே நோக்கி முறுவல்செய்து தன்னையும் தன்னுடைமையையும் எனக்காகத் தந்தவனுக்கு என்றுமாம்.

இ.—அஞ்சாம்பாட்டில், தன்னுடைய கிளிகளைக்குறித்து, எங்கேனும் போயாகிலும் அவனைக் கண்டு இதுவோ உம்முடைய தக்கோர்மையிருக்கும்படி யென்னுங்கோள் என்கிறாள். [நுங்கட்கு] "ஏகம்துக்கம் ஸுகஞ்சநௌ" என்றிருக்கும் உங்களுக்கு. [யான்] - என் ஸர்வபாரங்களையும் உங்கள் மேலே வைத்திருக்கிறநான், [உரைக்கேன்] - என்காரியம் நீங்களே உணர்ந்து செய்யக்கடவீர்களா யிருக்க, வார்த்தை சொல்லுகிறது என் ஆற்றாமையாலேயிறே. [வம்மின்] - என் காரியத்துக்கு உபாயசிந்தை பண்ணியிருக்கிற உங்களுக்கு ஒருவிரகுசொல்ல வாருங்கோள். [யான்வளர்த்த கிளிகாள்] - அவன்பரிகரம்போலே செருக்கியிருக்கப் பிறந்திகோளோ நீங்கள்? ரக்ஷகர் தேட்டமான தசையிலே ரக்ஷணத்திலே ப்ரவர்த்தியாதே செருக்கடித்திருக்கலாமோ? தன்னைத்தோற்றி ரக்ஷ்யரக்ஷக நியதியற்றதிறே. [வெங்கண்புள்ளூர்ந்து வந்து] - ப்ரதிகூலர்க்கு பயங்கரமான த்ருஷ்டியையுடைய பெரிய திருவடியை நடத்திக்கொண்டுவந்து, வழியில் உண்டான ப்ரதிபந்தகங்களைப் போக்கவல்லனென்னுதல், கண்பாராதே பிரித்துக் கொண்டுபோனவனென்னுதல். "அக்ரூர: க்ரூரஹ்ருதய:". [வினையேனை] - பிரிந்தால் தரிப்பரிதான பாபத்தைப்பண்ணினவென்னை. [நெஞ்சங்கவர்ந்த] - நெஞ்சை நிச்சேஷமாக அபஹரித்த; நாட்டார்க்கு மநோவிகாஸஹேதுவான விஷயம் என்னெஞ்சை யழிக்கும்படியாவதே!

[செங்கண்ருமுகிலே] - கண்ணாலே குளிரநோக்கி, மேருவைக் கினியதொரு காளமேகம் படிந்தாப் போலே தன் வடிவைக்காட்டியாயிற்று நெஞ்சை அபஹரித்தது. [செய்யவாய்ச் செழுங்கற்பகத்தை] - அவ்வளவன்றியே, முறுவல்செய்து தன்னையும் தன்னுடைமையையும் எனக்காக்கியாயிற்று நெஞ்சை அபஹரித்தது. அன்றியே நெஞ்சை அபஹரித்தஹர்ஷத்தாலே திருக்கண்ணும் விகஸிதமாய், காளமேகம்போலே வடிவுங்குளிர்ந்து, அதுக்குப் பரபாகமாய்ச் சிவந்த திருப்பவளத்தையும் உடையனாய், தானே அபேக்ஷித்துத் தன்னைக்கொடுக்கும் விலக்ஷண கல்பகமாயிருந்தவனை. [எங்குச்சென்ருகிலுங் கண்டு] - கீழ், ''வானவர்கோனைக் கண்டு'' என்கையாலே ஓலக்கத்திலன்றிக்கே ஏகாந்தஸ்த்தலத்திலே சென்ருகிலும் வார்த்தை சொல்லுங்கோள். அங்ஙனன்றியிலே, ''அநேகைவஹரிவேகேந கமிஷ்யாமி ஸுராலயம்'' என்கிறபடியே, ''பரமபதத்திலே கண்டிலோம்'' என்று மீளாதே வ்யூஹவிபவாதிகள் எங்குந்தேடியாகிலும் கண்டு சொல்லுங்கோள். [இதுவோ தக்கவாறென்பினே] - ஸ்த்தாநபேதமுண்டாகிலும் பாசுரமிதுவே. நீர்மைகொண்டாடி யிருப்பார்க்கு இதல்லது மர்மமில்லை; இத்தைச் சொல்லுங்கோள்.

௩௫.—அஞ்சாம்பாட்டு. தன்னுடைய கிளிகளைக்குறித்து எங்கேனும் போயாகிலும் அவனைக்கண்டு, இதுவோ உம்முடைய தக்கோர்மையிருக்கும்படி! என்னுங்கோளென்கிருள்.

[நுங்கட்குயானுரைக்கேன்] - தனக்குமுன்னே ஆற்றாமையோடேயிறே அவை யிருக்கிறது; ஆருக்குச் சொல்லும் வார்த்தையை யாருக்குச் சொல்லுகிறது? ஆற்றாமை சொல்லுவியாதது இல்லையிறே. [நுங்கட்குயானுரைக்கேன்] - உங்களுக்குச் சொல்லுமதல்ல; நான் சொல்லுமதல்ல, வ்யஸநத்துக்கு அபிமாநிகளிருக்க, வேறேசிலர்வார்த்தை சொல்லுமா போலே. [வம்மின்] - ''இவளை ஜீவிப்பித்தோமாம் விரகேதோ?'' என்று சிந்திக்கிற உங்களுக்கு ஒருவிரகுசொல்ல வாருங்கோள். [யான்வளர்த்தகிளிகாள்] - என்வயிற்றிலே பிறந்த உங்களுக்கு அவன்பரிகரம்போலே செருக்கடித்திருக்கக் காலமுண்டோ? செருக்கடித்திருக்கப் பிறந்திகோளோ! [நுங்கட்கு] - *ஏகம்து:க்கம் ஸுகஞ்சநௌ* என்றிருக்கிற உங்களுக்கு. [யான்]-உங்கள் மேலே என் ஸர்வபாரங்களையும் வைத்திருக்கிற நான். [உரைக்கேன்] - நீங்களறியாததுண்டாய்ச் சொல்லுகிறேனல்லேன்; ஆற்றாமையாலே சொல்லுகிறேன். [வம்பீன்] - முன்கை முக்காதமாய் இருக்கிறபடி. [யான்வளர்த்த] - கெய்யமரின்னடியில் கிச்சல்பாலொடும் ஊட்டி வளர்த்த. [கிளிகாள்] - ''வளர்த்ததனுல்பயன்பெற்றேன்'' என்கிறபடியே, அவன் திருநாமங்களை நீங்கள் சொல்லக் கேட்டிருக்கவும் அமையுமிறே; அதுதானே ''கண்ணன் நாமமேகுழறிக் கொன்றீர்'' என்கிறபடியே ஆற்றாமைக்கு உடலாகையிறே யுங்களை அவன்பக்கல் போகவிட்டுத் தேடுகிறது. [வெங்கண்புள் இத்யாதி] - வெவ்வியதான கண்ணையுடைத்தான புள்ளை நடத்திக் கொண்டுவந்து, வருகிறபோதே வழியில் ப்ரதிபந்தகங்களைப் போக்குகையிலே சினத்த கண்ணையுடையவன் என்னுதல்; அன்றியே, பிரித்துக்கொண்டு போகிறபோது கண்பாராதே பிரித்துக் கொண்டுபோன கொடுமையைச் சொல்லுதல். *அக்ரூர: க்ரூரஹ்ருதய:* என்னுமாபோலே. [வெங்கண்புள்ளூர்ந்துவந்து] - பட்டங்கட்டின ஆனையிலேயேறி அபிமத விஷயத்தைத் கிட்டும் ராஜபுத்ரனைப்போலே. ''அருளாழிப்புட்கடவீ ரவர்வீதியொருநாள்'' என்றிறே அடியில் தூது விட்டது, அப்படியே வந்தபடி. [வினையேனை] - அவனைப்போலே இரண்டுநெஞ்சு படைக்கப் பெறுதபாபத்தைப்பண்ணினேன்; ஸம்ச்லேஷத்தில் அழிகைக்கும், விச்லேஷத்தில் தரிக்கைக்கும் இரண்டு நெஞ்சுண்டாகப் பெற்றிலேன். [நெஞ்சங்கவர்ந்த]-நாட்டார்க்கு மநோவிகாஸ ஹேதுவான விஷயம் என்நெஞ்சை யழிக்கும்படியாவதே! ஸாரக்ராஹியாய்க் கோதையிட்டு வைத்துப்போனுன்: பூக்கொண்டு புட்டில் பொகடுவாரைப்போலே. அரமணைத்திறே இவர்நெஞ்சிருப்பது: ''பூசும்சாந்தென்னெஞ்சம்'' என்னும்படி. [செங்கட்கருமுகில்] - கண்ணாலே குளிர நோக்கி, வடிவைமுற்றூட்டாக்கி நின்றநிலை. அங்ஙனன்றிக்கே, இத்தலையோடேவந்து கலந்த பின்பு, அத்தலைக்குவந்த பௌஷ்கல்யத்தைச் சொல்லவுமாம். அன்றிக்கே, பிரிவை ப்ரஸங்கித்துக் கண்ணாலே குளிரநோக்கி, அவன் வினைநீரடைத்துக்கொண்டு நின்றபடியாகவுமாம். [செய்யவாய்] - சாடுசதங்கள் சொல்லப்புக்கு ஸ்மிதம்பண்ணுகிற வாய். [செழுங்கற்பகத்தை] - விலக்ஷணமான கல்பகத்தை; வைலக்ஷண்யமாவது தானேயபேக்ஷித்துத் தன்னைக்கொடுக்கை.

கல்பகம் தன்னைக் கொடுக்கமாட்டாதே, அபேக்ஷிக்கவும்மாட்டாதே; இவன் தன்னைக்கொடுக்க வல்லவனிறே. தான் கடக்கவிருந்தாலும் தன் விபூதித்வயத்தையும் நான் நினைத்தார்க்குக் கொடுக்கும்படி எனக்குத் தந்தவனை. [எங்குச்சென்றாகிலுங்கண்டு] - ("வானவர்கோனை" என்றதிறே) "ஆள் வாராநின்றது" என்று கேட்டு ஓலக்கத்தைத் தெளப்பாக் கடக்கப்போய்த் திரைவளைத்துக் கொண்டிருப்பர். அன்றிக்கே, புகைபுக்க விடமெங்கும் புகுங்கோள்; பரவ்யூஹவிபவார்ச்சாவதாரங்கள்; *யமாத்மா நவேத* என்றருளித்திருக்கும் இடமெங்கும்புக்கு, *அநேநைவஹி வேகேந கமிஷ்யாமிஸுராலயம்* என்கிறபடியே. "பரமபதத்தில் கண்டிலோம்" என்று மீளவொண்ணாதே. [இதுவோதக்கவாறென்மினே] - ஸ்த்தானபேதம் உண்டானாலும் பாசுரமிதுவே. பிறர்நெஞ்சையும் அபஹரித்துத் தன்னெஞ்சையுங் கொண்டு கடக்கவிருக்கையோ தக்கோர்மையாவது? அவனுக்கு ஆந்ருசம்ஸ்யமில்லையென்கையாவது-தர்மியையில்லையென்கையிறே. தர்ம்யநுப்ரவிஷ்டையான க்ருபையும் எங்கள்பக்கல் காணாமையாலே தமக்கு அதுவுமில்லையென்று சொல்லுங்கோள். நீர்மை கொண்டாடியிருப்பார்க்கு இதல்லது மர்மமில்லை; இத்தையே சொல்லுங்கோள்.

என்மின்னுநூல்மார்வன் என்கரும்பெருமானென்கண்ணன்*
தன்மன்னுநீள்கழல்மேல்தண்துழாய் நமக்கன்றிநல்கான்*
கன்மின்களென்றும்மையான் கற்பியாவைத்தமாற்றம்சொல்லி*
சென்மின்கள்தீவினையேன் வளர்த்தசிறுபூவைகளே. (6)

ஒ.—ஆறும்பாட்டில், ஆச்ரிதரோடு ஏகரஸனாகையாலே நம் அபேக்ஷிதங்கள் செய்வானொருவன்; அவன்பாடே சென்று, இதுவோ தக்கவாறுஎன்று அவனுக்கு அறிவியுங்கோளென்று சில பூவைகளைக் குறித்துச்சொல்லுகிறாள். [என்மின்னுநூலென்று தொடங்கி] - தன்னுடைய திருமார்வில் விளங்குகிற திருயஜ்ஞோபவிதத்தையும் தன்திருநிறத்தையுங் காட்டி என்னை அடிமைகொண்டு எனக்கு ஸ்நேஹியான க்ருஷ்ணனும் ஆச்ரிதர்இருந்தவிடத்தளவும் செல்லுமதான தன் திருவடிகளில் மன்னின திருத்துழாயில் செவ்வி நமக்கல்லது வேறொருவர்க்கும் கொடான். [கன்மின்களென்று மேலுக்கு] - என்கருமம் நானே தலைக்கட்டவேண்டி, இதுக்கு உங்களைத் தூதாகவிடவேண்டும்படியான பாபத்தைப் பண்ணின நான் வளர்த்த சிறுபூவைகாள்! இதுவோ தக்கவாறென்று உங்களைக் கற்பித்துவைத்த பாசுரங்களைச் சொல்லிச் செல்லுங்கோள்.

இ.—ஆறும்பாட்டில், ஆச்ரிதரோடு ஏகரஸனாகையாலே நமக்கு அபேக்ஷிதங்கள் செய்யுமவன் பாடேசென்று, இதுவோ தக்கவாறு என்னுங்கோளென்று சில பூவைகளைக் குறித்துச் சொல்லுகிறாள்.

[என்மின்னுநூல்மார்வன்] - மேகத்திலே மின்னினாற்போலே சாத்தின திருயஜ்ஞோபவீதத்தைக் காட்டி, என்னை அநந்யார்ஹையாக்கினவன். [என் கரும்பெருமான்] - அதுக்குப் பரபாகமான வடிவை எனக்காக்கி என்னை அடிமைகொண்டவன். [என் கண்ணன்] - இங்ஙன் பிரித்துச்சொல்லவேண்டாதபடி தன்னை எனக்குக் கையாளாக்கினவன். [தன்மன்னுநீள்கழல்மேல் தண்துழாய் நமக்கன்றி நல்கான்] - அவனுடைய ஐகரஸ்யம் சொல்லுகிறாள். ஆச்ரிதர்இருந்த விடத்தளவும் செல்லும் திருவடிகள் என்னுதல்; அளவிறந்த போக்யதையையுடைய திருவடிகளென்னுதல். திருவடிகளிலே பொருந்தி ச்ரமஹரமான திருத்துழாயில் செவ்வி நமக்கல்லதுகொடான். இனியதுகண்டால் "ஸ்வார்த்தம்" என்றிராதே "பக்தாநாம்" என்றிருக்குமவன். அதாகிறது - ஆச்ரிதரோடு ஏகரஸனுமிருக்கை. [கன்மின்களென்று] - நீங்கள் அபேக்ஷியாதிருக்க, நான் சொல்லுங்கோள் என்று. [உம்மை யான்] - ரக்ஷ்யங்களான உங்களை, ரக்ஷகையான நான். [கற்பியாவைத்த மாற்றம்] - கற்பித்துவைத்த மாற்றம். "தண்துழாய் நமக்கன்றி நல்கான்" என்கிற மாற்றத்தை யென்னுதல்; "இதுவோ தக்கவாறு" என்று கற்பித்த மாற்றத்தை என்னுதல். [சொல்லிச்சென்மின்கள்] - அவனுக்கு மறுமாற்றத்துக்கு அவகாசமில்லாதபடி "அட்டினால்" என்றிராதே வழியே பிடித்துச் சொல்லிக்கொண்டு செல்லுங்கோள். [தீவினையேன் வளர்த்த சிறுபூவைகளே] - என்காரியம் நானே தலைக்கட்டவேண்டி, இதுக்கு உங்களைத் தூதாக விட

வேண்டும்படி பாபத்தைப் பண்ணினேன். நானும் அவனுங்கூட உங்களுக்கு அபிமதம் தேடித்தருகை யொழிய, என் அபிமதத்துக்கு உங்களைப் போகவிடும்படியான பாபத்தைப் பண்ணினேன் என்றுமாம்.

௩௫.—ஆறும்பாட்டு. ஆச்ரிதரோடு ஏகரஸனாகையால் நம் அபேக்ஷிதங்கள் செய்யுமவன் பாடேசென்று, இதுவோ தக்கவாறென்னுங்கோளென்று சிலபூவைகளைக் குறித்துச் சொல்லு கிறாள்.

[என்மின்னு நூல்மார்வனித்யாதி] - தன் திருமேனியிலே சாத்தச்செய்தே என்னெஞ்சிலே இட்டாப்போலே ப்ரகாசிக்கிற திருயஜ்ஞோபவீதத்தைக்காட்டி என்னை யநந்யார்ஹையாக்கினவன். என் சரக்கானவன் கடக்கவிருக்குங்காட்டில் என் சரக்கைப் பிறர்க்காக்குமோ? [என்மின்னு நூல்மார்வன்] - திருயஜ்ஞோபவீதத்தினழகை ஸ்மரிப்பித்து என்னெஞ்சில் இருளையறுத்தவன். தன் திருமார்வில் சாத்தின நூலைக்காட்டி என்னை நூலிலே வரப் பண்ணினான். [என் கரும்பெருமான்] - மேகத்திலே மின்னினாப்போலே அந்தத் திருயஜ்ஞோபவீதத்துக்குப் பரபாகமானவடிவை எனக்காக்கி என்னையடிமைகொண்டவன். [என் கண்ணன்] - இப்படிகளாலே என்னைச்சேர்த்துத் தன்னை எனக்காக்கினவன். என், என், என் என்று பதங்கள்தோறும் சொல்லுகையாலே - ஒப்பனையழகிலும், வடிவழகிலும், ஸௌலப்யத்திலும் தனித்தனியே ஈடுபட்டபடி. [தன்மன்னுநீள்கழல்மேல் தண்டுழாய் நமக்கன்றி நல்கான்] - எல்லாஞ் செய்தாலும் *பக்தாநாம்* என்றிருக்கிறதைப் பிறர்க்குஆக்கான். இத்திருவாய்மொழிக்கு நிதாநமான பாட்டிறே இது. ஆச்ரித பரதந்த்ரனாகையாலே "ஆச்ரிதர்க்கு ஸ்வம்மான பின்பு அறிவிக்கவரும்" என்று ஐச்வர்யம்பற்றாசாகத் தூதுவிடுகிறதிறே. [தன் - நீள்கழல்மேல்-மன்னு தண்டுழாய் நமக்கன்றிநல்கான்] போக்யதையளவிறந்த திருவடிகளிலே பொருந்தி சரமஸாரமான திருத்துழாயை ஸர்வதா பிறர்க்கு ஆக்கான். *மயி ஜீவிதமாயத்தம் ராகவஸ்ய மஹாத்மந:* தம்மையும் தம்முடைமையையும் எனக்காக்கினவர். இதுதான் தன் ஸ்வபாவங்கொண்டு சொல்லுகிறாளல்லள்; அவர்ஸ்வபாவாநுஸந்தாநத்தாலே சொல்லுகிறாள்; கிம்புநர் மத்விதோ ஜந.* என்றவிடத்துக்குச் சொல்லுவதொரு வார்த்தையுண்டிறே. அருளாளப் பெருமாளெம்பெருமானாருடைய அந்திமதசையிலே, "திருவுள்ளத்திலோடுகிறதென்?" என்ன, "ஒருபக்ஷி பெருமாளுடைய திருவுள்ளத்தைப் புண்படுத்தினபடியென் என்றிருந்தேன் என்றார்" என்று. இதுக்குக்கருத்தாகப் பிள்ளையருளிச்செய்யும் வார்த்தை - "நாம் பண்ணின சரணாகதியாகையாலே பலத்தோடு அவ்யபிசாரியாகமாட்டாது: இனி சரண்யன்நீர்மையிலேற்றத்தாலே நமக்குஒரு குறையில்லையென்கிறது" என்று. (பெருமாளைப்புண்படுத்துகையாவது) - ஸ்ரீவிபீஷணாழ்வானை சரணாகத்யங்கீகாரத்திலே கைக்கொள்ளாமல், *வத்யதாம்* என்று அஸ்மத் தாமஸம் ரோக்ஷகையாலே, "கபோதத்தோபாதி நாம் ரக்ஷிக்கப்பெற்றிலோம்" என்றிருக்கை. [நமக்கன்றிநல்கான்] - தனித்து, இனியது ஆச்ரிதரையொழிய புஜிக்கமாட்டான். [கன்மின்களென்றும்மை யான் கற்பியாவைத்த] - நெஞ்சொழிந்தபோது, தனக்கு தாரகமானவற்றைக் கற்பித்து வைக்கும். நம்முதலிகள் ஓரோஸந்தாநங்களாக "சிறியார், பெரியார்" என்னுமதே த்வயத்தை யப்யஸிப்பித்துவைக்குமாபோலே. ரக்ஷ்யங்களான வுங்களை, ரக்ஷகையான நான், கற்பியாவைத்த - அப்யஸிப்பித்துவைத்த. [மாற்றம்] - அதாகிறது "நமக்கன்றிநல்கான்" என்று எல்லாவவஸ்தையிலும் உங்களுக்கு நான் சொல்லி வைக்குமதாதல்; "இதுவோதக்கவாறென்று சொல்லுங்கோள்" என்றதாதல். [சொல்லிச் சென்மின்கள்] - வழிக்குப் பாதேயங்காணுமது, அங்கே போனால் சொல்லப்பார்த்திராதே விடிகோள். (அவனுக்கு மறுமாற்றத்துக்கு அவகாசமில்லாதபடி) போகிறபோதே சொல்லிக் கொடுபோங்கோள். [தீவினையேன்] - அவைகிடக்கிடுங்கோள்; என்னுடைய பாபமிருந்தபடி பாருங்கோள், புத்ரவிக்ரயரோபாதியானேன். அவனும் நானும் கூடவிருந்து உங்களைக் கொண்டு கார்யங் கொள்ளும்படியான பாபத்தைப்பண்ணினேன், வயிற்றிற்பிறந்தாரை யிடுவித்து அபிமதனை யழைத்துக்கொள்ளுகையோபாதி புன்மையில்லையே.

பூவைகள்போல்நிறத்தன் புண்டரீகங்கள்போலும்கண்ணன்*
யாவையும்யாவருமாய் நின்றமாயனென்னுழிப்பிரான்*
மாவைவல்வாய்பிளந்த மதுசூதற்கென்மாற்றம்சொல்லி*
பாவைகள் தீர்க்கிற்றிரே வினையாட்டியேன்பாசறவே. (7)

ஒ.—ஏழாம்பாட்டில், “சேதநங்களை தூதப்ரேஷணம் பண்ணினவிடத்தில் கார்யகரமாகாதே, எம்பெருமான் கைவிட்டாப்போலே கைவிடுகைக்கு ஹேது சேதநங்களாகையோ?” என்று பார்த்து, அசேதநமான பாவைகளை, என்துக்கத்தைக் கெடுக்கவல்லிகோளே என்று ப்ரார்த்திக்கிறாள். [பூவைகளென்று தொடங்கி] – நிரதிசயபோக்யனும் ஸர்வாந்தராத்மாவாய் நின்றுவைத்து தத்கததோஷாஸம்ஸ்ப்ருஷ்டனாகையாகிற ஆச்சர்யத்தையுடையனும் கையுந்திருவாழியுமான அழகாலே என்னைத் தோற்பித்து அடிமைகொள்ளுவதுஞ் செய்து, ஆச்ரிதவிரோதிகளைப் போக்கும்ஸ்வபாவனானவனுக்கு. [வினையாட்டியேன்]- உங்களைக்கொண்டு கார்யம் தலைக்கட்டவேண்டும் படியான பாபத்தைப் பண்ணினேன். முதலிலே உங்களைப் பற்றுமைக்கடியான பாபத்தைப்பண்ணினேன் என்றுமாம். பாசறவென்பது-பந்துக்களோடு பற்றுதல் என்றுமாம்.

இ.—ஏழாம்பாட்டில், “பரமசேதநன் பொகட்டுப்போனான். சைதந்யலேசமுடைய பக்ஷிகள் பறந்து போயினவும் அந்யபரமாயினவும் ஆயிற்றின; இதுக்குஹேது சேதநங்களாகையோ?” என்று பார்த்து, அசேதநமானபாவையை யிரக்கிறாள். [பூவைகள் இத்யாதி] - பூவைப்பூப்போலே யிருக்கிற நிறத்தையுடையவன். வடிவில் போக்யதையிருக்கிறபடி. பிரிந்தாருடம்பிலே வைவர்ண்யம் குடிபுகுரும்படியான வடிவு. அகவாயில் தண்ணளியெல்லாம் தோற்றும்படியான கண்ணழகையுடையவன்: பிரிந்தாரைப் பாவைகளின் காலிலே விழவிடுங் கண்ணிறே. [யாவையும் யாவருமாய்நின்ற] - சேதநாசேதநங்களுக்கு ஆத்மாவாய் நின்றவன். “தத நுப்ரவிச்ய ஸச்சத்யச்சாபவத்”. ஸம்ச்லேஷதசையில் ஏகவஸ்து என்னலாம்படி கலக்கவல்லவன். [மாயன்] - ஏகவஸ்துஎன்னலாம்படி கலக்கச்செய்தே தத்கததோஷஸ்பர்சமில்லாத ஆச்சர்ய பூதன்: கலந்து பிரிந்தவநந்தரம் “இத்தலையில் ஸ்பர்சகந்தமுமில்லை” என்று தோற்றும்படியிருக்குமவன். [என்னுழிப்பிரான்] - கையுந்திருவாழியுமான சேர்த்தியைக்காட்டி என்னைத்தோற்பித்த வுபகாரகன். அழுக்குப்பதித்தவுடம்பிற் காட்டில் பரஞ்சுடருடம்புக்குண்டான வாசி சொல்லுகிறது. [மாவை யித்யாதி] - தன்னையநுபவிக்கைக்கு விரோதியைப் போக்குவானும் தானே யென்கிறது; கேசிவாயிலே அகப்பட்டார் தாம்போலே. [மதுசூதற்கு] - விரோதிநிரஸநம் காதாசித்கமன்று, ஸ்வபாவஸித்தமென்கை- விரோதிநிரஸநம் க்ருஷ்ணாவதாரந்தொடங்கியன்று, முதலே தொடங்கி வருகிறதென்கை. [என்மாற்றஞ்சொல்லி] - “தண்டுழாய் நமக்கன்றிநல்கான்” என்று ஆச்ரிதரோடு ஏகரஸனென்கிற பாசுரத்தைச் சொல்லி. பாவைகள்! வினையாட்டியேன்பாசறவு தீர்க்கவல்லிகோளே? நம்தசையைக் கண்டுவைத்து பக்ஷிகள் பறந்துபோயிற்று? நம்தசையைக் கண்டு “என்னாய் விழுகிறதோ?” என்று ஸ்தப்தையாயிருந்தன பாவைகள் என்றிருந்தாள். [வினையாட்டியேன்] - இருவருங்கூடவிருந்து கொண்டாடக்கடவ உங்களைத் தூதுபோகவிடும்படியான பாபத்தைப் பண்ணினேன். [பாசறவு] - பசுமையறுகை, வைவர்ண்யமும் குடிபுகுருகை.- பந்துக்களோட்டைப் பற்றறுதியைச் சொல்லவுமம்.

ஈடு.—ஏழாம்பாட்டு. “பரமசேதநன் பொகட்டுப்போனான்; சைதந்யலேசமுள்ள பக்ஷிகள், பறந்துபோவனவும் அந்யபரமாவனவுமாயிற்று; இதுக்குஹேது - சேதநங்களாகையோ?” என்று பார்த்து, அசேதநமான பாவையையிரக்கிறாள். அசேதநமுங்கூட எழுந்திருந்து கார்யஞ் செய்யவேண்டும்படி காணும் இவள்அவஸ்தை.

[பூவைகள்போல்நிறத்தன்] - ஆண்பெண்ணாம்படியான நிறம் படைத்தவன். *பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்* என்னும்படியே. பேற்றுக்குப் பாவைகள்காலிலே விழும்படியான வடிவுபடைத்தவன். பூவைப்பூப்போன்றவடிவை யுடையவன். [புண்டரீகங்கள்போலுங்கண்ணன்] - ஒருபூ ஒருபூப்பூத்தாற்போலேகாணும் வடிவும்கண்ணுமிருக்கிறபடி: காயாம்பூ தாமரை

பூத்தாற்போலே பிரானின்றது சேதநாசேதநவிபாகமறக் காற்கீழே விழும்படியான கண்படைத்தவன். [யாவையும்யாவருமாய்நின்றமாயன்] - சிலரோடு கலக்கும்போது அவர்கள் தாங்களாய்க் கலக்குமவன். சேதநாசேதநங்களுக்கு ஆத்மாவாய்நின்றவன். *தத்நுப்ரவிச்ய ஸச்சத்யச்சாபவத்*. ஸம்ச்லேஷதசையில் "ஏகவஸ்து" என்னலாம்படி கலக்கவல்லவன். [மாயன்] - அவர்களாய்க் கலவாநிற்கச்செய்தே, தனக்கு அங்கொரு தொற்றற்றுப்போருமவன்; ஸர்வாந்தர்யாமியாயிருக்கச்செய்தே, *அநச்நந்நந்யோ அபிசாகசீதி* என்று, இவற்றின் தோஷம் தன் பக்கல் தட்டாதபடியிருக்கை. ஜகதாகாரனாய்க்கொண்டு இவர்களோடு பிரித்து ப்ரதிபத்திபண்ணவொண்ணாதபடி நிற்கச்செய்தே அசித்தினுடைய பரிணாமமாதல், சித்தினுடைய ஸௌகித்வ து:கித்வங்களாதல் தட்டாதபடி நிற்கை. என்னோடே பரிமாறுமாபோலே கிடீர் எல்லாரோடும் கலந்து நின்றே ஒட்டற்று இருக்கும்படி என்கைக்காக 'யாவையும்யாவருமாய் நின்றமாயன்' என்கிறாள்; இல்லையாகில் இப்போது இது தேட்டமன்றே இப்ப்ரகரணத்துக்கு. அழுக்குப்பதித்தவுடம்பிற்காட்டில் பரஞ்சுடருடம்புக்கு உண்டான வாசிசொல்லுகிறது. [என்னுடைப்பிரான்] - தன்னுடைய அஸாதாரணமான விக்ரஹத்தை எனக்காக்கினவன். யாவையும் யாவருமாய் நின்ற மாயனென்று - ஜகதாகாரதையைச்சொல்லிவைத்து "என்னுடைப்பிரான்" என்கிறாரிறே: அஸாதாரணமான வடிவுக்குத் தாம் ஈடுபட்டபடி. "நீராய் நிலனாய்" என்று வைத்து, "கூராராழிவெண்சங்கேந்திக்கொடியேன்பால் வாராய்" என்றாரிறே: "அவனுக்குப்புறம்பாயிருப்பதொன்றில்லை" என்றநுஸந்திக்கைக்காக - ஜகச்சரீரன் என்னுங்காட்டில், அத்தோபாதி யிது உத்தேச்யமாமோ? "பரஞ்சுடருடம்பாய்" என்றும், "அழுக்குப்பதித்தவுடம்பாய்" என்றும் ஒன்றை ஹேயப்ரத்யநீகமாகவும், ஒன்றை ஹேயமிச்ரமாகவும் சொல்லிற்றிறே. [பாவையித்யாதி] - இவ்வடிவழகை புஜிப்பிக்கைக்கு விரோதிநிரஸநம் பண்ணுகை இவனுக்குக் காதாசித்கமன்றுகிடீர். [மதுசூதற்கு] - புழுக்குறித்தது எழுத்தாமாபோலன்றிக்கே விரோதிநிரஸநம் நித்யமாயிருக்கை. [என்மாற்றஞ்சொல்லி] - கன்மின்களென்று உங்களுக்குச் சொன்னத்தைச்சொல்லி. [பாவைகள் தீர்க்கிற்றிரே] - பரமசேதநன் போகட்டுப்போனான், சைதந்யலவமுடைய இவை போகிறனவில்லை; இனி, நீங்கள் என் து:க்கத்தைப்போக்கவல்லிகோளோ? அப்ரதிஷேதமாத்ரத்தைக்கொண்டு இவற்றைக்காரியங்கொள்ளப் பார்க்கிறாள். [வினையாட்டியேன்] - உங்களைக் கொண்டாடுகை தவிர்ந்து, கார்யங்கொள்ளும்படியான து:க்கத்தை ப்ராப்தையானேன்; *மாசுச:* என்று சொன்னவன் விளைத்த சோகத்தை, அசேதநங்களைக்கொண்டு தீர்க்க விருக்கிற மஹாபாபியானேன். பாசறவு - து:க்கம்

பாசறவெய்தியின்னே வினையேனெனையூழிநைவேன்*
ஆசறுதூவிவெள்ளைக்குருகே அருள்செய்தொருநாள்*
மாசறுநீலச்சுடர்முடி வானவர்கோனைக்கண்டு*
ஏசறும்நும்மையல்லால் மறுநோக்கிலள் பேர்த்துமற்றே. (8)

ஒ.—எட்டாம்பாட்டில், முன்னேநின்ற குருகைக் குறித்து, அயர்வறுமமரர்களைப்போலே உம்மாலல்லது செல்லாதாளொருத்தி உம்மைப்பெறாதே நோவுபடா நின்றாள் என்று சொல்லென்று அருளிச்செய்கிறாள். [பாசறவென்றுதொடங்கி] - பயலைமையைப்ராபித்து இப்படியே முடியாத பாபத்தைப்பண்ணின நான் எத்தனைகாலம் து:க்கப்படக்கடவேன்? பழிப்பற்ற சிறகையுடையையாய் என்னைப்போலே பயலைமையோடிராதே, அழகியவெளுத்த நிறத்தையுடையகுருகே! வெள்ளைக்குருகாவது ஹ்ருதயநைர்மல்யத்தையுடையகுருகென்றுமாம். [அருள்செய்தொருநாள்] - என்பக்கலிலே ஒருநாள் க்ருபைபண்ணி, [மாசறுநீலமென்றுதொடங்கி] - பழிப்பற்ற நீலச்சுடரையுடைய மயிர்முடியையுடையனாயிருந்துள்ள அயர்வறுமமரர்களதிபதியைக்கண்டு பிறர்ஏசும் தசைகடந்து தம்மாலல்லது வேறொருவரால் செல்லாத ப்ரக்ருதியானாள் என்றுசொல்லு.

இ.—எட்டாம்பாட்டில், முன்னேநின்றகுருகைக்குறித்து, நித்யஸூரிகளைப் போலே உம்மாலல்லது செல்லாத இவள் உம்மைப்பிரிந்து நோவுபடாநின்றாள் என்று சொல்லென்கிறாள். [பாசறவெய்தி] - வைவர்ண்யத்தை ப்ராபித்தென்னுதல், பந்துக்கள்பக்கல் பற்றற்று என்னுதல். பாசறவு - பாசமறுகை. [இன்னே] - தன்தசைக்குப்பாசுரமில்லாமையாலே தன்வடிவைக் காட்டுகிறாள். [வினையேன் [இத்யாதி] - பிரிவுக்கு முடிவு காணவொண்ணாத பாபத்தைப்பண்ணின நான். [எனையூழிநைவேன்] - எத்தனைகாலம் து:க்கப்படக்கடவேன்? முன்புபிரிந்தார், பத்துமாஸமாதல் பதினாலாண்டாதலிறே பிரிந்தது. ஸம்ச்லேஷம் விச்லேஷத்தோடே வ்யாப்தமானவோபாதி, விச்லேஷமும் ஸம்ச்லேஷாந்தமாகாதபடியான பாபத்தைப் பண்ணினேன். [ஆசறுதூவி] - பழிப்பற்ற சிறகு. [வெள்ளைக்குருகே] - வடிவும்மநஸ்ஸும் நிர்மலமாகை. பராநர்த்தம் பொறுக்கமாட்டாதொழிகை மநஸ்ஸுக்கு நைர்மல்யம்; ''புறம்போலுள்ளுங்கரியான்'' என்கிறவனுக்கு எதிர்த்தட்டாயிருக்கை. [ஒருநாள் அருள்செய்து] - ஒருநாள்க்ருபைபண்ணி. இவ்விஷயத்தில் கடகர்க்கு எல்லாம் செய்தாலும் ப்ரத்யுபகாரமாகாமையாலே, ''க்ருபையாலேசெய்தார்கள்'' என்றிருக்கவேணுமென்கை. [மாசறு இத்யாதி] - பழிப்பற்ற நீலச்சுடரையுடைய மயிர்முடியையுடையனாய், அத்தை நித்யஸூரிகளை யநுபவிப்பித்துக்கொண்டிருக்கிறவனைக் கண்டு. ஒருநீர்ச்சாவி கிடக்கக் கடலிலே வர்ஷிக்குமாபோலே. [ஏசறும்] - க்லேசப்படாநின்றாள் என்னுதல்; பிறர்ஏசும்எல்லை கடந்தாள் என்னுதல். ''நும்மையல்லால் மறுநோக்கிலள்பேர்த்து மற்று'' என்று கீழ்ப்பாட்டோடே சேரக்கடவது. [நும்மையல்லால் - பேர்த்துமற்று - மறுநோக்கிலள்] - உம்மையொழியவேறு குளிரப்பார்ப்பாரில்லை; ''ஸகீபிஸ் ஸுகமாஸ்வ'' என்று குணகீர்த்தநம்பண்ணி ஜீவிக்கு மெல்லையுங் கழிந்தது.

ஈடு.—எட்டாம்பாட்டு. முன்பே நின்ற குருகைக்குறித்து, நித்யஸூரிகளைப்போலே உம்மாலல்லது செல்லாதே, உம்மைப்பிரிந்து நோவுபடாநின்றாளென்று சொல் என்கிறாள்.

[பாசறவித்யாதி] - ''இன்னம் சிலகாலங்கழித்தால் அறிவிக்கிறோம்'' என்னுமளவாயிருந்ததோ என்தசை? [பாசறவெய்தி]-பாசென்று பசுமையாய், அத்தால் நினைக்கிறது நீர்மையாய், அது அறுகையாவது - வைவர்ண்யத்தோடே வ்யாப்தமாகை. [இன்னே] - 'எப்படி வைவர்ண்யத்தை யடைந்தது?' என்னில்—என்னைக்கண்ட உங்களுக்குச் சொல்லவேண்டாவிறே. விஷயம் ஸாவதியாகிலிறே இது அளவுபட்டிருப்பது? இதுக்கு ஒருபாசுரமிட்டுச் சொல்லப் போகாது; உடம்பைக்காட்டுமத்தனை. பாசுரமிட்டுச் சொல்லப் போகாமை, படியெடுத்துக் காட்டுகிறாள். [வினையேன்] - விச்லேஷமும் ஸம்ச்லேஷத்தோபாதியாகப் பெற்றிலேன்; அதுகாதாசித்கமாய், இதுநித்யமாயிருக்கிறபடி. [வினையேன்] - கலக்கப் பெறுவிட்டால் மீண்டு கைவாங்க வொண்ணாதபடியான பாபத்தைப் பண்ணினேன். [எனையூழிநைவேன்] - சைதில்யத்தோடே யெத்தனை கல்பம் சென்றது? முன்புபிரிந்தார் பதினாலாண்டாதல் பத்து மாஸமாதல். [ஆசறுதூவி வெள்ளைக்குருகே] - பழிப்பற்ற சிறகை யுடைத்தாய், பரது:க்காஸஹிஷ்ணுதைக்குஉறுப்பான மநோநைர்மல்யத்தை யுடைத்தாயிருக்கிறபடி. [வெள்ளைக்குருகே] - அவன் பிரிகைக்குப் புறம்போலுள்ளும் கரியானுனைப்போலேயிறே நீங்களும் கூட்டுகைக்கு உள்ளும்புறம்பும் நிர்மலமாயிருக்கிறபடி. [அருள்செய்தொருநாள்] - ஒருபோது க்ருபை பண்ணி. இவ்வளவில் முகங்காட்டுகையாகிறஇதுக்குமேற்பட அருளில்லையிறே; வெறும் உங்கள் க்ருபையாலே செய்திகோளத்தனையிறே. [மாசறுவித்யாதி] - பழிப்பற்று நெய்த்திருந்துள்ள மயிர்முடியை யுடையனாய், அம்மயிர்முடியை நித்யஸூரிகள்பேண இருக்கிறவனைக் கண்டு. ஒருநீர்ச்சாவி கிடக்கக் கடலிலே வர்ஷிக்கிறவனைக்கண்டு, [ஏசறும்] - க்லேசப்படாநின்றாளென்னுதல், காட்டார் ஏசும்நிலை கடந்தாளென்னுதல். ஏசறுங்கோள் - வடிவைக் காட்டுங்கோளென்றுமாம். அதாகிறது-என்னுடைய வைவர்ண்யத்தை நீங்கள் உங்களுடம்பிலேயணிந்து காட்டுங்கோ ளென்றபடி. [நும்மையல்லால் மறுநோக்கிலள்] - உம்மையொழிய வேறு குளிர்ந்த விழியில்லை. வ்ருத்தகீர்த்தநத்துக்கும் உம்மையொழிய வேறொருவரை யுடையளல்லள்; *ஸகீபிஸ்ஸுகமாஸ்வ* என்னும் நிலையுங் குலைந்தது. [நும்மையல்லால்] - ''வாராநின்றோம்'' என்று ஸ்ரீபரதாழ்வானைப்போலே ஆள்வரவிடத் தரியாது. [நும்மையல்லால்] ஸ்வரூபகுணங்களை யநுஸந்தித்து தரிக்குமளவல்லள். [மறுநோக்கிலள்] - உம்மையொழிய பந்துக்கள் நோக்கும் நிலை கழிந்தது. இப்பாட்டுக்கு க்ரியை - கீழ்ப்பாட்டிலேயாதல், மேலிற்

பாட்டிலேயாதல். தமிழர் "வினையெச்சமாய்க் கிடக்கிறது" என்று சொல்லுவர்கள். அதாவது 'மறுநோக்கிலன்பேர்த்துமற்று' என்று சொல்லுங்கோள் என்கிற இத்தனையுமிட்டுச் சொல்ல வேண்டுகை.

பேர்த்துமற்றோர்களைகண் வினையாட்டியேன்நானொன்றிலேன்*
நீர்த்திரைமேலுலவி இரைதேரும்புதாவினங்காள்*
கார்த்திரள்மாமுகில்போல் கண்ணன்விண்ணவர்கோனைக்கண்டு*
வார்த்தைகள்கொண்டருளியுரையீர் வைகல்வந்திருந்தே. (9)

ஒ.—ஒன்பதாம்பாட்டில், நீங்கள்சென்றால் அவன் வந்திலனேயாகிலும் அங்குத்தை வார்த்தையைக் கொண்டு வந்து நாள்தோறும் அத்தையே யிருந்து சொல்லி உஜ்ஜீவிப்பிக்கவேணு மென்று சில புதாவினங்களை இரக்கிறாள். [பேர்த்தென்று தொடங்கி] - அத்யந்தம் குணவானான எம்பெருமானாலே இகழப்பட்ட மஹா பாபியான நான் உங்களையொழிய வேறு சிலநிர்வாஹகரை உடையேனல்லேன். தரையிலே ஸஞ்சரிக்குமாபோலே நீர்த்திரைமேலே ஸஞ்சரித்து இரைதேட வல்லிகோளான புதா வினங்காள்! புதா - பெருநாரை. [கார்த்திரளென்று தொடங்கி] - கறுப்பெல்லாம் திரண்டாற்போலே யிருப்பதொரு மஹாமேகம்போலேயிருக்கிற நிறத்தையுடையனும் அத்யந்த சீலவானும் அழகும் குணங்களும் அயர்வறுமமரர்களே புஜிக்கக்கொடுத்து அவர்களைப் பிரியமாட்டாமையாலே எனக் கெட்டாதிருக்கிறவனைக்கண்டு. [அருளி] - என்பக்கலிலே அநுக்ரஹத்தைப்பண்ணி.

இ.—ஒன்பதாம் பாட்டில், சில புதாவினங்களைக்குறித்து, நீங்கள் சென்றால் அவன் வந்திலனாகிலும் அங்குத்தை வார்த்தையைக் கொண்டுவந்து நித்யமாக உஜ்ஜீவிப்பிக்கவேணுமென்கிறாள். [பேர்த்து இத்யாதி] - உங்களையொழிய வேறொரு நிர்வாஹகரை உடையேனல்லேன். கடகர்பக்கலிலும் அநந்ய கதித்வமே ஆவிஷ்கரிக்கக்கடவது. [வினையாட்டியேன்நான்] - ரக்ஷகனும் குணதிகனானவன் உபேக்ஷிக்கும் படி பாபத்தைப்பண்ணின நான், ஸாக்ஷாத் ரக்ஷகன் பொகட்டுப்போக, உங்கள்காலிலே விழும்படி பாபத்தைப் பண்ணினேன். [நீர்த்திரைமேலுலவி] - தரையிலே ஸஞ்சரிக்குமாபோலே நீர்த்திரைமேலே ஸஞ்சரிக்கவற்றாயிருக்கை. "நடுவே கடலுண்டு" என்று இரங்கவேண்டாவிறே உங்களுக்கு; ஆவரணஜலம், விரஜை, இவை கண்டு இரங்கக வேண்டாவிறே. [இரைதேரும்] - உபவாஸக்ருசரை ஜீவிப்பித்தன்றோ நீங்கள் ஜீவிப்பது? [புதா] - பெருநாரை. [கார்த்திரள் மாமுகில்போல் கண்ணன்] - கறுப்பெல்லாந் திரண்டாற் போலேயிருக்கிற மஹாமேகம்போன்ற வடிவை யுடையவன். கார்காலத்தில் திரண்ட மஹாமேக மென்றுமாம். [மாமுகில்] - மாறாதே கொடுக்கவல்ல முகில், [கண்ணன்] - தன்னைப் பிறர்க்காக் கிவைக்குமவன். மத்ஸ்யத்துக்குத் தண்ணீர் வார்ப்பாரைப்போலே இவ்வழகையும் குணத்தையும் நித்யஸூரிகளை யநுபவிப்பித்திருக்கிறவனை. [கண்டு வார்த்தைகள்கொண்டு] - காணப்பெற்று, சொல்லும் வார்த்தைகள் கேட்கக்கடவி கோளிறே. "மாசுச:" என்று பலத்தோடே வ்யாப்தமான வார்த்தைகளைக் கொண்டு. [அருளி] - என்பக்கலிலே க்ருபைபண்ணி. [வந்திருந்து - வைகல் உரையீர்] - அங்குத்தை வார்த்தைகளைக்கேட்டு வந்திருந்து, நாள்தோறும் எனக்குச்சொல்லி உஜ்ஜீவிப்பிக்கவேணும்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. சில புதாவினங்களைக் குறித்து, நீங்கள் சென்றால் அவன் வந்திலனாகிலும் அங்குத்தைவார்த்தையைக் கொண்டுவந்து என்னை நித்யமாக உஜ்ஜீவிப்பிக்க வேணுமென்கிறாள்.

[பேர்த்து மற்றோர்களைகண் வினையாட்டியேன் நானொன்றிலேன்] - தன்பரிகரங்களிலே யொன்றைக்கொண்டு போதுபோக்குகிறாள் என்னுமளவுங் குலைந்தது. வெறுமையை முன்னிடுமத்தனையிறே ததீயர்பக்கலிலும். உங்களையொழிய வேறொரு ரக்ஷகரை யுடையேனல்லேன். [மற்றோர்களைகண்] - பிராட்டிக்கு லங்கைக்குள்ளே ஒரு த்ரிஜடையாகிலும் உண்டாயிற்று; காட்டிலே விட்டுப்போந்த தனிமையிலே ஒருவால்மீகிபகவானாகிலு முண்டாயிற்று;

பர்த்தா போகட்டால் ஒருபிதாவாகிலுமுண்டாகவேணுமிறே. [வினையாட்டியேன்] - நாயகன் தானே ரக்ஷகனுமாயிருக்குமிறே; அப்படிப்பட்டவன் கைவிட்டுப்போம்படியான பாபத்தைப் பண்ணினேன். [நீர்த்திரைமேலுலவி] - ஆவரணஜலம், விரஜை இவையெல்லாம் கடந்தேற வற்று யிருக்கை. [உலவி] - நிலத்திலே ஸஞ்சரிக்கிறாப்போலே நீரிலே ஸஞ்சரிக்கிறபடி. [இரைதேரும்] - இவற்றின் நடையோடொக்க இதுவுமொரு பௌஷ்கல்யமிறே இவளுக்கு. நான் உபவாஸக்ருசையா யிருக்க, உங்களுக்கு மிடற்றுக்கிழி முழியா நிறே; என்னையும் உங்களைப்போலே யாக்கினாலன்றோ ஜீவித்ததாவது? [புதா] - பெருநாரை. [கார்த்திரள்மாமுகில்போல்கண்ணன்] - எல்லாவிடாயும் ஆறுங்கிடீர் அவ்வடிவைக்காணப் பெறில்! இவன்கண்ணுக்குக் 'கறுப்பாயிருக்கிறதிறே. கறுப்பெல்லாம் திரண்டாற்போலே யிருக்கிற மஹாமேகம்போன்ற வடிவையுடையவன்; கார்காலத்தில் திரண்ட மஹாமேக மென்றுமாம். [மாமுகில்] - மாறாதே கொடுக்கவல்ல முகில். [கண்ணன்] - அவ்வடிவுபோலும் அல்லகிடீர் அகவாயில் தண்ணளியிருக்கும்படி. [விண்ணவர்கோனைக்கண்டு]-விடாய்த்தாரிருக்க, மீனுக்குத் தண்ணீர் வார்த்திருக்கிறவனை. பிரிகைக்கு ஸம்பாவனையில்லாதார்க்குத் தன்னைக் கொடுத்துக்கொடு நிற்கிறவனைக் கண்டு. [வார்த்தைகள் கொண்டு] - வந்திலனாகிலும், சில வார்த்தைகள் சொல்லக்கடவனிறே. காட்சிக்குமேலே வார்த்தையுங்கேட்க இதே நீங்கள் புகு கிறது. "பாவியேனென்றொன்று சொல்லாய்" என்றுமவரிறே. இப்போது இவர்க்கு "மாட்டேன்" என்னும் வார்த்தையும் அமையும். வார்த்தைகேட்கைக்கும் மூடியப்போய்த் திரியவோ? என்னில்; [வார்த்தைகள் கொண்டருளி - வந்திருந்து - வைகலும் உரையீர்] - ஒருகால்போய் அவன்வார்த்தையைக் கேட்டு என்பக்கலிலே க்ருபையைப்பண்ணிவந்திருந்து, அத்தை எனக்கு எப்போதுஞ் சொல்லி என்னை உஜ்ஜீவிப்பியுங்கோள்! அன்றிக்கே, விண்ணவர் கோனை கண்ணனைக்கண்டு. வார்த்தைகள்கொண்டு - *மாசுச:* என்று பலத்தோடே வ்யாப்த மான வார்த்தைகளைக் கொண்டு, என்பக்கலிலே க்ருபையைப்பண்ணிவந்திருந்து வைகலு முரையீர் என்றுமாம்.

வந்திருந்தும்முடைய மணிச்சேவலும்நீருமெல்லாம்*
அந்தரமொன்றுமின்றி அலர்மேலசையுமன்னங்காள்*
என்திருமார்வற்கென்னை இன்னவாறிவள்காண்மினென்று*
மந்திரந்தோன்றுணர்த்தியுரையீர் மறுமாற்றங்களே. (10)

ஒ.—பத்தாம்பாட்டில், தன்பாடேவந்து ஸுகிதமாய்க்கொண்டு ஸஞ்சரிக்கிற ஹம்ஸமிதுநங் களைக்குறித்து, பிராட்டியும் தானுங்கூட ரஹஸ்யமாக அநந்யபரனாய் எழுந்தருளியிருந்தவிடத்திலே என் தசையை விண்ணப்பஞ்செய்து மறுமாற்றம் எனக்கு வந்து சொல்லவேணுமென்று அருளிச் செய்கிறாள். [வந்திருந்தென்று தொடங்கி] - உம்முடைய ச்லாக்யமான சேவலும் நீரும் ஸபரிகரமாக வந்து ஓர் இடர்இன்றிக்கே அலர்மேலே ஸம்போகங்களாலே அசைந்து வருகிற அன்னங்காள்! [என் திருவென்று தொடங்கி] - என் ஸ்வாமிநியான பெரிய பிராட்டியாரைத் திருமார்விலே உடையவனான வனுக்கு இப்படி இவள் துர்க்கதையானாள் என்று.

இ.—பத்தாம்பாட்டில், சில ஹம்ஸமிதுநங்களைக்குறித்து, பிராட்டியும் தானுமான ஏகாந்தத்திலே என்தசையை விண்ணப்பஞ்செய்து மறுமாற்றம் வந்துசொல்லவேணு மென்கிறாள். [வந்து] - அழையா திருக்க நீங்களேவந்து, மஹாராஜரிருந்தவிடத்தே வந்து உபகரித்தவரைப்போலே யிருந்ததீ உங்கள் நீர்மை. [இருந்து] - என் ஆர்த்திக்கெல்லாம் உடன்கேடராயிருந்து. [உம்முடைய மணிச்சேவலும் நீரும்] - [illegible] பவ்யமான சேவலும், அப்படி இருக்கிற நீரும். பிரிந்து, தானும் உடம்பு வெளுத்துப் [illegible] உடம்புவெளுக்கப்பண்ணும் சேவலைப்போலன்றிக்கே இருக்கை. [எல்லாம்] - "ஸபுத்ர பௌத்ரஸ் ஸகண:" என்கிறபடியே ஸபரிகரமாக. [அந்தரமொன்றுமின்றி]-ஸம்போகத்துக்கு வர்த்தகமான [illegible]யின்றிக்கே, பூவின்மேல், கலவியால்வந்த ப்ரீதியோடே ஸஞ்சரிக்கிற அன்னங்காள்! மிதுநமானால்

பூவிலும் ஸஞ்சரிக்கலா மாகாதே. [என் திருமார்வற்கு] - என் ஸ்வாமிநியான பெரிய பிராட்டியாரைத் திருமார்விலே உடையவற்கு: அவளருகேயிருக்க, அடியில்லாதாரைப்போலே நோவுபடுகிறபடி கண்டீகோளே. [என்னை] - அச்சேர்த்தியிலே அடிமைசெய்ய ஆசைப்பட்டு இழந்திருக்கிறவென்னை. [இன்னவாறிவள் காண்மினென்று] - இப்படி துர்க்கதையானாள் இவளென்று. ''இவளுடைய வைவர்ண்யத்தைத் தங்களுடம்பிலே ஆவிஷ்கரித்துக் காட்டவல்லபோலேகாணு மிவை'' என்று சீயர் அருளிச்செய்வர். [மந்திரத்து] - உங்கள் வார்த்தை விலைசெல்லும்படி அவளும் அவனுமான ரஹஸ்யத்திலே: ப்ரேமாந்தராய் ''வத்யதாம்'' என்கிறவர்கள் ஸந்நிதியொழியச் சொல்லுங்கோள்; பராக்குக்கு ஸம்பாவனையுள்ள ஓலக்கத்திலே சொல்லாதே கொள்ளுங்கோள். [ஒன்றுணர்த்தி] - மத்யமபதத்திற் சொன்னபடியே அநந்யார்ஹதையை விண்ணப்பஞ்செய்து. [உரையீர் மறுமாற்றங்களே] - பூர்வாபராதத்தைப்பார்த்து அவன் சொன்னவார்த்தைகளையும், நம் தசையையும் ஸம்பந்தத்தையும் பற்ற அவன் சொல்லும் வார்த்தைகளையும் வந்து சொல்லுங்கோள்.

௬௫.—பத்தாம்பாட்டு. சில ஹம்ஸமிதுநங்களைக்குறித்து, பிராட்டியுந்தானுமான ஏகாந்தத்திலே என் தசையைவிண்ணப்பஞ்செய்து மறுமாற்றம் வந்துசொல்லவேணுமென்கிறாள்.

[வந்திருந்து] - இதென்ன ஆபத்ஸகத்வந்தான்! உங்களுடைய ஸௌஹார்த்தம் இருந்தபடியென்தான்! இனைய பெருமானை இடுவித்து வெறுப்பியழைப்பிக்கவேண்டாதிருக்கை. [வந்திருந்து] - மஹாராஜருடைய இடரைப் பெருமான் விளவிக்கொண்டுசென்று தீர்த்தாப்போலே என்னார்த்திக்கெல்லாம் உடன்கேடராயிருந்து. [உம்முடைய மணிச்சேவலும் நீருமெல்லாம்] - பரமபதத்தில் ஸ்த்ரீபுமான்களாயிருந்தாலும் அடிமைக்கு உறுப்பாயிருக்குமாபோலே, இவற்றினுடைய இந்தபேதமும் தனக்குக் கார்யத்துக்கு உடல் என்றிருக்கிறாள். [மணிச்சேவல்] - இதுவும் ஒரு சேவலேதான்! தன்னுடைய மணிச்சேவல், கடக்கவிருந்து இவளை உடம்புவெளுப்பித்துத் தான் குறியழியாதேயிறே இருக்கிறது. [எல்லாம்] *ஸபுத்ர பௌத்ரஸ் ஸகண:* என்னுமாபோலே; பார்யாபுத்ராதிகளோடேகூடப் பிறர்காரியஞ்செய்ய ஒருப்பட்டிருப்பாரைப்போலே. [அந்தரமொன்றுமின்றி] - என்னைப்போலே பிரிவோடே வ்யாப்தமான கலவியன்றிக்கே யிருக்கப் பெறுவதே. ஸம்ச்லேஷவர்த்தகமான விச்லேஷமுமின்றிக்கே மிதுநமாயிருப்பார்க்குப் பூவிலும் கால் வைக்கலாமாகாதே. மன்னங்காள் [அலர்மேலசையு பூவிலே கால்பொருந்தும்படியான செருக்கன்றோ உங்களது? குறைவற்றிருக்கும்படி மிதுனாகாதே. [என்திருமார்வற்கு] - எனக்கு அங்கு ஓரடியில்லாமை நான் மிறுக்குப்படுகிறேனே? *ஸீதாஸமக்ஷம் காகுத்ஸ்த்தம்* என்று, சொன்னவார்த்தை விலைபோமவன் ஸந்நிதியிலே சொல்லுங்கோள்; நான் பற்றின வடைவே பற்றுங்கோளென்கிறாள். [என்னையின்னவாறிவள் காண்மினென்று] பேச்சுக்குநிலமன்றுபோலே. [என்னை] - சேர்த்தியிலே யடிமைசெய்ய ஆசைப்பட்ட என்னை. இப்படி துர்க்கதையானாள் இவளென்று. ''இவள்வைவர்ண்யத்தைத் தம்முடம்பிலே காட்டவும் வற்றாகாதே இவை'' என்று சீயர் அருளிச்செய்வர். அன்றிக்கே: உம்முடையதேவாரமோ! இவள் அந்த:புரபரிகரமன்றோ வென்னுங்கோள். அர்ச்சை - அர்ச்சகபராதீனையிறே. [மந்திரத் தொன்றுணர்த்தி] - ஓலக்கத்திற் சொல்லாதே கொள்ளுங்கோள். *வத்யதாம்* என்பார் இருக்கவுங்கூடும். அவன்சொல்லே ஜீவிக்குமிடத்தே சொல்லுங்கோள். [உரையீர்மறுமாற்றங்களே] - அவன் க்ரமப்ராப்திதோற்ற வார்த்தை சொல்லவும், அதுதானொண்ணாதென்று *நகச்சிந்நாபராத்யதி* என்று த்வரிப்பித்துக்கொண்டுவருவார்முன்னே சொல்லுங்கோள். [மந்திரம்] - ப்ரணவம்; [ஒன்று] - அதில் மத்யமபதம்; அதிற்சொல்லுகிறபடியே அநந்யார்ஹதையை விண்ணப்பஞ்செய்து. [உரையீர்மறுமாற்றங்களே] - பூர்வாபராதத்தைப்பார்த்து அவன்சொல்லும் வார்த்தைகளையும், ஸம்பந்தத்தையும் நம்தசையையும் பற்ற அவன் சொல்லும் வார்த்தைகளையும் கேட்டுவந்து சொல்லுங்கோளென்கிறாள்.

மாற்றங்களாய்ந்துகொண்டு மதுசூதபிரானடிமேல்*
நாற்றங்கொள்பூம்பொழில்சூழ் குருகூர்ச்சடகோபன்சொன்ன*
தோற்றங்களாயிரத்துள் இவையுமொருபத்தும்வல்லார்*
ஊற்றின்கண் நுண்மணல்போல் உருகாநிற்பர்நீராயே. (11)

ஒ.—நிகமத்தில், இப்பத்தில் ஆழ்வாருடைய ஆர்த்தியை அநுஸந்தித்தார் ஊற்றின்கண் நுண்மணல்போ லுருகாநிற்பர்நீராய் என்கிறார். [மாற்றமென்றுதொடங்கி] - ''தூதப்ரேஷணம் பண்ணுகையாலே எம்பெருமான்வரவு நிச்சிதம்'' என்று தளிர்த்த திருநகரியையுடைய ஆழ்வார் ப்ரதிகூலநிரஸநஸ்வபாவனான எம்பெருமானுடைய திருவடிகளிலே நல்லசொற்களைத் தெரிந்து கொண்டு அருளிச்செய்த. [தோற்றங்களாயிரத்தென்று மேலுக்கு] - நிதியினுடைய 'தோற்றம் போலேயிருக்கிற தோற்றத்தையுடைய ஆயிரந்திருவாய்மொழியிலும் இத்திருவாய்மொழி.

இ.—நிகமத்தில், இப்பத்தில் ஆழ்வாருடைய ஆர்த்தியை அநுஸந்தித்தார் சிதிலராவரென்கிறார். [மாற்றங்களாய்ந்துகொண்டு] - நல்லசொற்களைத் தெரிந்துகொண்டு. இத்தசையிலும் வாசகசப்தங்கள் விலக்ஷணமாயிருக்கிறபடி; ''சோக:ச்லோகத்வமாகத:'' என்கிறபடியே. விரோதிகளைப் போக்கித் தன்னையுபகரிக்குமவனையாயிற்றுக் கவி பாடிற்று. [நாற்றங்கொள் இத்யாதி] - தூதப்ரேஷணத்தாலே ''வரவு தப்பாது'' என்று ஊர் ஸஞ்ஜாதபரிமளமானபடி. [தோற்றங்களாயிரம்] - நிதியினுடைய தோற்றம்போலேயிருக்கை. [தோற்றங்களாயிரம்] - ஆவிர்ப்பவித்தவாயிரம். [ஊற்றின்கண் இத்யாதி]-ஊற்றுவாயில் சிறு மணல் போலே நீராய் சிதிலராவர். நம் தசையை வாய்விட்டு நாட்டையழித்தோமாகாதேயென்கிறார். இத்தை ப்பலமாகச் சொல்லிற்று, பகவத்ப்ரவணரைக் கண்டு ஈடுபடுகை நாட்டார்க்கு ப்ராப்யமென்கைக்காக.

ஈடு—நிகமத்தில், இத்திருவாய்மொழியில் ஆழ்வாருடைய ஆர்த்தியை அநுஸந்தித்தார் சிதிலராவரென்கிறார்.

[மாற்றங்களாய்ந்துகொண்டு] - சுரமேறுவாரைப்போலே, பக்திபரவசராயிருப்பார்க்கு அடைவுபடப் பாசுரமிட்டுச் சொல்லப்போகாதிறே; இவ்வளவிலும் சொற்கள் நேர்பட்டபடி; நல்ல சொற்களைத் தெரிந்துகொண்டு. [மதுசூதபிரானடிமேல்] - விரோதிநிரஸநமே ஸ்வபாவமாகவுடையவன் திருவடிகளிலே. [நாற்றங்கொளித்யாதி] - ''ரஹஸ்யஸ்தலத்திலே ஆள்விடுகையிலேயே வரவுதப்பாது'' என்று இவர் தரித்தவாறே, சோலைகளும் நித்யவஸந்தமானபடி. பரிமளோத்தரமான பூவையுடைத்தான பொழில்கள் சூழ்ந்த திருநகரி. [தோற்றங்களாயிரம்] - *மன:பூர்வோ வாகுத்தர:* என்கிற அடைவால் சொன்னவையல்ல. இவர் கலங்கிச்சொல்லச்செய்தேயும், பகவதவதாரம்போலே ஆவிர்ப்பவித்தன. தோற்றம்-ஆவிர்ப்பாவம். மந்த்ரங்களை ருஷிகள்காணுமாபோலே. ''சொற்பணிசெய்ஆயிரம்'' என்று, ''ஆழ்வாருடையவாக்கிலேபுக்கு அங்கிட்டுப் பிறந்து நாம்சுத்தராய டிமைசெய்யவேணும்'' என்று அச்சொற்கள்தாம் ''என்னைக்கொள் என்னைக்கொள்'' என்றுவந்துஅடிமைசெய்கிறபடி. அவைதிகர் வாக்கில்புக்க தோஷம் தீர்ந்தது இப்போதிறே சொற்களுக்கு. ''போயபிழையும் புகுதருவானின்றனவும் தீயினில்தூசாகும்'' என்கிறபடியே, ஆழ்வார்வாக்கிலே பிறக்கையாலே முன்புள்ள தோஷமும் பின்புள்ள தோஷமும் தீர்ந்ததுகாணும் சப்தத்துக்கு. [ஊற்றின்கணித்யாதி]-இவை அப்யஸிக்கப் படாதன என்கிறார். அதாவது - என் ஆர்த்தத்வனியைக் காட்டி நாட்டையடைய அழித்தேனென்கிறார். இவர் க்லேசம் அவன் முகங்காட்டத்தீரும்; இப்பாசுரம் நித்யமாகையாலே, கேட்டார் தரிக்கமாட்டார்; ஊற்றிடத்திலுண்டான நுண்ணிய மணல்போலே சிதிலாந்த:கரணராய் நீராயுருகாநிற்பர். இதுக்கு ப்பலமாய்ச் சொல்லிற்றாயிற்றென்? என்னில்; பகவத்குணவித்தர்பாசுரங்கேட்டழிகையும் ப்ராப்யாந்தர்க்கதமாகையாலே இதுதானே பலமென்கிறது.

ஒன்பதாந் திருவாய்மொழி—நீராய்: ப்ரவேசம்

ஒ.—ஒன்பதாந் திருவாய்மொழியில், இப்படி தூதப்ரேஷணம் பண்ணினவிடத்திலும் வாராதே, "ஊற்றின்கணுண்மணல்போ லுருகாநிற்பர்" என்னும்படியாலே ஸ்த்தாவரஜங்கமாத்மகமான ஜகத்தெல்லாம் தம்முடைய ஆர்த்தசப்தத்தாலே உருகாநிற்கையாலே, தம்முடைய தசையை அறிவிக்க வல்லாரில்லை யென்று கோலி இவர் பெருங்கூப்பீடாகக் கூப்பிடப்புக, தன்னுடைய ஜகதாகாரதையைக் காட்டியருளி "இனி என்செய்யக் கூப்பிடுகிறீர்?" என்று எம்பெருமான் அருளியச்செய்ய, வைச்வரூப்யங்கண்ட அர்ஜுநன் "சதுர்ப்புஜமாய் ப்ரஸந்நமான வடிவைக்காணவேணும்" என்று அர்த்திதாப்போலே, "ஜகதாகாரதையைக் காட்டினவற்றால் போராது, என்னுடைய விடாய்க்கிடாக சங்கசக்ராதி பூஷிதமான உன்னுடைய அப்ராக்ருதமான திருவுடம்போடே தோற்றியருளவேணும் என்று பெரிய வார்த்தியோடே ஸ்ரீவைகுண்ட்ட நாதனுக்குக் கேட்கும்படி கூப்பிடுகிறார், என்னுடைய ஆர்த்தத்வநியாலே உன்னுடைய உபயவிபூதியும் விசீர்ணமாகப் புகாநின்றது; எனக்காக வந்திலையேயாகிலும், உன்னுடைய விபூதி நிலைநிற்கும்படி வந்து தோற்றியருளவேணுமென்று மிகவும் ஆர்த்தமான மஹாத்வநியோடே கூப்பிடுகிறார் என்றுமாம்.

இ.—ஒன்பதாம் திருவாய்மொழியில், கீழ் தூதுவிடுகிறவற்றுக்கு அங்குப் போனால் சொல்லும் வார்த்தையாக இவள் சொன்ன பாசுரத்தால்வந்த ஆர்த்தநாதத்தாலே ஸ்த்தாவரஜங்கமாத்மகமான ஜகத்தெல்லாம் உருகாநிற்கையாலே தம்முடைய தசையை அறிவிக்கைக்கு க்ஷமரில்லை யென்றுபார்த்துத் தம்முடைய ஆர்த்தத்வநியாலே அழைத்துக்கொள்வாராக நினைக்க, தன்னுடைய ஜகதாகாரதையைக் காட்டியருளி "நீர் என்செய்யக் கூப்பிடுகிறீர்?" என்று அருளிச்செய்ய, ஜகச்சரீரியாயிருக்கிற இந்த ஞானலாபத்தால் போராது; உன்னுடைய அஸாதாரண விக்ரஹத்தை எனக்குக் காட்டியருள வேணும் என்று வைச்வரூப்யத்தைக்கண்ட அர்ஜுநன் "சதுர்ப்புஜமாய் ப்ரஸந்நமான வடிவைக் காணவேணும்" என்று அர்த்தித்தாப்போலே, விடாயெல்லாங்கெட, சங்கசக்ராதி பூஷிதமான அப்ராக்ருதமான வடிவோடே தோற்றியருளவேணுமென்று பெரிய ஆர்த்தியோடே பரமபதத்திலிருப்பும் நிலைகுலைந்து வந்து முகங்காட்ட வேண்டும்படி கூப்பிடுகிறார். என்னுடைய ஆர்த்தத்வநியாலே உன்னுடைய உபயவிபூதியும் அழியப்புகாநின்றது; என்னுடைய ரக்ஷணத்துக்காக வந்திலையாகிலும் உன்னுடைய விபூதிரக்ஷணத்துக்காகவாகிலும் வரவேணுமென்று கூப்பிடுகிறார் என்றுமாம்.

ஈடு.—"என்குச்சென்றாகிலுங்கண்டு" என்றும், "வானவர்கோனைக்கண்டு" என்றும் தூது போகச்சொன்னார்; அவைபோகமாட்டாதபடி தம்முடைய ஆர்த்தத்வநியாலே யழித்தார்; "மரங்களுமிரங்கும்" என்று அசேதநங்களிரங்காநின்றால், சிறிது சைதந்யமுடைய பக்ஷிகள் அழியக்கேட்கவேண்டாவிறே; "ஊற்றின்கண் நுண்மணல்போ லுருகா நிற்பர் நீராய்" என்றது தூதரையொழியவன்றிறே. தம் பரிஸரத்தில் கால்நடைதந்து போவாரில்லையே. "அசேதநங்களுங்கூட அழிகிறவிடத்தில், பரமசேதநனானவனுக்குச் சொல்லவேணுமோ?" என்றுபார்த்து தம்மிடற்றோசையையிட்டு அழைத்துக்கொள்ளப் பார்க்கிறார். தமக்கு ஆர்த்தத்வநி கிடக்க, வேறொருவர்போகவேண்டும்படியாயிருந்ததோ? கலங்காப்பெருநகரமான ஸ்ரீவைகுண்ட்டத்திலும் தரிக்கவொண்ணாதபடி, கால்குலைந்து வரும்படி பெருமிடறுசெய்து கூப்பிடுகிறார். இனித்தான் தூதுபோவார்க்கு, காலாலேயாதல் சிறகாலேயாதல்போகவேண்டுகையாலே தடையுண்டு; இவர்மிடற்றோசைக்குத் தடையில்லையிறே! இவர்படுகிற வ்யஸநத்துக்கு ஹேது சொல்லப் போகாது, பிராட்டி சிறையிருந்ததுக்கு ஹேதுசொல்லப்போகாதாப்போலே. அவளிருப்பு பராநுக்ரஹத்தாலே யானாப்போலே இவருடைய வ்யஸநமும் பராநுக்ரஹத்துக்கு உடலாயிருக்கிறபடி. அவள்சிறையிருந்தபடியை ஸ்ரீவால்மீகி பகவானெழுதிவைத்து இன்று நாடெல்லாம் வாழ்கிறாப்போலே, அன்று இவர்தான் வ்யஸநப்பட்டாரேயாகிலும் இவர் அருளிச்செய்த ப்ரபந்தங்கள் லோகத்துக்குத் தண்ணீர்ப்பந்தலாயிற்றது. திருக்குழலோசையாலே திருவாய்ப்பாடியிற்பெண்களெல்லாம் பட்டத்தைத் தம்மிடற்றோசையாலே அவன்படும்படி பண்ணுகிறார்.

"வாரீர்! நீர் நம்மை யிருந்தவிடத்தில் இருக்கவொட்டாதே இங்ஙன் படுத்துகிறதென்?
நாம் உம்மைவிட்டுத் தூரப்போனேமோ? ஏதேனுமொன்றைப்பற்றினாலும் அது நம்மைப்
பற்றிற்றென்று சொல்லலாம்படியிருக்கிற ஜகதாகாரதையைக்காட்டினேமே" என்று அவன்
திருவுள்ளமாக; அதில் குறையென்? நீ ஜகச்சரீரனாய் நிற்கிற இந்த ஜ்ஞாநமெனக்கில்லையோ?
இந்தஜ்ஞாநந்தானேயிறே "அஸாதாரணாகாரத்தையுங்காணவேணும்" என்னப்பண்ணுகிறது:
எனக்கு ப்ராப்யமானது கிடக்க, அல்லாதவற்றைக் காட்டினால் அப்ரயோஜகமென்கிறார். அத்
தையும் உன் ஐச்வர்யத்துக்குப்புறம்பல்லாமையாலே வேணுமாகில் ப்ரதிபத்திபண்ணுகிறேன்.
அத்தால் வந்தது, உன்னதானவற்றை "என்னது" என்றிருக்கிற ப்ரமம் நிவ்ருத்தமாகிறது.
அர்ஜ்ஜுநனும் ஸ்ரீவிச்வரூபங் கண்டவநந்தரத்திலே *தேநைவரூபேண சதுர்ப்புஜேந* என்று
அஸாதாரணமான வடிவை யெனக்குக் காட்டவேணும் என்றானிறே. என் ஆர்த்தத்வநி
கேட்டிரங்கி வந்திலையாகிலும், உன்னுடைய விபூதியழியாமல் நோக்கவேணுமாகில், வாவென்
கிறார் என்றுமாம். இவருடைய ஆர்த்தநாதந்தான் அவனுக்கு உபயவிபூதியிலும் குடியிருப்பரி
தாய்க்காணும் இருக்கிறது.

நீராய்நிலனாய்த் தீயாய்க்காலாய்நெடுவானாய்*
சீரார்சுடர்களிரண்டாய்ச் சிவனாயயனானாய்*
கூராராழிவெண்சங்கேந்திக் கொடியேன்பால்
வாராய்* ஒருநாள்மண்ணும்விண்ணும்மகிழவே. (1)

ஒ.—முதற்பாட்டில், "ஜகதாகாரனாயிருக்கிறபடியைக் காட்டித் தந்தோமிறே" என்ன, அது
போராது; அஸாதாரணமாயிருக்கிற வடிவைக் காணவேணுமென்கிறார். [நீராய் என்று தொடங்கி] -
காரணமான பூதபஞ்சகங்களுக்கும் கார்யமான சந்த்ரஸூர்யாதிகளுக்கும் ஆத்மாவாய்க்கொண்டு
அவற்றைசரீரமாகக்கொண்டு நின்றருளினாய். [கூராராழி] - கூர்மை மிக்கிருந்துள்ள திருவாழி.
[கொடியேனென்று தொடங்கி] - ஜகதாகாரதா ப்ரதர்சநத்தால் த்ருப்தனாகாதே, "அஸாதாரணா
காரத்தைக் காணவேணும்" என்று அபிநிவேசிக்கிற என்பக்கலிலே என்ஆர்த்தி தீர்த்தருள நினைத்த
தில்லையேயாகிலும் உன்னுடைய உபயவிபூதியும் அழிந்துபோகாமே நிலைநிற்கைக்காக வரவேணும்.

இ.—முதற்பாட்டில், "ஜகதாகாரனாயிருக்கிறபடியைக் காட்டித் தந்தோமிறே" என்ன; "அது
போராது, அஸாதாரணமான வடிவைக் காட்டவேணும்" என்கிறார். [நீராய் இத்யாதி] - அண்டகாரண
மான பூதபஞ்சகங்களையும் ஸ்ருஷ்டித்து, "ஸமேத்யாந்யோந்யஸம்யோகம்" என்கிறபடியே ஒன்றாகச்
சேர்த்து, "பூதேப்யோZண்டம்" என்கிறபடியே அண்டத்தை ஸ்ருஷ்டித்து, ஸ்ருஷ்டமான அண்டத்துக்கு
ப்ரகாசகரான சந்த்ரஸூர்யர்களை ஸ்ருஷ்டித்து. [சீரார்சுடர்கள்] - ப்ரகாசகராயும் போஷகராயுமிருக்கை.
அண்டஸ்ருஷ்டாவாக ப்ரஹ்மாவையும் இவை அதிப்ரவ்ருத்தமானபோது அழிக்கைக்கு ருத்ரனையும்
ஸ்ருஷ்டித்தான். 'தத்ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிசத், தத நுப்ரவிச்ய, ஸச்சத்யச்சாபவத்' என்கிறபடியே,
ஸாமாநாதிகரண்யம் அநுப்ரவேசக்ருதம்; "நீராய் நிலனாய்" என்கிற அசித்பதார்த்தத்தோடு, "சிவனாய்
அயனானாய்" என்கிற ஈச்வராபிமாநிகளோடு வாசியற்றிருக்கிறதாயிற்று ஈச்வரபாரதந்த்ர்யம்; இப்படி
ஜகதாகாரதையைக் காட்டித் தந்தோமே யென்ன, அதுபோராது; அஸாதாரண விக்ரஹத்தைக் காட்ட
வேணுமென்கிறார்.[கூரார் இத்யாதி] - காட்டுமிடத்திலும் ஒப்பனையோடே காட்டவேணும். ப்ரதிபக்ஷத்தின்
மேலே யேவச் சாணையிலிட்டாப்போலே கூர்மையிக்கிருக்கிற திருவாழி. ஸ்ரீபாஞ்சஜந்யத்தில் வெளுப்
போடு திருவாழியில் கூர்மையோடு வாசியற இவர்க்கு அழகுக்குஉறுப்பாயிருக்கிறதிறே. [கொடியேன்
பால்] - ஜகதாகாரதையைக்காட்டின இத்தால் அத்ருப்தனாய் நிர்ப்பந்திக்கும்படி பாபத்தைப்பண்ணின
என்பக்கலிலே. செய்தபடி கண்டிருக்கக்கடவதாயிருக்க அத்யபிநிவேசத்தைப் பண்ணுகையிறே பாபம்.
[வாராய்] - அஸாதாரணவிக்ரஹத்தைக் காட்டவேணும்; திவ்யாயுதங்களோடே காட்டவேணும்; நீயே
வந்து காட்டவேணுமென்கிறார். [ஒருநாள்] - நாலுளோனாகைக்காக. [மண்ணும் விண்ணும் மகிழவே]-

என் ஸத்தையை நோக்குகைக்காக வந்திலையேயாகிலும், உன் விபூதியை நோக்குகைக்காக வரவேணும். மண் - லீலாவிபூதி, விண் - நித்யவிபூதி. ''லீலாவிபூதியாவது அழிவதாமன்றோ?'' என்னில்,— ஏகரூபமான நித்யவிபூதியும் ஆர்த்தத்வநியாலே அழியக் கிடாய்ப்புகுகிறது. மரங்களுமிரங்கா நிற்க, பரமசேதநர் என்படார்? [மகிழவே] - அழிகை தவிர்ந்து தரிக்கைக்காக.

ஈடு.—முதற்பாட்டு. ''ஜகதாகாரனாயிருக்கிறபடியைக் காட்டித்தந்தோமிறே'' என்ன அது போராது; அஸாதாரணமான வடிவைக் காணவேணுமென்கிறார்.

[நீராய்நிலனாய் இத்யாதி] - ''இதறியாமல் அவ்வருகே யாசைப்படுகிறார்'' என்று கொள்ள வொண்ணாதபடி, தாம் அறிந்தமைதோற்ற விண்ணப்பஞ்செய்கிறார்''. [நீராய்] - நாராயண னுவது பண்டேயறிவனென்கிறார். ''நீர்தோறும் பரந்துளன்'' என்றாரிறே கீழ். [நீராய்] - *அபஏவ ஸஸர்ஜ்ஜாதௌ* என்கிறபடியேஅற்கவே ஜலஸ்ருஷ்டியைப்பண்ணி அநந்தரம் ப்ருதிவ்யாதிகளையுண்டாக்கி, இவற்றைக்கொண்டு கார்யங்கொள்ளுமிடத்தில் ஒன்றிலொன்று அதிகமாக வேண்டியிருக்குமிறே; *ஸமேத்யாந்யோந்யஸம்யோகம் பரஸ்பரஸமாச்ரயா:* என்றிறே ஸ்ருஷ்டிக்ரமந்தான்; இவைதான் ஏகத்ரவ்யமுமன்றே; அநேகத்ரவ்யமாயிருக்கச்செய்தே ஏகத்ரவ்யமாக்கி ஏககார்யங்கொள்ளவேணுமிறே; அதுசெய்யும்போது, குலாலனானவன் மண்ணும்நீரும் செறுநுங்கூட்டிச் சேரத்துகைத்து கடாதிகளாய்க்கொண்டு பரிணமிப்பிக்கு மாபோலே, ஜலத்தையுண்டாக்கி, அது த்ரவீபூதமாயிருக்கையாலே அத்தோடு கடினமான பதார்த்தத்தைக்கூட்டி, பின்னையும் நெகிழ்ந்திருக்கையாலே அத்தைச் சிறிது வலிக்கைக்காக தேஜ:பதார்த்தத்தையுண்டாக்கி, அதுதான்மிகைத்துத் தீயுமளவானவாறே அத்தையாற்றுகைக்குக் காற்றையுண்டாக்கி, அதுதனக்கு ஸஞ்சரிக்கைக்காக அவகாசப்ரதாநம்பண்ணும் ஆகாசத்தையுண்டாக்கி. இவ்வளவும் ப்ரதமஸங்கல்பந்தன்னையே கொண்டு அண்டஸ்ருஷ்டியைப்பண்ணினின்றது; இனி, பெரியதொருமாளிகையைச் சமைத்து இருள்கூறைய விட்டு வைக்க வொண்ணாதிறே; அதுக்கு இரண்டுவிளக்கிட்டாப்போலே சந்த்ரஸூர்யர்களையுண்டாக்கி. நீர்க்களிப்பு அறுகைக்கும் ஆப்யாயநத்துக்குமாக இருவரையுமுண்டாக்கினபடி. [சிவனாய்அயனாய்]-அண்டாந்தர்வர்த்திகளாய்க்கொண்டுநின்று, ஒருவன் மனைந்துகொண்டுவர ஒருவன் அழித்துக்கொடுவரும்படி ப்ரஹ்மருத்ரர்களையுண்டாக்கி. ருத்ரனைமுற்படச் சொல்லுவானென்? என்னில், அப்ரயபூர்விகையாயிறே ஸ்ருஷ்டியிருப்பது. ''நீராய்நிலனாய்'' என்றத் தொடோக்க, ''சீரார் சுடர்களிரண்டாய்'' - என்கையினாலே - *யஸ்யாத்மா சரீரம்-யஸ்யப்ருதிவீ சரீரம்* என்கிறபடியே, சேதநாசேதநங்களிரண்டும் அவனுக்கு சரீரவத் பரதந்த்ரமென்னுமிடஞ்சொல்லுகிறது. 'சீரார்சுடர்களிரண்டாய்' என்றும், 'சிவனாயயனாய் என்றும்' ஸமநாதிகரிக்கையாலே ஈசிதவ்யங்களோடு ஈச்வராபிமாநிகளோடுவாசியற தத்பரதந்த்ரமென்னுமிடஞ் சொல்லிற்று; ஜகத்ஸ்ருஷ்டிபண்ணிற்று ஸ்வப்ராப்திக்காகவன்றோ? ஸ்வப்ராப்தியைப் பண்ணித்தந்தாலன்றோ நீ ஒருகாரியம் செய்தாயாவது! ஸ்ருஷ்டிக்குப்ரயோஜநமாவது-நித்ய து:க்கியானவனை அந்தமில்பேரின்பத்தே கொடுபோய் வைக்கையன்றோ. அதுகிடக்க, இத்தையுண்டாக்கினதுக்கு ப்ரயோஜநம் நீ பெறவேண்டாவோ? ''நீராய்நிலனாய்த்தீயாய்க்காலாய் நெடுவானாய்ச் சீரார்சுடர்களிரண்டாய்ச் சிவனாயயனாய்'' என்று - இவர்தமக்கு ஈச்வரவ்யாபாரம் அடங்கலும் மனையடைவே எண்ணுவாரைப்போலே அதிப்ரகாசமாயிருக்கிறபடி. [கூராராழிவெண்சங்கேந்தி]-ஸ்ரீபாஞ்சஜந்யத்தில் வெண்மையோபாதி திருவாழியில் கூர்மையும் இவர்க்கு ஆகர்ஷகமாயிருக்கிறபடி. [கூராராழி] -ப்ரதிபக்ஷத்தைத் துணிக்கத்துணிக்கச் சாணையிலேயிட்டாப்போலே கூர்மைமிக்கிருக்கிறபடி. அஸாதாரணவிக்ரஹத்துக்கு லக்ஷணமோதான் கையும் திருவாழியுமாயிருக்கை! [கொடியேன்] - எனக்கு இங்ஙனே ஒரு நிர்ப்பந்தமுண்டாவதே! என் ஸ்வரூபத்துக்கு விருத்தங்கிடீர் நான் பண்ணுகிறது! ஸ்ரீபரதாழ்வானைப்போலே பொகட்டவிடத்தே கிடக்கவல்ல ப்ரக்ருதியாகப்பெற்றிலேன்; இளைய பெருமாளைப்போலே, ''நில்'' என்ன, *குருஷ்வ* என்று நிர்ப்பந்திக்கும் ப்ரக்ருதியாவதே! [வாராய்] - ஆசைப்பட்டாலும் நடக்கவல்லார் வருமித்தனையிறே; ''வாராய்'' என்னுங்காட்டில் வந்துகொடுதிரியப்போமோ? என்னில்: [ஒருநாள்[- (காணுனைகைக்காக.) விடாயர் ''ஒரு

கால் நாக்குநனைக்கத் துளிதண்ணீர்'' என்னுமாபோலே. [மண்ணும் விண்ணும்மகிழவே] - எனக்காக வந்திலையாகிலும் உன்விபூதியழியாமைக்கு வா என்கிறார். ''மாறுவிச்சோலைபோலே ஆவதழிவதான இதுபோனால் என்செய்யவேணும்?'' என்றிருக்கிறபாகில், அவ்விபூதியும் அழியுங்கிடாய்: இது அழியவே அதுவும் அழிந்ததாமிறே; அதுவும் இருக்கச்செய்தேயன்றோ, இது அழிய *ஸ ஏகாகீ ந ரமேத* என்றது. இனித்தான் ப்ரளயத்துக்கழியாதென்னுங்காட்டில் ஆர்த்திக்கும் அழியாதென்றதாகாதே! [மகிழவே] - அழிகைதவிர்ந்து தரிக்கைக்காக.

மண்ணும்விண்ணும்மகிழக் குறளாய்வலங்காட்டி*
மண்ணும்விண்ணுங்கொண்ட மாயவம்மானே*
நண்ணியுனைநான் கண்டுகந்துகூத்தாட*
நண்ணியொருநாள் ஞாலத்தூடேநடவாயே. (2)

ஒ.—இரண்டாம்பாட்டில், ''நீர் சொன்னபடியே செய்யலாவது திருநாட்டிலேபோனால் காணும்'' என்னில், ஸம்ஸாரத்திலே ஸ்ரீவாமநனாய் வந்துபிறந்தருளி உன்னுடைய அழகை எல்லார்க்கும் புஜிக்கக்கொடுத்தருளினாய் ஒருவனல்லையோ? ஆனபின்பு, அடியேனுடைய அபேக்ஷிதம் இங்கே செய்தருளவேணுமென்கிறார். [மண்ணுமென்று தொடங்கி] - அழகைக்கண்டு லோகங்களெல்லாம் உஜ்ஜீவிக்கும்படி வாமநனாய் அழகாகிற பலத்தைக்காட்டி ப்ருதிவ்யாதி ஸகல லோகங்களையும் அளந்துகொண்ட அத்யாச்சர்யபூதனே! [நண்ணியுனையென்று மேலுக்கு] - மாநஸாநுஸந்தாநமாத்ரமன்றிக்கே நான் உன்னைக் கிட்டிக் கண்டு அத்தாலே உகந்து கூத்தாடும்படி ஸம்ஸாரத்துள்ளே எனக்கு ப்ரத்யக்ஷந்நமாக ஒருநாள் வந்து உலாவியருளவேணும்.

இ.—இரண்டாம்பாட்டில், ''நீர் சொல்லுகிறது ஒரு தேசவிஷேசத்திலே கொடுபோய்க் காட்டுமது காணும்'' என்ன, ''நீ இங்கே கொடுவந்து காட்டிற்றிலையோ?'' என்கிறார். [மண்ணும் இத்யாதி] - பூம்யந்தரிக்ஷாதி ஸகல லோகங்களிலும், விசேஷஜ்ஞர் உகக்கவும், அவிசேஷஜ்ஞர் ''வர்ஷேண பீஜம் ப்ரதிஸஞ்ஜஹர்ஷ'' என்கிறபடியே செவ்விபெறவும். [குறளாய்] - நித்யஸூரிகள் அநுபவிக்கும் வடிவை ஸம்ஸாரிகள் கண்ணாலே அநுபவிக்கலாம்படி கோடியைக்காணியாக்கினபடி. பால் சென்றதனையும் ரஸிக்குமாபோலே போக்யதை மிக்கிருக்கிறபடி. ''கூராராழி வெண்சங்கேந்தி'' என்கிற வடிவிற்காட்டில் ஆகர்ஷகமாயிருக்கிறபடி. [வலங்காட்டி] - அம்புக்குச் செல்லாதவிடமாகையாலே அழகாகிற பலத்தைக் காட்டி அழித்து. [மண்ணும் விண்ணுங் கொண்ட] - மஹாபலியாலே அபஹ்ருதமான த்ரைலோக்யத்தையும் இந்த்ரனுக்கு வாங்கிக்கொடுத்த. கொண்டவென்றது - இந்த்ரன்பேறு தன்பேறாய்இருக்கிறபடி. பிறந்தவன்றே ப்ரஹ்மசாரியாய், கொடுத்து வளர்ந்த கையைக்கொண்டு இரந்து, சிறுகாலைக் காட்டி அபஹரித்துப் பெரிய காலாலே அளந்துகொண்ட ஆச்சர்யங்கள். [அம்மானே] - இதெல்லாம் வேண்டிற்று உடையவனாகையிறே. [நண்ணி] - மாநஸாநுபவமாத்ரமன்றிக்கே கிட்டி. [உனை நான்] - கண்டல்லது நிற்கவொண்ணாத உன்னைக் காண்கையிலே சபலனான நான். ப்ரதிகூலனுக்குக் காட்டின வடிவு அநந்யப்ரயோஜநனுக்கு அரிதாவதே. [கண்டுகந்து கூத்தாட] - மஹாபலியைப்போலே கொடுக்கலாவதில்லை, இந்த்ரனைப் போலே கொள்ளவேண்டுவதில்லை; கண்ணாலே கண்டு ஹ்ருஷ்டனாய், ஹர்ஷத்துக்குப் போக்குவிட்டு ஆடும்படியாக. கொள்வதும் அழகே, அவன் கொடுப்பதும்அழகே. [நண்ணி] - நான் இருந்தவிடத்தே வந்துகிட்டி, மஹாபலிக்குக்காட்டினவோபாதிஒருநாளளவையும்; நானிருந்த ஸம்ஸாரத்திலே மஹாபலி யஜ்ஞவாடத்திலே உலாவினாப்போலே உலாவவேணும்.

ஈடு.—இரண்டாம் பாட்டு. ''வாராய் என்று நிர்ப்பந்தித்தல்ல காணும், நம்மைக் காண்பது! உம்மை ஒருதேசவிசேஷத்திலே யழைத்துக்காணும் காட்டுவது'' என்ன, அவ்வடிவுதன்னையே இங்கே கொடுவந்து இதரஸஜாதீயமாக்கிக் காட்டிற்றிலையோவென்கிறார்.

[மண்ணும் விண்ணும் மகிழக்குறளாய்] - இவ்வளவில் ஸ்ரீவாமநனாய் வந்து தோற்றிற்றிலையாகில், உபயவிபூதியும் அழியுமாகாதே. ஒருபாட்டம் மழைவிழுந்தால் பதார்த்தங்களடையச் செவ்விபெறுமாபோலே உகவாதாரும் மகிழும்படியன்றோ வந்துதோற்றிற்று. [வலங்காட்டி] - ஔதார்யமென்றொரு குணலேசங் கிடக்கையாலே ராவணாதிகளைப்போலே அம்பாலே யழிக்கப்போகாதே; அழகாகிற பலத்தைக் காட்டி வாய்மாளப் பண்ணினபடி. சுக்ராதிகளுடைய நிரோதமுண்டாயிருக்கச் செய்தேயிறே யழகுக்குத் தோற்றுக் கொடுத்துக்கொண்டு நின்றபடி. [குறளாய்] - கோடியைக் காணியாக்கினாப்போலே முகந்துகொள்ளலாயிருக்கை. [மண்ணும் விண்ணுங்கொண்ட] - பூம்யந்தரிக்ஷாதிகளைக்காற்கீழே யிட்டுக்கொண்ட. இந்த்ரனுக்குக் கொடுத்தவென்னாதே, கொண்ட என்கிறது அவன் ஆஸுரப்ரக்ருதியாகையாலே அவன் பக்கல் தானேகொண்டானாகக்கொண்டபடியும், ஆச்ரிதனை இந்த்ரனுடைய அவிபாகரஸத்தாலும். [மாயவம்மானே] - ச்ரிய:பதியானவன் அர்த்தியானபடியும், வடிவழகைக் காட்டி வாய்மாளப் பண்ணினபடியும், ''கொள்வனுன்மாவலி''* என்றாப்போலே சில முக்தஜல்பிதங்களைப் பண்ணினபடியும், சிறுகாலைக்காட்டிப் பெரியகாலாலே யளந்தபடியுந் தொடக்கமான ஆச்சர்யங்களைச் சொல்லுகிறது. [அம்மானே] - *தேவாநாம் தாநவாநாஞ்ச ஸாமாந்யமதிதைவதம்* என்கிற பொதுவான ஸ்வாமித்வமிறே அங்ஙன் செய்யவேண்டிற்று. [நண்ணியுனை நான் கண்டுகந்து கூத்தாட] - இந்த்ராதிகளைப்போலே யெனக்கு ராஜ்யாபேக்ஷையில்லைகாண்! நீ பண்ணித்தந்த வெளிச்சிறப்பாலே த்ருப்தனாகிறிலேன். நானுன்னைக் கிட்டிக் கண்டு உகந்து கூத்தாடும்படி வரவேணும். வருகைக்குண்டான வ்யாபாரம் அவன்தலையது; வந்தால் உகக்கையிலே இவர்க்கந்வயம். [நான் கண்டுகந்து கூத்தாட] - மஹாபலியைப்போலே ஒன்று கொடுக்க இருக்கிறேனல்லேன்; இந்த்ரனைப்போலே ஒன்று கொள்ள இருக்கிறேனல்லேன்: 'எனக்கு'என்றுஇருப்பாரோடு, 'என்னது' என்றிருப்பாரோடுமோ நீ கொடுத்துக்கொண்டு பரிமாறுவது? உன்னையே கண்டுகப்பார்க்கு உன்னைக் காட்டலாகாதோ? *ஸம்ப்ரமமஸ்துஷ்ய கோவிந்த ஏதந்ந: பரமம்தநம்* என்கிற இதிலேயிறே இவர்க்கு அந்வயம். [நண்ணி]- நானிருந்தவிடத்தே நீ வந்துகிட்டி. [ஒருநாள்] - பின்பொருநாள் அச்செயல் செய்யலாகாதோ? மண்ணும்விண்ணும் மகிழ நடக்கலாவது அசுரன்முன்பேயோ? அநந்யப்ரயோஜநர்முன்பு நடக்கலாகாதோ? [ஞாலத்தூடே நடவாயே] - கடையழகில் வாசிகண்டு அதிலே ஈடுபடாதே, ஔதார்யங்கொண்டாடியிருக்கும் அவன்முன்னேயோ நடக்கலாவது? நடையழகில் உள்மானம் புறமானங்கண்டு அதுவே ஜீவநமாயிருக்கிற என்முன்னே நடக்கலாகாதோ?

ஞாலத்தூடே நடந்தும் நின்றும் கிடந்திருந்தும்*
சாலப்பலநாள் உகந்தோறுயிர்கள்காப்பானே*
கோலத்திருமாமகளோடு உன்னைக்கூடாதே*
சாலப்பலநாள் அடியேனின்னம்தளர்வேனோ. (3)

ஒ.—மூன்றாம்பாட்டில், ''யாத்ருச்சிகமாக ஒருகால் அங்ஙனே அவதரித்தோமத்தனை'' என்னவொண்ணாதே, யுகந்தோறும் ராமக்ருஷ்ணாதிரூபேண வந்து திருவவதாரம் பண்ணியருளினவிடங்களிலும் ஸஞ்சாராதிகளான மநோஹாரி சேஷ்டிதங்களைப்பண்ணி ஜகத்தை ரக்ஷிக்கை உனக்கு ஸ்வபாவமாயிருக்க, நான் உன்னைக் காணப்பெறாதே இன்னமும் நெடுநாள் நோவுபடக்கடவேனோவென்கிறார். [கோலத்திருமா மகளோடு உன்னைக்கூடாதே] - பெரியபிராட்டியாரோடிருந்தருளுகிற உன்னைக்கண்டு அடிமை செய்யப்பெறாதே.

இ.—மூன்றாம்பாட்டில், ''அது சற்றுப்போது காட்டாறு பெருகுமாபோலே செய்தோமத்தனை'' என்ன; அது காதாசித்கம் என்னவொண்ணாதபடி யுகந்தோறும் ராமக்ருஷ்ணாதிரூபத்தாலே வந்து அவதரித்து ரக்ஷிக்கை உனக்கு ஸ்வபாவமாயிருக்க, நான் நோவுபடக்கடவேனோ? என்கிறார். [ஞாலத்தூடே இத்யாதி] - ''அக்ரத: ப்ரயயௌ ராம:'' என்றும், ''அத தாசரதிர்வீரோ ராமோநாம மஹாபல:,

விஷ்ணுர்மாநுஷரூபேண சசாரவஸுதாதலே'' என்றும் சொல்லுகிறபடியே நடந்தும், ''அவஷ்டப்யச ஷ்டடந்தம் ததர்சதிதநுரூர்ஜ்ஜிதம்'' என்கிறபடியே நின்றும், ''பாஹும்புஜ போகாபமுபதாயாரிஸூதநக:'' ''அஞ்ஜலிம்ப்ராங்முக:க்ருத்வாப்ரதிசிச்யேமஹோததே:''என்கிறபடியே கிடந்தும், ''உடஜே ராமமாஸீநம்'' என்கிறபடியே ருஷிகள் ஆச்ரமங்களிலே யிருந்தும். [சாலப்பலநாள்] - ஒருநாள்செய்து போகை யன்றிக்கே பதினோராயிரமாண்டும், நூறாண்டும். [உகந்தோறு] - ''ஸம்பவாமி யுகேயுகே'' என்கிற படியே. [உயிர்கள் காப்பானே] - சிறியார் பெரியார் என்னாதே ஸர்வரக்ஷகன் அல்லையோ? சிலர் கூப்பிட ஜகத்ரக்ஷணம்பண்ணுகை ரக்ஷகத்வத்துக்குக் குறைவன்றோ? என்னை ஒருவனையும் ஒழியவிட்டு உன்னுடைய ஸர்வரக்ஷகத்வத்தை இழக்கவிறே புகுகிறது. [கோலத்திரு இத்யாதி] - பிராட்டியோடே கூடவிருக்கிற வுன்னைக்கிட்டி அடிமைசெய்யப்பெறுதே. மாதா பிதாக்களைச் சேரக்காணுமாபோலே, ஒரு மிதுநமிறே ப்ராப்யம். மாதாபிதாக்களை அகன்று ஸ்தநந்தயப்ரஜை ஜீவிக்கவற்றோ? இருவருஞ்சேர்ந்த சேர்த்தி பேற்றுக்குஉறுப்பாயன்றோ இருப்பது; ''ஸஹதர்மசரீ தவ'' என்னக்கடவதிறே. [சாலப்பலநாள்] - அநாதிகாலமிழந்த நான் அநந்தகால மிழக்கவோ? முறையறியாதகால மிழந்தேனாகில், முறையறிந்தகாலமு மிழக்கவோ? ருசிபிறவாதகால மிழந்தேனாகில், ருசிபிறந்தபின்பும் இழக்குமித்தனையோ?

ஈடு.—மூன்றாம்பாட்டு. ஜகதாகாரனான வடிவுகாட்டினது எனக்குப் போராது: அஸாதாரணமான விக்ரஹத்தைக் கொடுவந்து காட்டவேணுமென்றார்; அது உமக்குக் காட்டுவது ஒருதேசவிசேஷத்தே கொடுபோய்க்காணு மென்ன, அதுதன்னை இங்கே கொண்டுவந்து இதரஸஜாதீயமாக்கிக் காட்டிற்றிலையோ என்றார். அதொருநாள் சற்றுப்போது காட்டாறு பெருகினாப்போலே செய்தோமென்ன, ''அது காதாசித்கம்'' என்னவொண்ணாதபடி யுகந்தோறும் ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைப்பண்ணி ரக்ஷிக்கை உனக்கு ஸ்வபாவமாயிருக்க, நான் நோவுபடக்கடவேனோ என்கிறார்.

[ஞாலத்தூடே நடந்தும்] - ஸதாதர்சநம்பண்ணுவார்முன்னே நடக்கக்கடவ நடையை காதாசித்கமாகவந்தாலும் கடாக்ஷியாதார்முன்னே இடர் நடந்தது! அந்தர் முன்னே நடக்குமா போலே. *அக்ரத: ப்ரயயௌ ராம:* என்றும், *அத தாசரதிர்வீரோ ராமோநாம மஹாபல:, விஷ்ணுர் மாநுஷரூபேண சசார வஸுதாதலே* என்றும் சொல்லுகிறபடியே நடந்தும். வடதேசத்தினின்றும் போரப் பாடவல்லராயிருப்பாரொருத்தர் ''பெருமாளைத் திருவடிதொழவேணும்'' என்றுவர, ஆழ்வார்திருவரங்கப்பெருமாளரையர் ஒருதீர்த்தத்தினன்று இராத் திருமாலையைப்பாடிச் சமைந்து, பெருமாளை யொரு மத்தகஜத்தைக் கைவசப் படுத்துமாபோலே வத்யவசமாக்கிக் கணிசங்கொண்டு, ''நாயன்தே! தேவரீர்திருவடிகளுக்குப் போரநல்லனொருவன் தேவரைத் திருவடிதொழ நெடுந்தூரமுண்டு வந்திருக்கிறது; இவனை யழைத்துக்கொண்டு ஸம்பாவனை பண்ணியருளவேணும்'' என்ன, அவரைப் பெருமாள் அருளப்பாடிட்டு, திருப்புன்னைக்கீழ் நின்றும் அவர் நின்றவிடத்தே திருக்கைத்தலத்தேயெழுந்தருளி, விண்ணப்பஞ்செய்வார்களை யருளப்பாடிட்டு, ''வாரீகோள்! நாம் இவன் வந்த தூரத்துக்கு எல்லாம்போருமோ செய்த நாம்?'' என்று திருவுள்ளமானார்; அப்படியேயிறே நம்மிழவுகளும் திருவுள்ளத்தேபட்டு, அவை யெல்லாம் ஆறும்படி முகம் தந்தருளும்படியும். [நின்றும்] - அவஷ்டப்யச திஷ்டந்தம் ததர்ச தநுரூர்ஜ்ஜிதம், ராமம் ராமாநுஜம்சைவ பர்த்துச்சைவாநுஜம் சுபா* - தன் பர்த்தாவைக் கொன்ற பெருமாளை ''தப்பச்செய்தீரே'' என்கையன்றிக்கே, இவரது குற்றமுண்டோ? தம்மையாச்ரயித்தவர்கள்விரோதிபோக்கத் தவிர்வார்களோ? இவனும் அநுகூலித்தானாகில் ரக்ஷியாரோ? தண்ணீர்குடிக்கக்கல்லின ஏரியிலே தலைகீழாகவிழுந்து சாவாரைப்போலே தன்குற்றத்தாலே கெட்டானத்தனையிடே ரென்றாளிறே! இப்படி உகவாதாருடைய ஸ்த்ரீகளுக் கும் ஆகர்ஷகமாம்படியிறே கையும்வில்லுமாய்நிற்கும் நிலையிருப்பது! [கிடந்தும்] - *பாஹும் புஜகபோகாப முபதாயாரிஸூதந:* கடலைப நுவர்த்தித்துக்கிடக்கிற கிடைதானே லங்கை குடிவாங்க வேண்டும்படியிருக்கை. *அஞ்ஜலிம் ப்ராங்முக:க்ருத்வா ப்ரதிசிச்யே மஹோததே:* ப்ரதிசிச்யே என் கிறதாயிற்று-கடல் தன்னைப் போர அளவுடைத்தாக நினைத்திருக்குமாயிற்று. அதுக்காக ஒரு கடல் ஒருகடலோடே ஸ்பர்த்தித்துக் கிடந்தாற்போலேயிருக்கை; ''கருணையங்கடல் துயின்றவன் கருங்கடல் நோக்கி'' என்னும்படியிறே. [இருந்தும்]-*உபவிஷ்டம் ஸ்வலங்க்ருதம்* என்றும்,

உடஜே ராமமாஸீநம் என்றும் சொல்லுகிறபடியே யிருக்கை. "திருவயோத்யையிலிருக்கும் பேரோலக்கம்சிறியது" என்னும்படியிறே தனியிடத்தில் ஓலக்கமிருந்தபடி. அவ்வோலக்கத்தில் இட்டும் தம்பிக்கும் இட்டவொண்ணுதபடியிறே இவ்வோலக்கமிருந்தபடி; *அபிதஃ பாவகோபமம்* நெருப்பு எரியாநின்றால் கிட்டப்போகாதாப்போலே அநபிபவநீயராயிருந்தவிருப்பு. [சாலப்பலநாள்] - உன்னுடைய ரக்ஷணம்அநாதியன்றோ? அன்றிக்கே, நூறாண்டு, பதினோராயிரமாண்டென்றுமாம். [உகந்தோறு] - *ஸம்பவாமி யுகேயுகே* என்னுமாபோலே. [உயிர்கள்] ஒரு திருவடி, திருவநந்தாழ்வான், பிராட்டிக்காக அன்றுகிடீர், ஸர்வாத்மஸம்ரக்ஷணமன்றோ உன்னது! [காப்பானே] - இவர்களுக்கு அழித்துக்கொள்ளுகை பணியானுப்போலேயிறே யவனுக்கும் நோக்குகை பணியானபடி. நான் கைவாங்கினேன், இனிக் காவற்சோர்வுபடாமல் வேணுமாகில் நோக்கிக்கொள். *ராமலக்ஷ்மணகுப்தா ஸா ஸுக்ரீவேணச வாஹிநீ* கடற்கரையிலே விட்டபோது பெருமாளைநோக்குகைக்கு, தம்பியார், மஹாராஜர், மைந்தத்விவிதர்கள் உள்ளிட்ட முதலிகளெல்லோரும், லங்கையிலே கிட்ட, ஆகாசமெல்லாம் வெளிக்காவலடைத்து நிறைநோக்குவாரைப்போலே பெருமாளை நோக்கிக்கொண்டுகிடக்க, இவர்கள்இத்தனைவரும் கண்சோர்ந்த வளவிலே, பெருமாள், தாம் கையும் வில்லுமாய்க்கொண்டு இவர்களுக்குப் புறம்பே நின்று உலாவினர்இறே. அவன்நோக்குகைக்கு இத்தலை கண்செம்பளிக்குமத்தனையிறே வேண்டுவது. நாம் அவனுக்கு ரக்ஷகராக நினைத்திருக்குமது ப்ரமமிறே; உணர்ந்து பார்த்தால் ரக்ஷகனாக வல்லான் அவனேயிறே. [கோலத்திருமாமகளோடு உன்னைக்கூடாதே] - தாயும் தமப்பனுங்கூடவிருக்கக் கிட்டப்பெறுதே ஸ்தநந்தயப்ரஜை நாக்குழட்டிக்கிடந்து துடிக்குமாபோலேயிருக்கிறது காணும்! *அநந்யா* என்கிறபடியே அவனும் அவளுமான சேர்த்தியிறே இவர்க்கு ப்ராப்யம். [இன்னம்தளர்வேனோ - சாலப்பலநாள்] - முன்பு அநாதிகாலமிழந்த நான் இன்னம் அநந்த காலமிழக்கவோ? [அடியேன்] - அதுகிடக்க "உன்னுலேயிழந்தாய்" என்று சொல்லிக் கைவிடலாமென்றிருக்கிறாயோ? [இன்னம்தளர்வேனோ] - "ஒருமிதுநம் எனக்கு ப்ராப்யம்" என்று அறிந்த பின்பும் தளருமத்தனையோ? "நீ ரக்ஷகன்" என்றறியாதொழிதல், வேறுஎனக்கு ரக்ஷகமுண்டு" என்றிருத்தல், "நான் எனக்குரக்ஷகன்" என்றிருத்தல், லக்ஷ்மீஸநாதமானவஸ்து ப்ராப்யம்" என்றறியாதொழிதல், "எனக்கு நான்உரியேன்" என்றிருத்தல் செய்தேனோ. இழக்கைக்கு, ருசிபிறந்தபின்பு இழக்கவோ? இப்பாட்டால் - அகாரார்த்தத்தை ஸக்ரமமாக வ்யாக்யாநம்பண்ணுகிறார். *அவ-ரக்ஷணே* இறே தாது. ரக்ஷிக்குமிடத்தில், ஸர்வப்ரகாரமாக ரக்ஷிக்கவேணும்; அதுதான் ஸர்வகாலமும் ரக்ஷிக்கவேணும்; அப்படி ரக்ஷிக்குமிடத்தில் ஸர்வரக்ஷகனுகவேணும்; இப்படி வரையாதே ரக்ஷிக்குமிடத்தில், *ந கச்சிந் நாபராத்யதி* என்னுமவளும், "என்னடியார் அதுசெய்யார்" என்னுமவனுங்கூடவாயிற்று; ஆகையாலே, அகாரம் - மிதுநத்துக்கு வாசகமாயிற்று. ஞாலத்தூடே இத்யாதியாலே - ஸர்வப்ரகாரரக்ஷகத்வஞ் சொல்லிற்று; சாலப்பலநாள் இத்யாதியாலே - ஸர்வகாலரக்ஷகத்வஞ் சொல்லிற்று: உயிர்கள் என்கையாலே ஸர்வரக்ஷகத்வஞ் சொல்லிற்று; 'கோலத்திருமாமகளோடுன்னைக்கூட' என்கையாலே - ச்ரிய:பதியே ப்ராப்யம் என்றது அகாரவிவரணமான திருமந்த்ரார்த்தமுஞ் சொல்லுகிறது; 'கோலத்திருமாமகளோடுன்னை' என்கையாலே - ப்ரஹ்மஸ்வரூபஞ் சொல்லிற்று; 'அடியேன்' என்கையாலே - 'ப்ரத்யகாத்மஸ்வரூபஞ்சொல்லிற்று;, உயிர்கள்காப்பான்' என்கையாலே-உபாயஞ் சொல்லிற்று; 'உன்னைக்கூட' என்கையாலே - ப்பலஞ்சொல்லிற்று; 'உன்னைக்கூடாதே - தளர்வேனோ' என்கையாலே-விரோதிசொல்லிற்று.

தளர்ந்தும்முறிந்தும் சகடவசுரருடல்வேறு*
பிளந்துவீயத் திருக்காலாண்டபெருமானே*
கிளர்ந்துபிரமன்சிவன் இந்திரன்விண்ணவர்சூழ*
விளங்கவொருநாள் காணவாராய்விண்மீதே. (4)

ஒ.—நாலாம்பாட்டில், ப்ரதிபந்தகங்கள் உண்டாகில் அவற்றை நீக்கியருளி என்னுடைய நீரும்படிவந்து தோற்றியருளவேணும் என்கிறார். [தளர்ந்தென்று தொடங்கி] - சகடாஸுரனுடைய சரீரம் கட்டுக்குலைந்தும் முறிந்தும் வேறுகப்பிளந்து ஸ்வரூபமும் காணவொண்ணாதபடி மாய்ந்துபோம்படி திருவடியை ஆளுகையாலே ஜகத்துக்கு அடைய ஸ்வாமியானவனே! [கிளர்ந்தும் பிரமனென்று மேலுக்கு] - ஐச்வர்யங்களாலே அந்யபரரான ப்ரஹ்மாதி தேவர்களெல்லாம் பெரிய கிளர்த்தியோடே வந்துசூழ்ந்து ஜயஸ்துதிபண்ண ஆகாசமெல்லாம் அழகுவெள்ளமிடும்படி ஒருநாள் இங்கேவந்து தோற்றியருளவேணும்.

இ.—நாலாம்பாட்டில், "நாம் வரநினைத்தாலும் ப்ரபலப்ரதிபந்தகங்கள் உண்டே?" என்ன, சகடாஸுரனிலும் வலிதோ என்ப்ரதிபந்தகம்? என்கிறார். [தளர்ந்தும் இத்யாதி] - 'சகடவசுரருடல் - தளர்ந்தும் முறிந்தும்' - சகடாஸுரனுடைய சரீரம் கட்டுக்குலைந்தும், "ச்சின்னம் பின்னம்" என்கிற க்ரமமன்றிக்கே ஒருகாலே முறிந்தும் வேறும்படிபிளந்து உருமாய்ந்து போம்படி திருவடிகளை ஆண்டு சேஷியான உன்னைத்தந்தவனே. முலைவரவுதாழ்த்துத் திருவடிகளைநிமிர்க்கத் துகளாய்ப்போயிற்று. பின்னைத் தனத்தாலே அவன் அகப்பட்டான். திருவடிகளின் அவதானத்தாலே பிழைத்தவித்தனை. [கிளர்ந்து இத்யாதி] - ஈச்வராபிமானிகளான ப்ரஹ்மாதிகள் பெரிய கிளர்த்தியோடே ஜயஸ்துதிகளைப் பண்ணிக்கொண்டு சூழ்ந்து ஸேவிக்க. [விளங்க] - ஆகாசாவகாசமெல்லாம் அழகுவெள்ளமிட என்னுதல்; ஆதித்யஸகாசத்தில் நக்ஷத்ராதிகள்போலே அவர்கள் ஒளி கீழ்ப்படவென்னுதல். [ஒருநாள்] - ஆனைக்கு வந்துதோற்றினார்போலே ஒருநாள் வந்தருளவேணும்.

ஈடு.—நாலாம்பாட்டு. 'தளரக்கடவீரல்லீர்; உம்முடைய தளர்த்தி பரிஹரிக்கக் கடவோமானாலும் ப்ரதிபந்தகம் கனத்திராநின்றதுகாணும்' என்ன; 'ஓம், அப்படியே: சகடாஸுரனிலுங்காட்டில் வலியதிறே என்னுடைய விரோதி' என்கிறார். 'உன் கால்கண்டபோதே போகாதோ' என்கிறார். "அடிபடிற் செய்வதென்?" என்று சும்மெனாதே கைவிட்டோடுமிறே.

[தளர்ந்தும் இத்யாதி] - சகடாசுரன் கட்டுக்குலையா, முறியா, உடல்வேறுகப்பிளந்துவியா; *ச்சிந்நம் பிந்நம் சரைர்தக்தம் ப்ரபக்நம் சஸ்தரபீடிதம்* என்கிறபடியே. பின்பு துகளுங்காணவொண்ணாதபடியாகை. சகடாஸுரநிரஸநம்பண்ணினானென்று திரளச்சொல்ல வமைந்திருக்க, 'தளர்ந்தும்' 'முறிந்தும்' என்று தனித்தனியே சொல்லுகிறாரிறே, ப்ரதிபக்ஷநிரஸநமாகையாலே அவ்வோ அவஸ்த்தைகள் தமக்கு இனிதாயிருக்கையாலே. [திருக்காலாண்ட] - அடியாரையாண்டால்ஆபத்துக்கு உதவுவர்களிறே. இவன் மௌக்த்யத்தாலே யொன்று மறியாதே கிடக்க, திருவடிகள் கிடீர் நம்மை நோக்கிற்று! என்கிறார். *ஸ்தந்யார்த்தீ ப்ரருரோதஹ*-என்கிறபடியே முலைவரவுதாழ்த்தவாறே அனந்தலிலே திருவடிகளை நிமிர்த்தான்; அவ்வளவிலே பொடிபட்டவித்தனை; "உருளச்சகடமதுறக்கில் நிமிர்த்திர்" என்று இவனும் அறிந்துசெய்தானல்லன். தன்னையுணர்ந்து பரிமாறும்போது திவ்யாயுதமும், அவையுதவாதபோது கையும், அதுவும் உதவாத போது திருவடிகளுமாயிருக்கிறபடி. நம்முடைய ஆபத்துக்களுக்கே யன்றிக்கே, அவனுடைய ஆபத்துக்கும் திருவடிகளேகாணும் உதவுவது! திருமேனிதான் ஆச்ரிதார்த்தமாகையாலே, அவர்கள்விரோதி போகைக்கும் அதுதானே யுறுப்பாயிருக்கை. [பெருமானே] அன்று சேஷியையுண்டாக்கின உனக்கு இன்று சேஷவஸ்துவை உண்டாக்குகை பெரியபணியோ? அவன் ப்ரகாரியானால், ப்ரகாரமாயுண்டாமதிறே யிது. [கிளர்ந்து இத்யாதி] - 'கும்பிடு நட்டமிட்டாடி' என்கிறபடியே அங்கப்ரயோஜநரைப்போலே, அவசராய்க்கொண்டு ப்ரஹ்மருத்ராதிகள், ப்ரதாநரோடு அப்ரதாநரோடுவாசியறக் கிண்ணகம் சுழித்தாப்போலேசூழச் சூழப்பட்டு, இருட்டில் விளக்குப்போலே *தேஜஸாம் ராசிமூர்ஜிதம்* என்கிறபடியே தேஜஸ்ஸே வடிவான திருமேனியைக்கொண்டு ஒருநாள் ஆனைக்குவந்து தோற்றினாப்போலே, ஆகாசமடங்கலும் இடமடைக்கும்படிவந்து தோற்றவேணுமென்கிறார். [விளங்க] - இவன்ஸந்நிதியில் ப்ரஹ்மாதிகள் தேஜஸ்ஸு "தமஸ்ஸு" என்னும்படியிருக்கிறபடி. [ஒருநாள்] - "நூறாண்டு, பதினாறாயிரமாண்டு" என்று அர்த்தித்தேனோ! [காணவாராய்] - நீனகர்நீளெரிவைத்தருளாயென்கிறேனோ! [விண்மீதே] - இங்கேவந்தவதரிக்கச் சொல்லுகிறேனோ!

விண்மீதிருப்பாய்மலைமேல்நிற்பாய் கடற்சேர்ப்பாய்*
மண்மீதுழல்வாய் இவற்றுளெங்கும்மறைந்துறைவாய்*
எண்மீதியன்றபுறவண்டத்தாய் எனதாவி*
உள்மீதாடி உருக்காட்டாதேயொளிப்பாயோ. (5)

ஒ.— அஞ்சாம்பாட்டில், ஸர்வத்ரஸந்நிஹிதனுய், ஹ்ருதயத்திலும் ஸ்பஷ்டதரமாக ப்ரகாசியா நின்று வைத்து, என் கண்ணுக்கு விஷயமாகா தொழிந்தால் நான் தரிக்கவல்லேனே? என்கிறுர். [விண்ணென்று தொடங்கி] - திருநாட்டிலே பேரோலக்கமாகவிருந்து திருநாட்டிலுள்ளாரும் ஸம்ஸாரத்திலுள்ளாரும் ஒக்கபுஜிக்கலாம்படி திருமலையிலே நின்றருளி திருப்பாற்கடலிலே தேவாதிகளுக்கு ஸமாச்ரயணீயனுய் வந்து கண்வளர்வதுஞ்செய்து ஆச்ரிதார்த்தமாக ஸம்ஸாரத்தில் வந்து திருவவதாரம் பண்ணி உலாவியருளுமவனே! [இவற்றுளெங்கும் மறைந்துறைவாய்] - ஸகலபதார் தங்களினுள்ளும் அவற்றினுடைய ஸத்தார்த்தமாகத் தெரியாதபடி ஆத்மதயா நிற்குமவனே! [எண்மீதியன்ற புறவண்டத்தாய்] - அஸங்க்யேயமான பாஹ்யாண்டங்களிலும் உள்ளவனே! [எனதாவியுள் மீதாடி] - என் உள்ளே மிகவும் ப்ரகாசித்து வைத்தே.

இ.— அஞ்சாம்பாட்டில், ஸர்வத்ரஸந்நிஹிதனுய் என் ஹ்ருதயத்திலும் ஸ்பஷ்டமாக ப்ரகாசியா நின்றுவைத்து, என் கண்ணுக்கு விஷயமாகாதொழிந்தால் நான் தளரேனோவென்கிறுர். [விண்மீது இத்யாதி] - பரமபதத்திலே நித்யஸூரிகளுக்கு அழகோலக்கங் கொடுத்துக்கொண் டிருக்கிறவனே! நித்யஸூரிகளுக்கும் ஸம்ஸாரிகளுக்கும் ஒக்க அநுபவிக்கலாம்படி திருமலையிலே நின்றருளினவனே! திருமலையில் நிலைபோலே ப்ரகாசிக்கிறதாயிற்று, இவர்க்குப் பரமபதத்திலிருப்பு. பரமபதத்தில் மேன்மையுமறியாதே, திருமலையில் நீர்மையுமறியாதே இருக்கிற ப்ரஹ்மாதிகளுக்கு ஆச்ரயணீயனுகைக்கும் அநுபவிப்பிக்கைக்காகவும் திருப்பாற்கடலிலே சாய்ந்தருளினவனே! அத்தனையளவில்லாத ஸம்ஸாரிகளுக்காக ஸஜாதீயனுய்வந்து அவதரித்து மார்விலே அம்பேற்று சோகமோஹங்களை அநுபவித்து ரக்ஷிக்குமவனே! காண்கையும் அஸஹ்யமாயிருப்பார்க்கு முகந்தோற்றுதபடி நின்று ஸகலபதார்தங்களினுடைய ஸத்தையைநோக்கினவனே! அஸங்க்யேயமான பாஹ்யாண்டங்களுக்கும் இப்படி ரக்ஷகனுனவனே! என்னுடைய ஹ்ருதயத்தினுள்ளே மிகவும் ப்ரகாஸித்து என்னுதல், அந்தர்ப்பஹிச்ச வர்த்தித்து என்னுதல். [உருக்காட்டாதே ஒளிப்பாயோ] - "பக்தாநாம்" என்கிற வடிவை எனக்குக் காட்டாதே மறையாநின்ருல் ஜீவிப்பனே?

ஈடு.— அஞ்சாம்பாட்டு. ஸர்வத்ர ஸந்நிஹிதனுய் என் ஹ்ருதயத்திலும் ஸ்பஷ்டமாக ப்ரகாசித்துவைத்து, என் கண்ணுக்கு விஷயமாகாதொழிந்தால் நான் தளரேனோ? என்கிறுர்.

[விண்மீதிருப்பாய்] - ஸதா தர்சகம்பண்ணும்படியான பாக்யம்பிறந்தவர்களுக்குக் காட்சி கொடுத்திருக்கும்படி. இவர்க்கு இங்குத்தையிற்காட்டிலும் பரமபதத்திலிருப்புக்காணும் முற்படத் தோற்றுகிறது. [மலைமேல்நிற்பாய்] - நித்யஸூரிகளையும் நித்யஸம்ஸாரிகளையும் ஒருதுறையிலே நீருண்ணப்பண்ணுகிறவிடம். இங்குள்ளாரும் தன்னிலையில் வாசியறியும்படி ருசிஜநகனுய்நின்றபடி. "வேங்கடத்தாடு கூத்த"னிறே. [கடற்சேர்ப்பாய்] - கால்நடைதந்து போகவல்ல ப்ரஹ்மருத்ராதிகளுக்காகத் திருப்பாற்கடலிலே வந்துசாய்ந்தபடி. விண்மீதிருப்பாயென்று - இருப்பில்வீறுசொன்னுர்; மலைமேல்நிற்பாயென்று - நிலையில்வாசிசொன்னுர்; [கடற்சேர்ப்பாய்] - கிடையழகு திருப்பாற்கடலிலே பர்யவஸிதம். [மண்மீதுழல்வாய்] - அவ்வளவுபோகமாட்டாத ஸம்ஸாரிகளுக்காக அவதரித்து, அவர்கள் கண்வட்டத்திலேதிரியுமவனே! [உழல்வாய்] - 'தாம்பாலாப்புண்டாலும் அத்தழும்புதாஸினகப் பாம்பால் ஆப்புண்டு பாடுற்றுலும்' என்கிறபடியே அநுகூலராய்க்கட்டுவாரும் ப்ரதிகூலராய்க்கட்டுவாருமான ஸம்ஸாரமிறே. [இவற்றுளெங்கும்மறைந்துறைவாய்] - கண்ணாலே காணில் சிவிட்கென்னு

மவர்களுக்கு, அவர்கள் காணவொண்ணுதபடி மறைந்துவர்த்திக்குமவனே! விஷயப்ரவணமான ப்ரஜை "தாய்முகத்திலேவிழிபேன்" என்ருல், தான்மறைய நின்று அவனுக்குத்தாரை யிட்டு ரக்ஷிக்கும் தாயைப்போலே. அதாகிறது - சிசுபாலாதிகள் நறுகுமுறுகு என்ருல், அவர்கள் கண்ணுக்குத்தோற்ருதபடி அந்தர்யாமியாய்நின்று நோக்கும்படி. [என் மீதியன்ற புறவண்டத்தாய்] - என்னுக்குமேலே வர்த்திக்கிற மற்றுள்ளவண்டங்களிலும் இப்படி வர்த்திக்கிறவனே! *கோடிகோடிசதாநி ச* இறே. [எனதாவியுள்மீதாடி] - என்ஹ்ருதயத்தினுள்ளே குறைவற ஸஞ்சரித்தென்னுதல், என்னுத்மாவுக்கு உள்ளும் புறம்பும் ஸஞ்சரித்தென்னுதல். [உருக்காட்டாதே யொளிப்பாயோ] - வடிவுகாணப்பெருவிட்டால், மறந்து பிழைக்கவும் பெருதொழிவதே. குணஜ்ஞாநத்தாலே தரிப்பார்க்கன்றே வடிவுகாணுதொழிந்தாலும் தரிக்கலாவது?

பாயோரடிவைத்ததன்கீழ்ப் பரவைநிலமெல்லாம்
தாய்* ஓரடியால் எல்லாவுலகும்தடவந்த
மாயோன்!* உன்னைக்காண்பான் வருந்தியெனைநாளும்*
தீயோடுடன்சேர்மெழுகாய் உலகில்திரிவேனே. (6)

ஒ.—ஆரும்பாட்டில், "காண்கைக்கு இவர்தாம் அயோக்யர்" என்று உபேக்ஷித்தருளினுனைக் கொண்டு, யோக்யாயோக்யதைபாராதே லோகத்தையெல்லாம் அளந்துகொண்ட உன்னுல் இழக்கப்படுவாருண்டோ? என்கிறுர். [பாயோரடியென்று தொடங்கி] - ஓர் அடியைப் பரம்பவைத்து அவ்வடிக்கீழேயாம்படி கடலோடுகூடின நிலத்தையெல்லாம் அநாயாஸேந கடந்து மற்றையொரு அடியாலே எல்லாலோகங்களும் உஜ்ஜீவிக்கும்படி தடவின ஆச்சர்யபூதனே! [உன்னையென்று தொடங்கி] - இப்படி ஸுலபனுன உன்னைக் காணவேணுமென்று நெருப்பிலேபட்ட மெழுகுபோலே நோவுபட்டு முடியவும் பெருதே திரிவேனே?

இ.—ஆரும்பாட்டில், காண்கைக்குத் தாம்அயோக்யர்' என்று உபேக்ஷித்தானுக நினைத்து, யோக்யாயோக்யதை பாராதே எல்லார்தலையிலும் திருவடிகளை வைத்த உன்னுல் இழக்கப்படுவார் உண்டோ? என்கிறுர். [பாயோரடிவைத்து] - ஓரடியை, பாய்வைத்து - பரம்பவைத்து, [அதன்கீழ் பரவை நிலமெல்லாந்தாய்] - அத்திருவடியின்கீழே கடல்சூழ்ந்த பூமியையெல்லாம் அளந்துகொண்டு. [ஓரடியால்] - மற்றை ஓரடியால். [எல்லாவுலகுந்தடவந்த] - ஸகலலோகங்களையும் ஸ்பர்சித்த; தடவந்த - தடவின. தென்றல் பட்டாப்போலே உஜ்ஜீவிக்கும்படி இருக்கை. [மாயோன்]-ஆச்சர்யபூதனே! இதெல்லாம் தன்பேருகச்செய்த வ்யாமோஹத்தை யுடையவனென்கை. [உன்னைக்காண்பான் வருந்தி] - என்னைக்கிட்டுகைக்கு வருந்தித் திரிந்த உன்னைக் காணவேணுமென்று நான் வருந்தி; அத்தலை யித்தலையாய். [எனைநாளும்] - அநேக காலமும். ஒருநாள் என்னுசையை ஆவிஷ்கரித்து விட்டேனே? [தீயோடுடன்சேர் மெழுகாய்] - அக்நி ஸகாசத்தில் மெழுகுபோலே. தூரவிருந்து அழியாதிருத்தல், அக்நியிலேபுக்கு நசித்தல்செய்யப்பெருதேயிருக்கை. நசையின் ஸ்வபாவத்தாலும் விஷயஸ்வபாவத்தாலும் சைதில்யம் நித்யமாயிருக்கை. [உலகிற்றிரிவேனே] - ஜீவிக்கவும்பெருதே முடியவும்பெருதே, யாதநாசரீரம்போலே குளிர்ந்த வழியில்லாத தேசத்தே எத்தனைநாள் தட்டித்திரியக்கடவேன்?

ஈடு.—ஆரும்பாட்டு. 'உம்முடைய அபேக்ஷிதம் செய்யக்கடவோம். அதில் ஒரு குறையில்லை; ஆனாலும், ப்ரயோஜநம் உம்மதானபின்பு நீரும் சில யத்நம் பண்ணவேணுங்காணும்' என்ன; இந்த மர்யாதை என்றுதொடங்கிக்கட்டிற்று என்கிருர். அன்றியே, காண்கைக்குத் தாம் அயோக்யர் என்று உபக்ஷித்தானுக நினைத்து, யோக்யதாயோக்யதை பாராதே எல்லார்தலையிலும் திருவடிகளைவைத்த உன்னுலேயிழக்கப்படுவார் உண்டோ? என்கிருராகவுமாம்.

[பாயோரடிவைத்து] - சேதநர்தலையிலே திருவடிகளை வைக்கிறபோது, அவர்கள் எவ்வளவு வருந்தினார்கள்? வஸிஷ்ட சண்டாள விபாகம்பாராதே வெறும் உன் க்ருபையாலே செய்தருளினாய் அத்தனையன்றோ! [பாயோரடிவைத்து] - ஓரடியைப் பாவிவைத்து. [அதன்கீழ்] அத்திருவடியின்கீழே. [பரவைநிலமெல்லாம்தாய்] - கடல்சூழ்ந்தபூமிப்பரப்படங்கலும், தாவி-அளந்தென்றபடி. ஸங்கல்பத்தாலேசெய்தானல்லனே, திருவடிகளைப்பரப்பிப் பின்பிறே யளந்துகொண்டது; "பரக்கவைத்து அளந்துகொண்ட பற்பபாதனி"றே! [ஓரடியாலெல்லாவுலகுந்தடவந்த] - மற்றைத்திருவடியாலே ப்ரஹ்மலோகத்தளவும் சென்று ஸ்பர்சித்த. [எல்லாவுலகும்] - நடுவுள்ள லோகங்களெல்லாம். [தடவந்த] - தென்றல் உலாவினாப்போலே. [மாயோன்] - தன்னுடைமையை ஸ்பர்சிக்கைக்குத் தான் வ்யாமோஹம் பண்ணுமவன். [உன்னைக்காண்பான் வருந்தி] - என்னளவில் வந்தவாறே என்னை இரப்பாளனுக்குகிறாயோ? அத்தலை யித்தலையாயிற்றே? [எனைநாளும்] - அநேக காலம், மயர்வறமதிநலமருளியபின்பு ப்ராப்தியளவும்செல்ல இடையிலுண்டான நாளுநாளும், அவனைதிர்சூழல்புக்குத் திரிந்த நாளோபாதி பரப்பாய்த் தோற்றுகிறபடி. [தீயோடுடன்சேர்மெழுகாய்] - அக்நியிலே ப்ரவேசித்துக் கரிந்துபோகவும்பெறாதே, தூரவிருந்து அழியாதிருக்கவும்பெறாதே, உருகுவது வலிப்பதாகிறபடி. மாநஸாநுபவத்தாலே யுருகுவது வலிப்பது, பாஹ்யஸம்ச்லேஷம்பெறாமையாலே உருகுவது வலிப்பதாய்ச்செல்லுகிறபடி. நசைவலிக்கப்பண்ண, ஆசையுருகப் பண்ணச்செல்லுகிறபடி. [உலகில்திரிவேனோ] - ஒன்றில் ஜீவித்தல், ஒன்றில் முடிதல் செய்யப்பெறாதே, குளிர்ந்தவழியில்லாததேசத்திலே யாதநாசரீரம்போலே நானொருவன் இங்ஙனே திரிவதே!

உலகில்திரியும்கருமகதியாய் உலகமாய்*
உலகுக்கேயோருயிருமானாய் புறவண்டத்து*
அலகில்பொலிந்த திசைபத்தாயவருவேயோ*
அலகில்பொலிந்த அறிவிலேனுக்கருளாயே. (7)

ஒ.—ஏழாம்பாட்டில், "நீரும் சிறிது யத்நம் பண்ணவேணுங்காணும்" என்று எம்பெருமான் அருளிச்செய்ய, எல்லாரையும் ரக்ஷிக்கக்கடவையாக ஸங்கல்பித்திருக்கிற உன்னுடைய ஸங்கல்பத்துக்கு நான்புறம்போ? என்கிறார் [உலகில் என்று தொடங்கி] - லோகத்துக்கு புருஷார்த்தாத்யுபாயமாய்க்கொண்டு லோகத்தில் பரிமாறுகிற புண்யபாபரூப க்ரியைகளுக்கும் விலக்ஷணரான கர்மாநுஷ்டாதாக்களுக்கும் நிர்வாஹகனானவனே! இருந்ததே குடியாக எல்லார்க்கும் ஆத்மதயாநின்று நிர்வஹிக்கிறவனே! [புறவண்டத்தென்று தொடங்கி] - ப்ரக்ருதிவிநிர்முக்தமாய் எண்கடந்து தன்னுடைய ஜ்ஞாநப்ரபையாலே ஸர்வகதரான ஆத்மாக்களுக்கும் நிர்வாஹகனானவனே! உன்னையும் உன்னுடைய விபூதிபூதசேதநாசேதநங்களையும் பரிச்சேதிக்கிலும் பரிச்சேதிக்கமுடியாத அறிவுகேட்டையுடைய எனக்கு க்ருபைபண்ணியருளவேணும். நீ ஸர்வநிர்வாஹகனாகையாலும் நான் அறிவுகேடனாகையாலும் நீயே யருளவேணுமென்று கருத்து.

இ.—ஏழாம்பாட்டில், 'பேறு உம்மதான பின்பு, நீரும் சிறிது யத்நம் பண்ணவேணுங்காணும்' என்ன, 'ஸர்வமும் த்வததீநமாயிருக்க, அதுக்குப்புறம்போ நான் என்கார்யம் செய்கைக்கு?' என்கிறார். [உலகில் இத்யாதி] - லோகத்தில் பரிமாறுகிற ஸாதநமான கர்மம் நீயிட்ட வழக்காய் [உலகமாய்] - அநுஷ்டாதாக்களும் நீயிட்ட வழக்காய். [உலகுக்கேயோருயிருமானாய்] - ஒருசரீரத்தை ஒருசேதநன் ஆத்மாவாய் அபிமாநிக்குமாபோலே, ஸகல பதார்த்தங்களுக்கும் ஏகாத்மாவானவனே! "அந்த:ப்ரவிஷ்டச் சாஸ்தா". ப்பலபூதனான தானே கர்த்தாவும் கர்மமும் உபகரணங்களுமாயிருக்கை. [புறவண்டத்து]-அண்டப்புறத்து, அஸங்க்யேயராய் ஜ்ஞாநப்ரபையாலே ஸர்வகதரான முக்தாத்மாக்களுக்கு நிர்வாஹகனானவனே! [அலகில்பொலிந்த அறிவிலேனுக்கு] - சேதநர்க்குத் தொகையுண்டாகிலும் என்னறிவுகேட்டுக்கு எண்ணில்லை. [அருளாயே] - என்னளவு இதான பின்பு நீயே க்ருபைபண்ணி யருளுமித்தனையன்றோ? அறிவை யுண்டாக்கி, அத்தைப் பக்வமாக்கி, அதின் ப்பலமான உன்னையும் தந்தருளவேணும்.

ஈடு.—ஏழாம்பாட்டு. ‘“உலகில் திரியும்” என்கிற உறைப்பாலுண்டான ஸ்வாதந்த்ர்யம் உம்முடைய தலையிலே கிடந்ததே!’ என்ன, ‘ஸாதநமும் ஸாதகரும் ஸ்வதந்த்ரமானபின்பு, இவ்வாற்றாமை எனக்கு ஸ்வரூபமாய் வர்த்திக்கும் இத்தனையன்றோ?’ என்கிறார். அன்றியே, ‘பேறு உம்மதானபின்பு நீரும் சிறிது யத்நம் பண்ணவேணுங்காணும்’ என்ன, ‘ஸர்வமும் ஸ்வதந்த்ரமாயிருக்க, அதுக்குப்புறம்போய் நான் என் கார்யம் செய்கைக்கு?’ என்கிறாராகவுமாம்.

[உலகில்திரியுங்கருமகதியாய்] - லோகத்தில் பரிமாறுகிற கர்மமாகிற ஸாதநமாய். உன்னை யொழிய ப்ரவர்த்தநம் பண்ணவல்லதொன்றுண்டோ? [உலகமாய்] - அநுஷ்டாதாக்களோ தான் ஸ்வதந்த்ரராயிருக்கிறார்? உலகமென்பது உயர்ந்தோர்மாட்டிறே; லோகத்திலுள்ளார்க்கு என்றும் வருமிறே. [உலகுக்கேயோருயிருமானாய்] - ஒருசரீரத்தை ஒரு சேதநன் ஆத்மாவாய் அபிமானித்திருக்குமாபோலே, ஸகலபதார்த்தங்களுக்கும் ஏகாத்மாவானவனே! *அந்த:ப்ரவிஷ்ட:சாஸ்தா*. ப்ரபலபூதனானதானே, கர்த்தாவும் கர்மமும் உபகரணங்களுமாயிருக்கை. இரண்டும் உன் தலையிலே கிடந்தால், உன்னையொழிய எங்ஙனே நான் ஜீவிக்கும்படி? [புறவண்டத்து] - அண்டாத்பஹி: என்றபடி. [அலகில்பொலிந்ததிசைபத்தாய அருவேயோ]- அஸங்க்யேயராய் எம்பெருமான் ஸ்வரூபத்தாலே வ்யாபிக்குமாபோலே ஜ்ஞானத்தாலே பத்துத்திக்கிலும் வ்யாபித்திருப்பாராய் ரூபித்ரவ்யம்போலே கண்ணுக்குவிஷயமன்றிக்கே அரூபியாயிருக்கிற ஆத்மாக்களுக்கு நிர்வாஹகனானவனே! முக்தரோதான் ஸ்வதந்த்ரராயிருக்கிறார்? அங்கும் பத்துத்திக்காயிருக்குமோ? என்னில்; இங்கேயிருந்து அநுஸந்திக்கிற இவர்க்குச் சொல்லத்தட்டில்லையே. அங்ஙனன்றிக்கே, முக்தர் லீலாவிபூத்யநுஸந்தாநம் பண்ணும்போது இங்குள்ளபடியே ப்ரதிபத்தி பண்ணுவர்களிறே. [அலகில்பொலிந்தஅறிவிலேனுக்கு] - பகவத்ஸ்வரூப ரூப குண விபூதிகளை பரிச்சேதிக்கிலும் தம் அறிவுகேடு பரிகணிக்கப் போகாதென்கிறார். மயர்வற மதிநலமருளப் பெற்றவர் வார்த்தையிறே! [அருளாயே] - பரிகரமுண்டானபின்பு அருளக் குறையென்? *அநுத்தமம் பாத்ரமிதம் தயாயா:* என்னுமாபோலே.

அறிவிலேனுக்கருளாய் அறிவாருயிரானாய்*
வெறிகொள்சோதிமூர்த்தி அடியேன்நெடுமாலே*
கிறிசெய்தென்னைப்புறத்திட்டு இன்னம்கெடுப்பாயோ*
பிறிதொன்றறியாவடியேன் ஆவிதிகைக்கவே. (8)

ஒ.—எட்டாம்பாட்டில், சடக்கெனத் தம் அபேக்ஷிதம் பெறாமையாலே, உன்னையல்லது செல்லாதிருக்கிற என்னைக் கிறிசெய்தகற்றி அந்தரப்படுத்தவோ பார்த்தருளிற்று? அங்ஙனேசெய்யாதே என்னை உன்க்ருபையாலே ரக்ஷித்தருளவேணும் என்கிறார். [அறிவிலேனுக்கருளாய் அறிவாருயிரானாய்] - அறிவிலேனுக்கு அருளுமிதுவன்றோ உன் குணவத்தை? அறிவாரை உயிராகவுடையனுமிருக்கை யன்றோ அருளுகையாவது! அறிவுடையார்க்கு அருளுகை யேற்றமோ” என்றுஞ்சொல்லுவர். [வெறிகொள்சோதிமூர்த்தி யடியேனெடுமாலே] - அதிபரிமள தேஜோரூபமான திருவடிவை யுடையையாய் வைத்து, அவ்வழகிலே யகப்பட்ட எனக்கு எட்டாதிருக்கிறவனே! [கிறியென்று தொடங்கி] - உன்னையல்லது மற்றொன்றால் செல்லாதிருக்கிற நான் ப்ரமிக்கும்படி ஏதேனுமொரு விரகுகளைப்பண்ணி இன்னமும் புறம்பே போகவிட்டு என்னைமுடிக்கவோ பார்த்தருளிற்று!

இ.—எட்டாம்பாட்டில், “அருளாய்” என்றபோதே தம்அபேக்ஷிதம்பெறாமையாலே, இன்னம் என்னையகற்றி அந்தரப்படுத்தப் புகுகிறாயல்லையிறே? என்கிறார். [அறிவிலேனுக்கருளாய்] - உன்னைக் கிட்ட முதலில்லாத எனக்கு அருளாய், ‘அறிவில்லையாகில் அருளக்கடவதோ?’ என்ன, ஸர்வஜ்ஞரான நித்யஸூரிகளுக்கு க்ருபைபண்ணவோ? தளர்ந்தவிடமன்றோ க்ருபைக்கு விஷயம்! பொய்ந்நின்ற ஞானத்தை உடைய எனக்கு ஞானப்பிரானை நீ க்ருபைபண்ணியருளாய். [அறிவாருயிரானாய்] -

உன்னையுள்ளபடி யறிவார்க்கு தாரகனுகை உனக்கேற்றமோ? "பத்தராவி" என்கிறபடியே, அறிவார்க்கு உயிராமவன் என்னுதல்; "ஜ்ஞாநீத்வாத்மைவ" என்கிறபடியே, அறிவாரை உயிராகவுடையவன் என்னுதல். [வெறிகொள் சோதிமூர்த்தி] - "அருளோம்" என்றாலும் விடவொண்ணுத வடிவையுடையவனே! அதிபரிமளிதமாய் தேஜோரூபமானவடிவு. "ஸர்வகந்த:", "தேஜஸாம் ராசிமூர்ஜ்ஜிதம்", [அடியேன் நெடுமாலே] - சேர்ந்து குளிர்ந்த தண்ணீரை விடாயர்க்கு எட்டாதபடி வைப்பாரைப்போலே, அவ்வடிவிலே தோற்ற எனக்கு எட்டாதிருக்கிறவனே! என்பக்கல் வ்யாமோஹத்தைப் பண்ணினவனென்றுமாம். [கிறிசெய்தென்னை] - எனக்கு முன்புசெய்த தித்தனையும் விரகுஅடித்ததாம்இத்தனையிறே. அநந்யகதியாயிருக்கிறவென்னை ப்ரமிக்கும்படி ஒரு விரகுபண்ணி: அதாகிறது - பேறு உன்னதானபின்பு க்ருஷியும் உன்னதாக வேண்டாவோ என்கை. [புறத்திட்டு] உனக்கு அசலாம்படி விஷயங்களிலே தள்ளி. [இன்னங்கெடுப்பாயோ] - அநாதிகாலமிழந்தது போராதோ? உன்சுவடறிந்த பின்பும் உனக்குஅசலாகவோ? "அறிவிலேன்" என்றாலும், "அருளாய்" என்றாலும் கெடுக்குமித்தனையோ? "புத்திநாசாத் ப்ரணச்யதி" விஷயப்ராவண்யமென்றும், விநாசமென்றும் பர்யாயமிறே. [இன்னங்கெடுப்பாயோ] - பேறு அவனாலேயானால் இழவும் அவனாலே என்னலாமிறே; ஸ்தநந்தயப்ரஜை கிணற்றிலே விழுந்தால் "தாயார் தள்ளினாள்" என்னுமாபோலே. [பிறிதொன்றறியாவடியேன்] - அநந்யகதியாய் உன்கை பார்த்திருக்கிற நான். [ஆவி திகைக்கவே] - நெஞ்சு கலங்கும்படியாக.

ஈடு.—எட்டாம்பாட்டு. "அருளாய்" என்ற வாயோடே வந்தருளக்கண்டிலர்: தன்பக்கல் நின்றும்பிரித்து என்னைக்கைவிடப் பார்த்தானுகாதே யென்கிறார்.

[அறிவிலேனுக்கருளாய்] - "நின்னருளேபுரிந்திருந்தேன்" என்னுமாபோலே உன்னருளொழிய வேறொன்றறியாத எனக்கு அருளவேணும். "அவ்வருளல்லன வருளுமல்ல" என்றிறே இவரிருப்பது. "வையகத்துப்பல்லாரருளும்பழு" திறே. பொய்நின்ற ஞானத்தையுடையவெனக்கு ஞானப்பிரானை நீ க்ருபைபண்ணியருளாய். [அறிவாருயிரானாய்] - அறிவார்க்கு உயிரானவனே! என்னுதல்; அறிவாரை உயிராகவுடையவனே! என்னுதல். *ஜ்ஞாநீத்வாத்மைவ மேமதம்* என்கிறபடியே, *த்விதீயம் மே஽ந்தராத்மாநம்* என்கிறபடியே. [வெறிகொள்சோதி மூர்த்தி] - அருளாதொழிந்தாலும் விடவொண்ணுதவடிவழகு: *ஸர்வகந்த:* என்னுமதிறே. பரிமளத்தை யுடைத்தாய், நிரவதிகமான தேஜஸ்ஸையுடைத்தான வடிவழகையுடையவனே! [அடியேன்நெடுமாலே] - எனக்கு இப்போது எட்டாதிருக்கிறவனே! என்னுதல்; வடிவழகைக் காட்டி எனக்கு வ்யாமோஹத்தை விளைத்தவனே! என்னுதல். [கிறிசெய்து] - நீ இப்போது உதவாமையாலே, முன்பு செய்தவையெல்லாம் விரகடித்தாயென்று தோற்றுநின்றதுகிடாய்! [என்னைப்புறத்திட்டு] - பிராட்டியை அசோகவநிகையிலே வைத்தாப்போலே, பகவத்குணங்கள் நடையாடாத சப்தாதிவிஷயங்கள் நடையாடுகிற ஸம்ஸாரத்திலேபொகட்டு. [இன்னங்கெடுப்பாயோ] - முன்புஇழந்ததுபோராதோ? "ஸம்ஸாரம் த்யாஜ்யம்;" என்றும், "பகவத்குணங்கள் நன்று" என்றும் அறிந்தபின்பும் கெடுப்பாயோ? *புத்திநாசாத் ப்ரணச்யதி* இறே. [பிறிதொன்றுஇத்யாதி] - அநந்யகதியாய் அநந்யபரனுயிருக்கிற என்னை மநஸ்ஸு கலங்கும்படி கிறிசெய்து என்னைப்புறத்திட்டு இன்னங்கெடுப்பாயோ?

ஆவிதிகைக்க ஐவர்குமைக்கும்சிற்றின்பம்*
பாவியேனைப் பலநீகாட்டிப்படுப்பாயோ*
தாவிவையங்கொண்ட தடந்தாமரைகட்கே*
கூவிக்கொள்ளும்காலம் இன்னம்குறுகாதோ. (9)

ஈடு.—ஒன்பதாம்பாட்டில், கிறிசெய்து முடிக்கையாவது - வைஷயிகஸுகங்களைக்காட்டி உன் திருவடிகளில் வாராதபடி பண்ணுகையென்கிறார் [ஆவியென்று தொடங்கி] - மநஸ்ஸு கலங்க ஐந்திந்த்ரியங்களும் நலிவுசெய்யும்படியான சப்தாதிவிஷயாநுபவமாகிற க்ஷுத்ரஸுகத்தைக் காட்டி

அவற்றோடே பொருந்தாதபடியாய் அவற்றுக்குப்பாங்கானநிலத்திலே யிருக்கைக்குடலான பாபத்தைப் பண்ணின என்னை இன்னம் முடிக்கப்பார்க்கிறாயோ? [தாவியென்றுதொடங்கி] - த்வதேகதாரகனும் வைத்து உன்னைப்பெறாதே நான்முடியும் தசையானாலும் அநாயாஸேந நீ எல்லார்க்கும்கொடுக்கும் நிரதிசய போக்யமான திருவடிகளிலே அழைத்தருளும் காலம் அணித்தாகாதோ?

இ.—ஒன்பதாம் பாட்டில், "புறத்திட்டு இன்னங்கெடுப்பாயோ?" என்ற இடத்தை விவரித்துக் கொண்டு, உன்திருவடிகளிலேயழைத்துக்கொள்ளும் காலம் இன்னங்கிட்டாதோ? என்கிறார். [ஆவி திகைக்க] - நெஞ்சுகலங்கும்படி. [ஐவர் குமைக்கும்] - பஞ்சேந்த்ரியங்களும் விஷயங்களிலேமூட்டி நலியும்படியான. 'ஐவர்' என்று சேதநஸமாதியாலே சொல்லுகிறது, நலிவின் மிகுதியாலே. [சிற்றின்பம்] - பகவத்விஷயத்தை இழப்பிக்க வேண்டுவதுண்டாய், தன்பக்கல் அநுபாவ்யமொன்றும் இன்றிக்கேயிருக்கும் க்ஷுத்ரஸுகத்தை. [பாவியேனை] - அந்தமில்பேரின்பத்துக்கு இட்டுப்பிறந்துவைத்து சப்தாதிகள் நடையாடுகிற தேசத்திலேயிருக்கும்படி பாபத்தைப்பண்ணின என்னை. "வீவிலின்ப மிகவெல்லைநிகழ்ந்தனன்" என்றவரிறே இங்ஙனே சொல்லுகிறார். [பல] - "பைதல்கைக: நோய் முக்கைக:" என்று தம்மளவன்றியே அநேகமாயிருக்கை. [நீ காட்டிப்படுப்பாயோ] - ரக்ஷகனான நீ காட்டிமுடிக்கப்பார்க்கிறாயோ? சப்தாதி விஷயங்களினுடைய தர்சநமாத்ரத்திலே முடியும்படியாயிற்று, இவர் பகவத்குணங்களிலே நைந்தபடி. நாம் காணவிடில் முடியும்படியான விஷயங்கள், இவர்க்குக் காணில் முடியும்படியாயிற்று. [தாவி இத்யாதி] - வரையாதே எல்லார்க்குங்கொடுக்கும் நிரதிசயபோக்யமான திருவடிகளிலே யழைத்துக்கொள்ளுங்காலம் இன்னங் குறுகாதோ? விஷயாந்தரதர்சநமாத்ரத்திலே முடியும்படியானாலும் அணித்தாகாதோ? தாவிவையங் கொண்டவென்கிறது - உபாயாம்சம். தடந்தாமரைகளென்கிறது - உபேயாம்சம் 'கூவிக்கொள்ளும் காலம்' என்று தாம்சென்றுகாண்கையன்றிக்கே தானே அழைத்துக்காட்டுகை முறையாகையாலே கிட்டும் ப்ரகாரம் சொல்லுகிறது.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு உம்மைஇங்குக்கெடுத்ததென்? என்ன, 'கண்ட காட்சியிலே இழுத்துக்கொள்ளக் கடவதான விஷயங்கள் பரிமாறுகிறவிடத்தே வைத்தாயாகில், இனிக் கெடுக்கை யென்று ஒன்றுண்டோ? என்கிறார். என்னை இங்கேவைத்தபோதே, குழியைக்கல்லி மண்ணையிட்டு அமுக்கப்பார்த்தாயன்றோ?' என்கிறார். *தாநஹம் த்விஷத:க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந்! க்ஷிபாமி* என்னும்படியே.

[ஆவி திகைக்க] - இந்த்ரியங்களுக்குக் கந்தமான மநஸ்ஸு கலங்க [ஐவர் குமைக்கும்] - சேதநஸமாதியாலே சொல்லுகிறது, நலிவின்மிகுதியாலே. ஒரு துர்ப்பலனைப்பற்றி ஐஞ்சுபடர் நலியுமாபோலே, "என்விஷயத்தைக்காட்டு" என்று தனித்தனியே நலிகிறபடி. இப்படி நலிந்தாலும் ஆஸ்வாதமுண்டாகிலாமிறே. [சிற்றின்பம்]-முள்ளிப்பூவில் தேன்போலே. "அற்பசாரங்கள்"றே. தேவரையகற்ற, வேண்டுவதுண்டாய், அநுபவிக்கலாவது ஒன்றுஇன்றிக்கே யிருக்கை. [பாவியேனை] - அந்தமில்பேரின்பத்துக்கு இட்டுப்பிறந்த நான் சிற்றின்பத்திலே அகப்படும்படியாவதே. "வீவிலின்பமிகவெல்லைநிகழ்ந்தனன்" என்றவரிறே இங்ஙனே சொல்லுகிறார். [பல] - ஒன்றிலே கால்தாழப்பண்ணவல்ல விஷயமில்லையே. [நீகாட்டிப் படுப்பாயோ] - ரக்ஷகனான நீ காட்டி முடிக்கப்பார்க்கிறாயோ? [காட்டிப்படுப்பாயோ] - நாட்டார் "காணவிடிற்பிழையோம்" என்றிருக்கிறவிஷயம் இவர்க்குதர்சநமாத்ரத்திலே மோஹிக்கும்படியாயிருக்கிறதிறே. அகணமாவென்று சிலபக்ஷிகளுண்டு: அவை பிடிகொடாதொன்றுக்கும்; அவைபிடிக்கவினைத்தார் மூற்படப்பாடுவார்கள்; அதுகேட்டு நெஞ்சுநெகிழும்; அநந்தரம் பறையையடிப்பர்கள்: இதில்வன்மையாலே பட்டுக்கிடக்குமாம். அதுபோலே, இவர் பகவத்குணங்களிலே நைந்தபடி, இதரவிஷயதர்சநத்தாலே முடியும்படியானார். நெடுநாள் அநுபவித்துப் போந்தாலும், கடக்கவிருந்தவன்று "நாம்இன்னது அநுபவித்தோம்" என்று ஸ்மரிக்கைக்கு ஒன்றுஇன்றிக்கேயிருக்குமிறே; இங்ஙனேயிருக்கச்செய்தேயும் அவற்றில் ச்ரத்தைபண்ணுகிறது பாபாதிசயமிறே. [தாவியித்யாதி]-அப்யபரோக்ஷியிலே ப்ராப்யநிஷ்கர்ஷம்பண்ணுகிறார். [தாவிவையங்கொண்ட] - நினைத்தது தலைக்கட்டவல்லனென்னும் சக்தியோகஞ் சொல்லுகிறது

பூமிப்பரப்படங்கலும் அநாயாஸேந அளந்துகொண்டபடி. [தடந்தாமரைகட்கே] - போக்யதை யளவிறந்த திருவடிகளிலே. இத்தால் - ப்ராப்யஞ்சொல்லுகிறது. கூவிக்கொள்ளுங்காலம் என்கையாலே - ப்ராபகவேஷஞ் சொல்லுகிறது. இன்னம் குறுகாதோ என்கையாலே— ருசிவேஷஞ் சொல்லுகிறது. இதரவிஷயதர்சநம் முடியும்படியாய், உன்திருவடிகளில் போக்யதையறிந்து விடமாட்டாதவளவுபிறந்தபின்பு இன்னம் தாழ்க்குமத்தனையோ? பிள்ளானுடைய அந்திமதசையிலே நஞ்சீயர் சேவநியப்புக்கிருக்க, "கூவிக்கொள்ளுங்கால மின்னங் குறுகாதோ?" என்று பலகால்சொல்ல, இத்தைக்கேட்டுச்சீயர்அழ, "'சீயரே! நீர் கிடந்தழுகிறதென்? அங்குபோய்ப் பெறப்புகுகிறபேறு இதிலும் தண்ணிது' என்று தோற்றியிருந்ததோ" என்று பணித்தான்.

குறுகாநீளா இறுதிகூடாவெனையூழி*
சிறுகாபெருகா அளவிலின்பம்சேர்ந்தாலும்*
மறுகாலின்றிமாயோன்! உனக்கேயாளாகும்*
சிறுகாலத்தையுறுமோ அந்தோதெரியிலே. **(10)**

ஒ.—பத்தாம்பாட்டில், வைஷயிகஸுகத்தை "அல்பம், அஸ்த்திரம்" என்றிருந்தீராகில், அநந்தமாய் ஸ்த்திரமான கைவல்யபுருஷார்த்தத்தைப்பற்றினாலோவென்னில்; அத்தை உன்திருவடிகளில் கைங்கர்யமல்லாமையால் "வேண்டா" என்றேனத்தனை; அப்படியே கைவல்யமும் வேண்டேனென்கிறார். [குறுகாவென்று.] - இப்பாட்டுக்கு - ஸ்வத:ஆதல் காலாத்யுபாதிவசத்தாலேயாதல் ஸங்கோசவிகாஸங்களை யுடைத்தன்றிக்கே அபரிச்சேத்யமாயிருந்துள்ள ஆத்மாநுபவஸுகம் கைவந்தாலும் அந்த ஸுகமானது, பின்னைவரக்கடவதன்றிக்கே ஒரு க்ஷணமாத்ரம் உன்திருவடிகளிலுண்டான கைங்கர்ய ஸுகத்தை ஒக்குமோ அநுஸந்திக்கும்பக்ஷத்தில்? அத்யந்த விஸத்ருசங்களை ஒக்குமோ என்றுசொல்ல வேண்டின முசிப்பாலே அந்தோ! என்கிறார்.

இ.—பத்தாம்பாட்டில், வைஷயிகஸுகத்தை "அல்பம், அஸ்த்திரம்" என்றீராகில், அதிற்காட்டில் அதிகமாய் ஸ்த்திரமான கைவல்யத்தைப்பற்றினாலோ வென்னில்? 'அல்பம் அஸ்த்திரமென்றது, ஸ்வரூபகதநம்பண்ணின இத்தனை. ப்ராப்தமான கைங்கர்யத்தைப்பற்ற இரண்டும் அப்ராப்தம்' என்கிறார். [குறுகாநீளா] - ஸ்வதஸ் ஸங்கோசவிகாஸங்களில்லை. [இறுதிகூடா] - முடிவின்றிக்கே. [எனையூழிச் சிறுகாபெருகா]-காலோபாதிகமான ஸங்கோசவிகாஸங்களுமின்றிக்கேயிருக்கை. [அளவிலின்பம் சேர்ந்தாலும்]- இப்படி ஐச்வர்யத்திற்காட்டில் அதிகமாய் நித்யமான ஆத்மாநுபவஸுகத்தைப் பெற்றாலும். [மறுகாலின்றி] ஒருகால் லபித்தக்கால் மறித்தொருகாலின்றிக்கே. [மாயோன்] - அல்பகாலமானாலும் ஐச்வர்ய கைவல்யங்களைவிட்டுப் பற்றவேண்டும்படி ஆச்சர்யகுணயோகத்தை யுடையவனே! [உனக்கே யாளாகும் சிறுகாலத்தையுறுமோ] - உனக்கே யடிமையாகும் அல்பகாலத்தை ஒக்குமோ? "கைவல்யம்வேண்டா" என்கிறதும் அப்ராப்தியாலே: கைங்கர்யாபேக்ஷையும் ப்ராப்தியாலே. [அந்தோ] - கைங்கர்யத்துக்கும் இதரபுருஷார்த்தத்துக்கும்உண்டான நெடுவாசி உபதேசிக்கவேண்டுவதே! [தெரியிலே] - ஆராயப்புகில்; ஆராயாதொழிந்தபோது அதுவும் புருஷார்த்தம் என்றிருக்கலாம்.

ஈடு.—பத்தாம்பாட்டு. "ஐச்வர்யாதிகள் அல்பாஸ்த்திரங்கள்" என்று 'வேண்டா'' என்கிறீராகில், அவ்வளவன்றிறே; அநந்தமுமாய் ஸ்த்திரமுமாயிருக்குமிறே ஆத்மாநுபவம்! அத்தையநுபவிக்காலோ? என்ன, 'நீ சொன்னது உபபத்தியாகிற் செய்யலாயிற்று; "அவை அல்பம், அஸ்த்திரம்" என்றவிடம் - ஸ்வரூபகதநம் பண்ணினேனத்தனை; உன்னுடைய போக்யதையைச்சொல்லிற்றும் ஸ்வபாவமிருந்தபடி சொன்னேனத்தனை; "அது தீது" என்றுவிட்டும், "இது நன்று" என்று பற்றுகிறேனுமல்லேன்; உன்னைப்பற்றிற்றும் நீயாகையாலே, அவற்றைவிட்டதும் நீயல்லாமையாலே' என்கிறார். வகுத்த விஷயத்திலே குணஜ்ஞாநந்தர்யாதிகளும் உண்டாகப்பெற்றேனித்தனை.

[குறுகாநீளா] - ஸ்வத: குறுகுகையும் நீளுகையுமின்றிக்கே யிருக்கை. [இறுதிகூடா] - நிரவயவவிநாசமின்றிக்கே யிருக்கை. [எனையூழியித்யாதி] - காலோபாதியால் வரும் ஸங்கோச விகாஸங்களின்றிக்கேயிருக்கை. [அளவிலின்பஞ்சேர்ந்தாலும்] - இங்ஙனேயிருக்கையாலே முடிவின்றிக்கேயிருக்கிற ஆத்மாநுபவஸுகத்தை ப்ராபித்தாலும். [மறுகாலின்றி] - பகவதநுபவமானது ஒருகால் அநுபவித்தால் மற்றைப்போதின்றிக்கேயிருப்பது. [மாயோன்] - நீண்டின்றிக்கேயொழிந்தாலும் விடவொண்ணாத கல்யாணகுண யோகஞ்சொல்லுகிறது. [உனக்கேயாளாகும் சிறுகாலத்தையுறுமோ] - "உன் திருவடிகளிலடிமையே புருஷார்த்தம்" என்றிருக்குமது, மதித்தின்றியிலே யிருப்பது, அதுதான் க்ஷணகாலமாவது; இங்ஙனேயிருந்தாலும் அளவிலின்பஞ்சேருகை யுறுமோ? இத்தைப்பார்க்க. [அந்தோ] - பர்வத பரமாணுக்களுக்கு இருந்த வைஷம்யஞ் சொல்லும்படியாவதே! [தெரியிலே] - தோற்றிற்றுச்சொல்லிற் செய்யலாவதில்லை; ஆராய்ந்து சொல்லுமன்று இங்ஙனல்லதில்லை. இவ்வர்த்தம் உபதேசகம்யம் ஆவதே!

தெரிதல்நினைதல் எண்ணலாகாத்திருமாலுக்கு*
உரியதொண்டர்தொண்டர் தொண்டன்சடகோபன்*
தெரியச்சொன்ன ஓராயிரத்துளிப்பத்தும்*
உரியதொண்டராக்கும் உலகமுண்டாற்கே. (11)

ஓ.—நிகமத்தில், இப்பத்துங்கற்றவர்கள் எம்பெருமானுக்கு அந்தரங்க கிங்கரராவரென்கிறார், [தெரிதலென்று தொடங்கி] - ச்ரவணமநநாதிகளாலே பரிச்சேதிக்க முடியாத ச்ரிய:பதிக்கு அஸாதாரணதாஸ்ய பர்யவஸாநபூமியான ஆழ்வார். [தெரியவென்று தொடங்கி] - கரதலாமலகம் போலே யெல்லார்க்கும் அறிந்துகொள்ளலாம்படி அருளிச்செய்த ஆயிரம் திருவாய்மொழியிலும் இத்திருவாய்மொழி.

இ.—நிகமத்தில், இப்பத்தும் கற்றவர்கள் ஸர்வேச்வரனுக்கு அந்தரங்க கிங்கரராவரென்கிறார். [தெரிதலித்யாதி] - ச்ரவணமநநிதித்யாஸநங்களால் பரிச்சேதிக்கமுடியாத ச்ரிய:யபதிக்கு. ச்ரிய:பதியை க்ஷேத்ரஜ்ஞனால் பரிச்சேதிக்க முடியாதென்கை. [உரியஇத்யாதி] - ச்ரிய:பதிக்கு அஸாதாரணமான தாஸ்யத்துக்கு பர்யவஸாநபூமியான ஆழ்வார். இவருடைய அஹம்புத்தியிருக்கிறபடி. பயிலுஞ்சுடரொளிக்குப் பின்பு ததீயசேஷத்வபர்யந்தமாயாயிற்று, இவருடைய அஹமர்த்தம் இருப்பது. இவ்வளவு வருகையிறே - அநந்யார்ஹசேஷத்வமாவது. [தெரியச்சொன்ன]-இதரபுருஷார்த்தங்களில் அல்பாஸ்த்திரத்வாதிகளையும், பகவத்விஷயத்தினுடைய வைலக்ஷண்யத்தையும் வ்யக்தமாகச் சொன்ன. [உலகமுண்டாற்கு உரியதொண்டராக்கும்] - இத்திருவாய்மொழிதானே ஸர்வரக்ஷகனுக்கு அந்தரங்கபரிகர மாக்கும்.

ஈடு.—நிகமத்தில் - இப்பத்தும் கற்றவர்கள் ஸர்வேச்வரனுக்கு அந்தரங்க கிங்கரராவரென்கிறார்.

[தெரிதலித்யாதி] - ச்ரவண மநந நிதித்யாஸநங்களாலே பரிச்சேதிக்க முடியாத ச்ரிய:பதிக்கு *நாயமாத்மா ப்ரவசநேந* இத்யாதி-கேவலச்ரவணாதிகளுக்கு அவிஷயமாயிருக்கும்; அல்லாதபோது இவைதான் அநுபவமாயநுபவிக்குமிறே. [திருமாலுக்கு] - இதுக்கு அடி ச்ரிய:பதியாகை; அதிசீத ஸர்வாதிகவஸ்துவுக்கு அடையாளம். [திருமாலுக்குரிய தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன்] - ச்ரிய:பதியான ஸர்வேச்வரனுக்கு அநந்யார்ஹசேஷபூதரான ஆழ்வார். ஸம்ஸாரஸ்வபாவாநுஸந்தாநம் பண்ணின கொடுமையாலும், பகவத்விஷயத்திலே அவகாஹித்த கனத்தாலும், பெருவிடாயன் மடுவிலே விழுமாபோலே சேஷத்வத்தினுடைய எல்லையிலே விழுகிறார். இது இவருடைய அஹம்புத்தியிருக்கிறபடி. தேஹாத்மாபிமாநியானபோது தேஹத்திலே அஹம்புத்தியைப்பண்ணும்; "தேஹாத் வ்யதிரிக்தம்

ஒன்றுண்டு" என்று அறிந்தபோது ஆத்மாவிலே அஹம்புத்தியைப்பண்ணும்; தன்னை பகவச்சேஷபூதனாக அநுஸந்தித்தபோது ப்ரகாரமாத்ரத்திலே நின்று ஐச்வர்யாதிகளைக் கொண்டுபோம், "சேஷத்வமே புருஷார்த்தம்" என்று அறிந்தபோது தன்னை ததீயசேஷத்வ பர்யந்தமாக அநுஸந்திக்கக்கடவன். பயிலுஞ்சுடரொளிக்குப்பின்பு ததீயசேஷத்வபர்யந்தமா யாயிற்று, இவருடைய அஹமர்த்தம் இருப்பது. இவ்வளவுவருகையிறே - அநந்யார்ஹசேஷத் வமாவது. [தெரியச்சொன்ன இத்யாதி] - பகவத்வைலக்ஷண்யத்தையும், ஸம்ஸாரத்தினுடைய தோஷத்தையும் விசதமாகச்சொன்ன பத்தும். [உரிய தொண்டராக்கும் உலகமுண்டாற்கே] - ஸர்வரக்ஷகனான ஸர்வேச்வரனுக்கு அநந்யார்ஹசேஷமாக்கும் இத்திருவாய்மொழி. [உரிய தொண்டராக்கும்] - ஸம்ஸாரம் நன்றுமாய் பகவத்விஷயம் தீதானாலும் அத்தை விடமாட்டாத வர்கள்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

பத்தாந் திருவாய்மொழி—உலகமுண்ட : ப்ரவேசம்

ஒ.—பத்தாந்திருவாய்மொழியில், இப்படி ஸ்ரீவைகுண்டத்திலுங்கேட்கும்படி பெரியவார்த்தி யோடே கூப்பிடச்செய்தே ஸர்வரக்ஷகனானவன் தான்வந்து தோற்றியருளாளிட்டவாறே மிகவும் அவஸந்நரான ஆழ்வார், ச்ரிய:பதியாய் அயர்வறுமமரர்களதிபதியாய்வைத்துத் தன்னுடைய காருண்யவாத்ஸல்யாதி கல்யாண குணங்களாலே தேவமநுஷ்யாதி ஸஜாதீயனாய்வந்து திருவவதாரம் பண்ணி ஆச்ரிதருடைய விரோதிநிரஸநம் பண்ணி அவர்களை ரக்ஷிக்கக்கடவனாய், அதுக்கிடான பரிகரத்தை யுடையனாய், ஆச்ரிதர்க்குஅணித்தாகத் திருமலையிலே நின்றருளுவதுஞ்செய்து, தேச காலாதிகார்யாதி கார்ய விசேஷங்களை அபேக்ஷியாதே ரக்ஷகனாயிருந்துள்ள திருவேங்கடமுடையான் திருவடிகளிலேவிழுந்து "ஸ ப்ராதுச்சரணௌ காடம்" என்னும்படியாலே இளையபெருமாள் பிராட்டி முகமாகப் பெருமாளைச் சரணம்புக்காப்போலேதத்கைங்கர்யைகப்ரயோஜநராய்த் தம்முடைய ஆற்றாமை யாலே அநந்யகதிகராய், பெரியபிராட்டியாரைப் புருஷகாரமாகக்கொண்டு சரணம் புகுகிறார்.

இ.—பத்தாம்திருவாய்மொழியில், இப்படி பெரிய வார்த்தியோடே பரமபதத்திலே கேட்கும்படி கூப்பிடச்செய்தேயும் ஸர்வரக்ஷகனானவன் வந்து முகங்காட்டாமையாலே மிகவும் அவஸந்நரானவர், ச்ரிய:பதியாய் நித்யஸூரிகளுக்குத் தன் குணங்களை அநுபவிக்கக் கொடுத்துக்கொண்டிருக்கிற பெருமையையுடையனா யிருக்கச்செய்தேயும் ஸம்ஸாரிகள் நோவுபடுகிறபடியைக்கண்டு காருண்யவாத்ஸல் யாதிகளே ஹேதுவாக இதர ஸஜாதீயனாய் இங்கேவந்து அவதரித்து "பரித்ராணாய ஸாதூநாம்" என்கிற படியே ரக்ஷித்து "இதுக்குப் பிற்பட்டார் இழக்கவொண்ணாது" என்று பார்த்துத் திருமலையிலே நித்ய வாஸம்பண்ணி, தன் திருவடிகளை ஆச்ரயிப்பார்க்கு தேசகாலாதிகார்யங்கவிசேஷங்களை அபேக்ஷியாதே ருசியே அடியாக ஆச்ரயிக்கலாம்படி நிற்கிற திருவேங்கடமுடையான்திருவடிகளிலே, "ஸ ப்ராதுச் சரணௌ காடம் நிபீட்ய" என்று இளையபெருமாள் பிராட்டிபுருஷகாரமாக சரணம்புக்காப்போலே, தம்மாற்றாமையாலே அலர்மேல்மங்கை முன்னாகத் திருவேங்கடமுடையான் திருவடிகளிலே சரணம் புகுகிறார். சரண்யவிஷயத்தில் சரணாகதிக்கே ப்பலவ்யாப்தியாகையாலே, ஒன்பது பாட்டாலும் - அவனுடைய சரண்யதையைச்சொல்லி, பத்தாம்பாட்டிலே சரணம்புக்கு முடிக்கிறார்.

ஈடு.—கீழில் திருவாய்மொழியில் - ப்ராப்யவேஷமிருக்கும்படி குறைவறச்சொன்னார்; இத்திருவாய்மொழியில் - ப்ராபகவேஷம் குறைவறச்சொல்லுகிறார்; கீழில் அதில் உபாயப்ரஸங்கமுண்டேயாகிலும், ப்ராப்யப்ரதாநமாகக்கடவது; இதில் உபேயப்ரஸங்கம் உண்டேயாகிலும், ப்ராபகப்ரதாநம். கீழில் திருவாய்மொழி திருமந்த்ரம்போலே; இத்திருவாய்மொழி சரமச்லோகம்போலே. இரண்டும் ஒன்றிலேயுண்டிறே என்னில்?—அது, சக்தியோகத்தாலே வருமதிறே; அவஸ்தாந்தரங்களைப்பற்றிவரும் இரண்டும் இரண்டாயேயிருக்கக்கடவதிறே. பெரியஆர்த்தியோடே பரமபதத்திலே கேட்கும்படி கூப்பிடச்செய்தேயும் ஸர்வரக்ஷகனானவன் வந்து முகங்காட்டாமையாலே மிகவும் அவஸந்நரானவர், ச்ரிய:பதியாய் அவாப்தஸமஸ்தகாமனாய் உபயவிபூதியுக்தனாய் ஸமஸ்தகல்யாணகுணாத்மகனாய் *வைகுண்டேது பரே லோகே ச்ரியா ஸார்த்தம் ஜகத்பதி:, ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர்ப்பாகவதைஸ்ஸஹ* என்கிறபடியே-ஸ்ரீவைகுண்டத்திலே நித்யஸூரிகளுக்குக் காட்சிகொடுத்துக் கொண்டிருக்கக்கடவ ஸர்வேச்வரன், "பலரும் நம்மையிழக்க, நாம் நெடுங்கை நீட்டாக இருக்கவொண்ணாது" என்று பார்த்தருளி ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைப்பண்ணி ஸமகாலத்திலுள்ளார்க்குத் தன் குணசேஷ்டிதங்களைக் காட்டி அநுபவிப்பித்தும், அக்காலத்திலும் பிற்பாடரான ஸம்ஸாரிகளுக்கும் இழக்கவேண்டாதபடி ருசிஜனகனாய்க்கொண்டு திருமலையிலே நாய்ச்சிமாருடனே கூட நின்றருளினபடியைக் கண்டு; அதிகாரிநியதி, காலநியதி, அங்கநியதி என்றாப்போலே சொல்லுகிற நிர்ப்பந்தங்கள் ஒன்றுமின்றிக்கே ஆச்ரயிக்கலாம்படியிருக்கிற ஸௌசீல்யத்தைக் கண்டு, திருவேங்கடமுடையான் திருவடிகளிலே, பெரியபிராட்டியார் முன்னிலையாகத் தம்முடைய அநந்யகதித்வத்தை விண்ணப்பஞ்செய்து சரணம்புக்குத் தம்முடைய அத்யவஸாயத்தை அறிவிக்கிறார். கீழேயும் பலவிடங்களிலே - ப்ரபத்தி பண்ணினார்; அவ்விடங்களிலே - "தர்மிபுக்கவிடத்தே நிரூபகதர்மங்களும் புகக்கடவது" என்கிற ந்யாயத்தாலே, லக்ஷ்மீஸம்பந்தம் சொன்னார்; இங்கு அதுதன்னையே வாய்விடுகிறார். கீழில் ப்ரபத்திகள் திருமந்த்ரம்போலே; இது த்வயம்போலே. திருமந்த்ரத்திலும் லக்ஷ்மீஸம்பந்தத்துக்கு வாசகமான சப்தங்களுண்டாயிருக்கச்செய்தே, முக்தகண்டமாகச் சொல்லிற்று த்வயத்திலேயிறே; அதுபோலே இத்திருவாய்மொழி. *தாவதார்த்திஸ் ததா வாஞ்சா தாவந்மோஹஸ் ததா ஸுகம்* தாவதார்த்தி: - "இழந்தது பெறவேணும்" என்னுமதுவும் அவ்வளவே. ததாவாஞ்சா-அப்ராப்தவிஷயத்தில் பண்ணும் சாபலமும் அவ்வளவே. தாவந்மோஹ: - தேஹத்தையும் ஆத்மாவையும் ஏகீகரித்த்ய புத்தி பண்ணுகை. ததாஸுகம் - *ஏஷஹ்யேவாநந்தயாதி* - என்கிறதுக்கு விரோதமாய்வரும் ஸுகங்களும் அவ்வளவே. *யாவந்நயாதி சரணம் த்வாமசேஷாகநாசநம்* - ஐச்வர்யம் ஆத்மப்ராப்தி பகவத்ப்ராப்திவிரோதி இவையெல்லா முன்னைக்கிட்டுமளவேயிறே நிற்பதென்கிறது. இப்படியே தம்முடைய ஸகலவிரோதிகளும் போய்த் தம்முடைய ஸகலாபேக்ஷிதங்களும் கிடைக்கைக்கு ஒரு குறையில்லையென்று, ஸதா ஸந்நிஹிதனான திருவேங்கடமுடையான் திருவடிகளிலே சரணம் புகுகிறார். இனித்தான், சரணாகதி ப்பலப்ரதையாமிடத்தில் சரண்யன் பக்கலிலே பண்ணவும்வேணும்; தான் அதிகாரியாகவும் வேணும். வ்யதிரிக்தவிஷயங்களிலே பண்ணுமிடத்தில் அதுதானே ஹாநிஹேதுவாகக் காணாநின்றோமிறே. இங்ஙனேயிருக்கச்செய்தேயும் அவ்வோவிடங்களிலேயும் ப்பலிக்கிற இது, இவ்விஷயத்தில் பலியாநின்றதென்னுமிடம் கிம்புநர்ந்யாயஸித்தம். இனித்தான் அதிகாரியாமிடத்தில், மெய்யே அநந்யகதியாகவும் வேணும்; சரணம்புகா, ப்பலித்ததில்லையென்று, *அஸமர்த்தம் விஜாநாதி* என்பாராகாது. "மயர்வறமதிநலமருளினன்" என்று, அநந்தரத்திலே மடலெடுத்துக்கொண்டு புறப்படுவார் வேணும். பண்ணின ப்ரபத்திக்கு ப்பலம் தாழ்த்ததென்று வேறேபோக்கடியுடையார்க்குக் காரியமாகாதிறே. *ஸாகரம் சோஷயிஷ்யாமி பத்ப்யாம் யாந்து ப்லவங்கமா:* என்று அவன் தாழ்த்ததுவே ஹேதுவாக, ஜலதத்த்வத்தை வழித்துப் பொகட்டு மற்றைக்கரையுங்கொண்டு கார்யங்கொள்ளுகிறேன் என்றானிறே. *க்ஷமயா ஹி ஸமாயுக்தம்* - "'ஒரு பெண்பெண்டாட்டி எனக்கு என்றத்தை ஸ்வீகரிக்கையாவதென்?' என்று ராஜ்யத்தைப் பொகட்டுப் பொறுத்துப் போந்தார்; இங்கே வருணனை வழிவேண்டி அவன் முகங்காட்டிற்றிலன் என்று, சீறிக் காலைக் கையைக் கட்டாநின்றார்; இது இருந்தபடியென்?" என்றாப்போலேயிருந்தார்கள் முதலிகள்.

(க்ஷமைக்கு விஷயமுண்டு, சத்ருசஜநத்தில் க்ஷமையொண்ணாதென்கிறார்.) "இவன் வந்திலன்" என்று நாம் சிறவொண்ணாதபடி, வாலி புறப்படுகிறபோது தாரைவந்து கால்கட்டினவோபாதி, க்ஷமை வந்து நம்மைக் கால்கட்டாநின்றதென்றார்:— *மாம்* - *ஸுப்தமத்தகுபிதாநாம் ஸ்வபாவ ஜ்ஞாநம் த்ருஷ்டம்* என்று, கோபம் விளைந்த வநந்தரம் ஜிஹ்மத்தையுணர்ந்தார். "பிறர்கை பார்த் இருக்கும் குடிப்பிறப்பன்று" என்றிருக்கிறதில்லை; நம்மை "ஐயர்மகன்" என்று அறிகிறதில்லை. (*ஸுப்தேத்யாதி* - தந்தாம் ஸ்வபாவத்தை மறைத்து வர்த்தித்தவர்கள், ஸ்வப்நாதிதசையிலே ஸ்வஸ்வபாவாநுகுணம் பாஷிப்பர்களிறே; அப்படியிவரும் க்ஷத்ரியத்வத்தை யுணர்ந்தார்.) *அயம்* - மஹோததியென்கிற பெருமையை நினைத்திராநின்றது; தன்னைச் சிறுங்கித்திருக்கிற நம்மை அறிகிறதில்லை. *மகராலய:* - ஒரு அயோத்யாதிபதி கோஸலாதிபதிகளோடொக்கக் காணும் தன்னை நினைத்திருக்கிறது; தன்னை மீன்படுகுட்டமாக அறிகிறதில்லை. *அஸமர்த்தம் விஜாநாதி* - செவ்வைகெடப் பரிமாறினாரையும் ஒக்கவிட்டுக்காரியங்கொள்ளவல்லோமென்று அறிகிறதில்லை. இவ்வளவில் செய்ய வடுப்பதென் ? என்னில் - *திக் க்ஷமாம்* இப்போது க்ஷமையைவேண்டோம். விநியோகமுள்ளவிடத்தேயன்றோ கார்யங்கொள்வது ? கோபத்தோ பாதி, கார்யகாலத்தேயழைத்துக் காரியங்கொள்ளப் பார்த்தோம். அதுவென் ? இக்ஷ்வாகுவம் ச்யரா யிருப்பார்க்கு க்ஷமைகொண்டு கார்யங்கொள்ளவேண்டாவோ ? என்னில் *சத்ருசே ஜநே* - அத்தால் பெற்றதென் ? அது இங்கு ஜீவிக்கிறதில்லை. இதுக்கு இங்குள்ளாருடைய ஸம்பந்தமே ப்பனியா நின்றதே. ஒன்பதுபாட்டாலும் சரண்யன்படி சொல்லி, பத்தாம் பாட்டிலே சரணம் புகுகிறார்.

உலகமுண்டபெருவாயா உலப்பில்கீர்த்தியம்மானே*
நிலவும்சுடர்சூழொளிமூர்த்தி நெடியாயடியேனாருயிரே*
திலதமுலகுக்காய்நின்ற திருவேங்கடத்தெம்பெருமானே*
குலதொலடியேனுனபாதம் கூடுமாறுகூறாயே. (1)

ஒ.—முதற்பாட்டில், நீ போக்கி வேறொருகதியின்றிக்கே இருக்கிறஎன்னை, நீயே உன்திருவடி களிலே சேரும்படி பண்ணியருளவேணும் என்கிறார். [உலகமென்று தொடங்கி]-ரக்ஷ்யத்தின் அளவன்றிக் கேயிருக்கும் பெரும் பாரிப்பை யுடையையாய் அமர்யாதமாயிருந்துள்ள ரக்ஷகத்வாதி குணப்ரதையாலே லோகத்தையடைய அடிமைகொள்வதுஞ்செய்து, நித்யமாய் விலக்ஷணதேஜோரூபமான திருவடிவை யுடையையுமாய், அபரிச்சேத்யமான ஸௌந்தர்யாதிகளை யுடையையுமாயிருந்துவைத்து லோகத்துக் கெல்லாம் திலகமான திருமலையிலே நின்றருளி என்னை யடிமைகொள்வதுஞ் செய்து எனக்கு தாரகனானவனே! [குலதொலடியேன்] - குலப்ரயுக்தமாகப் பழையதாக அடிமையாயிருக்கிற நான்

இ.—முதற்பாட்டில், அநந்யகதியான நான் உன்னைவந்து கிட்டுவதொரு விரகு பார்க்கவேணு மென்கிறார். [உலகமுண்ட பெருவாயா] - ரக்ஷ்யத்தினளவன்றிக்கே யிருக்கும் பெரிய பாரிப்பையுடைய வனே! உன்னுடைய பாரிப்புக்கும் என்னுடைய ஆர்த்திக்கும் என்ன சேர்த்தியுண்டு? நீ யறிந்த ஸம்பந் தமும் ஆபத்துமே முதலாக ரக்ஷிக்குமவனே! ஒருலோகத்துக்காக ஆபத்துவரிலோ நோக்கலாவது! லோகத்துக்காக உண்டான ஆபத்து ஒருவனுக்கு உண்டானால் நோக்கலாகாதோ? ப்ரளயார்ண வத்திலேயோ நோக்குவது! ஸம்ஸாரார்ணவத்திலே அகப்பட்டாரை நோக்கலாகாதோ? அபேக்ஷியா தார்க்கோ உதவலாவது! அபேக்ஷித்தார்க்கு உதவலாகாதோ? சரீரவியோகத்துக்குவரும் ஆபத்தோ நோக்கலாவது! ஸத்தை அழியும் ஆபத்தில் நோக்கலாகாதோ? ஜலப்ரளயத்துக்கோ உதவலாவது! விரஹப்ரளயத்துக்கு உதவலாகாதோ? பிறரால்வரும் ஆபத்தோ நோக்கலாவது! உன்னால்வரும் ஆபத்து நோக்கலாகாதோ? [உலப்பில் கீர்த்தியம்மானே] - ஒன்றைச் சொன்னேனத்தனையல்லது, பஹுமுகமாக நீ ரக்ஷித்துப் படைத்த குண ப்ரதையாலே ஸர்வலோகத்துக்கும் ஸ்வாமியானவனே! இதுக்குமுன்பு ஆர்ஜித்த புகழையுடைய ஒருவ்யக்தியில் உதவாமையாலே யிழக்கக்கிடாய் புகுகிறாய். பொழி லேழுங் காவல்பூண்ட புகழையிறே யிழக்கப்புகுகிறது. ஸ்வரூபமொழிய குணத்துக்காயிற்று இவர்

தோற்றது. [நிலவும் இத்யாதி] - கடலிலே தள்ளினாலும் விடவொண்ணாதவடிவழகு; குணஹீநனானாலும் விடவொண்ணாத வடிவழகு. நித்யமாய் நிஷ்க்ருஷ்டஸத்த்வமாய் நிரவதிகதேஜோரூபமான விக்ரஹத்தை யுடையவனே! [சுடர்சூழொளி மூர்த்தி] - உள்ளுமண்ணீடாய்ப் புறம்பு ஒளியூட்டி யிருக்கையன்றிக்கே, உள்வாயோடு புறவாயோடு வாசியற ஒளியேயா யிருக்கிறபடி. [நெடியாய்] - அபரிச்சேத்யமான ஸௌந்தர்யாதிகளை யுடையவனே! "யதோவாசோ நிவர்த்தந்தே" என்கிற ஆத்ம குணங்களுக்கு எல்லை காணிலும், ரூபகுணங்களுக்கு எல்லையின்றிக்கே யிருக்கிறபடி. [அடியேனாருயிரே] - ஸ்வரூபத்தைப் பார்த்து வ்யதிரேகத்தில் தேறியிருக்கவொண்ணாதபடி பண்ணினவனே! ஆத்மாவையொழிய கேவல சரீரத்தை தரிப்பிக்கப்போமோ? [திலதம் இத்யாதி] - லோகத்துக்குத் திலதமான திருமலையிலே நின்றருளின உன் சேஷித்வத்தை எனக்கு அறிவித்து, உன்னையல்லது செல்லாதபடியும் பண்ணினவனே! ஸந்நிதியில்லாமல்தா னிழக்கிறேனோ? [குலதொலடியேன்] - குலமாகப் பழைய அடிமையாயிருக்கிற நான். இத்தால் - தம்முடைய யோக்யதை சொல்லுகிறாரல்லர்; அநந்யகதித்வம் சொல்லுகிறார். அநந்யார்ஹமான குடியிலுள்ளாரைப் புறம்பு கைக்கொள்ளுவா ரில்லையென்கை. [உன பாதம் கூடுமாறு] - உன் திருவடிகளைக் கிட்டி யடிமை செய்யும்படி; இவருடைய ஸாயுஜ்யமிருக்கிறபடி. [கூறாயே] - நம்மைப் பெறுவானென்றிரங்கி "மாசுச:" என்று அருளவேணும். உனக்கு ஓருக்தி; எனக்கு ஸ்வரூபலாபம்.

ஈடு.—முதற்பாட்டு. உன்னையொழிய வேறுகதி யின்றிக்கேயிருக்கிற என்னை உன் திருவடிகளிலே சேரும்படி பண்ணியருளவேணுமென்கிறார்.

[உலகமுண்ட பெருவாயா] - தேவர் திருவடிகளைக் கிட்டாதவன்று எனக்கு உண்டான தளர்த்தி பத்து ப்ரளயாபத்தோபாதி போராதோ? ரக்ஷ்யத்தினளவன்றிக்கே யிருக்கும் பாரிப்பையுடையவனே! உன் பாரிப்புக்கும் என்னார்த்திக்கும் என்ன சேர்த்தியுண்டு? நீயறிந்த ஸம்பந்தமும் ஆபத்துமே கைம்முதலாக ரக்ஷிக்குமவனன்றோ! ஒரு விபூதிக்காக ஆபத்து வரிலோ நோக்கலாவது! விபூதிக்காகவுண்டான ஆபத்து எனக்கு ஒருவனுக்குமுண்டானால் நோக்கலாகாதோ? ப்ரளயார்ணவத்திலே யழுந்துவாரையோ நோக்கலாவது! ஸம்ஸாரார்ணவத்தில் அழுந்துவாரை நோக்கலாகாதோ? அபேக்ஷியாதாரையோ நோக்கலாவது! அபேக்ஷித்தார்க்கு உதவலாகாதோ? சரீரத்துக்குவரும் ஆபத்தோ நோக்கலாவது! ஆத்மாவுக்குவரும் ஆபத்து நோக்கலாகாதோ? ஜலப்ரளயத்திலே அகப்படிலோ நோக்கலாவது! விரஹப்ரளயத்துக்கு உதவலாகாதோ? பிறரால்வரும் ஆபத்தோ நோக்கலாவது! உன்னால்வருமாபத்து நோக்கலாகாதோ? "சரணம்புகாதாரை ரக்ஷிக்கவேணும்" என்கிற நியதியுண்டோ! சரணம் புக்காரை ரக்ஷிக்கலாகாதோ? ரக்ஷித்துச்சமைந்து பின்னையும் "ஒன்றும்செய்யப் பெற்றிலோம்" என்றிருக்கக்கடவ உனக்கு என்னுடைய ரக்ஷணத்திலேயக்வயியாதே கைவாங்கியிருக்கை போருமோ? ப்ரளயாபத்தைரக்ஷித்துப் பின்பும் "நாம் இவற்றுக்குச்செய்தது ஒன்றுண்டோ?" என்று உடன்கிடந்தாரை மடிதடவி, பின்னை "என்செய்தோமானோம்" என்று தப்பாரைப்போலே இழவுபட்டிருப்பானொருவ னன்றோ நீ! [பெருவாயா] - ரக்ஷ்யத்தினளவல்லாத ரக்ஷகனுடைய பாரிப்பு இருக்கிறபடி. அவற்றின்பக்கலுண்டான ரக்ஷணத்தில் பாரிப்போபாதியும்போரும் தம்பக்கல் உபேக்ஷையென்றிருக்கிறார். [பெருவாயா] - த்ரௌபதி "சரணம்" என்ற உக்தியைத்தனையும் திருவுள்ளத்தே கிடந்து, ஸதஸ்ஸில் அவன் பரிபவித்த பரிபவத்தையும் பரிஹரித்து, துர்யோதநாதிகளையும் நிரஸித்து, தர்மபுத்ரன் தலையிலே முடியையும் வைத்து, இவள்குழலையும் முடிப்பித்துப் பின்பும் *ருணம் ப்ரவ்ருத்தமிவ மே* என்று குறைபவானாய், பரமபதத்துக்கு எழுந்தருளுகிறபோதும் *நாதிஸ்வஸ்த்தமநா:* என்று திருவுள்ளத்தில் புண்ணோடேயிறே யெழுந்தருளிற்று. [உலப்பில் கீர்த்தியம்மானே] - இவனுக்கு ரக்ஷகத்வம் வந்தேறியாய்ப்போய், பழையதுகொண்டு விளைப்பிடுகிறேனல்லேன்; இப்படி லோகத்தை ரக்ஷித்து ஆர்ஜித்தபுகழுக்கு முடிவில்லையென்கிறது. "பொழிலேழும் காவல் பூண்ட புக"ழிறே. இப்படிகளால் வந்த குணவத்தா ப்ரதையையுடைய ஸர்வேச்வரனே! *தஸ்ய நாம மஹத்யச:* என்றும், *யசஸ்ச்சைகபாஜநம்* என்றும் உபதேசகம்யமன்றிக்கே, *விதித:* என்று சத்ருகோஷ்டியிலும் இப்படி ப்ரஸித்தமாயன்றோ உன் புகழிருப்பது! பாதகத்தின்

ஸந்நிதியிலே பாத்யரும் ஜீவிக்கும்படியன்றோ உன்னுடைய ஆஜ்ஞையிருப்பது! அவன் நினைத்தவன்று பாதகந்தானே பாத்யத்துக்குப் பாலூட்டி வளராநிற்குமிறே. [உலப்பில்கீர்த்தியம்மானே] - *குணநாமாகரோ மஹாந்* என்றும், *ததா குணஹ்யநந்தஸ்ய* என்றும், *வர்ஷாயுதைர்யஸ்ய குணா நசக்யா:* என்றும், *பஹவோ ந்ருப கல்யாணகுணா:புத்ரஸ்ய ஸந்திதே* என்றும் சொல்லுகிற குணங்களுக்கு முடிவின்றிக்கேயிருக்கை. இவற்றை எல்லைகாண நினைத்தால் கரைகண்டுமீளவொண்ணாது; மதிக்ஷயத்தாலே மீளுமத்தனை. (ஸ்வரூபமொழிய குணத்துக்காயிற்றுத் தோற்றது.) [நிலவும் சுடர் சூழொளிமூர்த்தி] - ரக்ஷகனன்றிக்கே காதுகனானாலும் விடவொண்ணாத வடிவழகிருக்கிறபடி. [நிலவும்] - ஒருகர்மமடியாகவந்து, அது வற்றவற்றுகிற தன்றே. [சுடர்சூழொளி மூர்த்தி] - உள்ளு மண்பற்றுய்ப் புறம்பு ஒளியூட்டியிருக்கையன்றிக்கே, *தேஜஸாம் ராசிமூர்ஜ்ஜிதம்* என்கிறபடியே, தேஜ:பதார்த்தங்களைத் திரட்டிப்பிடித்தாற்போலே யிருக்கை. "உயர்வினையே தருமொண்சுடர்க்கற்றை" என்னக் கடவதிறே. ரஜஸ்தமஸ்ஸுக்களால் அளாவனன்றிக்கே சுத்தஸத்வமயமாய் நிரவதிக தேஜோரூபமாய், நெய் கிணுங்கினாற்போலே உள்ளும்புறம்பும் ஒக்க ஒளியேயாயிருக்கை. திருமேனிதன்னை *பஞ்சசக்திமயம்* என்றும் சொல்லாநின்றார்கள்; *ஷாட்குண்ய விக்ரஹம்* என்றும் சொல்லாநின்றார்கள்; ஆராய்ந்து பார்த்தால், அர்த்தஸ்த்திதான் பஞ்சசக்திமய மென்றே யிருக்கும்; ஷாட்குண்ய விக்ரஹமென்கிறது - திருமேனிதான் குணங்களுக்குத் திரோதாயகமன்றிக்கே ப்ரகாசகமாயிருக்கையாலே. *ரூபவாந் ஸுபகச்ஸ்ரீமாந் கந்தர்ப்ப இவ மூர்த்திமாந்* என்றும், *தாஸா மாவிரபூத்* என்றும் சொல்லுகிறபடியேயிறே யிருப்பது. [நெடியாய்] - கீழ்ச்சொன்ன குணங்களுக்கு எல்லையுண்டானாலும், ஸௌந்தர்ய லாவண்யாதிகளுக்கு எல்லைகாண வொண்ணாதபடியா யிருக்கை. *மஹாந்* என்கிறபடியே, தொட்ட தொட்ட துறைதோறும் தரைகாணவொண்ணாதிருக்கிறபடி. [அடியேனுயிரே] - வடிவழகையும் குணங்களையுங்காட்டி, என்னை வ்யதிரேகத்தில் ஜீவியாதபடி பண்ணினவனே! "திருவேங்கடத்தெம்பெருமானே" - என்றத்தோடொக்க இத்தைக்கூட்டக்கடவது, [திலதமுலகுக்காய்நின்ற] - சில ஸ்த்ரீகளுக்குப் பூர்ணமான ஆபரணம்போலேயாயிற்று பூமிக்குத் திருமலை. [திருவேங்டத்தெம்பெருமானே - அடியேனுயிரே] - திருமலையிலே நின்று என்னுடைய சேஷத்வ முறையை யறிவித்து, உன்னையல்லது செல்லாதபடி பண்ணினவனே! இவ்வளவும் வர, அவன்ஸ்வரூபம் சொன்னார்: மேல், தம் ஸ்வரூபஞ் சொல்லுகிறார்: [குலதொலடியேன்] - குலமாகப் பழையதான அடியேன், இத்தால், தமக்கு ஓர் ஆபிஜாத்யஞ் சொல்லுகிறாரல்லர்; தம்முடைய அநந்யார்ஹத்வஞ் சொல்லுகிறார். ஒருவற்கேயாயிருப்பாரை வேறு சிலர் நோக்குவாரில்லையிறே. [உனபாதம் கூடுமாறு கூறாயே] - ஸ்வரூபம் இதுவான பின்பு, ஸ்வரூபாநுரூபமான பேற்றைப் பெறும்படி பண்ணியருளாய். [அடியேனுனபாதம்கூடுமாறு] - சேஷபூதனானவன் உன்னைக்கூட என்னுமது "உனபாதம்கூட" என்றிறே. [உனபாதம் கூடுமாறு] - இவருடைய ஸாயுஜ்யமிருக்கிறபடி. [கூறாயே] - ஒருசொல் உனக்கு: எனக்கு ஸ்வரூபலாபங் கிடாய். அவன் ஒருவார்த்தை யருளிச்செய்ய, கல்பம் நீருமிறே இவர்க்கு. *மாசுச:* என்னவேணும்.

௨. கூறாய்நீறாய்நிலனாகிக் கொடுவல்லசுரர்குலமெல்லாம்*
சீறாவெரியுந்திருநேமிவலவா தெய்வக்கோமானே*
சேறார்சுனைத்தாமரைசெந்தீமலரும் திருவேங்கடத்தானே*
ஆறாவன்பிலடியேன் உன்னடிசேர்வண்ணமருளாயே. (2)

ஈ.—இரண்டாம்பாட்டில், ப்ரதிபந்தகங்கள் உண்டென்னில்; அவற்றையும் நீயேபோக்கி என்னை உன்திருவடிகளிலே சேர்த்தருளவேணுமென்கிறார். [கூறாயென்று தொடங்கி] – அயர்வறுமமரர்களதிபதியா யிருந்துவைத்து ஆச்ரிதர்க்காகத் திருவவதாரம் பண்ணியருளி ஸஜாதீயராய் வஸியாநின்ற அஸுரர்களுடைய குலங்கள் எல்லாவற்றையும் சிதிலமாய் தூளியாய் நிச்சேஷமாம்படி சீறி இரை

பெறாதே ஜ்வலியாநின்றுள்ள திருவாழியை வலவருகே தரித்தருளி அவ்வவதாரத்தில் உதவப் பெறாதார்க்கும் ஆச்ரயிக்கலாம்படி அறுக்கசமான சுனைகளிலே அக்நி ஜ்வலிக்கிறாப்போலே தாமரை மலர்ந்து விடவொண்ணாதபடி நிரதிசயபோக்யமான திருமலையிலேவந்து நின்றருளினவனே! [ஆறுவன் பிலென்றுதொடங்கி] - ஏதேனும்பெற்றாலும் பர்யாப்திபிறவாதபடியான ஸ்நேஹத்தையுடையனான நான் உன்திருவடிகளைப்பெறும்படி.

இ.—இரண்டாம்பாட்டில், ப்ரதிபந்தகங்களுண்டேயென்ன, உன்கையிலே திருவாழியிருக்க இவ்வார்த்தை சொல்லலாமோ ? என்கிறார் [கூறாய்நீறாய்நிலனாகி] - ச்சிங்கமாய் தூளியாய் வெறுந்தரை யாம்படி நிச்சேஷமாக்கி. ஆகியென்றது - ஆக்கியென்னுதல், ஆம்படியென்னுதல். [கொடுவல்லசுரர்] - ந்ருசம்ஸராய் அத்தைத் தலைக்கட்டிக்கொடுக்கும் வலியையுடையரான துஷ்ப்ரக்ருதிகள். [குல மெல்லாம்] - ஜாதியாக நிச்சேஷமாக முடித்து. [சீறும்வெரியுந் திருநேமிவலவா] - அவ்வளவில் பர்யவஸி யாதே, இரைபெறாத பாம்புபோலே சீறி ஜ்வலியாநிற்கிற திருவாழியை வலவருகேயுடையவனே! [தெய்வக் கோமானே] - கையுந்திருவாழியுமான சேர்த்தியழகைக்காட்டி நித்யவிபூதியை நிர்வஹிக்குமவனே! "அருளார் திருச்சக்கரத்தால் அகல்விசும்புநிலனுமி ருளார்வினைகெடச்செங்கோனடாவுதிர்." விரோதி களை நிரஸித்து நோக்கும் இவ்விபூதியை; கையுந்திருவாழியுமாயிருக்கிற சேர்த்தியழகைக்காட்டி அநு பவிப்பிக்கும் அவ்விபூதியை. உனக்கு அமைந்தாரில்லாமையோ நீ இதெல்லாம் செய்தது? நாம் இப்போது அஸந்நிஹிதரன்றோவென்னில்: திருமலையிலேவந்து ஸுலபனாய்நின்றிலையோ? [சேறார் இத்யாதி] - அறுக்கயமான சுனைகளிலே அக்நி ஜ்வலிக்கிறாப்போலே தாமரை பரப்புமாறப்பூக்கையாலே நிரதிசய போக்யமான திருமலையிலே நித்யவாஸம்பண்ணுகிறவனே! [ஆறுவன்பிலடியேன்] - சுனைகளறுக்கயமா கிறாப்போலேயாயிற்று இவர்க்கு அன்புமாறாதே இருக்கிறபடி. க்ரமப்ராப்திபற்றாதபடியான ப்ரேமமிறே. [உன்னடிசேர்வண்ணமருளாயே] - உன்திருவடிகளிலே சேர்ந்து அடிமை செய்யும்படி என்பக்கலிலே க்ருபைபண்ணியருளவேணும். நீ வந்து திருமலையிலே அவஸரப்ரதீக்ஷனாயிருக்க "உன்னைப்பெற வேணும்" என்னும் ருசி எனக்குஉண்டாயிருக்க, நான் கூப்பிடுகை மிகையன்றோ?

ஈடு.—இரண்டாம்பாட்டு, 'கூடக்கடவீர்: அதுக்கு ஒருகுறையில்லை; ஆனாலும், ப்ரதிபந்தகங்கள் கனத்திராநின்றதே' என்ன, 'உன்கையில் திருவாழியிருக்க, நீ இங்ஙனே சொல்லலாமோ? என்கிறார்.

[கூறாய் இத்யாதி] - நீ கைகழலாநேமியானாயிருக்கிறதுக்கும் என் ப்ரதிபந்தகம் கிடக்கைக்கும் என்ன சேர்த்தியுண்டு? அப்ரதிஹதமான சக்தியையுடைத்தான திவ்யாயுதங் களானவை இவனுடைய ஸகல பாபங்களையும் போக்கி உத்தரிப்பிக்கக் கடவதாயிருக்கும்; அவனாலே வருமவையும் பரிஹரிக்கவற்றாயிருக்கும். *ரக்ஷந்தி ஸகலாபத்ப்ய:* இறே; ஸகலசப்தத்துக்குள்ளே இவனுமுண்டே. இளிந்தான், பாபங்கள் *ஸம்ஸாரேஷு நராதமாந் க்ஷிபாமி* என்கிறபடியே இவன்பக்கல் தோஷங்கொண்ட அவன்நிக்ரஹத்தாலே வருமவையிறே; அங்ஙனே வருமவையும் பரிஹரிக்கக்கடவதாயிருக்கும் இவை. அதுக்கு அடி, அவன் அடியில் பண்ணின அநுக்ரஹத்தையே நினைத்திருக்கையாலே. இளிந்தான், "இவற்றின் தோஷங் கண்டு நாம் ஔபாதிகமாகச் சீறினபோதும் நீங்கள் கைவிடாதே, நாம் அடியிற்பண்ணின ஸ்வாபாவிகமான நம்முடைய ப்ரஸாதத்தைப்பார்த்து நீங்கள் ரக்ஷியுங்கோள்" என்று அவன் பக்கலிலே பெற்றுடையராயிருப்பர்களிறே. "அருளார் திருச்சக்கர"மிறே. பண்டே அவனைக் கைகண்டிருக்குமிறே. அவன் அருள்மறுத்தபோதும் இங்குத்தைஅருள் மாறாதேயிறே யிருப்பது. ஆகையாலே, அவன்ப்ரஸாதம் பெற்றவர்கள் திருவாழியில் கூர்மையையிறே தங்களுக்குத் தஞ்சமாக நினைத்திருப்பது. [கூறாய்நீறாய் நிலனாகி] - திருச்சரம்போலே *ச்சிங்கம் பிங்கம்* என்கிற பரும்பணிக்கு விட்டுக்கொடாத திருவாழி. திருச்சரத்துக்கு ஒரு குணஸ்பர்ச முண்டென்கிறார், இத்தைப்பற்ற. மூற்பட, இருதுண்டமாக்கிப் பின்னைநீறாக்கிப் பின்னை அது காணவொண்ணாதபடி வெறுந்தரையாக்கும். [ஆகி] - ஆக்கியென்னுதல். ஆம்படியென்னுதல். [கொடுவல்லசுரர்] - சீறுகைக்கு ஹேதுஇருக்கிறபடி. க்ரூரமான செயல்களைச் செய்யக் கடவராய், ஒருவரால் வெல்லவொண்ணாதபடி வலியையுடையரான அசுரர். [குலமெல்லாம்]-

ஒருவன் செய்த தப்பை ஜாதியாக முடிக்கவேண்டும்படி யிருக்கையாலே, ஒருவரையும் தப்பாமல் கோலிமுடித்தபடி. அநுகூலரோடு ப்ரதிகூலரோடு வாசியற இவன்வலையிலகப் படாதாரில்லை. ''வலைவாய்த் திருச்சக்கரத் தெங்கள்வானவனூர்'' என்று - அவன்வலையிலே யகப்பட்டுப் பின்பிறே மேல்போயிற்று. கூருய்நீருய் நிலனுகைக்குப் பண்ணின வ்யாபாரமே தன்னில் [சீறுமெரியும்] - இவை முடிந்துபோகச்செய்தேயும் கோண்ட குதைமாருதே, இரை பெறுப்பாம்புபோலே ஜ்வலியாநிற்கும். [திருநேமிவலவா] - 'நீ வலவருகே திருவாழியைத் தரித்திருக்க, நான் க்லேசத்தை தரித்திருப்பதே! [தெய்வக்கோமானே] இப்படி ஆச்ரிதர்க்காக வந்து படுகிறவன் ஆளில்லாதவனல்லனேவர்! அயர்வறுமமரர்களதிபதி யன்றேவர். அங்குக் கையுந் திருவாழியுமான அழகை யநுபவிப்பாரேயிறேயுள்ளது; இருதுண்டமாகவிடுகைக்கு ஆளுள்ளது இங்கேயிறே. இரண்டுவிபூதியையும் ஆளுவது திருவாழியாலே காணும்! ''அகல்விசும்பும் நிலனுமிருளார்வினைகெடச் செங்கோல்நடாவுதிர்'' என்கிறபடியே; அழகாலே அங்குள்ளாரை யாளும்; கூர்மையாலே யிங்குள்ளாரையாளும். அங்குக் கூர்மை குமரிருக்கும்; இங்கு அழகு குமரிருக்கும். அங்குள்ளார்க்குக் கைமேலே ஜீவநமாயிருக்கும்; இங்குள்ளார்க்கு விரோதியைப் போக்கிப் பின்னையாயிற்று ஜீவநமிடுவது. அங்குள்ளார் அவன்கையே பார்த்திருக்கையாலே, இவர்களுக்கு அதில்லையே. என்? நாம் இப்போது அலங்க்ஷிதரன்றோ என்னில்; [சேறார்சுனை யித்யாதி] - சேறுகனார்ந்திருந்துள்ள சுனைகளிலே தாமரைகளானவை செந்தீப்போலே மலரா நிற்கும். எண்ணெயாலே எரியும் விளக்கொழிய, நீராலே எரியும் விளக்குக்கண்டு அநுபவிக்கக் காணும் இவர் ஆசைப்படுகிறது. நீரிலே நெருப்பெழுந்தாற்போலேயிறேயிருக்கிறது! [ஆரு அன்பிலடியேன்] - இவர்க்கு நிருபகம் இருக்கிறபடி. சுனைகளில் நீர் வற்றிலாயிற்று இவருடைய அன்புவற்றுவது. மயர்வறமதிநலமருள அதுஅடியாக வந்த அன்பிறே. ஊற்றுடைத்தே. க்ரமப்ராப்தி பற்றுதபடியான ப்ரேமமிறே. [உன்னடிசேர்வண்ண மருளாயே] - உன் திருவடிகளிலே சேர்ந்து அடிமைசெய்யும்படி என்பக்கலிலே க்ருபை பண்ணி யருள வேணும். நீ திருமலையிலே நிற்கிற நிலைக்கு ப்ரயோஜநம்பெறப் பாராய்! என் அன்புக்கு இரையிடப் பாராய் !!

வண்ணமருள்கொளணிமேகவண்ண மாயவம்மானே*
எண்ணம்புகுந்துதித்திக்குமமுதே இமையோரதிபதியே*
தெண்ணலருவிமணிபொன்முத்தலைக்கும் திருவேங்கடத்தானே*
அண்ணலே!உன்னடிசேர அடியேற்காவாவென்னுயே. (3)

ஒ.—மூன்றும்பாட்டில், நீர் ஒருயத்நம்பண்ணுறிருக்க, நீர் சொல்லிற்றெல்லாம் செய்ய முடியுமோ? என்னில் ; உனக்குவிலக்ஷணரான போக்தாக்களுண்டாயிருக்க முன்னம் என்னைவிஷயீ கரித்தாப்போலே, கேவலக்ருபையாலே மேலும் என் அபேக்ஷிதம் செய்யவேணும் என்கிறுர். [வண்ண மென்று தொடங்கி] - நிறம்கண்டார் பிச்சேறும்படியான அழகிதான மேகம்போலேயிருக்கிற திரு நிறத்தையுடையையாய் அத்யாச்சர்ய குணசேஷ்டிதங்களையுமுடையையாய் அயர்வறுமமரர்களதிபதியாய் வைத்து தெளிந்து நிரதிசயபோக்யமான திருவருவிகள் மாணிக்கமும் பொன்னும் முத்துமாகக்கலந்து பார்ச்வங்களிலே எறட்டாநின்றுள்ள திருமலையிலே நின்றருளி என்னை அடிமைகொண்டருளுவதும் செய்து என்னுடைய ஹ்ருதயத்திலேபுகுந்து தித்திக்கிற நிரதிசயபோக்யனே ! [உன்னடிசேரவென்று தொடங்கி] - உன்னுடைய திருவடிகளைப் பெறும்படி அடியேனுக்கு க்ருபைபண்ணியருளவேணும்.

இ.—மூன்றும்பாட்டில், நீர் ஒருயத்நம்பண்ணுதிருக்க இது கிட்டுமோ? என்ன, உனக்கு விலக்ஷண ரான போக்தாக்களுண்டாயிருக்கத் திருமலையிலேவந்து உன்னுடைய ரஸ்யதையையும் சரண்யதையையும் அறிவித்தது நான் என்ன யத்நம் பண்ணி? அப்படியே மேலும் செய்யவேணுமென்கிறுர். [வண்ணமருள் கொளணி மேகவண்ணு] - நிறமானது கண்டார்நெஞ்சை யறிவு கெடுக்கும்படியான அழகிய மேகம் போலேயிருக்கிற திருநிறத்தை யுடையவனே! வண்ணமுண்டு - படி, ஸ்வபாவம்; அது அருள்

கொண்டிருக்கும்; கொள்வார் அளவன்றிக்கே கொடுக்கும் ஸ்வபாவனுயிருக்கையென்றுமாம். [மாயவம்மானே] - ஆச்சர்யமான குணசேஷ்டிதங்களையுடைய ஸர்வேச்வரனே! [எண்ணமித்யாதி] - உண்டால் ரஸிக்கையன்றிக்கே நினைக்க ரஸிக்கும் அம்ருதமானவனே! [இமையோரதிபதியே] - நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனுனவனே! தன் போக்யதையை அநுபவிப்பாரில்லாமை வந்தானே? [தெண்ணல் இத்யாதி] - நித்யஸூரிகள் நித்யாநுபவம் பண்ணுநிற்கவிறே என்னை விஷயீகரிக்கத் திருமலையிலேவந்தது? தெளிந்து நன்றானவருவி மணியையும் பொன்னையும் முத்தையும் கொழித்துக்கொண்டுவந்து எறட்டாநின்றுள்ள திருமலையை வாஸஸ்தாநமாக வுடையவனே! [அண்ணலே] - திருமலையிலேவந்து உன் சேஷித்வத்தை யறிவித்தவனே! [உன்னடிசேர] - உன்திருவடிகளை நான் கிட்டும்படி. [அடியோர்க்கு] - அடியோமுக்கு; முறையறிந்த எங்களுக்கு. [ஆவாவென்னுயே] : ஐயோ! ஐயோ! என்று க்ருபைபண்ணியருளவேணும். வடிவு அது, குணசேஷ்டிதங்கள் அவை, ரஸ்யதை அது, மேன்மை அது, ஸௌலப்யம்அது; இப்படிப்பட்ட உன்னோடு உண்டான முறையை அறிவித்தால் ஆறியிருக்கலாமோ?

ஈடு.—மூன்ருப்பாட்டு. "அருளாய்" என்றீர்; இங்ஙனே நிர்ப்பந்தபோதாக அருளப்போமோ? என்ன: வ்யதிரிக்தவிஷயங்களில் போகாதபடியான ஜ்ஞானலாபத்தைப்பண்ணித்தந்த உனக்கு, ப்ராப்திபண்ணித்தருகை பெரியபணியோ? யென்கிருர். என்னால் வந்த குறையறுத்த உனக்கு, உன்னால் வரும் குறையறுக்கை பெரியபணியோ?

[வண்ணம் இத்யாதி] - வண்ணமானது - ப்ரகாரமானது, அருள்கொண்டிருப்பதாய் தர்சனீயமான மேகம்போன்ற வடிவையுடையவனே! அன்றிக்கே, வண்ணமானது-வடிவானது கண்டார்நெஞ்சை இருளப்பண்ணக்கடவதாயிருக்கை என்றுமாம்; "மைப்படிமேனி" யிறே. அங்ஙனுமன்றிக்கே மேகத்தினுடைய அகவாய் கல்லென்னும்படியாயிற்றுத் திருமேனியிலுண்டான ப்ரஸாதாதிசயம் இருக்கிறபடி. [மாயவம்மானே] - வெறும் வடிவழகேயன்றிக்கே, ஆச்சர்யமான குணசேஷ்டிதங்களால் பெரியனானவனே! [எண்ணம்புகுந்து தித்திக்குமமுதே]-விலக்ஷண ஜந்மத்தே பிறந்து ஒரு ஸாதநாநுஷ்டாநம்பண்ணி அத்தாலே பெற்று புஜிக்கும்போது இனிதாகையன்றிக்கே, இன்னார்க்கு என்றன்றிக்கே மநோரதமாத்ரத்திலே தானே வந்துபுகுந்து போக்யமாகை. உள்ளுந்தோறும் தித்திக்கும் அமுதிறே! [இமையோரதிபதியே] - மதுவ்ரதம்போலே இவ்வம்ருதமே ஜீவநமாக இருக்குமவர்கள். [தெண்ணலருவியித்யாதி] - தெளிந்து நன்றான அருவிகளானவை, விலக்ஷணமான மாணிக்கங்களையும் பொன்களையும் முத்துக்களையும் கொழித்து எறட்டுகிற திருமலையிலே நின்றருளுகிற ஸர்வேச்வரனே! [அண்ணலே] - திருமலையிலே வந்துநின்று எனக்கு உன் சேஷித்வத்தை உதறிப்படுத்தவனே! 'இமையோர் அதிபதியாயிருந்துவைத்து வண்ணமருள் கொளணிமேகவண்ணனுய் மாயவம்மானுய்த் தெண்ணலருவி மணிபொன் முத்தலைக்கும் திருவேங்கடத்தானுய் அண்ணலாய்க்கொண்டு - எண்ணம்புகுந்து தித்திக்குமுதே' என்கிருர். [உன்னடிசேரவடியேற்காவாவென்னுயே] - கிட்டி நின்று முறையை யறிவித்த நீ, ப்ராப்தியையும் பண்ணித் தாராய்! உன் திருவடிகளை ப்ராபிக்கும்படி, அநந்யகதியான எனக்கு ஐயோ! ஐயோ! என்று தயையைப் பண்ணுய்! உன்னடி யன்றே? ப்ராபகமுமாய் ப்ராப்யமுமாய் போக்யமுமான திருவடிகளைச் சேரும்படி க்ருபை பண்ணியருளாய்!

ஆவாவென்றுதுலகத்தையலைக்கும் அசுரர்வாணாள்மேல்*
தீவாய்வாளிமழைபொழிந்தசிலையா திருமாமகள்கேள்வா
தேவா* சுரர்கள்முனிக்கணங்கள்விரும்பும் திருவேங்கடத்தானே*
பூவார்கழல்களருவினையேன் பொருந்துமாறுபுணராயே. (4)

ஈ.—நாலாம்பாட்டில், பண்டு பரிகல்பிதமான அவற்றில் ஒருபாயமும் என்பக்கலில்லை; 'எனக்கென்ன ஒருபாயம் கண்டு தந்தருளவேணுமென்கிருர். வரையாதே எல்லாருடைய ப்ரதிபந்தகங்களையும் போக்கி ரக்ஷிக்கும் ஸ்வபாவனுனநீ, என்னை உன்திருவடிகளிலே சேரும்படி பார்த்தருள

வேணுமென்கிறார் என்றுமாம். [ஆவா வென்று தொடங்கி] - ஐயோ ஐயோ என்று தயைபண்ணாதே லோகத்தை நலியும் அஸுரருடைய ஆயுஸ்ஸிலே நெருப்பை உமிழ்கிற சரவர்ஷத்தை வர்ஷிக்கும் ஸ்ரீசார்ங்கத்தையுடையவனே! [திருமாமகள்கேள்வா] - விரோதிநிரஸநம் பண்ணிற்று, பிராட்டிக்கு இனிதாகைக்கு என்று கருத்து. [தேவா] - அஸுரநிரஸநம் பண்ணுகையாலே வந்த வீரஸ்ரீயாலே விளங்காநின்றுள்ளவனே! [சுரரென்று தொடங்கி] - தங்களபிமதங்கள் கிடைக்குமிடமென்று தேவர்களும் ரிஷிகணங்களும் விரும்பும் திருமலையிலே நின்றருளினவனே! நிரதிசயபோக்யமான உன் திருவடிகளை, சுவட்டை யறிந்துவைத்தும் அநுபவிக்கப்பெறாதபடிக்கு ஈடான பாபத்தைப் பண்ணின நானும் பெறும்படி பண்ணியருளவேணும்.

இ.—நாலாம்பாட்டில், முன்பு பரிக்லப்தமான உபாயங்கள் என்பக்கலொன்றுமில்லை; நான் கிட்டுவதோருபாயம் வேறே தந்தருளவேணுமென்கிறார். வரையாதே எல்லாப்ரதிபந்தகங்களையும் போக்கி ரக்ஷிக்கும் நீ, உன்திருவடிகளை நான்சேருமாறுபார்த்தருளவேணும் என்றுமாம். [ஆவாஎன்னாது] - ஐயோ! ஐயோ! என்று தயைபண்ணாதே. ஈச்வரனுக்குக்கைக்கு வேண்டுவது, பராநர்த்தங்கண்டால் ஐயோ! என்கை; பராநர்த்தங்கள் ப்ரியமாயிருக்கை ஆஸுரலக்ஷணம். அப்படி ஐயோ வென்னாதே. [உலகத்தையலைக்கும்] - ஒருத்தனை நலிந்தால் அலம்பிறவாமையாலே, விபூதியாக அழிப்பார்கள். [அசுரர் வாணாள்மேல்] - அஸுரர்கள் உடம்பி லன்றிக்கே, அவர்கள்ஆயுஸ்ஸிலேயாயிற்று அம்பு தைப்பது. [தீவாய்வாளி] - "தீப்தபாவகஸங்காசை:". புறப்படும்போது அம்பாய், எதிரிகள்மேலே படும்போது அக்நிஜ்வாலையாய்ஆயிற்று தைப்பது. [மழைபொழிந்த] - "சரவர்ஷம் வவர்ஷஹ" என்று அம்புகளாலே பாட்டம்பாட்டமாக வர்ஷிக்கை. இப்படி வர்ஷிக்கும் ஸ்ரீ சார்ங்கத்தை யுடையவனே! [திருமாமகள் கேள்வா] - "பர்த்தாரம் பரிஷஸ்வஜே" என்று அவளுகக்கைக்காகவாயிற்று செய்தது; "நகச்சிந் நாபராத்யதி" என்னுமவளுங்கூடக் கூட்டுப்படும். [தேவா] - அப்போதை வீரஸ்ரீயால் வந்த ஒளியை யுடையவனே! விரோதியைப்போக்கிப் பிராட்டிஅங்கீகாரம்பெற்று நின்ற புகர் என்றுமாம். [சுரர்கள் இத்யாதி] - "நம்முடைய விரோதிகளைப்போக்கினவன் வர்த்திக்கிறதேசம்" என்று தேவர்களும் ருஷிகளும் தங்களபிமதம் கிடைக்குமென்று ஆதரிக்கிற திருமலை. பூவாலே பரிபூர்ணமான திருவடிகளென்னுதல், ஸுகுமாரமான திருவடிகளென்னுதல், திருவடிகளுக்கிட்டுப்பிறந்துவைத்து இழக்கும் பாபத்தைப் பண்ணினேன். ஸ்வரூபஜ்ஞாநத்தாலே, பத்துமாஸம் பிரிந்தார் பொருந்துமாப்போலே யிருக்கிறது இவர்க்கு. [புணராயே] - உன்னைக்கிட்டும்வழி கற்பிக்கவேணுமென்னுதல், நான் கிட்டும்படி பண்ணவேணுமென்னுதல்.

ஈடு.—நாலாம்பாட்டு, உன்னை ப்ராபிக்கைக்கு உறுப்பாக நீ கண்டுவைத்த ஸாதநங்கள் எனக்கு ஒன்றும் உடலாகிறனவில்லை; ஆனபின்பு, தேவரை நான் ப்ராபிக்கைக்கு எனக்கென்னத் தனியே ஒரு ஸாதநங் கண்டு தரவேணுமென்கிறார்.

நம்பிள்ளை சீயரை ஒருநாள் "பஞ்சமோபாயமென்று கொண்டு ஒன்றுண்டு, என்று சொல்லாநின்றார்கள்; நாட்டிலேயும் அங்ஙனேயிருப்பதொன்று உண்டோ?" என்று கேட்டருள "நான் அறிகிறிலேன்; இனி சதுர்த்தோபாயந்தான் பகவானேயாயிருக்க, வ்யோமாதீதஞ் சொல்லுவாரைப்போலே 'அவனுக்கும் அவ்வருகேயொன்றுண்டு' என்கையிறே, அது நான் கேட்டறியேன்" என்றருளிச்செய்தார். "ஆனால், 'ஆவா' என்கிற பாட்டு அருளிச்செய்யும்போது 'எனக்குத்தனியே ஒரு ஸாதநங்கண்டுதரவேணுமென்கிறார்' என்று அருளிச்செய்கையாயிருக்குமே" என்ன; "அதுவோ! அது உன்ப்ரதிபத்தியில் குற்றங்காண்; அதுக்கு இங்ஙனே காண் பொருள்; நீயும் உன்னையாயிருக்க நான் இங்ஙனேயிழப்பதேயென்கிறார்காண்" என்று அருளிச்செய்தார். *ஸாஹம் கேசக்ரஹம் ப்ராப்தா -த்வயிஜீவத்யபி ப்ரபோ* - நீயும் உன்னையாயிருக்க, என்மயிரைப்பிடித்துச் சிலர் நலியும்படி நான் பரிபூதையாவதே! உன்ஸத்தைக்கும் என் பரிபவத்துக்கும் என்ன சேர்த்தியுண்டு? *ப்ரபோ* நீயும் என்னோடொக்க ஸ்த்ரீயானாயாகில் நான் ஆறியிருக்கலாயிற்றே; நீ பரிப்ருடனாயிருக்கச்செய்தே நான் நோவுபடுவதே! நஞ்சீயர் ஸ்ரீ பாதத்திலே ஆச்ரயித்தானொருவன், "எம்பெருமானே உபாயமாகில் ப்ரபத்திகொண்டு

இங்குச் செய்கிறது ஒன்றுங் கண்டிலேன்'' என்ன, செவியைப்புதைத்து, ''நாதமுநிகள் தொடங்கி இவ்வளவும்வர நம் ஆசார்யர்கள் பரமரஹஸ்யமாக உபதேசித்து ஓராண்வழியாய்க் கொண்டு போந்த இத்தை, இதின்சீர்மையறியாத உனக்கு மஹாபாபியேன் இத்தைவெளியிடுவதே!'' என்று திருமுடியிலே அடித்துக்கொண்டு திருப்பள்ளியறையிலே புக்கருளினார். திவ்யமங்களவிக்ரஹமும் விக்ரஹகுணங்களும் திவ்யாத்மஸ்வரூபகுணங்களும் நித்யமுக்தர்க்கு ப்ராப்யமானாப்போலே, முமுக்ஷுவாய் ப்ரபந்நனான இவ்வதிகாரிக்கு த்வயசரீரமே ப்ராப்யமாயிருக்குமிறே. [ஆவாஎன்னாது] - ஈச்வரனுக்கு ப்ரியஞ்செய்கையாகிறது - அவன்விபூதியிலே க்ருபைபண்ணுகையிறே. நஞ்சீயர் ''ஒருவனுக்கு ப்பாரார்த்தம் அஸஹ்யமாயிருந்ததாகில், 'நமக்கு பகவத்ஸம்பந்தமுண்டு' என்று அறுதியிடலாம்; 'அது 'ப்ராப்தம்' என்று இருந்தானாகில், 'நமக்கு பகவத்ஸம்பந்தமில்லை' என்று தனக்கே கைவாங்கவமையும்'' என்றருளிச்செய்தார். பிறராகிறார்ஆரென்னில், ஸ்வவ்யதிரிக்தர். ஆனால் ப்ரதிகூலர்பக்கலிலும் க்ருபையைப்பண்ணவோ?' என்னில்: அப்படியேயன்றோ இவர்களுக்கு மதம். ''துர்வாஸனை கழிந்து அநுகூலராகப்பெற்றிலோம்'' என்று இருக்கவன்றோ அடுப்பது. அவன் *பதிவா ராவணஸ் ஸ்வயம்* என்றால், அவன்விபூதியிலுள்ள இவனுக்கு இத்தனையும் வேண்டாவோ? ஆனால், ''நண்ணாவசுரர்நலிவெய்த'' என்கிறவிடத்தில் அது எங்ஙனே ஸங்கதமாகிறபடியென்னில்:—அதுக்கென்? நண்ணாமையில்லைன்றவன்று வத்யனாகிறான். அக்நீஷோமீயஹிம்ஸையோபாதி; அதுதானே ஹிதமாகக்கடவதிறே. இவனுடைய தண்ணிய சரீரத்தைப்போக்கி நல்வழியே போக்குகிறானிறே. [ஆவாஎன்னாது உலகத்தையலைக்கும்] - ''ஐயோ, ஐயோ'' என்னவேண்டியிருக்க, அதுக்குமேலே நலியாநிற்பர்கள். ஒருவனோடே சாத்ரவம் பண்ணினானாகில், ''அர்த்தகாமநிமித்தமாகவிறே இதுவந்தது. இருவரும் சபலர்'' என்றிறே யிருக்கலாவது; அங்ஙனன்றிக்கே, உலகத்தை அலைப்பர்களாயிற்று. தன்னோடொக்க உண்டு உடுத்துத் திரிகிற இதுவே ஹேதுவாக நலியாநிற்பர்களாயிற்று. [அசுரர்] - அதுக்கு அடி அவர்கள் ஆஸுரப்ரக்ருதிகளாகையாலே. [வாணாள்மேல்] - இவர்கள் வீரக்கோலத்தால் வந்த ஒப்பனை குறியழியாதேயிருக்க, உயிரிலேநலிகை. அதாவது - இவர்கள்ஜீவநஹேதுவான காலத்தை நலிகை. [தீவாய்வாளி] - பெருமாள் தொடுத்து விடும்போதாயிற்று அம்பு என்றறியலாவது; படும்போது நெருப்புப் பட்டாப்போலேயிருக்கை. ஸ்ரீசார்ங்கத்தில் நாணியைக் கழிந்தபோதே, காலாக்நி கவடுவிட்டாப்போலே எரிந்துகொண்டு செல்லாநிற்கும். குணஹீநமானாலிருக்கும்படியிறே இது. *தீப்தபாவக ஸங்காசை:* - படும்போதிருக்கும்படி. *சிதைம்:* பட்டமைதெரியாதே தோளையுருவி அவ்வருகேவிழக் காணுமித்தனை. *காஞ்சநபூஷணை:* இவற்றுக்கு ஆகாரத்வயமுண்டாயிருக்கிறபடி. ''சரங்களாண்ட தண்டாமரைக்கண்ணனுக்கன்றி என்மனந்தாழ்ந்துநில்லாது'' என்கிறபடியே அநுகூலர்க்கு அகப்படுகைக்கும் அதுதானேயாயிருக்கிறபடி. *ந த்வாமிச்சாமி* இத்யாதி. இவ்வழகுக்கு இலக்காய் வாழ்ந்துபோகலாயிருக்க, எதிரிட்டு முடிந்துபோக நான் இச்சிக்கிறிலேன். நீ எண்ணியிருக்கிறது நான் அறிகிறிலேனிறே. இருத்திப்பிடித்தவில்லும், தெரித்துப்பிடித்த பகழியுமாய்க்கொண்டு நிற்கும்போது அபிராமராயிறே யிருப்பது: அவ்வழகைக்கண்டு அநுபவிக்கமாட்டாதே, தண்ணீர்குடிக்கக் கல்லின ஏரியிலே தலைகீழாகவிழுந்து முடிவாரைப்போலே, தயரதன்பெற்ற மரதகமணித்தடத்தை எதிரிட்டு முடிந்துபோக நான்காணமாட்டுகிறிலேன். [வாளிமழைபொழிந்தசிலையா] - *சரவர்ஷம் வவர்ஷஹ* என்கிறபடியே, பாட்டம்பாட்டமாக வர்ஷித்தபடி. [திருமாமகள் கேள்வா] - விரோதிகளைப் போக்கினதுகண்டு உகந்தணைக்குமவளைச் சொல்லுகிறது. *பர்த்தாரம் பரிஷஸ்வஜே* என்னுமவள். *தம் த்ருஷ்ட்வா* - வெறும்புறத்திலே ஆலத்திவழிக்கவேண்டும்படியான அழகையுடையவரை, எதிரிகளைவென்ற வீரக்கோலத்தோடே கண்டாள். சத்ருஹந்தாரம்* - தந்திருமேனியிலே ஒருவாட்டம் வாராமே, அவர்களைக் குற்றுவிராக்கி விடுவதுஞ்செய்யாதே, துண்டித்து அடுக்கினவரை. முன்பு திருவயோத்யையிலிருந்த நாள், இவர் வேட்டைக்குப் போனவிடத்தே இன்னபடியும் இன்னபடியும் பொருதார்; இன்ன புலியைக் குத்தினார், இன்ன ஸிம்ஹத்தைக் குத்தினார் என்னாப்போலே பந்துக்கள்

சொல்லக்கேட்கு மத்தனையிறே! இங்குப் பூசலுக்குப்புகுகிறபோதேபிடித்து மேலுள்ள வ்யாபாரங்கள் அடங்கலும் கண்டாள். *மஹர்ஷீணும் ஸுகாவஹம்* - ருஷிகளுடைய விரோதிகளைப்போக்கி, அவர்களுக்குக் குடியிருப்புப் பண்ணிக்கொடுத்தவரை. தங்கள் தபோ பலத்தாலே வெல்லலாயிருக்க, தங்கள் பரத்தைப் பெருமான்தலையிலே பொகட்டு முறையுணர்ந்து கொண்டிருக்குமவர்களுக்கு. *கர்ப்பபூதாஸ்தபோதநா:* - தந்தாம் கைம்முதலறிய மாறாதேயிருக்குமவர்கள். தபோதநராயிருக்கச்செய்தே கர்ப்பபூதராயிருப்பர்கள். தந்தாமுக்கென்ன இயற்றியுண்டாயிருக்கச்செய்தே கர்ப்பாவஸ்த்தையில் ஜநநியறிந்து ரக்ஷிக்குமத்தனையிறே; அப்படியே அவனையறிந்து ரக்ஷிக்கஇருக்குமவர்கள். அநுகூலரக்ஷணமும் ப்ரதிகூலநிரஸநமும் இவனுக்கு ப்ரியமாகச்செய்யு மவையிறே. *பபூவ* பதினாலாயிரம் முரட்டு ராக்ஷஸரோடே தனியேநின்று பொருகிற இத்தைக்கண்டு அஞ்சி. "இதென்னாய் விளையுமோ?" என்று ஸத்தையழிந்துகிடந்தாள்; இப்போது உளளானாள். *பூ ஸத்தாயாம்*. *ஹ்ருஷ்டா* - ஸத்தையுண்டானால் உண்டாமதுவும் உண்டாயிற்று. *வைதேஹீ* - உபாத்யாயர்கள்பெண்பிள்ளைகளுக்குச் செவியேற்றாலே ஒத்துப்போயிருக்குமாபோலே; வீரவாசியறியுங் குடியிலேபிறந்தவளிறே; ஒருவில்லுமுறித்த இதுக்கு உகந்து என்னைக்கொடுத்த எங்கள்ஐயர், பதினாலாயிரம் பேரைத் தனியேநின்று முடித்த இத்தைக்கண்டால் என்படுகிறார்தான். *பர்த்தாரம்* - முன்பு இவர்ஸுகுமாரராகையாலே "குழைசரக்கு" என்றும், "ஐயர்நம்மை இவர்க்கு நீர்வார்த்துக்கொடுக்கையாலே நாம் இவர்க்கு சேஷம்" என்றும் அணைத்தானத்தனை; "ஆண்பிள்ளை" என்று அணைத்தது இப்போது; *பரிஷஸ்வஜே* ராவணஸமராய், அவன் மதித்த வீரத்தையுடையராயிருப்பார் பதினாலாயிரம் பேரும் விட்ட அம்புகளடங்கலும் இவர்மேலேபட்டு, கண்டவிடமெல்லாம் யுத்தவடுவாயிறே திருமேனி கிடக்கிறது; அவ்வோவிடங்கள்தோறும் திருமுலைத்தடத்தாலே வேதுகொண்டாள். [திருமாமகள்கேள்வா] - உனக்கு சக்திவைகல்யம் உண்டாயிழக்கிறேனோ? புருஷகாரமில்லாமலிழக்கிறேனோ? [தேவா] - இவளணைத்தபின்பு திருமேனியிற்பிறந்த புகர். அன்றியே விரோதிகளைப்போக்குகையாலே [வடிவிலேபிறந்த காந்தியைச்சொல்லவுமாம்]. "நம்முடைய விரோதிகளைப் போக்கினவன் வர்த்திக்கிற தேசம்" என்று, தேவர்களும் ருஷிகளும் தங்களபிமதங் கிடைக்குமென்று ஆதரிக்கிற திருமலை; [சுரர்கள்; இத்யாதி] - அநுகூலர் அடையத் திரண்டு படுகாடு கிடக்கும் தேசம். [பூவார்கழல்கள்] - பூவாலல்லது செல்லாததிருவடிகளென்னுதல், பூவோடொத்த திருவடிகள் என்னுதல். [அருவினையேன்] - அவன் ப்ரதிபந்தகங்கள் போக்கவல்லனாயிருப்பது; எனக்கு ஆசை கரைபுரண்டிருப்பது, திருவடிகள் நிரதிசயபோக்யமாயிருப்பது; இங்ஙனேயிருக்கச் செய்தே, கிட்டியநுபவிக்கப்பெறாத பாபத்தைப் பண்ணினேன். [பொருந்துமாறுபுணராயே] - அசோகவனிகையிலே இருந்த பிராட்டியோபாதிகாணும் தம்மை நினைத்திருக்கிறது; [புணராயே] - உன்னைக்கிட்டும்வழி கல்பிக்கவேணுமென்னுதல், நான் கிட்டும்படி பண்ணவேணுமென்னுதல்.

புணராநின்றமரமேழ் அன்றெய்தஒருவில்வலவாவோ*
புணரேய்நின்றமரமிரண்டின் நடுவேபோனமுதல்வாவோ*
திணரார்மேகமெனக்களிறுசேரும் திருவேங்கடத்தானே*
திணரார்சார்ங்கத்துனபாதம் சேர்வதடியேனெந்நாளே. (5)

ஓ.—அஞ்சாம்பாட்டில், "உம்முடைய அபேக்ஷிதங்களெல்லாம் செய்கிறோம்" என்று எம்பெருமான் அருளிச்செய்ய, 'அது என்றுசெய்வது?' என்கிறார். [புணரா வென்றுதொடங்கி] - நேரொக்கநில்லாதே திரண்டுநின்ற மராமரம் ஏழையும் எய்தஏகவீரனானவனே! [புண ரென்று தொடங்கி] - நிர்விவரமாம்படிகூடிநின்ற யமளார்ஜுநங்களின் நடுவே உனக்குஒருநலிவின்றிக்கே போய் இஜ்ஜகத்தை யுண்டாக்கினவனே! [திணர்என்றுதொடங்கி] - செறிந்த மேகம் என்னலாம்படியான ஆனைகள் சேராநின்றுள்ள திருமலையிலேநின்றருளினவனே! மிகவும் வலியுடைத்தான ஸ்ரீ சார்ங்கத்தையுடைய உன்திருவடிகளை, கையிலே அவ்வில்லுண்டாயிருக்க, காலக்ஷேபம் பண்ணுவதே யென்றுகருத்து.

இ.—அஞ்சாம்பாட்டில், நீர் இங்ஙனே த்வரிக்கிறதென்? உம்முடைய அபேக்ஷிதம் செய்கிறோம் என்ன, 'அது என்று?' என்கிறார். [புணராநின்ற] - புணர்ந்துநின்ற. அம்புக்கு நேரோடவொண்ணாதபடி திரண்டுநின்ற. [மரமேழ்அன்று எய்த] - ரக்ஷணத்தில் சங்கைபண்ணினவன்று ஏழையும் ஓரம்பாலே யழித்த. அதிசங்கைபண்ண, மழுவேந்திக்கொடுத்து ரக்ஷித்தவன்கிடீர், ஆசைப்பட்ட என்னை அநாதரிக்கிறான்! அதிசங்கையைப்போக்கிப் பணிகொண்டவன் கிடீர் இரந்தஎன்னைப் பணிகொள்ளாதொழிகிறான். [ஒருவில்வலவா] - ஏகவீரனே! ஓ என்று - விஷாதாதிசயஸூசகம். [புணரேய்நின்ற] - புணர்ந்துநின்ற. இரண்டுங் கூடி "ஒன்று" என்னலாம்படி பொருந்திநிற்க, அதிலே இடங்கண்டுபோய் உள்ளேதப்புவித்து ஜகத்தையுண்டாக்கினவனே! [திணரார் இத்யாதி] - செறிந்த மேகமென்னலாம்படி ஆனைகள் திரள்திரளாக ஸஞ்சரிக்கும் திருமலை. ஆனையையும் மேகங்களையும் மலைக்குச்சிறப்பாகச் சொல்லக்கடவது. [திணரார்சார்ங்கம்] - மிக்க பலத்தையுடைய சார்ங்கம். சக்ரவர்த்திதிருமகனையொழிய எடுக்கவொண்ணாத வில்லு. [உனபாதம் இத்யாதி] - கையிலே வில்லிருக்க விரோதியுண்டு என்னவொண்ணாது; உன்னைப்பெறும் நாளையாகிலும் சொல்லவேணும்.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. நீர் இங்ஙன் த்வரிக்கிறதென்? உம்முடைய அபேக்ஷிதஞ் செய்கிறோமிறே என்ன, அதுஎன்று? என்கிறார்.

[புணரா இத்யாதி] - க்ஷத்ரியர் விற்பிடிக்கிறது ஆர்த்தத்வநி கேளாமைக்கன்றோ? *க்ஷத்ரியைர் தார்யதே சாபம் நார்த்தசப்தோ பவேதிதி* இலக்குக்குறிக்கப் போகாதபடி திரண்டுநின்ற ஏழுமராமரங்களை முஷ்டியாலும் நிலையாலும் நேர்நிற்கப்பண்ணி எய்த ஏகவீரனே! [ஓ]-ஓ என்று விஷாதாதிசய ஸூசகம். ரக்ஷணத்தில் அதிசங்கை பண்ணினாரையும் விச்வஸிப்பித்துக் காரியங்கொள்ளும் நீ, ஆசைப்பட்ட எனக்கு உதவவாராதொழிவதே! *ஸுக்ரீவச்சங்கிதச்சாஸீத் இத்யாதி* பெருமாளைக்கண்ட அன்றுதொடங்கி மராமரங்களைப் பிளக்க எய்யுந்தனையும், முடிய சங்கித்தேயிருந்தான். அந்த சங்காநிராகரணத்தைப்பண்ணி ரக்ஷித்தநீ, நிச்சங்கமாகப் பற்றின என்னை ரக்ஷிக்கவேண்டாவோ? [புணரேய் இத்யாதி] - ஒருநிரையாய்ச் சேர்ந்துநின்ற மருதுகளை ஊடறுத்து, ஒன்றிலே வெளிகண்டு போவாரைப்போலே போய், ஜகத்துக்கு வேர்ப்பற்றான உன்னைத் தந்தவனே! ப்ரளயகாலத்திலன்று ஜகத்தையுண்டாக்கிற்று; இன்றாயிற்று. அற்றைக்கு இவன்தான் உண்டாகையாலே உண்டாக்கலாம்; இங்கு நிரன்வய விநாசமிறே பிறக்கப்புக்கது. [முதல்வாவோ] - ஜகத்தையுண்டாக்கினவனே! ஜகத்துக்கு வேர்ப்பற்றான தன்னையிறே நோக்கித்தந்தது; *ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்* என்கிறபடியே. தான் உளனாகவே உண்டாமதிறே ஜகத்து. இப்படியிருக்கிற தன்னளவிலேவந்த ஆபத்தோ பரிஹரிக்கலாவது! [திணார் இத்யாதி] - திண்மைமிக்கிருந்துள்ள மேகமென்னும்படி ஆனைகளானவை சேராநின்றுள்ள திருமலையிலே நின்றருளினவனே! மேகங்களோடே ஸர்வதா ஸாம்யமுண்டாகையாலே, மேகங்களைக் கண்டபோது ஆனையென்னலாய், ஆனைகளைக்கண்டபோது மேகம் என்னலாயிருக்கும். "மதயானைபோலெழுந்த மாமுகில்காள்" என்னக்கடவதிறே. ஸமாநதர்மத்தால் வந்த ஸம்சயம் த்விசிஷ்டமிறே! விஷயங்களால்வரும் அந்யதாஜ்ஞாநத்தைக்கழித்து, அத்தேசத்தே பிறக்கும் அந்யதாஜ்ஞாநத்தை யாகாதே இவர் கணிசிக்கிறது. அங்குள்ளதெல்லாம் போக்யமாய்த் தோற்றுகிறபடி. [திணரார்சார்ங்கத் துனபாதம்] - திண்மை மிக்கிருந்துள்ள ஸ்ரீ சார்ங்கத்தையுடைய உன்னுடைய திருவடிகளை. *சரண்யம் சரணம்யாதா ராமம்தசர தாத்மஜம்* என்கிறபடியே சரண்யமான திருவடிகளை. சக்ரவர்த்திபிள்ளைகள் எடுக்குமத்தனைகாணும் வில்லு. [திணரார்சார்ங்கம்] - தன்வலியிலே விரோதிகளைத் தப்பாமல் அகப்படுத்திக்கொள்ளுகை. [உனபாதம்] - அவ்வலிக்கு அகப்படாதாரை முதலடியிலே யகப்படுத்திக்கொள்ளுமது. [சேர்வதடியேனெந்நாளே] - கையில் வில்லிருக்க இழக்கவேண்டா, விரோதியுண்டென்று; இனி உன்னைப்பெறும் நாளையாகிலும் சொல்லவேணும்.

எந்நாளே நாம்மண்ணளந்த இணைத்தாமரைகள்காண்பதற்கென்று*
எந்நாளும்நின்றிமையோர்களேந்தி இறைஞ்சியினமினமாய்*
மெய்ந்நாமனத்தால்வழிபாடுசெய்யும் திருவேங்கடத்தானே*
மெய்ந்நானெய்திஎந்நாள் உன்னடிக்களடியேன்மேவுவதே. (6)

ஒ.—ஆறும்பாட்டில், ஸ்ரீ வைகுண்டத்திலே எனக்கு அடிமைசெய்கையன்றோ எல்லார்க்கும் ப்ராப்யமென்னில், அங்குள்ளாரும் ஆசைப்பட்டு வந்தன்றோ திருமலையிலே உனக்கு அடிமைசெய்கிறது? அப்படியே நானும் திருமலையிலே புஷ்கலமாக அடிமைசெய்யப்பெறுவ தென்று? என்கிறார். அந்ய பரரான தேவர்களும் வந்து ஆசைப்பட்டு அடிமைசெய்யும்படி ஸ்ப்ருஹணீயமான உன்திருவடிகளை மெய்யாக நான்பெறுவது என்று? என்றுமாம். [எந்நாளென்று தொடங்கி] - ஸர்வஸுலபமான திருவடிகளை நாம் என்றோ காணப்பெறுவது என்று பேராசையோடேவந்து அயர்வறும்மமரர்கள் திரண்டு நின்று ஸ்தோத்ரம்பண்ணி அநந்யப்ரயோஜநமானமந:ப்ரப்ருத்யுபகரணங்களாலே அடிமை செய்யும்படியான திருமலையிலே நின்றருளினவனே! [மெய்ந்நானெய்தி] - ஜ்ஞாநாநுஸந்தாநமாத்ரமன்றிக்கே ஸாக்ஷாத்கரித்து.

இ.—ஆறும்பாட்டில், "எந்நாள்" என்கிறதென்? ஒரு தேசவிசேஷத்திலே வ்யவஸ்த்திதமன்றோ? என்ன, அங்குள்ளாரும்வந்து அடிமைசெய்கிற திருமலையிலே என்னை அடிமைகொள்ள வேணுமென்கிறார். [எந்நாளே இத்யாதி] - நித்யஸூரிகள் பாசுரமிருக்கிறபடி; - 'பரமபதத்திலே மேன்மையை அநுஸந்தித்திருக்கிற நாம், ஸர்வஸுலபமான திருவடிகளைக்கிட்டுவது என்றோ?' என்று. இங்குள்ளார் அங்குப் போவது மேன்மையை யநுபவிக்க; அங்குள்ளார் இங்குவருவது சீலகுணாநுபவம்பண்ண. விஷயமுண்டாகையாலே வ்யக்தமாக அநுபவிக்கலாவது இங்கே. ஸங்கோசமற்றவர்களுக்கும் "எந்நாள்" என்னும்படியிறே சீலகுணத்தில் ஏற்றம். [எந்நாளும் இத்யாதி] - காலமெல்லாம் நித்யஸூரிகள் நின்று ஸ்தோத்ரம்பண்ணியிறைஞ்சி. [இனமினமாய்] - கிண்ணகத்தில் இழிவாரைப்போலே திரள்திரளாக இழிந்து மெய்யாலும் நாவாலும் மநஸ்ஸாலும் வழிபடுவரென்னுதல்; மெய்யான நாவாலும் மநஸ்ஸாலுமென்னுதல், அநந்யப்ரயோஜநமான கரணங்களைக் கொண்டு ஆச்ரயிக்கும்படி திருமலையிலே ஸந்நிஹிதனானவனே! [மெய்ந்நானெய்தி] - மாநஸாநுபவமாத்ரமன்றிக்கே ஸாக்ஷாத்கரித்து என்றோ நான்உன்னைக் கிட்டுவது? எனக்கு ருசியுண்டாய், நீயும் ஸந்நிஹிதனாயிருக்க இழக்கவோ? "இப்பாட்டு - ப்ரஹ்மாதிகளைச் சொல்லுகிறது" என்பாருமுண்டு; மேலே அவர்களைச்சொல்லுகையாலே, அது உசிதமன்று.

ஈடு.—ஆறும்பாட்டு. "எந்நாள்" என்று ஸந்தேஹிக்கிறதென்? அதொரு தேசவிசேஷத்திலே வ்யவஸ்த்திதமன்றோ? என்ன, அங்குள்ளாரும் இங்கேவந்தன்றோ உன்னைப்பெற்று அநுபவிக்கிற தென்கிறார். அங்ஙனன்றிக்கே, ப்ரயோஜநாந்தரபரரான அந்தர ஜாதிகளுங்கூட அநந்ய ப்ரயோஜநரைப்போலே வந்து ஆச்ரயிக்க நிற்கிறவிடத்தே நான் இழந்துபோவதே என்கிறாராகவுமாம்.

[எந்நாளே நாம் மண்ணளந்த இணைத்தாமரைகள் காண்பதற்கென்று] - "எந்நாள் யான் உன்னை இனிவந்து கூடுவனே" என்று இங்குள்ளார் அங்கே அடிமைசெய்ய ஆசைப்படுமாபோலேகாணும், அங்குள்ளாரும் இவனுடைய ஸௌலப்யத்தைக்கண்டு அநுபவிக்கவேணும் என்று ஆசைப்பட்டுவரும்படி. ஸர்வஸுலபமான திருவடிகளை நாம் காணப்பெறுவது என்றோ? பூமியையடங்கலும் அநாயாஸேந அளந்துகொள்ளக் கண்ட காட்சியிலே தலைமேலே எடுத்து வைத்துக் கொள்ளவேண்டும்படியான போக்யதையையுடைய திருவடிகளை. [எந்நாளும்] - மற்றொருபோது வேறொன்றைப்பற்றிப் போகிறார்களன்றே. [இமையோர்கள் இத்யாதி] - நித்யஸூரிகள் காலமெல்லாம்நின்று ஸ்தோத்ரம்பண்ணிப் பின்னைத்திருவடிகளிலே விழுந்து, கிண்ணகத்தில் இழிவாரைப்போலே திரள்திரளாய். [மெய்ந்நா இத்யாதி] மநோவாக்காயங்களாலே ஆச்ரயியாநிற்பர்கள். அன்றியே, மெய்யான நாவாலும் மனத்தாலும்

வழிபடுவர்களென்றுமாம். அதாகிறது அநந்யப்ரயோஜநமான கரணங்களைக்கொண்டு ஆச்ரயியாநிற்பர்களென்றபடி. நித்யஸூரிகளானபோது, கைங்கர்யமாகிறது; ப்ரஹ்மாதிகளானபோது, உபாஸநமாகிறது. [மெய்ந்நானெய்தி இத்யாதி] - குறைவிஷ்காரத்தாலே மாநஸாநுபவத்தைப்பண்ணுவித்துப் பகட்டவொண்ணாது; நான் உன் திருவடிகளைப் பத்தும்பத்தாக வந்துகிட்டி, பின்னை விச்லேஷத்தோடே வ்யாப்தமாகாதபடி பொருந்தப்பெறுவதென்றோ? என்கிறார். ஓரடிவிடில் ஸத்தையற்றிறே இவர்க்கு இருக்கிறது.

அடியேன்மேவியமர்கின்றவமுதே இமையோரதிபதியே*
கொடியாவடுபுள்ளுடையானே கோலக்கனிவாய்ப்பெருமானே*
செடியார்வினைகள்தீர்மருந்தே திருவேங்கடத்தெம்பெருமானே*
நொடியார்பொழுதுமுனபாதம் காணநோலாதாற்றேனே. (7)

ஒ.—ஏழாம்பாட்டில், நான் நிஸ்ஸாதநனாயிருக்கச்செய்தே, உன்னுடைய போக்யதையை அநுஸந்தித்து உன்னையொழிய ஒருக்ஷணமாத்ரமும் தரிக்கமாட்டுகிறிலேனென்கிறார். [அடியேன் என்று தொடங்கி] - அயர்வறுமமரர்களதிபதியாய் வைத்து என்னை அடிமைகொள்ளுகைக்காகத் திருமலையிலே வந்து நின்றருளி என்னுடைய ப்ரதிபந்தகங்களைப் போக்கி ப்ரதிபக்ஷநிரஸநசீலனான பெரிய திருவடியை த்வஜமாக உடையயான வேண்டற்பாட்டாலும் அழகாலும் என்னை அடிமைகொண்டு எனக்கு நிரதிசய போக்யனானவனே!

இ.— ஏழாம்பாட்டில், நான் நிஸ்ஸாதநனாயிருந்துவைத்து உன்போக்யதையாலே க்ஷணமாத்ரமும் தரிக்கமாட்டுகிறிலேன் என்கிறார். "இமையோரதிபதியாய் - கொடியாவடுபுள்ளுடையானாய் - செடியார் வினைகள் தீர்மருந்தாய் - திருவேங்கடத்தெம்பெருமானாய் - கோலக்கனிவாய்ப் பெருமானாய் - அடியேன் மேவியமர்கின்றவமுதானவனே! உனபாதம் காணநோலாதே - நொடியார்பொழுதும் - ஆற்றேன்" என்று அந்வயம். அயர்வறுமமரர்களதிபதியாய்வைத்து ப்ரதிபக்ஷத்தை முடிக்கும் பெரியதிருவடியை த்வஜமாகவுடையனாய், தூறுமண்டின ஸாம்ஸாரிகதுரிதங்களைப் போக்கும் மருந்தாய், திருமலையிலே நித்யவாஸம்பண்ணி, உன்னுடைய ஸௌந்தர்யாதிகளாலே என்னை அநந்யார்ஹனாக்கி, ஸ்வரூபஜ்ஞாநமுடைய நான் அநந்யப்ரயோஜநமாக அநுபவிக்கிற அம்ருதமானவனே! தேஹத்தைப் பூண்கட்டும் அம்ருதத்தில் வாசிசொல்லுகிறார்; உன்திருவடிகளைக்கிட்டுகைக்கு ஸாதநாநுஷ்டாநம்பண்ணாதே, அநுஷ்டித்துப்பலந் தாழ்த்தாரைப்போலே கூப்பிடாநின்றேன்.

ஈடு.—ஏழாம்பாட்டு. "மெய்ந்நானெய்தி" என்கிற இந்த ஜ்ஞாநலாபம் உமக்கு உண்டாயிற்றிறே; அது ப்பலத்தோடே வ்யாப்தமாயல்லது நில்லாதிறே; ஆனபின்பு அவ்வளவும் நீர் ஆறியிருந்தாலோ' என்ன; 'அத்தனை க்ரமப்ராப்தி பார்த்திருக்கப்போகிறதில்லை உன் போக்யதை' என்கிறார். உன்றனை யாறியிருக்க நான் மாட்டுகிறிலேன்.

[அடியேன்மேவியமர்கின்றவமுதே] - தேவஜாதிகளுடைய உப்புச்சாறுபோலன்று; ஒருதிரளாய் அநுபவிக்குமதன்று; அநந்யப்ரயோஜந ரநுபவிக்கும் அம்ருதமாயிற்று! (மேவியமர் - அநந்ய ப்ரயோஜநமாய் அத்விதீயமாயிருக்கை. [மேவுகை - இதரத்யாகம். அமருகை - அர்ச்சாவதாரம்.) [இமையோரதிபதியே] - இது புஜிக்கைக்குக் கூட்டாவதொரு திரள் அங்கே உண்டாயிருக்கிறபடி. [கொடியாவடுபுள்ளுடையானே] - ப்ரதிபக்ஷநிரஸநத்தை ஸ்வபாவமாகவுடைய பெரியதிருவடியை த்வஜமாக வுடையவனே! [கோலக்கனிவாய்ப் பெருமானே] - அழகியதாய்க் கனிந்திருந்துள்ள திருவதரத்தின் சிவப்பைக்காட்டி என்னையடிமைகொண்டவனே! வாய்க்கரையிலே தோற்றார்காணும். ஆச்ரிதரை இவ்வழகை யநுபவிப்பிக்கைக்குக் கொடிகட்டிக்கொண்டிருக்கிறபடி. [செடியார்வினைகள் தீர்மருந்தே]- செடி - பாபம்; பாபத்தோடே பொருந்தின அஸத்கர்மங்களாலுண்டான து:க்கத்தைப்

போக்குகைக்கு மருந்தானவனே! அது புஜிப்பிக்கைக்கு விரோதிகளைப் போக்கும்படி. அன்றிக்கே, ஆறுமண்டின கர்மங்களைப் போக்குகைக்கு மருந்தானவனே! அவ்வம்ருதந்தானே காணும் மருந்தாகிறது. "மருந்தும் பொருளு மமுதமுந்தானே". "மருந்தே நங்கள் போக மகிழ்ச்சிக்கு" என்றும். அவன் தன்னை யொழிய வேறு மருந்துமில்லையே; மருத்துவனாய்நின்ற மாமணிவண்ணனிறே. [திருவேங்கடத் தெம்பெருமானே] - அவ்வம்ருதம், புஜிப்பார்க்கு மலைமேல் மருந்திறே. அவ்வம்ருதம், புஜிப்பார்க்குச் சாய்கரகம்போலே உயரத்திலே யணித்தாக நிற்கிறபடி. 'இமையோரதிபதியாய், கொடியாவடு புள்ளுடையானாய்-செடியார் வினைகள் தீர்மருந்தாய், திருவேங்கடத்தெம்பெருமானாய் - கோலக்கனிவாய்ப்பெருமானாய் - அடியேன்மேவி யமர்கின்றவமுதே!' என்கிறார். பட்டர், "நித்யத்திலே, 'அமுதுசெய்யப் பண்ணும்போது ஸ்தோத்ரத்தை விண்ணப்பஞ் செய்வது' என்று' என்ன ஸ்தோத்ரத்தை விண்ணப்பஞ்செய்வது?" என்ன, " 'அடியேன் மேவியமர்கின்றவமுதே,' 'பச்சைமாமலைபோல் மேனி' என்கிறபாட்டுக்கள்போலேயிருக்குமவற்றை விண்ணப்பஞ் செய்வது" என்றருளிச் செய்தார். [கெடியார்பொழுதும்] - நொடிநிறையும்ளவும். [உனபாதங் காணநோலாதாற் றேனே] - உன் திருவடிகளைக் காண்கைக்கு ஒருஸாதநாநுஷ்டாநம் பண்ணாதிருக்க, க்ஷணகாலமும் ஆற்றமாட்டுகிறிலேன். ஸாதநத்தைக் கண்ணழிவற அநுஷ்டித்து ப்பலந்தாழ்ப்பாரைப் போலே படாநின்றேன். அதில்லாமையிறே இவர் இங்ஙனே கிடந்துபடுகிறது. தனியே ஒருஸாதநம் அநுஷ்டிக்குமவனுக்கு, "அது தலைக்கட்டினவாறே பெறுகிறோம்" என்றுதல், "அதிலே சிலவைகல்யம்பிறக்கப்பட்டிறே ப்பலந்தாழ்த்தது" என்றுதல் ஆறியிருக்கலாம்; அவனே ஸாதநமான இவர்க்கு விளம்பித்தால் "அவன்க்ருபையும் ஏறிப்பாயாதபடியானேனே!" என்னும் பயமிறே யநுவர்த்திப்பது.

நோலாதாற்றேனுனபாதம் காணவென்று நுண்ணுணர்வின்*
நீலார்கண்டத்தம்மானும் நிறைநான்முகனுமிந்திரனும்*
சேலேய்கண்ணார்பலர்சூழவிரும்பும் திருவேங்கடத்தானே*
மாலாய்மயக்கியடியேன்பால் வந்தாய்போலேவாராயே. (8)

ஒ.—எட்டாம்பாட்டில், நோலாதுவைத்து "ஆற்றேன்" என்ன, பெறலாமோ? சிறிதுயத்நம் பண்ணவேண்டாவோவென்னில்; எத்தனையேனுமளவுடைய ப்ரஹ்மாதிகளும் ஸபரிகரமாகவந்து தங்களகிஞ்சநத்வத்தை ஆவிஷ்கரித்தன்றோ தங்கள் அபேக்ஷிதங்களைப்பெற்றுப்போவது? ஆனபின்பு, வந்து என்னுடைய ஆர்த்தியைத் தீர்த்தருளவேணும என்கிறார். [நோலாதென்று தொடங்கி] - உன்னுடைய திருவடிகளைக் காண்கைக்கிடாக ஸாதநாநுஷ்டாநம் பண்ணாதேயிருந்துவைத்து ஒன்றும் தரிக்கமாட்டுகிறிலேன் என்று விலக்ஷஜ்ஞாநனாய் ஜகத்ப்ரதாநனான நீலகண்டனும் அவனிலும் பூர்ணனானசதுர்முகனும் இந்த்ரனும். [சேலேயென்று தொடங்கி] - தயநீயமாம்படி தங்களுக்கு போக்ய பூதைகளான ஸ்த்ரீகளை முன்னிட்டுக்கொண்டு ஸமாச்ரயிக்கலாம்படி அவர்களுக்கு ஸுலபனாய்த் திருமலையிலேநின்றருளினவனே! கறுத்த நிறத்தோடே கண்டார் பிச்சேறும்படி ஸ்ரீவஸுதேவர்திருமகனாய் வந்து பிறந்தருளினாப்போலே என்னுடைய ஆர்த்தி தீர வரவேணும்.

இ.—எட்டாம்பாட்டில், நோலாதுவைத்து "ஆற்றேன்" என்ன, பெறலாமோவென்ன: அளவுடையரான ப்ரஹ்மாதிகளும் ஆகிஞ்சந்யத்தை முன்னிட்டன்றோ தந்தாம் அபேக்ஷிதம்பெற்றது! என்கிறார். [உனபாதங்காண - நோலாதாற்றேன்] - உன்திருவடிகளைக் கிட்டுகைக்கு ஸாதநாநுஷ்டாநம்பண்ணாதேயிருந்து வைத்து, உன்தானையொழிய ஆற்றமாட்டேனென்றாயிற்று, அவர்கள் தனித்தனியே சொல்லுவது. [நுண்ணுணர்வில்] - "ஸத்த்வாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞாநம்" என்று ஸத்த்வம்தலையெடுத்து தத்வஜ்ஞாநம் பிறந்த போது அவர்களும் இப்படியாயிற்றுசொல்லுவது: - "சரணம் த்வாமநுப்ராப்தாஸ் ஸமஸ்தா தேவதாகணா:". விஷத்தைக் கண்டத்திலேயடக்கின சக்தியையுடையனாய் அத்தாலே ஜகத்ப்ரதாநனாக அபிமாநித்திருக்கும் ருத்ரனும். அவனுக்கும் ஜநகனாய் அவனிலும் ஜ்ஞாநசக்திகளால் பூர்ணனான சதுர்முகனும்

த்ரைலோக்ய நிர்வாஹகனான இந்த்ரனும், "ஸ ப்ரஹ்மா ஸ சிவஸ் ஸேந்த்ர:" என்னக்கடவதிறே. [சேலேய்கண்ணார்பலர்சூழ] - "உமயா ஸார்த்தமீசாந:" என்கிறபடியே ஸ்த்ரீகள்கழுத்திலே கப்படத்தைக் கட்டி அவர்களை முன்னிட்டுக்கொண்டாயிற்று ஆச்ரயிப்பது. "ஸ்த்ரியோऽநுகம்ப்யாஸ் ஸாதூநாம்" என்று காளியன் ஸ்த்ரீகளை முன்னிட்டு சரணம்புக்காப்போலேயும், மஹாராஜர் தாரையை முன்னிட்டாப்போலேயும். [திருவேங்கடத்தானே] - அவர்களுக்கு ஆச்ரயிக்கலாம்படி ஸுலபனாய் வர்த்திக்கிறவனே! [மாலாய் இத்யாதி] - கரியகிறத்தோடே இடையரும் இடைச்சிகளும் பிச்சேற வந்துபிறந்தாப்போலே, என் ஆர்த்தி தீரவரவேணும். மாலாய் - மயங்கியிருக்கிற அடியேன் என்றுமாம்.

௮. —எட்டாம்பாட்டு. "உன்னைக் கிட்டுகைக்கு என்தலையில் ஒருஸாதநமில்லை" என்னாநின்றீர்; இதொருவார்த்தையோ! ஸாதநம் அநுஷ்டித்தார்க்கன்றிப் பலமுண்டோ?' என்ன, தந்தாமுடைய அபிமதஸித்தி ஸாதநாநுஷ்டாநத்தாலே என்றிருக்கும் ப்ரஹ்மாதிகளுக்கும், இப்படியல் பாசுரமிதுவன்றோ?' என்கிறார். தந்தாமுடைய ஆகிஞ்சந்யத்தை முன்னிடுமத்தனைபோக்கி, ஒன்று அநுஷ்டித்துப் பெறலாம்படியோ நீ யிருக்கிறது?

[கோலாநு இத்யாதி] - உன் திருவடிகளைக் காண்கைக்கு ஸாதநாநுஷ்டாநம்பண்ணாதே யிருந்துவைத்து உன்னையொழிய ஆற்றமாட்டேன் என்றாயிற்று, அவர்கள் தனித்தனியே சொல்லுவது. ஒருபாண யுத்தத்திலே தோற்றுப் போக்கடியற்றவாறே இங்ஙனே வந்து விழுவர்கள். ரஜஸ்தமஸ்ஸுக்கள் தலையெடுத்தபோது *ஈச்வரோऽஹம்* என்றிருப்பர்கள்; முட்டினவாறே, *க்ருஷ்ண க்ருஷ்ண மஹாபாஹோ ஜாநே த்வாம் புருஷோத்தமம்* என்று ஸ்தோத்ரம் பண்ணத் தொடங்குவர்கள்; *சரணம் த்வாமநுப்ராப்தாஸ் ஸமஸ்தா தேவதாகணா:* விஷத்தைக் கண்டத்திலே தரித்த சக்தியையுடையனாய் அத்தாலே ஜகத்ப்ரதாநனாக அபிமாநித்திருக்கும் ருத்ரனும், அவனுக்கும் ஜநகனாய் அவனிலும் ஜ்ஞாநசக்திகளால் பூர்ணனான சதுர்முகனும், த்ரைலோக்ய நிர்வாஹகனான இந்த்ரனும்; *ஸ ப்ரஹ்மா ஸ சிவஸ் ஸேந்த்ர:*. "இங்ஙனே யிருக்கச் செய்தேயும், அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையிலே இவர்களுடைய வாக்யங்களை ப்ரமாணமாகக் கொண்டு போராநின்றோமே யென்னில்; ஸத்த்வம் தலையெடுத்தபோது சொல்லுமவையெல்லாங் கொள்ளக்கடவோம். இவை கைக்கொண்டோமென்று, இவர்கள்தாங்கள் உத்தேச்யராகார்கள்; 'காக்கைவாயிலும் கட்டுரைகொள்வர்' என்றாண்டே" என்று பட்டர் அருளிச்செய்வர். ஓராழ்வார், 'பிதிருமனமிலேன்' - பேதிக்கப்பட்ட நெஞ்சையுடையேனல்லேன்; 'பிஞ்ஞகன்றன்னோடெதிர்வன்' - ருத்ரனெனக்குஸத்ருசன்; 'அவனெனக்கு நேரான்' - அவனும் எனக்குஸத்ருசனல்லன், அது என்னென்னில்; 'அதிருமீத்யாதி' - பகவத்விஷயத்திலே நெஞ்சை வைத்து அநுபவிக்கையே யாத்ரையான எனக்கு அந்யபரனானவன் ஒப்பாகப் போருமோ? 'குறைகொண்டு' - தன்வெறுமையைக் கைதொடுமானமாகக்கொண்டு; நான்முகன் குண்டிகை நீர்பெய்து' - மீனவறத் திருவடி சென்றுகிட்டிற்று; உபகரணம் பெற்றிலன். தர்மதேவதையானது த்ரவீபூதமாயிற்றது; அத்தைக்கொண்டு 'மறைகொண்டமந்திரத்தால் வாழ்த்தி' - வேதாந்தங்களில் பகவத் பரத்வ ப்ரதிபாதகமான மந்த்ரங்களைக்கொண்டு ஸ்தோத்ரம்பண்ணி; 'கறைகொண்டகண்டத்தான் சென்னிமேலேறக்கழுவினான்' - அவிசீதராய்த் திரியும் ப்ரஜைகள்தலையிலே ஸ்ரீபாததீர்த்தங்கொண்டு தெளிப்பாரைப்போலே. [நுண்ணுணர்வில்] - ஸத்த்வம் தலையெடுத்தபோதுசொல்லுவதுஇதுவே. ஸத்த்வாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞாநமிறே. [நீலார்கண்டத்தம்மானும்] - விஷத்தைக் கண்டத்திலே தரிக்கையாலே ஈச்வராபிமாநியான ருத்ரனும். [நிறை நான்முகனும்] - அவனுக்குங்கூட ஜநகனாய் ஸம்பூர்ணஜ்ஞாநனான ப்ரஹ்மாவும். [இந்திரனும்] - இவர்களோடொக்க ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களில் ஓரந்வயமின்றிக்கே யிருக்கச்செய்தே, *ஸப்ரஹ்மா ஸசிவஸ் ஸேந்த்ர:* என்றுகொண்டு ஒக்க எண்ணலாம்படியான இந்த்ரனும். [சேலேய் கண்ணாரித்யாதி] - தந்தாமுக்கு ஒருயர்த்தியுள்ளபோது ஸ்த்ரீகள்ஸந்நிதியில் ஓரெளிமை தோற்றவிரார்களிறே; ஆபத்து வந்தவாறே, மனாட்டிமார்கழுத்திலும் தங்கள் கழுத்திலும் கப்படங் கட்டிக்கொண்டு வந்து விழத் தொடங்குவர்கள். *உமயா ஸார்த்தமீசாந:* என்றும், *பர்த்ருபிக்ஷா ப்ரதீயதாம்* என்றும், *ஸமுத்ரஸ் ஸரிதாம்பதி:*

என்றும், "கிம் கோபமூலம்" என்றுஞ் சொல்லுகிறபடியே வந்து விழுவர்களிறே. [திருவேங்கடத்தானே] - அவர்களுக்கு ஆச்ரயிக்கலாம்படி ஸுலபனாய்வந்து நிற்கிறபடி. [மாலாய்மயக்கி] ''மயங்கல் கூடலும் கலவியும்;'' ''மாலாய், நான் மயங்கும்படிக்கீடாக வரவேணுமென்கிறா ரென்னுதல்; அன்றிக்கே, மாலாம்படி மயக்கிக்கொண்டு வரவேணுமென்கிறார்'' என்றுஞ் சொல்லுவர்கள்; அவையன்று பொருள். மாலென்று - கறுப்பாய், அத்தால் நினைக்கிறது - க்ருஷ்ணனென்கையாய் க்ருஷ்ணனாய்க்கொண்டு உன்குணசேஷ்டிதங்களாலே அவ்வவதாரத்தில் உள்ளாரைப் பிச்சேற்றிக்கொண்டு வந்தாப்போலே எனக்காகவும் ஒருவரத்து வரவேணும்; ''மாலாய்ப் பிறந்த நம்பியை மாலே செய்யும் மணாளனை'' என்றுஞ் சொல்லுகிறபடியே.

வந்தாய்போலேவாராதாய் வாராதாய்போல்வருவானே*
செந்தாமரைக்கட்செங்கனிவாய் நால்தோளமுதேயெனதுயிரே*
சிந்தாமணிகள்பகரல்லைப்பகல்செய் திருவேங்கடத்தானே*
அந்தோவடியேனுனபாதம் அகலகில்லேனிறையுமே. (9)

ஒ.—ஒன்பதாம்பாட்டில், தாம்அபேக்ஷித்தபோதே காணப்பெறுமையாலே, இப்போதே புன்னைக் காணுவிடில் ஒருக்ஷணமும் தரிக்கமாட்டேன் என்கிறார். [வந்தாயென்றுதொடங்கி] - அநாச்ரிதர்க்கு எளியாரைப்போலேயிருந்தே அறவரியையாய் ஆச்ரிதர்க்கு அரியாரைப்போலேயிருந்தே அறவெளியையுமாய் செந்தாமரைப்பூப்போலேயிருக்கிற அழகியதிருக்கண்களையும் சிவந்தகனிபோலேயிருக்கிற திருப்பவளத்தையும் நாலுதிருத்தோள்களையும் உடையையாய்க்கொண்டு எனக்கு நிரதிசயபோக்யனாய் எனக்கு தாரகனானவனே! [சிந்தாமணிகளென்று தொடங்கி] - பெருவிலையனான மாணிக்கங்களினுடைய ஒளி ராத்ரியைப் பகலாக்காநின்றுள்ள திருமலையிலேநின்றருளினவனே! அத்யந்த தயநீயதசாபந்நராய், நோவாலே அந்தோ! வென்கிறார்.

இ.—ஒன்பதாம்பாட்டில், தாம்அபேக்ஷித்தபோதே காணப்பெறுமையாலே, இப்போதே உன்னைக் காணுவிடில், தரிக்கமாட்டேனென்கிறார். [வந்தாய் இத்யாதி] - அநாச்ரிதர்க்குக் கைப்புகுந்தாப்போலேயிருந்தே அற அரியையாமவனே! ஆச்ரிதர்க்கு அரியைபோலேயிருந்தே கையாளாயிருக்குமவனே! அங்ஙனன்றியே, மநஸ்ஸிலே ஸந்நிஹிதனாய் பாஹ்யஸம்ச்லேஷத்துக்கு எட்டாதவனே! ''பாஹ்யஸம்ச்லேஷத்துக்கு எட்டாதவன்'' என்று நிராசனாயிருந்தால் மறக்கவொண்ணாதபடி மநஸ்ஸைவிடாதவனே! [செந்தாமரையித்யாதி] - சிவந்த தாமரைப்பூப் போலேயிருக்கிற திருக்கண்களையும்; சிவந்து கனிந்த திருவதரத்தையும், கல்பகதரு பணைத்தாப்போலே நாலுதோளையுமுடைய நிரதிசயபோக்யனே! வாத்ஸல்ய பிசுநமான கண்ணும் முறுவலும், அணைக்கைக்கு நாலுதோள்களுமாயாயிற்று இவ்வம்ருதமிருப்பது. [எனதுயிரே] - புண்டரீகாக்ஷமாய் சதுர்ப்புஜமாயாயிற்று இவர்ப்ராணனிருப்பது. [சிந்தாமணியித்யாதி]- பெருவிலையனான மணிகளுடையவொளி ராத்ரியைப் பகலாக்காநின்றுள்ள திருமலை. ஸக்ருத்திவாவான தேசம். [அந்தோ] - ஆற்றாமையும் அபேக்ஷையும் எனக்கே பரமாவதே. [அடியேன்] - ஸ்வரக்ஷணத்தில் ப்ராப்தியில்லாத பாரதந்த்ர்யத்தையுடைய நான். [உனபாதமகலகில்லேன் இறையுமே] - நிரதிசயபோக்யமான உன்திருவடிகளை க்ஷணகாலமும் அகல க்ஷமனாகிறிலேன்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. தாம் அபேக்ஷித்தபோதே காணப்பெறுமையாலே இப்போதே யுன்னைக் காணுவிடில் தரிக்கமாட்டேனென்கிறார்.

[வந்தாய்போலேவாராதாய்] - மாநஸாநுபவத்திலுண்டான கரைபுரட்சியாலே ''பாஹ்ய ஸம்ச்லேஷமும் பெற்றோம்'' என்றுகொண்டு த்ருப்திபிறக்கும்படியாய், அத்தை ''மெய்'' என்று அணைக்கக் கணிசித்தால் கைக்கெட்டாதபடியாயிருக்கை. [வாராதாய்போல் வருவானே] - ''ஒருகாலும் இட்டமாட்டோம்'' என்றிருக்கச் செய்தே கடுகக் கைப்புகுந்து கொடுகிற்குமென்கை; (அதாவது - ''பாஹ்யஸம்ச்லேஷத்துக் கெட்டாதவன்'' என்று நிரா

சனுயிருந்தால் மறக்கவோ) அன்றிக்கே, அநாச்ரிதவிஷயத்தில் ''கைப்புகுந்தான்'' என்று தோற்றியிருக்கச் செய்தே புறம்பாய், ஆச்ரிதர்க்கு 'இவன் கிட்டவரியன்' என்றிருக்கச்செய்தே உட்புகுந்திருக்கும்படியைச் சொல்லிற்றாகவுமாம். [செந்தாமரை யித்யாதி] - ஸகலதாபங்களும் ஆறும்படி குளிர்ந்த திருக்கண்களையுடையவனுமாய், சிவந்து கனிந்திருந்துள்ள திருவதரத்தையுடையனுமாய், கல்பகதரு பணைத்தாப்போலேயிருக்கிற நாலுதிருத்தோள்களையுடையனுமாய் போக்யனுமானவனே! [எனதுயிரே] - இவ்வடிவழகை என்னையநுபவிப்பித்து, வ்யதிரேகத்தில் நாலுனாகாதபடி பண்ணினவனே! [சிந்தாமணிஇத்யாதி] - விலக்ஷணமான ரத்நங்களினுடைய, பகருண்டு - ப்ரபை, அது அல்லைப் பகல்செய்யாநின்றதாயிற்று; இவா ராத்ரவிபாகம் அறுத்துக்கொண்டிருக்கை. ''மணிகளிஞெளியால் விடிபகலிரவென்றறிவரிதாய'' என்னக் கடவதிறே. இத்தால் நினைக்கிறது, *நகாலஸ் தத்ர வை ப்ரபு:* என்கிற தேசத்தேபோய் அநுபவிக்கும் அநுபவத்தை இங்கேயநுபவிக்கக்காணும் நினைவு. [அந்தோ]-போக்யமும் குறைவற்று அவன்தானும் ஸந்நிஹிதனாய், எனக்காசையும் மிகுத்திருக்க, கிட்டியநுபவிக்கப்பெறுதொழிவதே! என்கிறார். [அடியேனுனபாதம் அகலகில்லேனிறையுமே] - என் ஸ்வரூபத்தைப்பார்த்து என்தசையை புத்திபண்ணாய்; தரிப்பா யிருக்கச்செய்தே, அதுக்கு வர்த்தகமாகக் கண்ணைமாற வைக்கிலும் பொறுக்கமாட்டேன்.

அகலகில்லேனிறையுமென்று அலர்மேல்மங்கையுறைமார்பா*
நிகரில்புகழாயுலகம்மூன்றுடையாய் என்னையாள்வானே*
நிகரிலமரர்முனிக்கணங்கள்விரும்பும் திருவேங்கடத்தானே*
புகலொன்றில்லாவடியேன் உன்னடிக்கீழமர்ந்துபுகுந்தேனே. (10)

ஒ.—பத்தாம்பாட்டில், தம்முடைய அபேக்ஷிதம் சடக்கெனப் பெறுகைக்காக, பெரிய பிராட்டியாரைப் புருஷகாரமாகக்கொண்டு திருவேங்கடமுடையானைச் சரணம் புகுகிறார். [அகலகில்லேன் என்று தொடங்கி] - வெய்யிலிலேநின்று நிழலிலேயொதுங்கினார் சொல்லுமாபோலே க்ஷணமாத்ரமும் விச்லேஷிக்க க்ஷமையல்லேன் என்று நிரதிசயபோக்யையான பெரிய பிராட்டியார் நிரந்தரவாஸம் பண்ணுகிற திருமார்வையுடையையாய், பிராட்டியோட்டைப் பழக்கத்தாலே ஆச்ரிதரைக்கைவிடாத ஒப்பில்லாத குணப்ரதையையுடையையாய், எல்லாரோடும் அவர்ஜநீயமான ஸம்பந்தத்தையும் உடையையாய், உன்னையறியாதேயிருக்கிறஎனக்கு குணங்களை யறிவித்து அதநாலே என்னை நடத்துவதுஞ்செய்து திருநாட்டிலுள்ளாரும் விரும்பும் திருமலையிலே எனக்கு ஆச்ரயிக்கைக்கு எளிதாம்படிவந்து நின்றருளினவனே! [புகலென்று தொடங்கி] - சாஸ்த்ரங்களில் சொல்லுகிறஉபாயம் ஒன்றுமில்லாத நான் அநந்யப்ரயோஜநனுய்க்கொண்டு உன்திருவடிகளை உபாயமாகப்பற்றினேன். புருஷார்த்தஸாதநமாக என் தலையிலுள்ளவற்றையெல்லாம் தவிர்ந்து என்தலைக்கும் திருவடிகளுக்கும் நடுவு விளக்கு வாய் தெரியாதபடி செறிந்துபுகுந்தேன் என்றுமாம்.

இ.—பத்தாம்பாட்டில், தம்அபேக்ஷிதம் சடக்கெனத் தலைக்கட்டுகைக்கு, பிராட்டி புருஷகாரமாகத் திருவேங்கடமுடையான்திருவடிகளிலே சரணம் புகுகிறார். [அகலகில்லேன் இத்யாதி] - பகவத்விச்லேஷஹேது கர்மமாயிருக்க, தத்ஸ்பர்சமுமின்றிக்கே நித்யாநபாயிநியான இவள், ''இறையுமகலகில்லேன்'' என்பானென்? என்னில்; கர்மத்துக்கு அஞ்சினார் வார்த்தையேயாயிற்று, விஷய வைலக்ஷண்யத்திலே அவகாஹித்தார்வார்த்தையும்; ஹேதுபேதமேயுள்ளது. அவன்விஷயத்தில் போக்யதாதிசயத்தாலே விச்லேஷத்தை அதிசங்கித்துச் சொல்லுகிறாள். எதிர்த்தலை இவ்வார்த்தை சொல்லும்படியான ஸௌகுமார்யத்தையும் பருவத்தையுமுடையவள், அவ்வலரைமறந்து நித்யவாஸம் பண்ணும்படியான மார்வு படைத்தவனே! ஒப்பில்லாத வாத்ஸல்யத்தையுடையனாய் த்ரிவிதாத்மவர்க்கத்துக்கும் ஸ்வாமியாய், விமுகனானவென்னை இவ்வளவுபுகுர நிறுத்தின சீலகுணத்தையுடையனாய், ஒப்பின்றிக்கே இருக்கிற கைங்கர்யநிஷ்டரும் மநநசீலருமான நித்யஸூரிகள் ஆதரித்து வர்த்திக்கும் திருமலையிலே வர்த்திக்கிற

ஸௌலப்யத்தையுடையவனே! சாஸ்த்ரங்களில் சொல்லுகிற உபாயாந்தரங்களில் அந்வயமின்றிக்கே அநந்யார்ஹசேஷபூதனான நான்; இத்தால் - அநந்யகதித்வமும் ஸ்வரூபஜ்ஞாநமும் ப்ரபத்திக்குப் பரிகரமென்கிறது. [உன்னடிக்கீழ்] - விக்ரஹயோகஞ்சொல்லுகிறது. [அமர்ந்து] - செறிந்து, ஸஹகாரிவ்யவதாநமின்றிக்கேயொழிகை. [புகுந்தேனே] - போக்குவரவுண்டாய்அன்று. புத்திகதியாய் - அத்யவஸாயத்தைச் சொல்லுகிறது.

௧௦.—பத்தாம்பாட்டு. தம்முடைய அபேக்ஷிதம் சடக்கென ஸித்திக்கைக்காகப் பெரிய பிராட்டியாரைப் புருஷகாரமாகக்கொண்டு திருவேங்கடமுடையான்திருவடிகளிலே சரணம் புகுகிறார். ஆக, ஒன்பதுபாட்டாலும் - சரண்யன்ஸ்வரூபத்தைச் சொன்னார். இதில் தம்முடைய ஸ்வரூபத்தைச் சொல்லிச் சரணம்புகுகிறார். கீழே, 'அடியேன்' என்றும், 'அருவினையேன்' என்றும் தம்முடைய ஆகிஞ்சந்யத்தையும், சேஷத்வத்தையும், அவனுடைய சரண்யதைக்கு உறுப்பாகச் சொல்லிக்கொடுபோந்தார்; இங்கு, அதுதன்னையே பேற்றுக்கு உடலாகச் சொல்லிச் சரணம்புகுகிறார். இப்பாட்டுத்தன்னை - த்வயத்திற்பதங்களோடொக்க சோதித்துத் தலைக்கட்டக்கடவது. அதில் அர்த்தப்ராப்தமான அஹமர்த்தத்தை - இங்கு, அடியேனென்கிறது.

[அகலகில்லேனிறையுமென்று] - இது, அகன்றிருந்து சொல்லுகிற பாசுரமன்று; நித்யஸம்ச்லேஷம் பண்ணாநிற்கச்செய்தேயாயிற்று "இறையுமகலகில்லேன், இறையுமகலகில்லேன்" என்று உரைப்பது. நித்யாநுபவம் பண்ணுவார்க்கெல்லாம் பாசுரம் இதுவே. காட்டாருடைய அகிலகில்லேன்போலன்று, இவளுடைய அகிலகில்லேன்: அது கர்மாதீநமாக வருவது; இது விஷயாதீநமாக விளையுமது. [அலர்மேல்மங்கை] - அவன்தன்னை *நஜீவேயம் க்ஷணமபி* என்னப் பண்ணவல்ல போக்யதையையும் பருவத்தையுமுடையவள். பரிமளந்தான் ஒரு வடிவுகொண்டாற்போலேயிருக்கை. [உறைமார்பா] - இத்தால் - நித்யயோகஞ்சொல்லுகிறது. எனக்கு ஒரு காலம்பார்த்துச் சரணம்புகவேண்டும்படியாயோவிருக்கிறது? இத்தலையில் அபராதத்தையும் ஈச்வரஸ்வாதந்த்ர்யத்தையும் அநுஸந்தித்துப் பிற்காலிக்கவேண்டாதபடியாயிருக்கை. "ஒருநாள் பட்டர், பிள்ளையழகியமணவாளவரையர்க்கு த்வயமருளிச்செய்கைக்காக 'எல்லாரும்போங்கோள்' என்ன, நஞ்சீயரும் எழுந்திருந்துபோய், நம்மை இராய் என்றருளிச்செய்திலர் என்று வெறுத்திருக்க, அப்போதே 'சீயர் எங்குற்றார்?' என்று கேட்டருளித் தேடியழைத்துக் கூடவைத்துக்கொண்டிருந்துத்வயத்தைஅருளிச்செய்யாநிற்கச் செய்தே, அப்போது அருளிச்செய்தவார்த்தை" என்றுசீயர் அருளிச்செய்வர் "இவ்வாத்மவஸ்து என்று சேஷமாகில் அவன்சேஷியாகில் இங்குப் பிராட்டிஸம்பந்தத்தால் செய்கிறதென்?" கேட்க, "அது இருக்கிறபடி கேளீர்! ராவணனுக்கும் காகத்துக்கும் ஸம்பந்தமும் அநுஷ்டாநமுமொத்திருக்க, இனி ராவணன் சாபத்தாலே கிட்டமாட்டாதேயிருப்பதொன்றுண்டிறே; அங்ஙனன்றிக்கே, ஜநகிபக்கல் அபராதத்தில் கைதொடனாயிருக்கத் தலைகொண்டு தப்பினானிறே, அவள் ஸந்நிதியுண்டாகையாலே. அவள் கடக்கவிருக்கையாலே ராவணன் தலையறுப்புண்டான்." போக்கற்றுச் செயல்மாண்டு நின்றநிலை யவனுக்கும் ஒக்குமிறே; இங்ஙனேயிருக்கச்செய்தேயும் கார்யமாயிற்றதில்லையிறே, அவனுக்குப் பிராட்டிஸந்நிதியில்லாமையாலே. இனித்தான், மாதாவும் பிதாவுமானால் பிதாவைப்போலன்றிறே, ப்ரஜைகள் விஷயத்தில் மாதாஇருக்கும்படி; இவன்செய்தகுறை தான் காணக்கண்ணிட்டிருக்கையன்றிக்கே, பிதாவின்பக்கலிலும் மறைத்துக்காட்டுவாளொருத்தியிறே. ஆகையிறே உத்தரார்த்தத்தில் - அவனோடொப்புச்சொல்லி, பூர்வார்த்தத்தில் - புருஷகாரமாகையாகிற நீர்மையில் ஏற்றஞ் சொல்லுகிறது. தொட்டாரைத்தொட்டு *நகச்சிந்நாபராத்யதி* என்னக் கடவ இவள், "நம்மையொருகார்யத்திலே ஏவுவதுகாண்" என்று அவஸரப்ரதீக்ஷையாயிருக்குமவனைப் பெற்றால் விடாளிறே. தன்வார்த்தை கேளாதார்க்குங்கூட *மித்ரமௌபயிகம் கர்த்தும்* என்னக்கடவ இவள் தன்முகம்பார்த்து வார்த்தைகேட்குமவனைப் பெற்றால் விடாளிறே. *தாஸீநாம் ராவணஸ்யாஹம் மர்ஷயாமீஹ துர்ப்பலா* என்றாளிறே. திருவடி, "ராக்ஷஸிகளை என்

கையிலேகாட்டித்தரவேணும்'' என்ன, ''பிறர்கண்குழிவு காணமாட்டாத துர்ப்பலைகாண்'' என்றருளிற்றே. ராவணனை பட்டானாகில், பெருமாள் விஜயத்தோடே நின்றாராகில், திருவடி வந்து முன்னே நின்றானாகில், வேறொரு தௌர்ப்பல்யமில்லையிறே; இனி தௌர்ப்பல்யமாவது பிறர்நோவு காணமாட்டாமையிறே. [நிகரில்இத்யாதி] - அதுக்கு அநந்தரபதத்தில் அர்த்தஞ் சொல்லுகிறது. ''தாமரையாளாகிலும் சிதகுரைக்கின்மேல் என்னடியாரது செய்யார்'' என்னும் குணாதிக்யஞ்சொல்லுகிறது. [உலகமுன்றுடையாய்] - தான் நிர்க்குணனென்னிலும் விட வொண்ணாத ப்ராப்தி சொல்லுகிறது. [என்னையாள்வானே] - ப்ராப்தியை க்ரயஞ்செலுத்திக்கொடுக்கும்படி. மோக்ஷத்தளவும் செல்ல நடத்திக்கொடுபோந்து நடுவுள்ள அபேக்ஷிதப்ரதனைகையிறே ஆளுகையாவது. [நிகரிலித்யாதி] - அப்பதத்தில் முடிகிற ஸௌலப்யஞ்சொல்லுகிறது. [புகலொன்றில்லா அடியேன்] - ஆகிஞ்சந்யமும் ஸ்வரூபமும் ப்ரபத்திக்குப் பரிகரமிறே. [உன்னடிக்கீழ்] - *சரணௌ* [அமர்ந்து] - நடுவோர் இடையிடுஇன்றிக்கே யிருக்கை. [புகுந்தேனே] - இவ்வத்யவஸாயம் உபாயபாவத்தில் அந்வயியாமையாலும், உபகாரஸ்ம்ருதிஸ்வரூப மாகையாலும், ஸ்வீகாரமும் சைதந்யப்ரயுக்தமாகையாலும் (இவை யெல்லாம்) அதிகாரிவிசேஷணமாக்கிற்றிறே. (த்வயார்த்தவிவரணப்ரதேசங்களிலே.) இவை யெல்லாம் பூர்வார்த்தத்தில் முடிகிற பதத்தோடே சேரக்கடவதிறே. [அகலகில்லேனித்யாதி]- இதில், உபாயபாவஞ் சொல்லச்செய்தே, உபேயவிஷயஸௌசக்ரமமாயிருக்கிறது. அதாகிறபடி யெங்ஙனே? என்னில்; இருவருமான சேர்த்தியிலேயிறே இவன் அடிமைசெய்வது: அச்சேர்த்திதன்னையேயிறே இவன் உபாயமாகப் பற்றுகிறதும். இத்தால் சொல்லிற்றாகிறது, நித்யப்ராப்யத்வமிறே. நித்யபூர்வவிஷயமிறே நித்யப்ராப்யமாகவல்லது. (பிராட்டி நித்ய ஸம்ச்லிஷ்டையாயிருக்கச்செய்தேயும் ''பிரியகில்லேன்'' என்னும்போது - அவ்விஷயம் நித்யப்ராப்யமாகவேணுமிறே; இனி, இருவருமான சேர்த்தி நித்யப்ராப்யமென்னுமிடஞ் சொல்லவேண்டாவிறே.) [அகலகில்லேனிறையுமென்று] - இது அகன்றிருந்துசொல்லுகிற வார்த்தையன்று. தனக்கு அகலுகைக்கு ஸம்பாவனையின்றிக்கே யிருக்கச்செய்தேயும், அங் குத்தை போக்யதையை அநுஸந்தித்து, க்ஷணகாலமும் நான் அகலுகைக்கு சக்தையாகிறிலேனென்னும். *அநந்யா* என்றும், *அநபாயிநீ* என்றுஞ் சொல்லாநிற்கச் செய்தே சொல்லுகிறவார்த்தையிறே இது! க்ஷணகாலமும் பிரிய க்ஷமையல்லேனென்று. [அலர்மேல் மங்கை] - இங்ஙன் சொல்லுகிறவள் ஆரென்னில்—தன்வடிவழகாலும் பருவத்தாலும் அவன்தனக்குங்கூட உத்தேச்யமா யிருக்கிறவள்; அவனை, *நஜீவேயம் க்ஷணமபி* என்னப்பண்ணுமவள். நாட்டாரகலகில்லேன்போலன்றிறே இவளுடைய அகலகில்லேன்; அது கர்மநிபந்தநமாக வரும் அகலுகையிறே; இவளுக்கு அது இல்லாமையாலும் அவன் தான் மேல்விழும் ஸ்வபாவனாகையாலும், அவனால் வரும் பிரிவுமில்லை, தன்னால்வரும் பிரிவு மில்லையானால், இவ்வுக்திக்கு ப்ரஸங்கமென்? என்னில்; அவனாகையாலே வந்தது. நாட்டாருடைய ப்ரார்த்தனை கர்மமடியாகவருமது; இவளுடைய ப்ரார்த்தனை விஷயாதீநமாக வினையுமது. [உறைமார்பா] - ப்ரதமபதத்தில் மதுப்பால் சொல்லுகிற நித்யயோகத்தைச்சொல்லுகிறது; இதுவும் இங்ஙனே பலிக்கக்கண்டோமித்தனை. இச்சேர்த்திக்கு ப்ரயோஜநம் - அவனுடைய ஸ்வாதந்த்ர்யத்தையாதல், தன்னுடைய ஸம்ஸாரித்வத்தையாதல் அநுஸந்தித்துக் கைவாங்கவேண்டாதபடியிருக்கை. அவன் ஸர்வஜ்ஞத்வத்தையும் தன்னுடைய ஸாபராதத்வத்தையும் அநுஸந்தித்து அஞ்சவேண்டாதபடியாயிருக்கை. அதாகிறது - இவனுடைய அபராதகாலம் பார்த்திருந்து ப்ரதிபத்திபண்ணுகைக்கு அவனுக்கு அவஸரமில்லை; அவள் கூட இருக்கையாலே. பிராட்டிபக்கல் அபராதம் காகத்துக்கும் ராவணனுக்கும் ஒத்திருக்கச் செய்தேயும், இவள்ஸந்நிதியாலே தலைபெற்றது காகம்; அத்தனை அபராதமின்றியிலே யிருக்க, ராவணன் தலையறுப்புண்டானிறே, இவள்ஸந்நிதி யில்லாமையாலே. இத்தனை யுண்டிறே இவள்ஸந்நிதிக்கும் அஸந்நிதிக்கும் வாசி. தமப்பன் பகையாக, மாத்ருஸந்நிதியிலே ப்ரஜையை யழியச்செய்யமாட்டாமையும் ஒன்றுண்டே. அவன் பண்ணின அபராதத்துக்கு ப்ரஹ்மாஸ்த்ரத்தைவிட்டு, அது தொடர்ந்துகொண்டு திரிந்தவாறே புகலற்று விழ இவனைநோக்கி, ப்ரஹ்மாஸ்த்ரத்துக்கு ஒரு கண்ணழிவு சொல்லிவிட்டான் இத்தனை

யிறே. *தமேவ சரணம்கத:* என்றதுவும் *நகமேயம்* என்றதுவும், இரண்டும் அப்ரயோஜகம். அதென்? என்னில், காகத்துக்கும் போகிறபோது அகவாயில் நினைவு அதுவேயிறே. அங்ஙனன்றாகில் *ஸ்வகமாலயம் ஜகாம* என்று போகப்பாரானே; செயல்மாட்சியாலே விழுந்த இத்தனையிறே. இது ராவணனுக்கு மூண்டாயிருக்கச்செய்தே கார்யமாயிற்றதில்லையிறே, இவள் அஸந்நிதியாலே. கீழ்ச்சொன்ன அர்த்தம் இத்தனையும் - த்வயத்தில் முதற்பதத்தோடேயற்றது. மேல் 'நிகரில்' என்று தொடங்கி, 'திருவேங்கடத்தானே' என்னுமளவும்வர, அநந்தரபதத்தில் அர்த்தஞ்சொல்லுகிறது; [நிகரில்புகழாய்] - இப்படி இருக்கிறவள்தானே சிதகுரைக்குமன்றும் அவனுடனே மன்றாடும் குணாதிக்யவிசேஷஞ் சொல்லுகிறது. அதாகிறது "என்னடியார் அதுசெய்யார்" என்று என்னைப்பற்றினார்க்கு அதில்லைகாண் என்கை. 'இல்லை நான் இப்போது இன்னகுற்றஞ் செய்யக்கண்டேன்' என்று காட்டிக் கொடுத்தாலும், 'ஆனாலென்' தர்மாதர்மங்களும் பரலோகமுமில்லையென்று செய்கிறார்களோ? ப்ராமாதிகத்துக்கு நாமுளோம் என்றன்றோ செய்கிறது' என்கை. இவனுடைய உத்கர்ஷத்துக்கு அடிசொல்லும் போது அவளைப்பற்றிச்சொல்லலாம்; அவனுடைய உத்கர்ஷத்துக்கு ஒன்றுதேடிச்சொல்லலாவதில்லை. இதுவோதான் அர்த்தஸ்வரூபமிருக்கும்படி! இத்தால் சொல்லிற்றாயிற்று - இவள் அவனுடைய ஸ்வாதந்த்ர்யத்தையநுஸந்தித்து "இவற்றின்பக்கல் என்னாய் விளைகிறதோ?" என்றிருக்கையும், அவன் இவளுடைய மார்த்தவத்தையும் மௌக்த்யத்தையும் அநுஸந்தித்து "இவற்றின்பக்கல் எவ்வளவாயிருக்கிறானோ?" என்றிருக்கையும். ஆக ஒருவரையொருவர் அதிசங்கைபண்ணி நோக்கும் இருவர்நிழலையும் பற்றியிறே உபயவிபூதியுங் கிடக்கிறது. [உலகமூன்றுடையாய்] - தான் நிர்க்குணனென்றாலும் விடவொண்ணாத ப்ராப்தியைச் சொல்லுகிறது. "சிதகுரைக்குமேல்" என்றவிடத்தில், அவனுக்கு ஸ்வரூபாநுரூபமான குணங்கள் கூடாதவன்றிறே அவன் அதுசொல்லுவது; அப்படியே இவனுக்கும் இக்குணங்களின்றிக்கேயிருந்தாலும் விடவொண்ணாத குடற்றொடக்கைச் சொல்லுகிறது. அவன் "அல்லேன்" என்று கைவிடுமன்றும் செங்கற்சீரை கட்டி வளைக்கலாம்படியிறே இஸ்ஸம்பந்தமிருப்பது; இனி இவன்தான் காதாசித்கமாக ப்ரணயம்பண்ணிப் பின்பு கைகழியப்போகப்பார்க்கிலும், காலிலே விலங்கைத் தைத்துக் காரியங்கொள்ளலாம்படியான உரிமை சொல்லுகிறது. [என்னையாள்வானே] - அடிமைதன்னை க்ரயஞ்செலுத்திக்கொடுக்கும்படி. "சேஷத்வஸாமான்யத்தைப்பற்றச் சொல்லுகிறீராகில் அவ்வளவிறே யுமக்கும்" என்னவொண்ணாதபடி, என்னை மயர்வறமதிநலமருளி இவ்வளவும்வரநிறுத்திப் பொகடப்போமோ? [நிகரிலமரர் இத்யாதி] - அங்குள்ளாரும் விரும்பி வந்து அடிமைசெய்கிறதும் இங்கேயிறே. "வைகுந்தத்தமரரும் முனிவரும்" என்று இரண்டு கோடியாயிறேயிருப்பது, குணநிஷ்டரும் கைங்கர்ய நிஷ்டரும். [திருவேங்கடத்தானே] - அதுக்கு முடிந்தபொருள் ஸௌலப்யமென்னக்கடவதிறே; குணபோகமும், சேஷித்வமும், விசேஷகடாக்ஷமும், ஸௌலப்யமும், இவையித்தனையும் உண்டிறே இப்பதத்துக்கு. இவனுக்கு ஸகலாபேக்ஷிதபலப்ரதனாகைக்காக, அந்தராத்மதயா ஸந்நிதிபண்ணுமென்றிறே நாராயணசப்தத்திற் சொல்லுகிறது; அந்த ஸௌலப்யம், இங்கு ஸதாஸந்நிதிபண்ணுகையாலே திருவேங்கடமுடையான்பக்கலிலே கிடக்குமிறே. இந்த ஸௌலப்யம் உபாயமாகிறபடி எங்ஙனேயென்னில்; *மாமேகம்* என்கிறவிடத்தில் - ஸாரத்யவேஷத்தையிறே காட்டுகிறது. இன்னமும் அவ்வளவன்றிறேயிங்கு: அதுக்கு முன்புமில்லை பின்புமில்லையிறே அந்த ஸௌலப்யந்தான்; நித்யஸந்நிதிபண்ணுகிறவிடமிறே இவ்விடம். அங்குத்தானும் *மய்யாஸக்தமநா:பார்த்த* என்று ஒருதேவையிட்டிறே சொல்லிற்று; அதுவும் இல்லையிறே இங்கு. இனித் தம்படி சொல்லுகிறார். [புகலொன்றில்லாவடியேன்] - கீழே "அடியேன்" என்றும், "அருவினையேன்" என்றும் தம்முடைய சேஷத்வத்தையும், ஆகிஞ்சந்யத்தையும் உருவச் சொல்லிக்கொடுபோந்தார்; இனித்தான் வெறுமையும் ஸ்வரூபமும், இரண்டும் ப்ரபத்திக்குப் பரிகரமிறே; அத்தை இங்கேயும் ப்ரயோகிக்கிறார்; அதுதன்னைச் சொல்லவேணுமிறே. இங்குச்சொல்லவேண்டுகிறதென்? என்னில்; அவனுக்கு உபாயபாவம் ஸ்வரூபமானவோபாதி இவனுக்கும் இப்ப்ரபத்தி ஸ்வரூபமாகையாலே. இவனுக்கு இதில்லாதவன்று ஸர்வமுக்திப்ரஸங்கமுமாமே. [அடியேன்] அதில் அர்த்தப்ராப்தமான அஹம்சப்தத்தை இங்கு வாசகசப்தத்தாலே சொன்ன

துவே வாசி. [உன்னடிக்கீழ்] *சரணௌ* என்றது தன்னையே சொல்லுகிறது. *ஸப்ராதுச் சரணௌ* என்றாப்போலே சொல்லக்கடவதிறே; [அமர்ந்து புகுந்தேனே] *முமுக்ஷுர்வை சரணமஹம் ப்ரபத்யே* என்னுமாபோலே. [அமர்ந்து] - அவனுக்கு ஒரு ஸஹகாரிவேண்டுதல் தன் தலையிலே யுபாயபாவங்கிடத்தல் செய்யிலிறே நடுவொரு வ்யவதாந விளம்பங்களுக்கு ஹேதுவுள்ளது. [புகுந்தேனே] - போனஎல்லையளவுமிறே புகுருவதும்; முன்பும் அர்த்தத்தி லீழவில்லையிறே. இவனுடைய விப்ரதிபத்தியேயிறே யுள்ளது: அதுபோமித்தனையிறே வேண்டுவது. அத்யவஸித்தேனென்கிறார்; இங்குத்தை வர்த்தமாநம் - ஸ்ம்ருதிஸந்ததி போலன்றிறே; ருசிகார்யமாய் வருகையாலே ப்ராப்யத்தினுடைய ப்ராப்தியளவும் நிற்குமிறே.

ஸகலசாஸ்த்ரங்களிலும் வ்யாபரிப்பதொன்றாய், இச்சாஸ்த்ரங்களுக்கெல்லாம் அடியான வேதாந்தங்களுக்குக் கிழங்காய், நம் ஆசார்யர்களெல்லாரும் ஒக்க ஆதரித்துப்போருவதோர் அர்த்த[illegible]விசேஷத்தை, இப்பாட்டாலே அருளிச்செய்கிறார். ப்ரதமாசார்யருமாய், "மயர்வறமதிநலமருளினன்" என்கிறபடியே பகவத்ப்ரஸாதலப்தஜ்ஞாநவைபவருமான இவர் பரிக்ரஹிக்கையாலே வந்த ஏற்றமுமுண்டு. இவ்வுபாயந்தன்னைப் பரிக்ரஹித்து ப்ரயோஜநாந்தரத்தைக் கொள்வாரும், ஸாதநாந்தரத்தைப் பரிக்ரஹித்து இவனையே ப்ரயோஜநமாகப் பற்றுவாருமாயிருப்பர்கள் புறம்புள்ளார்; அங்ஙனன்றிக்கே இவனையே ப்ராப்யமும் ப்ராபகமுமாக அத்யவஸித்திருக்கிற ஏற்றமுண்டு இவர்க்கு. ப்ராப்யம் இவனேயாகில் ப்ராபகாந்தரங்களைப் பரிக்ரஹித்தால் வரும் குற்றமென்? என்னில், அவை ஸாத்யரூமாய்ப் பலவுமாய் துச்சகமுமாய் ஸ்வரூபத்துக்கு அநநுரூபமுமாயிருக்கும். இப்படியிருக்கும் ஸாதநாந்தரங்கள் பல. அவையெவை? என்னில், கர்மயோக ஜ்ஞாநயோக பக்தியோகங்கள். கர்மயோகமாவது-ஆத்மயாதாத்ம்யஜ்ஞாநபூர்வகமாக ஸ்வவர்ணாஸ்வாச்ரமோசிதமாய் விஹிதமானகர்மத்தைப் பலாபிஸந்திரஹிதமாகவும் கர்த்ருத்வத்யாகத்தையும் ஸங்கத்யாகத்தையும் பண்ணி பகவத்ஸமாராதந புத்த்யா பண்ணவே, விரோதியான பாபம் க்ஷயித்து மநஸ்ஸு நிர்மலமாய் ஸ்வரூபப்ரகாசமுமுண்டாய் பகவத்ஜ்ஞாந ப்ரேமங்கள் பிறந்து, அது பரபக்தி பரஜ்ஞாநபரமபக்தியாய்ப் பேற்றோடே ஸந்திப்பிக்கும். ஜ்ஞாநயோகமாவது - இந்த்ரியங்களை நியமித்துக்கொண்டு ஸ்வரூபத்தை விஷயமாக்கி பகவத்ஜ்ஞாநம் பிறந்து தத்விஷயப்ரேமமும் பிறந்து, மேல் பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளும் பிறந்து பேற்றோடே ஸந்திப்பிக்கும். அங்ஙனன்றிக்கே, இக்கர்மஜ்ஞாநங்களிரண்டையும் பகவத்விஷயத்திலேயாக்கி, *மந்மநாபவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு* என்கிறபடியே, பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளாய்ப் பேற்றோடே தலைக்கட்டுமது- பக்தியோகமாவது. இவைபோல் துச்சகமன்றியிலே, திருநாமத்தை ஸுசகோபாயமாக விதித்தது, எங்கே? என்னில், தர்மபுத்ரனுக்கு அநேக தர்மங்களையுஞ் சொல்ல, *கோ தர்மஸ் ஸர்வதர்மாணாம் பவத: பரமோமத:* என்கிறபடியே, உன்னெஞ்சால் அறுதியிட்டிருக்கும் பரமதர்மத்தைச் சொல்ல வேணுமென்ன; *ஏஷ மே ஸர்வதர்மாணாம்* இத்யாதிப்படியே அதிகதமமான தர்மம் திருநாமமென்று சொன்னானிறே. திருநாமம் ஸாதநாங்கமன்றோ? ஸ்வயம் ஸாதநமோ? என்னில்; *ஜந்மஸம்ஸார பந்தநாத் - முச்யதே* என்று - விரோதிநிவ்ருத்தியையும், *யாதி ப்ரஹ்ம ஸநாதநம்* என்று ப்பலப்ராப்தியையுஞ் சொல்லித் தலைக்கட்டுகையாலே, விரோதிநிவ்ருத்தி பூர்வகமான அபிமதபல ஸித்திக்கும் ஸ்வயம் ஸாதநமே. *தேசோऽயம் ஸர்வகாமதுக்* என்று ஸர்வாபிமதஸாதநமாக தேசவாஸத்தைச் சொல்லிற்று. *ஆராதநாநாம் ஸர்வேஷாம்* என்று தொடங்கி, *ததீயாராதநம் பரம்* என்று தலைக்கட்டுகையாலே - ஸர்வாபிமதஸித்தியும் ததீயரை யாராதிக்கவே கிடைக்கும் என்று சொல்லிற்று; அப்படி சொன்ன துச்சகமான ஸர்வோபாயங்களும் அஹங்காரஸ்பர்சமுண்டாகையாலே த்யாஜ்யமாகச் சொல்லிற்று. ஒன்றாய் ஸித்தமாய் ஸுசகமாய் ப்ராப்தமாய், தனக்கவ்வருகொன்றின்றிக்கே - *தஸ்மாந்ந்யாஸ மேஷாம் தபஸா மதிரிக்தமாஹு:* என்கிற ப்ரபதநத்தைச் சொல்லுகிறது இப்பாட்டால். கீழ் ஒன்பது பாட்டாலும் - சரண்யன் ஸ்வரூபத்தையும் அதிகாரிஸ்வரூபத்தையுஞ் சொல்லி, சரணாகதிப்ரகாரத்தைச் சொல்லுகிறது இப்பாட்டில். சரண்யன் ஸ்வரூபமாவது - நிரதிசயபோக்யமுமாய் வகுத்தவிஷயமுமாய் விரோதிநிவர்த்தகமுமாய் ஸர்வஸுலபமுமாயிருக்குமது. அல்லாதவைபோலன்றியிலே ஆச்ர

யணத்துக்கு ஏகாந்தமாயிருப்பது ஸௌலப்யம். பரவ்யூஹங்கள் (பரத்வம்) சேதநனுக்கு ருசி பிறந்தபோதே யாச்ரயிக்கவொண்ணாதபடி தேசவிப்ரக்ருஷ்டமாயிருக்கும். வ்யூஹமும், ப்ரஹ்மாதிகளுக்கா மத்தனையாகையாலே தத்ப்ராயம்; அவதாரங்கள் பாக்யாதிகராய் அக்காலத்தில் உதவினார்க்கொழியப் பிற்பாடர்க்கு உதவாமையாலே காலவிப்ரக்ருஷ்டமாயிருக்கும்; அக்குறைகளிரண்டுமின்றியிலே எல்லாக்காலத்திலும் எல்லார்க்கும் வந்து ஆச்ரயிக்கலாம்படி, “வானவர் வானவர்கோனோடும்” என்கிறபடியே நித்யஸூரிகளோடு, இவ்வருகுள்ள ப்ரஹ்மாதிகளோடு, இவ்வருகுள்ள மநுஷ்யர்களோடு கானமும் வானரமுமாய்க்கொண்டு அத்யந்த ஹேய ஜந்மாக்களானவரோடு வாசியற ஸர்வஸமாச்ரயணீய ஸ்தலம் திருவேங்கடமுடையான் திருவடிகளே. அஜஹத்ஸ்வபாவனாகையாலே அபிமதஸித்திக்கு உடலான ஜ்ஞாநசக்த்யாதி குணவிசிஷ்டங்களையுமுடையனாகையாலே, ஸர்வகுணங்களாலும் பரிபூர்ணனான திருவேங்கடமுடையான் சரண்யன். அதிகாரிஸ்வரூபமாவது - ஆகிஞ்சந்யமும் ப்ராப்யருசியும் ஸ்வரூபப்ரகாசமுமென்கிற இவையிறே. திர்யக்குக்களுக்கு இப்படி யாச்ரயணங் கூடுமோ ? என்னில்; - ஸ்ரீகஜேந்த்ராழ்வான் பகவத் ஸமாச்ரயணம் பண்ணினானாகத் துறைச்சுவடிகளிலே யெழுதியிட்டுவைத்துஞ் சொல்லியும் கேட்டும் போராநின்றோமே; இங்கும் “வைப்பன் மணிவிளக்கா மாமதியை மாலுக்கென் றெப்பொழுதும் கைநீட்டும்யானையை” என்றும், “புகுமதத்தால் வாய்பூசிக்கீழ்தாழ்ந்தருவி யுகுமதத்தால் கால்கழுவிக்கையால்-மிகுமதத்தேன் விண்டமலர் கொண்டு விறல்வேங்கடவனையே, கண்டு வணங்கும் களிறு” என்றும், ஸ்தலாந்தரத்திலே, “புனைத்திகைக்கிள்ளிப் புதுவிகாட்டியுன்பொன்னடிவாழ்கவென் றினக்குறவர்புதிய துண்ணுமெழில்மாலிருஞ்சோலையெந்தாய்” என்றும் ஆழ்வார்கள் அருளிச்செய்துவைத்தார்கள். இனி, அவ்வோபாதியாகிலும் இத்தையும் விச்வஸிக்கவேண்டாவோ நமக்கு ? இனி, (ஜ்ஞாநாதிகளால் பூர்ணனான) சரண்யவிஷயத்தில் சரணாகதி ப்பலவ்யாப்தை யென்னுமோபாதி, ஆநுகூல்யாதிவிசிஷ்டனான அதிகாரி சரணம்புக்கால் ப்பலவ்யாப்தி யென்கிற அர்த்தத்தையுஞ் சொல்லுகிறது. ‘அகலகில்லேனிறையுமென்றலர்மேல்மங்கையுறைமார்பா’ என்கிற இத்தாலே தம்முடைய ஆகிஞ்சந்யபூர்வகமாகப் பெரியபிராட்டியார் புருஷகாரமாக, ஸர்வஸுலபனான திருவேங்கடமுடையான் திருவடிகளிலே விழுந்து சரணம்புகுகிறார். [அகலகில்லேனிறையு மென்றலர்மேல்மங்கையுறைமார்பா] - நிரபேக்ஷமுமாய் ஸாபேக்ஷமுமாயிருக்கும் இவ்வுபாயம்: ஆகாரபேதத்தாலே. நிரபேக்ஷமாகிறபடி எங்ஙனே? என்னில்: ருசியைப்பிறப்பிக்கையும், பிறந்த ருசியை வளர்க்கையும் விரோதிகளைப்போக்குகையும், ஒருதேசவிசேஷத்தேறக்கொண்டு போகையும் ப்ராப்தமான கைங்கர்யத்தைக்கொள்ளுகையுமாகிற இவ்வோவிடங்களில் நிரபேக்ஷமாகத் தானே செய்யும்; ஸஹகாரி வேண்டா. (ஸாபேக்ஷமானபடியென்? என்னில்; அதிகாரி ஸாபேக்ஷமுமாய் புருஷகார ஸாபேக்ஷமுமாயிருக்கையாலே.) இவ்வுபாயம் ஆர்க்கென்றால், அதிகாரிக்கு என்கையாலே, அதிகாரிஸாபேக்ஷம்; (அதிகாரிஸாபேக்ஷமானவோபாதி புருஷகாரஸாபேக்ஷம்.) எங்ஙனேயென்னில்: இவ்வதிகாரி, பூர்வாபராதத்தையும்பார்த்து அவனுடைய ஸ்வாதந்த்ர்ய ஸார்வஜ்ஞ்யாதிகளையும்பார்த்துப் பிற்காலிக்க, “அஞ்சாதே” என்று புருஷகாரமானவள் சொல்லவேண்டுகையாலே. (ஆகையாலே,) அதிகாரிஸாபேக்ஷமுமாய் புருஷகாரஸாபேக்ஷமுமா யிருக்கும். [அகலகில்லேனிறையும்] - ஒருக்ஷணகாலமும் பிரிய சக்தையல்லேன். இப்படிசொல்லுகிறவள்தான் ஆர் ? என்னில்; த்ரிவிதசேதநர்க்கும் ஸ்வாமிநியுமாய், உபயவிபூதிநாதனுக்கும் நியாமிகையுமாயிருக்குமவளிறே ! த்ரிவித சேதநர்க்கும் ஸ்வாமிநியென்னுமிடத்தில் ப்ரமாணம் *ஈச்வரீம் ஸர்வபூதாநாம்* என்னக்கடவதிறே. உபயவிபூதி நாதனுக்கும் நியாமிகையென்னுமிடத்துக்கு ப்ரமாணம்: *பும்ப்ரதாநேச்வரேச்வரீம்* என்று ப்ரதாநபுருஷர்களுக்கு ஈச்வரன் அவன்; அவனுக்கு இவள் ஈச்வரியென்று சொல்லுகையாலே. ஆக, ஸர்வர்க்கும் நியாமிகையென்னுமிடஞ் சொல்லிற்று. இவள்நியமிக்கும் ப்ரகாரமென் ? என்னில்; த்ரிவிதசேதநரையும் மாத்ருத்வ ப்ரயுக்தமாக நியமிக்கும். ஈச்வரனை ப்ரணயித்வநிபந்தநமாக நியமிக்கும். மாத்ருத்வம் ஸ்வரூபாநுபந்தி: ப்ரணயித்வம் காதாசித்கமாகையாலே வந்தேறியாகாதோ? என்னில்; ஆகாது. எங்ஙனேயென்னில்? - உபாதி நித்யமாகையாலே அதுவும் நித்யம். ஈச்வரன் ஸ்ருஷ்ட்யாதி

களைப் பண்ணுமிடத்திலும் இவள் நியாமிகை. *யஸ்யா வீக்ஷ்யமுகம் ததிங்கிதபராதீநோ விதத்தேஷகிலம்* என்று அவள்கடாக்ஷமடியாக ப்ருகுடிபடலுயக்கொண்டு ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணும். அது என்? *கரணகளேபரைர்க்கடயிதும் தயமாநமநா:* என்று, தன் தயை அடியாகவன்றோ ஸ்ருஷ்டிப்பதுஎன்னில்?—அவற்றின் செல்லாமை பார்த்து ஸ்ருஷ்டிக்கிறதிறே தயை யடியாவது; தன் செல்லாமையாலே அவள்கடாக்ஷமடியாகத் தன் ஸத்தையுண்டாய், அவள் ப்ரேரிக்க தயைபிறந்து, அத்தயையடியாகவிறே அவன் ஸ்ருஷ்டிப்பது. நியமிக்குமிடத்தில் *அஸ்யேசாநா ஜகதோ விஷ்ணுபத்நீ* என்றும், *விஷ்ணோ: ஸ்ரீரநபாயிநீ* என்றுஞ் சொல்லுகிறபடியே தன்ஸ்வரூபங் குலையாமே யிறே நியமிப்பது. எங்ஙனே யென்னில்; ப்ரபை ப்ரபாவானுக்கு சேஷமாய் நின்றே அத்தலைக்கு நிறங் கொடுக்குமா போலவும், பரிமளம் புஷ்பத்துக்கு சேஷமாய் நின்று பெருவிலையாக்குமா போலவும், ஈச்வரன் ஸ்வாதந்த்ர்யங் குலையாதே பரதந்த்ரனுமாபோலேயுமிறே இவளும் அத்தலைக்கு அநந்யார்ஹசேஷமாய்க்கொண்டே நிறங்கொடுக்கும்படி. விச்லேஷத்துக்கடி கர்ம மன்றோ? கர்மஸ்பர்ச மின்றிக்கே யிருக்க, இவள் "அகலகில்லேன்" என்னப்போமோ? என்னில் ?- கர்மத்தோபாதி, அவனுடைய வைலக்ஷண்யம் அடியாகச்சொல்லுகிறாள். வைலக்ஷண்யம் போக்யமா மத்தனையன்றோ? என்ன; மஹார்க்கமா யிருப்பதொரு ரத்நத்தை லபித்தால், "இது நமக்குத்தொங்குமோ!" என்று துணுக்குத் துணுக்கென்னுமவனைப்போலே, 'அவன்மார்விலே யிருந்து அகலிற்செய்வதென்?" என்று அஸ்தாநே பயசங்கைபண்ணுகிறாள். [இறையும் - அகலகில்லேன்] - ஸம்ச்லேஷாங்கமான விச்லேஷமும் பொறுக்கமாட்டேன். அவன் உபாயமாமிடத்தில் அங்கத்தை ஸஹியாத சுணையுடைமைபோலே, ஸம்ச்லேஷாங்கமான விச்லேஷமும் பொறாத மார்த்தவம். அவன்மார்விலேயிருந்து அவன்முகத்தைநோக்கி, "உன்னையகல சக்தையாகிறிலேன்" என்று அவன்வைலக்ஷண்யத்தை யவனுக்குச் சொல்லுகிறாள். ஸ்வதஸ் ஸர்வஜ்ஞனாயிருக்கிறவன் தன்னுடைய வைலக்ஷண்யம் ஸ்வவிஷயஜ்ஞாநத்துக்கு விஷயமன்றோ? இவள்சொல்ல அறியுமிடம் அவனுக்கு ஜ்ஞாநக்கொத்தையன்றோ? என்னில்; இவள்சொல்ல வறிந்திலனாகில் அவன்ப்ரணயித்வத்துக்குக் கொத்தையாமே! "தனக்குந்தன் தன்மை அறிவரியான்" என்றுஞ் சொல்லாநின்றதிறே. ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளேயிறே ஜ்ஞாநத்துக்கு விஷயம்; "ஞானம:தே கொண்டெல்லாக் கருமங்களுஞ்செய்" என்றதிறே. "அகலகில்லேன் இறையும்" என்கிற பாசுரமுஞ் சொல்லமாட்டாத தசையிறே அவன் தசை. அவன்வைலக்ஷண்யங்கண்ட இவளிலும் அவனுக்குண்டான ஏற்றம், விச்லேஷதசையில் அவன்பாசுரத்தே காணுமத்தனையிறே. *மாஸாதூர்த்த்வம் நஜீவிஷ்யே* என்றாள் இவள்; *நஜீவேயம் க்ஷணமபி* என்றான் அவன். பரதந்த்ரராயிருப்பார்க்கு உடையவன்வருந்தனையும் பொறுக்கவேணுமிறே; ஸ்வதந்த்ரனுக்கு அதுவேண்டாவே. இப்படி உபயமும் விலக்ஷணமான மிதுநம் உத்தேச்யமாகவிருக்கிற முமுக்ஷுக்களுக்கு ஒருகுறையுண்டோ? இவர்களைத் தனித்தனியே பற்றினார்க்கு ஸ்வரூபவிநாசமிறே. "மிதுநமே யுத்தேச்யம்" என்றிருப்பார்க்கு ஸ்வரூபோஜ்ஜீவநமிறே. ராவணாதிகள் பக்கலிலே இவ்வர்த்தம் காணவுமாம். [அலர்மேல்மங்கை] - பூவில் ருஜீஷமான தாதும் சுண்ணமுங்கழிந்த பரிமளமே வடிவானாற்போலே யிருந்துள்ள ஸௌகுமார்யமும், நித்யாநுபாவ்யமானபருவமு முடையவள். அவனை "அகலகில்லேன்" என்னப்பண்ணவல்ல பரிகரத்தையுடைய இவள், "அகலகில்லேன்" என்கிறாளிறே. [உறைமார்பா] - அவன்மார்விற்சுவடறிந்த பின்பு பிறந்தகமான பூவும் நெருஞ்சிமுள்ளோபாதியாயிற்று. ஸ்ரீஜநகராஜன்திருமகள் பெருமாளைப் கைப்பிடித்தபின்பு ஸ்ரீமிதிலையை நினையாதாப்போலவும், முக்தன் *நோபஜநம் ஸ்மரந்நிதம் சரீரம்* என்று ஸம்ஸாரத்தை நினையாதாப்போலவும், அவன்மார்வில் போக்யதை யறிந்த பின்பு பூவை நினைத்திலள். அஸங்குசிதஜ்ஞாநரா யிருக்கச்செய்தே ஸம்ஸாரத்தைக் காணாதவிடம் ஜ்ஞாநக்குறையன்றே, போக்யதாதிசயமிறே; இவளும் போக்யதையாலேயிறே காணாதொழிகிறது. [உறைமார்பா] - இவள் பூவைக் காணாதவோபாதி திருமார்வுக்குஅவ்வருகு அவயவங்களைக் காணாள். மற்றுள்ள அவயவங்கள் குமர்கிடந்துபோமத்தனை. இவ்வளவால் சொல்லிற்றாயிற்று - ஸ்ரீசப்தமும், மதுப்பிலர்த்தமும். ஸ்ரீசப்தம் - புருஷகாரம் வேண்டுகையாலே சொல்லிற்று; மதுப்பில் - நித்யயோகத்துக்கு ப்ரயோஜநமென்? என்னில்; ஆச்ரயிப்

பார்க்குக் காலம்பார்க்கவேண்டாதபடி ஸதா ஸந்நிஹிதம். [நிகரில்புகழாய் இத்யாதி] - நாராயண சப்தார்த்தம் சொல்லுகிறது. இதுக்குப்பொருள் - உபயவிபூதியோகமும், *யஜ்ஜாதா நிதத்வாநி* என்கிறபடியே ஜகத்காரணத்வமும் அர்த்தமாகச் சொல்லாநிற்கச் செய்தே, நம்மாசார்யர்கள் ஆச்ரயணத்துக்கு ஏகாந்தமான ஸௌலப்யாதிகுணங்களாலேயும் சொல்லிப் போருவர்கள்; அக்குணங்களுக்கு க்ரமம்அருளிச்செய்கிறார் இவர். அக்குணங்கள் சொல்லுகிறவிடத்தில், வாத்ஸல்யம் முன்னாகச்சொல்லுவானென்? என்னில்: ஸாபராதனுகை யாலே இவ்வபராதம் பொறுக்கைக்கு உறுப்பாகப் புருஷகாரம் வேண்டினால், அநந்தரம் இவ்வபராதம் போக்யமாவதொருகுணம் முன்னாக வேண்டுகையாலே. 'நிகரில் புகழாய்' என்ன வாத்ஸல்யத்தைக்காட்டுமோ? என்னில்: இதுக்குப்பொருள் - கத்யத்திலே *அபார காருண்யஸௌசீல்யவாத்ஸல்ய* என்று குணங்களோடொக்கவெடுத்து, *ஆச்ரிதவாத்ஸல்யை கஜலதே* என்று இக்குணத்தை விசேஷிக்கையாலே சொல்லிற்று. [உலகமூன்றுடையாய்] - கீழ்ச்சொன்ன வாத்ஸல்யத்துக்கடியான குடல்துடக்கைச்சொல்லுகிறது. தன்வயிற்றிற் பிறப்பாலேயிறே ஜநநி வத்ஸலையாகிறது. 'என்னையாள்வானே' என்று ஸௌசீல்யத்தைச் சொல்லுகிறது. "என்னையாள்வானே" என்று கைங்கர்யத்தைபோலே, உபகாரந்தோற்றச் சொல்லப்பெறுவரோ ஆகிஞ்சந்யம் முன்னாக ஆச்ரயிக்கிறவரென்னில்? [அவன்கைவிடாமல் கைக்கொள்ளுகைக்காக.] புருஷகாரத்தைப்பார்த்து வார்த்தைசொன்னார் - ப்ரதமபதத்தில்; அநந்தரம் - உபாயத்தைப் பார்த்து வார்த்தை சொன்னார்; இதில் - நாட்டைப்பார்த்துச் சொல்லுகிறார். (தாமுமவர்களிலேயந்யதமரிறே.) விஷயாந்தரங்களினுடைய ஸாபாலாபமே பேறிழவாகவிருக்கிறவர்களிலே அந்யதமராயிருக்கிற தம்மை, "கர்மாத்யுபாயங்கள் ஸ்வரூப விரோதி" என்றறியுந்தனையும்வர நிறுத்தி, பிராட்டி புருஷகாரமாகத் தானேயுபாயமும் தானே ப்ராப்யமும் என்னும்படி பண்ணின உபகாரத்தைச் சொல்லுகிறார். இது - ஸௌசீல்யமான படியெங்ஙனே? என்னில்: *சீலம் ஹி நாம மஹதோ மந்தைஸ்ஸஹ நீரந்த்ரேண ஸம்ச்லேஷ:* என்கிறபடியே, தன் மேன்மையையும் என் சிறுமையையும் பாராதே ஒருநீராகக்கலந்தானென் கிறார். 'நிகரிலமரர் முனிக்கணங்கள் விரும்புந்திருவேங்கடத்தானே' என்று ஸௌலப்யம். 'அமரர்முனிக்கணங்கள்' என்கிற த்வைவித்யம் - "வைகுந்தத்தமரரும் முனிவரும்" என்றும், *பக்தைர்ப்பாகவதைஸ்ஸஹ* என்றுஞ் சொல்லுகையாலே. "நிகரில்" என்பானென்? என்னில்: இவர்களுக்கு ஒருவரு மொப்பல்ல. ப்ரக்ருதிஸம்பந்தத்தாலே ஸம்ஸாரிக ளொப்பல்லர்; ப்ரக்ருதிஸம்பந்தந் நிர்க்கதராகையாலே முக்த ரொப்பல்லர்; ஜகத்வ்யாபாராதிகளுண்டாகையாலே ஈச்வரனொப்பல்லன். *ஜகத்வ்யாபாரவர்ஜம்* என்று நிஷேதித்து *போகமாத்ரஸாம்ய லிங்காச்ச* என்று - பகவதநுபவத்திலே அந்வயம். [விரும்புந்திருவேங்கடத்தானே] - இவர்களுக்கு விருப்பமாவது, இருட்டறையிலே விளக்குப்போலே, பரமபதத்திற்காட்டிலும் "கானமும் வானரமும்" என்கிறபடியே எத்தனையேனும் தாழ்ந்தார்க்கும் முகங்கொடுக்கிற சீலாதிகுணங்கள் இங்கேயுண்டாகையாலே, அங்கில்லாததும் இங்கே பெறுகையாலே விரும்புவர்கள்; ஸௌலப்யமாவது - உயர்ந்தாரோடு தாழ்ந்தாரோடு வாசியற ஸர்வஸுலபமான அர்ச்சக பராதீநத்வம்.

[புகலொன்றில்லாவடியேன்] - *ப்ரபத்யே* என்கிறவிடத்தில் உத்தமனால் வந்த அதிகாரிஸ்வரூபத்தைச் சொல்லுகிறது. அநந்யகதித்வமும், ஸ்வரூபப்ரகாசமான அநந்யார்ஹசேஷத்வமுஞ் சொல்லுகிறது. "புகலொன்றில்லா" என்றும், "அடியேன்" என்றும் இரண்டுஞ் சொல்லவேணுமோ? என்னில்: ப்ரக்ருதிஸம்பந்தத்தில் பாரமார்த்த்யத்தாலேயும், மயர்வறமதிநலமருளப்பெற்ற ஜ்ஞாநவைபவத்தாலேயும் அருளிச்செய்கிறார். [உன்னடிக்கீழ்] - *சரணௌ* என்கிற பதத்தில் விக்ரஹவத்தையைச் சொல்லுகிறது. சுபாச்ரயமுமாய், விஷயாந்தரங்களில் அருசி பூர்வகமாகத் தன்பக்கலிலே ருசியையுண்டாக்கி, பிறந்த ருசியையும் வளர்த்து ப்ராப்தி விரோதியையுந் தவிர்த்து, ஒரு தேசவிசேஷத்திலேபோனால் நித்யகைங்கர்ய ப்ரதிஸம்பந்தியுமாய், ஸதாபச்யந்திக்கு விஷயமுமாவது விக்ரஹமாகையாலே. அடியிலே "துயரறுசுடரடிதொழுதெழு" என்று திருவுள்

ளத்தைக் குறித்தருளிச்செய்து, தாம் பற்றுகிறவிடத்தில், "உனபாதங் கூடுமாறுகூறாய்" என்றும், "உன்னடிசேர்வண்ண மருளாய்" என்றும், "உன்னடிசேரவடியேற்காவாவென்னாயே" என்றும், "பூவார்கழல்களருவினையேன் பொருந்துமாறுபுணராய்" என்றும், "உனபாதஞ்சேர்வதடியே னெந்நாள்?" என்றும், "மண்ணளந்த விணைத்தாமரைகள் காண்பதற்கு" என்றும், "எந்நாளுன்னடிக்க ளடியேன்மேவுவதே?" என்றும், "கொடியார்பொழுது முனபாதங்காண நோலாதாற்றேன்" என்றும், "நோலாதாற்றே னுனபாதங்காண" என்றும், "அடியேனுனபாத மகலகில்லேனிறையும்" என்றும், "உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேன்" என்றும் இவரடிவிடாமல் அநுஸந்தித்தபடி கண்டதே! [அமர்ந்து] - அமர்ந்தையாவது - உபாயாந்தரங்களை விட்டவோபாதி ப்ராப்யாந்தரங்களில் அருசியைச் சொல்லுகிறதோ? என்னில்; அது இங்கு ப்ரஸ்துதமல்லாமையாலே ப்ரஸங்கமில்லை. இதுக்குப் பொருள்—*ஸர்வதர்மாந் பரித்யஜ்ய* என்றும், *சரணம் வ்ரஜ* என்றும் சொல்லச் செய்தே ஏகபதப்ரயோகம் பண்ணினவோபாதி, திருவேங்கடமுடையான் திருவடிகளும் தம்முடைய தலையும் கொக்குவாயும் படுகண்ணியும்போலே நிர்விவரமாகப் பொருந்தினபடி சொல்லுகிறது. [புகுந்தேனே] - ப்ருதக்ஸ்த்தித்யாதிகளில்லாதபடி சரீரவத் சேஷமான தமக்கு அந்தர்யாமியாய் நிற்கிறபடியை அறிந்திருக்கிற இவர், 'புகுந்தேன்' என்கிறவிது - ஒரு போக்குவரத்து உண்டாயன்று; அவனுடைய ஸர்வஜகத்காரணத்வத்தையும் ஸர்வாத்மபாவத்தையும் ஸர்வரக்ஷகத்வத்தையும் அறிந்து, "அவனேயுபாயம்" என்கிற அத்யவஸாயஜ்ஞானத்தைச் சொல்லுகிறது. *கத்யர்த்தா: புத்த்யர்த்தா:* என்கிறபடியே. [புகுந்தேனே] - *ப்ரபத்யே* என்கிறவர்த்தமாநம் - கௌணம்; அடைந்தேன் என்கிறாப்போலே, புகுந்தேனென்கிற இதுவே முக்க்யம்.

பாபாநாம்வா பிராட்டியுடைய அபயப்ரதானம் இச்ச்லோகம். "ராவணனும் பட்டு பெருமாளும்விஜயிகளானார்" என்று பெரிய ப்ரியத்தைப் பிராட்டிக்குத் திருவடி விண்ணப்பஞ்செய்ய, பிராட்டியும் ப்ரீதிப்ரகர்ஷத்தாலே விம்மல்பொருமலாய் ஸ்தப்தையாயிருக்க, இவனும் விக்கலுக்கு வெம்மாற்றம்போலே" *கிந்நு சிந்தயஸே தேவி கிம் த்வம் மாம் நாபிபாஷஸே* என்று பெரியப்ரியத்தைவந்து விண்ணப்பஞ்செய்த எனக்கு ஒருமறுமாற்றஞ்சொல்லாதே தேவரீர் எழுந்தருளியிருக்கிற இருப்பு என்தான்? என்று திருவடி விண்ணப்பஞ்செய்ய, பிராட்டியும் "உனக்கு ஸத்ருசமாகத் தரலாவதொன்றில்லாமைகாண் நான் பேசாதிருந்தது" என்ன, இவனும் "இவ்வளவிலே நம் அபேக்ஷிதத்தை விண்ணப்பஞ்செய்துகொள்ளவேணும்" என்று பார்த்து, "தேவரைச்சுற்றும்முற்றும்நலிந்த ராக்ஷஸிகளாகிறார் க்ரூரைகளாய் துஷ்டஸ்வபாவைகளாயிற்று; ராவணனுக்குமுன்பே கொல்ல வேண்டுவது இப்பெண்பிள்ளைகளையாயிற்று; அவனும் இவர்களோபாதி கேடனல்லன்; இவர்கள் இப்போது பாம்பு படமடங்கினாப்போலே இருக்கிறார்களித்தனையாயிற்று; இவர்களை பஹுப்ரகாரமாக ஹிம்ஸிக்கப்பாராநின்றேன்; *முஷ்டிபி: பாணிபிச்சைவ* என்று கையாலேகுத்தியும் காலாலே துகைத்தும் நகங்களாலே சாடித்தும் பற்களாலே கடித்தும் துண்டித்தும் *ச்சிந்நம்பிந்நம் சரார்த்தம்* என்று பெருமாள் திருச்சரங்கள்செய்ததெல்லாம் நானே பண்ணப்பாராநின்றேன்; பகவதபசாரிகளையும் பாகவதாபசாரிகளையும் தண்டிக்கும் க்ரமத்திலே தண்டிக்கக் கோலாநின்றேன்; முன்புவந்தபோது இடமில்லாமைவிட்டுப்போனேனித்தனை; இப்போது எனக்கு எல்லாப்ரத்யுபகாரங்களும் பண்ணியருளிற்றாகலாம்; இது இத்தனையும் திருவுள்ளமாகவேணும்" என்றான்? என்ன, *பாபாநாம்வா* என்றருளிச்செய்கிறாள். *பாபாநாம் வா சுபாநாம்வா* - இவர்கள் நீ நினைத்திருக்கிறபடியே பாபைகளாகவுமாம், நான் நினைத்திருக்கிறபடியே சுபைகளாகவுமாம், அது தானேயன்றோ உத்தேச்யம்; *தோஷோ யத்யபி தஸ்யஸ்யாத்* என்றாப்போலே. 'அழுக்குடையவனன்றோ குளிக்க ப்ராப்தியுடையான்; அவர்கள் பாபைகளாகிலன்றோ நாம் முகங்கொடுக்கவேண்டுவது; சுபைகளாகில் உன்வரவு வேணுமோ? அவர்கள் புண்யங்களே அவர்களுக்குக் கைகொடுக்குமே; கைம்முதலில்லாதார்க்கன்றோ நாம் கைம்முதலாகவேண்டுவது' என்றாள். *வதார்ஹாணாம்* - தண்ட்யரைத் தண்டிக்கவும் அல்லாதாரைத் தவிரவும் சொல்லுகிற தர்மசாஸ்த்ரம் தேவரைத் தொற்றிக் கிழித்துப் போகட்

கடவதோ? என்ன,—ஆரேனுமாக சரணாகதரை ரக்ஷிக்கக்கடவதென்கிற விசேஷ சாஸ்த்ரம் உன்னைத்தொற்றிக் கிழித்துப் போகடக்கடவதோ என்கிறான். "சரணம்" என்று வந்த ஸ்ரீவிபீஷணாழ்வான் தோஷவானேயாகிலும் *நத்யஜேயம்* என்று பெருமாள் கடற்கரையிற் சொன்னவார்த்தை கடலோசையாகக் கடவதோ? என்கிறான். *ப்லவங்கம* - பின்னையும் இவன் புத்தி திரியவிடாமையினாலே ஹரி! ஹரி! என்கிறான். 'ப்லவங்கம்' என்கிறான் - நச்சினத்தை நச்சும் ஜாதியானமை கண்டோமே யென்கிறான். வஸிஷ்ட்டாதிகள் மந்த்ரிக்குங் குடியான இக்ஷ்வாகுவம்சத்தில் பிறந்தாயல்லை; யோகிகளான ஜநககுலத்தில் பிறந்தாயல்லை; காட்டிலே பணையோடு பணை தத்தித்திரிகிற ஜாதியிலேயிறே பிறந்தது! அங்ஙனொத்தார்க்கு சரணாகதியோட்டையது தெரியாதிறே என்கிறான். *வாநரோத்தம* என்றவன், ஹரி! ஹரி! என்கிறான் தானேயிறே; 'ப்லவங்கம' என்கிறான், ராஜாக்களுமாய் மூலையடியே நடக்கவுரியருமாயிருக்கிற பெருமாளும் எங்கள்முன் இத்தனை கோபித்தறியார்; நீ வாநரஜாதியாயிருந்துவைத்து இங்ஙன் கோபிக்கக்கடவையோ? *கார்யம் கருணமார்யேண* - இவர்கள் புண்யபாபங்கிடக்க; இப்போது ஓடுகிற தயநீயதசையைப்பாராய். உன் கையிலே யகப்பட்டு "நாம் என்படக்கடவோம்" என்று இயங்குகிறபடிபாராய். இவர்களுக்கு வேறுரக்ஷகரில்லையே. இப்போது இவ்வளவில் நாம்இரங்கவேணுங்காண்! *ஆர்யேண* - இவையெல்லாம் இப்போது நான் கற்பிக்க வேண்டும்படியாவதே உனக்கு! *ஆர்யேண*-ஐந்த்ரவ்யாகரணபண்டிதனென்கிறது பொய்யோ? அவையுமெல்லாம் கற்றுக்கேட்டிருக்கச்செய்தேயும், இப்போது ராமகோஷ்ட்டியில் பரிசயம் பின்னாட்டினபடியாகாதே. அக்கோஷ்ட்டியிற்பழக்கமிறே நீ இங்ஙன்சொல்லவல்லையாயிற்று. நான்போந்தபின்பு அக்கோஷ்ட்டி இங்ஙனேநேர்ந்ததாகாதேயென்றுகருத்து.*நகச்சிந்நாபராத்யதி* ஸம்ஸாரத்தில் குற்றமில்லாதார்ஆர்! திரைநீக்கிக் கடலாடப்போமோ? நற்குதிரையாகப்பாவித்திருக்கிற பெருமாள்தான் குற்றவாளரல்லரோ! நான்தான் குற்றவாட்டியல்லேனோ? நீதான் குற்றவாளனல்லையோ? பெருமாள் குற்றவாளரானபடி யெங்ஙனே? என்னில்,-தாம்காட்டேறப் போந்தார்; அவர்பின்னே மடஇளைவரைப்போலே இளையபெருமாளும் போந்தார்; தம்மோடே ஏகாந்தபோகம் பண்ணக் கடவதாக இலைபகலப்படுத்துக்கொண்டு நானும்போந்தேன்; என்னைப்பிரிந்து பத்துமாஸம் இருந்தார்; தாம் வாராவிட்டால் தம்மதோரம்பு இசங்க மாட்டாமையில்லையிறே இவ்வழி; இத்தனைநாள் பிரிந்திருக்க வல்லரானபோதே பெருமாள் பக்கலிலேயன்றோ குற்றம்? பாரதந்த்ர்யத்துக்கு அநுகுணமாகப்பேசாதிராதே, அதுதன்னைச் சொன்ன என்பக்கலதன்றோ குற்றம். இனி, நாயகன் சொன்னகார்யம் செய்த அடியாரைத் தண்டிக்கப்பார்த்தவன்று, பெருமாளருளிச்செய்த கார்யம் செய்யப்போந்தவுன்னை முற்படத் தண்டித்துக்கொண்டன்றோ ராவணன் சொன்னகார்யஞ்செய்த இவர்களைத் தண்டிப்பது? ஆகையால், நீயல்லவோ குற்றவாளன்! "எல்லாப்படியாலும் பெருமாள் ஒருவிஷயத்தை முனிந்தவன்று ஆறவிடுகைக்கு நானுண்டு; நானும் அவர்வழி போகவேண்டி இருந்த வன்றைக்கு நீயுண்டு" என்றிருந்தேன்; நீயும்இங்ஙனேயானால் அபராதஞ்செய்தார்க்குப்புகு வாசல் உண்டோ? என்கிறாள்.

அடிக்கீழமர்ந்துபுகுந்து அடியீர்வாழ்மினென்றென்றருள்கொடுக்கும்*
படிக்கேழில்லாப்பெருமானைப் பழனக்குருகூர்ச்சடகோபன்*
முடிப்பான்சொன்னவாயிரத்துத் திருவேங்கடத்துக்கிவைபத்தும்*
பிடித்தார்பிடித்தார்வீற்றிருந்து பெரியவானுள்நிலாவுவரே. (11)

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார் எல்லாரும் திருநாட்டிலேசென்று அடிமையிலே மூர்த்தாபிஷிக்தராயிருந்து என்றும் அடிமை செய்யப்பெறுவர்என்கிறார். [அடிக்கீழ் என்று தொடங்கி]- 'தன்திருவடிக்கீழே அநந்யப்ரயோஜநராய்ப் புகுந்து அடியாருள்ளார் வாழுங்கோள்' என்னும்படிக்கு ஒப்பில்லாதானும் இருந்துள்ள ஸர்வேச்வரனை ஸம்ருத்தமான பழனங்களையுடைய திருநகரியிலே ஆழ்வார். [முடிப்பானென்றுதொடங்கி]-ஆயிரந்திருவாய்மொழியிலும் தம்முடையது:க்கநிவ்ருத்பர்த்

நமாகத் திருமலையிலே சொன்ன இத்திருவாய்மொழிபற்றினரெல்லாம் திருநாட்டிலேபோய் அவ்விடம் தாங்களிட்ட வழக்காய்க்கொண்டிருந்து என்றும் செலுத்தப்பெறுவர் கற்றவர்களை ஸமாச்ரயித்தவர்கள் என்றுமாம்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழிகற்றூர் பரமபதத்திலேசென்று தாஸ்யரஸத்திலே அபிஷிக்த ராய் அடிமைசெய்யப்பெறுவர்க ளென்கிறூர். [அடிக்கீழ் இத்யாதி] - தன் திருவடிகளின் கீழே அநந்யப்ரயோஜநராய்ப் புகுந்து ஸ்வரூபஜ்ஞாநமுடையார் வாழுங்கோளென்று முத்ரையால் அருளிச் செய்கிறுப்போலேயாயிற்று நின்றருளுவது. "மாமேகம் சரணம்வ்ரஜ - மாசுச:" என்றுப்போலே யாயிற்றுநிற்பது. [படிக்கேழில்லாப் பெருமானை] - இப்படிக்குத் தனக்கு ஒப்பில்லாத ஸர்வேச்வரனை. [பழனக்குருகூர்] - அழகிய நீர்நிலங்களையுடைய திருநகரி. தம்முடைய விரோதியை முடிக்கைக்காகத் திருமலையைக்குறித்து அருளிச்செய்த இப்பத்தும். [பிடித்தார் பிடித்தார்] - பற்றினர் பற்றினர் என்னுதல். பற்றினரைப் பற்றினர் என்னுதல். பரமபதத்திலே குறைவற்ற அடிமை செய்யப்பெறுவர். இவர் பண்ணின ப்ரபத்தியாக பரமபதத்தேறப்போவர்கள்.

ஈடு.—நிகமத்தில் - இத்திருவாய்மொழிகற்றூர், பரமபதத்திலே சென்று தாஸ்யத்திலே அபிஷிக்தராய் அடிமைசெய்யப் பெறுவர்க ளென்கிறூர்.

[அடிக்கீழ்இத்யாதி] - உங்கள்உத்தேச்யங் கண்டிகோளே, இத்தைப்பற்றி வாழ்ந்து க்ருதக்ருத்யராய்ப் போங்கோ ளென்று. [அருள்கொடுக்கும் படிக்கேழில்லாப்பெருமானை] - ஆச்ரிதவிஷயத்தில் அருள்கொடுக்கும் ஸ்வபாவத்துக்கு ஒப்பில்லாத ஸர்வேச்வரனை. *மாசுச:* என்ற க்ருஷ்ணனும் ஒவ்வான் இவன்படிக்கு. [பழனக் குருகூர்ச் சடகோபன்] - நல்ல நீர்நிலங் களையுடைய திருநகரிக்கு நிர்வாஹகரான ஆழ்வார். [முடிப்பான்சொன்ன இத்யாதி] - "பல நீ காட்டிப் படுப்பாயோ" என்கிற ஸம்ஸாரவிரோதத்தை முடிக்கையிலே திருவுள்ளத்தாலே உத் ஸாஹித்தருளிச்செய்த ஆயிரத்திலும் வைத்துக்கொண்டு இப்பத்தும் திருமலைக்குச் சொல் லிற்றின. *ரத்நஹாரீச பார்த்திவ:* என்கிறபடியே. [பிடித்தார் பிடித்தார்] - பிடித்தவர்களைப் பிடித்தவர்கள்; பற்றினரைப்பற்றினர். [வீற்றிருந்து] - *ஸ ஸ்வராட்பவதி* என்கிறபடியே இரு வர்க்கும் ஒக்குமாகாதேவீற்றிருக்கை. ஸ்வவ்யதிரிக்தங்களையும் சேஷமாகவுடையனுகையால் வந்த ஆனந்தத்தையுடையனுயிருக்கும் அவன்; *ஏஷஹ்யேவாநந்தயாதி* என்கிறபடியே அவன் ஆநந்திப்பிக்கஆநந்தியாயிருக்கும்இவன். [பெரியவானுள் நிலாவுவரே] - *மஹாகம்* என்றும், *பரமாகாசம்* என்றுஞ் சொல்லப்படுகிற பரமபதத்திலே வர்த்திக்கப்பெறுவர்கள். இந்த் ராதிகள் வர்த்திக்கும் இவ்வருகில் வெளியிலல்ல. மேல்வரும் அநுபவமொழிய ப்ராப்திக்கு ப்ரபத்தி பண்ணவேண்டாத தேசத்திலே போய்ப் புகப்பெறுவர். இவர் பண்ணின ப்ர பத்தியே நமக்குமெல்லாம்: தனித்து வேண்டா; இப்பாசுரத்தைச்சொல்லி ப்பலத்திலே அந்வ யிக்கும் அத்தனை. நற்கன்றுக்கிரங்கினது தோல்கன்றுக்கு இரங்குமாபோலே, இவரை நினைத்து இப்பத்துங்கற்றூர்பக்கலிலும் ஈச்வரன் ப்ரஸந்நனும். ஸ்ரீவிபீஷணாழ்வானோடு வந்த நால்வர்க்கும் அவன்பண்ணின ப்ரபத்தியே பலமைந்ததிறே. "இவனுடையவன்" என்று எதிர்த்தலைக்குத் தோற்றவிருக்கும் அத்தனையே வேண்டுவது.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆறும் பத்து முற்றிற்று

மணவாளமாமுனிக ளருளிச்செய்த

திருவாய்மொழி நூற்றந்தாதி

வைகல் திருவண்வண்டூர் வைகுமிராமனுக்கு* என்
செய்கைதனைப்புள்ளினங்காள் செப்புமென*—கைகழிந்த
காதலுடன் தூதுவிடும் காரிமாறன்கழலே*
போதினியீர் நீர்வணங்குமின். 51

மின்னிடையார்சேர்கண்ணன் மெத்தெனவந்தானென்று*
தன்னிலைபோய்ப்பெண்ணிலையாய்த் தான்தள்ளி*—உன்னுடனே
கூடேனென்றூடும் குருகையர்கோன்தாள்தொழவே*
நாடோறும் நெஞ்சமே நல்கு. 52

நல்லவலத்தால் நம்மைச்சேர்த்தோன் முன்கண்ணுறை*
வெல்லும்விருத்தவிபூதியனென்று* எல்லையறத்
தானிருந்துவாழ்த்தும் தமிழ்மாறன்சொல்வல்லார்*
வானவர்க்கு வாய்த்தகுரவர். 53

குரவைமுதலாம் கண்ணன்கோலச்செயல்கள்*
இரவுபகலென்னுமயலென்றும்*—பரவுமனம்
பெற்றேனென்றேகளித்துப் பேசும்பராங்குசன்தன்*
சொல்தேனில் நெஞ்சே துவள். 54

துவளறுசீர்மால்திறத்துத் தொன்னலத்தால்* நாளும்
துவளறுதன்சீலமெல்லாம் சொன்னான்*—துவளறவே
முன்னமனுபவத்தில் மூழ்கினின்றமாறன்* அதில்
மன்னுமுவப்பால் வந்தமால். 55

மாலுடனேதான்கலந்து வாழப்பெறுமையால்*
சாலநைந்துதன்னுடைமை தானடையக்—கோலியே*
தானிகழவேண்டாமல் தள்ளிவிடல்சொல்மாறன்*
ஊனமறுசீர் நெஞ்சேயுண். 56

உண்ணுஞ்சோறாதி ஒருமூன்றுமெம்பெருமான்*
கண்ணனென்றேநீர்மல்கிக் கண்ணிணைகள்*—மண்ணுலகில்
மன்னுதிருக்கோளூரில் மாயன்பால்போம்மாறன்*
பொன்னடியே நந்தமக்குப்பொன். 57

பொன்னுலகுபூமியெல்லாம் புள்ளினங்கட்கேவழங்கி*
என்னிடரை மாலுக்கியம்புமென—*மன்னுதிரு
நாடுமுதல் தூதுவிடுமாறனையே*
நீடுலகீர் போய்வணங்குவீர். 58

நீராகிக்கேட்டவர்கள் நெஞ்சழிய* மாலுக்கும்
ஏரார்விசும்பி லிருப்பரிதா*—ஆராத
காதலுடன்கூப்பிட்ட காரிமாறன்சொல்லை*
ஓதிடவே யுய்யுமுலகு. 59

உலகுய்யமால்நின்ற உயர்வேங்கடத்தே
அலர்மகளைமுன்னிட்டவன்தன்—மலரடியே*
வன்சரணாய்ச்சேர்ந்த மகிழ்மாறன்தாளிணையே*
உன்சரணாய் நெஞ்சமேயுள். 60